[illegible]

[illegible]

[illegible]

INTERNATIONAL LIBRARY,
ENATHUR-KANCHIPURAM.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
ஸ்ரீஜ்ஞான ஸம்பந்த குருப்யோநம:

ப்ரணவ வித்யா பரிமளம்

என்னும்

ஓங்கார விளக்கம்.

(நானூறு வேதப் பிரமாணங்களுடன்).

இஃது
சித்தாந்த சைவசரபம்
சோளங்கிபுரம்
ஸ்ரீலஸ்ரீ சிவ அருணகிரி முதலியார்
அவர்களால் இயற்றப்பெற்று

நடராஜபுரம்
ஸ்ரீமாந். ஆ. த. ஆ. சொக்கலிங்க செட்டியார்
அவர்கள் நல்லுதவியால்

சென்னை புரசை
ஸரஸ்வதி அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

இரௌத்திரி ௵ தை ௴

1920

Registered Copy Right. விலை ரூபாய் 2—4—0

Sri Chandrasekharendra Saraswathi
International Library,
ENATHUR-KANCHIPURAM.
Acc. No 32755
Sub. No.........

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

முகவுரை.

——(0)——

சுத்தாத்வைத சித்தாந்தவைதிக சைவசிகாமணிகாள்!

உலகத்திலுள்ள எண்ணிறந்த ஆத்மாக்கள் நல்லறிவுபெற்று உண்மையுணர்ந்து உய்யும்வண்ணம் அகண்டாகார நித்திய வியாபக சச்சிதானந்தப் பிழம்பாயும், சுத்தஷாட்குண்ய பரமபுருஷராவும் விளங்காநின்ற பரங்கருணைத்தடங்கடலாகிய பரமசிவத்தால் அருளிச்செய்யப்பட்ட முதனூல்கள் வேதமும் சிவாகமமுமேயாம். இவைகளே சர்வரூபங்களும் போக்கவெழுந்த சுருதிகள். இவற்றிற்சொல்லப்படாத பொருளியல்புகள் ஒன்றுமேகிடையா. ஆப்ததாரதம்மியத்தால் மஹரிஷியாகிய சிவபிரான் பரமாப்தராய் முடிதலின் அவரருளிச்செய்த வேதசிவாகமங்களைக் காட்டிலும் பிரபல பிரமாணங்கள் காலத்திரயத்திலுமில்லை. சுருதி, ஸ்மிருதி, புராணேதிஹாஸ மெனக்கூறும் வழக்கு பண்டைக் காலந்தொட்டு வழங்கிவரினும் சுருதியைநோக்க மற்றமூன்றுந் தணிவுடையனவே ஏனெனில் ஸ்மிருதிகள் பற்பல ரிஷிகளாற் சொல்லப்பட்டன. இதிஹாஸங்களும் அவ்வாறே ரிஷிகளாற் கூறப்பட்டன. புராணங்களும் ரிஷிவசனமே. அவர்கள்யாவரும் முக்குண வசப்பட்ட ஜீவர்களாதலாலும், சிவபெருமான் ஒருவரே பசுபதியாதலாலும், சிவபெருமானை விசுவகாரணரென்றும், விசுவ சொரூபியென்றும், விசுவாதீதரென்றும், விசுவாந்தர்யாமியென்றும், விசுவசேவியரென்றும், பரமசாந்தரென்றும், பரம சாந்தியைக் கொடுப்பவரென்றும் பற்பல வேதவாக்கியங்கள் ஓயாது துதித்தலாலும், சாமான்ய ரிஷிகளும் ஜீவர்களுமான அன்னாரது வாக்கியங்களைக் காட்டிலும் பிரபஞ்சாதீதராகிய சிவபெருமானுடைய திவ்யவாக்காகிய சுருதிகளே முக்கியப்பிரமாணங்களென நம்பக்கிடக்கின்றன.

இந்தச் சுருதிகள் எஞ்ஞான்றும் எல்லா ஐயங்களையும் போக்கி சர்வ வைதிகானுக்கிரகஞ்செய்யுஞ் சாசுவத சாஸ்திரங்களாய்த்திகழ்தலின் இவற்றின் முடியில் விளங்கும் ஞானபாக

த்தை விசாரித்தற்குச்சாதனசதுஷ்டயங்களை முக்கியக்கருவிகளா
கும். இச்சாதனங்களைக் கிரமமாய் அநுஷ்டித்து, முமூட்சுத்த
வம் எய்தப்பெற்று, வீடடைவதற்கு நேர்வாயிலாகவுள்ள தெய்வ
வழிபாடென்னும் ஞானச்சரியையாதிகளை மனத்தூய்மையோடும்,
அயராவன்போடும் இயற்றி, நிஷ்டைபுரிந்துவரும் பூர்வபுண்ணிய
சுகிருதமுடைய புருஷனே சற்சீடனாவன். அத்தகைய சீலமிகு
ந்த நன்மாணாக்கனுக்கும், கேட்டல், சிந்தித்தல், தெளிதல்,
நிஷ்டை என நான்கு திறனாகவிளங்கும் ஞானத்தை முற்றுங்
கைவரப்பெற்ற சுவாநுபூதிமானான சதாசாரியருக்கும் அந்நி
யோந்நிய சம்வாத வியாஜத்தால் சர்வவித்தைகளும் லோகோப
காரமாய் வெளிவருவது சற்சாம்பிரதாய மாதலால் அதனையே
யநுசரித்து சர்வ மந்திரசாரபூத அருள்மய பிரணவசிவோபாஸ்
தியை விளக்கவேண்டி, முதன்முதல் மாணாக்கனது இலக்கணங்
களை நிரூபித்துக்கொண்டு, சகல சப்தமய அர்த்தமயப் பிரபஞ்
சங்களுக்கும் மூலகாரணமாயுள்ள ஒப்பற்ற ஒருமொழி, அருவ
நாதமாகிய ஓங்காரமேயாதலின், அவ்வோங்கார விளக்கமாகிய
இவ்வரியபெரிய நூலை வினாவிடையாக வெளிப்படுத்தலாயினேன்

இக்கிரந்தத்தில் இயைந்துள்ள மந்திரார்த்தம், யந்திரார்த்தம், பிரபஞ்சார்த்தம், தேவதார்த்தம், ஞானார்த்தம் ஆகிய இவைகள் தெளிவாய் விளக்கிக்காட்டி யிருப்பதுமன்றி அர்த்தமாத்திரையின் தேவதையாகிய புருஷசப்தவாச்சியர் மும்மூர்த்திகளுக்குப் அப்பாற்பட்ட துரீயசிவனெனவும், அவரே புருஷ ஸூக்தத்திற்கும், காயத்ரீமஹாமந்திரத்திற்கும் உட்பொருளாயுள்ளவரெனவும் நன்கு நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. அன்றியும் தாரக சப்தம் ஏகாக்ஷர மந்திரமாகிய பிரணவத்தையே குறிக்குமன்றி ராமநாமத்தைக் குறிக்காதென்றும், ஆத்மமந்திரமாகிய ஹம்ஸ மந்திரமே ஸோஹம் என்னும் மஹாமந்திரமாய்த் திகழுமென்றும், அம்மந்திரத்தில் வேதமூலமாகிய பிரணவம் இடர்ப்பட்டிருத்தலையும் ஸ்பஷ்டமாய் எடுத்துக்காட்டியிருக்கின்றது. மந்திரங்களை உபதேசமுறையாலன்றி வெளியிடுவது கூடாமையால் அம்மந்திரங்களின் அமைப்பைமாத்திரம் வேதவழக்கையநுசரித்துச் சிறுபகுதிகளாகப் பிரித்துக்காட்டியிருக்கின்றது. மேற்கோளாக எடுத்துக்காட்டியுள்ள வேதப் பிரமாணங்கள் நானூற்றுக்கு அதிகமாயிருக்கின்றன. அவையனைத்திற்கும் தமிழ்

எழுத்துக்களின் உச்சரிப்போடு பொழிப்புரையும் இயன்றமட்டுஞ் சேர்த்து வரையப்பட்டுள்ளது.

அயன், அரி, அரன் என்னுங்கடவுளருக்கு அப்பாற்பட்ட சதுர்த்ததெய்வம் சகத்ஜந்மாதி காரணராகிய பரப்பிரமசிவபிரான் என்று பலசுருதி வாக்கியங்களைக்கொண்டு நிச்சயித்திருத்தலால் இந்நூலில் சிவவிஷ்ணுக்கள் தூஷணையாவது, அவர்களிடம் உபேக்ஷையாவது ஒருவருக்கும் உண்டாவதற்கு ஹேதுவில்லை. அப்படியிருந்தும் அழுக்காறு காரணமாகவும், அகாரண சிவத்துவேஷத்தாலும் குறைகூறவுடன்படுவார்களாயின் அது வேதவாக்கியங்களையே பிரமாணமாகக்கொண்டு விளங்கும் இந்நூலை ஒருபோதும் பாதிக்கமாட்டாது. ஓங்காரப்பொருளை விளக்கிக்கொண்டு வரும்போது இடையிடையே வேறு சில விஷயங்களையும் கூறவேண்டியதவசியமாயிற்று. அவ்வாறு கூறியது ஒப்பின்முடித்தல் என்னும் உத்தியிலடங்குமாதலின் அதனை மற்றொன்றுவிரித்தல் என்னுங் குற்றத்திற்கிடனாகா.

கிரந்தமுந் தமிழுஞ் சேர்த்து அச்சிடுவதில் உண்டாகும் சிரமம் அதிகமென்பது யாவருமறிந்தவிஷயம். எழுத்துப்பிழைகள் எத்தனைமுறை பார்க்கினும் கிரந்தகர்த்தாவுக்குக் கண்ணுக்குப்புலப்படாமல் நழுவிப்போகின்றன. அவற்றைத் திருத்தி வாசிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். வடமொழியின் கண்ணுள்ள சிலமெய்யெழுத்துக்கள் தமிழ்வழக்கிற்கியையா. உயிர்மெய்யெழுத்துக்களாகவும் வரையப்பட்டுள்ளன.

இக்கிரந்தத்தைச் சொற்சுவை பொருட்சுவையோடு எழுதி முடிப்பதற்குப்போதுமான ஆற்றலும், அறிவும், காதலும் அடியேன்பாலில்லையாயினும் சைவபரிபாலனஞ்செய்து போதரு முறையில் சிவபாரம்பரியங்கள் நிறைந்து விளங்கும் இந்நூலைத் திருவருளைமுன்னிட்டு இயன்றமட்டும் இயற்றி சைவவுலகப்பிரயோசனார்த்தம் அச்சிற்பதிப்பித்து வெளியிடலானேன். இதனை அம்புலிசூடிய வெம்பிரானன்பர்கள் மிக்க கருணையோடு ஏற்றுக்கொள்ளுமாறு எல்லாம்வல்ல ஸ்ரீ பசுபதியின் திருவருளைச் சிந்திக்கின்றேன்.

இங்ஙனம்,

சோளங்கிபுரம். } சோ. சிவ அருணகிரி முதலியார்.
இரௌத்திரி ஸு }

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

உரிமையுரை.

பாண்டி வளநாட்டிலே நாட்டரசன் கோட்டைக்கு அருகே
நடராஜபுரம் என்றொருபதியுளது. அதில் நாட்டுக்கோட்டை
நகரவைசிய குலத்திலே நல்லறிவும், நல்லொழுக்கமும், நன்
னடையும் வாய்க்கப்பெற்ற வைதிக சைவரொருவருளர். அவ
இளமையிலேயே சிவபக்தி அடியார்பக்திகளில் தங்கருத்தைச்
செலுத்தினவராயிருந்தும், ஊழ்வலியால், "பன்னாளுன்னைப்பணி
ந்தேத்தும் பழையவடியரொடுங் கூடா, தென்னாயகமே பிற்பட
ங்கிருந்தேன்'' என்று மணிவாசகப்பிரான் திருவாய்மலர்ந்த
ளியபடி போலிவேதாந்த மென்னும் மாயாவாத மாருதத்தால்
ோதப்பட்டுத் தக்காலத்தை அதிற் செலுத்தி வாணாளை வீணா
க்கிக்கொண்டனர். பிறகு "நல்வினைக் கன்வாழ்காளாம்''என
படி கல்லூர் தாப்பம் தங்குலத்தொழிலை மேற்கொண்டு இரங்
ன் வந்துசேர்ந்தனர். அவ்விடத்தில் ஆளுடைய பிள்ளையார்
ராணத்தையும், ஆளுடைய நம்பிகள் புராணத்தையும அடியே
டம் சிரவணஞ் செய்தனர். பிரசங்கக்காலங்களில் அவருடைய
ள்ளம், "காராண்ட மழைபோலக் கண்ணீர்சோரக் கன்மனமே
ன்மனமாக் கரையப்பேற்றோம்'' என்று ஆளுடைய அரசுகள்
ருளியபடி அனலிடைப்பட்ட மெழுகுபோல் உருகாநிற்கும்
டிக்கடி "நடராஜா, நடராஜா", "ஞானசம்பந்தா", "ஞானசம்
ந்தா'' என்று நவில்வர். அதுகாலை அவரது வதனம் சிவதேஜ
ாடு விளங்காநிற்கும். அப்படி நிகழ்ந்துவருஞ்சமயத்தில் சைவ
சிவத்தின் நல்லருள் கூட்டிவைக்க, உடனே மாயாவாதப் படு
ழியினின்றுங் கரையேறி சைவாபிமானம் மிக்குடையராய்த்
ழ்ந்தனர். அவரதுநாமம் ஆ. த. ஆ. சொக்கலிங்கச் செட்டி
ர். அவரது சைவபரிபாலனம் ஆச்சரியப்படத்தக்கது.

இவர் அடியேன்பால் சித்தாந்த சாஸ்திரங்களுள் ஒன்றாகிய "சிவப்பிரகாசம்" என்னும் அரியநூலை மிக்க பயபக்தி சிரத்தையுடன் பாடங்கேட்டவர். இவர் தினந்தோறும் திராவிட வேதபாராயணஞ்செய்யும் நியமமும்பூண்டவர். இவருக்குப்பதி புண்ணியஞ்செய்வதிலேயே கருத்ததிகம். அதைத்தம்மாலியன்றமட்டுஞ் செய்துவருவர். இவர் சுத்தசிவம், பதிப்பொருள், மும்மூர்த்திகள் ஆகிய இவர்களது இலக்கணங்களை எளியநடையில் எழுதித்தரவேண்டுமென்று அடியேனைப் பலகாலுங் கேட்டுக்கொள்வர். இவருடைய அவாவைப் பூர்த்திசெய்வான் கருதி, "ஓங்காரவிளக்கம்" என்னும் இவ்வரியநூலை வேதப்பிரமாணங்களோடு வரையலாயினேன். இச்சங்கதியை இவருக்குத் தெரிவிக்கவே உடனே இந்நூலை அச்சிற்பதிப்பிக்கவேண்டுமென்றும், அதற்கு வேண்டும் பொருளைத் தாமே சேகரித்துத் தருவதாகவும் உறுதிவாக்களித்தனர். அவ்வாறே வேண்டும்பொருளை அவ்வப்போது அனுப்பி உதவிபுரிந்தனர். இவர்வயதில் சிறியவரா யிருப்பினும் அறிவில் விருத்தராகவே விளங்குகின்றனர். இவருடைய சர்வாபீஷ்டங்களையும் எல்லாம்வல்ல ஆனந்த நடராஜ மூர்த்தி பூர்த்திசெய்து, அன்புசிறந்த அகங்களிதாங்கும் அடியவரோடு எக்காலுங்கூடிக் களித்திருக்கும்படி திருவருள் பாலிப்பாராக.

இந்நூலை அச்சிட்டு வருங்காலத்தில் சிற்சில சமயங்களில் திரவியம் முட்டுப்பட்டுச் சோர்வுற்றகாலத்தில் வேண்டும் பொருளை அவ்வப்போது உதவிபுரிந்து அவ்விடையூற்றினை நீக்கியருளிய என்னருமைத் துணைவர் புரசைவாக்கம் ஸ்ரீமாந்-D. V. பொன்னுசாமிபிள்ளை அவர்களுக்கு மனப்பூர்த்தியான வந்தனம் அளிக்கிறேன். அவருக்கு நோயற்றவாழ்வும், குறைவற்ற செல்வமும், தீர்க்காயுளும் சிவபெருமான் கடாட்சிக்கும்படித் திருவருளைச் சிந்திக்கின்றேன்-சுபம்.

சோ. சிவ அருணகிரி முதலியார்.

ஓங்கார விளக்கத்தில் எடுத்துக்காட்டியுள்ள ஸ்ருதி, ஸ்ம்ருதி, புராணேதிஹாஸ முதலியவற்றின் பிரமாணங்கள்.

வேதங்கள்.

1 ருக்வேதம்
2 யஜுர்வேதம்
3 ஸாமவேதம்
4 அதர்வணவேதம்
5 தைத்திரீயாருணசாகை (ஈா. - ம்,
6 புருஷஸூக்தம்
7 ஸ்ரீருத்ரநமகம்

108. உபநிஷத் கோவையில் ருக்வேதத்தைச்சேர்ந்த உபநிஷத்துக்கள் 10-அவற்றுள்,

1 ஐதரேயோபநிஷத்
2 நிர்வாணோபநிஷத்
3 பஹ்வ்ருசோபநிஷத்

சுக்லயஜுர்வேதத்தைச்சேர்ந்த உபநிஷத்துக்கள் 19-அவற்றுள்.

1 அத்வயதாரகோபநிஷத்
2 ஈசாவாஸ்யோபநிஷத்
3 ஜாபாலோபநிஷத்
4 தாரஸாரோபநிஷத்
5 நிராலம்போபநிஷத்
6 பைங்கலோபநிஷத்
7 ப்ருஹதாரண்யகோபநிஷத்
8 மண்டலப்ராஹ்மணோபநிஷத்
9 மந்த்ரிகோபநிஷத்
10 முக்திகோபநிஷத்
11 ஸுபாலோபநிஷத்

க்ருஷ்ணயஜுர்வேதத்தைச் சேர்ந்த உபநிஷத்துக்கள் 32 அவற்றுள்,

1 அம்ருதநாதோபநிஷத்
2 அம்ருதபிந்தூபநிஷத்
3 கடோபநிஷத்
4 கர்போபநிஷத்
5 கலிஸந்தரணோபநிஷத்
6 காலாக்நிருத்ரோபநிஷத்
7 கைவல்யோபநிஷத்
8 சுவேதாசுவதரோபநிஷத்
9 தக்ஷிணாமூர்த்தியுபநிஷத்
10 தைத்திரீயோபநிஷத்
11 நாராயணோபநிஷத்
12 பஞ்சப்ரஹ்மோபநிஷத்
13 ப்ரஹ்மோபநிஷத்
14 ருத்ரஹ்ருதயோபநிஷத்
15 வராஹோபநிஷத்
16 ஸ்கந்தோபநிஷத்

ஸாமவேதத்தைச்சேர்ந்த உபநிஷத்துக்கள் 16-அவற்றுள்.

1 கேநோபநிஷத்
2 சாந்தோக்யோபநிஷத்
3 ஜாபால்யுபநிஷத்
4 தர்சனோபநிஷத்
5 மஹோபநிஷத்
6 மைத்ராயண்யுபநிஷத்
7 மைத்ரேயோபநிஷத்

அதர்வணவேதத்தைச் சேர்ந்த உபநிஷத்துக்கள் 31-அவற்றுள்,

1 அதர்வசிகோபநிஷத்
2 அதர்வசிரோபநிஷத்
3 அன்னபூர்ணோபநிஷத்
4 சரபோபநிஷத்
5 த்ரிபுராதாபந்யுபநிஷத்
6 நாரதபரிவ்ராஜகோபநிஷத்
7 ந்ருஸிம்ஹதாபந்யுபநிஷத்
8 பஸ்மஜாபாலோபநிஷத்
9 பாசுபதப்ரஹ்மோபநிஷத்
10 ப்ரச்னோபநிஷத்
11 ப்ருஹஜ்ஜாபாலோபநிஷத்
12 மஹாநாராயணோபநிஷத்
13 மாண்டூக்யோபநிஷத்
14 முண்டகோபநிஷத்
15 ராமரஹஸ்யோபநிஷத்
16 ராமோத்தரதாபந்யுபநிஷத்
17 ஸூர்யோபநிஷத்

ஆகமங்கள்.

1 காமிகாகமம்
2 ஜ்ஞானஸித்தியாகமம்
3 வாதுளாகமம்
4 சிவதருமோத்தரம் (தமிழ்)

ஓங்காரவிளக்கத்தில் எடுத்துக்காட்டியுள்ள பிரமாணங்கள்

ஸ்ம்ருதி : கீதை முதலியன்

1 பராசரஸ்ம்ருதி
2 மநுஸ்ம்ருதி
3 வசிஷ்டஸ்ம்ருதி
4 சிவகீதை
5 பகவத்கீதை
6 பிரமகீதை (தமிழ்)
7 ப்ரஹ்மஸூத்ரம்

புராணேதிஹாஸங்கள்

1 கூர்மபுராணம்
2 சைவமஹாபுராணம்
3 பராசரபுராணம்
4 லிங்கபுராணம்
5 வாமனபுராணம்
6 மஹாபாரதம்
7 வாயுஸம்ஹிதை
8 வால்மீகிராமாயணம்
9 காயத்ரீராமாயணம்
10 கந்தபுராணம் (தமிழ்)
11 கம்பராமாயணம்
12 காஞ்சிபுராணம்
13 காசிகாண்டம்
14 சூதசங்கிதை
15 திருவிளையாடற்புராணம்
16 பெரியபுராணம்
17 வில்லிபுத்தூரார் பாரதம்

தமிழ்வேதங்கள்
(முதல் எட்டு திருமுறை)

1 திருஞானசம்பந்த மூர்த்திகள்
2 திருநாவுக்கரசு மூர்த்திகள்
3 ஸ்ரீசுந்தர மூர்த்திகள்
4 ஸ்ரீமாணிக்கவாசகர்
5 திருமந்திரம் (பத்தாந்திருமுறை)
6 நக்கீரதேவர் பெருந்தேவபாணி
7 திருவெண்காட்டடிகள் பாடல்
(6, 7 பதினோராந் திருமுறை)

சித்தாந்த சாஸ்திரங்கள்.

1 இருபாவிருபஃது
2 உண்மைவிளக்கம்
3 சிவஞானசித்தியார்
4 சிவஞானபோதம்
5 சிவப்பிரகாசம்
6 திருவருட்பயன்
7 நெஞ்சுவிடுதூது

அருணகிரிநாதர் முதலாயினோர்
திருவாக்குகள்.

1 ஆத்திசூடி
2 ஒழிவிலொடுக்கம்
3 கந்தரநுபூதி
4 குருஞானவாசிஷ்டம்
5 சிவதத்துவவிவேகம்
6 சிவானந்தலஹரி
7 தாயுமானவர்பாடல்
8 திருக்குறள்
9 திருவருணைக்கலம்பகம்
10 நல்வழி
11 பிங்கலநிகண்டு
12 வாக்குண்டாம்
13 அமரம் (வடமொழி)

நாலாயிரப்பிரபந்த முதலியன

1 ஆண்டாள்
2 திருமங்கையாழ்வார்
3 தொண்டரடிப்பொடியாழ்வார்
4 பெரியாழ்வார்
5 பொய்கையாழ்வார்
6 நம்மாழ்வார்
7 தத்வசேகரம்
8 விஷ்ணுதத்வவிளக்கம்.
9 யதீந்த்ரப்ரணவப்ரபாவம்.
10 வடகலைகுருபரம்பரை (மூ-டி

ஆகப்பிரமாணங்கள் 126.

ஓங்காரவிளக்கத்தில் எடுத்துக்காட்டியுள்ள பிரமாணங்கள்
முற்றுப்பெற்றன.

ஓங்காரவிளக்க விஷயானுக்கிரமணிகை.

விஷயம். பக்கம்.
பிரணவாயின்ன ஸ்ரீ நடராஜ மூர்த்தித்துதி 1
ல்லாரிலக்கணம் 1
ளுக்கனு பரிபாகம் 2
சிரியவிலக்கணம் 2
ம்" என்னும்நாதமே அதியில் தோன்றியது 5
ப்பத்தாற தத்துவங்களின் தோற்றமுறை 6
ப்தமய அர்த்தமயப் பிரபஞ்சம் 8
ரீயசிவம் அக்ஷரப் பிரமம் 9
வித்தை அபரவித்தை 12
பஞ்சம் சாதகாரியம் 15
ணவம் பிரமசொரூபம் 17
யவேதத்துக்கும் தமிழ் வேதத்துக்கு முள்ள ஒற்றுமை 20
ங்காரசொரூபம் (வரிவடிவு) 23
மனை அதியில் தோற்றுவித்தவர் சிவபிரான் 27
வகாரத்தில் இயைந்துள்ள நாந்த மாத்திரைகள் 29
ர்த்தமாத்திரையின்விளக்கம் 30
சாமவேத விளக்கம் 30
சிஷ்டாத்வைதமுக்தி 33
காரத்திற்கதிகாரி விஷ்ணுமூர்த்தி 35
ருஷ்ணாவதார அந்தர்யாமி 38
ருஷ்ணாவதார விசவரூபம் 41
வசாக்ஷாத்காரமே மௌனஞானந்த நிஷ்டை 44
பிரணவமாத்திரைகளின்நிறங்களும் தேவதைகளும் 46
ர்த்தமாத்திரையிலுள்ளபுருஷர் சிவபிரான் 47
ன்னிரண்டு காயத்திரி என்னுந் தியான மந்திரங்கள் 52
தித்திய வந்தர்யாமி சிவபிரான் 63
அர்த்த மாத்திரையின் தெய்வம் துரியசிவம் 66
ண்டூக்யோபநிஷத்தின் ஹிருதயம் 69

விஷயம். பக்கம்.
தசோபநிஷத்தில் அலங்கரிக்கப்பட்ட சிவநாமங்கள் 72
சிவபிரான் சர்வகாம ஆராத்யர் 74
விஷ்ணு ஜீவரிலொருவர் 76
சிருஷ்டிக்கு முன்னும் சம்ஹாரத்துக்குப் பின்னுமுள்ளவர் சிவபிரானொருவரே 79
திரிமூர்த்திகளின் தோற்றமும் ஒடுக்கமும் 83
வைதிக சைவக்கடவுள் 85
திரிமூர்த்திகள் ஜீவர்களே 92
புருஷஸூக்தம் சிவபெருமானையே பிரதிபாதிக்கின்றதென்பது 94
ஓங்காரப் பொருள் சிவபெருமான் 101
சிவலிங்க விளக்கம் 103
பிரணவத்தின் பரியாயநாமங்கள் 105
ஓங்காரசப்தவிளக்கம் 107
வைஷ்ணவர்களுக்கு யோகஞானநுபவமில்லை 108
விதேகமுக்தனது ஜீவித தேகஸித்தி 110
பிரணவ சப்த விளக்கம் 111
சர்வ தோத்திரங்களுக்குமுரியவர் துரீய ருத்திரரே 113
நாத சப்த விளக்கம் 115
சிவபெருமான் ஜனனமரணமற்றவர் 117
சிவசப்த விளக்கம் 121
கர்ப்பத்திலுள்ள சிசுவுக்கும் சிவோபாசனவுணர்ச்சி 123
சிவபெருமானொருவரே தியேயர் 124
சுத்தாத்வைத விளக்கம் 129
வைதிக சைவமாட்சி 131
சிவபெருமான் பிராமண குலதேவதை 134
காயத்திரி மந்திரம் 135
காயத்திரி ராமாயணம் 143
சிவவிஷ்ணுக்களின் அபேதம் 145

ஓங்காரவிளக்க விஷயாநுக்கிரமணிகை.

விஷயம்.	பக்கம்.
சிவவிஷ்ணுக்களுள் சிவனது ஆதிக்கியம்	148
தாரகம் பிரணவமே	150
ராமதார்க விளக்கம்	153.
ராமநாம விளக்கம்	159
பஞ்சாக்ஷரதாரக விளக்கம்	163
அஷ்டாக்ஷர மந்திரத்துக்குவேதோக்தமான வியாக்கியானம்	165
பகவஞ்சப்தவிளக்கம்	166
சிவனது மங்களவிக்கிரகம்	170
சிவத்தின் ஞானாநந்தசொரூபம்	172
ஞானவழிபாடு	172
நான் பிரமமென்பது ஞானவழி	174
பிரமம் ஆத்மாவென்னும் இருபொருள்களின் இயல்புகள்	176
ஜகத் சூன்யமன்றென்பது	175
அருவம். அருவுருவம் உருவம் ஆகியமுத்திறவழிபாடுகள்	180
விக்கிரஹவணக்கம்	182
மஹாதேவசப்தவிளக்கம்	185
சிவபெருமான் ஆனந்தவடிவினர்	187

விஷயம்.	பக்கம்
அதர்வசிகையின் உபசம்ஹாரச் சுருதி	189
துரீயமஹாநந்தாநுபவத்துவம்	190
ஹம்ஸமந்திரவிளக்கம்	198
“ஸோஹம்” பதார்த்தநிரூபணம்	199
ஸோஹம் சிவோஹம் என்னும் வாக்கியங்களின் பேதம்	200
பாசுபதபிரமவித்தை	202
பாசுபதபஹிர்முக விரதம்	203
அவைதிக பாசுபதவிளக்கம்	205
வைதிகபாசுபதவிரதபலன்	201
திரிபதார்த்த நிர்ணயம்	200
முக்திநிலை	207
முக்தி பிரணவ மந்திராநுபூதி வாயிலாக அடையப்பெறுவது	210
ஆசிரியதுவேதஸ்தவம்	211
மாணாக்கர் சுவாநுபூதியடைதல்	212
புருஷஸூக்தம்	213
திருத்தொண்டத்தொகை	217
மந்திரசுலோகங்களின் முதற்குறிப்பு அட்டவணை	220

முகவுரை	3
உரிமையுரை	6
எடுத்துக்காட்டியுள்ள பிரமாணங்கள்	8
விஷயாநுக்கிரமணிகை	10
வைதிக சைவர்களுக்குரிய பதினாறுபேறுகள்	12
நால்வர் தோத்திரங்கள்	13
நால்வர் சரித்திரச்சுருக்கம்	14
குறிப்புரை	16

ஓங்காரவிளக்க விஷயாநுக்கிரமணிகை

முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

வைதிகசைவர்களுக்குரிய பதினாறு பேறுகள்.

சர்வலோக சரண்யராய் விளங்கும் ஸ்ரீகண்ட பரமசிவத்தினிடத்துச் சைவசமய குருநாதராகிய ஸ்ரீநந்தியெம்பெருமான் இரந்து பெற்றுக்கொண்ட பதினாறுபேறுகளே வைதிகசைவர்கள் அனைவராலும் இன்றியமையாது அநுஷ்டிக்கப்பட வேண்டிய முக்கியதர்மங்கள். அவை வருமாறு:—

மறைநிந்தனை சைவநிந்தனை பொறாமனமும்
அறுகணைம்புலன் களுக்கேவல்செய் யுறாச்சதுரும்
பிறவிதீதெனப் பேதையர் தம்மொடு பிணக்கும்
உறுதிநல்லறஞ் செய்பவர் தங்களை யுறவும்,
யாதுநல்லன்பர் கேட்கினும் உதவுறுமியல்பும்
மாதவத்தோர் ஒறுப்பினும் வணங்கிடுமகிழ்வும்
ஓதுநல் லுபதேசமெய் யுறுதியுமன்பும்
தீதுசெய்யினுஞ் சிவச்செயலெனக் கொளுந்தெளிவும்,
மனமும்வாக்கு நின்னன்பர்பா லொருப்படுசெயலும்
கனவிலும் உனதன்பருக் கடிமையாங்கருத்தும்
நினைவில்வே றொருகடவுளை வழிபடாநிலையும்
புனிதநின்புகழ் நாடொறு முரைத்திடும்பொலிவும்,
தீமையாம் புறச்சமயங்க ளொழித்திடுந்திறனும்
வாய்மையாகவே பிறர்பொருள் விழையுறாவளனும்
வழுறும்பர தாரநச் சிடாதநன்னோன்பும்
தூய்மைநெஞ்சில் யானெனதெனுஞ் செருக்கறுத்தலும்,
துறக்க மீதுறையினும் நரகிற்றோய்கினும்
இறக்கினும் பிறக்கினும் இன்பந்துய்க்கினும்
பிறைக்கொழுந் தணிசடைப் பெரும! இவ்வரம்
மறுத்திடாதெனக்குநீ வழங்கல் வேண்டுமால்.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பரமாசாரிய சுவாமிகள் நால்வர் தோத்திரங்கள்.

திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் துதி.

கடியவிழ் கடுக்கைவேணித் தாதைபோற் கனற்கண்மீனக்
கொடியனை வேவநோக்கிக் குறையிரந் தனையான்கற்பிற்
பிடியன நடையாள்வேண்டப் பின்னுயி ரளித்துக்காத்த
முடியணி மாடக்காழி முனிவனை வணக்கஞ்செய்வாம்.

பரசமய கோளரியைப் பாலறா வாயனைப்பூம் பழனஞ்சூழ்ந்த
சிரபுரத்துத் திருஞான சம்பந்தப் பெருமானைத் தேயமெல்லாம்
நிரவவிடத் தமிழ்வேதம் விரித்தருளுங் கவுணியர்தன் குலதீபத்தை
விரவியெமை யாளுடைய வென்றிமழ விளங்களிற்றை விரும்பிவாழ்வாம்.

திருநாவுக்கரசு மூர்த்தி சுவாமிகள் துதி.

அறப்பெருஞ் செல்விபாகத் தண்ணலஞ் செழுத்தாலஞ்சா
மறப்பெருஞ் செய்கை மாறா வஞ்சக ரிட்டகல
சிறப்பெருங் கடலும் யார்க்கு நீந்துதற் கரியவேழு
பிறப்பெனுங் கடலுநீத்த பிரானடி வணக்கஞ் செய்வாம்.

இடையறாப் பேரன்பு மழைவாரு மிணைவிழியு முழவாரத்தின்
படையறாத் திருக்கரமுஞ் சிவபெருமான் றிருவடிக்கே பதித்தநெஞ்சும்
நடையறாப் பெருந்துறவும் வாகீசப் பெருந்தகைதன் ஞானப்பாடல்
தொடையறாச் செவ்வாயுஞ் சிவவேடப் பொலிவழகுந் துதித்துவாழ்வாம்.

ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி.

அரவக லல்குலார்பா லாசைநீத் தவர்க்கேவீடு
தருவமென் றனவில்வேதஞ் சாற்றிய தலைவன் றன்னை
பரவைதன் புலவிதீர்ப்பான் கழுதுகண் படுக்கும்பானாள்
இரவினிற் றூதுகொண்டோ னிணையடி முடிமேல்வைப்பாம்.

ஒருமணத்தைச் சிதைவுசெய்து வல்வழக்கிட் டாட்கொண்ட வுவனைக் கொண்டே; இருமணத்தைக் கொண்டருளிப் பணிகொண்ட வல்லாளனெல்லாமுய்யப், பெருமணச்சேர்த் திருத்தொண்டத் தொகைவிரித்த பேரருளின் பெருமானென்றுந், திருமணக்கோ லப்பெருமான் மறைப்பெருமானெமதுகுல தெய்வமாமால்.

ஸ்ரீமாணிக்கவாசக சுவாமிகள் துதி.

எழுதரு மறைகள் தேறா விறைவனை யெல்லிற் கங்குல்
பொழுதறு காலத் தென்றும் பூசனை விடாது செய்து
தொழுதகை தலைமேலேறத் துளும்புகண் ணீருள் மூழ்கி
அழுதடி யடைந்த வன்பன் அடியவர்க் கடிமை செய்வாம்.

பெருந்துறையிற் சிவபெருமானருளுதலும் பெருகருணைப் பெற்ற நோக்கிக் கரைந்துகரைந் திருகண்ணீர் மழைவாரத் தூயநிலை கடந்து போந்து, திருந்துபெருஞ் சிவபோகக் கொழுந்தேறல் வாய்மடுத்துத் தேக்கிச்செம்மாந், திருந்தருளும் பெருங்கீர்த்தி வாதவூ ரடிகளடி இணைகள் போற்றி.

நால்வர் துதி.

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கன்மிதப்பி லணைந்தபிரா னடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி.

நால்வர் சிறப்பு.

சொற்கோவுந் தோணிபுரத் தோன்றலு மென்சுந்தரனுஞ்
சிற்கோல வாதவூர்த் தேசிகனு—முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறைநூல் தானெங்கே
எந்தைபிரா னஞ்செழுத் தெங்கே.

திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் சரித்திரச்சுருக்கம்.

காழிநகர்ச் சிவபாத விதயர் தந்த
    கவுணியர்கோ னழுதுமையாள் கருதியூட்டும்
ஏழிசையி னமுதுண்டு தாளம் வாங்கி
    இலங்கியசீத் திலச்சிவிகை யிசையவேறி
வாழுமுய லகனகற்றிப் பந்தரெய்ந்து
    வளர்கிழிபெற் றரவின்விட மருகல்தீர்த்து
வீழிநகர்க் காசெய்தி மறைக்கதவம் பிணித்து
    மீனவன்மே னியின்வெப்பு விடுவித்தாரே.

ஆரெரியிட் டெடுத்தவே டவைமுன் னேற்றி
    யாற்றிலிடு மேடெதிர்போ யணையவேற்றி
யோரமண ரொழியாமே கழுவி லேற்றி
    யோது திருப்பதிகத்தா லோடமேற்றிக்
காருதவு மிடிபுத்தன் றலையி லேற்றிக்
    காயாத பனையின்முது கனிகளேற்றி
ஈரிலா வங்கமுயி ரெய்த வேற்றி
    இலங்குபெரு மணத்தரனை யெய்தினாரே.

பரமாசாரிய சுவாமிகள் நால்வர் தோத்திரங்கள்.

திருநாவுக்கரசு மூர்த்தி சுவாமிகள் சரித்திரச்சுருக்கம்.

போற்றுதிரு வாமூரில் வேளாண் தொன்மைப்
    பொருவில் கொறுக்கையரதிபர் புகழனார்பால்
மாற்றரு மன்பினிற் றிலகவதியா மாது
    வுற்றுதித்த பின்புமரு ணீக்கியாருந்
தோற்றிடமண் சமயமுற் றுயரநீக்கத்
    திணைவரருள் தரவந்த சூலைநோயால்
பாற்றருநீ ளிடரெய்திப் பாடலிபுத் திரத்திற்
    பாழ்மொழித் தரனதிகைப் பதியில்வந்தார்.

வந்துதமக் கையாரு ளானீறு சாத்தி
    வண்டமிழா னோய்தீர்ந்து வாக்கின் மன்னாய்
வெந்தபொடி விடம்வேழம் வேலைநீந்தி
    வியன்சூலங் கொடியிடபம் விளங்கச்சாத்தி
அந்தமிலப் பூதிமக னரவுமாற்றி
    யருட்காசு பெற்றமறை யடைப்புநீக்கிப்
பந்திமகிழ்ந் தையாற்றிற் கயிலைகண்டு
    பூம்புகலூ ரரன்பாதம் பொருந்தினாரே.

ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரச்சுருக்கம்.

தண்கயிலை யதனீங்கி நாவலூர்வாழ்
    சைவனார் சடையனார் தனயனாராய்
மண்பகழ வருட்டுறையா னோலைகாட்டி
    மணம்விலக்க வன்றொண்டா யதிகைசேர்ந்த
நண்பினுட னருள்புரிய வாரூர்மேவி
    நகைமிளரும் பரவைதோ ணயந்துவைகித்
திண்குலவும் விறன்மிண்டர் திறல்கண்டேத்தித்
    திருத்தொண்டத் தொகையருளாற் செப்பினாரே.

செப்பலருங் குண்டையூர் நெல்லழைத்துத்
    திருப்புகலூர்ச் செங்கல்செழும் பொன்னாச்செய்து
தப்பின்முது குன்றர்தரும் பொருளாற்றிலிட்டுத்
    தடத்தெடுத்துச் சங்கிலிதோள் சார்ந்துகாதன்
ஒப்பிறனிற் றூதுவந்தா னூடேறி
    புறமுதலை சிறுமதலை யுமிழகல்கி
மெய்ப்பெரிய களிறேறி யருளாற்சேர
    வேந்தருடன் வடகயிலை மேவினாரே.

ஸ்ரீமாணிக்கவாசக சுவாமிகள் சரித்திரச்சுருக்கம்.

செப்பதிரு வாதவூர் வந்தருளி யமைச்சரெனச் சிறந்துநீடு
வையகிசை வழுதிநிதி கொண்டரனைக் குருந்தடியில் வணங்கிஞானம்
உய்யவருட் பணியாற்றி நரிபரியாச் செய்துநதி யுடைப்பிலெல்லவன்
ஐயன்முடி மிசையுவந்து மண்சுமக்க வடிபெறுரு வாய்ஞரோ.
எந்துமாகிய வழகன் மேனிபிரம் படிதாங்க வேங்கிப்புத்தர்
மக்கவா ரருள்செய்து மூகைபே சிடவழங்கி மணிமன்றுநிம்
வக்கஞயகன் கரத்தாலேடு மெழுத்தாணி யுங்கொண் டெழுதப்பாடி
உக்கண் மேவிய சோதிதன்னி லிரண்டறக்கூடி யமர்ந்திட்டாரே.

திருச்சிற்றம்பலம்.

முற்றுப்பெற்றது.

குறிப்புரை.

திருச்சிற்றம்பலம்.

விண்ணோர் தமக்குந் தெரிவருநின் மேன்மையெங்கே யாமெங்கே
தண்ணார் தமிழென் றிதுவுமொரு குற்றந்தானுய்ச் சமைத்ததால்
அண்ணா அன்புக் கெளியாயான் அவாவாற் செய்தே னாதலால்
எண்ணா தெல்லாம் பொறுத்தருள்வாய் என்று மிதுவென் விண்ணப்பமே.

என்று சிவதத்துவ விவேக நூலுடையார் கூறியபடி அரி பிரமாதி அமரர்களுங்கூட பன்னாள் ஓலமிட்டலறியும் அறிதற்கரிய சாக்ஷாத் பரமசிவத்தின் அபாரப்பெருமையிலோ ஜீவசுபாவம் முழுதும் நிறைந்த சிறியேன் எடுத்தியம்புவதென்றால் கேவலம் பிதற்றேயாகும். ஆயினும் இச்சிறு நூலை அளவிலாவசைதூப்ப அவாவாலறைந்து, அம்புலிசூடிய எம்பிரான் பொன்னார் திருவடிக் கமலங்களில் ஒரு சிறுவில்வத்தளிராகச் சமர்ப்பித்து, அவ்விணையற்ற திருவடிகளைச் சிக்கெனப்பிடித்து நின்றேனாகலின் அப்பரமசிவத்தின் அபாரமஹிமை அடியேன் செய்த இச்சிறு குற்றத்தையும் க்ஷமித்தருளுமென்று ஆப்த சிகாமணிகளான நம்வைதிக சைவர்களுக்கு மிகவும் விநயமாய் விண்ணப்பஞ்செய்து கொள்ளுகிறேன். வேதந்தழைக்க, வேதாந்தமோங்க, வேதியர்களிக்க, வித்தைபெருக, விஞ்ஞானமலிக, விரூபாட்சன் திருவடிவாழ்க. சிவம்! சிவம்!! சிவம்!!!

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ மெய்கண்டார்.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீஞானசம்பந்த குருப்யோ நம:

ப்ரணவ வித்யா பரிமளம்

என்னும்

ஓங்கார விளக்கம்.

[illegible]

ஸ்ரீ நடராஜமூர்த்தி வணக்கம்.

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவோன்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

ர் தவத்தருமஞ் சற்குருவுஞ் செய்யாசிவ
னத்தியையிணைய நல்லோர் பராபரமே......................எனவும்

வெறிப்பப்பாசி கலைந்து நன்னீர் காணுநல்லோர்
நல்லுணர்வின் ஞானம்வந்து தோன்றும் பராபரமே........எனவும்

கண்டவோடுகின்ற காக்கைபோற் பொய்ம்மாயச்
ற்கண்டா லோடுமன்பர் தோய்வறிவ தெந்நாளோ........எனவும்

ல்லா விரதமொன்று கொண்டவரே நல்லோர்மற்
லாதார் யாரோ வறியேன் பராபரமே........................எனவும்

மத் தாயுமானசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய திவ்விய க்குகளிற்கண்ட சுகுணங்களமைந்த ஒரு சத்புருஷன், ராந்த ஜன்மங்களிலே அளவிறந்த சத்கருமங்களை

யநுஷ்டித்து அவற்றாலாய புண்ணிய சுகிருதவசத்தால் இகலோகத்திலே சதாசாரம் நிறைந்த ஓருயர்ந்த நல்ல குடியிலே தோன்றியிருந்தனன். அவன்,

[illegible]
துர்லபம் ப்ராப்ய மாநுஷ்யம் தத்ராபி நரவிக்ரஹம்।

(இதன்பொருள் "மானுடதேகம் அருமையானது. அதனினும் புருஷதேகம் அருமையானது." என்று கிருஷ்ணயஜுர்வேத வராஹோபநிஷத் வாக்கியத்தைப்பார்த்து, தான் தாங்கியிருக்கும் பஞ்சபூதபரிணாமசரீரம் ஒரு நொடிப்பொழுதில் மாயுந்தன்மையுடையதென நன்றாக ஆலோசித்துப்பார்த்துத் தெளிந்து, புத்திர மித்திர களத்திராதிகளின் சேர்க்கைப்பிரிவுகளால் உண்டாகும் பெருஞ் சுகதுக்கங்களைக் கண்டு வெருவி, அளவிறந்த யாதனா கர்ப்பவாச சம்பந்தமுடைய பிறவிப்பெரும்பிணிக்கு மிகவும் அஞ்சி, அதையொழிக்க வெண்ணியவனாய்,

மூர்த்திதலந் தீர்த்த முறையாற் றொடங்கினர்க்கோர்
வார்த்தைசொல்லச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே........எனவும்

மெய்சுவாமிகள் பூஷித்த அரியபெரிய உண்மையைக் கடைப்பிடித்துப் பூரணவைராக்கிய சம்பந்நனாய் விளங்கினன். பிறகு தீர்த்தங்கள்தோறுஞ்சென்று அவற்றைப்படிந்து, தலங்கள்தோறுஞ்சென்று மூர்த்திகளை வழிபட்டுச் சிவபுண்ணிய மேறப்பெற்ற முதிர்ச்சியினாலே இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் என்னும் இவற்றின் விளைவாகிய பரிபாகமெய்தித் தீவிரபக்குவமடைந்திருந்தான். அப்பொழுது அவன் அந்தகாரத்தை ஒருங்கேயொழிக்கும் ஆதித்தனைப்போலச் சம்பூரண பிரமவித்தையும், சிறந்த தபோபலமும், திருவருட்பிரகாசமும் பெற்றுத் திருவருளே திருமேனியாக வெழுந்தருளியிருக்கும் ஓர் சற்குருநாதன் சந்நிதானமடைந்து கேட்கும் முறையிற் சிறிதும் பிறழாமல் அவனடிப்போதுகளைக் கனிந்தமனத்தோடும் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்து எழுந்துநின்று கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிஷ்டையென நான்கு திறனாக விளங்கும் முத்திஞானத்திற்கு ஏதுவானதும், சகலவேதாந்தங்களின் பரமரகசியமானதும், அநுபவத்தால்மட்டும் அறியக்கூடியதும், அநேககோடி ஜன்மங்களிலே செய்தபுண்ணிய பரிபாக முதிர்ச்சியால்

சற்குருநாதன் கடாட்சம்பெற்ற அந்தட்சணமே அறியக்கூடியதாமாயுள்ள ஒப்பற்ற ஒருமொழியை ஞானவைராக்கிய பரிபூரண மூர்த்தியாகிய பகவானே! வேதாந்தமான சிவசின்னதாரண அழகுவாய்ந்த குருநாதா! அடியேனுக்கு உபதேசித்தருளல் வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தான். அன்றியும் தன்னுடைய உடல்பொருளாவி மூன்றையும் அவரது திருவடிக்கமலங்களுக்கு அர்ப்பணஞ்செய்து சதந்தரவினையை விளங்கினன். இதனாலே,

𑌆𑌚𑌿𑌨𑍋𑌤𑌿𑌹𑌿𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑍍 𑌆𑌚𑌾𑌰𑍇𑌸𑍍𑌥𑌾𑌪𑌯𑌤𑍍𑌯𑌪𑌿 ।
𑌸𑍍𑌵𑌯𑌮𑌾𑌚𑌰𑌤𑍇𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌤𑌮𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌂 𑌵𑌿𑌦𑍁𑌰𑍍𑌬𑍁𑌧𑌾𑌃 ॥

ஆசிநோதிஹிசாஸ்த்ரார்த்தம் ஆசாரேஸ்தாபயத்யபி।
ஸ்வயமாசரதேயச்ச தமாசார்யம் விதுர்புதா:॥

(இ-ள்) “எவன் சாஸ்திரங்களைக் கற்பான், எவன் அவற்றையுபதேசிப்பான், எவன் அவற்றை யனுட்டிப்பான், அவனை ஆசிரியனாய்” என்று ஆன்றோர்கூறிய ஆசிரியனிலக்கண முற்றத் தழுவப்பட்டமை காண்க. அவ்விண்ணப்பத்தைச் செவியடுத்தருளிய சற்குருநாதன்,

கிருஷ்ணயஜுர்வேத சுவேதாசுவதரோபநிஷத்.

𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑍇 𑌪𑌰𑌮𑌂𑌗𑍁𑌹𑍍𑌯𑌂 𑌪𑍁𑌰𑌾𑌕𑌲𑍍𑌪𑍇 𑌪𑍍𑌰𑌚𑍋𑌦𑌿𑌤𑌮𑍍 ।
𑌨𑌾𑌪𑍍𑌰𑌶𑌾𑌨𑍍𑌤𑌾𑌯𑌦𑌾𑌤𑌵𑍍𑌯𑌂 𑌨𑌾𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌯𑌾𑌶𑌿𑌷𑍍𑌯𑌾𑌯𑌵𑌾 𑌪𑍁𑌨𑌃 ॥
𑌯𑌸𑍍𑌯𑌦𑍇𑌵𑍇 𑌪𑌰𑌾𑌭𑌕𑍍𑌤𑌿𑌰𑍍𑌯𑌥𑌾𑌦𑍇𑌵𑍇 𑌤𑌥𑌾𑌗𑍁𑌰𑍌 ।
𑌤𑌸𑍍𑌯𑍈𑌤𑍇 𑌕𑌥𑌿𑌤𑌾𑌹𑍍𑌯𑌰𑍍𑌥𑌾𑌃 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌨𑍍𑌤𑍇 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ॥

வேதாந்தே பரமம் குஹ்யம் புராகல்பே ப்ரசோதிதம்।
நாப்ரசாந்தாய தாதவ்யம் நாபுத்ராய நாசிஷ்யாயவா புந:॥
யஸ்யதேவே பராபக்தி: யதாதேவே ததாகுரௌ।
தஸ்யைதே கதிதாஹ்யர்த்தா: ப்ரகாசந்தே மஹாத்மன:॥

(இ-ள்) “வேதாந்தத்தில் பரமரகசியமாயும் பழைய கற்பங்களிலே வெளியிடப்பட்டதாயுமுள்ள (இந்த ஞானத்தை) புத்திரனல்லாதவனுக்கும் சீடனல்லாதவனுக்குப், சாந்தியடையாதவனுக்கும் கொடுக்கக்கூடாது. எவனுக்குத் தேவனிடத்தில் சிறந்த பக்தியுண்டோ தேவனிடத்திலுள்ளதுபோல் குருவினிடத்தில் யாருக்குண்டோ அந்த மகாத்துமாவுக்கே யேற்

சொன்னபொருள் விளக்கும்" என்று கூறியபடி மாணாக்கனது தீவிரத்தை நோக்கி கழிபேருவகை கொண்டவராய்ப் புன்னகையோடும் மந்தகாசத்தோடும் அவனுக்கு உபதேசிப்பாராயினர். அப்போது அவ்விருவருக்கும் நடந்த அர்த்தவாதம் என்னும் சம்வாதமுறையே இந்து உலகத்தாரெளிதிலுணருமாறு இலகுவான நடையில் வேதவேதாந்த வாக்கியப் பிரமாணங்களோடு ப்ரணவ வித்யா பரிமளம் என்னும் ஓங்கார விளக்கம் ஆகிய இவ்வரிய பெரியநூல் திருவருளை முன்னிட்டு வினாவிடையாக வரையப்பட்டுள்ளது.

கிருஷ்ணயஜுர்வேத தைத்திரீயோபநிஷத்—சிக்ஷாவல்லி.

𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌦𑍇𑌵𑍋 𑌭𑌵 ॥

ஆசார்யதேவோபவ ॥

(இ-ள்) "ஆசாரியனைத் தெய்வமாகப் பாவித்திரு" என்றும்

கிருஷ்ணயஜுர்வேத வராஹோபநிஷத்.

𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑌾𑌰𑍍𑌗𑍇𑌣 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯𑌾𑌸𑍁𑌸𑍍𑌥𑌿𑌰𑍋 𑌭𑌵 ।
𑌶𑌿𑌵𑍋 𑌗𑍁𑌰𑍁𑌶𑍍𑌶𑌿𑌵𑍋 𑌦𑍇𑌵𑌶𑍍𑌶𑌿𑌵𑍋 𑌵𑍇𑌦𑌶𑍍𑌶𑌿𑌵𑌃 𑌪𑍍𑌰𑌭𑍁𑌃 ।

ஆசார்ய சாஸ்த்ரமார்க்கேண ப்ரவிச்யாசுஸ்திரோபவ ।
சிவோகுருச்சிவோதேவச் சிவோவேதச்சிவ ப்ரபு: ॥

(இ-ள்) "ஆசாரியன் சாஸ்திரம் ஆகிய இம்மார்க்கத்தே பிரவேசித்து அதில் உறுதியாயிரு. சிவனேகுரு. சிவனேதேவன். சிவனேவேதம். சிவனேபிரபு." என்றும்

𑌤𑌦𑍍𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌗𑍋𑌚𑌰𑌾𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑍇 𑌮𑍁𑌚𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌤𑌕𑍈𑌃

தத்த்ருஷ்டிகோசராஸ்ஸர்வே முச்யந்தே ஸர்வ பாதகை: ॥

(இ-ள்) "தத்துவப் பிரவர்த்தகராயுள்ள அவனுடைய பார்வையிற்பட்டவர்களனைவரும் சர்வ பாதகங்களினின்று விடுதலையுறுகின்றனர்" என்றும்

சுக்லயஜுர்வேத அத்வயதாரகோபநிஷத்.

𑌗𑍁𑌰𑍁𑌰𑍇𑌵 𑌪𑌰𑌂𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 ।

குருரேவ பரம்ப்ரஹ்ம ।

(இ-ள்) "குருவே பரப்பிரமம்." என்றும்

அந்தியும் மெய்கண்ட சாஸ்திரங்களிலொன்றாகிய தி வருட்பயனும்;

ஞானமிவனொழிய நண்ணியிடும் நற்கலனற்
பானுவொழியப்படின்.

(இ-ள்) "நல்ல சூரியக்காந்தக் கல்லினிடத்து ஆதித்தனில்லாமல் அக்கினி தோன்றுமாயின் ஆசாரியனையின்றி ஒருவருக்கு ஞானமுண்டாதல்கூடும்" என்றும் ஆணைதந்திருத்தலால் சற்குருநாதன் கருணையும் அவனது கடாட்சமுமின்றி முத்திக்கேதுவாகிய திருவருள்ஞானம் ஒருபோதும் கைகூடாதென்பது இவற்றால் விளக்கிக்காட்டப்பட்டது. சகலாகம பண்டிதராகிய அருணந்தி சிவாசாரியருடைய "இருபாவிருபஃதும்", உமாபதி சிவாசாரியருடைய "நெஞ்சுவிடுதூதும்" ஆசாரியரையே பரமதெய்வமாகக்கொண்டு இயற்றப்பட்டுள்ள ஒப்பற்ற ஞானசாஸ்திரங்களாம் என்பதையுணர்க.

மாணாக்கன்:—ஆதிகாலத்திலே ஸ்ரீமத் தக்ஷிணாமூர்த்தி முதலிய பரமாசாரியர்களால் உபதேசிக்கப்பட்ட உயர்வொப்பில்லாத சர்வமந்திரசாரபூத மூலமொழி யாது?

ஆசிரியன்— "ஓம்" என்னும் பிரணவ ஏகாக்ஷர மந்திரமே ஆதியில் உபதேசிக்கப்பட்டது.

மா—இதற்கு ஏதாவது சுருதிப்பிரமாணமுண்டோ?

ஆ—உண்டு. வேதமகாபுருஷன் உச்சியிலமர்ந்து சிவோத்கர்ஷங்களையும், சிவபரத்துவத்தையும் காட்டவெழுந்த பஞ்சருத்திரங்களிலொன்றாகிய

அதர்வணவேத அதர்வசிகோபநிஷத்.

𑌓𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌤 𑌦𑌕𑍍𑌷𑌰 𑌮𑌾𑌦𑍌 𑌪𑍍𑌰𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌧𑍍𑌯𑌾𑌨𑌂 𑌧𑍍𑌯𑌾𑌯𑌿𑌤𑌵𑍍𑌯𑌂।

ஓமித்யே ததக்ஷர மாதௌ ப்ரயுக்தம் த்யாநம் த்யாயிதவ்யம்।

(இ-ள்) "ஓமென்னும் பிரணவாக்ஷரமே ஆதியிலுபதேசிக்கப்பட்டது. அதுவே தியானம் அதுவே தியானிக்கற்பாலது." என்று கூறியது.

மா—இம்மகாமந்திரம் எப்பொழுது எவ்வாறுண்டாயிற்று?

ஆ—சிருஷ்டிகாலத்தில் பரமசிவம் ஆத்மாக்களின்மேல் வைத்த பரங்கருணையால் அவர்களை இரட்சிக்க இச்சைகூர்ந்து சுத்தமாயையென்னும் குடிலையின் ஏகதேசத்தைத் தனது

ஒளியால் கலக்க அதினின்று முதல் முதல் தோன்றிய நாதமே "ஓம்" என்று சொல்லப்படும். அது பின்னர் விந்து தத்துவமாய்விரிந்து பரவியது. அது எவ்வாறெனில் இரண்டு எதிர்மறையான மின்சாரசக்திகள்—அதாவது பாயுஞ்சக்தியொன்று, தாங்குஞ்சக்தி மற்றொன்று,—ஆகியவிவ்விரண்டும் ஒன்றோடொன்றுசேரும்போது அவற்றினின்றும் பிரகாசமும் தொனியுந் தோன்றுவதுபோல (இதற்கு மின்னலும் இடியுமே உதாரணம்) பரமசிவத்தின் அருளொளி குடிலையில் வந்து பொருந்தினவுடன் தோன்றிய தொனியே நாதமாகும். இந்த நாதமே வைதிக சைவத்துட்கூறப்பட்டதத்துவங்களெல்லாவற்றிற்கும் முதன்மையானது. இதுவே சர்வாத்மாக்களுக்கும் அறிவையெழுப்பிவித்து ஞானமாய் விளங்கிநிற்பது. இதை அளக்கவும் உரைக்கவும் முடியாது. அநாமயமாயும், சர்வவியாபகமாயும், நித்தியமாயும், நிலையாகவும் பொலிவதுமிதுவே. இதற்கு ஒப்புயர்வு கிடையாது. எல்லாவற்றிற்கும் மேலாய் நாயகத்தன்மை பூண்டிருத்தலாலும், சிவம் அதிஷ்டித்து நிற்றலாலும் இதற்குச் சிவதத்துவமெனப் பெயருண்டாயிற்று. எவ்வப்பெயர்கள் எவ்வத்தத்துவாதிபதிகளுக்குளவோ அவ்வப்பெயர்கள் அவர்களாலதிஷ்டிக்கப்படுந் தத்துவங்களுக்கு முளவென்பது பரமாப்த வாக்கியம். இந்தச் சிவம் என்னும் நாததத்துவமே தோற்ற முறையில் முதல் தத்துவமெனவும், ஒடுக்கமுறையில் முப்பத்தாறாவது தத்துவமெனவும் கூறப்படும். இலயதத்துவம் எனப்பெயருடையதும் இதுவேயாம். மேற்சொன்ன குடிலையினின்றுந்தோன்றிய தொனியானது பரமாகாயப் பெருவெளியில் பரவும்போது உண்டாகிய வட்டவடிவே விந்துவாகும். அதற்குச் சத்திதத்துவமென்று பெயர். அதுவே முப்பத்தைந்தாவது தத்துவமாகும். விந்து—புள்ளி, வட்டம்.

இவ்வாறு தோன்றிய தத்துவங்கள் முப்பத்தாறையும் விரிக்கின்; 1 பிருதிவி. 2 அப்பு. 3 தேயு. 4 வாயு. 5 ஆகாசம். இவைபஞ்சபூதங்களாம். 6 வாக்கு. 7 பாதம். 8 பாணி. 9 பாயுரு. 10 உபஸ்தம். இவை கர்மேந்திரியங்களாம். 11 சுரோத்திரம். 12 துவக்கு. 13 சட்சு. 14 ஜிஹ்வை. 15 ஆக்கிராணம். இவை ஞானேந்திரியங்களாம். 16 சப்தம் 17 ஸ்பரிசம். 18 ரூபம். 19 ரசம். 20 கந்தம். இவைதன்மாத்திரைகளாம். 21 மனம்.

22 அகங்காரம். 23 புத்தி. 24 குணம். இவை அந்தக்கரணங் ளாம். இந்தத் தத்துவங்கள் இருபத்துநான்கும் ஆத்மதத்துவமெனவும், அசுத்ததத்துவமெனவுஞ் சொல்லப்படும். இவை அதர்வணவேத பிரச்னோபநிஷத்தில் பிரசித்தம். 25 பிரகிருதி 26 புருஷன். 27 அராகம். 28 வித்தை. 29 கலை. 30 நியதி. 31 காலம். இந்தத் தத்துவங்களேழும் வித்தியாதத்துவமெனவும், சுத்தாசுத்த தத்துவமெனவுஞ் சொல்லப்படும். இவை கிருஷ்ண யஜுர்வேத சுவேதாசுவதரோப நிஷத்திலும், அதர்வணவேத நாரதபரிவிராஜ கோபநிஷத்திலும் பிரசித்தம். 32 சுத்தவித்தை 33 ஈசுவரம். 34 சாதாக்கியம். 35 சத்தி அல்லது விந்து. 36 சிவம் அல்லது நாதம். இந்தத் தத்துவங்களைந்தும் சிவதத்துவமெனவும் சுத்ததத்துவமெனவுஞ் சொல்லப்படும். இவை அதர்வணவேத பிருகஜ்ஜாபாலோப நிஷத்தில் பிரசித்தம். இவ்வாறுவேத படிதமாயுள்ள முப்பத்தாறு தத்துவங்களுள்ளுந் தலையாய்ச் சிறந்து நிற்கும் நாததத்துவமே அவையனைத்துக்கும் உறைவிடமாய் இருத்தல்பற்றி அதன் தோற்றமே பிரதம மகாசிருஷ்டியென்று ஞானநூற்களோதும். மற்றைய நாராயணன் முதலியோர் சிருஷ்டி அதற்குப்பின் அவ்வப்போது தாழ்ந்து நிலைக்கண்ணுள்ள தத்துவங்களினின்றுந் தோன்றியபடியால் அந்தச்சிருஷ்டிபேதங்கள் அவாந்தர சிருஷ்டியென்றே கொள்ளற்பாற்று. வேதவுண்மை இவ்வாறிருக்க இதனையுணராதார் தம் தம் மதங்களிற் கூறப்பட்ட கடவுளரது சிருஷ்டியே ஆதிசிருஷ்டியென்று மோகத்தால் சாதியாநிற்பர். அவை மறைமுடிவல்லோரால் அங்கீகரிக்கப்படுவனவன்று.

அன்றியும், மேற்சொன்ன தத்துவங்களும் அவற்றின் காரியரூபமான தாத்விகங்களும் சுத்தமெனவும், சுத்தா சுத்தமெனவும், அசுத்தமெனவும் முத்திறப்படுதலால் அவற்றின் முதற்காரணங்களும் மூன்றுவிதமாகவேயிருக்கின்றன. அவை சுத்தமாயை (பரப்பிரகிருதி), அசுத்தமாயை (அபரப்பிரகிருதி), பிரகிருதிமாயை (மூலப்பிரகிருதி) என்பனவாம். அவற்றுள் மலகர்மங்களோடு விரவாத முதற் காரணமாயிருப்பது சுத்தமாயையாகும். அது ஏனையிரண்டினையும் வியாபித்து மேலாய் நிற்ப, அதன் கீழாயடங்கி மலகர்மங்களோடு விரவி முதற்காரணமாயிருப்பது அசுத்தமாயையாம். அவ்வசுத்தமாயையின் ஸ்தூல

பரிணாமமே பிரகிருதிமாயையாம். இது முளைப்பதற்குப் பக்கு
வப்பட்டிருக்கும் உப்பின விதையைப் போன்றது. சுத்தமாயா
தத்துவங்களினது தோற்றம் ஆடையிலிருந்து கூடாரந்தோன்றி
னற்போல விருத்திகாரியமாம். அசுத்தமாயா தத்துவங்களி
னது தோற்றம் நெய்யிலிருந்து புழுவுண்டானாற்போல ஏகதேச
பரிணாமமாம். மாயை-ஆத்மாக்களுக்கு அறிவை மயக்கிவிளக்
கஞ் செய்வது. அல்லாமலும், மா-ஒடுங்குதல், யா-தோன்றுதல்
எல்லாக் காரியங்களும் தன்னிடம் வந்து ஒடுங்குதற்கும், தன்
கண் நின்று தோன்றுதற்குங் காரணமாய் நிற்பதெதுவோ அது
மாயையென்று சொல்லப்படும். தத்துவம்-என்பதற்கு நித்தியப்
என்று பொருள். அதாவது, தாத்விகமாகிய சரீராதிகள் போல
உடனே அழிவதின்றிப்பிரளய காலம் வரையும் நிலையுறுதலாற்
தத்துவமெனப்பட்டது. பூதலயகாலத்தில் மரணமுறுந் தேவ
களுக்கு அமரர்கள் என்னும் பெயர் ஏற்பட்டதுபோலக் காரிய
கேடுடைய கருவிகளுக்கும் தத்துவமெனப் பெயர் ஏற்பட்
டதென்றுணர்க.

மா—பிரதம மகாசிருஷ்டியில் முதல் முதல் தோன்றிய
நாதம் என்றதற்குப் பிரமாணம் யாது?

ஆ—சிதாகாசரகசியத்தை வெளிப்படுத்துந் தெய்வத்தா
மென்னும் திருச்சிற்றம்பலத்தில் பஞ்சகிருத்தியத்தாண்டவ
செய்தருளும் ஸ்ரீ நடராஜப் பெருமானது வலது கரத்தில் த
கப்பட்டுள்ள பறையவாத்திய மெனப்படும் உடுக்கையே இ
வுண்மையை வலியுறுத்தாநிற்கும். "டமாகமேந்திய ஸ்ரீ ஹஸ்த
திலே சிருஷ்டி." என்னும் பொருள்பட "தோற்றந்துடி
தனில்" என்று உண்மை விளக்கங்கூறுவதையுணர்க.

மா—இந்த நாதந்தான் சர்வபிரபஞ்சத் தோற்றத்துக்கு
ஆதிகாரணமோ?

ஆ—ஆம். சொல்லும் பொருளுமாய இருகூற்றுப்பிரப
மென்னுஞ் சப்தமயப் பிரபஞ்சத்துக்கும் அர்த்தமயப் பிரப
சத்துக்கும் அதுவே காரணமாகும்.

மா—சப்தமயம் அர்த்தமயம் ஆகிய இருவகைப் பிரபஞ்
களையும் விளக்கிச் சப்தமயத்தை விரிவாயெடுத்தியம்பவேண்

ஆ—கடீது கண்ணுக்குப் புலப்படும் இப்பிரபஞ்சமானது பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்னும் பஞ்சபூதங்களின் காரியமாயும், சுட்டியறியப்படும் பல அவயவப்பகுப்புடையதாயும், தோன்றி நின்றழியுந்தன்மைத்தாயு மிருத்தலின் காரிய ரூபமாகும். இதுபோல வேதமும் பல சாகைகளாயும், காண்டங்களாயும், அத்தியாயங்களாயும், மந்திரங்களாயும், பதங்களாயும், அட்சரங்களாயும் விரிந்து அவற்றின் கோவைப்பாட்டோடுகூடிய தொகுதியா மிருத்தலின் காரியப்பாடுடையதேயாம். அதனால் உலகம் அர்த்தமயப் பிரபஞ்சமாயும், வேதம் சப்தமயப்பிரபஞ்சமாயும் இருக்கின்றன வென்பது வெளிப்படை. பிர-உபசர்க்கம், பஞ்சம்-விரிவு. அதாவது மிகவும் விரிந்த வியல்புடையது என்பது அதன் பொருளாம். வேதம் பரவித்தை என்னும் அநுபூதிஞானத்துக்கு நேர்சாதனமாயிருத்தலின் அவ்வேதத்தால் வருஞ்ஞானம் அபரவித்தை எனப்பட்டது. (அபரவித்தை-அபரஞானம்).

அதர்வணவேத முண்டகோபநிஷத்.

𑌤𑌤𑍍𑌰𑌾𑌪𑌰𑌾 𑌋𑌗𑍍𑌵𑍇𑌦𑍋 𑌯𑌜𑍁𑌰𑍍𑌵𑍇𑌦𑌃 𑌸𑌾𑌮𑌵𑍇𑌦𑍋
𑌽𑌥𑌰𑍍𑌵𑌵𑍇𑌦𑌃 𑌶𑌿𑌕𑍍𑌷𑌾 𑌕𑌲𑍍𑌪𑍋 𑌵𑍍𑌯𑌾𑌕𑌰𑌣𑌂
𑌨𑌿𑌰𑍁𑌕𑍍𑌤𑌂 𑌛𑌨𑍍𑌦𑍋 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌷𑌮𑌿𑌤𑌿 ।
𑌅𑌥 𑌪𑌰𑌾 𑌯𑌯𑌾 𑌤𑌦𑌕𑍍𑌷𑌰𑌮𑌧𑌿𑌗𑌮𑍍𑌯𑌤𑍇 ॥

தத்ராபரா ருக்வேதோ யஜுர்வேதஸ் ஸாமவேதோ
அதர்வண வேதச் சிக்ஷாகல்போ வ்யாகரணம்
நிருக்தம் சந்தோ ஜ்யோதிஷமிதி ।
அதபரா யயா ததக்ஷர மதிகம்யதே ॥

(இ-ள்.) "இருக்கு, யஜுர், சாமம், அதர்வணமென்னும் வேதங்களும், சிக்ஷை, கற்பம், வியாகரணம், நிருக்தம், சந்தம், சோதிடம் என்னும் அங்கங்களும் அபரவித்தையாம். எதனாலே அக்ஷரமாகிய சிவம் அறியப்படுகின்றதோ அதுபரவித்தையாம்" என்று நிரூபித்துள்ளது. அக்ஷரம்-மூர்த்தித்திரயாதீத சிவம். அதற்குப்பிரமாணம்.

அதர்வணவேத திரிபுராதாபிந்யுபநிஷத்.

𑌸𑌦𑌾𑌶𑌿𑌵𑍋𑌽𑌕𑍍𑌷𑌰𑍋 𑌵𑌿𑌮𑌲𑌃

ஸதாசிவோர்க்ஷரம் விமலம்

(இ-ள்.) "சதாசிவன் அக்ஷரம் மலமற்றவன்."

ஆ—கமது கண்ணுக்குப் புலப்படும் இப்பிரபஞ்சமானது திவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்னும் பஞ்சபூதங் ன் காரியமாயும், சுட்டியறியப்படும் பல அவயவப்பகுப் டயதாயும், தோன்றி நின்றழியுந்தன்மைத்தாயு மிருத்தலின் ய ரூபமாகும். இதுபோல வேதமும் பல சாகைகளாயும், ண்டங்களாயும், அத்தியாயங்களாயும், மந்திரங்களாயும், ங்களாயும், அட்சரங்களாயும் விரிந்து அவற்றின் கோவைப் டோடுகூடிய தொகுதியா யிருத்தலின் காரியப்பாடு யதேயாம். அதனால் உலகம் அர்த்தமயப் பிரபஞ்சமாயும், தம் சப்தமயப்பிரபஞ்சமாயும் இருக்கின்றன வென்பது ளிப்படை. பிர-உபசர்க்கம், பஞ்சம்-விரிவு. அதாவது வும் விரிந்த வியல்புடையது என்பது அதன் பொருளாம். தம் பரவித்தை என்னும் அநுபூதிஞானத்துக்கு நேர்சாதன மிருத்தலின் அவ்வேதத்தால் வருஞ்ஞானம் அபரவித்தை னப்பட்டது. (அபரவித்தை-அபரஞானம்).

அதர்வணவேத முண்டகோபநிஷத்.

𑌤𑌤𑍍𑌰𑌾𑌪𑌰𑌾 𑌋𑌗𑍍𑌵𑍇𑌦𑍋 𑌯𑌜𑍁𑌰𑍍𑌵𑍇𑌦𑌃 𑌸𑌾𑌮𑌵𑍇𑌦𑍋
𑌽𑌥𑌰𑍍𑌵𑌵𑍇𑌦𑌃 𑌶𑌿𑌕𑍍𑌷𑌾 𑌕𑌲𑍍𑌪𑍋 𑌵𑍍𑌯𑌾𑌕𑌰𑌣𑌂
𑌨𑌿𑌰𑍁𑌕𑍍𑌤𑌂 𑌛𑌨𑍍𑌦𑍋 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌷𑌮𑌿𑌤𑌿 ।
𑌅𑌥 𑌪𑌰𑌾 𑌯𑌯𑌾 𑌤𑌦𑌕𑍍𑌷𑌰𑌮𑌧𑌿𑌗𑌮𑍍𑌯𑌤𑍇 ॥

தத்ராபரா ருக்வேதோ யஜுர்வேதஸ் ஸாமவேதோ
அதர்வண வேதச ஷிக்ஷாகல்போ வ்யாகரணம்
நிருக்தம் சந்தோ ஜ்யோதிஷமிதி ।
அதபரா யயாதத்க்ஷர மதிகம்யதே ॥

(இ-ள்.) "இருக்கு, யஜுர், சாமம், அதர்வணமென்னும் வேதங்களும், சிக்ஷை, கற்பம், வியாகரணம், நிருக்தம், சந்தம், சோதிடம் என்னும் அங்கங்களும் அபரவித்தையாம்: எதனாலே அக்ஷரமாகிய சிவம் அறியப்படுகின்றதோ அதுபரவித்தையாம்" என்று நிரூபித்துள்ளது. அக்ஷரம்-மூர்த்தித்திரயாதீத சிவம். அதற்குப்பிரமாணம்.

அதர்வணவேத திரிபுராதாபிந்யுபநிஷத்.

𑌸𑌦𑌾𑌶𑌿𑌵𑍋𑌕𑍍𑌷𑌰𑍋 𑌵𑌿𑌮𑌲𑌃
ஸதாசிவோர்க்ஷரம் விமலம்

(இ-ள்.) "சதாசிவன் அக்ஷரம் மலமற்றவன்."

அதர்வணவேத பஸ்மஜாபாலோபநிஷத்.

[illegible]

சிவமக்ஷரமவ்யயம்

(இ-ள்.) "சிவம் அழிவற்றது. முக்காலங்களாலும் அளவிடப்படாதது."

கிருஷ்ணயஜுர்வேத ப்ரஹ்மோபநிஷத்.

[illegible]
[illegible]
[illegible] ॥

தத்ர சதுஷ் பாதம் ப்ரஹ்மவிபாதி
ஜாகரிதே ப்ரஹ்மா ஸ்வப்நே விஷ்ணு:
ஸுஷுப்தௌ ருத்ரஸ் துரீய மக்ஷரம்॥

(இ-ள்.) "அங்கு நான்கு பாதங்களுள்ள பிரமம் விளங்குகின்றது. ஜாக்கிரத்தில் பிரமா. சொற்பனத்தில் விஷ்ணு. சுழுத்தியில் உருத்திரன். துரீயம் அக்ஷரம்" என்பனவாம்.

இந்தக் கடைசி வாக்கியத்தில் துரீயம அக்ஷரப்பிரமமென்று நிரூபிக்கப்பட்டபடியால் பிரமா, விஷ்ணு, உருத்திரன் என்னும் மூவருக்கும் மேலான நான்காவது வஸ்துவே அப்பரம்பொருளென்று ஏற்பட்டது. படவே, முக்காலத்தும் அழிவில்லாமல் நிலைபேறுபுள்ள பொருளெதுவோ அதுவே அக்ஷரம் (சிவம்) என்றும் வெளியாயிற்று. அதுவே சிருஷ்டிக்கு முன்னுஞ் சங்காரத்துக்குப்பின்னும் உளதாகிய பரப்பிரமம். அதனிடத்து எல்லாக் காரணகாரியங்களும் ஸம்பவமாதலின் அப்பொருளே சர்வகாரண மாகின்றது.

கிருஷ்ணயஜுர்வேத சுவேதாசுவதரோபநிஷத்

[illegible] ।
[illegible]
[illegible] ।

யதாதமஸ்தந்ந திவா ந ராத்ரி: ந ஸந்நசாஸச்சிவ ஏவ கேவல:
ததக்ஷரம் தத்ஸவிதுர் வரேண்யம்
ப்ரஜ்ஞாசதஸ்மாத்ப்ரஸ்ருதாபுராணீ ॥

(இ-ள்.) "என்று இருள் உளதாயிற்றோ அன்று பகலுமில்லை. இரவுமில்லை. சத்துமில்லை. அசத்துமில்லை. கேவலம்

சிவபரம்பொரு
அதுவே ஸவித
னிடத்தே தோ
திருவே ஸர்வ
ஒருவனே சத்
ஆதி காலத்தும்
அத்தர்யாமியாய்
உபாகாயத்திரி
"ஆதிசிருஷ்டி
ஆதிசங்கற்பம்
மாதலால் அத்
பரமசிவனே பி
திரிமூர்த்திகளு
ரும் அவர்களு
காட்டுங் கருதி.

[illegible]
[illegible]
ப்ரஹ்மா வி
[illegible]
(இ-ள்.) "
பூதங்களோடும்
தியால் ஜலம் ல
லயமடைகின்ற

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
(இ-ள்.)

சிவபரம்பொருள் ஒன்றே யிருந்தது. அது அக்ஷரப் பிரமம். அதுவே லலிதாவுக்கு மேலானது. ஆதிசங்கற்பமும் அதனிடத்தே தோன்றியது" என்று நிரூபித்தது. இந்த மந்திரத்திலே ஸர்வ ஜகத்காரணரூப பராசக்திசகித பரமேசுவரன் ஒருவனே சத்து அசத்து, பகல் இரவு என்ற பாகு பாடில்லாத ஆதி காலத்தும் இருந்தனனெனவும், அவனே சூரிய மண்டல அந்தர்யாமியாய், சர்வபிரஹ்மண பரமோபாஸ்ய மூர்த்தியாய், உயர்காயத்திரியின் தேவதையாயுள்ளானெனவும், அவனிடத்தே "ஆதிசிருஷ்டியில் இவ்வுலகத்தை யான் சிருஷ்டிப்பேன்" என்ற ஆதிசங்கற்பம் தோன்றிற்றெனவும், அவையே பிரம்ம லக்ஷணமாதலால் அத்தகைய லக்ஷணம் பொருந்திய உயர்வொப்பற்ற பரமசிவனே பிரமமெனவுந் தீர்மானஞ்செய்யப்பட்டது. படவே, திரிமூர்த்திகளும் சிவபரஞ்சுடரால் படைக்கப்பட்டவர்களென்றும் அவர்களுக்குத் தோற்றநாச முண்டென்றும் அடியில் காட்டுஞ் சுருதிவாக்கியங்கள் ஸ்பஷ்டமாய்த் தெரிவிக்கின்றன.

ஸாமவேத மஹோபநிஷத்.

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌶𑍍𑌚 𑌰𑍁𑌦𑍍𑌰𑌶𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌵𑌾 𑌭𑍂𑌤𑌜𑌾𑌤𑌯𑌃 ।
𑌨𑌾𑌶𑌮𑍇𑌵𑌾𑌨𑍁𑌧𑌾𑌵𑌨𑍍𑌤𑌿 𑌸𑌲𑌿𑌲𑌾𑌨𑍀𑌵 𑌬𑌾𑌡𑌵𑌮𑍍 ॥

ப்ரஹ்மா விஷ்ணுச்ச ருத்ரச்ச ஸர்வேவா பூதஜாதய: ।
நாசமேவாநுதாவந்தி ஸலிலாநீவ பாடபம் ॥

(இ-ள்.) "பிரமனும், விஷ்ணுவும், உருத்திரனும் எல்லாப் பூதங்களோடும் சிவத்தாற் படைக்கப்படுகின்றனர். வடவைத் தீயால் ஜலம் லயமடைதல் போல அப்பூதங்களோடு அவர்களும் லயமடைகின்றார்கள்".

அதர்வணவேத அதர்வசிகோபநிஷத்

𑌸𑌰𑍍𑌵𑌮𑌿𑌦𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑍁𑌦𑍍𑌰𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌸𑍍𑌤𑍇
𑌸𑌮𑍍𑌪𑍍𑌰𑌸𑍂𑌯𑌨𑍍𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌚𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿
𑌸𑌹 𑌭𑍂𑌤𑍈𑌰𑍍𑌨 𑌕𑌾𑌰𑌣𑌮𑍍 ।

ஸர்வமிதம் ப்ரஹ்ம விஷ்ணு ருத்ரேந்த்ராஸ்தே
ஸம்ப்ரஸூயந்தே ஸர்வாணி சேந்த்ரியாணி
ஸஹபூதைர் நகாரணம் ।

(இ-ள்.) "பிரமன், விஷ்ணு, உருத்திரன், இந்திரன் ஆகிய இவரெல்லாம் படைக்கப்படுகின்றனர். இந்திரியங்க

மெல்லாம் பூதங்களோடு பிறப்பிக்கப் படுகின்றன. ஆகலின் அவர்களும், அவைகளும் காரணங்களாகா.”

கிருஷ்ணயஜுர்வேத் பஞ்ச ப்ரம்மோபநிஷத்

[illegible] ।
[illegible] ॥

அவஸ்தாத்ரிதயாதீதம் துரீயம் ஸத்யசித்ஸுகம்।
ப்ரஹ்ம விஷ்ண்வாதிபிஸ் ஸேவ்யம் ஸர்வேஷாம்ஜநகம்பரம்॥

(இ-ள்.) “ஜாக்கிராதி மூன்றவஸ்தைகளுக்கு அதீதரும், துரியரும், சச்சிதாநந்த மாயுள்ளவரும், பிரம விஷ்ணு முதலியோரால் ஸேவிக்கப்படுபவரும், யாவருக்கும் பிறப்பிடமானவரும்” இவ்விருதிவாக்கியத்தால் துரியசிவம் ஒன்றே ஸேவ்யப் பொருளெனவும், பிரமவிஷ்ணு முதலியோர் அப்பொருளைச் சேவிக்கும் சேவகர்களெனவும் வியக்தமாயிற்று. இவ்வாக்கியங்களாலும் இன்னும்வரும் அனேக பிரபல பிரமாணங்களாலும் அறியக்கிடக்கின்ற உண்மையாவது - பரசிவம் என்னும் அக்ஷரப்பிரமம் ஒன்றே பரவித்தையாலுணரக்கிடக்கும் பரம்பொருளாம். சுருதி ஏனையதேவதைகளைச்சுட்டிச் சிற்சிலவிடங்களில் அக்ஷரமென்று கூறினும் அவ்வாக்கியங்களனைத்தும் உபசாரமும் சிவதர்மாரோபணமுமே யன்றி வேறன்று. காரணத்தினின்றுங் காரியத்தின் மேலேற்றப்பட்டதென்றே கொள்ளவேண்டும். சிவத்தைத் தவிர வேறு எக்கடவுளருக்கும் எக்காலமும் பிரமத்துவம்வேதோக்த மாயிருக்காதென்பது ஒருதலை. பகவற்கீதையிலும் “பிரமம்யாது” என்னும் பொருள்பட “கிந்தத்ப்ரஹ்ம-கிம்தத்ப்ரஹ்ம” என்று அர்ஜுனன் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியை வினவியதற்கு “அழியாத பொருள் எது அதுபிரமம்” என்னும் பொருள் தோன்ற “அக்ஷரம்ப்ரஹ்ம பரமம்-அக்ஷரம் ப்ரஹ்மபரமம்” என்று விடையிறுத்ததையும் கண்டு கருதற்பாற்று. ஆதலினன்றோ “பரஞானத்தாற்பரத்தைத் தரிசித்தார் பரமே பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார்” என்றுசிவஞானசித்தி செய்யுளும் பரவித்தையின் பெருமையினை யெடுத்து வலியுறுத்தியது. இத்தகைய பரஞானத்தையடையாமல் தங்கால முழுதும் சாஸ்திரஞானமென்னுங் கலைஞானமாகிய அபரவித்தையிலேயே கழிப்போரது கதி உண்ணுவதற்கு யோக்கியப்படாத மணற்சோற்றைச் சமைத்து வைத்திருப்பதையே

மானும். ஸ்ரீ தாயுமானசுவாமிகளும் "சின்னஞ் சிறியார்கள் செய்த மணற்சோற்றை யொக்கும், மன்னுங் கலைஞானமார்க்கம் பராபரமே" எனவும் "வாசக ஞானத்தால் வருமோ சுகம் பாழ்த்த, பூசலென்று போமோபுகலாய் பராபரமே" எனவுஞ் சாஸ்திரபடன ஞானத்தைக்கண்டித்துள்ளார்கள்.

சுக்லயஜுர்வேத முக்திகோபநிஷத்தும்

𑌬𑌹𑍁𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌕𑌥𑌾𑌕𑌨𑍍𑌥𑌾𑌰𑍋𑌮𑌨𑍍𑌥𑍇𑌨 𑌵𑍃𑌥𑍈𑌵 𑌕𑌿𑌮𑍍 ।
𑌅𑌨𑍍𑌵𑍇𑌷𑍍𑌟𑌵𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑍇𑌨 𑌮𑌾𑌰𑍁𑌤𑍇 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌰𑌾𑌨𑍍𑌤𑌰𑌮𑍍 ॥

பஹுசாஸ்த்ர கதாகந்தா ரோமந்தேநவ்ருதைவகிம்।
அந்வேஷ்டவ்யம் ப்ரயத்நேந மாருதே ஜ்யோதிராந்தரம்॥

(இ-ள்.) "மாருதீ! மிகுந்த சாஸ்திரகதையாகிய கந்தையை அடிக்கடி மெல்லுவதினால் (மீட்டும் மீட்டும் படிப்பதினால்) யாது பயன். உள்ளேயுள்ளே சோதியை முயற்சியினால் தேடிக் கொள்ளவேண்டும்." என்று விதித்துள்ளது. திருவள்ளுவதேவரும் "கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன் நற்றாடொழாஅரெனின்" எனவும், அருணந்தி சிவாசாரியரும் "வாச்சிய வாசக ஞானம் வயிந்தவத்தின் கலக்கம்" எனவும் அறிவுறுத்தியுள்ளார்கள்.

அநுபூதிஞானஞ் சிறிதுமில்லாதவர்கள் சிவஞானிகளுடைய ஞானச்சொற்களைக் கொள்ளைகொள்ளையாகக் களவாடிக்கொண்டு அநுபவமுடையார்போல் உண்மைஞானம் பேசுவதும் மகிழ்வதுமாயுள்ளார்கள். அவர்களுடையநிலைமை எத்தன்மைத்தெனின்

ஸாமவேத மைத்திரேயோபநிஷத்

𑌅𑌨𑍁𑌭𑍂𑌤𑌿𑌂 𑌵𑌿𑌨𑌾 𑌮𑍂𑌢𑍋 𑌵𑍃𑌥𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌿 𑌮𑍋𑌦𑌤𑍇 ।
𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑌿𑌮𑍍𑌬𑌿𑌤𑌶𑌾𑌖𑌾𑌗𑍍𑌰𑌫𑌲𑌾𑌸𑍍𑌵𑌾𑌦𑌨𑌮𑍋𑌦𑌵𑌤𑍍 ॥

அநுபூதிம் விநாமூடோ வ்ருதா ப்ரஹ்மணி மோததே।
ப்ரதிபிம்பிதசாகாக்ர பலாஸ்வாதந மோதவத்॥

(இ-ள்.) "மரத்தின் கிளைகளிலிருக்கும் பழங்களின் பிரதிபிம்பங்களைத் தண்ணீரிற்கண்டு அவற்றைத்தின்று மகிழ்வானைப்போல: அநுபூதி ஞானமில்லாதமூடன் பிரமத்தின்கண் வீணா மகிழ்கின்றனன்." என்பதையே யொத்ததென்றுணர்க.

ஔவையாரும் "காணமயிலாடக் கண்டிருந்த வான்கோழி, தானுமதுவாகப் பாவித்துத் - தானுந்தன் பொல்லாச் சிறகை விரித்தாடினாற் போலுமே, கல்லாதான் கற்ற கவி". என்றனர்.

அபரவித்தையைப் பரோக்ஷஞான மெனவும் பரவித்தையை அபரோக்ஷஞான மெனவும் வராஹோபநிஷத் முதலியன கூறுகின்றன. அவ்விருதிற ஞானத்துள் அபரவித்தையின் தெளிவு ஞானத்திற் சரியை அதாவது கேட்டல்; ஞானத்திற் கிரியை அதாவது சிந்தித்தல் எனவும், பரவித்தையாவது ஞானத்தில் யோகம் அதாவது தெளிதல்; ஞானத்தில் ஞானம் அதாவது நிஷ்டை எனவும் இயம்பப்படுகின்றன. அபரவித்தையானது பரவித்தைக்கு நேர்வழியாக இருத்தலானும், அபரவித்தையாகிய துவிதஞான நிச்சயமும், பரவித்தையாகிய அத்வைத ஞானம் அநுபவமுமாய் விளங்கலானும் "ஓதரிய துவிதமே அத்துவித ஞானத்தை யுண்டுபண்ணு ஞானமாகும்" என்றார் ஸ்ரீதாயுமானசுவாமிகள். இவ்விரண்டும் ஒரு சமயத்தே பயன்படத்தக்கதென்றறிக.

கிருஷ்ணயஜுர்வேத அமிர்தபிந்தூபநிஷத்

𑌶𑌬𑍍𑌦𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌿 𑌨𑌿𑌷𑍍𑌣𑌾𑌤𑌃 𑌪𑌰𑌂𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌧𑌿𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 ।

சப்தப்ரஹ்மணி நிஷ்ணாத: பரம்ப்ரஹ்மாதிகச்சதி।

(இ-ள்.) "சப்தப்பிரமமெனும் ஞானவிசாரத்தில் தேர்ச்சி யடைந்தவன் பரப்பிரமத்தை யடைகின்றனன்" என்கிறது. திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் "கற்றல் கேட்டலுடையார் பெரியார்." எனவும், திருவெண்காட்டடிகள் "ஆயாய்ப் பலகலையாய்ந்திடுந் தூய வருந்தவர்பாற், போயாயினு முண்மை தெரிந்தாயில்லை" எனவும், திருநாவுக்கரசு மூர்த்திகள் "கற்றிலேன் கலைகள் ஞானங் கற்றவர் தங்களோடும், உற்றிலேனாதலாலே உணர்விற்குஞ் சேயனானேன்" எனவும் விளக்கியுள்ளார்கள்.

இஃதிவ்வாறிருக்க நிஷ்காமிய கர்மத்தால் சித்தந்தூய்மை பெற்று மலபரிபாக மெய்தி ஒவ்வொருவருக்குக் தெய்வத்திருவருள் கைவந்து கிடைப்பினல்லது வேறெதனாலும் பரஞானங் கிட்டுவதரிது. அத்திருவருள் சிவோபாசனத்தினாலேயே அடையப்பெறும். அச்சிவோபாசனமும் உருவவழிபாடு; அருவுருவ

வழிபாடு, அருவவழிபாடு, அத்துவிதவழிபாடு எனநான்குதிறனாக விளங்கும். அத்துவைதவழிபாட்டைக் குருமுகமாகத் தெரிந்துகொண்டு நாடோறும் விதிப்படி விடாது அப்பியசித்து வருவதினாலேதான் பரஞானம் மேலிட்டுப் பிரம்மசொரூபம் வெளிப்படும். இதுவே சுருதிநிச்சயம்.

கிருஷ்ணயஜுர்வேதகடோபநிஷத்

𑌨𑌾𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌪𑍍𑌰𑌵𑌚𑌨𑍇𑌨 𑌲𑌭𑍍𑌯𑍋 𑌨 𑌮𑍇𑌧𑌯𑌾 𑌨 𑌬𑌹𑍁𑌨𑌾 𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌨 । 𑌯𑌮𑍇𑌵𑍈𑌷 𑌵𑍃𑌣𑍁𑌤𑍇 𑌤𑍇𑌨 𑌲𑌭𑍍𑌯𑌸𑍍𑌤𑌸𑍍𑌯𑍈𑌷 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌵𑌿𑌵𑍃𑌣𑍁𑌤𑍇 𑌤𑌨𑍂𑌂 𑌸𑍍𑌵𑌾𑌂 ।

நாயமாத்மா ப்ரவசநே நலப்யோநமேதயா பஹுநாச்ருதேந। யமேவைஷ வ்ருணுதே தேநலப்யஸ்தஸ்யைஷ ஆத்மா வ்ருணுதே தநூம்ஸ்வாம்॥

(இ-ள்.) "இந்தப்பரமாத்மாவானவர் வேதாத்தியயனத்தினாலேனும், புத்தியினாலேனும், அநேக சிரவணத்தினாலேனும் அடையப் பெறுவாரல்லர். எவரை இவர் விரும்புகின்றாரோ அவராலேயே அவர் அடையப்படுகின்றனர். அவருக்குப் பரமாத்மாவானவர் தனது சொரூபத்தைக் காட்டி மகிழ்விக்கின்றனர்" என்றோதியது. இந்தமந்திரம் அதர்வணவேத முண்டகோபநிஷத்திலுமுள்ளது. இவ்வுண்மையை ஸ்ரீமாணிக்கவாசகசுவாமிகள் "அவனருளாலேயவன்றாள் வணங்கி" எனவும், திருவெண்காட்டடிகள் "உளக்கணுக்கல்லா தூன்கணுக்கொளிந்து." எனவும், சிவதத்துவவிவேகநூலார் "உன்றிருவடிக்கேயுறுதியாமன்பு முன்றிருவருளினாற் கிடைப்பதன்றிநூல் பலவுமாய்ந்ததாலுமரு செயலப்பருந்திறமையான் மதியான், மன்றவே கிடைப்பதன்று" எனவும், மற்றும்பல சிவஞானச்செல்வர்களும் கூறியுள்ளார்கள். எமது தாயுமான சுவாமிகளும் "கருதருமகண்டானந்தக் கடவுளின் காட்சி காண, வருக வென்றழைத்தாலன்றி வாழ்வுண்டோ வஞ்சனேற்கே." எனவும் இரங்கிக்கூறியருளினார். இதுவே மார்ச்சால நியாயமென்று சொல்லப்படும்.

மா—இந்தப் பிரபஞ்சம் யாவும் நாதகாரியமென்பதற்குப் பிரமாணம் என்ன?

ஆ—பரமேசுவரருடைய ஆஞ்ஞா சொரூபங்களான வேதாதிகளே பிரமாணங்களாம்.

அதர்வணவேத மாண்டுக்யோபநிஷத்

𑌓𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌤𑌦𑌕𑍍𑌷𑌰𑌮𑌿𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌤𑌸𑍍𑌯𑍋𑌪𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑌂 ।
𑌭𑍂𑌤𑌂 𑌭𑌵𑌦𑍍𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌦𑌿𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑌮𑍋𑌙𑍍𑌕𑌾𑌰 𑌏𑌵 ॥

ஓமித்யே ததக்ஷரமிதம் ஸர்வம் தஸ்யோப வ்யாக்யானம்।
பூதம் பவத் பவிஷ்யமிதி ஸர்வமோங்கார ஏவ॥

(இ-ள்.) "இந்தப்பிரபஞ்சம்யாவும் ஓமென்னும் அக்ஷரமாகச் சொல்லப்படுகின்றது. அந்த அக்ஷரத்துக்கு விரிவான பொருளாயுமிருக்கின்றது. சென்றது, நிகழ்வது, வருவதுயாவும் ஓங்காரமே"

அதர்வணவேத அதர்வசிரோபநிஷத்

𑌸𑌰𑍍𑌵𑌂 𑌜𑌗𑌦𑍍𑌧𑌿𑌤𑌂 𑌵𑌾 𑌏𑌤𑌦𑌕𑍍𑌷𑌰𑌂
𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑌂 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌂 𑌸𑍌𑌮𑍍𑌯𑌂 ।

ஸர்வம் ஜகத்திதம் வா ஏதத்க்ஷரம்
ப்ராஜாபத்யம் ஸூக்ஷ்மம் ஸௌம்யம்।

(இ-ள்.) "இந்த அக்ஷரமே காணப்படும் பிரபஞ்சமெல்லாம். ஜகத்துக்கு ஹிதமாயுள்ளது. பிரஜாபதியைச்சார்ந்தது. ஸர்வவேத ஸாரபூதமானது. சோமனென்ற உமாநாதனைத் தேவதையாகவுடையது."

அதர்வணவேத அதர்வசிரோபநிஷத்

𑌸𑌰𑍍𑌵𑌦𑍇𑌵 𑌵𑍇𑌦𑌯𑍋𑌨𑌿𑌃
𑌸𑌰𑍍𑌵𑌵𑌾𑌚𑍍𑌯𑌵𑌸𑍍𑌤𑍁 𑌪𑍍𑌰𑌣𑌵𑌾𑌤𑍍𑌮𑌕𑌂 ।

ஸர்வதேவ வேத யோநி:
ஸர்வ வாச்யவஸ்து ப்ரணவாத்மகம்।

(இ-ள்.) "சர்வதேவர்களுக்குஞ் சர்வவேதங்களுக்கும் மூலம் சர்வவாச்யவஸ்துக்களும் பிரணவாத்மகம்." என்பனவாம்.

அன்றியும் "ஓமென்னும் பதமதனில் வேதமாதியுற்பவிக்கு மாலம்வித்தி னுதிக்குமாபோல்" என்னுஞ் சிவதருமோத்தரச் செய்யுளானுமறிக. ஒரு சிறிய ஆலம்வித்தினின்றுஞ் சாகோபசாகைகளோடு பெரிய விருக்ஷந் தோன்றுவதுபோல "ஓம்" என்னும் பதத்தினின்றே வேதமுதலிய சொல்லும் பொருளுமாயவெல்லாப் பிரபஞ்சங்களுந் தோன்றின. "ஓங்கார

மைந்தெழுத்தாற் புவனத்தை யுண்டுபண்ணிப் பாக்கரகடத்தும் "பொருளேயகண்டபரசிவமே'' என்னும் ஸ்ரீதாயுமான சுவாமிகள் திருவாக்கையுங்கண்டுதெளிக.

மா—இவ்வளவு பெருமை இவ்வக்ஷரத்துக்கு வந்ததற்குக் காரணம் யாது?

ஆ—இந்த அக்ஷரம் பரப்பிரம சொரூபமாயும், எல்லாவற்றிற்கும் அதிஷ்டானமாயும், இஃதில்லாவிடத்துக்காரியம் நிறைவேறப்பெறாதாயு மிருத்தலின் இதன் பெருமை அளவுக் கடங்காமலிருக்கின்றது. இவ்வக்ஷரம் பரப்பிரமசொரூபமென்பதற்குப் பிரமாணம் வருமாறு.

கிருஷ்ண யஜுர்வேத கடோபநிஷத்

𑌏𑌤𑌦𑍍𑌧𑍍𑌯𑍇𑌵𑌾𑌕𑍍𑌷𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌏𑌤𑌦𑍍𑌧𑍍𑌯𑍇𑌵𑌾𑌕𑍍𑌷𑌰𑌂 𑌪𑌰𑌮𑍍 |
ஏதத்யேவாக்ஷரம் ப்ரஹ்ம ஏத்தேவாக்ஷரம்பரம்

(இ-ள்) "(ஓம் என்னும்) இந்த அக்ஷரமே பிரமம். இந்த அக்ஷரமே சிரேஷ்டம்."

அதர்வணவேத அதர்வசிகோபநிஷத்

𑌏𑌤𑌦𑌕𑍍𑌷𑌰𑌂 𑌪𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 |
ஏதக்ஷரம் பரம் ப்ரஹ்ம।

(இ-ள்) "இந்த அக்ஷரம் பரப்பிரம சொரூபம்."

கிருஷ்ணயஜுர்வேத அமிர்தநாதோபநிஷத்

𑌓𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌕𑌾𑌕𑍍𑌷𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌓𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌤𑌤𑍍 [illegible] |
ஓமித்யேகாக்ஷரம் ப்ரஹ்ம ஓமித்யேதத் [illegible]

(இ-ள்) "பிரணவமென்பது ஏகாட்சரப்பிரமம். பிரணவத்தை என்றுந்தள்ளக்கூடாது."

ஸாமவேத மைத்ராயண் யுபநிஷத்

𑌓𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌤𑌦𑌾𑌤𑍍𑌮𑌾 𑌓𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌤𑌦𑌕𑍍𑌷𑌰𑌮𑍍 |
ஓமித்யேததாத்ம ஓமித்யே தத்க்ஷரம்।

(இ-ள்) "ஓமென்பது அந்தப்பரமாத்மா. இந்தப்பிரணவம் அக்ஷரப்பிரமம்."

சுக்லயஜுர்வேத தாரஸாரோபநிஷத்

𑌓𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌤𑌦𑌕𑍍𑌷𑌰𑌂 𑌪𑌰𑌂𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑌦𑍇𑌵𑍋𑌪𑌾𑌸𑌿𑌤𑌵𑍍𑌯𑌮𑍍 |
ஓமித்யேதக்ஷரம் பரம்ப்ரஹ்ம தத்தேவோ பாஸிதவ்யம்।

(இ-ள்) "ஓமென்ற அந்த அக்ஷரமே பரப்பிரமம். அதுவே உபாசிக்கற்பாலது."

கிருஷ்ணயஜுர்வேத தைத்திரீயோபநிஷத்

𑌓𑌮𑌿𑌤𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 । 𑌸𑌦𑌾𑌶𑌿𑌵𑍋𑌮𑍍 ।
ஓமிதிப்ரஹ்ம ஸதாசிவோம்।

(இ-ள்) "ஓம் என்பது பிரமம். சதாசிவன்பிரணவம்"

கூர்மபுராணம்.

𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌾 𑌦𑌵𑌨𑌾𑌦𑍋𑌮𑌿𑌤𑌿𑌸𑍍𑌮𑍃𑌤𑌃 ।
பகவாந் ஸர்வ விஜ்ஞாநா தவநாதோமிதி ஸம்ருதஃ।

(இ-ள்) "சர்வஞ்ஞராதலின் பகவான் எனவும்" காப்பவராதலின் ஓம் எனவும் சிவபிரான் என்னப்படுகின்றனர். இவ்வாக்கியங்களாலும் இன்னும் அநேகபிரமாண பாஹுள்யங்களாலும் பிரணவமே பிரமசொரூபமென ஸ்தாபிக்கப்பட்டது. அன்றியும் இந்நூலின் முதற்கண் பிரகாசித்துக்கொண்டிருக்கும் ஸ்ரீநடராஜமூர்த்தியின்வணக்கச்செய்யுளில் முதலடிஉகாரத்தையும், மூன்றாவதடி அகாரத்தையும், நான்காவதடி மகாரத்தையும், முதலிற்கொண்டு விளங்கலானும், செய்யுளின் ஈற்றில் ஆம் அல்லது ஓம் என்னும் சமஷ்டிப்பிரணவம் வைக்கப்பட்டிருத்தலானும், அச்செய்யுளிற் போந்த ஸ்ரீ நடராஜமூர்த்தி பிரணவாபின்ன தெய்வமாயுள்ளாரென்பதே தேற்றம். அந்நடராஜமூர்த்தி யொருவரே பிரணவத்தை இருப்பிடமாகக் கொண்டவரும் ஏனையோர் பிரணவத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவருமாதலின் "ஈசன் மேவரும் பீடமா யேனையோர் தோற்றும் வாசமாய்" என்றது கந்தபுராணம். ஸ்ரீநடராஜ மூர்த்தம் பிரபையோடு சேர்த்து அமைக்கப்பட்டிருத்தலே இதற்குப் போதுமான சான்றும். ஸ்ரீ தாயுமானசுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருப்பாடற்றிரட்டின் "அங்கிங்கெனாதபடி" என்னும் முதற்செய்யுளினும் முதலெழுத்து அகாரமாயும், நடுவெழுத்து உகாரமாயும், இறுதியெழுத்து மகாரமர்யுந் திகழ்தலால் அவ்வணக்கச் செய்யுளினாற் றுதிக்கப்பெற்ற ஓங்காரத் தெய்வம் பிரணவாபின்ன பரசிவமென்றே சித்தாந்தமாயிற்று. மேலும் பிரணவத்தின் அகார உகார மகாரம் என்னும் மும்மாத்திரைகளும், ருக் யஜுர், சாமம் என்னும் முத்திற ரூபமாயுந்

என்னென அதர்வணவேதத்தில் பிரசித்தமாயிருக்கின்றது. ஆதிருக்வேதத்தில் "[illegible]-அக்நிமீளே" என்னும் ஆதிமந்திரத்திலுள்ள ஆதியக்ஷரமாகிய அகாரமும், மத்திய யஜுர் வேதத்தில் "யோ [illegible]-யோநிஸ்ஸமுத்ரோபந்து:" என்னும் மத்தியமந்திரத்திலுள்ள மத்தியாக்ஷரமாகிய உகாரமும், இறுதிசாமவேதத்தில் "[illegible]-ஸமாநம்வரம்" என்னும் இறுதி மந்திரத்திலுள்ள இறுதியக்ஷரமாகிய மகாரமும் ஒருங்கியைந்து எழுந்தபடியால் வேதங்கள்யாவும் "ஓம்" என்னும்பதத்தின் பொருளையே விரிக்க எழுந்தனவாம். ஆதலால் சமஸ்தவேதங்களும் ஓமென்னும்பதத்திலே அமைவுற அவ்வோமென்னும் மந்திரம் பிரணவாபின்ன பரப்பிரம்ம சிவபெருமானிடத்திலே நிலையுறுதல் அங்கை நெல்லிக்கனியாம். அதனால் அப்பரம்பொருளைச் சர்வசப்த வாச்சியரென்று வேதவிற்பன்னர்கள் கூறுகின்றனர். சகல வேதாகம ரகசியக்களஞ்சியமாயுள்ள இவ்வோமென்னும் ஒருமொழியே பாவமனைத்தையுந் தகிக்கும் பரசிவ நாமமாயிருத்தலின் பிரணவம் சிவவாசகமென அர்த்த நிர்ணயஞ்செய்தனர் பெரியோர்.

சைவத்திருமுறைகள் பன்னிரண்டனுள் முதற்றிருமுறையின் முதற்பதிகத்து முதற்பாசுரத்தின் முதன்மொழியாகிய "தோடு" என்னுஞ்சொல் "ஓம்" என்னும் பிரணவத்தின் முதலெழுத்தாகிய ஓகாரத்தை முதலிற்கொண்டு விளங்கலானும், ஈற்றுத்திருமுறையின் ஈற்றுச்செய்யுளின் ஈற்றடியின் ஈற்றுச் சொல்லாகிய "உலகெலாம்" என்னும் மாற்றம் பிரணவத்தின் ஈற்றெழுத்தாகிய மகாரத்தை ஈற்றிற்கொண்டு நிலவுதலானும் பன்னிருதிருமுறைகளும் வேதம்போல "ஓம்" என்னும் பதத்திலேயே நிலையுறுவனவாயின. ஆதலின் அவற்றின்பொருள் ஓங்கார வாச்சியராகிய சிவபெருமான் என்றே துணியப்பட்டது. தோடு என்னும் பதத்தின் முதலிலுள்ள ஓகாரம் தகர மெய்யோடு புணர்த்திக் கூறப்பட்டமையானும், காயத்திரி மகாமந்திரத்தின் முதலெழுத்து தகரமாயிருக்கின்றமையானும், அம்மந்திரப்பொருளாவர் பர்க்கராகிய சிவபெருமானே எனவும், தகரவித்தையின்கண் வழிபடுந்தெய்வம் அவரே எனவும் சூசிப்பிக்கப்பட்டது. இக்காயத்திரி மந்திரத்தின் விளக்கம் பின்னர் கூறுவாம்.

ஆயின் ஆரிய வேதத்துக்கும், தமிழ்வேதத்துக்கும் ஒற்று யுண்டோ வெனின் உண்டு. அவற்றையுஞ் சிறிதுவிரிப்பாம். வத்திலே திருமறைக்காடு என்னும் வேதாரண்ணியத்திலே வடிவாகிய ஆரியவேதங்கள் நான்கும் சர்வபலதாதாவாகிய றைக்காட்டீசுவரரை விதிப்படிப்பூசித்து வேண்டும் வரங்களைப் பெற்றுச் செல்லும்போது, திருவாயிலின் கண்ணே 'திருக்காப் ச்செய்துவைத்த வலியகதவை, நெடுங்காலத்திற்குப் பின் ர் அக்கதவந் திறக்கவும்மூடவுமாகிய வழக்கம் எந்நாளும் நிக ம்படி அநாதரூபமாகும் தமிழ் வேதமே செய்தபடியால் வ்வாரிய வேதத்துக்குந் தமிழ் வேதத்துக்கும் பேதஞ் ற்றமில்லை யென்பது ஒருதலை. அவ்விரு வேதங்களும், ாந்தத்தின் அந்தமாகும் பரமாத்மாவாகிய சிவபரம்பொருளையே பிரிதம் பேசுகின்றன வென்பது அவற்றின் திருவுள்ளக் கிடை ம். ஒளவையாரும் இவ்வுண்மையைத் "தேவர் குறளுந் திரு ான்மறைமுடிவும், மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை, திருவாசகமுந் திருமூலர் சொல்லும், ஒருவாசகமென்றுணர்" ன்னுந் திருவாக்கில் ஸ்திரப்படுத்தியுள்ளார். பரமாசாரியசுவா களும் தமிழ்வேதத்தில் "தமிழ்ச்சொலும் வடசொலுந் தாணி ற்சேர, வம்மலர்க் கொன்றையணிந்த வெம்மடிகள்" எனவும் "ஆரியந்தமிழிசையோடானவன் கூரிய குணத்தார் குறி நின்ற ன்" எனவும், "செந்தமிழோடாரியனைச் சீரியானை" எனவும், முத்தமிழும் நான்மறையுமானான்கண்டாய்" எனவும் அருளிச் செய்தமை காண்க. இன்னும் அனேக கூற்றுக்கள் இவ்வாறே ுள்ளன. அவற்றைக்கூறின் விரியுமாதலின் விடுத்தாம்.

இனி ஆரிய வேதத்துக்கும். தமிழ் வேதத்துக்குமுள்ள ஒற் றுமை பலவற்றுள் சில ஈண்டு மொழிவாம்.

ஆரியவேதம்—ருக், யஜுர், சாமம், அதர்வணம் என நான்கு.

தமிழ்வேதம்—திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் திரு முறை, திருநாவுக்கரசு சுவாமிகள் திருமுறை, சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருமுறை, மாணிக்கவாசக சுவாமிகள் திருமுறை என நான்கு.

ஆ. வே—
றுந் தோற்றவி

த. வே—
ன்றுந் தோற்ற

ஆ. வே—

த. வே—

ஆ. வே—

த. வே—
வருக்கப்பட்ட

ஆ. வே—

த. வே—.

ஆ. வே—
ஓதப்படுப்.

த. வே—
டன் ஓதப்படுப

ஆ. வே—
சிறப்பாகப் ப
அங்கமாகக்கெ

த. வே—.
புகழும். திரு
பிரகாசிக்கும்.

ஆ. வே—

த. வே—

ஆ. வே—

த. வே—

ஆ. வே—

த. வே—
தம், போற்றித்

ஆ. வே—சதாசிவமூர்த்தியின் நான்கு திருமுகங்களினின்றுந் தோற்றுவிக்கப்பட்டது.

த. வே—பரமாசாரிய சுவாமிகள் நால்வர் திருமுகங்களினின்றுந் தோற்றுவிக்கப்பட்டது.

ஆ. வே—பலசாகைகளையுடையது.

த. வே—பலதிருப்பதிகங்களையுடையது.

ஆ. வே—வியாசமுனிவரால் வகுக்கப்பட்டது.

த. வே—நம்பியாண்டார்நம்பி என்னுஞ் சைவமுனிவரால் வகுக்கப்பட்டது.

ஆ. வே—அநேக சாகைகள் இறந்துபோயின.

த. வே—அநேக திருப்பதிகங்கள் இறந்துபோயின.

ஆ. வே—காயத்திரி, அநுஷ்டுப் முதலிய சந்தசுக்களுடன் ஓதப்படும்.

த. வே—நட்டபாடை, பழம்பஞ்சுரம் முதலிய பண்களுடன் ஓதப்படும்.

ஆ. வே—பஸ்மமகிமையை விரிவாக வெடுத்துப்பேசும். சிறப்பாகப் பஸ்மஜாபாலம் என்னும் உபநிஷத்தைத் தனக்கு அங்கமாகக்கொண்டு விளங்கும்.

த. வே—அவ்வாறே பஸ்மமகிமையை விரிவாக வெடுத்துப் புகழும். திருநீற்றுப்பதிகத்தைத் தனக்கு அங்கமாகக்கொண்டு பிரகாசிக்கும்.

ஆ. வே—இறுதியில் அத்தியயனப் பலனைக் கூறும்.

த. வே—திருப்பதிகமுடிவில் அப்பலனைக் கூறும்.

ஆ. வே—உபநிடதச் சாகைத்தொகை எடுத்துக் கூறும்.

த. வே—திருப்பதிகத் தொகை எடுத்துரைக்கும்.

ஆ. வே—ஸ்ரீருத்திர நமகத்தைக் கொண்டு விளங்கும்.

த. வே—போற்றித் திருத்தாண்டகம், போற்றித் திருவிருத்தம், போற்றித் திருவகவல் இவற்றைக் கொண்டு விளங்கும்.

ஆ. வே—ஓம் என்று ஆரம்பித்து ஓம் என்று முடிக்கும்.

த. வே—திருச்சிற்றம்பலம் என்று ஆரம்பித்துத் திருச்சிற்றம்பலம் என்று முடிக்கும்.

ஆ. வே—மைத்திரேயி, கார்கி முதலிய பெண்மணிகளை யெடுத்துப் பேசும்.

த. வே— காரைக்காலம்மையார் மங்கையர்க்கரசியார் முதலிய மங்கையர் இரத்தினங்களை யெடுத்துப் புகழும்.

ஆ. வே—காமதகனம், தக்ஷயாகபங்கம் திரிபுரதகனம் விஷபானம், நரசிம்மவதம், அடிமுடிதேடல் முதலிய அற்புத வீரச்செயல்களை யெடுத்துப் புகழும்.

த. வே—அவைகளை அவ்வாறே ஆங்காங்கு எடுத்துப் பரவும்.

ஆ. வே—"த்ரயி" என்று அமரகோச முதலியவற்றால் புகழப்படும்.

த. வே—"மூவர்தமிழ்" என்று சிவஞானமணிகளால் துதிக்கப்படும்.

ஆ. வே—"த்ரயி" என்னும் ருக், யஜுர், ஸாமம் ஆகிய மூன்று வேதங்களின் நடுவிலுள்ளது யஜுர்வேதம். அவ்வேதம் 101 சாகைகளையுடையது. அவற்றின் நடுவிலுள்ளது 51-ம் சாகை. அதுவே ஸ்ரீபோதாயன சாகையென்று சொல்லப்படும். அது ஏழுகாண்டங்களையுடையது. அவற்றின் நடுவிலுள்ளது நாலாவது காண்டம். அக்காண்டம் ஏழு ஸம்ஹிதைகளையுடையது. அவற்றின் நடுவிலுள்ளது நாலாவது ஸம்ஹிதை. அந்த ஸம்ஹிதையின் நடுவிலுள்ளது ஐந்தாவது பிரச்நம். அதன் நடுவிலுள்ளது "நமஃஶிவாயச-நமஃஸோமாயச" என்றற்றொடக்கத்தனவான அநுவாகம். அவ்வநுவாகத்தின் மத்தியிலுள்ளது சகலவேத சாரமான ஸ்ரீ பஞ்சாக்ஷரம். அப்பஞ்சாக்ஷரத்தினுள்ள "ஶிவ" என்னும் இரண்டெழுத்தே வேதஹிருதயம். அது ஆதி பராசக்தியோடியைந்த பகவானுக்கு முக்கியநாமம். அந்நாமத்தின் மணமே தன்னுடல் முழுதும் வீசப்படி தன்னை யலங்கரித்துக்கொண்டிருக்கின்றது:- ....

த
றின்
வேதம்
தின்
திருப்ப
பாலைத்
களையுவ
னர் ப
அத்தூ
அப்பஞ்
வேதஹி
டிலயங்க
நாற்றி
கொண்டி
வேதம்"

ஆ.
தாகிய
வேதமாக

த. வே
பட்ட திரு
மாகவைத்

இவ்வ
றன. ஆத
ஆரியவேத
பெரியோர்.
ஆய்ந்தறிய
வாசகந்தா
கின்றனர்.
அறக்கொடி

மா—இ
எத்தன்மை

ஆ—இர
ரத்தின் வடி

த, வே—“மூவர்தமிழ்” என்னும் திராவிடவேதங்கள் மூவ றின் நடுவிலுள்ளது திருநாவுக்கரசு மூர்த்திகளுடைய தமி வேதம் அவ்வேதம் மூன்று திருமுறைகளையுடையது. அவ றின் நடுவிலுள்ளது ஐந்தாந்திருமுறை. அத்திருமுறை 100 திருப்பதிகங்களையுடையது. அவற்றின் நடுவிலுள்ளது திருப் பாலைத்துறைத் திருப்பதிகம். அப்பதிகம் பதினொரு பாசுரங் களையுடையது. அப்பாசுரங்களின் நடுவிலுள்ளது “விண்ணினார் பணிந்தேத்த” என்றற்றொடக்கத்தனவான திருத்தூக்கு. அத்தூக்கின் மத்தியிலுள்ளது மந்திரராஜமாகிய பஞ்சாக்ஷரம். அப்பஞ்சாக்ஷரத்திலுள்ள “சிவ” என்னும் இரண்டெழுத்தே வேதஹிருதயம். அது ஓங்கார ஸ்வரூபிணியாகிய உமையோடியைந்த பகவானுக்கு முக்கிய நாமம். அந்நாமத்தின் கந்தமே நாற்றிசையும் மணக்கும்படி அப்பரம்பொருளைச் சதா பாடிக்கொண்டிருக்கின்றது. “பரவுவாரிமையோர்கள் பாடுவன நால் வேதம்” என்றார் மணிவாசகப்பிரபு.

ஆ. வே—அதர்வமுனி முதலியோராற் கண்டெடுக்கப்பட்டதாகிய வேதபாகம் “அதர்வணவேதம்” என நான்காவது வேதமாக வைத்து எண்ணப்படுகின்றது.

த. வே—தில்லைவாழ்ந்தண முனிவர்களாற் கண்டெடுக்கப்பட்ட திருவாசகம், திருக்கோவையார் என்பன நான்காம் வேதமாகவைத்து எண்ணப்படுகின்றது.

இவ்வாறு இன்னும் அநேக பொருள்கள் ஒத்திருக்கின்றன. ஆதலின் ஆரியவேதமே தமிழ் வேதம்: தமிழ் வேதமே ஆரியவேதம். இரண்டையும் அபேதமாகவே கொள்கின்றனர் பெரியோர். இத்தகைய அரிய பெரிய இரகசிய உண்மைகளை ஆய்ந்தறியும் புண்ணியப்பேறில்லாத மந்தமதிகள் தேவாரம் திருவாசகந்தானே என்று அலட்சியமாகக்கூறிப்பலவாறு தூஷிக்கின்றனர். அந்தோ இம்மதவைரிகளது தீவினை கொடிது! அறக்கொடிது!!

மா—இந்த ஓங்காரத்தின் சொரூபம் அதாவது வரிவடிவு எத்தன்மையது?

ஆ—கிரந்தாக்ஷரத்தில் காணப்படும் ஓகாரமென்னும் அக்ஷரத்தின் வடிவே இதன் சொரூபமாம். இதுவில்லைப்போலவும்,

ந்த சர்ப்பத்தைப்போலவும், வலம்புரிச் சங்கைப்போலவும்
ருக்கின்றது. இது ஐந்து லக்ஷணங்களைப்பொருந்தியிருத்த
ல் நக்ஷத்திரவடிவம், தண்டவடிவம், குண்டலவடிவம்,
ர்த்தசந்திரவடிவம், பிந்துவடிவம் ஆகிய இவ்வைந்தும் இதி
ந்துள்ளன.

அதர்வணவேதமுண்டகோபநிஷத்.

𑌪𑍍𑌰𑌣𑌵𑍋 𑌧𑌨𑍁𑌃 ।
ப்ரணவோ தநு:।

(இ-ள்.) "பிரணவம் வில்லு" எனவும்.

ஞானசித்தியாகமம்.

𑌨𑌾𑌡𑌿𑌮𑍂𑌲𑌾 𑌵𑍃𑌤𑌾𑌕𑌾𑌹𑌿 𑌕𑍁𑌣𑍍𑌡𑌲𑍀 𑌹𑌂𑌸𑌨𑍀𑌃 𑌸𑍍𑌵𑌨𑌾𑌃 ।
நாடிமூலா வ்ருதாக்காஹி குண்டலீ ஹம்ஸநீ: ஸ்வநா:।

(இ-ள்.) "மூலநாடியாயும், வளைந்த சர்ப்பவடிவமாகிய
டலியாயும், ஹம்சத் தொனியுடைப்பதாயுமுள்ளது (பிர
வம்)." எனவும்,

காமிகாகமம்.

𑌪𑍍𑌰𑌥𑌮𑌂 𑌤𑌾𑌰𑌕𑌾𑌕𑌾𑌰𑌂 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌂 𑌦𑌣𑍍𑌡𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌤𑍃𑌤𑍀𑌯𑌂 𑌕𑍁𑌣𑍍𑌡𑌲𑌾𑌕𑌾𑌰𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑌂 𑌹𑍍𑌯𑌰𑍍𑌧𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌕𑌮𑍍 ।
𑌪𑌞𑍍𑌚𑌮𑌂 𑌬𑌿𑌨𑍍𑌦𑍁𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌣𑌵𑌂 𑌪𑌞𑍍𑌚𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

ப்ரதமம் தாரகாகாரம் த்விதீயம் தண்டமுச்யதே।
த்ருதீயம் குண்டலாகாரம் சதுர்த்தம் ஹ்யர்த்த சந்த்ரகம்।
பஞ்சமம் பிந்து ஸம்யுக்தம் ப்ரணவம் பஞ்சலக்ஷணம்॥

(இ-ள்.) "முதலாம் உறுப்பு நட்சத்திராகாரமாயும், இரண்
ம் உறுப்பு தண்டாகாரமாயும், மூன்றும் உறுப்பு குண்டலா
ரமாயும், நான்காம் உறுப்பு அர்த்தசந்திராகாரமாயும், ஐந்
ம் உறுப்பு விந்துவோடிசைந்த ஆகாரமாயும் இருப்பதால்
ணவம் ஐந்து லக்ஷணங்களையுடையது." எனவும்,

கந்தபுராணம், உமை கைலை நீங்குபடலம்.

மூலமெய்யெழுத்தன்னதோர் முதலலம்புரியின்
கோலமாகி னோற்றிருத்தியா லுலகருள் குறிப்பால்
வேதமூவரேர் வால்வளைபுதக் கொடுவிளங்கி
யேதமில்லதோர் பதுமபீடத்தின் மேலிருந்தாள்.......என்னவும்,

ஓங்கார
இவ்வ
வளைந்து நி
பெயர்பெ
கும் விசா
இவ்வன்ன
பெரு டலவ
ஸர்வவிக்
தையும் சவ
ஆதாரவது
வாரண:"
கிருஷ்ணய
மா.
குப் பாத
தி.
தென்புறம்
பிரவிருத்தி
மாத்திரை
அவர் பரம
தப்பாகம்
ரைகளாகி
பங்களாகு
மெனப்பட்
களில் நிர்
பாதிக்கும்
அட்சரக்க
சிவ விஞ்ஞ
யகம். மே
தா
தவ
(இ-ள்
புறப் பாத
1.

ழும்

க்கைப்போலவும்
பொருந்தியிருந்த
குண்டலவடிவம்,
வ்வைந்தும் இதி

ஃ ஸ்ரா: |
ரஸ |

பவடிவமாகிய
முள்ளது (பிர

_த |
வத்ரகும் |
ணஷ ||

கம் |
||

யும், இரண்
பு குண்டலா
ரமாயும், ஐந்
இருப்பதால்
,

.....என்வும்,

ஓங்கார விளக்கம்.

உண்மைவிளக்கம், (சித்தாந்த சாஸ்திரம்.)

நகாரமே சத்திருவாசி ....எனவும் பகர்ந்தன.

இவ்வாறு இவ்வோங்காரம் சோதிமய குடிலாகாரமாய் வளைந்து நிற்றலாலன்றோ குடிலையெனவும், குண்டலியெனவும் பெயர்பெற்று விளங்குகின்றது. பிரணவப்பொருளாய் விளங்கும் விநாயகமூர்த்தியினது பிரசன்னவதனமாகிய கஜமுகம் இவ்வுண்மையை வலியுறுத்தா நிற்கும். "[illegible] - ப்ரசந்நவதனம் த்யாயே[illegible] ஸர்வவிக்நோப சாந்தயே" என்னுஞ் "சுக்லாம்பரதர" சுலோகத்தையும் கண்டு கவனித்திடுக. பிரசந்நவதனம்-பிரத்தியக்ஷமுகம் அதாவது யானைமுகம். "[illegible]-ப்ரசந்நோ[illegible] வாரண:" என்றது கண்டு. "[illegible]-ப்ரசந்நாநநம்" என்[illegible] கிருஷ்ணயஜுர்வேத தக்ஷிணாமூர்த்யுபநிஷத்தும் மொழிந்தது.

மா. ஓங்காரத்துக்கு வரிவடிவங்கூறப்பட்டபடியால் அத[illegible]குப் பாதமுஞ் சிரசும் எவை ?

ஆ. ஓங்காரத்துக்குச் சிரசானது வடபுறம். பாதமானது தென்புறம். வடபுறம் நிவிருத்தி மார்க்கமெனவும், தென்புறம் பிரவிருத்தி மார்க்கமெனவுங் கூறப்படும். ஓங்காரத்தின் [illegible] மாத்திரையாகிய மகாரம் உருத்திரமூர்த்தியின் சொரூபமாகும். அவர் பரம ஞானாசிரியராதலால் அவரைப் பிரதிபாதிக்கும் அந்தப்பாகம் சிரசு எனப்பட்டது. ஓங்காரத்தின் முதல் மாத்திரைகளாகிய அகார உகாரங்கள் பிரம விஷ்ணுக்களது சொரூபங்களாகும். அவர்களைப் பிரதிபாதிக்கும் அந்தப்பாகம் பாதமெனப்பட்டது. ஆகையினாலே நிவிருத்தி பிரவிருத்தி மார்க்கங்களில் நிற்க விருப்பமுடையோர் அம்மார்க்கங்களைப் பிரதிபாதிக்கும் நாமங்களாகிய சிவ ஹரி என்னும் பதங்களினது அட்சரங்கள் நிற்கும் நிலையினைக் கூர்ந்து யோசித்துப் பார்த்து சிவ விஷ்ணுக்களை முறையே வழிபடவேண்டியது அத்தியாவசியகம். மேனாட்டாருடைய அபிப்பிராயமும் இதுவே.

அதர்வண வேத அதர்வசிகோபநிஷத்.

[illegible]

தஸ்யோத்தர தச்சிரோ தக்ஷிணத: பாத:!

(இ-ள்.) "அந்த ஓங்காரத்துக்கு வடபுறம் சிரசு. தென்புறம் பாதம்." எனவும்,

ப்ரணவ வித்யா பரிமளம் என்னும்

பத்மபுராண சிவகீதை.

𑌶𑌿𑌰𑌶𑍍𑌚𑍋𑌤𑍍𑌤𑌰𑌤𑍋 𑌯𑌸𑍍𑌯 𑌪𑌾𑌦𑍌 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌤 𑌸𑍍𑌤𑌥𑌾 ।
𑌯𑌶𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑍋𑌤𑍍𑌤𑌰𑌸𑍍𑌸𑌾𑌕𑍍𑌷𑌾 𑌦𑍋𑌂𑌕𑌾𑌰𑍋𑌽𑌹𑌂 𑌤𑍍𑌰𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌕𑌃 ॥
சிரஸ்சோத்தரதோ யஸ்யபாதௌ தக்ஷிணத ஸ்ததா ।
யச்ச ஸர்வோத்தர ஸ்ஸாக்ஷா தோங்காரோஹந்த்ரிமாத்ரக: ॥

(இ-ள்.) "(எழுத ஆரம்பிக்குங்கால்) எதற்குச் சிரசு வட புறத்திலும், (முடிக்குங்கால்) பாதம் தென்புறத்திலும் இருக்கின் றனவோ, எது எல்லாவற்றிற்கும் மேலாயுள்ளதோ அந்த மும் த்திரைகளையுடைய சாக்ஷாத் பிரணவம் நான்." எனவுங் கூறியுள்ளன.

மா. "ஓம்" என்னும் பிரணவத்தின் மாத்திரைகளெத் னை? அவற்றை விளக்கியருளவேண்டும்.

ஆ. விளக்குவோம். கேட்பாயாக.

அதர்வணவேத அதர்வசிகோபநிஷத்.

𑌯𑌸𑍍𑌯 𑌪𑌾𑌦𑌾𑌶𑍍𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑍋 𑌵𑍇𑌦𑌾𑌃 ।
𑌚𑌤𑍁𑌷𑍍𑌪𑌾𑌦𑌿𑌦𑌮𑌕𑍍𑌷𑌰𑌂 𑌪𑌰𑌂𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 ।
யஸ்யபாதாச்சத்வாரோவேதா: ।
சதுஷ்பாதிதமக்ஷரம் பரம்ப்ரஹ்ம ।

(இ-ள்.) "இதன் நான்கு பாதங்களும் நான்கு வேதங்கள் நான்கு பாதங்களுடன் கூடிய இவ்வக்ஷரம் பரப்பிரமசொரூபம்" ளை நிரூபித்தது.

பாதமென்றாலும் மாத்திரையென்றாலும் ஒன்றே. சொல் லாகிய ஓங்காரத்துக்கும் பொருளாகிய பிரமத்துக்கும் இயல் பாகவே ஒற்றுமை அமைந்திருத்தலால் ஓங்காரமே பிரமமெனக் கோடற்பாற்று. அதர்வசிரோபநிஷத்திலும் இவ்வாறே நிரூபிக் கப்பட்டுள்ளது. ருக், யஜுர், ஸாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களும் இவ்வோங்காரத்துக்கு நான்கு பாதங்க ளென்றதனால் இவ்வட்சரத்தின் பொருளே நான்கு வேதங்களி லும் பேறப்பட்டதென்பது வெளிப்படை. படவே, சர்வ வேத ங்களும் எப்பொருளை யுணர்த்துமோ அப்பொருளை இவ்வக்ஷர மொன்றே யுணர்த்துவதால் மோட்சத்தையடைய இச்சிக்கும் ஒவ்வொருவரும் வேதமூலமாகிய இவ்வோங்காரத்தைப் பரம

சமாகப் பற்றவேண்டியது இன்றியமையாத கடனாம். எப்படிப் பிரபஞ்ச சொரூபத்தையறிந்தவன் பிரபஞ்ச பேதங்களை யெல்லாம் அறிகின்றானோ அதுபோல பிரணவசொரூபத்தை யறிந்தவன் சர்வ வேதங்களையும் அறிந்தவனாகின்றான். அல்லாமலும் எல்லா வேதங்களாலும் பிரதிபாதிக்கப்பட்ட சிவபெருமானாகிய சொரூபத்தையும் உணர்ந்தவனாகின்றான்.

கிருஷ்ண யஜுர்வேத கைவல்லியோபநிஷத்.

𑌵𑍇𑌦𑍈𑌰𑌨𑍇𑌕𑍈𑌰𑌹𑌮𑍇𑌵 𑌵𑍇𑌦𑍍𑌯𑍋
𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌕𑍃𑌦𑍍𑌵𑍇𑌦𑌵𑌿𑌦𑍇𑌵 𑌚𑌾𑌹𑌮𑍍 ।

வேதைரநேகை ரஹமேவ வேத்யோ
வேதாந்தக்ருத்வேத விதேவசாஹம் ।

(இ-ள்.) "எல்லா வேதங்களாலும் நானே அறியப்படுகின்றேன். வேதங்களை ஆதியில் வெளியிட்டவனும் நானே. வேதங்களை யறிந்தவனும் நானே." என்றது (இது சிவவாசகம்). இதனால் வேதகர்த்திருத்துவம், வேதவேத்தியத்துவம், வேதக்ஞத்துவம் முதலிய பெருமைகளெல்லாம் சிவபிரானிடத்தே சேர்க்கப்பட்டன. அவனே ஸர்வ வித்யாசாரியன் என்பதுஞ் சுருதி சித்தமாயிற்று. பகவத்கீதையிலும் இதே மந்திரம் ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியால் கூறப்பட்டுள்ளது. இம்மந்திரத்திலுள்ள "வேதைரனேகை" என்னும் பிரயோகம் அங்கு "வேதைச்சஸர்வை" என்று மாற்றப்பட்டுள்ளது அதனால் பொருட்பேதஞ் சிறிது மில்லை. கண்ணபிரான் இவ்வாக்கியத்தைத் தன் வசனமாகக் கூறியது பிரமபாவனையாலென் றுணரற்பாற்று. இவ்விஷயம் பின்னால் தெளிவாக விளக்கிக் காட்டப்படும். அன்றியும்,

கிருஷ்ணயஜுர்வேத சுவேதாசுவதரோபநிஷத்தும்.

𑌯𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑌂 𑌵𑌿𑌦𑌧𑌾𑌤𑌿 𑌪𑍂𑌰𑍍𑌵𑌂
𑌯𑍋 𑌵𑍈 𑌵𑍇𑌦𑌾𑌂𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌹𑌿𑌣𑍋𑌤𑌿 𑌤𑌸𑍍𑌮𑍈 ।
𑌤𑌂𑌹 𑌦𑍇𑌵𑌮𑌾𑌤𑍍𑌮𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌂
𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷𑍁𑌰𑍍𑌵𑍈 𑌶𑌰𑌣𑌮𑌹𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥

யோப்ரஹ்மாணம் விததாதிபூர்வம்
யோவைவேதாம்ச்ச ப்ரஹிணோதிதஸ்மை ।
தம்ஹதேவ மாத்மபுத்தி ப்ரகாசம்
முமுக்ஷுர்வை சரணமஹம் ப்ரபத்யே ॥

(இ-ள்.) "எவன் பிரமதேவனை முதலில் சிருஷ்டித்தான். அவனுக்கு வேதங்களை யுபதேசித்தான். அந்த ஆத்ம ப்பிரகாசனை தேவனை மோட்சத்தைவிரும்பி யான் சரண டைகின்றேன்." எனவும்,

𑌯𑍋 𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌭𑌵𑌶𑍍𑌚𑍋𑌦𑍍𑌭𑌵𑌶𑍍𑌚
𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌧𑌿𑌕𑍋 𑌰𑍁𑌦𑍍𑌰𑍋 𑌮𑌹𑌰𑍍𑌷𑌿𑌃 ।
𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌗𑌰𑍍𑌭𑌂 𑌜𑌨𑌯𑌾𑌮𑌾𑌸 𑌪𑍂𑌰𑍍𑌵𑌂
𑌸 𑌨𑍋 𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾 𑌶𑍁𑌭𑌯𑌾 𑌸𑌂𑌯𑍁𑌨𑌕𑍍𑌤𑍁 ॥
யோதேவாநாம் ப்ரபவச்சோத்பவச்ச
விச்வாதிகோருத்ரோமஹர்ஷி:।
ஹிரண்யகர்ப்பம் ஜநயா மாஸபூர்வம்।
ஸநோபுத்யா சுபயா ஸம்யுநக்து ॥

(இ-ள்.) "எந்த உருத்திரன் என்ற மகாரிஷி தேவர்களனை ருக்கும் உற்பத்திலயஸ்தானமாயுள்ளான். உலகநாயகனுமிருக் கிறான். ஆதியில் ஹிரண்யகர்ப்பனை சிருஷ்டித்தான். அக் தேவன் எமக்கு நல்லறிவை யூட்டுவானாக" எனவும்,

𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌗𑌰𑍍𑌭𑌂 𑌪𑌶𑍍𑌯𑌤 𑌜𑌾𑌯𑌮𑌾𑌨𑌂
ஹிரண்யகர்ப்பம் பச்யதஜாயமாநம்

(இ-ள்.) "ஹிரண்ய கர்ப்பனைப் பிறக்கக்கண்டான்." ... னவும்,

கிருஷ்ண யஜுர்வேத தைத்திரீயாருணசாகை நாராயணம்.

𑌯𑍋 𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌥𑌮𑌂 𑌪𑍁𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍
𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌧𑌿𑌕𑍋 𑌰𑍁𑌦𑍍𑌰𑍋 𑌮𑌹𑌰𑍍𑌷𑌿𑌃 ।
𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌗𑌰𑍍𑌭𑌂 𑌪𑌶𑍍𑌯𑌤 𑌜𑌾𑌯𑌮𑌾𑌨𑌂.
யோதேவாநாம் ப்ரதமம் புரஸ்தாத்
விச்வாதி கோருத்ரோ மகர்ஷி:।
ஹிரண்யகர்ப்பம் பச்யதஜாயமாநம்.

(இ-ள்.) "எவன் தேவர்களுக்கெல்லாம் ஆதியான ஹிரண்யகர்ப்பனைப் பிறக்கும்பொழுதே கண்டான். அந்த மகரிஷி ன,உருத்திரன்" எனவும் கூறிப்போந்தன.

இவ்வாக்கியங்களினாலே சர்வதேவப் பிரதமனான பிரமதே முதற்கண்ணே சிருஷ்டித்தவன் பரமசிவனென்றே ஏற்பட் "நான்முகனை நாராயணன் படைத்தான் நான்முகனுக்,

தான்முகமாய்ச் சங்கரனைத் தான் படைத்தான்." என்று ஆழ்வார் அருளிச்செய்துள்ளாரே அவ்வருளிச்செயல் பதர்மொழியோவெனின், அற்றன்று ஒவ்வொரு தேவர்க்கும் ஒவ்வொருவர் காரணராவது சகஜம். காமதேவனுக்கு நாராயணனும், இந்திராதியோருக்குக் காசிபனும், சந்திரனுக்கு அத்திரியும் காரணரானதுபோல் சதுர்முகப்பிரமாவுக்கும் ஸ்ரீயஃபதியாதிகளும் ஒவ்வோர் கற்பங்களில் அவாந்தரகாரணராயினர். அதனாலே அவர்களைப் பரமகாரணரென்று கூறுதல் குற்றமாம். எல்லாத் தேவர்களுக்கும், ஹிரண்யகர்ப்பன் முதலிய திரிமூர்த்திகளுக்கும் ஆதிகர்த்தா சிவபரஞ்சுடரேயாம். அதனாற்றான் ஏனையதேவர்களை ஒவ்வோர் கர்மங்களில் ஒவ்வோர் பயனைக்கருதி உபாசிக்கவேண்டுமென்று சுருதிகூறிப் பின்னர் சம்சார சாகரத்தில் உழன்று கிடக்கும் சர்வாத்மாக்களுக்கும் உயர்காயத்திரியின் உட்பொருளாயும், ஸவிதா எனப்படுஞ் சூரியனுக்கந்தர்யாமியாய் அப்பெயர்பெற்றவனையும், அனேக ஆரணங்கள் அறைந்தபடி ஆத்மாக்களின் கர்மங்களுக்கு ஏற்றவாறு அவரவர் புத்தியை உந்தி நடாத்தும் உயர்பொருளாயும், உயிர்க்குயிராயுமுள்ள பரமாத்மஜோதியாகிய பரசிவ சரணாகதியே பரமதாரகமாம் என்று சர்வவேதாந்த ஸாரஸங்கிரஹமாய் ஆத்மாக்கள் உண்மையறிந்துய்யும் நல்வழியைத் தெளிவாகப் போதிக்கும் பஞ்சருத்ரங்களிலொன்றாய்விளங்கும் இம்மந்திரோபநிஷத்தும், தைத்திரீயமும் வற்புறுத்திக்கூறின. மஹரிஷி என்றது சிவபெருமானுக்கு ஞானகிருதமான ஒப்பற்றபெருமை. அதாவது ஒவ்வொரு மகாப்பிரளயத்தும் தம்முள் அடங்கிய சமஸ்த வேதங்களையும் மறுசிருஷ்டியின் ஆரம்பத்தில் ஹிரண்யகர்ப்பனைச் சிருஷ்டித்து அவனுக்கு உபதேசிப்பவன் எம்மிறைவனேயாதலின் அவனே மஹரிஷி என்னும் நாமம் வகித்த ஸர்வ வித்தியாசாரியன். விசுவாதிகன்-பிரபஞ்சாதீதன். அது பலகிருதமான பெருமை. ஹிரண்யகர்ப்பசிருஷ்டி-அது கிரியாசக்தியின் பெருமை.

மா. ஒங்காரத்தில் இயைந்துள்ள நான்கு மாத்திரைகளையும், பகவானே ! நன்றாக விளக்கியருளவேண்டும்.

ஆ. அகாரம், உகாரம், மகாரம், அர்த்தமாத்திரை என்னும் நான்கு மாத்திரைகளே ஒங்காரத்தில் இயைந்துள்ளன.

அவைகளுக்கு முறையே பூமி, அந்தரிட்சம், சுவர்க்கம், சோமலோகம் என்னும் நான்கும், உலகங்களாம். ருக், யஜுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கும், வேதங்களாம். பிரமன், விஷ்ணு, உருத்திரன், ஸம்வர்த்தகாக்நி (மகாகிராஸன் என்று சுருதிகளால் விதந்தோதப்பட்ட துரீயசிவன்) என்னும் நான்கும், மூர்த்திகளாம். வசுக்கள், உருத்திரர்கள், ஆதித்தியர்கள், மருத்துக்கள் (பிதுர்க்களுக்கும் பிதுர்ஸ்தானமாயுள்ள கண தேவதைகள்) என்னும் நான்கும், பிதுர்க்களாம். காயத்ரீ, திருஷ்டுப், ஜகதீ, விராட் என்னும் நான்கும், சந்தசுக்களாம். கார்ஹபத்தியம், தட்சிணாக்கினி, ஆஹவநீயம், ஏகர்ஷி என்னும் நான்கும், அக்கினிகளாம். இவ்வாறு பிரணவத்தின் நான்கு மாத்திரைகளிலுமுள்ள பொருள்களை மறைமுடியின் சிகையிலமர்ந்த அதர்வணவேத அதர்வசிகோபநிஷத்தும், ந்ருசிம்மதாபநீயோபநிஷத்தும் விரிவாக வெடுத்துக்காட்டி யிருக்கின்றன. அவற்றை ஆங்குகாண்க.

மா—நான்காவதான அர்த்தமாத்திரையின் சொரூபம் யாது?

ஆ—பிரணவத்தின் இறுதியில் அதிசூக்ஷ்மமாய் அகார உகார மகாரங்களுக்கு அப்பாலாய் எந்த மாத்திரையுளதோ அதுவே அர்த்தமாத்திரை என்று சொல்லப்படும். அது மிகவும் அதிசூக்ஷ்மமான நாதரூபம். அது எல்லா வர்ணங்களுக்கும் மூலபூதமான பச்யந்திநாத சொரூபமாயிருத்தலின் சர்வ சப்தமய அர்த்தமயப் பிரபஞ்சங்களுக்கும் ஆதிகாரணமாயுள்ளது. அதற்குப் பரமேசுவரராகிய சிவபெருமானே தெய்வம். திருநாவுக்கரசு மூர்த்திகளும் "அரைமாத்திரையிலடங்கும்அடி" என்று வலியுறுத்தினர். அத்தகையநாத சொரூபம் ஆசாரியனடிபணிந்து முறைப்படி கேட்டுத் தெளிந்து வாலாயமாகப் பழகின பிரணவ நிஷ்டாயர்களுக்கே தோன்றும்.

மா—நான்காவது மாத்திரையிலுள்ள சோமலோகம் என்பது யாது?

ஆ—சோமலோகமானது பூமி, அந்தரிட்சம், சுவர்க்கம் என்னும் மூன்று லோகங்களுக்கும் அப்பாற்பட்டுச் சுத்தமாயிருப்பது. அது மூர்த்தித்திரயாதீத துரீயசிவன் எழுந்தருளியிருக்

கும் சிவபுரமாகும். பிரம விஷ்ணு உருத்திரர்களுடைய பதவிகளான சத்தியலோகம், வைகுண்டம், கைலாசம் என்னும் மூப்பதங்களுக்கும் அதீதமாயுள்ள மகாசிவலோகம் அதுவே. அச்சோமலோகத்தைச் சந்திரலோகமென்று சிலர் விரோதபுத்தியால் வியாக்கியானஞ் செய்தார்கள். அது பொருத்தமின்று. சந்திரலோகம் மூன்றும் மாத்திரையிலுள்ள சுவர்க்கலோகத்திலடங்குமாதலால் அது கூறியதுகூறல் என்னுங் குற்றத்துக்கிடனாகும். அந்தப் பரமஸ்தானமாகிய பரமபதமென்னும் மேலைய சிவபுரம் மேருமலையின் கண்ணுள்ள கைலாசமன்று, இமாசலத்துக்கும் ஏமகூடகிரிக்கும் இடையிலுள்ள வெள்ளியங்கிரியென்னுங் கைலாசமுமன்று, மேருமலைக்கு வடக்கே அண்டகடாகச்சுவருக்குச் சமீபத்திலுள்ள மகாகைலாச பர்வதமுமன்று, இம்மூவிதகைலாசங்களுக்குமப்பாலாய் அப்பிராகிருத பரமாகாச சிவலோகமாயுள்ளது. திராவிடவேதமென்னும் தேவாரப்பதிகங்களின் இறுதிப்பாசுரங்களாகிய சிலவற்றுள் பாராயணஞ் செய்வோர் அடையும் புண்ணியப்பேறாகக்கூறப்பட்ட சிவபுரம் அதுவேயாம். இதனால் திராவிட வேதமானது சிவபுரவெல்லையின்கண்ணேயே முற்றின்றது எனக்கருதப்படாது. போக்குவரவின்றி இங்கிருந்தவாறே அடையும் விதேக கைவல்லியம் என்னும் பரமுத்தியே சகல வேதாந்த சாரபூத சற்சித்தாந்தமாகிய வைதிகசைவர்கொள்ளுஞ் சிவசாயுஜ்ஜியம். அதைத்தான் "முத்தி முடிவு" என்றும் "சுருதியின் முடிந்த தாற்பரியம்" என்றுஞ் சித்தாந்த நூல்கள் ஒருங்கெழுந்து முழக்கும்.

சுக்லயஜுர்வேத பைங்கலோபநிஷத்.

𑌜𑍀𑌵𑌨𑍍𑌮𑍁𑌕𑍍𑌤𑌪𑌦𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌸𑍍𑌵𑌦𑍇𑌹𑍇 𑌕𑌾𑌲𑌸𑌾𑌤𑍍𑌕𑍃𑌤𑍇 ।
𑌵𑌿𑌶𑌤𑍍𑌯𑌦𑍇𑌹𑌮𑍁𑌕𑍍𑌤𑌤𑍍𑌵𑌂 𑌪𑌵𑌨𑍋𑌽𑌸𑍍𑌪𑌨𑍍𑌦𑌤𑌾𑌮𑌿𑌵 ॥

ஜீவன்முக்தபதம் த்யக்த்வா ஸ்வதேஹே காலஸாத்க்ருதே ।
விசத்ய தேஹமுக்தத்வம் பவனோஸ்பந்த தாமிவ ॥

(இ-ள்.) "காற்று அசைவற்ற தன்மையையடைதல்போலத் தனதுதேகங் காலவயப்பட்டவுடன் சீவன்முத்தித்தசையை நீங்கி விதேக கைவல்லியத்தை யடைகின்றனன்" என்று நிர்ணயித்தது. அக்காலை முத்தாத்மா சர்வஞ்ஞத்துவம், சர்வவியாபகத்துவம், ஸ்வயம் பிரகாசத்துவம் முதலிய குணங்களெல்லாந்

தன்மாட்டு நிரந்தரமாக விளங்கப்பெற்று அத்வைத சிவாநந்தாநுபவமொன்றிற்கே உரித்தானவனாய் விடுகின்றனன். ஆனால் பரமசிவத்தின் சிருஷ்டியாதி பஞ்சகிருத்தியங்களிலெதுவும் அவனுக்கு உரித்தாமாறு இல்லை. சிவஞானசித்தியாரும் “உம்பர்பிரானுற்பத்தியாதிகளுக்குரியன் உயிர்தானுஞ் சிவானுபவமொன்றுக்குமுரித்தே” என்று அறிவுறுத்தியது. சிவஞானபோதமும் “அவனது சீபாதத்தையணையும்” என்று முடிவு கட்டியது. சிபாதமாவது - அவனது திருவருளாகிய திருவடி. அதையடைந்தால் அகண்ட ஞான சொரூபத்தையுடைய பரம்பொருளை யடைந்தாரும். அருளைச் சிவபரப்பொருளின் பாதம் அல்லது அடியாக்கூறுதல் சைவபரிபாஷை. “காலுந்தலையுமறியார் கலதிகள், காலந்தச்சக்தியருளென்பர்” என்னுந் திருமூலதேவர் திருமந்திரத்தாலுமுணர்க. இவ்வுண்மையை யுணராதார் வைதிகசைவர் சொல்வதுந் துவிதமுத்தியேயென்று பிதற்றுகிறவர். பரமுத்தியிலும் ஆத்மா சிவத்துக்கடிமையென்று சித்தாந்தநூல்கள் கூறியது - ஆத்மா மலமுழுதும் நீங்கித் தன்னறிவு வியாபகமாய் விளங்கிய வழியுந் தன்னாற் சாரப்பட்ட சிவத்தைமாத்திரம் அறிதலின்றி மற்றொன்றினையுமறிதல் செல்லாமையின் அவ்வாறு கூறப்பட்டது. அதனாலே பேதங் கற்பிப்பது கூடாமை. முன்னிலைச்சுட்டிருந்தாலன்றோ பேதங்கூறுவது பொருந்தும். சிவானந்தப் பெருங்கடலிற் படிந்து மதுவுண்ட வண்டைப்போல அம்மயக்கத்தில் ஆழ்ந்துகிடத்தலே எம்மவர் கொள்ளும் சுத்தாத்வைத பரிபூரண நிலையாம். வாமதேவர்; சனகர்; சுகர் முதலியோரது அநுபவமும் அதுவே. அந்நிலையில் “மண்ணேறுடைந்தும் வழங்குயிர்யாவுமே, அண்ணலே யுன்னருள் வடிவாகுமே” என்று ஸ்ரீதாயுமானசுவாமிகள் விளக்கியருளியபடி, உலகுயிர் யாவும் அருள்வடிவாய் விளங்கும். அதைத்தான் தன்னிடத்தே யடையும் முத்தியென்று வேதசிரசுக்கள் முழக்கின. அந்தமுத்தியோடு ஏகாத்ம வாத முத்தியைக் குழப்புதல் கூடாது: ஏகாத்ம வாதமுத்தி ஆத்ம கைவல்யமாகும். சுத்தாத்வைத முத்தியோ பிரம கைவல்யம் என்று சொல்லப்படும். சிலர் விசிஷ்டாத்வைத மதப்படி வைஷ்ணவர் கொள்ளும் பதமுத்தியைப் போன்றதே சித்தாந்த சைவர்கள் கொள்ளும்பதமுத்தி என்று கூறுகின்றார்கள். அதுவும் பொருத்தமின்று. விசிஷ்டாத்வைத

முத்தியானது விஷ்ணுதத்துவ விளக்கத்தில் சொல்லியபடி "விரஜையைக்கிட்டி அதில் தீர்த்தமாடி..........சதுர்ப்புஜ சங்கசக்ரங்களும், நித்யமான இருபத்தைந்து வயதும், ஆயிரத்தெட்டு மாற்றுத் தங்கம்போன்ற சோதி ஸௌர்யப்பிரகாசமுடைய அப்ராக்ருத விக்ரஹத்தையும் பெற்று" வருமுக்தனை ஸ்ரீமந்நாராயணன் தூக்கி "லக்ஷ்மியின் திருக்கரங்களில் சாய்க்கையில் ஸ்ரீபெரியபிராட்டியார் அந்தப்புத்ரனுக்கு ஸ்தந்யபானந்தந்து முத்தமிட்ட" பின்னே "ஸ்ரீபரமபதத்தில் நித்யஸூரிகளுடன்கூடி நித்யானந்தத்தை அனுபவிப்பான்" என்று வரைந்திருப்பது கண்டு எடுத்துக்காட்டப்பட்டது. அல்லாமலும், யதீந்த்ரப்ரணவப்ரபாவத்தில் "இரண்டு முலைக்காம்பிலும் மாறாதே பெருகுகிறபாலை ஆராவமுதமாகப்பருகுவார் நாமன்றோ" என்று வைணவர் பேசிக்கொண்டனர் என்பதாகவும் வரையப்பட்டுள்ளது. வடகலைக்குருபரம்பரை (மூவாயிரப்படி) யில் "ஸ்ரீ வைகுண்டத்தில் திருமாமணிமண்டபத்திலே நித்யஸூரிகளோடு கலந்து குணாநுபவ கைங்கரியஞ்செய்வதே மோக்ஷம்" என்று புகன்றுள்ளது. இத்திறமுத்திகளெல்லாம் மேற்சொன்ன பரமுத்திக்கு நேர்விரோதமாயிருத்தலின் இவற்றைப்பற்றி விரிவாய் விளக்க அஞ்சுகின்றனம். ஏனெனின், அவ்வச்சமயத்தாருக்கு அவ்வம்முத்திகள் அரும்பெரும் பொருளாயுள்ளதென்பது லௌகிகவைதிக அநுபவம். ஆதலின் விவேகிகளே அவற்றைப் பகுத்தறிந்து கொள்ளக்கடவர். சந்தாநாசாரியருள் ஒருவராகிய ஸ்ரீ உமாபதி சிவாசாரியர் அவ்வச்சமயத்தார் கூறும் முத்தித்திறங்களை அடியில் காட்டும் பாசுரத்தில் ஸங்கிரஹமாகவும் தெளிவாகவும் விளக்கியுள்ளார்.

அரிவையரின் புறமுத்தி கந்தமைந்தும்
அறமுத்தி திரிகுணமும் அடங்குமுத்தி
விரிவுவினை கெடுமுத்தி மலம்போமுத்தி
விக்கிரக நித்தமுத்தி விவேகமுத்தி
பரவுமுயிர் கெடுமுத்தி சித்திமுத்தி
பாடாண முத்தியிவை பழிசேர்முத்தி
திரிமலமும் அகலவுயிர் அருள்சேர்முத்தி
திகழ்முத்தி யிதுமுத்தித் திறத்ததாமே.

இஃதிவ்வாறிருக்க, மேற்கூறிய மூவகைக் கைலாசங்களுள் வெள்ளியங்கிரியென்னுங் கைலாசமானது விஷ்ணுமுதலிய சர்வ

பிராணிகளின் பிரளயகாலத்தில் அழிவுறாது சிவாஞ்ஞையால் விரைவில் பிரமாண்டத்தைப் பேதித்து மேற்சென்றிருக்குந் தன்மையுடையது. மேருமலைக்கு வடக்கேயுள்ள மகா கைலாச பர்வதமும் அவாந்தரப் பிரளயகாலத்தில் அண்டத்துக்கப்பால் அவ்வாறே வளருந்தன்மையுடையது. இவ்விருவித கைலாசங்களுஞ் சிவபெருமானுடைய ஆஞ்ஞையால் தாங்கப்பட்டிருத்தலின் இவற்றிற்குப் பூமியின் ஆதாரஞ் சிறிதுமில்லை. இவ்வுண்மையை யுணராது பூமியின்கண்ணுள்ளதுதானே கைலையங்கிரி என்று வீண் பூசல்புரிவர் மதாவேசம் பூண்ட வைரிகள். "கொடிறும் பேதையுங்கொண்டதுவிடா" என்றது ஒத்து.

பூமியிலுள்ள எண்ணிறந்த ஸ்தலங்கள்தோறும் சிற்றறிவும் சிறுதொழிலும், சின்னாளும், பலபிணியோடுங் கூடியிருக்கின்ற எண்ணிறந்த ஆத்மாக்களுக்கு அவ்வப்போது அநுக்கிரகஞ் செய்யும்பொருட்டு அருட்குறிதோன்ற சிலாவிக்கிரகங்களில் எழுந்தருளியபடியே இம்மூவித கைலாசங்களிலும் பக்குவாத்மாக்களுடைய அநுக்கிரகார்த்தம் ஸ்ரீகண்டாதியோர்களை அதிஷ்டித்து எழுந்தருளியிருப்பவர் சிவபெருமானே. ஆகையினாலவரைக் "கிரிசந்த" என்று வேதங்களழைக்கின்றன. கிரி-மலை, சம்-சுகம், த-செய்பவர். கைலாசமுதலிய மலைகளிலிருந்து உலகத்துக்குச் சுகமளிப்பவர் என்பது கருத்து. இவற்றிற்கும் அப்பாற்பட்டு உத்தமோத்தமமாயும், விசுத்தமாயும், சிவசம்பந்தமாயுமுள்ள சிவபுரம் எதுவோ அதுவே சோமலோகம் என்று சொல்லப்படும். அதனை வாயுசம்ஹிதை உத்தரபாகம் அடியில் வருமாறு வர்ணிக்கின்றது.

𑌤𑌦𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌮𑍁𑌨𑍍𑌮𑌨𑌾𑌲𑍋𑌕𑌾𑌤𑍍 𑌸𑍋𑌮𑌲𑍋𑌕𑌮𑌲𑍌𑌕𑌿𑌕𑌮𑍍 ।
𑌸𑍋𑌮𑌸𑍍𑌸𑌹𑍋𑌮𑌯𑌾𑌯𑌤𑍍𑌰 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌨𑌿𑌵𑌸𑌤𑍀𑌶𑍍𑌵𑌰𑌃 ।
𑌤𑌦𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌮𑍁𑌨𑍍𑌮𑌨𑌾𑌲𑍋𑌕𑌾𑌤𑍍 𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍋 𑌨 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ॥

ததூர்த்வ முந்மநாலோகாத் ஸோமலோக மலௌகிகம்।
ஸோமஸ் ஸஹோமயாயத்ர நித்யம்நிவ ஸதீச்வர:।
ததூர்த்வ முந்மநாலோகாத் யம்ப்ராப்தோ நநிவர்த்ததே॥

(இ-ள்) "உன்மனாலோகத்துக்கு மேலுள்ளது அப்பிராகிருதமாகிய சிவலோகம். உமையோடுகூடிய சோமன் எனப்படும். பரமேசுவரர் அந்தச் சோமலோகத்தில் எக்காலமும் வசிக்கின்றனர்.

உன்மனுலோகத்திற்கு மேலுள்ள அந்தச் சோமலோகத்தையடைந்தவன் மீளப்பிறப்பதில்லை" எனவாம்.

கிருஷ்ண யஜுர்வேத தைத்திரீயாருணசாகையும்

𑌤𑍇𑌸𑍋𑌮𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍁𑌵𑌨𑍍𑌤𑌿।

தேஸோமம் ப்ராப்நுவந்தி।

(இ-ள்) "அவர்கள் சோமனை அடைவார்கள்." என்று கூறியது. அதனால் அந்தச் சோமலோகத்தைப் பெறுவதற்குப் பிரணவயோகமே பரமசாதனமாகும். அஃதன்றி வேறு வழி கிடையாது.

அதர்வணவேத பிரசினோபநிஷத்

𑌤𑌮𑍋𑌂𑌕𑌾𑌰𑍇𑌣𑍈𑌵𑌾𑌯𑌤𑌨𑍇𑌨𑌾𑌨𑍍𑌵𑍇𑌤𑌿
𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍𑌯𑌤𑍍𑌤𑌚𑍍𑌛𑌾𑌨𑍍𑌤𑌮𑌜𑌰𑌮𑌮𑍃𑌤𑌮𑌭𑌯𑌂 𑌪𑌰𑌂𑌚𑍇𑌤𑌿॥

தமோங்காரேணைவா யதனோந்வேதி
வித்வாந் யத்தச்சாந்த மஜரமம்ருதமபயம் பரஞ்சேதி॥

(இ-ள்) "அவன் ஓங்கார வாயிலாக இதனை (பிரமலோகத்தை) யடைகின்றான். வித்வான் சாந்தரும், ஜரையில்லாதவரும், அழியாதவரும், பயமில்லாதவரும், பரமுமாகிய அவரை (சிவபெருமானை) அடைகின்றான்." எனவும்,

அதர்வணவேத முண்டகோபநிஷத்

𑌪𑍍𑌰𑌣𑌵𑍋 𑌧𑌨𑍁𑌃𑌶𑌰𑍋 𑌹𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑌲𑍍𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇।

ப்ரணவோ தநுச்சரோஹ்யாத்மா ப்ரஹ்ம தல்லக்ஷ்யமுச்யதே।

(இ-ள்) "பிரணவம் வில், ஆத்மா அம்பு, லட்சியப் பொருள் அந்தப்பிரமம் என்று சொல்லப்படும்." (இதே மந்திரம் தியானபிந்தூபநிஷத்திலும் உள்ளது.) எனவும்,

கிருஷ்ண யஜுர்வேத அமிர்தநாதோபநிஷத்

𑌓𑌙𑍍𑌕𑌾𑌰𑌰𑌥𑌮𑌾𑌰𑍁𑌹𑍍𑌯 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾𑌥 𑌸𑌾𑌰𑌥𑌿𑌮𑍍।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑌪𑌦𑌾𑌨𑍍𑌵𑍇𑌷𑍀 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌰𑌾𑌧𑌨𑌤𑌤𑍍𑌪𑌰𑌃।

ஓங்கார ரதமாருஹ்ய விஷ்ணும் க்ருத்வாத ஸாரதிம்।
ப்ரஹ்மலோக பதாந்வேஷீ ருத்ர ராதந தத்பர:।

(இ-ள்) "ஓங்காரம் என்ற ரதத்திலேறி விஷ்ணுவைச் சாரதியாகக்கொண்டு பிரமலோகபதமாகிய சோமலோகத்தைத்தேடிச் செல்வான் உருத்திராராதனையில் பேரன்புடையவன்" எனவுங் கூறிப்போந்தன. இங்கு விஷ்ணு மூர்த்தியைச் சாரதியாகக்

கூறியது அவர் சிவஞானிகளுட் சிறந்தவராயும் பிரணவ வித்தைக்கு ஆசிரியராகவும் இருத்தல் பற்றியே. அதனாலேதான் 'மகா சாம்பவன்' என்று பிரசித்திபெற்ற அர்ஜுனனுக்குச் சோகம்பாவனையிற்றேர்ந்த கண்ணபிரான் பரமாசாரியராயினர். அன்றியும் அவனுக்குப் பரமேசுவரருடைய விசுவரூபத்தைத் தாமே காட்டித் தரிசிப்பித்தனர். தன்னைச் சிவசொரூபமாகப் பாவித்துப் பூசிக்கும்படிச்செய்து தன்மேலிட்டபோதுகளை த்தையும் தேகத்துக்குச்செய்யும் உபசாரங்யாவுந் தேகி ஏற்றுக்கொள்வதுபோலத் தனக்கு அந்தர்யாமியாயுள்ள சிவபெருமானுடைய திருமேனியில் காட்டி அவனை மகிழ்விப்பித்தனர். இன்னும் இவற்றினுள்ள நுண்ணிய பொருள்யாவும் அடியில் காட்டும் பிரமாணங்களைக்கொண்டு தெளிந்திடுக.

பகவத்கீதை பதினோராம் அத்தியாயம்

𑌏𑌵𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌤𑌤𑍋 𑌰𑌾𑌜𑌨𑍍 𑌮𑌹𑌾𑌯𑍋𑌗𑍇𑌶𑍍𑌵𑌰𑍋 𑌹𑌰𑌿𑌃 ।
𑌦𑌰𑍍𑌶𑌯𑌾𑌮𑌾𑌸 𑌪𑌾𑌰𑍍𑌥𑌾𑌯 𑌪𑌰𑌮𑌂 𑌰𑍂𑌪𑌮𑍈𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 ॥

எவமுக்த்வா ததோ ராஜந் மஹாயோகேச்வரோ ஹரி:।
தர்சயா மாஸ பார்த்தாய பரமம் ரூபமைச்வரம்॥

(இ-ள்) "இவ்விதங் கூறியபின் மகா யோகேசுவராகிய நாராயணர் பரமேசுவரரூபத்தை அர்ஜுனனுக்குத் தரிசிப்பித்தனர்." இதனால் சோகம்பாவனையிற் றேர்ந்த சிவஞானச் செல்வராய் விளங்கிய ஸ்ரீகிருஷ்ண பகவான் பரப்பிரம சிவபெருமானை யோகசமாதியிற் றியானித்துக் காட்டினர் என்பதே கீதையின் ஹிருதயம். அது எவ்வாறு பொருந்துமெனின், இவ்விஷயத்தை யுற்றுச் சிவபெருமான் அசுவத்தாமர்க்குக் கூறியவிடத்து,

மகாபாரதம் சவுத்திகபருவம்

𑌅𑌹𑌂 𑌯𑌥𑌾𑌵𑌦𑌾𑌰𑌾𑌧𑍍𑌯𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣𑍇𑌨𑌾𑌕𑍍𑌲𑌿𑌷𑍍𑌟𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌿𑌷𑍍𑌟𑌤𑌮𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌦𑌨𑍍𑌯𑍋 𑌮𑌮 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ॥

அஹம் யதாவதாராத்ய: க்ருஷ்ணேநா க்லிஷ்ட கர்ம்மணா।
தஸ்மாதிஷ்டதம: க்ருஷ்ணா தந்யோமம நவித்யதே॥

(இ-ள்) "நான் இளைப்புறுத்தொழில் பூண்ட கிருஷ்ணரால் விதிப்படி ஆராதனை செய்யப்படுகின்றேன். ஆதலின் கிருஷ்ணரினும் எனக்கு அதிக பிரீதியுடையவர் பிறரிலர்" என்று செப்பினர். அன்றியும்,

அதர்வணவேத ப்ருஹஜ்ஜாபாலோபநிஷத்திலும்

𑌨𑌮𑌸𑍍𑌤𑍇𑌽𑌸𑍍𑌤𑍁 𑌨𑌮𑌸𑍍𑌤𑍇𑌽𑌸𑍍𑌤𑍁 𑌤𑍍𑌵𑌾𑌮𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌗𑌤𑌃 ।
𑌤𑍍𑌵𑌤𑍍𑌪𑌾𑌦𑌯𑍁𑌗𑌳𑍇 𑌶𑌮𑍍𑌭𑍋 𑌭𑌕𑍍𑌤𑌿𑌰𑌸𑍍𑌤𑍁 𑌸𑌦𑌾 𑌮𑌮 ॥
𑌭𑌸𑍍𑌮𑌧𑌾𑌰𑌣 𑌸𑌮𑍍𑌪𑌨𑍍𑌨𑍋 𑌮𑌮𑌭𑌕𑍍𑌤𑍋 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ।

நமஸ்தேஸ்து நமஸ்தேஸ்து த்வாமஹம் சரணம் கத:।
த்வத்பாத யுகளே சம்போ பக்திரஸ்து ஸதாமம॥
பஸ்மதாரண ஸம்பந்நோ மமபக்தோ பவிஷ்யதி।

(இ-ள்) "உமக்கு நமஸ்காரம், உமக்கு நமஸ்காரம், உம்மை நான் சரணமடைந்தேன். ஓ சம்புவே! உமது பாதகமலங்களிரண்டினும் எனக்கு எப்போதும் பக்தியிருக்கட்டும். எனது பக்தன் பஸ்மதாரணத்துடன் கூடினவனாயாகக்கடவன்" என்று கிருஷ்ணமூர்த்தியின் மூலபுருஷரான விஷ்ணுவும் சிவபெருமானளித்த பஸ்மாவை அணிந்துகொண்டும், உட்கொண்டும் பிரார்த்தித்ததாகக் கூறப்பட்டிருக்கின்றது. நம்மாழ்வாரும் "நீறு செவ்வே யிடக்காணில் நெடுமாலடியா ரென்றோடும்" என்று திருநீற்றினெழிலைச் சிறப்பித்து மொழிந்ததும், இச்சுருதியைப் பின்பற்றியேபோலும். இவ்வியாக்கியானங்களால் நாராயணருக்கு அன்னியமாக உபாசியப்பொருளாம் பரப்பிரமசிவனார் வேறொருவர் உளரென்றும், அவரது உபாசனாதிகாரம் யாவருக்குஞ் சிறப்பாகவுளதேனும், நாராயணர் சிவோபாசகர்களுக்குள்ளே சிரேஷ்டராதலின் அவருக்கே அது சர்வசுதந்தரமென்றும் வெளியாயிற்று. ஆகையினாலே சிவாலயங்களில் விஷ்ணுமூர்த்தியைப் பரிவார தெய்வங்களில் ஒன்றாக வைத்துப் பூசித்து வருகின்றார்கள். விஷ்ணுமூர்த்தியில்லாத சிவாலயங் கிடையாது. "திருமாலுக் கடிமைசெய்" என்று ஔவையார் மொழிந்ததும் இக்கருத்தை நோக்கியே. அல்லாமலும்,

"அளவி லுன்பெருமை யறியவு முன்றாட் கழிவிலா வன்புவைத் திடவும்
தனமல ரெடுத்துன் னருச்சனை யாற்றிச் சாலநின் றிருவருள் பெறவும்
வளமலி புலியூ ரம்பலத் தமுதே மலர்தலை யுலகினுன் சுரும்பார்
உளர்தொழாய்ப் படலை மார்புடை யண்ண லொருவனே வல்லனுமன்றே"

என்னுஞ் சிவதத்துவ விவேகச் செய்யுளையுமீண்டு கவனிக்க. ஸ்ரீ தாயுமான சுவாமிகளும்,

"வண்டுளப மணிமார்பன் புதல்வனெனும் மனைவியோடுங்
குடியிருந்து வணங்கிப்போற்றும்

புண்டரிக புரத்தினி ஞதாந்தமோன போதாந்த
கடம்புரியும் புனிதவாழ்வே”

ன்றோதியருளினர் இதனையுணராமல் பெருமாள் இல்லாத வாலயம் பிரயோசனமற்றதென வைணவர் கூறும் வசைமொழி வெறும் பிதற்றேயாயிற்று.

இனி கிருஷ்ண பகவானுக்கு அந்தர்யாமியாயுள்ளவர் பரம சிவம் என்பதையும் சிறிது விளக்கிக்காட்டுவோம். கிருஷ்ணர் அர்ஜுனருக்குக் கீதோபதேசஞ்செய்தது பீஷ்ம பருவத்தில். இருவரும் கைலாச யாத்திரா கமனஞ்செய்தது துரோணபர்வத்தில். பீஷ்ம பர்வம் முற்பட்டது. துரோண பர்வம் பிற்பட்டது. கீதோபதேசப்பலனாக அர்ஜுனன் கிருஷ்ணரையே பரப்பிரம மாக அறிந்து நிச்சயித்திருக்கும்பட்சத்தில் அவரை நேரில் பூசிக்காமல் அபூஜ்யராகத்தள்ளி “ஏது பாவித்திடினு மதுவாகி வந்தருள்செ யெந்தைநீ குறையுமுண்டோ” என்னும் ஆன்றோர் வசனத்துக்கிணங்க அவரிடத்தில் பரப்பிரமசிவனாரைப் பாவித்துப் பூசிக்கவேண்டிய நிமித்தமேயில்லை. உபதேசாநந்தரம் சாங்காறுஞ் சிவபூஜையைக்கைவிடாமல் செய்யவேண்டியகாரண முமில்லை. மேலும் தான் சிவபாவனையால் கிருஷ்ணன்மேலிட்ட போதுகளைக் கிருஷ்ணனோடு கைலாசத்துக்குச்சென்று அவரைச் சிவபிரானிடங் கண்டு தெளிந்தமையானும், சிவபிரானே பலதாதாவாய்த் தனக்கு அநுக்கிரகஞ் செய்தமையானும், கிருஷ்ணமூர்த்திக்கினது தெய்வமும், சர்வாந்தர்யாமியுமாயுள்ளவர் சிவபெருமானே என்று கீதோபதேச ஞானத்தாலும், அநுபவ வாயிலாகவும் அர்ஜுனன் அறிந்துகொண்டானென்பதே தீர்வை. அப்படியானால், பகவற் கீதையில்

𑌸𑌰𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌾𑌨𑍍 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍍𑌯 𑌮𑌾𑌮𑍇𑌕𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌵𑍍𑌰𑌜।
𑌅𑌹𑌂𑌤𑍍𑌵𑌾 𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑍇𑌭𑍍𑌯𑍋 𑌮𑍋𑌕𑍍𑌷𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌮𑌾𑌶𑍁𑌚𑌃 ॥

ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம வ்ரஜ।
அஹம்த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச:॥

(இ-ள்) “சகலதர்மங்களையும் விட்டுவிட்டு என்னொருவனையே சரணமாகவடை. நான் உன்னைச் சகல பாவங்களினின்றும் நீக்கி மோட்சத்தையடையும்படிச்செய்வேன். பயப்படாதே.” என்று கண்ணன் கூறிய சரமசுலோகத்தின் தாற்பரியம் என்னெனின்

“பரப்பிர
மிவனென்
லாமிவனே
ஞேய, இ
டும் பரிச்
போற்சிவ
என்னுஞ்
னது தர்
துச் சோ
யால், ஆ
வென்று
கூறியிரு
உயிர் ப
திடினு ம
றது.
அறிவு ம
உபாசிப்
ரிஷியும்
கீதாசார்
மானெவ்

கி
இவ்வி
யாழ்வா
நின்றல
ரேனும்,
பிரகாச
வரே
காபெரி
மாதவ
னரோ’
பன்வி
ளினர்.
தரபஞ்

"பரப்பிரம மிவனென்றும் பரசிவன் றானென்றும் பரஞான மிவனென்றும் பராபரன்றானென்றும், அரன்றரு சீர்நிலையெல்லாமிவனேயென்றும் அருட்குருவை வழிபடவே யவனிவன்றானாயே, இரங்கியவாரணமாமை மீனண்டஞ்சினையை யியல்பினோடும் பரிசித்து நினைந்தும் பார்த்தும், பரிந்தவைதானாக்குமா போற் சிவமேயாக்கும் பரிசித்துஞ் சிந்தித்தும் பார்த்துந்தானே." என்னுஞ் சிவஞானசித்திச் செய்யுட் பிரமாணப்படி பிரமத்தினது தர்மத்தை ஞானவைராக்கிய சம்பூர்ண முடையோரிடத்துச் சோகம் பாவனாவிசேஷத்தாலேற்றிக் கூறுவது நியதமாகையால், ஆசாரியராகிய கிருஷ்ண பகவானுந் தன்னையே வழிபடுக வென்று உபதேசித்தனர். எல்லாக்கீதாசாரியர்களும் இப்படியே கூறியிருக்கின்றார்கள். பிரமகீதையிலும் "உலகம் யாவும் உயிர் பலவும் நானே சிறிதும் வேறில்லை-அலகிலறிவா லாய்த் திடனு மாயாவிடத்து மருத்தமிதே" என்று சொல்லியிருக்கின்றது. தேவேந்திரனும் "நான் பிராணனாயிருக்கின்றேன். நான் அறிவு மயமான ஆத்மாவாயிருக்கின்றேன் ஆயுளை அமுதமாக உபாசியுங்கள்" என்று உபதேசித்துள்ளான். வாமதேவ மகாரிஷியும் "நானே எல்லாமாயினேன்" என்றனர். இவற்றால் கீதாசாரியராகிய கிருஷ்ணமூர்த்திக்கும் அந்தர்யாமி சிவபெருமானென்பதே கரதலாமலகமாம். விரிக்கிற் பெருகும்.

கிருஷ்ணமூர்த்தி சரீரமும் சிவபெருமான் சரீரியுமாகலின் இவ்விருவருக்குமுள்ள சரீரிசரீர சம்பந்தத்தைப் பொய்கையாழ்வார் "பொன்றிகழுமேனிப் புரிசடையம் புண்ணியனும், நின்றுலகந்தாய நெடுமாலும்-என்றும், இருவரங்கத்தாற் றிரிவரேனும், ஒருவன் ஒருவனங்கத்தென்று முளன்." என்று இனிது பிரகாசப்படுத்தினர். வில்லிபுத்தூரார் பாரதத்திலும் இவ்வாறே கூறப்பட்டுள்ளது. "கன்னன்மே லணிமல ரனைத்துங் காயெரி-வண்ணன்மேற் காண்டனு மகிழ்ந்த மேதினி-உன்னு மாதவன் சிவனுருவ மென்றுணர்ந், தன்னனுமுடற்புளகரும்பினானரோ" எனலாம். அப்பர்சுவாமிகளும் "பையஞ்சுடர்விடு நாகப் பள்ளி கொள்வா னுள்ளத்தானும்" என்று திருவாய்மலர்ந்தருளினர். நம்மாழ்வாரும் "தீர்த்தனுலகளந்த சேவடிமேற் பூந் தாமஞ் சேர்த்தியவையே சிவன்முடிமேற் றான்கண்டு-பார்த்தன்

தெளிந்தொழிந்த பைந்துழாயான் பெருமை-பேர்த்துமொருவராற் பேசக்கிடந்ததே" என்று நிறுவியுள்ளார்.

𑌊𑌰𑍍𑌧𑍍𑌵 𑌪𑍂𑌰𑍍𑌣𑌮𑌧𑌃𑌪𑍂𑌰𑍍𑌣𑌂 𑌮𑌧𑍍𑌯𑌪𑍂𑌰𑍍𑌣𑌂 𑌶𑌿𑌵𑌾𑌤𑍍𑌮𑌕𑌂।

ஊர்த்வபூர்ணமதஃபூர்ணம் மத்யபூர்ணம் சிவாத்மகம்।

(இ-ள்) "மேலும் பூரணமாயும், கீழும் பூரணமாயும், நடுவும் பூரணமாயுள்ளது சிவசொரூபம்" என்று சுக்ல யஜுர்வேத முக்திகோபநிஷத் கூறியபடி சிவம் சர்வபரிபூரணமாயிருத்தலின் சிற்சடங்களின் எந்தப் பாகத்திலிருந்தும் அதிகார பேதத்துக்குத் தக்கவாறு பூஜையை ஏற்றுக்கொள்ளலாம். மத்யம்—நடு. அதாவது கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு என்னும் நான்கு திசைகளும் அதில் அடங்கியுள்ளன. அல்லாமலும், மூலைத்திசைகளையும் அந்நாற்பெருந் திசைகளிலடக்கி மேலுங் கீழுஞ் சேர்த்துத் திசைகள் பத்தென நூல்கள் நவிலாநிற்கும். ஒருபெண்ணினது ஸ்தனத்திலிருந்தும், குதிரை கட்டும் ஆப்பிலிருந்தும், ஆட்டுப்பிழுக்கையிலிருந்தும், இன்னும் அநேக நிக்ருஷ்ட இடங்களிலிருந்தும் உள்ளன்போடு பரவசமடைந்து செய்த பூஜையைச் சிவபெருமான் ஏற்றுக்கொண்டு அநுக்கிரகஞ்செய்த மான்மியங்கள் பல வைதிக நூல்களினுங் கேட்கப்படுகின்றமையால், கிருஷ்ணரது பாதங்களிலிட்ட போதுகளைச் (சிலர் கொள்கைப்படி) சிவனார் முடியிற்றாங்கியது ஒருபோதுந் தாழ்வாகாது சிவசந்நிதியில் சிற்சடபேதங்கள் யாவுமே நிக்ருஷ்டம். கிருஷ்ணரது சிரசு உயர்ந்த உறுப்பென்றும், அவரது பாதம் தாழ்ந்தவுறுப்பென்றுங் கொள்ளும்பட்சத்தில் அவ்வாறு உயர்வு தாழ்வான அங்கங்களையுடைய திருமேனி அப்பிராகிருதமென்றும் உத்கிருஷ்டமென்றும் அவர்கள் சொல்ல முயல்வது குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொண்டதையே மானும். ஸ்ரீதாயுமானசுவாமிகள், "எல்லா முதவுமுனை யொன்றிற் பாவனையேனுஞ்செய்து, புல்லாயினு மொருபச்சிலையாயினும் போட்டிறைஞ்சி, நில்லேனல்யோக நெறியுஞ் செயேனருணிதி யேசன்றும், கல்லேனெவ்வாறு பரமேபரகதி காண்பதுவே" எனக்கூறியுள்ளதையுமுணர்க. சிவஞான சித்தியாரும் "தாபரஞ் சங்கமங்க ளென்றிரண் டுருவினின்று மாபரன் பூசைகொண்டு மன்னுயிர்க் கருளை வைப்பன்". என்றோதியது.

இனி கிருஷ்ணருடைய விசுவரூபத்தைப்பற்றியுஞ் சிறிது கூறுதும். ஆஞ்சநேயர் விசுவரூபங்காட்டினர். வீரவாகுதேவர் விசுவரூபங்காட்டினர். நளாயனியின் மணவாளராகிய மாமுனிவர் ஏககாலத்தில் பலவுருவந்தாங்கி நின்றனர். சௌபரிமுனிவர் மாந்தாதா என்னும் ஓரரசருடைய புதல்வியர் ஐம்பதின்மரை விவாகஞ்செய்து அவ்வைம்பதின்மருக்கும் தமது ஆசிரமத்திலே தனித்தனி மாளிகை முதலாயின அமைப்பித்து அவ்வைம்பதின்மர் மாளிகையினும் ஒருவரையொருவர் அறியாவண்ணம் அவ்வவரிட்டத்துத் தனித்தனி வடிவங்கொண்டு ஓர்காலமும் அவ்வவரைப் பிரியாது நெடுங்காலம்போகந்துய்த்துத் தமது தவநிலையும் பெயராதுயோகிருந்தனர். அகஸ்தியர் கடலை ஆசமனஞ்செய்ததோடு விந்தமலையின் கர்வத்தையும் அடக்கினர். உலகந் தென்பாரிசந் தாக்கிக்கொண்டபோது அங்கெழுந்தருளிப் பூமியைச் சமப்படுத்தினர். உபமந்யு பகவான் பாற்கடலை யுண்டனர். இன்னும் அனேக ரிஷிகளும் அசுரர்களும் அனேக அற்புதங்களைச் செய்தார்கள். இவையெல்லாம் சர்வைச்வர்ய சம்பந்நச்சர்வேசுவராகிய சிவபெருமானது ஐசுவரிய யோகமேயாம். இந்த ஐசுவரிய யோகத்தையே கிருஷ்ணமூர்த்தியும் சோகம் பாவனையாற் பெற்றமையானும், பிராகிருத சித்தர்கள்போலல்லாமல் திரிமூர்த்திகளுஞ் சர்வசக்தர்களாதலின் அவருள்ளும் "விஶ்வ நாராயணம் வரம்-விச்வன்நாராயணன் பரம்" எனவும், "விஶ்வாவிஷ்ணு-விச்வம்விஷ்ணு" எனவும் முறையை சுருதியும் பாரதமும் துதித்தபடி விராட்டுசொரூபம் விஷ்ணுவிற்கே இயற்கையில் அமைந்திருத்தலானும், பரமேசுவரரது விசுவரூபத்தை அர்ஜுனருக்குக் காட்டினர் என்று வைதிக சிரேஷ்டர்கள் தெளிந்திடுவர்.

சிவமஹா புராணம்

𑌈𑌶𑌾𑌨𑌸𑍍𑌸𑌰𑍍𑌵 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌦𑌿 𑌗𑍁𑌰𑍁𑌰𑍍𑌬𑍁𑌧𑌃।
𑌤𑌸𑍍𑌯 𑌶𑌿𑌷𑍍𑌯𑍋 𑌮𑌹𑌾 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨 𑌮𑌹𑍋𑌦𑌧𑌿𑌃॥

ஈசானஸ் ஸர்வ வித்யாநாம் ஸவவாதி குருர்பதா:।
தஸ்ய சிஷ்யோ மஹாவிஷ்ணுஸ் ஸர்வஜ்ஞான மஹோததி:॥

(இ-ள்) "ஓ பண்டிதர்காள்! சர்வவித்தைகளுக்கும் ஈசானனே ஆதி குரு. அவருக்குச் சிஷ்யராகிய மஹாவிஷ்ணு சர்வஞானக் கடலாம்." என்று விஷ்ணுவினது பெருமையைக்கூறினமையால்

ஸ்ரீதாயுமானசுவாமிகளும் "விஷ்ணுவடிவான ஞானகுருவே." என்று புகழ்ந்தனர். இதனால் ஸ்ரீமந்நாராயணர் தத்துவோபதேசஞ்செய்யுங் ஸ்ரீ குருமூர்த்தியென்று ஏற்பட்டது. இவற்றையெல்லாஞ் சீர்தூக்கிப் பார்க்கும்போது கிருஷ்ணமூர்த்தி "என்னையே வழிபடுக" என்றதும், "யானே உலகமாயினேன்" என்றதும், விசுவரூபங்காட்டியதும், சோகம்பாவனையிற் றலைப்பட்ட பரமாசாரிய ராதலினாலென அறிக.

மேலே உதாஹரித்த அமிர்தநாதோபநிஷத்து வாக்கியத்தில் "ருத்ரா ராதநதத்பர:" என்னும் வசனத்திலுள்ள உருத்திரன் என்ற சொல்லுக்குச் சம்சார பந்தத்தை யொழிக்கும் ஆற்றல் பெற்ற பிறைமுடிப் பிறப்பிலிப்பிரானாகிய துரீய ருத்திரரே பொருளாவாரன்றிப் பிரபஞ்சசங்காரத்தொழிலை மேற்கொண்டு திரிமூர்த்திகளோடு ஒருவராயெண்ணப்பட்ட குணருத்திரரன்று. மூர்த்தித்திரயாதீத சிவனை "த்ரிகுணரஹிதம்" என்று வேதம் பலவிடத்துந் துதித்துத் திருப்தியடைந்ததுமல்லாமல் அந்நிர்க்குண சிவனுக்கு "மஹாவருத்திரன்" என்னும் நாமமும் யோகரூடியாகவுளதென்று அவ்வேதமே பன்முறை பலவிசேஷ பரத்துவ நிரூபண வாக்கியங்களில் நிரூபித்துள்ளது. நிர்க்குணம் என்பதற்குக் குணசூன்யமென்று சிலர் பொருள் கூறுவர். அது கேவலம் அஸம்பாவிதம். வேறு சிலர் ஹேயகுணரஹிதம் என்பர். அதுவும் அவ்வளவு சிறப்பினதாகா. திருவருள் அல்லது தயாமூலம் (பிரமத்தின் தர்மபூதம்) வெளிப்படாத அவசரமே நிர்க்குணமாகும். அது கேவலம் சத்துசித்தாய் விளங்கும். ஆகையினாலன்றோ, திருவாசகம் "ஒருநாம மோருருவ மொன்றுமில்லாற் காயிரந், திருநாமம் பாடினாந் தெள்ளேணங் கொட்டாமோ" என்று விதந்தோதியது. பெயரில்லாப் பிரமத்தைப் பெயர்களாற் குறிப்பது உண்மையை யுணர்த்துதற்கே யெனத்தெளிக.

மஹாஸ்காந்த புராணம்

𑌰𑍁𑌗𑍍 𑌸𑌂𑌸𑌾𑌰𑌜𑌂 𑌦𑍁𑌃𑌖𑌂 𑌤𑌦𑍍𑌦𑍍𑌰𑌾𑌵𑌯𑌤𑌿 𑌯𑌃 𑌪𑍍𑌰𑌭𑍁𑌃
𑌰𑍁𑌦𑍍𑌰 𑌇𑌤𑍍𑌯𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌸𑌦𑍍𑌭𑌿𑌃 ।

ருத்திஸம்ஸாரஜம் துக்கம் தத்ராவயதிய: ப்ரபு:
ருத்ர இத்யுச்யதே ஸத்பி:।

(இ-ள்) "ருக் என்பது சம்சார துக்கம். அதை எந்தப் பிரபு [illegible]ப்பான் அவன் ரு[illegible]ரனென்று சத்துக்களாலே

சொல்லப்படுவான்,” என்றோதியது. இதற்கிணங்கத் தமிழ் கந்தபுராணமும் “இன்னலங் கடலுட்பட்டோர் யாரையுமெடுக்கு மாற்றால், உன்னரும் பரம மூர்த்தி யுருத்திரனெனும்பேர் பெற்றான்” எனச்சாற்றியது. ஆகையினாலே வேதவேதாந்தங்களை முறைப்படி கற்றுணர்ந்து, அவற்றில் கூறப்பட்டுள்ள சத்கருமங்களை விதிப்படி யநுஷ்டித்து, அவற்றால் சித்தந்தூய்மை பெற்று பிரணவகாதோபாசன சித்தியிலுதித்த அன்பின் மேலீட்டால் எல்லாவற்றையுங் கைவிட்டுப் பரசிவ ஆராதனையிற்றலைப்பட்டு அவனருளைப்பெற்று மகாசாம்பவ மணியாய்த் திரியும் உத்தமர்க்கே மீட்சியற்ற சோமலோகப்பிராப்தி யுண்டாகுமேயன்றி ஏனையோர்க்கு எட்டுணையும் வாய்க்காது. இதையே பிரஹ்ம மீமாம்சை எனப்படும் உத்தரமீமாம்சையாகிய வேதாந்த (ப்ரஹ்ம) சூத்திரமானது “𑌅𑌥𑌾𑌤𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌾-அதாதோப்ரஹ்மஜிஞ்ஞாஸா—பின்னர் ஆகலின் பிரமத்தையறிய ஆசை” என்று உபக்கிரமத்திற்கூறி அப்பிரமத்தை உபாசிப்போர் அடையும்பலன் பிரமலோகமென்று விளக்கிக்காட்டி அதைச் சூரியதேஜோமார்க்கமென்னும் அர்ச்சிராதி மார்க்கத்தால் அடைவதல்லது வேறு எந்த மார்க்கத்தாலும் அடைய முடியாதென்று வற்புறுத்தி,

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑌮𑌭𑌿𑌸𑌂𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 𑌨𑌚𑌪𑍁𑌨𑌰𑌾𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ;
𑌨𑌚𑌪𑍁𑌨𑌰𑌾𑌵𑌰𑍍𑌤𑌤𑍇।

ப்ரஹ்மலோக மபிஸம்பத்யதே நசபுநரா வர்த்ததே
நசபுநரா வர்த்ததே।

(இ-ள்) “பிரமலோகத்தை அடைந்த அவன் மீளத் திரும்புவானல்லன், அவன் மீளத் திரும்புவானல்லன்” என்றோதிய சாமவேத சாந்தோக்யோபநிஷத் வாக்கியத்துக்கிணங்க,

𑌅𑌨𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌶𑍍𑌶𑌬𑍍𑌦𑌾 𑌦𑌨𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌶𑍍𑌶𑌬𑍍𑌦𑌾𑌤𑍍 |
அநாவ்ருத்திச்சப்தா தநாவ்ருத்திச் சப்தாத்।

(இ-ள்.) “மீளத்திரும்புதலில்லை மீளத்திரும்புதலில்லை” என்று உபசங்காரத்தில் முடித்தது. இதனால் பிரமசூத்திரஞ் செய்த முனிவேந்தராகிய வியாசரது தாற்பரியமும் பிரணவத்தின் நான்காவதான அர்த்தமாத்திரையில் பிரதிபாதிக்கப்பட்ட சோமலோகமென்னுஞ் சிவபுரமே, பிரம விஷ்ணு ருத்திர முதலா

யினருடைய பதங்களைக்கடந்த நித்திய நிர்மல நிரதிசயானந்தத்துக்கு உறையிடம் என நன்கு வியக்தமாயிற்று. இந்தச் சோமலோகத்தையே மணிவாசகப்பிரானும் "வானவூர் கொள்வோம் நாம் மாயைப்படைவாராமே", "அண்டர்நாடாள்வோம் நாம் அல்லற்படைவாராமே" என்று திருவாய்மலர்ந்தருளினார்கள். நாயனாரும் "வரனென்னும் வைப்பு" என்று சிறப்பித்தருளினர்.

மேலே கூறிப்போந்த பிரணவ நாதோபாசனம் மீட்சியற்ற சோமலோகப் பிராப்திக்கே ஏதுவாயுள்ளது. ஆனால் அது நிராலம்பயோகிக்குப் பயன்படாது. அவன் ஓங்காரத்தின் மேனிலையாகிய அமனஸ்கயோக நிஷ்டையின்பொருட்டுப் பிரணவநாதத்தை மறந்து அதன் வாச்சியப்பொருளாம் அதிபதியாகிய ஸ்ரீ பரமேசுவரரது சொரூபத்தையே மௌனசமாதியாற் பற்றவேண்டியது அத்தியாவசியகமாம்.

கிருஷ்ணயஜுர்வேத அமிர்தபிந்தூபநிஷத்.

𑌸𑍍𑌵𑌰𑍇𑌣 𑌸𑌂𑌧𑌯𑍇𑌦𑍍𑌯𑍋𑌗𑌂 𑌅𑌸𑍍𑌵𑌰𑌂 𑌭𑌾𑌵𑌯𑍇𑌤𑍍𑌪𑌰𑌂 ।
𑌅𑌸𑍍𑌵𑌰𑍇𑌣𑌾𑌨𑍁𑌭𑌾𑌵𑍇𑌨 𑌨𑌭𑌾𑌵𑍋 𑌭𑌾𑌵𑌮𑌿𑌷𑍍𑌯𑌤𑍇 ॥
ஸ்வரேணஸந்தயேத் யோகம் அஸ்வரம் பாவயேத்பரம்|
அஸ்வரேணாநுபாவேந நபாவோ பாவஇஷ்யதே॥

(இ-ள்.) "யோகத்தைச் ஸ்வரத்தோடு சேர்க்கவேண்டும். பரத்தைச் ஸ்வரமில்லாமல் பாவிக்கவேண்டும். அசுவரமாகிய அநுபவத்தாலே எவ்விதவிஷய வாசனையுமற்று நிற்றலாகிய பரவனமெனப்படும் சிவமயந்தோன்றும்." எனவும்.

𑌶𑌬𑍍𑌦𑌾𑌕𑍍𑌷𑌰𑌂 𑌪𑌰𑌂𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌕𑍍𑌷𑍀𑌣𑍇𑌯𑌦𑌕𑍍𑌷𑌰𑌂 ।
𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑌕𑍍𑌷𑌰𑌂 𑌧𑍍𑌯𑌾𑌯𑍇𑌦𑍍 𑌯𑌦𑍀𑌚𑍍𑌛𑍇𑌚𑍍 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ॥
சப்தாக்ஷரம் பரம்ப்ரஹ்ம தஸ்மின்க்ஷீணேய தக்ஷரம்।
தத்வித்வாநக்ஷரம் த்யாயேத் யதிச்சேத் சாந்திமாத்மந: ॥

(இ-ள்.) "சத்தப்பிரமம், பரப்பிரமம் என இரண்டுள்ளது. சத்தப்பிரமம் 'லயமடைந்தபோது எந்த அக்ஷரம்' மிஞ்சும் அந்த அக்ஷரத்தை (சிவத்தை) வித்வான் தியானிக்கவேண்டும். ஆத்மாவின் சாந்தியை இச்சித்தால்" எனவும் நிரூபணஞ் செய்துள்ளது. இதனால் நாதமயமாய் நிற்கும் பிரணவத்தையும் பரப்பிரமத்தையும் ஒன்றாக நினைத்து தியானிப்பது முதற்படி. பிறகு பிரணவம் லயமடைந்தவுடன் எஞ்சிய வாச்சியமாகிய சிவ

த்வத சாக்ஷாத்கரித்து நிஷ்டைகூடியிருத்தல் முடிந்தபடி. அப்படி நிற்கும் நிலையே நாதாதீதமான மௌனநிலையாம். அது தத்துவங்கள் முப்பத்தாறிற்குள்ளடங்கும் சமயக்கூட்டங்களைத்தினும் மேம்பட்டது. "ஆறாறையுநீத் ததன்மே னிலையைப் பேறா வடியேன் பெறுமா றுளதோ" என்றார் ஸ்ரீ அருணகிரிநாதர். "சைவமுதலாவளவில் சமயம் வகுத்த மேற்சமயங் கடந்த மோன சமரசம் வகுத்த நீ" என்றும், "அதுவென் றன்னு மதுவுமறநின்ற, முதியஞானிகள் மோனப்பொருளது" என்றும் "நானெனவு நீயெனவு மிருதன்மை நாடாமல் நடுவேசும்மா, தானமரும் நிலையெனவே சத்தியஞ் சத்தியமெனநீ தமியனேற்கு, மோனகுரு வாகியுங் கைகாட்டினையே" என்றும் ஸ்ரீ தாயுமான சுவாமிகள் விதந்தோதியதும் இதனையே. மோனசமரசம்என்றது சமயாதீதமாகிய சித்தாந்த சைவத்தை. இதற்கு "மோனவாழ்வு" எனவும், "சும்மாவிருத்தலாகிய சுவாநுபூதி" எனவும் பெயருண்டு. "மோனமென்பது ஞானவரம்பு" என்று ஔவையாரும், "சும்மாவிருக்கச் சுகம் சுகம்" என்று ஷை சுவாமிகளும் அறிவுறுத்தியுள்ளார்கள். ஸ்ரீ அருணகிரிநாதரும் "செம்மான் மகளைத் திருடுந் திருடன், பெம்மான் முருகன் பிறவா னிறவான், சும்மா விருசொல் லறவென் றலுமே, அம்மா பொருளொன் றுமறிந் திலனே" என்றார். "அம்மா பொருளொன்று மறிந்திலனே" என்பது "எங்கும் சிவசொரூபமே காணப்படுகின்றதே, இது பேரதிசயம்" என்பதாம். திருவாசகம் உயிருண்ணிப்பத்தில், "எனை நானென்பதறியேன் பகலிரவாவது மறியேன், மனவாசகங் கடந்தானெனை மத்தோன் மத்தனாக்கி" என்றும், பிரார்த்தனைப் பத்தில், "பரமானந்தப் பழங்கடல் சேர்ந்தாலியாக்கை யானெனதென் றியாதுமின்றி யறுதலே" என்றும், திருத்தெள்ளேணத்தில், "ஊன்கெட் டுயிர்கெட் டுணர்வுகெட் டென்னுள்ளமும்போய், நான்கெட்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ" என்றும் மாணிக்கவாசகசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளியுள்ளார்கள். இன்னும் அநேக சிவஞானசிகாமணிகளும் இவ்வாறே கூறியுள்ளார்கள்.

மேலோதிபதியென்றது அதர்வசிகை, அதர்வசிரம், மாண்டூக்கியம் முதலிய உபநிஷத்துக்களில் பிரணவன் எனப்புகழ்ந்து பேசப்பட்ட மூர்த்தித்திரயாதீத பரமசிவத்தையே. ஸ்ரீ ருத்ர

ஸம்ஹிதைகளிலும் ரதிஎன்றும், ரதம்என்றும், ரதிபதிஎன்றும், சிவபெருமானுடைய நாமங்களே எடுத்துவழங்கப்பட்டிருக்கின்றன. பிரணவபதியின் ஸ்தானம் அண்டத்திலே சோமலோகமும், பிண்டத்திலே துவாதசாந்தமும் என்பது வேதவேதாந்தங்களின் முடிந்தமுடிபு. மனமும் வாக்கும் எட்டும் வரையில் ஓங்காரரதம் வேண்டும். பிறகு கேவலம் பாவனாதீதமும், சுழுத்திஸ்தான உருத்திரோபாஸ்தியும் வேண்டும். பிறகு அதுவும் நழுவாமல் நழுவிநிற்கும்பொழுது அவனேதானாகவும், தானே அவனாகவும் நிற்கும் அறிவுமயமான அற்புத மௌனநிஷ்டைவந்து பொருந்தும். அதைவிடச்சிறந்தவின்பநிஷ்டை வேறுகிடையா. அருணைக் கோனுரைத்ததும் அதுவே. ஸ்ரீதாயுமானசுவாமிகள் கொண்டதும் அதுவேயாம். "யான்றானெனலறமேல யின்பநிட்டை" எனவும், "நீயற்ற வந்நிலையே நிட்டையதில் நீயிலையோ, வாயற்றவனே மயங்காதே-போயுற், றிருந்தாலும் நீபோகா வென்றுமுளாய் சும்மா, வருந்தாதே வின்பமுண்டுவா" எனவுங்கூறிப்போந்த சுவாநுபூதிமானான அம்மகான் திருவாக்குகள் இன்றும் என்றும் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றன. இதையே ,,ஶிவபோத நித்ரா-சிவயோகநித்ரா" என்று ருக்வேதநிர்வாணோபநிஷத் அறிவுறுத்தியது. தூங்காமற்றூங்கிச்சுகம்பெறுவதும் இதுவேயாம்.

மா.—பிரணவத்தின் நான்குமாத்திரைகளின் நிறங்களையும் தேவதைகளையுங்கூறியருள வேண்டும்.

ஆ. அகாரம் என்னும் முதல்மாத்திரை சிவந்தநிறமுள்ளது. மஞ்சள் நிறமுடைய சக்தியையுடையது. பிரமன் அதற்கு அதிதேவதை. உகாரம் என்னும் இரண்டாம் மாத்திரை நீலநிறமுடையது. மின்னல்போன்ற நிறமுடையசக்தியையுடையது. விஷ்ணு அதற்கு அதிதேவதை. மகாரம் என்னும் மூன்றாம்மாத்திரை வெண்ணிறமுடையது. நீலநிறமுடைய சுபைஅசுபைஎன்னும் சக்திகளையுடையது. (அதன்றியும் கௌரீ, காளி, துர்க்கை என்னும் மூன்றவஸ்தைகளில் மூன்று நிறங்களையும் பெற்றுள்ளது.) உருத்திரமூர்த்தி அதற்கு அதிதேவதை. இறுதியிலுள்ள அர்த்தமாத்திரை பலநிறங்களையுடையது. மின்னலைப்போன்ற பளபளப்புள்ள நிறமுடையசக்தியையுடையது. புருஷன் அதற்கு அதிதேவதை. இதற்குப்பிரமாணம்.

அதர்வண வேத அதர்வசிகோபநிஷத்

𑌪𑍍𑌰𑌥𑌮𑌾 𑌰𑌕𑍍𑌤𑌪𑍀𑌤𑌾 𑌮𑌹𑌦𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌦𑍈𑌵𑌤𑍍𑌯𑌾 ।
𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌾 𑌵𑌿𑌦𑍍𑌯𑍁𑌮𑌤𑍀 𑌕𑍃𑌷𑍍𑌣𑌾 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌦𑍈𑌵𑌤𑍍𑌯𑌾 ॥
𑌤𑍃𑌤𑍀𑌯𑌾 𑌶𑍁𑌭𑌾𑌶𑍁𑌭𑌾 𑌶𑍁𑌕𑍍𑌲𑌾 𑌰𑍁𑌦𑍍𑌰𑌦𑍈𑌵𑌤𑍍𑌯𑌾 ।
𑌯𑌾𑌵𑌸𑌾𑌨𑍇𑌽𑌸𑍍𑌯 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑍍𑌯𑌰𑍍𑌧𑌮𑌾𑌤𑍍𑌰𑌾
𑌸𑌾𑌵𑌿𑌦𑍍𑌯𑍁𑌮𑌤𑍀 𑌸𑌰𑍍𑌵𑌵𑌰𑍍𑌣𑌾 𑌪𑍁𑌰𑍁𑌷𑌦𑍈𑌵𑌤𑍍𑌯𑌾 ॥

ப்ரதமா ரக்தாபீதா மஹத் ப்ரஹ்ம தைவத்யா।
த்வீதீயா வித்யுமதீ க்ருஷ்ணா விஷ்ணுதைவத்யா॥
த்ருதீயா சுபாசுபா சுக்லா ருத்ரதைவத்யா।
யாவஸாநேஸ்ய சதுர்த்யர்த்த மாத்ரா
ஸாவித்யுமதீ ஸர்வவர்ணா புருஷதைவத்யா॥

(இ-ள்) "முதல்மாத்திரை ரக்தமாயும் மஞ்சளாயும் இருக்கும். மஹானாகிய பிரம்மாவைத் தேவதையாகவுடையது. இரண்டாவது மாத்திரை மின்னல் நிறமாயும் கருமையாயும் இருக்கும். விஷ்ணுவைத்தேவதையாகவுடையது. மூன்றாவது மாத்திரை சுபமும் அசுபமும் வெண்மைநிறமாயுமிருக்கும். உருத்திரமூர்த்தியைத் தேவதையாகவுடையது. இறுதியிலுள்ள அர்த்தமாத்திரை மின்னல்நிறமாயும் சர்வவர்ணங்களை யுடையதாயுமிருக்கும். புருஷனைத்தேவதையாகவுடையது" எனவாம்.

மா. சகல வியாக்கியான கர்த்தாக்களும் ஐயுறக்கிடக்கும் இப்புருஷசப்தம் எக்கடவுளருக்கு முக்கியமாயுரிய தென்பதை விரிவாய்க் கூறியருளவேண்டும்.

ஆ. புருஷசப்தம் சத்துவம், ரஜசு, தமசுஎன்னும் முக்குணங்களைத் தந்தந்தொழிற்சேரப்பெற்றுள்ள விஷ்ணு, பிரமா, உருத்திரன் என்னும் மும்மூர்த்திகளுக்கும் மேலாய்நான்காவது தெய்வமாயுள்ள துரீயருத்திரராகிய சிவபரம் பொருளுக்கே ரூடியாகவுரியது. வேறு எத்தேவதைகளுக்கும் எஞ்ஞான்றும் உரியதன்று. ஏனெனில், அந்தச்சிவமாகிய பிரமமொன்றே எல்லாக் கடவுளரையும் தமக்கு அங்கமாகக்கொண்டு விளங்கிநிற்கும் பெற்றியையுடையது. ருக், யஜுர், சாமம் என்னும் மூன்று வேதபடிதமாயுள்ள புருஷசூக்தத்திலும் பிரமலக்ஷணம் சர்வபரிபூரணமென்றே கூறியுள்ளது. புருஷன் என்றசொல்லுக்குப் பூரணன் என்றேபொருள் கொள்ளவேண்டுமென்று,

𑌪𑍂𑌰𑍍𑌣𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌪𑍁𑌰𑍁𑌷 𑌇𑌤𑌿𑌹𑌿 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌯𑌤𑍇 ।

பூர்ணத்வாத் புருஷஇதிஹி விக்ஞாயதே।

(இ-ள்) "பூரணனாதலால் புருஷனெனச் சொல்லப்படுகின்றான்" என்று வாதூலமாமுனிவருங் கூறியுள்ளார். ருக்வேதத்திலும் சாமவேதத்திலும் புருஷஸூக்தம் பதினாறுமந்திரங்களாகப் படிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் யஜுர்வேதத்தில் மாத்திரம் இருபத்துநான்கு மந்திரங்கள் இரண்டு அநுவாகப்பகுப்புக்களுடன் விளங்குகின்றன. அம்மந்திரங்கள் யாவும் சிவபாரம்யமாகவே இருக்கின்றது. அவற்றைப் பின் விரிப்பாம். அம்மந்திரங்களைப் பின்பற்றியே தைத்திரீய முதலிய உபநிஷத்துக்களும் அமைந்துள்ளன.

அதர்வணவேத மஹா நாராயணோபநிஷத்.

𑌦𑍇𑌶𑌤𑌃 𑌕𑌾𑌲𑌤𑍋 𑌵𑌸𑍍𑌤𑍁𑌤𑌃 𑌪𑌰𑌿𑌚𑍍𑌛𑍇𑌦𑌰𑌹𑌿𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮
𑌸𑌰𑍍𑌵𑌪𑌰𑌿𑌪𑍂𑌰𑍍𑌣𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 ॥

தேசத: காலதோ வஸ்துத: பரிச்சேதரஹிதம் ப்ரஹ்ம
ஸர்வபரிபூர்ணம் ப்ரஹ்ம॥

(இ-ள்) "தேசம் காலம் வஸ்து என்னும் பாகுபாடு செய்யப்படும் பரிச்சேதங்களில்லாதது பிரமம். ஸர்வபரிபூரணம் பிரமம்." எனவும்,

சுக்லயஜுர்வேத நிராலம்போபநிஷத்.

𑌦𑍇𑌶𑌕𑌾𑌲𑌵𑌸𑍍𑌤𑍁𑌪𑌰𑌿𑌚𑍍𑌛𑍇𑌦𑌰𑌾𑌹𑌿𑌤𑍍𑌯 𑌚𑌿𑌨𑍍𑌮𑌾𑌤𑍍𑌰𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌂 ।

தேசகாலவஸ்து பரிச்சேதராஹித்ய சின்மாத்ரஸ்வரூபம்।

(இ-ள்) "தேசகாலவஸ்து பரிச்சேதங்களில்லாமல் ஞானமய சொரூபமாயுள்ளது (பிரமம்)" எனவும் வரும் வாக்கியங்களால் மூவகை அளவையுங்கடந்து நின்ற பரம்பொருள் எதுவோ அதுவே பிரமம் என வெளியாயிற்று. தேசபரிச்சேதமாவது—இவ்விடத்திலுள்ளது அவ்விடத்திலில்லை யென்னும் முடிபு. காலபரிச்சேதமாவது—இக்காலத்திலுள்ளது அக்காலத்திலில்லை யென்னும் முடிபு. வஸ்துபரிச்சேதமாவது — வியாபகவியாப்பிய அத்துவிதங்கூறுமே இப்பொருள் அப்பொருள் என்னுந் துவிதமுடிவு. (பரிச்சேதம் என்றால் முடிவு என்றர்த்தம்) "𑌸𑌤𑍍𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌨𑌨𑍍𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮-ஸத்யம் ஜ்ஞானமநந்தம் ப்ரஹ்ம" என்னும் தைத்திரீயோபநிஷத் ஆனந்தவல்லியின் வாக்கியத்தி

அன்ன "அநந்தம்" என்னுஞ்சொல்லுக்குப் பரிச்சேதமில்லாதது என்னும் பொருளே சங்கரபாஷ்யத்திலும் விளக்கியுள்ளது. அதர்வசிரோபநிஷத்தும் அனந்தன் என்னுஞ் சொல்லைச் சிவபரமாகவே நிர்ணயஞ்செய்துள்ளது. இத்தகைய கருத்தை மேற்கொண்டே புருஷசப்தத்துக்குரிய பரிபூரணத்வம் சிவபெருமான் ஒருவருக்கேயுரியதென்று அடியிற்குறிக்கும் வேதாந்த வாக்கியங்கள் சகல ஐயங்களும் அற்றொழியும்பொருட்டு எடுத்து முழக்கியுள்ளன.

கிருஷ்ணயஜுர்வேத சுவேதாசுவதரோபநிஷத்

1. 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌪𑌰𑌂 𑌨𑌾𑌪𑌰𑌮𑌸𑍍𑌤𑌿 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌦𑍍
𑌯𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌨𑌾𑌣𑍀𑌯𑍋 𑌨 𑌜𑍍𑌯𑌾𑌯𑍋𑌽𑌸𑍍𑌤𑌿 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 ।
𑌵𑍃𑌕𑍍𑌷 𑌇𑌵 𑌸𑍍𑌤𑌬𑍍𑌧𑍋 𑌦𑌿𑌵𑌿 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍍𑌯𑍇𑌕𑌸𑍍
𑌤𑍇𑌨𑍇𑌦𑌂 𑌪𑍂𑌰𑍍𑌣𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑍇𑌣 𑌸𑌰𑍍𑌵𑌮𑍍 ॥

யஸ்மாத்பரம் நா பரமஸ்திகிஞ்சித்
யஸ்மாந்நாணீயோ நஜ்யாயோஸ்திகச்சித்।
வ்ருக்ஷ இவஸ்தப்தோதிவி திஷ்டத்யேக:
தேநேதம்பூர்ணம் புருஷேணம் ஸர்வம்॥

(இ-ள்) "எவனைப்பார்க்கிலும் மேலானதும் கீழானதும் ஒன்றில்லை. எவனைப்பார்க்கிலும் சிறியதும் பெரியதும் ஒன்றில்லை. எவன் விருக்ஷம்போல அசைவற்றவனாய், ஏகனாய், பரமாகாசத்தில் இருக்கின்றான். அந்தப்புருஷனாலேயே ஈதெல்லாம் (காணப்படும் பிரபஞ்சமெல்லாம்) பூரணமாயது (வியாபிக்கப்பட்டிருக்கின்றது" எனவும்,

2. 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑌨𑌶𑌿𑌰𑍋𑌗𑍍𑌰𑍀𑌵𑌃 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌗𑍁𑌹𑌾𑌶𑌯𑌃 ।
𑌸𑌰𑍍𑌵𑌵𑍍𑌯𑌾𑌪𑍀 𑌸 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌗𑌤𑌃 𑌶𑌿𑌵𑌃 ॥

ஸர்வாநந சிரோக்ரீவஸ் ஸர்வபூத குஹாசய:।
ஸர்வவ்யாபீசபகவாந் தஸ்மாத் ஸர்வகதச்சிவ:॥

(இ-ள்) "எங்கும் முகத்தையுந் தலையையுமுடையவன், எல்லாப்பூதங்களின் உள்ளத்துமுள்ளவன். எல்லாவற்றையும் வியாபித்தவன். பகவானாதலின் எங்கும் நிறைந்தவன் சிவனாம்." (சிவன் பகவானாகவே சிவை "பகவதி" என்னும் நாமம்பெற்றனர். வேறு கடவுளர் சக்திகளுக்கோ அவ்விதச் சிறப்புப்பெயர் கிடையாது). எனவும்,

3. 𑌏𑌕𑍋 𑌦𑍇𑌵𑌃 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌗𑍂𑌢𑌃
𑌸𑌰𑍍𑌵𑌵𑍍𑌯𑌾𑌪𑍀 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌮𑌾 ।
𑌕𑌰𑍍𑌮𑌾𑌧𑍍𑌯𑌕𑍍𑌷𑌃 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌧𑌿𑌵𑌾𑌸𑌃
𑌸𑌾𑌕𑍍𑌷𑍀 𑌚𑍇𑌤𑌾 𑌕𑍇𑌵𑌲𑍋 𑌨𑌿𑌰𑍍𑌗𑍁𑌣𑌶𑍍𑌚 ॥
ஏகோ தேவஸ் ஸர்வ பூதேஷு கூட꞉
ஸர்வ வ்யாபீ ஸர்வபூதாந்தராத்மா ।
கர்மாத்யக்ஷஸ் ஸர்வபூதாதிவாஸ꞉
ஸாக்ஷீ சேதா கேவலோ நிர்குணச்ச ॥

(இ-ள்) "ஒரே தேவன் எல்லாப்பூதங்களிலு மறைந்துள்ளவன். எல்லாவற்றையும் வியாபித்தவன். எல்லாப்பூதங்களுக்கும் அந்தராத்மாவாயுள்ளவன். கர்மங்களுக்கு அதிபதி. சர்வ பூதங்களுக்கும் வாசஸ்தானம். சாக்ஷி. சுத்தஞான சொரூபன். கேவலன். நிர்க்குணன்." இவ்வாக்கியம் (பிரம்மோபநிஷத்திலுமுள்ளது.)" எனவும்,

சுக்லயஜுர்வேத ஈசாவாஸ்யோபநிஷத்.

4. 𑌈𑌶𑌾𑌵𑌾𑌸𑍍𑌯𑌮𑌿𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌯𑌤𑍍𑌕𑌿𑌞𑍍𑌚 𑌜𑌗𑌤𑍍𑌯𑌾𑌂 𑌜𑌗𑌤𑍍 ।
ஈசாவாஸ்யமிதக் ஸர்வம் யக்கிஞ்ச ஜகத்யாம் ஜகத்।

(இ-ள்) "உலகத்தில் எது எது தோன்றுகிறதோ இந்த ஸமஸ்தமான பிரபஞ்சமெல்லாம் ஈசனாலே வியாபிக்கப்பட்டிருக்கின்றது." (இந்த ஈசசபதம் சிவபெருமானுக்கே ரூடியாக வுரியதென்பது வெளிப்படை.) எனவும்,

தைத்திரீயாருணசாகை நாராயணவல்லி

5. 𑌸𑌰𑍍𑌵𑍋 𑌵𑍈 𑌰𑍁𑌦𑍍𑌰𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑍈 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌯 𑌨𑌮𑍋 𑌅𑌸𑍍𑌤𑍁 ।
ஸர்வோவை ருத்ரஸ்தஸ்மை ருத்ராய நமோ அஸ்து।

(இ-ள்) "எல்லாம் உருத்திரரே அத்தகைய உருத்திர மூர்த்திக்கு நமஸ்காரம் ஆகுக." எனவும்,

𑌵𑌿𑌶𑍍𑌵𑌂 𑌭𑍂𑌤𑌂 𑌭𑍁𑌵𑌨𑌂 𑌚𑌿𑌤𑍍𑌰𑌂 𑌬𑌹𑍁𑌧𑌾 𑌜𑌾𑌤𑌂 𑌜𑌾𑌯𑌮𑌾𑌨𑌂 𑌚 𑌯𑌤𑍍 ।
𑌸𑌰𑍍𑌵𑍋 𑌹𑍍𑌯𑍇𑌷 𑌰𑍁𑌦𑍍𑌰𑌃 ॥
விச்வம்பூதம் புவனஞ்சித்ரம் பஹுதாஜாதம் ஜாயமானஞ்சயத்।
ஸர்வோஹ்யேஷருத்ர꞉॥

(இ-ள்) "அனேகமாக ஆனவும், ஆகப்போகின்றனவுமாகிய எல்லா வுலகமும், விசித்ர புவனமுமாகிய இவையெல்லாம் உருத்திரரே." எனவும் வருமாறு காண்க.

இன்னும் இதே கருத்தையுடைய சுருதி வாக்கியங்கள் பலவுள. அவற்றை விரிவஞ்சிவிடுத்தாம். காலதேசவஸ்து பரிச்சேதமில்லாமல் என்றும் ஒரே படித்தாயுள்ள பூரணப் பொருள் பரசிவமேயாதலின் அவரது ஸர்வவியாபகத்துவமும் அந்தர்யாமித்துவமும், (1. அவரது நேத்திரங்களை நித்திய கல்யாணி என்று சுருதிகளால் வந்திக்கப்படும் பிராட்டியார் லீலாமாத்திரமாகத் தங்கரங்களைக்கொண்டு புதைத்த காலத்தும், (2) அவர்ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியாய் யோகிருந்தகாலத்தும், (3) அவர் மதுரையில் பிட்டுக்கு மண்சுமந்து தந்திருமேனியில் பிரம்படிபட்டகாலத்தும், (4) அவர் கிராத வடிவந்தாங்கி அர்ஜுனனுடைய கைவில்லடியைத் தஞ்சரீரத்திற் கொண்டகாலத்தும், ஸ்பஷ்டமாய் வெளிப்பட்டமையே போதுமான நிதரிசனமாம். அன்றியும், அவர் யக்ஷகோலந் தாங்கிவந்து ஒருசிறு துரும்பை அசைக்கும்படி எதிரில்போட்டு இந்திரன், அக்னி, வாயு முதலிய சகல தேவர்களையும் பரீக்ஷித்து அவர்கள் அசைக்கமுடியாமல் வருந்தும்படிச்செய்து "அவனன்றி யோரணுவு மசையாது" என்னும் உண்மையை நிலைநாட்டியதே அவர் உள்ளும் புறமும் விபுவென்பதைக் காட்டிக் கொண்டிருக்கின்றது. இத்தகைய அற்புதச்செயல்களால் சிவனது திருமேனி ஏனையவர்களாயுள்ள சுரர்கள் தேகம் போலாகாது விபுத்வசித்தமாய் அளவிடப்படாததாயுள்ளதென்பது சுருதிகளின் சிறப்புத் தீர்வையாம். இதுநிற்க, மேற்சொன்ன தைத்திரீயாருணசாகை நாராயணம் அர்த்தமாத்திரையின் பொருளாயுள்ளவர் துரீயசிவம் என்றே ஸ்தாபிக்க.

ஸர்வோஹ்யேஷ ருத்ரஸ்தஸ்மை ருத்ராய நமோ நமஃ |
புருஷோ வைருத்ரஸ்ஸன்மஹோ நமோநமஃ |

(இ-ள்) "புருஷனன்றோ ருத்திரன், சத்து, மகான், நமஸ்காரம் நமஸ்காரம்" என்று துரீய ருத்ரமூர்த்தியைப் புருஷசப்தத்தால் புகழ்ந்தது. இவ்வாக்கியத்தில் ஏவகாரப்பொருளைக் குறிக்கும் "அன்றோ" என்னுஞ் சொல்வந்தமையால் பிரமன், விஷ்ணு, உருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளும் இப்புருஷ சப்தப் பொருள் ஆகாரென்றும், இவர்களுக்கு மேலோராயுள்ள சிவபரஞ்சுடரே அச்சொல்லுக்குரியாரென்றும் வலியுறுத்தப்பட்டது. படவே, தன்னிச்சையாலாவது பிறர்சங்கற்பத்தாலா

லாது பிறக்கின்ற அரிபிரமாதி ஏழைத்தேவர்களைப்போல கருக்குழி நாற்றங்கமழப்பெறாது விசுவாதீதராய் மஹரிஷியாய் வந்திக்கப்படும் முழுமுதற் கடவுளெவரோ அவரே சர்வபரிபூர்ணத்வமுடைய பரம புருஷர். அவரே விஷ்ணுவாதி சுரர்களுக்கு எட்டாத ஆண்மைவாய்ந்த புண்ணியமூர்த்தி. திருமால் திருவாய்மலர்ந்தருளிய திவ்விய மான்மியப்பேறுபெற்ற தேஜோமயர். ஆரணமுடிகளாயன்னி அவற்றின் உண்மையை நன்குணர்ந்த நிர்மல யோகிகளது உள்ளத்து என்றும் பிரியாமல் அகோராத்திரம் பிரகாசித்துக்கொண்டிருக்கும் பரமாத்மர். எச்சமயத்தும் வேறு எப்பொருளையும் மறந்தும் உணர்த்தாத திரிலோசனன், உமாசகாயன், உமாபதி, விருபாக்ஷன் என்றற்றொடக்கத்தனவாயுள்ள திவ்விய நாமதேய வைவாவாணி யறையப்பெற்ற சற்காரணவாக்கியங்களின் உட்பொருளா யமைந்த எம்பெருஞ் செல்வர். உலகெலாமீன்ற உமையம்மை என்னும் பிரமவித்யாநாயகியின் உள்ளக் கமலத்தைக் கவரும் உத்தமோத்தமர். எவரும் எவ்விடத்தும் எக்காலத்துங் கண்டு வழிபடுஞ் சம்பிரதாயம்பெற்ற மகத்துவமுடையவர். எங்கும் நிறைந்த ஏகநாயகர். இத்தகைய சிவபரமாத்மாவே பரத்துவத்துக்குரிய கடவுளாதலான், அவரைப் புருஷரென்று பிரணவம் நிரூபித்தது. ஆகையினாலே பிரணவம் சிவவாசகம் என்பதற்கு யாதொரு சந்தேகமுங் கிடையாது. அதைவிட்டு வேறு கூறுவதெல்லாம் கீழ்நிலைக்கண்ணதாமென்றனர்க.

அன்றியும் வேதங்களில் எவ்விடத்தும் புருஷச்சொல்லை அவிரோத புத்திகொண்டும், மதாபிமானம் விட்டும் ஆராயப்புகின் அது சிவபரமாகவே முடியுமென்பது எத்தகையோராலும் மறுக்கப்படாத பரமசித்தாந்தமாம். அது எவ்வாறெனின், தைத்திரீயருணசாகை நாராயணவல்லியில் துரீயருத்திரன், குணருத்திரன், விநாயகன், நந்திகேசுவரன், சுப்பிரமணியன், கருடன்; பிரமன்; நாராயணன், நரசிம்மன், சூரியன், அக்கினி, துர்க்கை ஆகிய இப் பன்னிருவருக்கும் சர்வசித்தியும் தராநின்ற பன்னிரண்டு காயத்ரீ மந்திரங்கள் பிரார்த்தனையின் பொருட்டுக் கூறப்பட்டிருக்கின்றன. அவை வருமாறு.

1. புருஷஸ்ய வித்ம ஸஹஸ்ராக்ஷஸ்ய மஹாதேவஸ்ய தீமஹி ।
தந்நோ ருத்ர꞉ ப்ரசோதயாத் ||

புருஷஸ்யவித்ம ஸஹஸ்ராக்ஷஸ்ய மஹாதேவஸ்யதீமஹி ।
தந்நோருத்ர: ப்ரசோதயாத் ॥

(இ-ள்) "புருஷனை அறிவோம். சகஸ்ராட்சனாகிய மஹாதேவனைத் தியானிப்போம். அந்தத்துரீய ருத்திரமூர்த்தி நம்மை நன்றாகப் பிரேரணை செய்வாராக,"

2. 𑌤𑌤𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌯 𑌵𑌿𑌦𑍍𑌮𑌹𑍇 𑌮𑌹𑌾𑌦𑍇𑌵𑌾𑌯 𑌧𑍀𑌮𑌹𑌿 |
𑌤𑌨𑍍𑌨𑍋 𑌰𑍁𑌦𑍍𑌰𑌃 𑌪𑍍𑌰𑌚𑍋𑌦𑌯𑌾𑌤𑍍 ‖

தத்புருஷாய வித்மஹே மஹாதேவாய தீமஹி ।
தந்நோருத்ர: ப்ரசோதயாத் ॥

(இ-ள்) "அந்தப் புருஷனை அறிவோம். மஹாதேவனைத் தியானிப்போம். அந்தக் குணருத்திரமூர்த்தி நம்மை நன்றாகப் பிரேரணை செய்வாராக."

3. 𑌤𑌤𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌯 𑌵𑌿𑌦𑍍𑌮𑌹𑍇 𑌵𑌕𑍍𑌰𑌤𑍁𑌣𑍍𑌡𑌾𑌯 𑌧𑍀𑌮𑌹𑌿 |
𑌤𑌨𑍍𑌨𑍋 𑌦𑌨𑍍𑌤𑌿𑌃 𑌪𑍍𑌰𑌚𑍋𑌦𑌯𑌾𑌤𑍍 ‖

தத்புருஷாய வித்மஹே வக்ரதுண்டாய தீமஹி ।,
தந்நோதந்தி: ப்ரசோதயாத் ॥

(இ-ள்) "தத்புருஷ சிவனை அறிவோம். வளைந்த துதிக்கையுடைய விநாயகரைத் தியானிப்போம். அந்த யானைமுகமுடைய விநாயகர் நம்மை நன்றாகப் பிரேரணை செய்வாராக."

4. 𑌤𑌤𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌯 𑌵𑌿𑌦𑍍𑌮𑌹𑍇 𑌵𑌕𑍍𑌰𑌤𑍁𑌣𑍍𑌡𑌾𑌯 𑌧𑍀𑌮𑌹𑌿 |
𑌤𑌨𑍍𑌨𑍋 𑌨𑌨𑍍𑌦𑌿𑌃 𑌪𑍍𑌰𑌚𑍋𑌦𑌯𑌾𑌤𑍍 ‖

தத்புருஷாய வித்மஹே சக்ரதுண்டாய தீமஹி ।
தந்நோ நந்தி: ப்ரசோதயாத் ॥

(இ-ள்) "தத்புருஷரூபமானவரை அறிவோம். சக்கரம் போன்ற முகத்தையுடைய நந்திகேசுவரரைத் தியானிப்போம். அந் நந்திகேசுவரர் நம்மை நன்றாகப் பிரேரணை செய்வார்க."

5. 𑌤𑌤𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌯 𑌵𑌿𑌦𑍍𑌮𑌹𑍇 𑌮𑌹𑌾𑌸𑍇𑌨𑌾𑌯 𑌧𑍀𑌮𑌹𑌿 |
𑌤𑌨𑍍𑌨𑌃 𑌷𑌣𑍍𑌮𑍁𑌖𑌃 𑌪𑍍𑌰𑌚𑍋𑌦𑌯𑌾𑌤𑍍 ‖

தத்புருஷாய வித்மஹே மஹாஸேநாய தீமஹி ।
தந்ந: ஷண்முக: ப்ரசோதயாத் ॥

(இ-ள்) "அந்தர்யாமியாய்ச் சகலத்திலும் பூரணமாயுள்ளவரை அறிவோம். பெரிய தேவசேனையையுடைய சுப்பிரமணியரைத் தியானிப்போம். அந்த ஷண்முகர் நம்மை நன்றாகப் பிரேரணை செய்வாராக."

6. 𑌤𑌤𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌯 𑌵𑌿𑌦𑍍𑌮𑌹𑍇 𑌸𑍁𑌵𑌰𑍍𑌣𑌪𑌕𑍍𑌷𑌾𑌯𑌧𑍀𑌮𑌹𑌿 ।
𑌤𑌨𑍍𑌨𑍋 𑌗𑌰𑍁𑌡𑌃 𑌪𑍍𑌰𑌚𑍋𑌦𑌯𑌾𑌤𑍍 ॥

தத்புருஷாய வித்மஹே சுவர்ணபக்ஷாய தீமஹி ।
தந்நோ கருட: ப்ரசோதயாத் ॥

(இ-ள்) "புருஷரூபமானவரை அறிவோம். அழகிய இறக்கைகளை யுடையவரைத் தியானிப்போம். அந்தக் கருடமூர்த்தி நம்மை நன்றாகப் பிரேரணை செய்வாராக."

7. 𑌵𑍇𑌦𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌯 𑌵𑌿𑌦𑍍𑌮𑌹𑍇 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌗𑌰𑍍𑌭𑌾𑌯𑌧𑍀𑌮𑌹𑌿 ।
𑌤𑌨𑍍𑌨𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌪𑍍𑌰𑌚𑍋𑌦𑌯𑌾𑌤𑍍 ॥

வேதாத்மநாய வித்மஹே ஹிரண்ய கர்ப்பாய தீமஹி ।
தந்நோ ப்ரஹ்ம ப்ரசோதயாத் ॥

8. 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌾𑌯 𑌵𑌿𑌦𑍍𑌮𑌹𑍇 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌾𑌯𑌧𑍀𑌮𑌹𑌿 ।
𑌤𑌨𑍍𑌨𑍋 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌪𑍍𑌰𑌚𑍋𑌦𑌯𑌾𑌤𑍍 ॥

நாராயணாய வித்மஹே வாசுதேவாய தீமஹி ।
தந்நோ விஷ்ணு: ப்ரசோதயாத் ॥

9. 𑌵𑌜𑍍𑌰𑌨𑌖𑌾𑌯 𑌵𑌿𑌦𑍍𑌮𑌹𑍇 𑌤𑍀𑌕𑍍𑌷𑍍𑌣𑌦𑌂𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌯𑌧𑍀𑌮𑌹𑌿 ।
𑌤𑌨𑍍𑌨𑍋 𑌨𑌾𑌰𑌸𑌿𑌂𑌹𑌃 𑌪𑍍𑌰𑌚𑍋𑌦𑌯𑌾𑌤𑍍 ॥

வஜ்ரநகாய வித்மஹே தீக்ஷ்ணதம்ஷ்ட்ராய தீமஹி ।
தந்நோ நாரஸிம்ஹ: ப்ரசோதயாத் ॥

10. 𑌭𑌾𑌸𑍍𑌕𑌰𑌾𑌯 𑌵𑌿𑌦𑍍𑌮𑌹𑍇 𑌮𑌹𑌦𑍍𑌯𑍁𑌤𑌿𑌕𑌰𑌾𑌯𑌧𑍀𑌮𑌹𑌿 ।
𑌤𑌨𑍍𑌨𑍋 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑌚𑍋𑌦𑌯𑌾𑌤𑍍 ॥

பாஸ்கராய வித்மஹே மஹத்யுதிகராய தீமஹி ।
தந்நோ ஆதித்ய: ப்ரசோதயாத் ॥

11. 𑌵𑍈𑌶𑍍𑌵𑌾𑌨𑌰𑌾𑌯 𑌵𑌿𑌦𑍍𑌮𑌹𑍇 𑌲𑌾𑌲𑍀𑌲𑌾𑌯𑌧𑍀𑌮𑌹𑌿 ।
𑌤𑌨𑍍𑌨𑍋 𑌅𑌗𑍍𑌨𑌿𑌃 𑌪𑍍𑌰𑌚𑍋𑌦𑌯𑌾𑌤𑍍 ॥

வைச்வாநராய வித்மஹே லாலீலாய தீமஹி।
தந்நோ அக்நி: ப்ரசோதயாத்॥

12. 𑌕𑌾𑌤𑍍𑌯𑌾𑌯𑌨𑌾𑌯 𑌵𑌿𑌦𑍍𑌮𑌹𑍇 𑌕𑌨𑍍𑌯𑌕𑍁𑌮𑌾𑌰𑌿𑌧𑍀𑌮𑌹𑌿 ।
𑌤𑌨𑍍𑌨𑍋 𑌦𑍁𑌰𑍍𑌗𑌿𑌃 𑌪𑍍𑌰𑌚𑍋𑌦𑌯𑌾𑌤𑍍 ॥

காத்யாயநாய வித்மஹே கந்ய குமாரி தீமஹி ।
தந்நோ துர்கி: ப்ரசோதயாத் ॥

இப் பன்னிரண்டு காயத்திரி மந்திரங்களுள் முதல் ஆறு மந்திரங்களே ஈண்டு எடுத்துக்கொண்ட புருஷசப்தவிஷயத்தை

நிரூபணஞ்செய்ய முக்கிய ஆதாரமாயிருத்தலின் அவற்றின் பொருளையே விளக்கி ஏனைய மந்திரங்களின் பொருள்விளக்கம் இங்கு அநாவசியமென்று விட்டனம். இந்த ஆறுமந்திரங்களிற் கூறப்பட்ட தேவதைகளுக்கு மாத்திரம் புருஷசப்தம் விநியோகஞ் செய்யப்பட்டிருக்கின்றதே யன்றி மற்றைய தேவதைகளுக்கு அப்பதப் பிரயோகமே கிடையாது. அதனாலே சிவபிரானொருவருக்கே வேதவழக்கு மந்திரவழக்கு மிருதிபற்றி புருஷச் சொல் ரூடியாக வுரியதென்று பசுமரத் தாணிபறைந்தாலன்ன காட்டப்பட்டது. என்னை! இங்கு குறிக்கப்பட்ட அறுவர்களோடு கருடனும் ஒருங்குசேர்த்துப் படிக்கப்பட்டிருத்தலால் அவனுஞ் சைவனோ வெனில், சைவனாயினுமாகுக. மந்திரகற்பங்களில் அவனுக்கும் முக்கண் முதலிய சிவ சின்னங்கள் கூறியிருத்தலானும், கருடசயனத்தில் இஷ்டிகைரூபனான கருடனைத் தோத்திரஞ்செய்து அவனுடைய சரீரத்தி லமைக்கப்பட்ட மகாக்கினியில் பரசிவ பிரீதியர்த்தமாய்ப் பூரண ஆகுதிசெய்யவேண்டுமென்று விதியிருத்தலானும்; அவனையுஞ் சிவப்பிரசாத மெய்திய உத்தம புருஷனென்று கூறுவதில் எம்மவருக்கு யாதொரு ஆட்சேபணையுங் கிடையாது. அங்ஙனமாயின், கிருஷ்ண யஜுர்வேத நாராயணோபநிஷத்தில்

> 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌹 𑌵𑍈 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑍋 𑌕𑌾𑌮𑌯𑌤
> 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 𑌸𑍃𑌜𑍇𑌯𑍇𑌤𑌿 ।
>
> புருஷோஹவை நாராயணோ காமயத ப்ரஜாஸ் ஸ்ருஜேயேதி ।

(இ-ள்) "புருஷனன்றோ நாராயணன் பிரஜைகளை யுண்டுபண்ணுவேனென்று இச்சித்தான்" என்று வாக்கியமிருத்தலால் புருஷனென்னுஞ் சொல்லுக்கு நாராயணனையும் பொருளாகக் கூறப்படாதோவெனின், கூறப்படாது. அப்பதம் நாராயணன் என்ற சொல்லுக்கு விசேஷணமாய் (அடைமொழியாய்) நின்றதேயன்றி விசேஷ்யமாய் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்விடத்து விசேஷச்சொல் நாராயணனே. அதனால் புருஷச்சொல் சாமான்ய பதமாகவே முடிந்தது. அப்படியன்று, புருஷன் நாராயணன் என்னும் இரண்டு சொற்களையும் ஒரே பொருளைக் குறிக்குஞ் சொற்களாகக்கொண்டால் குற்றம் யாதெனின்; அப்போது அவை கலயம் குடம் என்பதாதி சொற்களைப்போல உத்

தேசியம், விதேயம் ஆகிய விரண்டும் ஒன்றபட்டு வாக்கியமே பொருளற்றதாய் முடிந்துவிடும். அப்படியானால் “𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌵𑍈 𑌰𑍁𑌦𑍍𑌰𑌃—புருஷனன்றோ ருத்திரன்” என்ற வேதவழக்கிலுங்கூட புருஷச்சொல்லை விசேஷணமாகக்கொள்ளுதல் மரபாமேயெனின், அது பொருந்தாது. தைத்திரீயாருணசாகை நாராயணத்தில், “எல்லாமன்றோ ருத்திரன். அந்த ருத்திரமூர்த்திக்கு நமஸ்காரம் ஆகுக” என்று கூறி, அடுத்த வாக்கியத்தில் “புருஷனன்றோ ருத்திரன் சத்து, மகான், நமஸ்காரம், நமஸ்காரம்” என்று ஸ்பஷ்டமாய் நிரூபணஞ் செய்திருக்கின்றமையால் ஸ்ரீ ருத்திரமூர்த்தி யொருவர்க்கே புருஷசசொல் வயிரப்பூச்சாயிற்று. இவ்வாறு சுருதிஸித்தமாயுள்ள உயர்வொப்பற்ற உண்மையை யாதொரு சுருதிப்பிரமாணமுங் காட்டாது புராண வாக்கியங்களைக்கொண்டு சமயாபிமானத்தால் மறைக்கத்துணிதல் ஆதித்தியனை அங்கையால் மறைக்கத்துணிந்தமை போலாம்.

அன்றியும் அடியில் காட்டும் வேறு வைதிகப் பிரயோகங்களையும் நடுநிலை குன்றாது ஆராய்ந்து பார்க்கின் உலகெலாங் கடந்த உண்மைப் பொருளாயும் சர்வலோக சரண்யனாயும் விளங்கும் பசுபதியே புருஷசப்த வாச்சியரென்று ஸ்திரமாயேற்படும். அங்கங்களாறுடன் ஆரணங்களைக் கசடறக்கற்றுணர்ந்த மேதாவியர்களுங்கூட அவ்வாறே அபிப்பிராயப்பட்டுள்ளார்கள். அவ்வைதிக பிரபல வாக்கியங்களுட் சிலவற்றை விவேகிகள் மதுலகையுறுமாறு ஈண்டு எடுத்துக் காட்டுகின்றோம்.

கிருஷ்ண யஜுர்வேத சுவேதாசுவதரோபநிஷத்.

1. 𑌮𑌹𑌾𑌨𑍍𑌪𑍍𑌰𑌭𑍁𑌰𑍍𑌵𑍈 𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌸𑌤𑍍𑌵𑌸𑍍𑌯𑍈𑌷 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌕𑌃।
𑌸𑍁𑌨𑌿𑌰𑍍𑌮𑌲𑌾𑌮𑌿𑌮𑌾𑌂 𑌶𑌾𑌂𑌤𑌿𑌮𑍀𑌶𑌾𑌨𑍋 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌰𑌵𑍍𑌯𑌯𑌃 ॥

மஹான்ப்ரபுர்வை புருஷஸ்ஸத்வஸ்யைஷ ப்ரவர்த்தக: ।
ஸுநிர்மலாமிமாம் சாந்திமீசானோ ஜ்யோதிரவ்யய: ॥

(இ-ள்) “மகானும் பிரபுவாயுமுள்ள புருஷனான இவனே ஸத்துவகுணப் பிரவர்த்தகன். இந்த அவ்யயனும் (திரிகாலங்களாலும் அளவிடப்படாதவன்), சோதிரூபனுமான ஈசானன் முற்றும நிர்மலமான சாந்தியை அளிப்பானாக.” (இவ்வாக்கியத்திலுள்ள மகான், புருஷன், ஈசானன என்னுஞ் சொற்கள் சிவபரமாக விளங்கும் பேராற்றலுடையனவாம்.)

2. 𑌵𑍇𑌦𑌾𑌹𑌮𑍇𑌤𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌮𑌹𑌾𑌨𑍍𑌤𑌮𑍍
𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌵𑌰𑍍𑌣𑌂 𑌤𑌮𑌸𑌃 𑌪𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍 ।
𑌤𑌮𑍇𑌵𑌂 𑌵𑌿𑌦𑌿𑌤𑍍𑌵𑌾𑌤𑌿 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌮𑍇𑌤𑌿
𑌨𑌾𑌨𑍍𑌯𑌃 𑌪𑌨𑍍𑌥𑌾 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇𑌽𑌯𑌨𑌾𑌯 ॥

வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம் ஆதித்யவர்ணம் தமஸ: பரஸ்தாத் ।
தமேவம் விதித்வாதி ம்ருத்யுமேதி நாந்ய: பந்தா வித்யதேயநாய ॥

(இ-ள்) "இந்தப் புருஷனை, மகானை, இருளுக்கு (பிரகிருதிக்கு) அப்பால் ஆதித்தியனைப்போன்ற நிறமுடையவனை யான் (வேதபுருஷன்) அறிவேன். அவனை இவ்வாறறிந்தவர் மிருத்யுவைத் தாண்டுவர். வேறுவழி மோட்சத்துக்கில்லை" (இம் மந்திரம் புருஷசூக்தத்திலுமுண்டு.) வேதபுருஷனே குருவாய் நின்று தனது சுவாநுபவத்தை இவ்வாறு வெளியிட்டாருயின் இதைவிட வேறு சிறந்த உபதேசம் யாதுளது.

3. 𑌸𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌵𑍇𑌦𑍍𑌯𑌂 𑌨 𑌚 𑌤𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑌿 𑌵𑍇𑌤𑍍𑌤𑌾
𑌤𑌮𑌾𑌹𑍁𑌰𑌗𑍍𑌰𑍍𑌯𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌮𑌹𑌾𑌨𑍍𑌤𑌮𑍍 ।

ஸவேத்திவேத்யம் நசதஸ்யாஸ்திவேத்த
தமாஹுரக்ர்யம் புருஷம் மஹாந்தம் ।

(இ-ள்) "அவன் அறியவேண்டிய வெல்லாவற்றையும் அறிவான். அவனை யறிபவன் எவனுமில்லை. அவனையே முதன்மையான புருஷன், மஹான்" என்பர். (புருஷன், மஹான் என்னுந் தனிச் சொற்கள் எஞ்ஞான்றும் சிவபரவாற்றலையே குறிக்குமென்பது ஒருதலை.)

கிருஷ்ண யஜுர்வேத கைவல்யோபநிஷத்.

4. 𑌯𑌯𑌾 𑌚𑌿𑌰𑌾𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑌂 𑌵𑍍𑌯𑌪𑍋𑌹𑍍𑌯
𑌪𑌰𑌾𑌤𑍍𑌪𑌰𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌮𑍁𑌪𑍈𑌤𑌿 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍 ।

யயாசிராத் ஸர்வபாபம் வ்யபோஹ்ய
பராத்பரம் புருஷ முபைதிவித்வாந் ।

(இ-ள்) "எந்தப் பிரமவித்தை வாயிலாக அறிஞன் விரைவிலே சர்வபாபங்களையு மொழித்து நாராயணருக்குப் பரமான புருஷராகிய சிவபெருமானை யடைவன்."

5. 𑌪𑍁𑌰𑌾𑌤𑌨𑍋𑌽𑌹𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌽𑌹𑌮𑍀𑌶𑍋
𑌹𑌿𑌰𑌣𑍍𑌮𑌯𑍋𑌽𑌹𑌂 𑌶𑌿𑌵𑌰𑍂𑌪𑌮𑌸𑍍𑌮𑌿 ।

புராதநோஹம் புருஷோஹமீசோ
ஹிரண்யயோஹம் சிவரூபமஸ்மி ।

(இ-ள்) "பழமையோனும் நானே. புருஷனும் ஈசனும் நானே. பொன்னார்மேனியனும் நானே. சிவரூபனும் நானே."

அதர்வணவேத முண்டகோபநிஷத்.

6. 𑌯𑌦𑌾 𑌪𑌶𑍍𑌯𑌃 𑌪𑌶𑍍𑌯𑌤𑍇 𑌰𑍁𑌕𑍍𑌮𑌵𑌰𑍍𑌣𑌂 𑌕𑌰𑍍𑌤𑌾𑌰𑌮𑍀𑌶𑌂
𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌯𑍋𑌨𑌿𑌂 । 𑌤𑌦𑌾 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍 𑌪𑍁𑌣𑍍𑌯𑌪𑌾𑌪𑍇
𑌵𑌿𑌧𑍂𑌯 𑌨𑌿𑌰𑌞𑍍𑌜𑌨𑌃 𑌪𑌰𑌮𑌂 𑌸𑌾𑌮𑍍𑌯𑌮𑍁𑌪𑍈𑌤𑌿 ॥

யதாபச்ய: பசயதே ருக்மவர்ணம் கர்த்தாரமீசம்
புருஷம் ப்ரஹ்மயோநிம் । ததாவித்வாந் புண்யபாபே
விதூய நிரஞ்சந: பரமம் ஸாம்ய முபைதி ॥

(இ-ள்) "எப்பொழுது பார்ப்பவன் பொன்வண்ணத்தினரும், கர்த்தரும், ஈசரும், புருஷரும், பிரமாவுக்குக் காரணரூபருமா யுள்ளவரைப் பார்க்கின்றானோ அப்பொழுது அவன் ஜீவன் முக்தனாய்ப் புண்ணியபாபத்தை யொழித்துக் களங்கமற்றவனாய்ச் சிவசாமியத்தை அடைகின்றான்." (சாமியப் — சயம்.)

7. 𑌯𑌥𑌾 𑌨𑌦𑍍𑌯𑌃 𑌸𑍍𑌯𑌨𑍍𑌦𑌮𑌾𑌨𑌾𑌃 𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑍇𑌽𑌸𑍍𑌤𑌂 𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑌿
𑌨𑌾𑌮𑌰𑍂𑌪𑍇 𑌵𑌿𑌹𑌾𑌯 । 𑌤𑌥𑌾 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍𑌨𑌾𑌮𑌰𑍂𑌪𑌾𑌦𑍍𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌃
𑌪𑌰𑌾𑌤𑍍𑌪𑌰𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌮𑍁𑌪𑍈𑌤𑌿 𑌦𑌿𑌵𑍍𑌯𑌂 ॥

யதாநத்யஸ்யந்த மாநாஸ்ஸமுத்ரேऽஸ்தம் கச்சந்தி
நாமரூபேவிஹாய । ததாவித்வாந் நாமரூபாத் விமுக்த:
பராத்பரம் புருஷ முபைதி திவ்யம் ॥

(இ-ள்) "எவ்வாறு ஓடுகின்ற நதிகள் சமுத்திரத்தில் பாய்ந்து பெயரும் வடிவும் ஒழிந்து மறைகின்றனவோ, அவ்வாறே ஜீவன் முக்தனும் நாமரூபத்தினின்றும் விடுபட்டுப் பரத்துக்குப் பரமாயிருக்குந் திவ்விய புருஷரை அடைகின்றான்."

8. 𑌸𑍂𑌰𑍍𑌯𑌦𑍍𑌵𑌾𑌰𑍇𑌣 𑌤𑍇 𑌵𑌿𑌰𑌜𑌾𑌃 𑌪𑍍𑌰𑌯𑌾𑌨𑍍𑌤𑌿
𑌯𑌤𑍍𑌰𑌾𑌮𑍃𑌤𑌃 𑌸 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌹𑍍𑌯𑌵𑍍𑌯𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 ।

ஸூர்யத்வாரேணதே விரஜா: ப்ரயாந்தி
யத்ராऽம்ருதஸ்ஸ புருஷோஹ்யவ்யயாத்மா ।

(இ-ள்) "பாபஹீனர்கள் சூரிய தேஜோமார்க்கத்தால் அமிர்தனும், அவ்யயனுமான புருஷன் இருக்குமிடத்தை அடைவார்கள்." (அமிர்தனென்னும் பெயர் சிவபெருமானுக்கே ரூடியாக வுரித்தென்பது, யஜுர்வேத ஜாபாலோபநிஷத்தில் "சதருத்ரீயத்தில் அடங்கிய பெயர்கள் அமிர்தனுடைய நாமதேயங்கள்" என்று யாஜ்ஞவல்கியர் விடையிறுத்ததே போதுமான சான்றாம்).

9. 𑌯𑍇𑌨𑌾𑌕𑍍𑌷𑌰𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌵𑍇𑌦𑌸𑌤𑍍𑌯𑌂
𑌦𑌿𑌵𑍍𑌯𑍋𑌹𑍍𑌯𑌮𑍂𑌰𑍍𑌤𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 ।

ஏக்ஷரம் புருஷம் வேதஸத்யம் திவ்யோஹ்யமூர்த்த: புருஷ:।

(இ-ள்) "எதனால் இந்தச் சத்தியாக்ஷர புருஷனை அறிவான். அவன் பரமாகாசத்துள்ளவன். மூர்த்தமில்லாதவன். புருஷன்."

பிருஹதாரண்ணியகோபநிஷத்-காண்வசாகை.

10. 𑌸 𑌏𑌤𑌸𑍍𑌮𑌾𑌜𑍍𑌜𑍀𑌵𑌘𑌨𑌾𑌤𑍍𑌪𑌰𑌾𑌤𑍍𑌪𑌰𑌂 𑌪𑍁𑌰𑌿𑌶𑌯𑌂
𑌪𑍁𑌰𑍁𑌷𑌮𑍀𑌕𑍍𑌷𑌤𑍇 ॥

ஏதஸ்மாஜ் ஜீவகநாத்பராத்பரம் புரிசயம் புருஷமீக்ஷதே।

(இ-ள்) "இந்தஜீவஸமஷ்டி ரூபனான ஹிரண்யகர்ப்பர் என்னும் பிரமாவினும் பரராயும், உத்கிருஷ்டராயுள்ள நாராயணனினும் உத்கிருஷ்டராயும் தேகமாம்புரியின்கண்ணே அந்தர்யாமியாய்ச் சயனித்துக்கொண்டிருக்கும். புருஷராகிய சிவபெருமானைக் காண்கின்றான்." (இம்மந்திரம் பிரசினோபநிஷத்திலும் உள்ளது.)

11. 𑌯𑍋𑌽𑌯𑌂 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌯𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑍇𑌷𑍁
𑌹𑍃𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑍍𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 ।

யோऽயம் விஞ்ஞானமய: ப்ராணேஷு ஹ்ருத்யந்தர்ஜ்யோதி: புருஷ:।

(இ-ள்) "இவன் விஞ்ஞானமயனாய்ப் பிராணன்களுள்ளே இருதயத்து அந்தர்ஜோதியாயுள்ள புருஷன்."

கிருஷ்ண யஜுர்வேத கடோபநிஷத்

12. 𑌅𑌙𑍍𑌗𑍁𑌷𑍍𑌠𑌮𑌾𑌤𑍍𑌰𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌮𑌧𑍍𑌯 𑌆𑌤𑍍𑌮𑌨𑌿 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 ।
𑌈𑌶𑌾𑌨𑍋 𑌭𑍂𑌤𑌭𑌵𑍍𑌯𑌸𑍍𑌯 𑌨 𑌤𑌤𑍋 𑌵𑌿𑌜𑍁𑌗𑍁𑌪𑍍𑌸𑌤𑍇 ॥

அங்குஷ்டமாத்ர: புருஷோமத்ய ஆத்மநிதிஷ்டதி।
ஈசானோ பூதபவ்யஸ்ய நததோ விஜுகுப்ஸதே ॥

(இ-ள்) "அங்குஷ்ட அளவினராகிய புருஷர் இருதயநடுவில் வீற்றிருப்பர். இவர் இறந்தகால எதிர்காலங்களுக்கும் ஈசானராதலின் எவர்க்கும் அஞ்சுவாரல்லர்."

13. 𑌯 𑌏𑌷 𑌸𑍁𑌪𑍍𑌤𑍇𑌷𑍁 𑌜𑌾𑌗𑌰𑍍𑌤𑌿 𑌕𑌾𑌮𑌂 𑌕𑌾𑌮𑌂
𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌨𑌿𑌰𑍍𑌮𑌿𑌮𑌾𑌣𑌃 ।

யஏஷஸுப்தேஷு ஜாகர்திகாமம் காமம் புருஷோ நிர்மிமாண:।

(இ-ள்) "நித்திரைசெய்பவரில் விழித்துக்கொண்டிருக்கும் அந்தப் புருஷர் அவரவர் கர்மத்துக்கீடாக ஒன்றன்பின்னொன்றாக விநோதக்காட்சிகளை யுண்டுபண்ணுகின்றார்."

அதர்வணவேத பிரசிநோபநிஷத்.

14. 𑌯𑌃 𑌪𑍁𑌨𑌰𑍇𑌤𑌂 𑌤𑍍𑌰𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑍇𑌣𑍋𑌮𑌿𑌤𑍍𑌯𑍇
𑌤𑍇𑌨𑍈𑌵𑌾𑌕𑍍𑌷𑌰𑍇𑌣 𑌪𑌰𑌂𑌪𑍁𑌰𑍁𑌷 𑌮𑌭𑌿𑌧𑍍𑌯𑌾𑌯𑍀𑌤 ।

யஃபுநரேதம் த்ரிமாத்ரேணோமித்யே தேநைவாக்ஷரேண
பரம் புருஷ மபித்யாயீத ।

(இ-ள்) "எவன் இந்தப் பரமபுருஷனை மும்மாத்திரைகளையுடைய "ஓம்" என்னும் பிரணவவாயிலாகத் தியானஞ்செய்வான்."

ருக்வேத புருஷஸூக்தம்.

15. 𑌪𑍁𑌰𑍁𑌷 𑌏𑌵𑍇𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌯𑌦𑍍𑌭𑍂𑌤𑌂 𑌯𑌚𑍍𑌚𑌭𑌵𑍍𑌯𑌂 ।
𑌉𑌤𑌾𑌮𑍃𑌤𑌤𑍍𑌵𑌸𑍍𑌯𑍇𑌶𑌾𑌨𑌃 𑌯𑌦𑌨𑍍𑌨𑍇𑌨𑌾𑌤𑌿𑌰𑍋𑌹𑌤𑌿 ॥

புருஷஏவேதம் ஸர்வம் யத்பூதம் யச்சபவ்யம்।.
உதாம்ருதத்வஸ்யே சாநஃ யதந்நே நாதிரோஹதி ॥

(இ-ள்) "எது சென்றது, எது வருவது, ஈதெல்லாம் புருஷனே: அந்த ஈசானனே அமிருதத்தன்மை என்ற மோக்ஷத்துக்குப் பிரபு. இவன் அன்னத்தால் (போக்கிய வஸ்துக்களால்) மறைக்கப்படுவான்." (இம் மந்திரம் சுவேதாசுவதரோபநிஷத்திலுமுள்ளது.) ஈசானன் என்னும் பெயர் ஜகத்காரண பிரமத்தின் பெயராய் வழங்கும் சிவநாமம். புருஷஸூக்தம் சிவபெருமானையே பிரதிபாதிக்கின்றதென்பது பேரறிவாளர்தீர்வை. இதனைப் பின்னர் தெளிவாக விளக்கிக்காட்டுவோம்,

16. 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌵𑌿𑌰𑌾𑌡𑌜𑌾𑌯𑌤 𑌵𑌿𑌰𑌾𑌜𑍋 𑌅𑌧𑌿𑌪𑍂𑌰𑍁𑌷𑌃 ।

தஸ்மாத்விராடஜாயத விராஜோ அதிபூருஷঃ।

(இ-ள்) "அவரினின்று விராட்டு பிறந்தான். விராட்டுக்கு மேல் புருஷன்."

சுக்லயஜுர்வேத மண்டல பிராம்மணோபநிஷத்.

17. [illegible]
[illegible]
[illegible]

𑌮𑌿𑌤𑌿𑌕𑍇𑌚𑌿𑌤𑍍 । 𑌅𑌙𑍍𑌗𑍁𑌷𑍍𑌠𑌮𑌾𑌤𑍍𑌰𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌽𑌨𑍍𑌤𑌰𑍍𑌲𑌕𑍍𑌷𑍍𑌯
𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌕𑍇 ॥

புத்திகுஹாயாம் ஸர்வாங்க ஸுந்தரம் புருஷரூப மந்தர் லக்ஷ்ய மித்ய பரே । சிரஸோऽந்தர்கதமண்டல மத்யகம் பஞ்சவக்த்ர முமாஸஹாயம் நீல கண்டம் ப்ரசாந்த மந்தர்லக்ஷ்ய மிதிகேசித் । அங்குஷ்டமாத்ர: புருஷோந்தர்லக்ஷ்ய மித்யேகே ॥

(இ-ள்) "புத்திகுகையின் கண்ணே சர்வாங்க சுந்தரமுள்ள புருஷர் அந்தர்லட்சியமென அபரரும், சிரசின் உள்ளிடத்து மண்டலமத்தியில் பஞ்சமுகமும், நீலகண்டமும், மிக்க சாந்தத் தன்மையுமுடைய உமாசகாயர் அந்தர்லட்சியமெனச் சிலரும், அங்குஷ்ட அளவினராயபுருஷர் அந்தர்லட்சியமென ஒரு சிலரும் உரைக்கின்றனர்." (இம்மந்திரத்தில் பஞ்சமுகம் உமாசகாயம், நீலகண்டம் முதலிய அடையாளங்கள் வெளிப்படையாகக் கூறப்பட்டிருத்தலால் பிரணவத்தின் நான்காம் மாத்திரையின் தேவதை சிவபெருமானல்லவென்று மறுக்க யாராலும் முடியாது.) பிரசாந்தம்—அன்பரெவரிடத்து எக்குற்றமிருப்பினும் அவற்றைப் பொறுத்தருளும் பெருந்தன்மை. "வெறுப்பனவே செய்யினுமென் சிறுமையை நின்பெருமையினால், பொறுப்பவனே" என்றார் நம் ஆளுடைய வடிகள்,

தைத்திரீயாருணசாகை நாராயணம்.

18. 𑌋𑌤𑌂 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌪𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌕𑍃𑌷𑍍𑌣𑌪𑌿𑌙𑍍𑌗𑌲𑌮𑍍 ।
𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌰𑍇𑌤𑌂 𑌵𑌿𑌰𑍂𑌪𑌾𑌕𑍍𑌷𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌯 𑌵𑍈 𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃 ॥
ருதம்ஸத்யம் பரம்ப்ரஹ்ம புருஷம் க்ருஷ்ணபிங்கலம் ।
ஊர்த்வரேதம் விருபாக்ஷம் விச்வரூபாயவைநமோநம: ॥

(இ-ள்) "வாக்கினும் மனத்தினும் பேதமின்மையால் ருதமும் சத்தியமும், எல்லாவற்றையுங் கடந்திருத்தலால் பரப்பிரமமும், தகரபுண்டரீகமாகிய புரியின் கண்ணே சயனித்திருத்தலாற் புருஷரும், பிரணவத்தின் வர்ணவ்யத்யயத்தினலெய்திய (அதாவது அகார உகார மகாரம் (அ, உ, ம) என நிற்பது எழுத்துக்கள் மாறுதலால் உமா வெனவாயிற்று.) உமையாம் பராசத்தியோடியைந்திருத்தலாற் கிருஷ்ணபிங்களரும், அக்கினியை வீரியமாக உடைமையால் ஊர்த்துவ வீரியரும், முக்கணுடைமையால் விருபாக்ஷரும், அஷ்டமூர்த்தியா யிருத்தலால் விசுவரூபருமாயுள்ளாருக்கு நமஸ்காரம்." (கிருஷ்ணபிங்களர் - அர்த்தநா

சவரர்.) விசுவரூபம் சிவபெருமானுக்கே சொந்தமென்பது யஜுர்வேத ருத்ரநமகத்தால் எளிதிலுணரக் கிடக்கின்றது.

19. 𑌏𑌷 𑌪𑍁𑌰𑍁𑌷 𑌏𑌷 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌮𑌧𑌿𑌪𑌤𑌿𑌃 ।

ஏஷபுருஷ ஏஷ பூதாநாமதிபதி: ।

(இ-ள்) "இவர் புருஷர். இவர் பூதங்களுக்கு அதிபதி." (பூதங்கள்—சர்வசேதனாசேதனப் பிரபஞ்சங்கள்.)

20. 𑌅𑌙𑍍𑌗𑍁𑌷𑍍𑌠𑌮𑌾𑌤𑍍𑌰𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌽𑌙𑍍𑌗𑍁𑌷𑍍𑌠𑌞𑍍𑌚 𑌸𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌃 ।
𑌈𑌶𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌜𑌗𑌤𑌃 𑌪𑍍𑌰𑌭𑍁𑌃 𑌪𑍍𑌰𑍀𑌣𑌾𑌤𑌿 𑌵𑌿𑌶𑍍𑌵𑌭𑍁𑌕𑍍 ।

அங்குஷ்டமாத்ர: புருஷோங்குஷ்டஞ்ச ஸமாச்ரித: ।
ஈசஸ்ஸர்வஸ்ய ஜகத: ப்ரபு: ப்ரீணாதி விச்வபுக் ॥

(இ-ள்) "அங்குஷ்ட அளவினராகிய புருஷர் அங்குஷ்டத்திலும் ஆச்ரயித்திருக்கின்றார். ஈசரும், சர்வஜகத்துக்கும் பிரபுவும், பிரபஞ்சத்தைக் கவளீகரிப்பவருமாயுள்ள இவர் விருப்பமுறுகின்றனர்." இம்மந்திரத்தில் அங்குஷ்டமென்பது ஜீவாத்மாவாகும். "ஹிருதயம்" எனப்படும் ஸ்தானம் தலைமேல்வைத்த பெருவிரலளவுள்ளதாகையால் அவ்விதய சிதம்பரத்தின் வடிவம் அவ்வளவேயாகும். ஆதாரத்துக்கேற்றபடி அளவு குறிக்கப்பட்டிருக்கின்றது. அவ்வளவில் மூர்த்தங்கொண்டெழுந்தருளி இருப்பவர் சிவபெருமானேயாதலின் அவரை அங்குஷ்ட அளவினையுடைய புருஷரென்று சுருதிபுகழ்ந்தது. சோதிமய சுயம்புலிங்கமும் அதுவே. ஆகையினாலன்றோ, அதே நாராயணம் "சிவாயநம: சிவலிங்காயநம:" என்று துதித்ததோடு திருப்திபடையாமல் "ஆத்மாயநம: ஆத்மலிங்காயநம:" எனவும் பரவி உபசாந்தமடைந்தது. ஆத்மாக்கள் உஜ்ஜீவிக்கும்பொருட்டுப் பகிர்முகசிவாலயங்களிலும் அந்தச் சோதி லிங்காகாரங்களே பிரதிஷ்டிக்கப்பட்டிருக்கின்றன. இதன் விரிவை வந்துழிவந்துழிகாண்க. இத்தகைய வுண்மையினை யுணராப் பேதையர்கள் பழிபாவத்துக்குச் சிறிது மஞ்சாமல் வெவ்வேறுவகையாகப் பிதற்றித் திரிந்து எரிவாய் நரகத்துக் காளாகின்றனர். அந்தோ! வினைகொடிது! கொடிது!! "ஊழிற் பெருவலியாவுள மற்றொன்று சூழினுந் தான் முந்துறும்" என்றார் செந்நாப்புலவர்.

21. [illegible] ।
[illegible] ।

யஏஷோந்தர்ஹ்ருதய தஸ்மிந்நயம் புருஷோ மநோமய: | அம்ருதோ ஹிரண்மய: |

(இ-ள்) "இந்த இருதயத்திற்குள்ளே எந்த ஆகாசம் இருக்கின்றதோ அதனிடத்து ஞானத்தாலறியக்கூடிய புருஷனும், பொன் வண்ணனுமான அமிர்தனுளன்." (பொன்வண்ணன் - சிவபெருமான்.) சாமவேத சாந்தோக்யோபநிஷத்.

22. 𑌯 𑌏𑌷𑍋𑌨𑍍𑌤𑌰𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑍇 𑌹𑌿𑌰𑌣𑍍𑌮𑌯𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌶𑍍𑌮𑌶𑍍𑌰𑍁𑌰𑍍𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌕𑍇𑌶 𑌆𑌪𑍍𑌰𑌣𑌖𑌾𑌤𑍍𑌸𑌰𑍍𑌵 𑌏𑌵 𑌸𑍁𑌵𑌰𑍍𑌣𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌯𑌥𑌾 𑌕𑌪𑍍𑌯𑌾𑌸𑌂 𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌮𑍇𑌵𑌮𑌕𑍍𑌷𑌿𑌣𑍀 ॥

யஏஷோந்தராதித்யே ஹிரண்மய: புருஷோ த்ருச்யதே ஹிரண்யச்மச்ருர்ஹிரண்யகேச ஆப்ரணகாத்ஸர்வ ஏவ ஸுவர்ணஸ்தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகமேவ மக்ஷிணீ ||

(இ-ள்) "பொற்றாடியும், பொற்கேசமும், நக முதலாக முழுதும் பொன்வண்ணமும் (கம் என்னும் நீரைக் கிரகிக்குந் தன்மையால் கபி எனப்படும்) சூரியனால் அலர்த்தப்பட்ட புண்டரீகம்போலும் இருவிழிகளுமுடையவர், இச் சூரியனுக்கு அந்தர்யாமியாயுள்ள ஹிரண்மய புருஷர்." இந்த கூறிப்போந்த ஹிரண்மயம். (பொன்னிறம்) சிவபெருமானுக்கே யுரியதென்று பற்பல சுருதிவாக்கியங்கள் எழுந்து முழங்கி யிருக்கவும், கடல் வண்ணராகிய திருமாலுக்கு அதை யேற்ற முயல்வது அறியாமையாம். ஹிரண்யசப்தம் "𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌪𑌦𑌂 - ரமணீயத்வபர: — விரும்பற்பாலதின்மேற்று" என்று சுருதிப்பிரகாசிகை யுடையாராகிய வைஷ்ணவர் பொருந்தாப் பொருள்கொண்டது கேவலம் அசப்பியம். கௌணார்த்தமாகக்கொண்டால் அவர்கருத்து ஒருவாறு பொருந்தும். ஆழ்வாராதிகளும் விஷ்ணுவினுடைய திருமேனி கடல்வண்ணம், முகில்வண்ணம், காயாம்பூவண்ணம், கருவண்ணம் எனப் புகழ்ந்துள்ளார்கள். சூடிக்கொடுத்த நாச்சியாரும் "பொருத்தமுடைய நம்பியைப் புறம்போலுள்ளங் கரியானை" என்று வாழ்த்தி மகிழ்ந்தனர். பூதநாதனாகிய சிவபெருமான் பொன்வண்ணரா யிருத்தல்பற்றியே தைத்திரீயாருணசாகை நாராயணம்.

𑌨𑌮𑍋 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯 𑌬𑌾𑌹𑌵𑍇 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌵𑌰𑍍𑌣𑌾𑌯 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯
𑌰𑍂𑌪𑌾𑌯 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌪𑌤𑌯𑍇𑌽𑌮𑍍𑌬𑌿𑌕𑌾𑌪𑌤𑌯 𑌉𑌮𑌾𑌪𑌤𑌯 𑌪𑌶𑍁
𑌪𑌤𑌯𑍇 𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃 ॥

நமோ ஹிரண்ய பாஹவே ஹிரண்யவர்ணாய ஹிரண்யரூபாய ஹிரண்ய
பதயேம்பிகாபதய உமாபதயே பசுபதய நமோநம: ॥

(இ-ள்) "பொற்றோளருக்கு, பொன்வண்ணருக்கு, பொன்மேனியருக்கு, பொன்னுக்கிறைவருக்கு, அம்பிகாபதிக்கு, உமாபதிக்கு, பசுபதிக்கு நமஸ்காரம், நமஸ்காரம்" என்று வந்தித்தது. அச் சுருதியின்படியே ஆழ்வாரும் "பொன்றிகழும் மேனிப் புரிசடையம் புண்ணியனும்" என்று துதித்துள்ளார். ஆரிய வேதம் மொழிந்தபடியே தமிழ்வேதமும் "பொன்னார் தரு மேனியனே புரியும், மின்னேர்சடையாய்" எனவும், "பசும்பொன்னி னிறத்தானைப் பானீற்றானை" எனவும், "பொன்னார்மேனியனே புலித்தோலை யரைக்கசைத்து" எனவும், "மின்னொளி கொண்ட பொன்னொளிதிகழ" எனவுங் கூறிப் போந்தன. பொன்னிறம் எப்பொழுதும் சிவபெருமானுடைய சோதிசொரூபத்தினையே விளக்கா நிற்கும். அல்லாமலும் மேலே காட்டிய சாந்தோக்கிய வாக்கியத்தில் இரு புண்டரீகம்போலும் கண்களையுடையவர் என்று மொழிந்திருத்தலால் சிவபெருமானுடைய திரிநேத்திரங்களுள் மூன்றாவது நேத்திரம் முகுளித சுபாவமுடையதாதலின் மலர்ந்த நேத்திரங்களிரண்டே ஆண்டு எடுக்கப்பட்டன. அதனால் அவ்வாக்கியம் சிவபெருமானைக் குறிக்கவில்லையென்று ஆக்ஷேபிக்கிறது கூடாது. மூன்று புதல்வர்களையுடைய பிராமணோத்தமரொருவரைப்பார்த்து அவருடைய இரண்டு புதல்வர்கள் சிவஞானச் செல்வர்களென்றால் மூன்றாவது புதல்வர் அவருக்கில்லையென்று அவ்வாக்கியங் கூறியதாக்கொள்ளுதல் நீதியாமோ. அதுபோல இதுவுமாம். ஆயின் சூரியனுக்குள் ளிருப்பவர் சூரியநாராயணரெனவும் அவரைப் பற்றிச் சந்தியாவந்தன காலங்களில்

𑌧𑍍𑌯𑍇𑌯𑌃 𑌸𑌦𑌾 𑌸𑌵𑌿𑌤𑍃𑌮𑌣𑍍𑌡𑌲𑌮𑌧𑍍𑌯𑌵𑌰𑍍𑌤𑍀
𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌃 𑌸𑌰𑌸𑌿𑌜𑌾𑌸𑌨 𑌸𑌨𑍍𑌨𑌿𑌵𑌿𑌷𑍍𑌟𑌃 ।

த்யேயஸ்ஸதா ஸவித்ரு மண்டலமத்யவர்த்தி
நாராயணஸ்ஸரஸிஜாஸந ஸந்நிவிஷ்ட: ।

(இ-ள்) "சூரியமண்டல மத்தியினராகிய நாராயணர் கமலாசனத்திலிருப்பவராக எந்நாளும் தியானிக்கற்பாலர்." என உலகினர் எப்பொழுதும் படிக்கின்றனரே என்று கூறின், அது சுருதிவசனமல்லவென்பதுதான் உத்தரம். சுருதிவசனத்துக்கு விரோதமாக ஸ்மிருதிகூறுமாயின் அவ் வாக்கியம் பிரபலப் பிரமாணமாக அங்கீகரிக்கப்படுவதின்று. இரண்டு லிங்கங்கள் ஒருங்கு கூறப்படின் விசேஷ லிங்கத்தால் சாமான்யலிங்கம் பாதிக்கப்படுமன்றே. ஆதலால் லௌகிக வசனத்தைக் கௌணமாகவும், அதிபரமாகவும் கொள்ளுதலே நியதம். இந்த முறைமைப்படி ஒன்றுக்கொன்று விரோதம்போலப் பொருள் போதிக்கும் சுருதிஸ்மிருதி வசனங்களை விரோத முறுவண்ணம கூர்த்தமதி கொண்டு ஆராய்ந்தறிதல் இன்றியமையாத கடனும்.

கிருஷ்ண யஜுர்வேத தைத்திரீய சம்ஹிதை.

𑌅𑌸𑍌 𑌯𑍋𑌽𑌵𑌸𑌰𑍍𑌪𑌤𑌿 𑌨𑍀𑌲𑌗𑍍𑌰𑍀𑌵𑍋 𑌵𑌿𑌲𑍋𑌹𑌿𑌤𑌃 |

அஸௌயோऽவஸர்பதி நீலக்ரீவோ விலோஹித: |

(இ-ள்) "(சூரியமண்டலத்துள்ளிருந்து உதயாஸ்தமனஞ் செய்விக்கும் பொருட்டு சிவபிரான்) பிரவிர்த்திக்கின்றனர். இவர் நீலகண்டரும் செந்நிறமு முடையவர்" என்றோதியது. இப் பிரபல பிரமாணப்படி ஹிரண்ணிய ஸ்வரூபரும், திரிலோசனரும், நீலகண்டரும், உமாபதியும், சமஸ்தலோக காமேசுவரரும், சர்வபாபத் தொடக்கில்லாதவரும், பகவானுமாகிய சிவபெருமானே சூரியனுக்குள்ளிருப்பவரும், சாவித்திரியினாற் பிரதிபாதிக்கப்படுபவரும், முமூட்சுக்களால் சேவிக்கப்படும் சேவ்யருமாயுள்ளாரெனச் சித்திக்க யஃதொரு சமுசயமுமின்று. மேலும்,

சுக்ல யஜுர்வேத பிருஹதாரண்யகோபநிஷத்.

𑌯𑌸𑍍𑌯𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌶𑍍𑌶𑌰𑍀𑌰𑌂 𑌯 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌮𑌨𑍍𑌤𑌰𑍋 𑌯𑌮𑌯𑌤𑍍𑌯𑍇𑌷 𑌤
𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌾𑌮𑍍𑌯𑌮𑍃𑌤𑌃 ||

யஸ்யாதித்யச்சரீரம் யஆதித்ய மந்தரோ யமயத்யேஷத
ஆத்மாந்தர்யாம் யம்ருத: |

(இ-ள்) "எவனுக்குச் சூரியன் சரீரம். எவன் சூரியனுக்குள்ளிருந்து அவனை இயக்குகின்றான். அவனே ஆத்மாவின் அந்தர்யாமி. அமிர்தன் (சிவன்)" என்று சாற்றியது. இதனானும் சூரியனும் அதிபொனாத்தேவன் சூரியாந்தர்யாமியாகிய சிவ

பெருமான் என்பது வெளிப்பட்டது. அதனாலே சூரிய உபாசனையும் சிவ உபாசனையேயாம். சூரியனைச் சிவ வுருவெனக் கொண்டு உபாசிப்பவரே விசேஷ பலன் அடைவர். என்னை! உலகத்திலே சூரியநாராயணன் என்னும் நாமம் மிகவும் பிரசித்திபெற்றிருத்தலின் சூரியவழிபாடு விஷ்ணு வழிபாடேயாகும் எனின், அது கூடாது. சூரியநாராயணன் என்னும் பிரயோகத்திலுள்ள நாராயண சப்தவாச்சியன் ஆதித்யமண்டலாபிமானியாகிய சூரியனேயன்றி வைகுண்டவாசனான நாராயணன் அல்லன். இதற்குப் பிரமாணம்.

சுக்லயஜுர்வேதமண்டல·ப்ராஹ்மணோபநிஷத்.

𑌯𑌾𑌜𑍍𑌞𑌵𑌲𑍍𑌕𑍍𑌯𑍋 𑌹 𑌵𑍈 𑌮𑌹𑌾𑌮𑍁𑌨𑌿𑌰𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌲𑍋𑌕𑌂
𑌜𑌗𑌾𑌮 𑌤𑌮𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌂 𑌨𑌤𑍍𑌵𑌾 𑌭𑍋 𑌭𑌗𑌵𑌨𑍍𑌨𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌤𑌤𑍍𑌤𑍍𑌵
𑌮𑌨𑍁𑌬𑍍𑌰𑍂𑌹𑍀𑌤𑌿 𑌸 𑌹𑍋𑌵𑌾𑌚 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌃 ॥

யாஜ்ஞவல்க்யோஹவை மஹாமுநி ராதித்யலோகம்
ஜகாமதமாதித்யம் நத்வாபோ பகவந்நாதித்யாத்மதத்வ
மநுப்ரூஹீதி ஸஹோவாச நாராயண: ||

(இ-ள்) "யாஜ்ஞவல்கிய மகாமுனிவர் ஆதித்தியலோகம் புகுந்தனர். அவ் வாதித்தியனை அவர் வணங்கிப் பகவானே! ஆதித்தியனே! ஆத்மதத்துவத்தைக் கூறுதியென நாராயணன் (சூரியன்) கூறுகின்றனன்" என வருமாறு காண்க. இதனாலே சூரியனும் நாராயணன் என்னும் பெயர்கொண்டு விளங்குகின்றனன் என்பது சுருதிசித்தம்.

இன்னும் மேலே உதாஹரித்த (22) பிரபலசுருதி வாக்கியங்களாலும், இவைபோன்ற ஏனைய அளவிறந்த சுருதிப்பிரமாணங்களாலும் வேதவழக்கு மிகுதி பற்றிப் பிரணவத்தின் இறுதியிலுள்ள நான்காம் மாத்திரையின் தெய்வமாகப் படிக்கப்பட்ட புருஷர் சிவபெருமானென்றே வெள்ளிடைமலைபோல் ஸ்தாபிக்கப்பட்டது. அன்றியும் இச்சிவ பரம்பொருளை வேதம் பலவிடங்களில் "சதுர்த்தம்", "சதுர்த்தம்" என்று துதித்துப் பரத்துவ நிரூபணஞ் செய்துள்ளது., நூற்றெட்டு உபநிஷத்துக்களாலடையப்பெறும் மோக்ஷ சாம்பிராஜ்யத்தைத் தீவிரதரபரிபாகிக்கு உடனே யளிக்கும் பெருஞ்சேமநிதி என்று சுக்லயஜுர்வேத முக்திகோபநிஷத்தால்

𑌮𑌾𑌣𑍍𑌡𑍂𑌕𑍍𑌯𑌮𑍇𑌕𑌮𑍇𑌵𑌾𑌲𑌂 𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷𑍂𑌣𑌾𑌂 𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌯𑍇 ।
மாண்டூக்யமேகமேவாலம் முமுக்ஷூணாம் விமுக்தயே ।

(இ-ள்) "முத்தியில் விருப்பமுடையோருக்கு முத்தியின் பொருட்டு மாண்டூக்யோபநிஷத் ஒன்றே போதும்" எனக் கொண்டாடப்பெற்ற அதர்வணவேத மாண்டூக்யோபநிஷத்.

1. 𑌨𑌾𑌨𑍍𑌤𑌃𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌂 𑌨 𑌬𑌹𑌿𑌷𑍍𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌂 𑌨𑍋𑌭𑌯𑌤𑌃 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌂 𑌨 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌨𑌘𑌨𑌂 𑌨 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌂 𑌨𑌾𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌮𑍍 । 𑌅𑌦𑍃𑌷𑍍𑌟𑌮𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑍍𑌯𑌮𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌮𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌮𑌵𑍍𑌯𑌪𑌦𑍇𑌶𑍍𑌯𑌮𑍇𑌕𑌾𑌤𑍍𑌮𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌸𑌾𑌰𑌂 𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑍋𑌪𑌶𑌮𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑌂 𑌶𑌿𑌵𑌮𑌦𑍍𑌵𑍈𑌤𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑌂 𑌮𑌨𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌸 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌸 𑌵𑌿𑌜𑍍𑌞𑍇𑌯𑌃 ॥

நாந்தஃ ப்ரக்ஞம் நபஹிஷ்ப்ரக்ஞம் நோபயதஃ ப்ரக்ஞம் நப்ரக்ஞானகநம் நப்ரக்ஞம் நாப்ரக்ஞம் । அத்ருஷ்டமவ்யவஹார்ய மக்ராஹ்ய மலக்ஷணமசிந்த மவ்யபதேச்ய மைகாத்ம்ய ப்ரத்யய ஸாரம் ப்ரபஞ்சோபசமம் சாந்தம் சிவ மத்வைதம் சதுர்த்தமந்யந்தே ஸஆத்மா ஸவிக்ஞேயஃ ॥

(இ-ள்) "சொப்பனவஸ்தை இல்லாததும், ஜாக்கிராவஸ்தை யற்றதும், இவ் விரண்டு மில்லாததும்; அஞ்ஞானப் பிரஞ்ஞை யற்றதும், பிராஞ்ஞசொரூபத்தில் வேறானதும், எத்தகையோருக்கும் ஞானத்தை யளிப்பதும், கண் முதலிய இந்திரிய ஞானத்துக்குக் கோசரமாகாததும், வாக்கிந்திரியத்தின் வியாபாரத்துக் கெட்டாததும், பாணிந்திரியத்துக்குப் பிடிபடாததும், அநுமானப் பிரமாணங்களால் அறியப்படாததும், இது என்று சுட்டியுணர்த்த முடியாததும், இப்படிப்பட்டதென்று நிச்சயிக்கப் படாததும், ஞானானந்த சொரூபமுடையதும், எல்லாப் பிரபஞ்சங்களும் ஒடுங்கும் இடமானதும், சாந்தமானதும், இரண்டற்றதுமாயுள்ள சிவபரம்பொருளை நான்காம் மாத்திரையின் தெய்வமாக எண்ணுகிறார்கள். அவனே பரமாத்மா. அவனே அறியத்தக்கவன்" எனவும்,

2. 𑌅𑌮𑌾𑌤𑍍𑌰𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑍋𑌽𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑍋𑌪𑌶𑌮𑌃 𑌶𑌿𑌵𑍋𑌽𑌦𑍍𑌵𑍈𑌤 𑌏𑌵𑌮𑍋𑌙𑍍𑌕𑌾𑌰 𑌆𑌤𑍍𑌮𑍈𑌵 𑌸𑌂𑌵𑌿𑌶𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌽𑌽𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌯 𑌏𑌵𑌂 𑌵𑍇𑌦 𑌯 𑌏𑌵𑌂 𑌵𑍇𑌦 ॥

அமாத்ரஸ்சதுர்த்தோ வ்யவஹார்யஃ ப்ரபஞ்சோபசமச் சிவோத்வைத ஏவ மோங்கார ஆத்மைவ ஸம்விசத்யாத்ம நாத்மாநம் யஏவம் வேத யஏவம் வேத ॥

(இ-ள்) "(மேலே கூறிப்போந்த அகார உகார மகாரங்களென்னும்) மாத்திரையளவுகளில்லாதவனையும், வாக்கு மனங்களுக்கு எட்டாதவனையும், பிரபஞ்சங்களுக்கெல்லாம் லயஸ்தானமானவனையும், இரண்டற்றவனையும் (பிரம, விஷ்ணு, உருத்திரர்களுக்கு அதீதப்பட்ட) நான்காவது தெய்வமாயும், பரமாத்மாவாயுமுள்ள சிவபெருமான் ஓங்காரமேயாகின்றான். அவனை எவன் இப்படி யறிகின்றானோ அவன் அவருடைய அநுக்கிரகத்தினால் அச்சிவ பரமாத்மாவை யடைகின்றான்" எனவும் சாதித்துள்ளது: இந்த ஓங்காரமே ஹிருதய குகையின் கண்ணுள்ள சிதாகாச சொரூபமா யிருக்கின்றதென்று சாமவேத மைத்ராயண்யுபநிஷத்.

த்ர்யக்ஷரா [illegible] ணுபாஜ்ஞேயா நிஹிதம் [illegible]|
த்ர்யக்ஷரம் புர: பஞ்சயாஜ்ஞேயம் நிஹிதம் குஹாயாம்|

(இ-ள்) "மூன்றக்ஷரமுடையதும், ஐந்துவகையா யறிதற்குரியதுமாயுள்ளது இருதயகுகையில் வைக்கப்பட்டுள்ளது." என முடிவுகட்டிடது. இதனால் மறைமுடிவாகிய மாண்டுக்யோபநிஷத்துங்கூட சிதம்பர வித்தையென்று சொல்லப்பட்ட தகரவித்தையையே எடுத்தியம்பிற்றென்பது மறைமுடிவல்லோர் துணிபு.

அன்றியும் அயன் அரி அரன் என்னுந் திரிமூர்த்திகளுக்கு மேலே, நான்காவது தெய்வம் பரப்பிரம சிவபிரானாய் இருத்தலினாலன்றே சுருதியானது சிவம் என்னும் பரம்பொருளைச் சதுர்த்த சப்த வாச்சியப் பொருளாக ஐயமற வெடுத்து விளக்கிற்று. அச்சிவமும் பஞ்சகிருத்யத் தாண்டவஞ்செய்யும்பிரணவாபின்ன நடராஜப்பெருமானே யாவர் என்பதையுமுணர்த்த ஆத்மாக்களுக்கு அநுக்கிரகார்த்தமாயுள்ள மகேசுரமூர்த்தம் இருபத்தைந்தனுள் ([illegible]-சதுர்த்தம் ந்ருத்தரூபகம்) என ஸ்ரீ நடராஜமூர்த்தியை நான்காம் ஸ்தானத்தில் வைத்து வாதுளோத்ர சுத்தாநாக்கியம் இயம்பிற்று, திருத்தாண்டகவேந்தரும் "வெள்ளேறேறும் விகிர்தா போற்றி மேலோர்க்கு மேலோர்க்கு மேலாய் போற்றி" எனவும், "விண்மேலு மேலும் நிமிர்ந்தாய் போற்றி மேலோர்கள் மேலோர்கள் மேலாய் போற்றி" எனவுந் திருவாய்மலர்ந்தருளினர். தாயுமான சுவாமிகளும்,

"இந்த்ராதி தேவதைகள் பிரம்மாதிகடவுளர் இருக்காதி வேதமுனிவர்,
எண்ணரிய கணநாதர் நவநாத சித்தர்கள் இரவிமதியாதியோர்கள்;

கந்தருவர் கின்னரர்கள் மற்றையர்களி யாவரும் கைகுவித்திடுந்தெய்வமே கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு கருணாகரக் கடவுளே'' என்று நான்காவது தெய்வமே பரம்பொருளென்று பரத்துவநிர்ணயஞ் செய்தருளினர். (பிரம்மாதி கடவுளர்-பிரமன், விஷ்ணு, உருத்திரன் முதலியோர்.)

இது இங்ஙனமிருக்க, மண்டூக ருஷியான வருணதேவன் நான்கு வியூகரூபமுடைய நாராயணனைப் பரவிய தோத்திரமே இம் மாண்டூக்கியமென்று பாத்ம புராணத்தை ஆதாரவாகக் கொண்டு ஸ்ரீமத் மத்வாசாரியர் தமது பாஷியத்தில் வரைந்து வைத்தனர். மேற்படி சுருதிவாக்கியங்களில் நான்காவது தெய்வப் பெயர் சிவ சப்தமாயிருத்தலினாலும், விஷ்ணுவினது நாமமெதுவும் சுருதியில் யாண்டும் சதுர்த்த சப்தமாகப் படிக்கப் படாமையாலும் அவ்விஷயம் அஞ்ஞான சந்தேக விபரீதமற ஆராயற்பால தவசியமே, அதர்வணவேத அதர்வசிகோபநிஷத்.

𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑌣𑌾𑌨𑌿 𑌮𑌨𑌸𑌿 𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌪𑍍𑌯 𑌧𑍍𑌯𑌾𑌨𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃। 𑌪𑍍𑌰𑌾𑌣𑌂 𑌮𑌨𑌸𑌿 𑌸𑌹𑌕𑌰𑌣𑍈 𑌸𑍍𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌪𑍍𑌯 𑌧𑍍𑌯𑌾𑌤𑌾 𑌰𑍁𑌦𑍍𑌰𑌃। 𑌪𑍍𑌰𑌾𑌣𑌂 𑌮𑌨𑌸𑌿 𑌸𑌹𑌕𑌰𑌣𑍈𑌰𑍍𑌨𑌾𑌦𑌾𑌨𑍍𑌤𑍇 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌪𑍍𑌯 𑌧𑍍𑌯𑌾𑌯𑍀𑌤𑍇 𑌶𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑌧𑍍𑌯𑌾𑌯𑌿𑌤𑌵𑍍𑌯𑌂 ॥

ஸர்வகரணாநி மனஸி ஸம்ப்ரதிஷ்டாப்ய த்யாநம் விஷ்ணு: । ப்ராணம் மனஸி ஸஹகரணைஸ் ஸம்ப்ரதிஷ்டாப்ய த்யாதா ருத்ர: । ப்ராணம் மனஸி ஸஹகரணைர்நாதாந்தே பரமாத்மநி ஸம்ப்ரதிஷ்டாப்ய த்யாயீதே சாநம் ப்ரத்யாயிதவ்யம் ॥

(இ-ள்) "(எல்லாக்கரணங்களும் மனதில் பிரதிஷ்டிக்கப்பட்டிருத்தலின் அம் மனமாயிருக்கிற விஷ்ணு த்யானம் ஆவன். (அது சொற்பனம் போன்ற யோகாவஸ்தை.) அம்மனம் பிராணனில் பிரதிஷ்டிக்கப்பட்டிருத்தலின் அந்தப் பிராணனாயிருக்கிற உருத்திரன் த்யாதா ஆவன். தியாதா-தியானிப்பேன். (அது சுழுத்தியைப்போன்ற சொரூபமாத்திரையாய் நிற்கும் யோகாவஸ்தை) கரணம், மனம், பிராணன் என்பன நாதத்தின், அந்தமாகிய பரமாத்மாவினிடத்தில் பிரதிஷ்டிக்கப்பட்டிருத்தலின் அப்பரமாத்மாவாய்த் தியானிக்கற்பாலராம் ஈசானரைத் தியானிக்க. மிகுதியுந் தியானிக்க" எனவும், அதர்வணவேத பஸ்மஜாபாலோபநிஷத்.

[illegible] விஷ்ணு ருத்ராதீதா
[illegible] ஶிவா ।
அத்வைதம் சதுர்த்தம் ப்ரஹ்ம விஷ்ணு ருத்ராதீதம்
ஏகமாசாஸ்யம் பகவந்தம் சிவம் ।

(இ-ள்) "இரண்டற்றவரும், சதுர்த்த சப்த வாச்சியரும், பிரம விஷ்ணு ருத்திரர்களைக் கடந்தவரும், உபாசிக்கத்தக்க ஏகரும், ஷாட்குண்ணிய சம்பந்நருமான சிவபெருமான்" எனவும் முழுக்கி நான்காவது தெய்வத்தை வெளிப்படையாய் நிரூபித்தபடியால் இத்திறச் சுருதிவாக்கியங்களுக்கு நேர் விரோதமாய்ப் பாத்மோத்தரம் கூறுமாயின் அப்புராணக் கூற்றின் வன்மை மென்மைகள் எத்திறத்தனவென மேதாவியர்களே அறியற்பாலர். அவ்வக்காலங்களில் அவ்வவ் வாத்மாக்களுடைய பரிபாகத்துக்கேற்ப சிற்சில ஆசிரியன்மார்கள் வெளிப்பட்டுச் சுருதிகளிலுள்ள பொருள்களைச் சமுத்திரகலச நயம்பற்றி ஆண்டாண்டெடுத்துக்கொண்டு திருத்தியும் புதுக்கியும் சமயஸ்தாபனஞ் செய்வார்களாயின் அதுவும் சிவபெருமானது திருவருளேயாகலின் அவர்களைப்பற்றிக் குறைகூற எம்முள்ளந் துணிபவில்லை. ஆனால் அவர்கள் கொள்கை மட்டும் எம் வைதிக சைவத்துக்கு முற்றும் விரோதமாயிருத்தலின்றோ அவற்றை மறுத்தாம். "விரிவிலா வறிவினார்கள் வேறொரு சமயஞ்செய்தே - எரிவினாற் சொன்னாரேனு மெம்பிராற் கேற்றதாகும்" என்னும் நாவுக்கரசரது அமுதவாக்கே இதற்கு நிதரிசனமாம். "பேதவாதப் பிசக்கரைக் காணாகன்வாய்ப் பேசாதப் பேய்களோடே" என்றார் எம் சிவஞானச் செல்வர்.

உபநிஷத்திலகமாகிய மாண்டுக்கிய சுருதிப் பொருள் இவ்வாறிருக்கச் சிவம் என்பதற்கு மங்கள சொரூபனெனவும், சதுர்த்தம் என்பதற்குச் சங்கர்ஷணன், ப்ரத்யும்நன், அநிருத்தன், வியூகவாசுதேவனாகிய துரீயனெனவும் பொருட்படுத்தி இந்நால்வரும் பரவாசுதேவனிடத்திலிருந்து ஆவிர்ப்பவித்து அவனிடத்திலேயே அந்தர்த்தானமாகின்றார்களெனவும், பிரணவத்தின் நான்கு மாத்திரைகள் இந் நான்கு மூர்த்திகளெனவும், இந் நான்கு மாத்திரைகளும் ஒன்றுசேர்ந்த சமஷ்டிப்பிரணவம் ஐந்தாவது மூர்த்தியாகிய பரவாசுதேவனெனவும் பாஞ்சராத்திரத்

தைப் பிரமாணமாகக்கொண்டு பொருந்தாப் பொருள் படுத்தியுள்ளார்கள் விசிஷ்டாத்வைத மதசித்தாந்திகள். இப்பொருள் மேற்படி பஸ்ம ஜாபாலோபநிஷத்துக்கும், வேறு சுருதிவாக்கியங்களுக்கும் முற்றும் முரணாயிருத்தல் காண்க. சிவம் என்னுஞ் சொல்லுக்கு மங்களசொரூபனெனப் பொருள் செய்துவிட்டால் அச்சதுர்த்தசப்தத்துக்குரிய தெய்வம் எப்பெயர்கொண்டு அச்சுருதியின் நிரூபித்துள்ளதென அறிய இடமேயில்லை. உபநிஷத்துக்களில் சதுர்த்தசப்தம் வரும் வாக்கியங்கடோறும் சிவம் என்னும் பெயரேயன்றி வாசுதேவ நாராயணாதி நாமங்களில் யாதொன்றும் வரக் காணப்படவில்லை. சிவன் கிருஷ்ணன் முதலிய சொற்கள் மங்களன் கரியன் என்னும் பொருளையுந் தருமென்று நிகண்டுகளிற் படிக்கப்பட்டிருப்பினும், அதே நிகண்டுகள் பரமசிவனுந் திருமாலும் அவற்றின் பொருள்களென வேறிடங்களில் எடுத்தோதுவதால் மேற்கண்ட நியாயத்தை விசேஷப் பொருள்களைக் குறிக்காத இடங்களிலேயே விநியோகப் படுத்தவேண்டுவது முக்கியம். அங்ஙன மில்வழி சிவன் தேவதை, கிருஷ்ணன் தேவதை என்பனவாதி சுருதி வாக்கியங்களும், ஆன்றோர் வழக்குகளும் அவலமா பொழிந்துபோம். ஆதலால் சிவசப்தத்தின் பொருள் சிவபெருமானென்றறிதலே சுருதியின் சம்மதம். சிவசப்தத்தைக் காதினால் கேட்கவும், வாயினாற் சொல்லவும், உச்சரிப்பவரைக் கண்ணினால் காணவும் உடன்படாதவர்கள் பரத்துவ விஷயத்தில் மட்டும் அதைக் கையாள முயல்வது பொருத்தமாமோ. ஐயகோ! பரிதாபம்!! பரிதாபம்!!! சுருதிகளுக்கு அந்தச் சிவநாமதேய ரத்நரக்ஷாபந்தனம் எத்தகையோராலும் பேதிக்கப்படாத வாய்ப்புடைத்தென்பது சத்தியம். முக்காலுஞ் சத்தியம்.

வேதமாகிய உடலுக்குச் சிவமே உயிரென முன்னமே தெரிவித்துள்ளாம். ‹‹பொமாரூடிவிடெழுமியலி - யோகாத்ருடியலியலி - காரணத்தினும் இடுகுறிலன்மை யுடையது'' என்னும் இலக்கண நியமனப்படி சிவம் என்னுஞ் சொல்லுக்கு மங்களகரனெனப் பொருளுரைத்தலினும் சிவன் (அகண்ட சச்சிதாநந்தகன உமையொரு பாகன்) எனும் இடுகுறிப் பொருளுரைத்தலே நியாயமன்றோ. இதுவே சர்வ வேதாந்தங்களிலுமுள்ள ஸாரபூதமான பிரமேயம். அரிசி என்னுஞ் சொல்லை அமுது என

வும், காஞ்சி என்னும் நகரைப் பெருமாள்கோயில் எனவும், சிதம்பரம் என்னுஞ் க்ஷேத்திரத்தைச் சித்திரகூடம் எனவும், சிவகங்கை என்னும் ஊரைக் குறளிக்குண்டு எனவும் குழூஉக் குறியாகக் கூறித்திரியும் மதாவேசம்பூண்ட வைணவர்களுக்கு இவ்வரிய பெரியஉண்மை எவ்வாறு விளங்குமோ! மதமொழிந்தால் மறைமொழி விளங்கும்.

இத்தகைய சிறப்புப்பொருந்திய சிவன் எனும் நாமம் தனக்கேயுடைய செம்மேனி அம்மானாகிய சிவபரம்பொருளே சர்வபாஷ்யக் கர்த்தாக்களாலும் புகழ்ந்து பேசப்பட்ட தசோபநிஷத்துக்களுக்குள் ஈசாவாசியத்தில் ஈசன், ஆத்மா, அம்ருதம் எனவும், கேநோபநிஷத்தில் உமாதேவியாராலே தமது நாயகரெனச் சுட்டியுணர்த்தப்பட்ட யக்ஷகோலந்தாங்கிய ப்ரஹ்மம் எனவும், கடோபநிஷத்தில் ப்ரஹ்மம், தேவன், விஷ்ணு, ஈசானன் எனவும், பிரச்நோபநிஷத்தில் பரப்ரஹ்மம், பரமாத்மா, புருஷன் எனவும், முண்டகோபநிஷத்தில் புருஷன், அக்ஷரம், அம்ருதம், ஈசன் எனவும், மாண்டூக்யோபநிஷத்தில் ப்ரஹ்மம், சிவம் எனவும், தைத்திரியோபநிஷத்தில் ப்ரஹ்மம் எனவும், ஐதரேயோபநிஷத்தில் ஆத்மா, புருஷன் எனவும், சாந்தோக்யோபநிஷத்தில் ஆகாசம், புருஷன், ப்ரஹ்மம், அம்ருதம் எனவும், பிருஹதாரண்யகோபநிஷத்தில் ப்ரஹ்மம், புருஷன், அம்ருதம், அக்ஷரம், ஈசானன் எனவும் பல திவ்விய திருநாமங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றனர். இந்நாமங்களுள் பொதுப்பெயர்களையெல்லாம் சிறப்புப் பொருளினிடத்து சாமான்ய விசேஷந்யாயத்தால் சேர்ப்பது நியாயம். அப்படியே மீமாம்ஸகரும் ஆறாம் அத்தியாயத்து ஈற்றதிகரணத்தில் “வாமேவா ஏதத்வண ராசு - சாமேகாவா மந்த்ரவர்ணாத் — சாகமன்றோ மந்திரவர்ணத்தால்” என்னுஞ் சூத்திரத்தில் நியமித்துள்ளார்கள். ஆகையினாலே இங்கு காட்டிய பொதுச் சொற்கள் யாவும் சிவன் என்ற விசேஷச் சொல்லினிடத்தே நிலையுறுந்தன ஐயமற வறிக.

அன்றியும் தைத்திரீயாரண்யகத்தில் க்ருஷ்ண பிங்களன், விரூபாக்ஷன், அம்பிகாபதி, உமாபதி, பசுபதி, மஹேச்வரன், மஹாதேவன், ஸதாசிவன் எனவும், கைவல்யோபநிஷத்தில் உமாஸஹாயன், த்ரிலோசனன், நீலகண்டன் எனவும், அதர்வசிரோபநிஷத்தில் ஈசானன், சம்பு, சிவன் எனவும், சுவேதாச்வதரோபநிஷத்தில்

ஹரன், உருத்திரன், சிவன், ஈசானன், மஹாதேவன் எனவும், ந்ருஸிம்ஹதாபநீயோபநிஷத்தில் புருஷன், கிருஷ்ணபிங்களன், விருபாக்ஷன், சங்கரன், நீலலோஹிதன், உமாபதி, பசுபதி, பிநாகி எனவும், யோக தத்வோபநிஷத்தில் முக்கண்ணன், உமைபாகன், வரதன் எனவும், மண்டல ப்ராஹ்மணோபநிஷத்தில் உமாஸஹாயன், நீலகண்டன், ப்ரசாந்தன் எனவும் பல அரிய அற்புதநாமதேயங்களால் போற்றப்பட்டிருக்கின்றனர். இன்னும் அனேக உபநிஷத்துக்களிலும், வேதபாகங்களிலும் இவ்வாறே பரத்துவ நிருபணத்துக் குரிய நற்காரண நாமங்களால் வந்திக்கப்பட்டிருக்கின்றனர். இக்காரண பிரமத்தின் உண்மையோடியைந்த திருமேனியே அருண்மயமாதலின் அது பிராகிருத சரீரத்துக் குரிய பாவம், ஜரை, மரணம், பசி, தாகம், சோகம், அசத்தியகாமம், அசத்தியசங்கற்பம் ஆகிய தோஷங்கள் யாதுமின்றி அபஹதபாப்மத்வாதி குணங்களால் நிறைந்த சித்கனரூபமாய் விளங்குகின்றது. நான்காவது தெய்வத்தைச் சிவம் என்னும் நாமத்தாலே மாண்டூக்கிய சுருதி தனது இருதயத்தில் வைத்துத் துதித்ததற்கும் இதுவே காரணம். இதுவே லீலாமங்கள ரூப சரீரம். விரும்பி யாங்கு கொள்ளப்படும் அருண்மய சரீரமும் இத்தன்மைத்தே.

சாமவேத சாந்தோக்யோபநிஷத்.

𑌏𑌷 𑌆𑌤𑍍𑌮𑌾𑌪𑌹𑌤𑌪𑌾𑌪𑍍𑌮𑌾 𑌵𑌿𑌜𑌰𑍋 𑌵𑌿𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌰𑍍𑌵𑌿𑌶𑍋𑌕𑍋
𑌵𑌿𑌜𑌿𑌘𑌤𑍍𑌸𑍋𑌽𑌪𑌿𑌪𑌾𑌸𑌸𑍍𑌸𑌤𑍍𑌯𑌕𑌾𑌮𑌸𑍍𑌸𑌤𑍍𑌯𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌃 ।

ஏஷ ஆத்மாபஹதபாப்மா விஜரோ விம்ருத்யுர்விசோகோ விஜிகத்ஸோபிபாஸஸ்ஸத்யகாமஸ்ஸத்ய ஸங்கல்ப: ।

(இ-ள்) "இந்தப் பரமாத்மா பாவமில்லாதவர், ஜரையில்லாதவர், மரணமில்லாதவர், சோகமில்லாதவர், பசியில்லாதவர், தாகமில்லாதவர், சத்தியகாமர், சத்திய சங்கற்பர்" என்று துதித்தது. இவ்வெட்டுக்குணங்களையே திருத்தாண்டக வேந்தரும் "எட்டுக்கொலாமவரீறில் பெருங்குணம், எட்டுக்கொலாமவர் சூடுமினமலர்" என வாழ்த்தி மகிழ்ந்தனர். இத்தகைய லீலாமங்கள விக்கிரகமே அளவுக் கடங்கும் பரிச்சேதமாகிய குற்றத்துக்கு உட்படாமல் என்றும் பூரணமும் நித்தியமுமாய் விளங்கிக்கொண்டிருக்கும். ருக்வேதம்.

[illegible]
[illegible]

யும், அவர் தாமசகுணத்தை மேற்கொண்டு சங்காரத் தொழில் செய்பவர் எனவும், அவருக்கு மோட்சமளிக்கும் வன்மை திரிகாலத்து மில்லை எனவும், பிருகு முனிவருடைய பாதத்தால் உதையுண்டபோது அம் முனிவரைக் கோபியாது புகழ்ந்து வணங்கிய சாத்துவிக சர்வேசுவரனை வைகுண்ட நாதனுக்கு அவ் வுருத்திரன் தாழ்ந்தவன் எனவும் பலவாறு நிந்தைசெய்து வாளா நழுவிப்போயினர். அநேகர் போயிக்கொண்டு மிருக்கின்றனர். வேறு சிலர் உண்மையைப் பிரத்தியட்சமா யறிந்தும் தம்மனசாக்ஷி தம்மைப் பிடர்பிடித்துந்துதலால் சைவ சித்தாந்திகள் வணங்குந் தெய்வமாகிய துரீயமூர்த்தி வேறு, குணமூர்த்தி வேறு என்று ஒப்புக்கொண்டும், காரண விஷ்ணு, காரிய விஷ்ணு என்று உறவாடிக்கொண்டும் மதாவேசம்பூண்ட வைஷ்ணவர்களது கோஷ்டியில் கலவாமல் மௌனஞ் சாதிக்கின்றார்கள். மேற்சொன்ன லோகாசாரியர் தம்முடைய விசிஷ்டாத்வைத மதக்கடவுள் திரிமூர்த்திகளுள் ஒருவராயிருத்தலினாலும், நாராயணரை நான்காவது தெய்வமாக சுருதியாண்டும் படிக்காததினாலும், திரிமூர்த்திகளுக்குமேல் துரீயமூர்த்தி யொருவருளரென்று ஒப்புக்கொள்ளும் பட்சத்தில் தம் மதத்தினருக்கு வைஷ்ணவத்திலுள்ள பற்று படிப்படியாகக் குறைந்துபோமென்னும் அச்சத்தினாலோ, அல்லது வேறு எக்காரணத்தினாலோ அறியோம், அவ்வாறு மனசாக்ஷிக்கும் சுருதிகளுக்கும் நேர்விரோதமாக வரைந்து வைத்தனர். சிவத்துவேஷங் காரணமாக வெளிப்பட்ட அவரது ஆபாசஞானம், மறையவர்கள் மறைத்துவைத்த மறைகள் மன்னுலகெங்கும் பரவிவரும் இக்காலத்தில், சுருதிகளைக்கொண்டு போனதிசை பகராமல் ஓட்டெடுக்கும்படிச் செய்து எமது வைதிக சைவ வுண்மையைப் பிரமத்தை இடையறாது சிந்திக்கும் பிரமவாதிகள் கண்டு களிக்குமாறு தெளிவாய் நிரூபிப்பாய்.

திரிமூர்த்திகளிலொருவரான விஷ்ணுமூர்த்தியே வைஷ்ணவ சமயக் கடவுளெனவும், அம்முடிபே ஆழ்வார்களுக்குஞ் சம்மதமெனவும் யாம் கூறியதற்குப் பிரமாணம் வருமாறு.

திருமங்கையாழ்வார் பெரிய திருமொழி.

1. மூவரிலெங்கண்மூர்த்தி யிவனென முனிவரோடு
தேவர் வந்திறைஞ்சு நாங்கூர்த்திருமணிக்கூடத்தானே.

2. மூவரிலொருவனாய வொருவனை யுலகங்கொண்ட-கோவினை.

பொய்கையாழ்வார் இயற்பா.

3. முதலாவார் மூவரே யம்மூவருள்ளும். முதலாவான் மூரிநீர்வண்ணனே

தொண்டரடிப்பொடி யாழ்வார்.

4. தலையறுப்புண்டுஞ் சாவேன் சத்தியங்காண்மினையா
சிலையினாலிலங்கைசெற்ற தேவனே தேவனாவான்.

நம்மாழ்வார் திருவாய்மொழி.

5. மெய்கொள் சோதியோடாயினு மொருமூவராகிய மூர்த்தியே.
6. மூவராகிய மூர்த்தியை முதன்மூவர்க்கு முதல்வன்றன்னை.
7. மூவர் முதல்வனொரு மூவுலகாளி.
8. திருமானான்முகன் செஞ்சடையா னென்றிவர்களெம்
பெருமான் றன்மையை யாரறிகிற்பார்.
9. நன்றெழில் நாரண னான்முக னரனென்னு மிவரை
ஒன்றநும்மனத்து வைத்துள்ளி நும்மிருபசையறுத்து.
10. பிறையேறு சடையானும் நான்முகனு மிந்திரனும்
இறையாத லறிந்தேத்த வீற்றிருத்த லிதுவியப்பே.
11. பேசநின்ற சிவனுக்கும் பிரமன்றனக்கும் பிறர்க்கும்
நாயகனவனே கபால நன்மோக்கத்துக் கண்டுகொண்மின்.
12. மேவித்தொழு பிரமன் சிவனுக்கெல்லாம்
நாவிக்கமல முதற்கிழங்கே உம்பரந்ததுவே.
13. அவாவறச்சூழரியை யயனை யரனையலற்றி
அவாவற்று வீடுபெற்ற குருகூர்ச்சடகோபன்.

ஸாமவேத மஹோபநிஷத்.

14. 𑌏𑌕𑍋 𑌹 𑌵𑍈 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣 𑌆𑌸𑍀𑌤𑍍 𑌨 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌨𑍇𑌶𑌾𑌨𑌃 ।
ஏகோஹவை நாராயண ஆஸீத் நப்ரஹ்மா நேசாந: ।

(இ-ள்) "நாராயணன் ஒருவனன்றே இருந்தான். பிரமனிருந்திலன், ஈசானன் இருந்திலன்."

கிருஷ்ணயஜுர்வேத நாராயணோபநிஷத்.

15. 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌾𑌤𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌜𑌾𑌯𑌤𑍇 ।
𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌾𑌤𑍍 𑌰𑍁𑌦𑍍𑌰𑍋 𑌜𑌾𑌯𑌤𑍇 ।
நாராயணாத் ப்ரஹ்மாஜாயதே । நாராயணாத் ருத்ரோஜாயதே.।

(இ-ள்) "நாராயணனிடத்தினின்று பிரமன் பிறந்தான். நாராயணனிடத்தினின்று உருத்திரன் பிறந்தான்."

இத்யாதிப் பிரமாணங்களானும், மற்றுமுள்ள சுருதிவாக்கி
யங்களானும் விஷ்ணுமூர்த்தி திரிமூர்த்திகளில் ஒருவராகப் படிக்
கப்பட்டிருக்கின்றனரேயன்றி அவர்களுக்கு மேம்பட்ட துரீய
மூர்த்தியாகப் படிக்கப்பட்டிருக்கவில்லை. ஆதனாலே விஷ்ணு
வின் பாரம்யமுழுதும் தம்மினுங் கீழிட்ட பிரமாதிகளிடத்தமை
யுமேயன்றி துரீய மூர்த்தியாகிய சிவத்தினிடத்துஞ் சிறிதும்
அமையாது. அப்படியன்று, ஸ்ரீ வாசுதேவனையே துரீயமூர்த்தி
யாக ஸ்ரீ வைஷ்ணவர்கள் கூறுகின்றாரெனின் அதுவும் பொ
ருத்தமன்று. நான்காவது மூர்த்தியையும் இரண்டாவது மூர்த்தி
யையும் ஒருவரேயென்று சாதித்தல் கேவலம் அஸங்கதம். அது
எஜமானனையும் வேலைக்காரனையுஞ் சமமென்று கூறுதற்கொக்
கும். சுருதிகளிலும் புராணங்களிலும் விஷ்ணுவுக்குக் கூறப்
பட்ட அபகர்ஷங்களனைத்தும் எஜமானனாகிய வாசுதேவனிடஞ்
சாராது அவரையும் அவதிக்குள்ளாக்கிவிடும். நான்காவது
மூர்த்தி வேறு, இரண்டாவதுமூர்த்தி வேறு என்றிபம்பவோ
விசிஷ்டாத்வைதமதம் இடந்தரவில்லை. ஆதலின் வாசுதேவன்
மும்மூர்த்திகளுக்கும் மேற்பட்டவரென்று சொல்ல நியாயமே
இல்லை. திரிமூர்த்திகளில் ஒருவராயுள்ள நாராயணரை மேலான
தெய்வமென்று ஸ்தாபிக்கும் வாக்கியம் ஐந்து இராத்திரியிற்
சொன்ன பாஞ்சராத்திரத்தினன்றி வேதத்தில் யாண்டும் மொழி
யப்பட்டிருக்கவில்லை. ஆகையினாலே விஷ்ணுபரத்துவம் வேதோ
க்தமாகாது. "நாலு வேதங்களிலும் பரமபுருஷார்த்தம் இன்ன
தென்று அகப்படாமல் பின்பு இப்பாஞ்சராத்திரத்தைக் கற்
ருன்" என்று அப்பாஞ்சராத்திரமே கூறுகிறதாக ஸ்ரீ பாஷ்யக்
காரராகிய இராமநுஜர் தமது சூத்ரபாஷ்யத்தில் வரைந்திருந்த
லால் அதற்கு மேலும் வேறு பிரமாணம் வேண்டுமோ. "பாஞ்ச
ராத்திரம்" என்னுஞ் சொல் நாலாயிரப்பிரபந்தத்தில் கூறப்பட்
டிருக்கவில்லை என்பது யாவரு மறிந்தவிஷயம்.

அல்லாமலும், "நாராயணன் ஒருவனன்றே இருந்தனன்.
பிரமன் இருந்திலன். ஈசானன் இருந்திலன்" என்னுஞ் சுருதி
யின் தாற்பரியம் ஸூக்ஷ்ம சிருஷ்டிக்குப் பின்னும், ஸ்தூல சிருஷ்
டிக்கு முன்னமே கொள்ளத்தக்கது. ஏனெனின், திரிமூர்த்திக
ளும் பரப்பிரம சிவபிரானின்றும் தோன்றினதாக வேதமறைக
லால் அப்பிராகிருதமாகிய ஸூக்ஷ்ம சிருஷ்டிக்குக் காரணர்

நாராயணருக்கு அந்நியமாக வேறொரு தேவதை வேண்டப்படுவதவசியம். கிருஷ்ணயஜுர்வேத சுவேதாசுவதரம் "சிவ ஏவ கேவல:" (10-ம் பக்கம் பார்க்க) என்னும் வாக்கியத்தில் இருள் எனப்படும் பிரகிருதிமாத்திரம் உள்ளதென நினைக்கக்கூடிய பிரதமமகா சிருஷ்டிகாலத்தில் அந்தத்தேவதையாகிய சிவபரம்பொருளொன்றே இருந்ததென்று அதற்கு ஸத்பாவங்கூறி ஜகஜ்ஜந்மாதி காரணத்துவத்தை அப்பரம்பொருளுக்கே ஸ்தாபித்தது. மணிவாசகப்பிரானும் "நள்ளிருளில் நட்டம்பயின்றாடு நாதனே" என்றருளிச்செய்தனர். ஆகையினாலே ஸூக்ஷ்மசிருஷ்டி ஸ்தூல சிருஷ்டி ஆகிய இருவகைச் சிருஷ்டிகளுக்குப் பூர்வம் சிவபெருமான் ஒருவரே இருந்தனரென்பது தெள்ளிதிற்றுணியப்பட்டது. படவே, அவரே சர்வ ஸம்ஹாரகாலத்துக்கும் பின்னும் இருந்தனரென்பதற்கும் சுருதிப்பிரமாணம் வருமாறு.

அதர்வணவேத அதர்வசிரோபநிஷத்.

𑌅𑌥 𑌕𑌸𑍍𑌮𑌾𑌦𑍁𑌚𑍍𑌯𑌤 𑌏𑌕𑍋 𑌰𑍁𑌦𑍍𑌰𑌃
𑌏𑌕 𑌏𑌵 𑌰𑍁𑌦𑍍𑌰𑍋 𑌨 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌾𑌯 𑌤𑌸𑍍𑌥𑍇 ।
𑌯 𑌇𑌮𑌾𑌨𑍍 𑌲𑍋𑌕𑌾𑌨𑍀𑌶𑌤 𑌈𑌶𑌨𑍀𑌭𑌿𑌃
𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌙𑍍 𑌜𑌨𑌾𑌸𑍍𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 𑌸𑌂𑌚𑍁𑌕𑍋𑌚𑌾𑌨𑍍𑌤𑌕𑌾𑌲𑍇
𑌸𑌂𑌸𑍃𑌜𑍍𑌯 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾 𑌭𑍁𑌵𑌨𑌾𑌨𑌿 𑌗𑍋𑌪𑍍𑌤𑌾
𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍁𑌚𑍍𑌯𑌤 𑌏𑌕𑍋 𑌰𑍁𑌦𑍍𑌰𑌃 ।

அதகஸ்மா துச்யத ஏகோருத்ர: ஏக ஏவாருத்ரோ நத்விதீயாய தஸ்தே | யஇமாந் லோகாநீசத ஈசநீய: ஜநநீய: ப்ரத்யங் ஜநாஸ்திஷ்டதி ஸஞ்சுகோசாந்தகாலே ஸம்ஸ்ருஜ்ய விச்வா புவநாநி கோப்தா தஸ்மாதுச்யத ஏகோருத்ர: |

(இ-ள்) "இனி எதனால் ஏகருத்திரனெனப்படுகின்றான். ஒருவனே உருத்திரன். இரண்டாமவனில்லை. எவன் இந்த உலகங்களை ஈசனிகளாலும் ஜனனிகளாலும் ஆளுகின்றான். ஜனங்களிடத்துப் பிரத்யக்ரூபனாயுள்ளான். மஹா சம்ஹாரகாலத்தில் எல்லாவற்றையுந் தன்னுள்ளொடுக்கிக்கொள்ளுகிறான். ஸமஸ்தவுலகங்களையுஞ் சேர்த்து ரட்சிக்கின்றான். அதனாலே ஏகருத்திரனெனப்படுகின்றான்" எனவும், (இங்கு ஒருவனேயென்று தேற்றியும் போதாமல் இரண்டாமவனில்லை என்று சொன்னமையால் பிரமலக்ஷணம் குறிப்பிக்கப்பட்டது.) ஏகனென்றும், உருத்திரனென்றும் சிவபெருமானுக்கு வெவ்வேறு நாமங்க

ளிருப்பினும் ஏகருத்திரன் என்பது விசேஷணத்துடன் கூடி இருசொற்களா லமைந்த ஒப்பற்ற சிவநாமம். இம்மந்தி சித்து பேதந்தோன்ற சுவேதாசுவதரோபநிஷத்திலு முன்னா

கிருஷ்ண யஜுர்வேத தக்ஷிணாமூர்த்யுபநிஷத்.

𑌯𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑍋𑌪𑌸𑌂𑌹𑌾𑌰𑌕𑌾𑌲𑍇 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑌾𑌤𑍍𑌮𑌨𑍍𑌯𑍁𑌪𑌸𑌂𑌹𑍃𑌤𑍍𑌯 𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾
𑌨𑌨𑍍𑌦𑍇 𑌸𑍁𑌖𑍇 𑌮𑍋𑌦𑌤𑍇 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌤𑍇 𑌸 𑌦𑍇𑌵𑌃 ।

யஸ்ஸர்வோ ப:மகாலே ஸர்வாநாத்மந் யுபஸம்ஹ்ருத்யஸ்வாத்மா
நந்தே ஸுகே மோததே ப்ரகாசதேவா ஸதேவ: ।

(இ-ள்) "பராந்தகாலத்திலே எல்லாவற்றையும் தம்மு உபசம்ஹாரஞ் செய்து தமது ஆத்மாநந்த சுகத்தில் சந்தோ திருப்பவர் எவரோ அவரே தேவர்" எனவும்,

அதர்வணவேத சரபோபநிஷத்.

𑌯𑍋𑌽𑌨𑍍𑌤𑌕𑌾𑌲𑍇 𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑌾𑌨𑍍 𑌜𑌹𑌾𑌰 𑌸𑍈𑌕𑌃 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌶𑍍𑌚
𑌸𑌰𑍍𑌵𑌶𑌾𑌸𑍍𑌤𑌾 𑌸𑍈𑌵 ।

யோந்தகாலே ஸர்வலோகாந் ஜஹார ஸைக ச்ரேஷ்டச்ச ஸர்வ ச
தாஸைவ ।.

(இ-ள்) "அந்திய காலத்தில் ஸர்வலோகங்களையும் ஸம் ரிப்பவரும், ஏகரும், சிரேஷ்டரும், யாவரையுஞ் சிக்ஷிக்கத் வரும் அவரே" எனவும்,

கிருஷ்ண யஜுர்வேத பஞ்சப்ரஹ்மோபநிஷத்.

𑌪𑌞𑍍𑌚𑌕𑍃𑌤𑍍𑌯𑌨𑌿𑌯𑌨𑍍𑌤𑌾𑌰𑌂 𑌪𑌞𑍍𑌚𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑌕𑌂 𑌬𑍃𑌹𑌤𑍍 ।
𑌪𑌞𑍍𑌚𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍋𑌪𑌸𑌂𑌹𑌾𑌰𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 ।

பஞ்சக்ருத்ய நியந்தாரம் பஞ்சப்ரஹ்மாத்மகம் ப்ருஹத் ।
பஞ்சப்ரஹ்மோப ஸம்ஹாரம் க்ருத்வாஸ்வாத்ம நிஸ்திதம் ॥

(இ-ள்) "சிருஷ்டி முதலிய பஞ்சகிருத்திய நியமனகர் ரும், பெரிய சொரூபமுடையவரும், பஞ்சபிரமங்களாகிய மன் முதலிய பஞ்சகர்த்தாக்களைத் தம்மிடத்தில் உபஸம்ஹா செய்து உறுதியாயிருப்பவருமான பஞ்சபிரம சொரூபர்" வும்,

ஸாமவேத மஹோபநிஷத்.

ப்ரஹ்மா விஷ்ணுச்ச ருத்ரச்ச* (11-ம் பக்கம் பார்க்க) வும் போந்தவா றறிக. அன்றியும் ஸ்ரீ ராமபிரான் இராவண கொல்லக்கருதி, ஸ்ரீ உருத்திரரது மகாகௌரவமுள்ள சம் ரத்தொழிலே மேற்கொண்டு, கோதண்டத்தைத் தாங்கி எ

நின்றபோது இராவணனுடைய கண்களுக்கு அவ்விராமன் மகாப்பிரளயகால உருத்திரனைப்போல் விளங்கியபடியால் அவனைத் திரிமூர்த்திகளுக்கும் மேலானவனென்று அரக்கர் கோன் கூறியதைக் கம்பராமாயணம் “சிவனோ வல்லன் நான்முகனல்லன் திருமாலோ, அவனுமல்லன் மெய்வரமெல்லா மடுகின்றான், தவனோ வென்னிற்செய்து முடிக்குந் தரமல்லன்; இவனேதானவ் வேதமுதற்காரணமானான்” என்று விளக்கி இருப்பதையுமோர்க. தவங்கிடந்து பெறுஞ் சிவாநுக்கிரகமில்லையாயின் அரி பிரம்மாதி அமரர்களுங்கூட அசுரர்களைக் கொல்லமுடியாது. இவ்வரிய பெரியதொழிலைக் கேவலம் தாமசகுணமெனப் பிதற்றித் திரிதல் பண்டையத் தீவினைப்பயனேயாம். சிவன் வரங்கொடுப்பவர் விஷ்ணு அதை யழிப்பவர் என்னும் வெறுங்கூற்று இதனால் கண்டிக்கப்பட்டொழிந்தது.

இத்தகைய அசாதாரண கிருத்தியங்களே பிரமத்துக்குரிய முக்கியலக்ஷணம். அதாவது உலகத்தைச் சிருஷ்டித்தலும், காத்தலும், அழித்தலுமேயாம். துரீய சிவத்துக்கு மேலொரு தெய்வமும், மகாஸம்ஹாரத்துக்கு மேலொரு கிருத்தியமும் இல்லையென்பது இவற்றால் துணியப்பட்டது. அநுக்கிரக கிருத்தியம் என்னும் பாசக்ஷயம் இந்த ஸம்ஹாரத்தில் அடங்கியதாகும். அன்றியும், சாமவேத பைங்களோபநிஷத்தும், சாமவேத சாந்தோக்யோபநிஷத்தும் ‹‹ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத்–ஏகமேவாத்விதீயம்ப்ரஹ்ம” என்று கூறியுள்ளன. இதில “பிரமமொன்றேயுள்ளது இரண்டாவது வஸ்து இல்லை” என்று பெறப்பட்டது. அப்படியே அதர்வ சிரோபநிஷத்தும், சுவேதாச்வதரோபநிஷத்தும் ‹‹ஸைகவாவஸ்தே ருத்ரா நத்விதீயாய தஸ்தே–ஏக ஏவ ருத்ரோ நத்விதீயாயதஸ்து:” என்றோதின. இதில் உருத்திரன் ஒருவனே உளன். இரண்டாமவன் இல்லையென்று ஏற்பட்டது. இவைகளினாலே துரீய ருத்திரனாகிய பிரமத்துக்கு இரண்டாவதாக ஒன்றுமில்லையென்று நிர்ணயிக்கப்பட்டது. இருவித சுருதி வாக்கியங்களினும் ஏவகாரங்களும் அத்விதீய நத்விதீய பதங்களும் இருக்கின்றமையால் இவை ப்ரஹ்மதத்வ நிரூபண சுருதி போதங்களாயின. இந்தச் சுருதிகளோடு “ஏகோஹவை நாராயண ஆஸீத்” என்ற சுருதி இணைப்படாது. இதில் ஏவகாரமும் அத்விதீயபதமும் இல்லாமையால் பரத்துவ நிரூபணத்துக்

ஒருபோதும் ஸாதகமாகமாட்டாது. "நாராயண பரப்ப்ரஹ்ம நாராயணநமோஸ்துதே" என்னும் மஹாநாராயணோபநிஷத்தினும் வேறு உபநிஷத்துக்களிலுமுள்ள நாராயண பரத்துவமும் இம்முடிபிற்றானே அடங்குமென்று தெளிக.

ஸாமவேத மைத்ரேயோபநிஷத்.

𑌏𑌕𑌮𑍇𑌵𑌾𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌂 𑌯𑌦𑍍𑌗𑍁𑌰𑍋𑌰𑍍𑌵𑌾𑌕𑍍𑌯𑍇𑌨 𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌂 । 𑌏𑌤𑌦𑍇𑌕𑌾𑌨𑍍𑌤𑌂 ।

ஏகமேவாத்விதீயம் யத்குரோர்வாக்யேநநிச்சிதம் । ஏததேகாந்தம் ।

(இ-ள்) "குருவாக்கியத்தினாலே அத்விதீயமாயுள்ளபொருள் ஏகமேயென எது நிச்சயிக்கப்பட்டதோ அதுதான் ஏகாந்தம்" என்று அறிவுறுத்தியிருத்தலால் ஏகாந்தஸ்தானத்தில் சுகாசனமிட்டுத் தலையுங்கழுத்தும் உடம்பின்மீது செவ்வே தளராமல் நிறுத்தி, குருவை நமஸ்கரித்து நிஷ்டை கூடுகின்றவர்களுக்கே இவ்வுண்மை அங்கை நெல்லிக்கனிபோல் விளங்காநிற்கும். ஏனையோர்க்கு விளங்குவதரிது. சிவபிரானே ஷை உபநிஷத்தில் "நான் பந்தமோக்ஷமில்லாதவனாயிருக்கிறேன். சுத்தமான பிரமமாயிருக்கிறேன்" என்னும் பொருள்போதர

𑌬𑌦𑍍𑌧𑌮𑍋𑌕𑍍𑌷𑌵𑌿𑌹𑍀𑌨𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌶𑍁𑌦𑍍𑌧𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌸𑍍𑌮𑌿 𑌸𑍋𑌽𑌸𑍍𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ।

பந்தமோக்ஷவிஹீநோஸ்மி சுத்தம் ப்ரஹ்மாஸ்மி ஸோஸ்ம்யஹம்

என்று திருவாய் மலர்ந்தருளியுள்ளார். இதனாலே சிவமும் பிரமும் ஒரே பொருளைக்குறிக்கும் பரியாயப் பெயர்களாம். எல்லாப் பொருள்களுக்கும் பெரிதாயிருத்தலின் சிவம், பிரமமெனப்படுவதாயிற்று. "𑌬𑍃𑌹-ப்ரஹ்ம" என்னும் வடசொல் "𑌬𑍃𑌹-ப்ருஹ்ம" என்னுந் தாதுவினின்றுந் தோன்றியது. அது ப்ருஹத்வமென்னும் மேன்மையையும், ப்ருஹ்மணத்வமென்னும் பெருத்திருக்குந்தன்மையையும் உணர்த்தாநின்றது.

தைத்ரீயோபநிஷத் ஆனந்தவல்லி

𑌸𑌤𑍍𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌨𑌨𑍍𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌯𑍋 𑌵𑍇𑌦 𑌨𑌿𑌹𑌿𑌤𑌂 𑌗𑍁𑌹𑌾𑌯𑌾𑌂 𑌪𑌰𑌮𑍇 𑌵𑍍𑌯𑍋𑌮𑌨𑍍 ।

ஸத்யம் ஜ்ஞானமனந்தம் ப்ரஹ்மயோ வேதநிஹிதம் குஹாயாம் பரமேவ்யோமந் ।

(இ-ள்) "பிரமம் எப்பொழுதும் ஒரே தன்மையாயுள்ளது. அறிவாயுள்ளது. முடிவில்லாதது. இருதய குகையின்கண்

பரமாகாசத்திலுள்ள அதனை எவன் அறிகின்றான்'' என்று விளக்கியது. அன்றியும், பிரமத்துக்குக் கடவுள் என்னும் பெயர் எங்கும் பிரசித்தமாயுள்ளது. கடவு+உள்=கடவுள். உள்ளமே உள் எனப்பட்டது. அதாவது, ஆத்மாவின் உள்ளக் குகையிலிருந்து ஆத்மாவை யியக்குதலால் உயிர்க்குயிராயுள்ள அந்தப்பிரமம் கடவுளெனப்பட்டதென்றறிக. ஸ்ரீமணிவாசகப் பிரானும் "ஆதிப்பிரமம் வெளிப்படுத்த வருளறிவா ரெம்பிரானவாரே'' என்று சிவமே பிரமமென ஓதியருளினர். நம் தாயுமான சுவாமிகளும் "தெரிவதற்கரிய பிரமமேயமல சிற்சுகோதய விலாசமே'' என்றருளிச்செய்தனர். இவை இங்ஙனமிருக்க,

மேலே 77-ம் பக்கத்தில் உதாஹரித்த 15-வது சுருதிவாக்கியத்தில் சொல்லப்பட்ட உருத்திர மூர்த்தியினது பிறப்பு ஒரு கற்பத்தில் பரமசிவ சங்கற்பத்தின்படித் தோன்றிய குணருத்திரரையே பிரதிபாதிக்குமேயன்றி பிரமவிஷ்ணு ருத்ரேந்திரர்களாகிய யாவருக்கும் ஜனகரான துரீய ருத்திரரை ஒருபோதும் பாதிக்கமாட்டாது. அவருக்குப் பிறப்பிறப்பு சுருதிகளில் யாண்டுங் கேட்கப்பட்டிருக்கவில்லை. பண்டும் இன்றும் என்றுமுள்ள பரம்பொருள் அதுவேயாம். பிரம ருத்திரர்களுக்கு ஜனகர் நாராயணரென்று இந்தச் சுருதி கூறியபடியே,

அதர்வணவேத சரபோபநிஷத்

(1) 𑌯𑌸𑍍𑌯𑌾𑌙𑍍𑌕𑌜𑍋𑌹𑌂 𑌹𑌰𑌿𑌰𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑍁𑌖𑍍𑌯𑌾 ।
(2) 𑌮𑌮𑌾𑌪𑌿 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌰𑍍𑌜𑌨𑌕𑌂 𑌦𑍇𑌵𑌮𑍀𑌡𑍍𑌯𑌂 ।

(1) யஸ்யாங்கஜோஹம் ஹரிரிந்த்ர முக்யா ।
(2) மமாபி விஷ்ணோர் ஜநகம் தேவ மீட்யம் ।

(இ-ள்) (1) "(பிரமனாகிய) நானும், விஷ்ணுவும், இந்திரனும் பிறக்க உற்பத்திலயஸ்தானமானவர்'' (2) "(பிரமனாகிய) எனக்கும், விஷ்ணுவுக்கும் ஜனகரும் புகழத்தக்க தேவருமாயிருப்பவர்'' என்று கூறியுள்ளது. இதனாலே பிரம விஷ்ணுக்களுக்கு ஜனகர் உருத்திரமூர்த்தியென்றும் ஸ்பஷ்டமாய்த்தெரிகின்றது. இப்பிரமாணங்களால் விஷ்ணுவினிடம் உருத்திரர் தோன்றுவதும், உருத்திரரிடம் விஷ்ணு பிறப்பதும், அவ்விருவரிடத்தும் பிரமன் உதிப்பதும், அவனிடத்தில் அவ்விருவர் தோன்றுவதும் கற்பபேதத்தாலென்றே அறியத்தக்கது. ஆகையினாலே அவர்

லொருவருங் காரணராகார். அம் மூவரையுந் தோற்றுவிக்கும் சம்புவாகிய நான்காவது தெய்வமே (துரீயசிவமே) பரமகாரணராவர். அவரைப் பிறப்பித்தவர் நாராயணரென்று ஒருவசனம் சுருதியில் வெளிப்படுமாயின் அப்பொழுது பரமசிவத்துக்கு நாயகன் ஸ்ரீமந்நாராயணனென்று சைவர்கள் ஒப்புக்கொள்ள யாதொரு சமுசயமுமின்று, அப்படிக்கின்றி மதாபிமானத்தால் ஆசாரியவார்த்தைக்குப் பத்தை கட்டிப் பிடிவாதமாய்ப் பேசுவது அந்ஞர் ஸதஸில் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. நித்தியத்வங் கெட்கப்போய் நித்ரைத்வங் கேட்டுப் பெற்றதைப் பெகிகார்க்கும், இவ்வரிய உண்மைகளைப் புலன்கொள உணரமாட்டாரனைவரும் தத்தமக்கேற்றவாறெல்லாஞ் சாற்றுவர். அவை அங்கீகரிக்கப்படுவனவல்ல. துரீய பரசிவமே திரிமூர்த்திகளுந் தொழுந் தெய்வமென்பது வஜ்ஜிரலேபமாக நாட்டப்பட்டது. ஆண்டானை அடிமையாகவும், அடிமையை ஆண்டானாகவுங் கருதல் மாபாதகமாகும். "கனியிருக்கக் காய்கவர்ந்த கள்வனேனே." "கரும்பிருக்க இரும்புகடித் தெய்த்தவாறே." "பனிநீராற் பாவைசெயப் பாவித்தேனே." "விளக்கிருக்க மின்மினித் தீக்காய்ந்தவாறே." என்னுந் தித்திக்கும் அப்பர்வாக்கியங்களை உளத்திற்கொண்டு உய்வது கடனும்.

மேலும் அக்கினி தத்வாதிஷ்டான தெய்வமாகிய ருத்திரரைப் பிரம விஷ்ணுக்களுக்குத் தாழ்ந்தவரென்று கூறுதலுங் குற்றமாகும். பிருதிவியிலாவது அப்புவிலாவது அக்கினி பிறக்குமாயின் பிரமனிடத்திலாவது விஷ்ணுவினிடத்திலாவது இவ்வுருத்திரர் பிறந்தாரென்பது பொருந்தும். அப்படிக் கூறத் தத்துவ சாஸ்திரம் இடங்கொடாமையானும், "[illegible] - ஆகாசாத்வாயுர்வாயோரக்நிரக்நேராப அத்ப்ய: ப்ருதிவீ" (இதன் பொருள் வெளிப்படை) என்று தைத்திரீயோபநிஷத்தும் ஸுபாலோபநிஷத்தும் பூதோற்பத்தியைப் புகன்றபடி ஜலத்திற்கு அதிதேவதையாயுள்ள நாராயணர் அக்கினிக்கு அதிதேவதையாயிருக்கிற உருத்திரமூர்த்திக்குத் தாழ்ந்தவராகாமை யானும், பூதலயக்கிரமத்தில் உருத்திரரது ஸம்ஹாரத்தில் நாராயணர் லயமாகின்றமையானும். இவ்விதப் பூதக்கிரமம் பிறழாதிருக்கவே "பிரம விஷ்ணு ருத்ர" என்னும் பிரயோகம் வேதங்களில் பலவிடங்களிலும்

படிக்கப்பட்டிருக்கின்றமையானும் குணருத்திரருக்கு ஜனகர் பிரம விஷ்ணுக்களல்லரென் றறிவாயாக. விஷ்ணுநாமம் பெரும் பான்மையும் உருத்திர சப்தத்துக்குக் கீழே படிக்கப்பட்டிருப்பதற்குங் காரணமிதுவே. “𑌅𑌨𑍍𑌤𑌰𑍍𑌬𑌹𑌿𑌶𑍍𑌚 𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌂 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌯 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌸𑍍𑌥𑌿𑌤𑌃-அந்தர்பஹிச்ச தத்ஸர்வம் வ்யாப்யநாயண ஸ்தித:-உள்ளும் புறமும் அதனையெல்லாம் வியாபித்து நின்றவன் நாராயணன்” என்னுந் தைத்திரீய சுருதிகூறிய வுண்மையின் சர்வ வியாபகத்துவம் பிரகிருதியின்பாற் படுமேயன்றி அதன்மேற் செல்லாதென்றோர்க.

இனி திரிமூர்த்திகளுக்கும் அப்பாற்பட்ட துரியமூர்த்தியே சைவசமயக் கடவுளெனவும், அம்முடிபே தேவார திருவாசகங்களிலும், சைவபுராணங்களிலும், முக்கியோபநிஷத்துக்களிலும் கூறப்பட்டிருக்கின்றன வெனவும் யாம் முடிவு கட்டியதற்குப் பிரமாணம் வருமாறு:—

திருவாசகம்.

1. மூவரென்றே யெம்பிரானொடு மெண்ணி விண்ணாண்டுமண்மேற்
தேவரென்றே யிறுமாந்தென்ன பாவந்திரிதவரே.

2. தேவர்கோ வறியாத தேவதேவன்
செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்குமற்றை
மூவர்கோ னாய்நின்ற முதல்வன் மூர்த்தி
மூதாதை மாதாளும் பாகத்தெந்தை.

3. முன்னானை மூவர்க்கு முற்றுமாய் முற்றுக்கும்
பின்னானைப் பிஞ்ஞகனைப் பேணு பெருந்துறையின்.

4. முந்து நடுவு முடிவு மாகிய மூவரறியாச்
சிந்துரச் சேவடி யானைச் சேவகனை வரக்கூவாய்.

5. முந்திய முதனடு விறுதியுமானாய், மூவருமறிகிலரியாவர் மற்றறிவார்

6. முழுமுதலேயைம்புலனுக்கு மூவர்க்கு மென்றனக்கும்-வழிமுதலே.

7. தேவதேவன் மெய்ச்சேவகன் றென்பெருந்துறை நாயகன்
மூவராலு மறியொணா முதலாய வானந்த மூர்த்தியான்.

8. மூவருமுப்பத்து மூவருமற்றொழிந்த தேவருங் காணாச்சிவபெருமான்

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் தேவாரம்.

9. தேவராயு மசுரராயுஞ் சித்தர்செழு மறைசேர்
நாவராயு நண்ணுபாரும் விண்ணெரி காலீரு

மேவராய விரைமலரோன் செங்கண்மாலீசனென்னு
மூவராய முதலொருவன் மேயதுமுதுகுன்றே.

10. வரியாய மலரானும் வையந்தன்னை -புரிதாயளந்தானு முள்ளுதற்க-
கரியானுமறியாத கள்ளின்மேயான்-பெரியானென்றறிவார்கள் பேசு
வாரே.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்.

11. மாவையுரித்ததள் கொண்டங்க மணிந்தவனை வஞ்சர் மனத்திறையு
நெஞ்சணுகாதவனை-மூவருருத்தனதா மூலமுதற்கருவை.

திருமூலர் திருமந்திரம்.

12. அவனன்றி மூவராலாவதொன்றில்லை-அவனன்றியூர்புகுமாறறியேனே

பொன்வண்ணத்தந்தாதி.

13. வீரனயனரி—யாருமறியாவகை யெங்களீசர் பரிசகளே.

பெரியபுராணம்.

14. மூவருக் கறிவரும் பொருளாகிய மூலத்
தேவர்தந் திருவாவடு துறைத் திருத்தொண்டர்
பூவலம்புதண் பொருபுனற் றடம்பணை புகலிக்
காவலர்க் கெதிர்கொள்ளு மாதரவுடன் கலந்தார்.

திருவிளையாடற்புராணம்.

15. முத்தொழிலின் மூவராய் மூவர்க்குந்தெரியாத முக்கண்மூர்த்தி.

16. மலர்மகனாகி மூன்று வையமும் படைத்து மாலாய்
நிலைபெற நிறுத்தி முக்கணாதியா யழித்தம் மூவர்
தலைவனாய்ப் பரமாகாச சரீரியாய் முதலீறின்றி
தொலைவரும் சோதியா மிச் சுந்தர லிங்கந்தன்னில்.

17. சச்சிதானந்தமா மத்தனிப்பரசிவனே தன்ன
திச்சையாலகில மெல்லாம் படைத்தளித்தீறுசெய்யும்
விச்சைவானவரைத் தந்த மேலவான் பிறவித்துன்பத்
தச்சமுற்றிடுவோர்க்காறு வின்பவீடளிக்கு மன்னோன்.

திருவெண்காட்டடிகள்.

18. விதியார்படைப்பு மரியாரளிப்பும் வியன்கயிலைப்
பதியார் துடைப்பும் நம்பாலணுகாது.

திருவருணைக்கலம்பகம்.

19. அருணைவித்தகனை மூவரிலொருத்தனென வோதியிடு மற்பமதியீர்.

சூதசம்ஹிதை.

20. மூவருமறியா முதல்வனுமிறைவன் மூர்த்தியாய் முழுந்திய வருளாற்
காவியங்கண்ணி பங்கனாய் வந்து தோன்றினன் கண்ணினாற்காண.

21. முத்தேவருக்கு மருள் புரியு முதல்வனியே மற்றுமுள்
எத்தேவருக்கும் வரங்கொடுக்கு மிறைவனீயே.

அதர்வணவேத அதர்வசிரோபநிஷத்.

1 𑌸𑌰𑍍𑌵𑌮𑌿𑌦𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑍁𑌦𑍍𑌰𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌸𑍍𑌤𑍇 𑌸𑌂𑌪𑍍𑌰𑌸𑍂𑌯𑌨𑍍𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌚𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌸𑌹𑌭𑍂𑌤𑍈𑌰𑍍𑌨𑌕𑌾𑌰𑌣𑌂 𑌕𑌾𑌰𑌣𑌾𑌨𑌾𑌂 𑌧𑍍𑌯𑌾𑌤𑌾 𑌕𑌾𑌰𑌣𑌂 𑌧𑍍𑌯𑍇𑌯𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑌶𑍍𑌶𑌂𑌭𑍁𑌰𑌾𑌕𑌾𑌶 𑌮𑌧𑍍𑌯𑍇.

ஸர்வமிதம் ப்ரஹ்ம விஷ்ணு ருத்ரேந்த்ராஸ்தே ஸம்ப்ரஸூயந்தே ஸர்வாணி சேந்த்ரியாணி ஸஹபூதைர்நகாரணம் காரணாநாம் த்யாதா காரணந் த்யேயஸ் ஸர்வைச்வர்ய ஸம்பந்நஸ் ஸர்வேச்வரச் சம்புராகாச மத்யே.

(இ-ள்) "பிரமன், விஷ்ணு, உருத்திரன், இந்திரனாகிய இவர்களெல்லாம் படைக்கப்படுகின்றனர். இந்திரியங்களெல்லாம் பூதங்களோடு பிறப்பிக்கப்படுகின்றன. (ஆதலின்) அவர்களும் அவைகளும் காரணங்களாகா. தியாதாக்களாகிய அவ்வவாந்தர காரணர்களாலே தியானிக்கப்படும் பொருளாகிய(பரம) காரணனன்றோ த்யேயன். ஸர்வைசுவரியங்களுமுடைய ஸம்பந்நன். ஸர்வேசுவரன். சம்பு. பரமாகாசமத்தியி லிருப்பவன்."

2. ப்ரதமா ரக்தா பீதா மஹத்ப்ரஹ்ம—(47-ம் பக்கம் பார்க்க.)

கிருஷ்ணயஜுர்வேத கைவல்யோபநிஷத்.

3. 𑌉𑌮𑌾𑌸𑌹𑌾𑌯𑌂 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌂 𑌪𑍍𑌰𑌭𑍁𑌂 𑌤𑍍𑌰𑌿𑌲𑍋𑌚𑌨𑌂 𑌨𑍀𑌲𑌕𑌣𑍍𑌠𑌂 𑌪𑍍𑌰𑌶𑌾𑌨𑍍𑌤𑌮𑍍 । 𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑌾 𑌮𑍁𑌨𑌿𑌰𑍍𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 𑌭𑍂𑌤𑌯𑍋𑌨𑌿𑌂 𑌸𑌮𑌸𑍍𑌤𑌸𑌾𑌕𑍍𑌷𑌿𑌂 𑌤𑌮𑌸𑌃 𑌪𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍 ॥ 𑌸𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌸𑌶𑌿𑌵𑌸𑍍𑌸𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍍𑌸𑍋𑌕𑍍𑌷𑌰𑌃 𑌪𑌰𑌮𑌸𑍍𑌸𑍍𑌵𑌰𑌾𑌟𑍍 । 𑌸𑌏𑌵 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃.

உமாஸஹாயம் பரமேச்வரம் ப்ரபும் த்ரிலோசநம் நீலகண்டம் ப்ரசாந்தம் । த்யாத்வாமுநிர்கச்சதி பூதயோநிம் ஸமஸ்த ஸாக்ஷிம் தமஸ: பரஸ்தாத் ॥ ஸப்ரஹ்மா ஸசிவஸ் ஸேந்த்ரஸ் ஸோக்ஷர: பரமஸ்வராட் । ஸஏவ விஷ்ணு:.

(இ-ள்) "உமாசகாயரும், பரமேசுவரரும், பிரபுவும், முக்கண்ணரும், நீலகண்டரும், பரமசாந்தரும், பூதகாரணரும்; சமஸ்த சாக்ஷியுமாயுள்ளவரைத் தியானித்து அதனால் துறவியானவன் பிரகிருதிக்கு அப்பாற் செல்வான். அவரே பிரமன். அவரே சிவன் (குணருத்ரன்). அவரே இந்திரன். அவரே அக்ஷரன்.

அவரே பரமன். அவரே ஸ்வராட் (சொப்பிரகாசன்). அவரே விஷ்ணு."

அதர்வணவேத நாரத பரிவிராஜகோபநிஷத்.

4. கவிம் [illegible] |
[illegible] |
பரிவா[illegible] |

— கவிம் புராணம் புருஷோத்தமோத்தமம் ஸர்வேச்வரம் ஸர்வதேவைருபாஸ்யம் ! அநாதி மத்யாந்த மநந்த மவ்யயம் சிவாச்யுதாம்போருஹ கர்ப பூருஷம் !

(இ-ள்) "சர்வஞ்ஞனும், பழையோனும், உத்தமபுருஷர்களில் உத்தமனும், சர்வேசுவரனும், சர்வதேவதைகளால் உபாசிக்கப்படுபவனும், ஆதிமத்யாந்த மில்லாதவனும்; எல்லையற்றவனும், நாசமற்றவனும், சிவன், விஷ்ணு, பிரமர்களுக்குக் காரணனும்."

5. ப்ரபஞ்சோபசமம் சிவம் சாந்தமத்வைதம் சதுர்த்த மந்யந்தே.

கிருஷ்ணயஜுர்வேத ப்ரஹ்மோபநிஷத்.

6. தத்ர சதுஷ்பாதம் ப்ரஹ்ம விபாதி.—(10-ம் பக்கம் பார்க்க).

ஸாமவேத மஹோபநிஷத்.

7. ப்ரஹ்மா விஷ்ணுச்ச ருத்ரச்ச.—(11-ம் பக்கம் பார்க்க).

கிருஷ்ணயஜுர்வேத பஞ்சப்ரம்மோபநிஷத்.

8. அவஸ்தாத்ரிதயாதீதம் துரீயம்.—(12-ம் பக்கம் பார்க்க).

அதர்வணவேத பஸ்ம ஜாபாலோபநிஷத்.

9. அத்வைதம் சதுர்த்தம் ப்ரஹ்மவிஷ்ணு ருத்ராதீதம்.—(70-ம் பக்கம் பார்க்க).

அதர்வணவேத மாண்டூக்யோபநிஷத்.

10. நாந்தஃப்ரஜ்ஞம் நபஹிஃப்ரஜ்ஞம் நோபயதப்ரஜ்ஞம்.—(67-ம் பக்கம் பார்க்க).

11. அமாத்ரச்சதுர்த்தோ வ்யவஹார்ய: ப்ரபஞ்சோபசமம்.—(67-ம் பக்கம் பார்க்க).

அதர்வணவேத ந்ருஸிம்ம பூர்வ உத்தராதாபிந்யுபநிஷத்.

12. ப்ரபஞ்சோபசமம் சாந்தம் சிவமத்வைதம் சதுர்த்தமந்யந்தே.

அதர்வணவேத ராமோத்தரதாபிந்யுபநிஷத்.

13. ப்ரபஞ்சோபசமம் சாந்தம் சிவமத்வைதம் சதுர்த்தமந்யந்தே.

கிருஷ்ண யஜுர்வேத சுவேதாசுவதரோபநிஷத்.

14. 𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌪𑌤𑌿𑌰𑍍𑌗𑌣𑍇𑌶𑌃 |

ப்ரதாநக்ஷேத்ரஜ்ஞ பதிர்குணேசஃ ।

(இ-ள்) "முக்குணமயமான பிரகிருதி, க்ஷேத்ரஜ்ஞன் ஆகிய இரண்டுக்கும் பதி குணேசன் (அதாவது குணமூர்த்திகளாகிய பிரம விஷ்ணு ருத்ரமூர்த்திகளுக்கு நியந்தா.)"

மஹாபாரதம் அநுசாஸநிகபர்வம்.

15. 𑌸𑌏𑌷𑌭𑌗𑌵𑌾𑌨𑍀𑌶𑌃 𑌸𑌰𑍍𑌵𑌤𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌰𑌵𑍍𑌯𑌯𑌃 |
𑌸𑌰𑍍𑌵𑌤𑌤𑍍𑌵𑌵𑌿𑌧𑌾𑌨𑌜𑍍𑌞𑌃 𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌪𑍁𑌰𑍁𑌷𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 ||
𑌸𑍋𑌸𑍃𑌜𑌦𑍍𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾 𑌦𑌙𑍍𑌗𑌾𑌤𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑌂 𑌲𑍋𑌕𑌸𑌂𑌭𑌵𑌂 |
𑌵𑌾𑌮𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌾𑌤𑍍𑌤𑌥𑌾𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌂 𑌲𑍋𑌕𑌰𑌕𑍍𑌷𑌾𑌰𑍍𑌥𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑌃 ||
𑌯𑍁𑌗𑌾𑌨𑍍𑌤𑍇𑌚𑍈𑌵𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍇𑌰𑍁𑌦𑍍𑌰𑌂𑌪𑍍𑌰𑌭𑍁𑌰𑌥𑌾𑌸𑍃𑌜𑌤𑍍 |

ஸஏஷபகவாநீசஸ் ஸர்வ:தத்வாதிரவ்யயஃ ।
ஸர்வதத்வவிதாநஜ்ஞஃ ப்ரதாநபுருஷேச்வரஃ ॥
ஸோஸ்ருஜத் தக்ஷிணாதங்காத் ப்ரஹ்மாணம் லோகஸம்பவம் ।
வாமபார்ச்வாத் ததாவிஷ்ணும் லோகரக்ஷார்த்த மீச்வரஃ ॥
யுகாந்தே சைவஸம்ப்ராப்தே ருத்ரம் ப்ரபு ரதாஸ்ருஜத் ।

(இ-ள்) "இந்தப் பகவானாகிய ஈசர் சகல தத்துவங்களுக்கும் ஆதியானவரும், அளவிடப்படாதவரும், சகல தத்துவங்களையும் உண்டுபண்ண அறிந்தவரும், பாசபசுக்களுக்கு ஈசுவருமாக உள்ளவர். அவமர உலகங்களை படைக்கும்பொருட்டுத் தனது வலதுபுறத்தில் பிரமதேவனையும், உலகங்களைக் காக்கும்பொருட்டுத் தனது இடதுபுறத்தில் விஷ்ணுவையுஞ் சிருஷ்டித்தனர். யுகத்தின் முடிவில் சம்ஹாரத்தின்பொருட்டு உருத்திரனை அந்தப் பிரபுவே சிருஷ்டித்தார்." (இதே வாக்கியங்கள் வரயுசம்ஹிதை 27-ம் அத்தியாயத்திலுமுள்ளன.)

மேலே குறிப்பேர்ந்த தென்மொழி வடமொழிகளின் ஸர்வோத்தம பிரபல பிரமாண பாஹூள்யங்களால் படைத்தற்கடவுளாகிய பிரமனும், காத்தற்கடவுளாகிய விஷ்ணுவும், சங்காரக் கடவுளாகிய உருத்திரரும் பரமகாரண ரல்லரென்றும், அவர்களுக்கும் அதீதராயுள்ள துரீய சிவமே பரமகாரணமென்றும் ஸ்தாபித்ததாயிற்று. திரிமூர்த்திகளிற் சேர்ந்த உருத்திரர் சைவர்கள் வணங்கும் பரப்பிரமப் பொருளல்லர் என்று இனியாவது வைஷ்ணவர்களறிந்து க்ஷேமமடைவார்களாக. இதுவே சைவநூல்களெல்லாவற்றிலுமுள்ள துணிபு. இந்த வுருத்திரர் ஸோஜாநரூபீ-த்யாதாருத்ர:" என்று அதர்வணவேத அதர்வசிரோபநிஷத் அறைந்தபடி சேதனருள் விசிஷ்டர். சித்ஜடப் பிரபஞ்சங்கள் யாவும் சிவபிரானது திருமேனியாகலின் அவை யாவுமே பிரமம் என்று வேதஞ்சாற்றியது சால்புடைத்தே. அவர்களுள்ளும் திரிமூர்த்திகள் விசிஷ்டமுடையவர்களாதலின் அவர்களை வேறுபிரித்துத் தனித்தனி பிரமங்களெனப் புகழ்ந்ததும் அவ்வேதத்துக்குச் சிறப்பே. அவர்களிலும் உருத்திரமூர்த்தி அதிக விசிஷ்டமுடையவராதலின் அவரைப் பிரமத்தில் அபேதமாகப்படித்து அப்பிரமத்தின் யோகரூடி நாமங்களைக் கொண்டு அவ்வுருத்திரரைப் பரவியதும் இன்னும் அதிக பெருமையே. சிவசாரூப்பிய மெய்திய இக்குணருத்திரர் சைவர்களுள் சமயதீக்ஷைபெற்றவர்களாலும், மற்றவர்களாலும் வழிபடுந் தெய்வமாயிருத்தலானும், நான்காவது மூர்த்தியாகிய துரீய மகாவுருத்திரரது நாமதேயங்களையுந் தாங்கி அத் திரிமூர்த்திகளில் முதன்மைபெற்று விளங்குதலானும், அவருக்கு வேறாகச் சுருதிவந்திதமான நான்காவது மூர்த்தி இல்லையென்று இக்கலகாசாரியர் வரைந்துவைத்த அசட்டுக்கூற்று அவலமாயிற்றன்றோ. பொய்யைக் கற்பித்து இவர் சிவநிந்தையில் இழிந்தாலும் "ஸத்யமேவஜயதே" என்னும் உபநிஷத் பிரமாணம் பொய்க்குமோ! அல்லாமலும் சிவபெருமானது திருமேனியோ ஞானகனம். உருத்திர மூர்த்தியினது திருமேனி மாயாகனம். இவ்விரண்டிற்குமுள்ள பேதமறியாமல் பெயரொற்றுமையைக்கொண்டே சைவர்களுக்குத் துரீயமூர்த்தி யில்லையென்று நிந்தித்தல் கேவலம் அசப்பியம். இவரை ஒருவர் பெருமாளென்றழைத்தால் நாம ஒற்றுமையால் இவர் பெருமாளாய்விடுவாரா. கூர்த்தமதி கொண்டுணர்வார்க்கன்றோ இவ்வுண்மை விளங்கா நிற்கும்.

சாதாரணமாய் ஸ்தபதியினால் சமைக்கப்பட்ட அசேதன சிலாரூபமாகிய சிவ வடிவம் சிவமென்றே எண்ணப்பட்டுப் பக்தி, சிரத்தையோடு ஆராதனை செய்யப்பட்டுவருமாயின் நாமரூப தொழிலொற்றுமைகளால் சிவமாகவே விளங்கும் சேதன விசிஷ்டகுணருத்திரர் பிரமமாதற்கு யாது தடை. சிலாரூபமான சிவ வடிவைச் சிவமாகப் பாராமல் கல்லாகப் பார்த்தபோது அது எப்படி தியஜிக்கப்படுகின்றதோ அதுபோலக் குணருத்திரரைத் துரியமூர்த்தியாகப் பாராமல் குணருத்திரராகப் பார்த்தபோது சுருதி கூறியபடி நகாரணமாக வொதுக்கத்தக்கவரேயன்றி வேறல்லர். இவரது கதியே இவ்வாறிருப்பின் கருக்குழி நாற்றக்கமழப்பெற்றுப் பிறந்திறந்துழலும் பிரம விஷ்ணுக்களைப்பற்றி கேட்கவும் வேண்டுமோ! ஆதலினன்றே ஸ்ரீ பகவத்பாதாசாரியாளாகிய சங்கராசாரியர் தாமியற்றிய சிவானந்தலஹரியில் "எனக்குப் பிரம விஷ்ணுக்களாய்ப் பிறந்திறந்துழலும் ஜந்மங்கள் வேண்டாம். அப்படியான் பிறப்பின் ஹம்ஸமாகவும் வராஹமாகவும் வடிவெடுத்து அஹங்காரத்தா லுன்னை மறந்து துயரத்தில் அழுந்தநேரிடும்" என்று சிவபிரானை இரந்து வேண்டிக்கொண்டனர். அவர் சிவனை விஷ்ணுவாதியோரால் சேவிக்கப்படும் சேவ்யரென்று பன்முறையுந் துதித்துள்ளார். விஷ்ணுவைப் பிரமனாதியோரால் சேவிக்கப்படும் சேவ்யரென்று வந்தித்துள்ளாரேயன்றி சிவனைச் சேவகரென்று யாண்டுங் கூறினாரல்லர், மணிவாசகப்பிரானும் "கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினும், நள்ளேன்" என்று அறைந்தருளினர். கண்ணுடைய வள்ளலாரும் "மாலயனா யிந்திரனாய் வாழ்வதாய் மாளுவதாஞ்-சாலமயல் பார்த்துத் தலையசைப்பர்" என்றனர். இவற்றையெல்லாஞ் சீர்தூக்கிப் பார்க்கின்றபோது வைஷ்ணவ சமயிகளது தெய்வம் திரிமூர்த்திகளில் ஒருவராகிய நாராயணரெனவும், வைதிக சைவர்களது தெய்வம் திரிமூர்த்தி புத்திரரை சிவபெருமானெனவும் ஸ்தாபிக்கப்படுகின்றது. நாராயணரைத் தியேயப் பொருளாகக் கூறிய வசனம் வேதத்தில் யாண்டுங் கிடையாது. சிவபிரானைத் தியேயப் பொருளாகத் துதித்த வசனங்கள் அநேகமுள. அவற்றை முன்னரும் பிரஸ்தாபித்தாம். பின்னரும் இடம் வந்துழிமொழிவாம்.

முனிவேந்தராகிய வியாசரது அபிப்பிராயமும் சிவபெருமானே பரம்பொருளென்பது அவரது அஷ்டாதச புராணங்களாலும் அறியக்கிடக்கின்றது. புராணங்கள் பதினெட்டனுள் சிவபுராணம் பத்து. விஷ்ணுபுராணம் நான்கு. பிரமபுராணம் இரண்டு. சூரியபுராணம் ஒன்று. அக்கினிபுராணம் ஒன்று. இந்தப் புராணங்கள் யாவும் சிவன், விஷ்ணு, பிரமன், சூரியன், அக்கினி என்னும் ஐந்து தேவதைகளையே பிரதிபாதிக்கின்றன. அவருள் பிரமன், சூரியன், அக்கினி ஆகிய இவர்களை ஜகத்காரணப் பிரமங்களென்று அங்கீகரிக்கும் வைதிக சிரேஷ்டர்கள் ஒருவருமில்லை. சிவனையும் விஷ்ணுவையுமே சைவருள் ஒருசாராரும் வைஷ்ணவரும் முறையே பரவஸ்துவாகக்கொண்டு வழிபட்டு வருகின்றார்கள். ஆனால்,

ஸாமவேத மைத்ராயண்யுபநிஷத்.

𑌤𑌸𑍍𑌯𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾 𑌅𑌗𑍍𑌰𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑌨𑌵𑍋𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌰𑍁𑌦𑍍𑌰𑍋𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑌿𑌤𑌿।

தஸ்யப்ரோக்தா அக்ர்யாஸ்தநவோப்ரஹ்மா ருத்ரோவிஷ்ணுரிதி ।

(இ-ள்) "அந்தப் பரமாத்மாவர்கிய பிரஜாபதி என்னும் பசுபதிக்குப் பிரமன், விஷ்ணு, உருத்திரன் என்னும் மூவர்களும் முதன்மையான சரீரங்கள் என்று சொல்லப்படும்" என்று சாற்றியது. இவ்வாக்கியத்தில் சிவனையும் விஷ்ணுவையும் பிரமனோடு சேர்த்து தநுக்களென்றோதியபடியால் (தநுவாவது—ஆத்மா.) இவர்களுக்கு அந்தர்யாமியாகிய சைதந்யம் வேறென்றும், அதுவே நான்காவது தெய்வமாகிய சிவமென்றும், திரிமூர்த்திகளுந் தேகத்தைப்போல் ஸ்வதந்தரமற்ற ஜீவர்களென்றும் அங்கை நெல்லிக்கனிபோல் விசதமாயிற்று. அதனாலே, சிவபுராணங்களில் கேட்கப்படும் விஷ்ணு நிந்தையும், விஷ்ணு புராணங்களில் கேட்கப்படுஞ் சிவநிந்தையும் அவ்விருவர்களும் மற்ற மூன்று தேவதைகளைப்போல் ஜீவர்களென்று சாதித்தற்கேயன்றி வேறன்று.

சுக்லயஜுர்வேத நிராலம்போபநிஷத்.

1. 𑌈𑌶𑍍𑌵𑌰𑌏𑌵 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌷𑍍𑌣𑍍𑌵𑍀𑌶𑌾𑌨𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌨𑌾𑌮𑌰𑍂𑌪𑌦𑍍𑌵𑌾𑌰𑌾
𑌸𑍍𑌥𑍂𑌲𑍋𑌹 𑌮𑌿𑌤𑍍𑌯𑌧𑍍𑌯𑌾𑌸𑌵 𑌶𑌾𑌜𑍍𑌜𑍀𑌵𑌃 ।
ஈச்வரஏவ ப்ரஹ்மவிஷண்வீசா நேந்த்ராதீநாம் நாமரூபத்வாரா
ஸ்தூலோஹ மித்யத்யாஸவ சாஜ்ஜீவ: ।

(இ-ள்) "ஈசுவரனே பிரமன், விஷ்ணு, உருத்திரன், இந்திரன் முதலிய நாமரூபவாயிலாகத் தூலமாயிருக்கிறேன் என்று (அத்யாஸம்) சுமத்திக்கோடலாற் ஜீவனாகின்றனன்" எனவும்,

அதர்வணவேத சரபோபநிஷத்.

2. 𑌸𑌰𑍍𑌵𑍇𑌦𑍇𑌵𑌾𑌃 𑌪𑌶𑍁𑌤𑌾𑌮𑌵𑌾𑌪𑍁𑌃𑌸𑍍𑌵𑌯𑌂 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌪𑌶𑍁
𑌪𑌤𑌿𑌰𑍍𑌬𑌭𑍂𑌵 । 𑌤𑌸𑍍𑌮𑍈 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌯 𑌨𑌮𑍋𑌽𑌸𑍍𑌤𑍁 ।

ஸர்வேதேவா: பசுதாமவாபு:ஸ்வயம் தஸ்மாத்பசுபதிர்பபூவ தஸ்மை ருத்ராய நமோஅஸ்து ।

(இ-ள்) "எல்லாத் தேவர்களும் பசுக்களாயுள்ளார்கள். அவர்களை யாளுபவர் பசுபதியாகிய சிவபெருமான். அத்தகைய உருத்திரமூர்த்திக்கு நமஸ்காரம்" எனவும்,

3. 𑌵𑌿𑌷𑍍𑌣𑍍𑌵𑌾𑌦𑌿 𑌕𑌾𑌂𑌸𑍍𑌸𑍁𑌰𑌾𑌨𑍍 - விஷ்ண்வாதி காந்ஸுராந்

(இ-ள்) "விஷ்ணு முதலியசுரர்கள்" எனவும் கூறிப்போந்தவாறு காண்க.

ஆகையினாலே அஷ்டாதசபுராணங்களிற் சொல்லப்பட்ட பரத்துவமும் மகிமையும் நான்காவது தெய்வத்துக்கே சொந்தமென்பது சுருதி யுக்தி அநுபவவாயிலாக அறியக்கிடக்கின்றது. இவற்றை ஒவ்வொருவரும் ஊன்றி விசாரிக்கவேண்டிய தவசியம். ஸ்தூலபார்வையில் ஒவ்வொரு புராணமும் அந்தந்த தேவதாபரமாகவே தோன்றும். ஸூக்ஷ்மபார்வையிலேயோ அத்தேவதைகளுக்கு அந்தர்யாமியாய், ஸர்வகாரண துரிய பரசிவ பரத்வ போதகமாய் விளங்காநிற்கும். இவ்வாறு புராணங்களின் பிராணனை அறியாவிடத்து அவையாவும் பிதற்றேயாகும். இவ்வுண்மையைக் கடைப்பிடித்துய்க.

இனி எடுத்துக்கொண்ட விஷயத்தை இனிது முடிப்பாம். வேதங்களில் பல சாகைகளிலுமுள்ள ருத்ரசம்ஹிதை அம்பிகைபாகனொருவனையே சர்வசொரூபனென்று கூறியிருப்பது வேதவிற்பன்னர்கள் யாவரும் அறிந்தவிஷயம். ஏதோ சில ஏகதேச வசனங்கள் அரிபிரமாதி அமரர்களையுங்கூட சர்வசொரூபர்களென்று நிரூபித்தனவாயினும் வேதசாகைகள்தோறும் ருத்ரசம்ஹிதைசிவனே சர்வசொரூபனென்று பலபடியாலும்நிர்ணயித்து அச்சம்ஹிதைகளுக்குப் பேரணியாய் விளங்குதலால் அவற்றின்

முன் இவ்வேகதேசவசனங்கள் பிரபலபிரமாணங்களாகா. வைணவ பூர்வாசாரியர்களுக்குள் ஒருவராகிய யமுனைத்துறைவர் “யாவன் புண்டரீகநயனன்” “யாவன் புருடோத்தமன்” என்றற்றொடக்கத்தனவான தோத்திரமாலை யொன்று இயம்பியுள்ளார். அதற்கு உரைசெய்த ஆசிரியர் வெங்கடநாதர் புருஷச்சொல்லுக்கு நாராயணனே பொருளென்று எட்டு ஹேதுக்களைக் கொண்டு சாதித்துள்ளார். அவையாவும் அப்பொழுதே ஸ்ரீமத். அப்பைய தீக்ஷித சுவாமிகள் முதலிய மகான்களால் சுருதிகளைக்கொண்டே நியாயவாயிலாகக் கண்டிக்கப்பட்டு எரிமுன் பூளைபோல் மாய்ந்தொழிந்து போயின. புராண வசனங்களால் விஷ்ணுமூர்த்தியும், புராண வேத வசனங்களால் உருத்திரமூர்த்தியும் புருஷச்சொல்லுக்குப் பொருளாயிருத்தலின் வைதிகவிவகாரத்தில் வைதிகவிவகாரமே பிரதானமாகும். புருஷனென்பது பூரணன் என்னும் பொருளைத் தருமென்று முன்னமே விரிவாய்ச் சுருதிவாக்கியங்களைக் கொண்டு விளக்கியுள்ளோமாதலின் புருஷசூக்தம் சிவபரமாகுமேயன்றி நாராயணபரம் ஒருபோதுமாகாதென்பது தேற்றம். புருஷசூக்தப்பொருள் பிரம விஷ்ணு உருத்திரர் என்னும் மூவருமாகார். ஓங்காரவாச்சியரும் நான்காவது தெய்வமுமான சிவபெருமானேயாவர் என்பதை அஞ்ஞான சந்தேக விபரீதமற அடியில் விளக்கிக் காட்டுவோம்.

எல்லாக்கடவுளரும் தாமாகவிளங்கப்பெற்ற சாக்ஷாத்பரப்பிரம சிவபிரானார் புருஷசூக்தத்துக்கு உட்பொருளாயமைந்துள்ளாரென்று கூறும் அளவிறந்த வேதப்பிரமாணங்களுட் சிலவற்றை மாத்திரம் ஈண்டு எடுத்துச்சொல்வோம். சிரத்தையோடும் பக்தியோடும் கேட்டுத் தெளிவாயாக. புருஷசூக்தமானது யஜுர்வேதத்தில் இருபத்துநான்கு மந்திரங்களாய் இரண்டு அநுவாகப் பகுப்புகளுடன் விளங்குகின்றதென்று முன்னமே கூறினோமன்றோ. அவற்றுள் முதல் அநுவாகம் பதினெட்டு மந்திரங்களையும் இரண்டாவது அநுவாகம் ஆறுமந்திரங்களையும் பெற்றுள்ளன.

1. சூக்தத்தின் உபக்கிரம (ஆரம்பம்)த்திலுள்ள “ஸஹஸ்ரீஷா [illegible]-ஸஹஸ்ரசிர்ஷா புருஷ:” என்பதுமுதல் “யதிஜெநாதிரொஹதி - யதந்நேநாதிரோஹதி” என்பதுவரை

யிலுமுள்ள இரண்டுமந்திரங்களைப் பஞ்சருத்திரங்களிலொன்றாகிய மந்திரோபநிஷத் என்னும் சுவேதாசுவதரோபநிஷத் சொற்றிரிவு சிறிதுமின்றி அப்படியே படித்துச் சிவபரமாய் விளக்கிக் காட்டினமையாலும்,

2. அவ்விரண்டு மந்திரங்களின் அரும்பொருளை அவற்றிற்கு வியாக்கியானமாக அவற்றின் பின்வரும் அடியிற்காட்டிய இரண்டு மந்திரங்களால், அவ்வுபநிஷத்தே நன்கு நிரூபித்திருக்கின்றமையாலும்,

𑌸𑌰𑍍𑌵𑌤𑌃 𑌪𑌾𑌣𑌿𑌪𑌾𑌦𑌂 𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌤𑍋𑌽𑌕𑍍𑌷𑌿𑌶𑌿𑌰𑍋𑌮𑍁𑌖𑌮𑍍 ।
𑌸𑌰𑍍𑌵𑌤𑌃 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌮𑌲𑍍𑌲𑍋𑌕𑍇 𑌸𑌰𑍍𑌵𑌮𑌾𑌵𑍃𑌤𑍍𑌯 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 ॥
𑌸𑌰𑍍𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌗𑍁𑌣𑌾𑌭𑌾𑌸𑌂 𑌸𑌰𑍍𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌮𑍍 ।
𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌭𑍁𑌮𑍀𑌶𑌾𑌨𑌂 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌶𑌰𑌣𑌂 𑌸𑍁𑌹𑍃𑌤𑍍 ॥
ஸர்வத: பாணிபாதந்தத் ஸர்வதோக்ஷிசிரோமுகம் ।
ஸர்வதச்ருதிமல்லோகே ஸர்வமாவ்ருத்யதிஷ்டதி ॥
ஸர்வேந்திரியகுணாபாஸம் ஸர்வேந்திரியவிவர்ஜிதம் ।
ஸர்வஸ்யப்ரபுமீசாநம் ஸர்வஸ்யசரணம் ஸுஹ்ருத் ॥

(இ-ள்) "அது எங்குங் கையுங் காலுமுள்ளது. எங்குங் கண்ணும், தலையும், முகம் உள்ளது. எங்குங் காதுள்ளது. உலகமெல்லாம் வியாபித்துக்கொண்டிருக்கின்றது."

"எல்லாவிந்திரிய குணங்களையும் விளக்குவது. எல்லாவிந்திரியங்களும் இல்லாதது. எல்லாவற்றிற்கும் பிரபு ஈசானன். எல்லாச் சீவராசிகளுக்கும் புகலிடமாயுள்ளது. எல்லாரையும் நல்வழியில் நடத்துவது" என்பதாம்

3. "𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌃"-"புருஷ: ஸஹஸ்ராக்ஷ:" என்னும் இரண்டுசொற்கள் "𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌯 𑌵𑌿𑌦𑍍𑌮-புருஷஸ்யவித்ம" என்றற்றொடக்கத்தனவான சிவகாயத்திரியின் முதலடியில் வருகின்றமையாலும்,

4. "𑌪𑍁𑌰𑍁𑌷𑌃-புருஷ:" என்னும் பதம் மேலே எடுத்துக் காட்டியுள்ள சிவபெருமான், உருத்திரர், கணேசர், சுப்பிரமணியர் முதலியோருடைய காயத்திரி மந்திரங்களிற் படிக்கப்பட்டிருத்தல்போல பிரமன், நாராயணன், ந்ருசிம்மன் முதலியோருடைய காயத்திரி மந்திரங்களில் படிக்கப்படாமையாலும்,

5. "புருஷனே, சென்றது வருவது எவை, அவையெல்லாம்" என்னுஞ் ருக்தமந்திரத்துக்கிணங்க "ஸர்வமுமன்றோ இந்த ருத்திரன்" "அவனுலிது பூரணம் புருஷனுலெல்லாம்" என்று தைத்திரீயாருணசாகை நாராயணமும், சுவேதாசுவதரமும் ஓதியிருக்கின்றமையாலும்,

6. "ஆயிரஞ் சென்னியன்" "ஆயிரங்கண்ணன்" "ஆயிரம் பாதன்" என்னும் வாக்கியங்களின் பொருளேயே "எங்குங் கண்கள். எங்கும் முகங்கள். எங்குங் கைகள். எங்குங் கால்கள் என்றற்றொடக்கத்தனவான பிரயோகங்கள் கீழ்வரும் மந்திரங்களில் ஸ்பஷ்டமாய்க் காணப்படுகின்றமையாலும்,

கிருஷ்ணயஜுர்வேத சுவேதாசுவதரோபநிஷத்.

𑌵𑌿𑌶𑍍𑌵𑌤𑌶𑍍𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑍁𑌤 𑌵𑌿𑌶𑍍𑌵𑌤𑍋𑌮𑍁𑌖𑍋
𑌵𑌿𑌶𑍍𑌵𑌤𑍋𑌬𑌾𑌹𑍁𑌰𑍁𑌤 𑌵𑌿𑌶𑍍𑌵𑌤𑌸𑍍𑌪𑌾𑌤𑍍 ।
விச்வதச்சக்ஷுருத விச்வதோ முகோ
விச்வதோ பாஹுருத விச்வதஸ்பாத் ।

(இ-ள்) "எங்குங் கண்ணுள்ளான். எங்கும் முகமுள்ளான். எங்குங் கையுள்ளான். எங்குங் காலுள்ளான்" (இம்மந்திரம் அதர்வசிரோபநிஷத்திலுமுள்ளது.)

𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑌨𑌶𑌿𑌰𑍋𑌗𑍍𑌰𑍀𑌵𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌗𑍁𑌹𑌾𑌶𑌯𑌃 ।
ஸர்வாநந சிரோக்ரீவஸ்ஸர்வபூத குஹாசய: ।

(இ-ள்) "எங்கும் முகத்தையுங் கழுத்தையு முடையவன். எல்லாப் பூதங்களின் உள்ளத்தும் உள்ளவன்" என வருமாறு காண்க.

7. "𑌉𑌤𑌾𑌮𑍃𑌤𑌤𑍍𑌵𑌸𑍍𑌯𑍇𑌶𑌾𑌨𑌃 - உதாம்ருதத்வஸ்யேசாந: - மோட்சமென்னும் அம்ருதத்தன்மையன் ஈசானன்" என்னும் விசேஷப் பொருளை "எதைச் செபித்தால் அமிர்தத்வமெய்தும்" என்று பிரமசாரிகள் வினவியதற்கு "சதருத்ரீயத்தைச் செபித்தால் - அதிலடங்கியவை அமிர்தனுடைய திருநாமங்களன்றோ" என்று யாஜ்ஞவல்கியர் விடையிறுத்ததைச் சுக்லயஜுர்வேத ஜாபலோபநிஷத் பகர்கின்றமையாலும்,

8. ஒவ்வொரு வேதத்திலுமுள்ள ஸ்ரீ ருத்ரசம்ஹிதை சிவநாம பரிபூரணம் என்று எத்தகையோராலும் மறுக்கப்படாத சிறப்புரிமையாலும்,

INTERNATIONAL LIBRARY
ENATHUR-KANCHIPURAM.

9. "அமிர்தன்" என்னுஞ் சொல் மரணப்பிணிக்கு என்றும் ஆளாகாத பிறப்பில்ப்பிரானாகிய உமையொரு பாகன் என்னும் நான்காவது தெய்வத்தையே போகரூபமாய்ப் பிரகாசிக்கின்றமையாலும்,

10. "அமிர்தத்தன்மையாவது"-பிரபஞ்சமெல்லாந் தன்மாட்டொடுங்கத் தானொருவனே அழியாதிருக்கும் சுத்தசிவ சொரூபமேயன்றி பந்தமுத்தி, பதமுத்தி, அபரமுத்தி ஆகிய இவைகளிலொன்றல்லாதமையாலும்,

11. "ஈசானன்" என்னும் நாமம் சர்வசங்காரகாரண பிரமமாம் சிவபெருமானொருவருக்கே யுரியதென மேலே காட்டிய பிரமாணங்களாலும், அடியிற் காட்டும் வேதாந்த வாக்கியங்களாலும் தெளிவாய் அறியக் கிடக்கின்றமையாலும்,

அதர்வணவேத அதர்வசிரோபநிஷத்.

(க) [illegible]

அதகஸ்மாதுச்யத ஈசானோ யஸ்ஸர்வாம்ல்லோகாநீசத ஈசநீபிர்ஜநநீபி: பரமசக்திபி: | அபித்வாசூர நோநுமோ துக்தா இவதேநவ: | ஈசாநமஸ்ய ஜகதஸ்ஸ்வர்த்ருசமீசாநமிந்த்ரதஸ்துஷ: தஸ்மாதுச்யத ஈசாந: ||

(இ-ள்) "இனி எதனால் ஈசானனெனப்படுகின்றான். எவன் இந்த உலகங்களையெல்லாம் ஈசநிகளும் ஜநநிகளுமான பரம சக்திகளால் ஆளுகின்றான். ஓ சூர! பாலில்லாப் பசுக்களைப் போன்று யாம் தாவர சங்கமங்களான இவ்வுலகத்துக்கு நாதனும், மோட்சத்துக்குவழிகாட்டியும், சமஸ்த பிரபஞ்சங்களுக்கு அதிபதியுமாயுள்ள ஈசானனைத் தோத்திரஞ் செய்கின்றோம். ஆதலால் அவன் ஈசானனெனப்படுகின்றான்" எனவும்,

ஸாமவேத மைத்ராயண்யுபநிஷத்.

(உ) [illegible]

ஏஷஹி கல்வாத்மேசாநச்சம்புர்பவோ ருத்ர: |

(இ-ள்) "இனி அந்தப்பரமாத்மா

12. "வாசுதேவ: பர: ப்ரக்ருதி", "விச்வம் நாராயணம்" என்னுஞ் சுருதிகளின்படி சிவபெருமானிடத்தோன்றிய நாராயணனே விராட்டு, விச்வரூபி ஆகலின், "ஆயிரஞ்சென்னியன்" முதலிய சிறப்பிலக்கணங்கள் நாராயணனிடத்துள்ளனவென வேதமஹோபநிஷத்து முதலிய உபநிஷத்துக்கள் கூறியது காரணத்தினின்றுங் காரியத்தின்மேலேற்றியதெனக் கொள்ளக்கிடக்கின்றமையானும்,

13. மஹோபநிஷத்தில் கூறப்பட்டுள்ள சிவனது பிரபஞ்ச சங்காரத்தொழிலைச் செய்யும் குணருத்திரன்பாற் பெறப்பட்டதேயன்றி "பிறக்காதவனன்றே" என வேதம் புகழ்ந்தோதிய சிறப்பிலிப்பெருவள்ளலாகிய துரீய ருத்திரமூர்த்திபாற் பெறப்படாமையானும்,

14. சூக்தத்தின் பதினாறாவது மந்திரத்திலுள்ள "வேதாஹமேதம்-புருஷம் மஹாந்தம்" என்னும் இருசொற்கள் முறை பிறழ அமைக்கப்பட்டிருப்பினும் போதாயன கற்பசூத்திரக்காரர் நித்திய விஷ்ணுபூசையில் மஹாபுருஷன் என்னுந் தொகைச் சொல்லை நாராயணனிடத்தே சேர்த்துப் படித்திருத்தலால் அது நாராயண பரமாகுமேயன்றி சிவபரமாகாதென்று ஆக்ஷேபிக்கின், அதுகூடாது. மஹான், புருஷன் என்னும் இருசொற்கள் தனித்தனியாய்ச் சிவநாமமேயாகக்கொண்டு வேதம் பன்முறையும் வழங்கிவருகின்றமையானும். அவ்விருசொற்கள் விஷ்ணுவை ரூடியாய்க்குறிக்குமென்பதற்குச் சுருதிப்பிரமாணம் யாதுமின்மையானும், மந்திரத்தில் அவ்விருமொழிகளும் தொகாநிலையாய்த் தனித்து நிற்பனவேயன்றி தொகையின்பாற் படாமையானும், தொகைச்சொல்லின்கண் அமைந்த நாராயண பரவாற்றலைவிடத் தனிமொழிகளின்கண் அமைந்த சிவபரவாற்றல் மிகச் சிறப்புடைமையானும், ஈசானபலி, மஹாந்யாசம் முதலிய பல சத்கருமங்களில் மஹான் என்னுஞ் சொல் சிவபெருமானிடத்தே இடுகுறியாக விநியோகிக்கப் பட்டிருக்கின்றமையானும், சுருதிகளும், ஸ்மிருதிகளும், கற்பசூத்திரங்களும், புராணங்களும், இதிஹாஸங்க[illegible] ஆகமங்களும் மஹான் என்னுந் தனிச்சொல்லைச் [illegible] அஷ்டமூர்த்தத்தாக் கமைந்த

15. "𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌵𑌰𑍍𑌣𑌂 - ஆதித்யவர்ணம்" என்பது காயத்ரீ வல்லபனையும், ஆதித்திய அந்தர்யாமியையும், பொன்னார்மேனியனையுங் குறிப்பதன்றி மழைமுகில் தழுவிய உருவினனான நாராயணனை எஞ்ஞான்றுங் குறிக்காமையாலும்,

16 சூக்தத்தின் இரண்டாவது அநுவாகத்தில் ஆறாவது மந்திரத்திலுள்ள "𑌹𑍍𑌰𑍀𑌶𑍍𑌚 𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌶𑍍𑌚 𑌪𑌤𑍍𑌨𑍍𑌯𑍌 - ஹ்ரீச்சதே லக்ஷ்மீச்சபத்யௌ" என்னும் வாக்கியம் ஹ்ரீ என்னும் மந்திரத்தின் முக்கியப்பொருளான பிரஜ்ஞா சொரூபிணியாகிய உமாதேவியையும், "மஹேச்வரீசக்தி மஹாலக்ஷ்மி எனப்படுவாள். அவள் தேகங் கருமை. சர்வாங்கசுந்தரம்" என்று புராணம் புகன்றபடி மஹேச்வரியையும் சத்திகளாகக் கொண்டிருக்கின்றமையாலும், பிரம விஷ்ணுக்கள் செய்த சிவஸ்தவத்தில் "லக்ஷ்மீபதி உன்னை வணங்குவாம், ஹ்ரீபதி யுன்னை வணங்குவாம்" என்று வந்தித்ததாக வாமனபுராணம் வற்புறுத்தி அறைந்திருக்கின்றமையாலும்,

17. "𑌅𑌹𑍋𑌰𑌾𑌤𑍍𑌰𑍇 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 - அஹோராத்ரே பார்ச்வே" என்றது பவளநிறம்போன்ற ஒரு பாதியும், இந்திரநீலம்போன்ற மற்றொருபாதியுமுடைய எமது விரூபாட்சனாகிய கிருஷ்ணபிங்களனையே குறிக்கின்றமையாலும்,

18. சிவபூஜையிலும், விஷ்ணுபூஜையிலும், [illegible]பூஜையிலும் இன்னும் எத்தேவர்பூஜைக்குத் தனிமந்திரமில்லையோ அத்தேவர்பூஜையிலும், அதர்வணவேதத்திலுள்ள பதினெண்மகா சாந்திப் பிரகரணத்தின் வைஷ்ணவ சாந்தியிலும் விநியோகிக்கப் பட்டிருத்தலின், விநியோகத்திற்கேற்ப தேவதையை நிச்சயித்தல் கௌணமும் அதிபரமுமாய் முடிகின்றமையாலும்,

19 "வாமதேவ்யம்" முதலிய மந்திரத்தொகுதிகளை அவ்வவ்விருஷிகளின் பெயரால் அழைப்பதுபோல நாராயணன் எனப்படும் ஓர் ரிஷி இச்சூக்தத்தைக் கண்டமையால் நாராயணம் என்னும் பெயர் அமைந்ததேயன்றி ஸ்திதிகர்த்தாவாகிய நாராயணனை உட்பொருளாகக்கொண்டு அமையாமையாலும்,

20 சூக்தத்தின் பதினோராவது மந்திரத்திலுள்ள "தமே

(இ-ள்) "அவனை இவ்வாறறிந்தவர் அமிர்தத்தன்மை யடைவர். மோட்சத்துக்கு வேறு வழியில்லை" என்னுஞ் சொற்றொடர் வாக்கியங்களையே அநுவதித்துக் கைவல்யோபநிஷத்தும், சுவேதாசுவதரோபநிஷத்தும் நன்கு விளக்கிச் சிவபரமாக நாட்டினமையானும், ஞானதாதா, மோக்ஷதாதா சிவபெருமான் ஒருவனே என்று இதுவரையிலுங் காட்டவுற்ற பிரமாணங்களாலன்றி இன்னுங் காட்டவுறும் பிரமாணங்களாலும் அறியக்கிடக்கின்றமையானும், புருஷசூக்தம் என்னும் வேதபாகம் சிவபரமே என்பது குன்றின்மேலிட்ட விளக்காம். இச்சூக்தத்துக்கு ரிஷி நாராயணர். தேவதை உத்தமோத்தம புருஷராகிய சிவபெருமான். இன்னும் இதனை விரிக்கிற் பெருகுமாதலால் இவ்வளவில் நிறுத்தி உபரதியடைந்தாம்.

இவ்வாறு மேலே குறிப்பிட்ட (20) வேதப் பிரமாணங்களாலும் பிரபல ஏதுக்களாலும், ஓங்காரத்தின் நான்காவதான அர்த்தமாத்திரையிலுள்ள சோமலோகம் அம்பிகை பாகனை ஸ்ரீபசுபதிக்கே உரித்தென்றும், அவனே அவ்வர்த்த மாத்திரையின் பொருளாயுள்ள புருஷனென்றும், திரிமூர்த்திகளில் ஒருவரும் அதற்குரியரல்லரென்றுந் தெரிவிக்கதாயிற்று. அப்படியாயும் வேதபடிதமாயிருந்தும் அவற்றைக்கடந்து பிடிவாதமாய் வார்த்தைசொல்ல பூர்வபட்சிகள் முயல்வார்களாயின் அவர்களுடைய பாவத்தின் பயனே சிவமகிமைகளில் விசுவாசத்தையுண்டு பண்ணவில்லையென்று பரிகாரந்தேடி விச்ராந்தியடைவாம். அந்தகர்களுக்கு எத்தனை ஆதித்தியர்கள் பிரகாசித்தாலும் நேத்திரந்தெரியாதவாறு போல.

மா.—பிரணவத்தின் முதற்கூறாகிய அகார மாத்திரை பிரமனுக்கும், இரண்டாங்கூறாகிய உகார மாத்திரை விஷ்ணுவுக்கும்; மூன்றாங்கூறாகிய மகார மாத்திரை உருத்திரனுக்கும், நான்காக்கூறாகிய அர்த்தமாத்திரை புருஷராகிய சிவபெருமானுக்கும் உரியனவென்று சுருதி கூறுமாயின் ஓங்காரமந்திரத்தின் பொருளாவார் யாவர்?

ஆ.—ஓங்காரமாகிய பிரணவம் சமஷ்டிப்பிரணவமெனவும், வியஷ்டிப் பிரணவமெனவும் இருவிதமாகச் சொல்லப்படும். அவற்றுள் சமஷ்டிப் பிரணவம் "ஓம்" என்று தொகுத்துக் கூறுவது. வியஷ்டிப் பிரணவம் அகாரம், உகாரம், மகாரம் என்று

வகுத்துக் கூறுவது. நாம் நமது வாயைத் திறக்கின்றபோது சிருஷ்டியும், திறந்தவாயை அப்படியே வைத்திருக்கும்போது ஸ்திதியும், அந்த வாயை மூடும்போது ஸம்ஹாரமும் ஏற்படுதல்போல சிருஷ்டிகர்த்தாவாகிய பிரமனை அகாரத்துக்கும், ஸ்திதிகர்த்தாவாகிய விஷ்ணுவை உகாரத்துக்கும், ஸம்ஹாரகர்த்தாவாகிய உருத்திரனை மகாரத்துக்கும் வாச்சியப்பொருளாக வேதம் உபசரித்துக் கூறியது. ஆதலால் அவர்கள் அவ்வட்சரத்திரயங்களுக்குச் சுதந்தரராகமாட்டார்கள். சுதந்தரராவார் அம்மூவருக்கும் அப்பாற்பட்ட புருஷராகிய சிவபரம்பொருளே. அது எவ்வாறெனில், ஒரு பெரிய தேசத்துக்கு அதிபதியாகிய சக்கரவர்த்தி தன் தேசத்தை மூன்றுபாகமாகப் பிரித்து ஒரு பாகத்தை ஒரு பிரதிநிதிக்கும், இரண்டாவது பாகத்தை மற்றொரு பிரதிநிதிக்கும், மூன்றாவது பாகத்தை வேறொரு பிரதிநிதிக்குங் கொடுத்து அவற்றை அநுபவிக்க அநுமதித்தான். அவர்கள் அவற்றை ஆண்டுவரும்போது அவ்வப் பாகத்தைத் தங்களுக்கே உரியதென்று கூறி அரசு செலுத்துவது வழக்கம். அதனால் அவர்கள் அந்தப் பாகங்களுக்குச் சர்வசுதந்தரரல்லர். அம் மூன்று பாகங்களையுங் கொண்டு விளங்கும் தேசம் அம்மூன்று பிரதிநிதிகளுக்கும் வேறாய், நான்காவதான சக்கரவர்த்திக்கு எப்படிச் சர்வசுதந்தரமாயுள்ளதோ அப்படியே அகார உகார மகாரங்களில் வசிக்கும் பிரமன் முதலிய மூவரும் அவ்வட்சரத்திரயங்களுக்குச் சுதந்தரராகார். அவ்வட்சரங்கள் மூன்றும் ஒன்று கூடிய ஓங்காரத்துக்கும், அவ்வட்சரங்களில் வசிக்கும் மூவருக்கும், சர்வாதிபதியாயுள்ள சிவபெருமானாகிய புருஷரொருவரே ஓங்காரப் பொருளாயுள்ளாரென்று தெள்ளிதிற் றுணியப்பட்டது.

அதர்வணவேத ந்ருசிம்ம தாபநீயோபநிஷத்.

𑌅𑌕𑌾𑌰𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑌂 𑌨𑌾𑌭𑍌 𑌉𑌕𑌾𑌰𑍋 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌂 𑌹𑍃𑌦𑌯𑍇 ।
𑌮𑌕𑌾𑌰𑍋 𑌰𑍁𑌦𑍍𑌰𑌂 𑌭𑍍𑌰𑍂𑌮𑌧𑍍𑌯𑍇 𑌓𑌂𑌕𑌾𑌰𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑌂 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌾𑌨𑍍𑌤𑍇 ॥
அகாரம் ப்ரஹ்மாணம் நாபௌ உகாரம் விஷ்ணும் ஹ்ருதயே।
மகாரம் ருத்ரம் ப்ரூமத்யே ஓங்காரம் ஸர்வேச்வரம் த்வாதசாந்தே ॥

(இ-ள்) "அகாரமென்னும் ஸ்தூலனாகிய பிரமனை நாபியிலும், உகாரமென்னும் சூக்ஷ்மனாகிய விஷ்ணுவை இருதயத்திலும், மகாரமென்னும் சூக்ஷ்மதரனாகிய உருத்திரனைப் புருவநடு

விலும் ஓங்காரமென்னும் சூக்ஷ்மதமனாகிய (துரிய) சர்வேசுவரனைத் துவாதசாந்தத்திலும் தியானிக்கவேண்டும்" எனவும்,

அதர்வணவேத அதர்வசிரோபநிஷத்.

𑌹𑍃𑌦𑌿𑌸𑍍𑌥𑌾 𑌦𑍇𑌵𑌤𑌾𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌃 𑌹𑍃𑌦𑌿 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌾𑌃 ।
𑌹𑍃𑌦𑌿 𑌤𑍍𑌵𑌮𑌸𑌿 𑌯𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌤𑌿𑌸𑍍𑌰𑍋 𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌃 𑌪𑌰𑌸𑍍𑌤𑍁 𑌸𑌃 ॥

ஹ்ருதிஸ்தா தேவதாஸ்ஸர்வா: ஹ்ருதிப் ப்ராணா: ப்ரதிஷ்டிதா: ।
ஹ்ருதித்வமஸியோநித்யம் திஸ்ரோமாத்ரா: பரஸ்துஸ: ॥

(இ-ள்) "இருதயத்திலே ஸர்வதேவதைகளும் இருக்கின்றார்கள். இருதயத்திலேதான் பிராணன்களிருக்கின்றன. இருதயத்திலே நீ நித்தியமா யிருக்கின்றாய். அந்த நீ மூன்று மாத்திரைகளையும் கடந்து நின்றவன்." எனவும்,

அதர்வணவேத அதர்வசிகோபநிஷத்.

𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌮𑍋𑌙𑍍𑌕𑌾𑌰𑌗𑌤𑌿𑌞𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑌧𑍍𑌯𑌾𑌨 𑌯𑍋𑌗𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑌾𑌂
𑌯𑌤𑍍𑌫𑌲𑌂 - 𑌓𑌙𑍍𑌕𑌾𑌰𑍋 𑌵𑍇𑌦 𑌪𑌰 𑌈𑌶𑍋 𑌵𑌾 ।

க்ருத்ஸ்நமோங்காரகதிஞ்ச ஸர்வத்யாந யோகஜ்ஞாநாநாம்
யத்பலம்-ஓங்காரோ வேதபர ஈசோவா ।

(இ-ள்) "ஓங்காரத்தின் சொரூபமெல்லாவற்றையும், சர்வவிதமான தியானங்கள், யோகங்கள், ஞானங்கள் ஆகிய இவற்றின் பலன்களையும் பிரணவ சொரூபனான ஈசனே அறிவன்" எனவுங் கூறிப்போந்தன. இவ்வாக்கியங்களால் வியஷ்டிப்பிரணவம் திரிமூர்த்திபரமும், சமஷ்டிப் பிரணவம் சர்வேசுவரராகிய சிவபெருமான் பரமுமாயின வாறறிக. இதுவே சர்வ வேதவேதாந்த ஸம்பிரதிபந்நம். இதற்கு நேர்விரோதமாக அகாரம் நாராயணபரமெனவும், உகாரம் லக்ஷ்மிபரமெனவும், மகாரம் ஜீவபரமெனவும் ஒரு சாராரும், அகாரம் காத்தற்றொழிலுக்குரிய கடவுளாகிய நாராயணரெனவும், உகாரம் தேற்றேகாரப் பொருளை விளக்க வெழுந்ததெனவும், மகாரம் ஜீவனெனவும் (அதாவது நாராயணனுக்கே உரியவனான நான் என) மற்றொருசாராரும் தந்தம் மதத்திற்கேற்ப பாத்மோத்தர ஸம்ஹிதை முதலியவற்றைப் பிரமாணமாகக்கொண்டு சாதித்துள்ளார்கள். இத்தகைய உரைகள் சுருதிகளில் யாண்டும் படிக்கப்பட்டிருக்கவில்லை. சுருதி சந்நிதியில் அவை நில்லாதபோது அவை அப்பிரமாணங்களாம். வேதத்

தால் வாதிக்கப்பட்டது பிரமாணமன்று. அன்றியும் அகாராதி மும்மாத்திரைகளுங்கூட சிவபெருமானையே பிரதிபாதிக்கின்றனவென்பதற்கும் சுருதிப்பிரமாணம்.

ஸாமவேத மைத்ரேயோபநிஷத்.

𑌏𑌕𑌸𑌙𑍍𑌖𑍍𑌯𑌾 𑌵𑌿𑌹𑍀𑌨𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌦𑍍𑌵𑌿𑌸𑌙𑍍𑌖𑍍𑌯𑌾𑌵𑌾𑌨𑌹𑌂 𑌨 𑌚 ।
𑌅𑌕𑌾𑌰𑍋𑌕𑌾𑌰𑌰𑍂𑌪𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌮𑌕𑌾𑌰𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌸𑌨𑌾𑌤𑌨𑌃 ।
𑌹𑍃𑌦𑌯𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌿𑌹𑍀𑌨𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌹𑍃𑌦𑌯𑌾𑌮𑍍𑌬𑍁𑌜𑌮𑌧𑍍𑌯𑌗𑌃 ।

ஏகஸங்க்யா விஹீனோஸ்மி த்விஸங்க்யா வாநஹம்நச ।
அகாரோகாரரூபோஸ்மி மகாரோஸ்மி ஸநாதந:
ஹ்ருதயக்ரந்தி ஹீனோஸ்மி ஹ்ருதயாம்புஜமத்யக: ।

(இ-ள்) "நான் (ஏகம்) ஒன்று என்னும் எண்ணும் அற்றவனாயிருக்கிறேன். (துவிதம்) இரண்டு என்னும் எண்ணும் அற்றவனாயிருக்கிறேன். அகார உகாரரூபமாயிருக்கிறேன். மகாரரூபமாயிருக்கிறேன். இருதய கிரந்தி அற்றவனாய் இருதய நடுவில இருக்கிறேன்" என்றோதியது. இவ்வாக்கியம் சிவபெருமான் மைத்ரேயருக்கு அருளிச்செய்தது. இதில் அகார உகார மகாரப்பொருள் சிவபெருமானென்றே விளக்குகின்றது. அதனால் அம்மூன்று அக்ஷரங்களும் சிவபெருமானாலே மும்மூர்த்திகளுக்கும் அவரவர்கள் காரியார்த்தமாக அளிக்கப்பட்டனவென்று நிச்சயமாயிற்று. விஷ்ணுவையும், மற்றிருவர்களையும் பிரணவசொரூபிகளென்றும், ஓங்கார வாச்சியர்களென்றும் சுருதிகள் மொழிவதெல்லாம் சமஷ்டிப் பிரணவமாகிய ஓங்காரத்தின் வியஷ்டிப் பிரணவத்திலும், உபசரிப்பிலும், அதிலுமே அடங்கும். இவ்வுண்மையைச் சிவலிங்கத்திலும் பிரத்தியட்சமாயறியலாம். அகண்டாகார நித்தியவியாபக சச்சிதானந்த சுத்தசிவம் ஆத்மாக்களின் தியானபாவனைநிமித்தம் நிஷ்களசகளத்திருவுருக்கொண்ட நிலையே இலிங்கமென்று சொல்லப்படும். இலிங்கத்தின் பீடிகை-சக்தி சொரூபம். அதாவது கிரியாசக்திவடிவம். இலிங்கம்-சிவசொரூபம். அதாவது ஞானசக்திவடிவம். இவையிரண்டும் சிவம் அதிஷ்டிக்கும் தேகம். இத்தேகத்தை யதிஷ்டித்துள்ளதேகி பரமசிவமாகிய இலிங்கி பீடத்தின் மேற்புறம் உருத்திரபாகமென்று சொல்லப்படும். அடிப்புறம் (அதாவது அடி நான்குமூலை) பிரமபாகமென்று கூறப்படும். நடுப்புறம்

இவற்றுள் பிரமபாகம் நபும்ஸகலிங்கம். விஷ்ணுபாகம் ஸ்திரீலிங்கம். உருத்திரபாகம் புல்லிங்கம். இதுவே பிரணவமுகர் பொருள். இதன் ஜோதி சொரூபமே அகார உகார மகாரமாகும். அகாரம்-சிவம், உகாரம்-சத்தி, மகாரம்-பரம். இவ்வாறு வேதங்கூறுகின்றது. திருவிளையாடற்புராணமும் "சத்தியாய்ச் சிவமாகித் தனிப்பர, முத்தியான முதலைத் துதிசெய்ய" என்று முதற்கண்ணெடுத்துச் சாற்றியது. அல்லாமலும், லிங்-லயம், கம்-தோற்றம். சிருஷ்டியாதி பஞ்சகிருத்தியங்களைச் செய்யவும் ஈசுவரப்பிரபாவமே லிங்கம் எனப்படும். இவ்விலிங்காராதனையே கிருஷ்ணார்ஜுனர்களிருவருக்கும் பரமதாரகமாயிருந்தது. சர்வாத்மாக்களுக்கும் சர்வஐசுவரியங்களும் கொடுக்கத்தக்கதாயுமுள்ளது. ஆலயங்கள்தோறும் சுயம்புமூர்த்தமாய் அருட்குறியாய் விளங்கியிருப்பதும் இதுவே.

ருக்வேதம். ௫-ஆம் மண்டலம்

[illegible]
தவச்ரியே மருதோ மர்ஜயந்த ருத்ரயத்தேஜநிம சாருசித்ரம்,

(இ-ள்) "ஏ ருத்ர! மருத்துக்கள் (தேவர்கள்) நினது செல்வத்தையடையும்வண்ணம் நின்னுடைய அழகிய சித்திரரூப லிங்கத்தை அபிஷேகாதி ஆராதனை புரிந்தனர்" எனவும்.

அதர்வணவேத பஸ்மஜாபாலோபநிஷத்.

[illegible]
[illegible]........[illegible]
லிங்கரூபிணம் மாம் ஸம்பூஜ்ய சிந்தயந்தியோகிநஸ் ஸித்தாஸ்ஸித்திம்
ததாயஜந்தியஜ்வாநோ மாமேவஸ்துவந்தி........காச்யாம்

(இ-ள்) "இலிங்கரூபியாகிய என்னைக் காசியில் யோகிகளும் சித்தர்களும் மிகுதியும் பூசித்துச் சிந்தனைசெய்கிறார்கள். சித்தியையடைகிறார்கள். தீக்ஷிதர்களும் என்னையே யஜனஞ்செய்கிறார்கள்." எனவும்,

பராசரபுராணம்.

[illegible]|
[illegible]|
ரௌத்ரம் லிங்கம் மஹாவிஷ்ணுர்பக்த்யாசுத்தம் சிலாமயம்|
[illegible]||

(இ-ள்) "மஹாவிஷ்ணுவானவர் சுத்தமும், சிலாமயமு அழகிய சித்திரரூபமும் ஆகிய சிவலிங்கத்தைப்பக்தியோடு அர் சித்துப் பரமபதத்தையடைந்தனர்" எனவும் விளக்கியவாறறி ருக்வேதம் "சாருசித்ரம் ஜநிம" என்று கூறியதையே புராண "சாருசித்ரம் ரௌத்ரம் லிங்கம்" எனப்பொருள் விரித்தது திருக்குறளிலும் "அகரமுதல" என்னுந்தேவர்மொழி உலககா னான சிவ பட்சத்தையே நாட்டுகின்றது. எப்படி பரமசிவ தின் சொரூபம் பிரம விஷ்ணு உருத்திர துரியாகாரமாய் விள குகின்றதோ அப்படியே அவரது வாசகமான பிரணவமும் நால் காய் நின்று சர்வசொற்கூற்றுப் பொருட்கூற்றுப் பிரபஞ்சங் ளுக்கும் காரணமாயிருக்கின்றது. அதனாலேயும் பிரணவம் சி பெருமானுக்கே யுரித்தென்பது தேற்றம்.

மா—பிரணவம் சிவவாசகமாயின் அதன் வேறு பெயர் ளும் சிவபெருமானையே குறிக்கின்றனவோ?

ஆ—ஆம். ஐயுறவேண்டாம். ஓங்காரம், பிரணவம், ஸர் வியாபி, அனந்தன், தாரம், சூக்ஷ்மம், சுக்லம், வைத்யுதம், பர பிரமம் ஆகிய இவ்வொன்பது பெயர்களும் வாசகங்களாகும் ஏகன், ஏகருத்திரன், ஈசானன் பகவான், மகேச்வரன், மகாதே வன் ஆகிய ஆறுபெயர்களும் வாச்சியங்களாகும். இவ்வாறு வா சகவாச்சியங்களுக்குள்ள அபேதம் வேதத்திலேயே கூறப்ப டிருக்கின்றது.

அதர்வணவேத அதர்வசிரோபநிஷத்.

𑌸 𑌓𑌂𑌕𑌾𑌰𑍋 𑌯 𑌓𑌂𑌕𑌾𑌰𑌃 𑌸 𑌪𑍍𑌰𑌣𑌵𑍋 𑌯𑌃 𑌪𑍍𑌰𑌣𑌵𑌃
𑌸 𑌸𑌰𑍍𑌵𑌵𑍍𑌯𑌾𑌪𑍀 𑌯𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌵𑍍𑌯𑌾𑌪𑍀 𑌸𑍋𑌨𑌨𑍍𑌤𑍋 𑌯𑍋𑌨𑌨𑍍𑌤𑌃
𑌤𑌤𑍍𑌤𑌾𑌰𑌂 𑌯𑌤𑍍𑌤𑌾𑌰𑌂 𑌤𑌤𑍍𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌂 𑌯𑌤𑍍𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌂
𑌤𑌚𑍍𑌛𑍁𑌕𑍍𑌲𑌂 𑌯𑌚𑍍𑌛𑍁𑌕𑍍𑌲𑌂 𑌤𑌦𑍍𑌵𑍈𑌦𑍍𑌯𑍁𑌤𑌂 𑌯𑌦𑍍𑌵𑍈𑌦𑍍𑌯𑍁𑌤𑌂
𑌤𑌤𑍍𑌪𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍇𑌤𑌿
𑌯 𑌏𑌕𑌸𑍍𑌸 𑌏𑌕𑍋 𑌰𑍁𑌦𑍍𑌰𑌃 𑌸 𑌈𑌶𑌾𑌨𑌃 𑌸 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍
𑌸 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌸 𑌮𑌹𑌾𑌦𑍇𑌵𑌃 ॥

ஸஓங்காரோய ஓங்கார: ஸப்ரணவோய: ப்ரணவ:
ஸஸர்வவ்யாபீ யஸ்ஸர்வவ்யாபீ ஸோநந்தோயோநந்த:
தத்தாரம் யத்தாரம் தத்ஸூக்ஷ்மம் யத்ஸூக்ஷ்மம்

தத்பரம் ப்ரஹ்மேதி ॥
யஏகஸ்ஸ ஏகோருத்ர: ஸஈசானஸ்ஸபகவாந்
ஸமஹேச்வரஸ்ஸ மஹாதேவ:॥

(இ-ள்) "எவன் ஓங்காரன் அவன் ஓங்காரன். எவன் பிரணவன் அவன் பிரணவன். எவன் ஸர்வவியாபீ அவன் ஸர்வவ்யாபீ. எவன் அனந்தன் அவன் அனந்தன். எது தாரம் அது தாரம். எது சூக்ஷ்மம் அது சூக்ஷ்மம். எது சுக்லம் அது சுக்லம். எது வைத்யுதம் அது வைத்யுதம். அது பரப்பிரமம் என்று. எவன் ஏகன் அவன் ஏகனான உருத்திரன். அவன் ஈசானன். அவன் பகவான். அவன் மகேசுரன். அவன் மகாதேவன்" என்றது.

இந்த வாக்கியங்கள் வாசக வாச்சியங்களுக்குள்ள பொருளொற்றுமையை நன்றாக விளக்கவே எழுந்தன. இவ்வுபநிஷத்து பிரணவ சிவாபேதத்தை நாட்டவெழுந்த ஒப்பற்ற பிரமவித்தை என்பதில் யாதொரு ஆக்ஷேபமுமில்லை. இது வேதங்களின் சிகரத்தேயுள்ள அதர்வசிரஸ் என்னும் சாகையின் அந்தத்திலமைந்துள்ளது. இச்சாகை வேதங்களனைத்துக்கும் சமமாயுள்ள வேதபாகமெனவும், அதனாலே சர்வவேத பவித்திரமெனவும் போதாயனர், கௌதமர் முதலிய மஹாரிஷிகளால் புகழ்ந்து போற்றப்பட்டிருக்கின்றது. இதில் கண்ட பொருள் விளக்கம் புராணங்களிலும் பாரதத்திலும் வெகு விரிவாயுண்டு. இது சிவபரத்துவத்தை நாட்டவெழுந்த பஞ்சருத்ரங்களில் ஒன்றாயும் விளங்குகினறது.

சுகலயஜுர்வேத மந்திரிகோபநிஷத்.

[illegible] ஸாம்வ்யா: [illegible] ஸிரவோவிது: ।
புருஷம் நிர்க்குணம் ஸாங்க்யம் அதர்வசிரஸோவிது:॥

(இ-ள்) "நிர்க்குணனும் வேதாந்தப் பிரதிபாத்யனுமுள்ள புருஷராகிய சிவபெருமானை அதர்வசிரமறிந்தோர் அறிவர்" என்று இவ்வுபநிஷத்தைப் புகழ்ந்துள்ளது. தசரதமகா சக்கரவர்த்தியினுடைய புத்திரோற்பத்திக்காக இவ்வுபநிஷத் சாகையிலமைந்துள்ள காமயேஷ்டிப்பிரகரணத்தில் சொல்லியிருக்கிற யாகத்தையே ருஷ்ய சிருங்க மகரிஷியானவர் அச்சக்கரவர்த்திக்குச் செய்வித்தனரென்று ஸ்ரீவால்மீகிபகவான் தமது இராமாயணத்தில் அடியில் போந்தவாறு செப்பினரென்றால் இதன் பெருமையைச் சொல்லவும் வரம்புளதோ!

[illegible]
[illegible]

இஷ்டிந்தேஹம்கரிஷ்யாமி புத்ரீயாம் புத்ரகாரணாத்।
அதர்வசிரஸி ப்ரோக்தை: மந்த்ரைஸ்ஸித்தாம் விதாநத:॥

(இ-ள்) "ஓ அரசனே! அதர்வசிரஸ் என்ற வேதபாகத்தில் சொல்லியிருக்கிற மந்திரங்களைக்கொண்டு புத்திரகாமேஷ்டியாகத்தைப் புத்திரோற்பத்திக்காக உனக்கு நான் விதிப்படி செய்விப்பேன்" என வருமாறு காண்க.

அல்லாமலும், பிரமபுத்திரராகிய அதர்வாகரிஷியானவர் பரமசிவ தியானநிஷ்டையிலேயிருந்தகாலத்தில் அவரது தபாக்கினியானது விஷ்ணுவின் சொரூபமான இடைநாடிக்கும், பிரமாவின் சொரூபமான பிங்களாநாடிக்கும் மத்தியிலுள்ள உருத்திரமூர்த்தியின் சொரூபமான சுஷுமுநா நாடியின் வழியாக மேலேசென்று பிரமரந்திரத்தைப் பேதித்துப்புறப்பட்டுக் கபாலத்தைப்பிளந்து வெளிகிளம்பி இச்சாதையாக உருக்கொண்டு விளங்கினபடியால் இப்பிரமவித்தை பரமவைதிக பாசுபதசைவோபநிஷத்தென்று பிரம்மவாதிகள் யாவராலும் அங்கீகரிக்கப்பட்ட முடிந்த தீர்வையாம். இத்தகைய அரிய பெரிய உபநிஷத்து பிரணவ வித்தையை விளக்கும்பொருட்டுச் சிவநாமதேயங்களையே விரித்து அவற்றின்வழி சிவமேம்பாட்டைத் தெளிவாய் நிரூபித்திருக்கின்றமை பிரத்தியட்சம். இதனையே யாமும் மிகச் சிறந்த பிரமாணமாகக்கொண்டு ஓங்கார விளக்கமுரைத்தாம். உண்மையுணர்ந்து இன்புறுவாராக.

மா — வாசகங்களாகிய ஓங்காரமுதல் பரப்பிரமம் ஈறாகச் சொல்லப்பட்ட ஒன்பது பெயர்களுக்கும், வாச்சியப் பொருளாகிய ஏகன் முதல் மகாதேவன் ஈறாகக்கூறப்பட்ட ஆறு பெயர்களுக்கும் பொருள் ஒற்றுமையானால் ஓங்கார சப்தத்தின் பொருள் யாது?

ஆ — கூறுதும். அதர்வணவேத அதர்வசிகோபநிஷத்.

[illegible]

ஸக்ருதுச்சரிதமாத்ர ஊர்த்வ முந்நாமயதீத்யோங்கார:॥

(இ-ள்) "ஒருமுறையுச்சரித்த மாத்திரத்தில் உயர்ந்தகதியில் ஓங்காரமெனப்படுவர்." எனவும்,

அதர்வணவேத அதர்வசிரோபநிஷத்.

𑌅𑌥 𑌕𑌸𑍍𑌮𑌾𑌦𑍁𑌚𑍍𑌯𑌤 𑌓𑌙𑍍𑌕𑌾𑌰𑌃 𑌯𑌸𑍍𑌮𑌾𑌦𑍁𑌚𑍍𑌚𑌾𑌰𑍍𑌯𑌮𑌾𑌣 𑌏𑌵 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌶𑌰𑍀𑌰𑌂 𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌮𑍁𑌨𑍍𑌨𑌾𑌮𑌯𑌤𑌿 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍁𑌚𑍍𑌯𑌤 𑌓𑌙𑍍𑌕𑌾𑌰𑌃।

அதகஸ்மாதுச்யத ஓங்காரஃ யஸ்மாதுச்சார்யமாண எவ ஸர்வம் சரீரம் ஊர்த்வமுந்நாமயதி தஸ்மாதுச்யத ஓங்காரஃ।

(இ-ள்) "எதுபற்றி ஓங்காரமெனச் சொல்லப்படுகின்றது. எதனால் உச்சரித்த மாத்திரத்தில் ஸ்தூலசூக்ஷ்மகாரணம் என்னும் மூன்று சரீரங்களையும் அகற்றி பிரகிருதி மண்டலத்துக்கு மேலே செலுத்துகின்றது. அதனாலே ஓங்காரமெனப் படுகின்றது." எனவுங்கூறின. வேதமூலமாகிய ஓங்காரம் சர்வமந்திரஸாரபூதமாயிருத்தல்பற்றியே உச்சாரணமாத்திரத்தில் பாசத்தினின்றுந்தாண்டி உயர்த்தும்வன்மை பெற்றுள்ளது. அது ஸ்தூலம், சூக்ஷ்மம், சூக்ஷ்மதரம், சூக்ஷ்மதமம் என நான்காய் வகுக்கப்பட்டு ஹ்ரஸ்வம், தீர்க்கம், ப்லுதம் என மூவகையாக உச்சரிக்கப்பட்டு வருகின்றது. அவற்றுள் முதலாவது ஹ்ரஸ்வம். அது சுபாவத்திலேயே இரண்டு மாத்திரைகளையுடையது. இரண்டாவது தீர்க்கம். அது மூன்று மாத்திரைகளையுடையது. மூன்றாவது ப்லுதம். அது நான்கு மாத்திரைகளையுடையது. இவ்வாறு இரண்டு, மூன்று, நான்கு மாத்திரைகளையுடைய ஓங்காரத்தை ஆசிரியன் உபதேசித்தபடி கிரமமாக மூன்றுமுறையுச்சரித்து நான்காம்முறையில் ஐந்து மாத்திரையுள்ள அவ்வோங்காரத்தை அமனஸ்கயோகத்தால் அநுசந்திக்க உடனே உபாசகன் அந்த அதிசூக்ஷ்மமான நாதத்தோடு கூடவே துரீய சிவாபேதத்தை யடைந்துவிடுகின்றனன். அப்பொழுது அவன் சர்வபிரபஞ்சலயஸ்தானமாய், பரமசாந்தனாய், சிவமேயாய் விடுகின்றனன். இத்தகைய அரியபெரிய பிரணவயோகம் பிரணவநிஷ்டாபரர்களுக்கன்றி ஏனையோருக்கு எட்டுணையும் சித்தித்தல் அருமையினும் அருமை. ஏனெனின், அவர்கள் அதனுண்மையை மதாபிமானத்தால் உள்ளவாறறியுந்திறனற்று ஓது முறைப்படியுச்சரித்து நிஷ்டைகூடாமல் வேறுவகையாகப் பொருள்கொண்டு பிணங்குவர். இந்தப் பிரணவயோகவாயிலாக அடையும் அநுபூதிஞானம் ஸ்ரீமந் நாதமுனிகள் காலத்துக்குப்பின் உபதேசவாயிலாக அடையத்தவறிப்போய்விட்டபடியால் அக்காலத்திலிருந்து வைஷ்ணவர்கள் யாருக்கும் யோக ஞானுப

வம் இல்லாமல் ஒழிந்துபோய்விட்டது. அதனாலேதான் அவருக்குப்பின்வந்த ஆசாரியர்களுள் முதன்மையானோருங்கூட நோவுசாத்தியே மிகவுந் தளர்ந்து தேகத்தை விடநேர்ந்தது. இவ்விஷயம் வடகலை தென்கலை குருபரம்பரா பிரபாவங்களில் பரக்கக்காணலாம்.

கிருஷ்ணயஜுர்வேத சுவேதாசுவதரோபநிஷத்.

𑌪𑍃𑌥𑍍𑌵𑍍𑌯𑌾𑌪𑍍 𑌤𑍇𑌜𑍋 𑌨𑌿𑌲𑌖𑍇 𑌸𑌮𑍁𑌤𑍍𑌥𑌿𑌤𑍇
𑌪𑌞𑍍𑌚𑌾𑌤𑍍𑌮𑌕𑍇 𑌯𑍋𑌗𑌗𑍁𑌣𑍇 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑍇 ।
𑌨 𑌤𑌸𑍍𑌯 𑌰𑍋𑌗𑍋 𑌨 𑌜𑌰𑌾 𑌨 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌃
𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌸𑍍𑌯 𑌯𑍋𑌗𑌾𑌗𑍍𑌨𑌿𑌮𑌯𑌂 𑌶𑌰𑍀𑌰𑌮𑍍 ॥
ப்ருத்வ்யாப்ய தேஜோ நிலகே ஸமுத்திதே
பஞ்சாத்மகேயோக குணப்ரவ்ருத்தே ।
நதஸ்ய ரோகோ நஜரா நம்ருத்யுஃ.
ப்ராப்தஸ்ய யோகாக்நிமயம் சரீரம் ॥

(இ-ள்) "பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் ஆகிய ளிவற்றைக் கடந்த ஐவகையான யோககுணங்கள் நிறையப்பெற்றால் அவனுக்கு ரோகம் உண்டாகாது கிழத்தனம்வராது. மரணங்கிடையாது. அவன் யோகாக்நிமயமான சரீரத்தைப் பெற்றவனாவான்" என்று சாற்றியது. இதனால் யோகங்களிற் சிறந்த ராஜயோகத்தைத் தியானமார்க்கத்தாற் கைப்பற்றிச் சித்தியடைந்தபுருஷனொருவனே பூதஜயம் பெற்றவனாதலின் அவனுக்குப்பௌதிகத்தால் உண்டாகும் தாபங்கள் ஒன்றுமே கிடையா. அவன் தியானசித்தி பெற்றவனாகலின் அவனுக்குச் சரீராவஸ்தையாகிய மூப்பும், வாதபித்த சிலேத்துமங்களின் நானம்துதிகளால் விளையும் ரோகங்களும், எவ்வகைசிகிச்சைகளுக்கும் வசப்படாத பசி, தாகம், நித்திரை முதலிய பிணிகளும் அணுகா. அவன் சமாதிசித்தி பெற்றவனாகலின் அவனுக்கு மரணமு மில்லையாம். மரணம் இல்லையென்றால் என்றும் மரணமில்லையென்று கருத்தல்ல. தான் கருதியகாலத்தில் உண்டாவதன்றி தன்னுடைய இச்சையின்றி கர்மகதிக்கேற்றவாறு குறிக்கப்பட்ட காலத்தில் சம்பவியாதென்பது பொருளாம். ஆகையினாலன்றோ நம் தாயுமான சுவாமிகள் "ஜகமீதிருந்தாலும் மரணமுண்டென்பது சதா நிஷ்டர் நினைவதில்லை, சிந்தையறியார்க்கிது போதிப்பதல்லவே செப்பினும வெகுதர்க்கமாம்" என்றறைந்தருளினர். ஞானங்க

விந்தபக்தியின் அருளாலம் இத்தகையதென்று உலகினருக்கு வெளிப்படையாகக் காட்டும்பொருட்டே அழுது அழுது அடிபடைந்த நம் மணிவாசகப்பிரான் “சாதல் சாதல் பொல்லாமை” எனவும், “செத்தேபோனார் சிறியோரே” எனவும், “சரணங்களெல்லாம் கடந்து நின்ற கறைமிடற்றன், சரணங்களே சென்று சார்தலுமே தானெனக்கு, மரணம் பிறப்பென்றிவை யிரண்டின் மயக்கறுத்த கருணைக் கடலுக்கே சென்றாதாய்க் கோத்தும்பீ” எனவுந் திருவாய்மலர்ந்தருளினதுமன்றி பரவெளியிற் பலருங் காணமறைந்தருளினார். சிவதருமோத்தரமும் “மரிப்பதினருந் துயர் மதிக்கின் மற்றிலை” என்றும், “பட்டிடப்படுந் துயர் பகரற்பாலதோ” என்றுஞ் சாற்றியது.

உலகத்தில் நிகழும் வழக்கம்போல் தேகங் கட்டையைப் போல் பிணவியலாய் விழுந்துபோதலும், உயிர் முத்தியடைதலும் பந்தவியல்பாகும். அது மேலான முத்தியன்று. என்னை! பிராரத்துவத்துக்கேற்ப தேகம் நழுவிப்போதல் இயல்புதானே யெனின் அதுவும் பொருத்தமன்று. பிராரத்துவம் சுபக்கமெனவும், மந்தமெனவும், தீவிரமெனவும் மூன்றுவிதப்படும். அவற்றுள் சுபத்தம் சிவதர்மங்களில் ஒருப்பட்டவரை வாதியாது. மந்தம் சிவஞானிகளை வாதியாது. தீவிரம் எல்லாரையும் வாதிக்குமாயினும் சிவஞானிகளை மிகுதியும் வாதியாது அதாவது, வெந்தபடம்போல் சத்தி கெட்டுப்போய் வாதனை மாத்திரையாய் நின்று சிறிதே தாக்குவதல்லது வாதனையாற் செய்யக்கடவது ஒன்றுமின்று. பெருங்காயம் இருந்தொழிந்த பாத்திரத்தில் அவ்வாசனையிருந்து கந்தித்தும், ஒரு கறிகதுப் உபயோகமாகாததுபோல் தேக நீங்குமளவுமிருந்து பின் அதனோடு மாய்ந்தொழிந்துபோம். ஆகையினாலே சிவாக்கினியாற் தகிக்கப்பட்ட ஜீவன் முக்தனுடைய சரீரம் அக்கினியில் நன்கு புடமிட்டபொன்போற்றிகழ்தலால் உருவச்சித்தி, அருவுருவச் சித்தி, அருவச்சித்தி என்னும் மூவகைச் சித்திகளுள் ஏதாவதொன்றை யடைதல்திண்ணம். அப்போதுதான் அச்சீவனுக்கு மேலொரு புனர்ஜன்மமில்லை யென்பது நிச்சயம். இவற்றிற்குப் பிரமாணம்-திருவாசகம் “மண்மேல் யாக்கை விடுமாறும் வந்துன் கழற்கே புகுமாறும், அண்ணா எண்ணக்கடவேனே” எனவும் தாயுமானசுவாமிகள் பாடல் “உலகநெறிபோற் சடலமோய வுயிர்

முத்தி. இலகுமெனல் பந்தவியல்பே பராபரமே" எனவும், "முத்தியிலுந் தேகமிசை மூலிகமாஞ் சித்திபெற்றோர், எத்தனைபேரென்றுரைப்ப தெந்தாய்பராபரமே" எனவும், "தேகம் யாதேனுமொரு சித்திபெற சீவன்முத்தி, யாநும் நெறி நல்ல நெறியையா பராபரமே" எனவும் வருமாறு காண்க. இத்திறவைதிகசைவ முத்தி பெறுவது மிகவும் அருமையானதென்று அச்சமுற்றோ அல்லது வேறெக்காரணத்தாலோ, ஏனைய சமயத்தினர் இதனைக் கொள்வாராயினரல்லர். நம்மாழ்வாரும் "சரணமாகுந் தனதாளடைந்தார்க்கெலாம், மரணமானபின் வைகுந்தங் கொடுக்கும் பிரான்" எனவும், "அமரர்தொழப்படுவானை யனைத்துலகுக்கும் பிரானை, அமரமனத்தினுள் யோகுபுணர்ந்தவன் றன்னோடொன்றாக, அமரத்துணிய வல்லார்களொழிய வல்லாதாரெல்லாம், அமரநினைந்தெழுந்தாடி யலற்றுவதே கருமமே" எனவும் அருளிச்செய்தனர். அவ்வாழ்வாரின் மதாபிமானவர்கள் யாவரும் இக்காலத்தில் ஆடிப்பாடி யலற்றுவதே கருமமாகக் கொண்டார்களேயன்றி முக்திசாதனமான அந்தர்யாக ராஜயோகத்தைக் கைப்பற்றினவர்களல்லர். இது எல்லாருந் தெரியும் பிரசித்தமான லௌகிகவிஷயம். பகிர்முக அந்தப்பரிபாடி அத்துவித சொரூபஞானத்தை ஒருபோதும் பயவாது. நிர்க்குணசிவம், தானாகி நிற்கும் ஞானநிஷ்டையே நிஷ்டை. அது எளிதில் கைகூடுவதன்று. "யோகியர்க்கே ஞானமெளிதாம் பேரன்பான, ஞானியரும் யோகமுன்னே சார்ந்தோர் பராபரமே" என்று கட்டளையிட்டருளினார் நம் தாயுமான சுவாமிகள்.

பு.—பிரணவமென்னுஞ்சொற்குச் சப்தார்த்தம்யாது!

ஆ—விளக்குதும். கேட்பாயாக.

அதர்வணவேத அதர்வசிகோபநிஷத்.

𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 𑌪𑍍𑌰𑌣𑌾𑌮𑌯𑌤𑍀𑌤𑌿 𑌪𑍍𑌰𑌣𑌵𑌃
𑌚𑌤𑍁𑌰𑍍𑌧𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌤 𑌇𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑌦𑍇𑌵 𑌵𑍇𑌦𑌯𑍋𑌨𑌿𑌃
𑌸𑌰𑍍𑌵𑌵𑌾𑌚𑍍𑌯 𑌵𑌸𑍍𑌤𑍁 𑌪𑍍𑌰𑌣𑌵𑌾𑌤𑍍𑌮𑌕𑌃
ப்ராணாந் ஸர்வாந் பரமாத்மநி ப்ரணாமயதீதி ப்ரணவ:
சதுர்த்தாவஸ்தித இதி ஸர்வதேவ வேதயோநி:
ஸர்வவாச்ய வஸ்து ப்ரணவாத்மக: ।

இ-ள்) "எல்லாப் பிராண விருத்திகளையும் பரமாத்மாவினிடத்தில் சேர்ப்பிக்கின்றமையால் பிரணவமென்று சொல்லப்

படும். நான்காயிருப்பதால் எல்லாத்தேவர்களுக்கும் எல்லா வேதங்களுக்குங் காரணம். எல்லா வாச்யப்பொருள்களும் பிரணவசொரூபமாகும்.” எனவும்,

அதர்வணவேத அதர்வசிரோபநிஷத்.

𑌅𑌥 𑌕𑌸𑍍𑌮𑌾𑌦𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌪𑍍𑌰𑌣𑌵𑌃 𑌯𑌸𑍍𑌮𑌾𑌦𑍁𑌚𑍍𑌚𑌾𑌰𑍍𑌯𑌮𑌾𑌣 𑌏𑌵
𑌋𑌚𑍋𑌯𑌜𑍂𑌂𑌷𑌿 𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌥𑌰𑍍𑌵𑌾𑌙𑍍𑌗𑌿𑌰𑌸𑌶𑍍𑌚
𑌯𑌜𑍍𑌞𑍇𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍇𑌭𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑌣𑌾𑌮𑌯𑌤𑌿
𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌪𑍍𑌰𑌣𑌵𑌃।

அதகஸ்மாதுச்யதே ப்ரணவ: யஸ்மாதுச்சார்யமாண ஏவ
ருசோயஜூம்ஷி ஸாமான்ய தர்வாங்கிரஸச்ச
யஜ்ஞேப்ரஹ்மச ப்ராஹ்மணேப்ய: ப்ரணாமயதி
தஸ்மாதுச்யதே ப்ரணவ: ।

(இ-ள்) “இனி எதுபற்றி பிரணவமென்று சொல்லப்படுகின்றான், எதனால் உச்சரித்தவுடனே ருக், யஜுர், ஸாமம். அதர்வணம் என்னும் வேதங்கள் நான்கையும், அவற்றின் பிரதிபாத்தியனான பரமேசுவரனாகிய தன்னையும் பிராமணர்களுக்கு யஞ்ஞத்தில் தோற்றுவிக்கின்றான் அதனாலே பிரணவன் என்று சொல்லப்படுகின்றான்” எனவும் மொழிந்தன. ஆசாரியாபிமானம் மேலிட்ட பிரணவோபாசகன் ஆசாரியனுடைய திருவடிகளைப் பணிந்து அவனுபதேசித்தபடியே நிஷ்டைகூட அப்பியாசித்தவுடன் அவனுடைய இந்திரியங்களும், பிராணன்களும், அந்தக்கரணங்களும் எளிதில் லயமடைந்து விடுகின்றன. அப்பொழுது அவனுக்குப் பிரணவசித்தி எய்துகிறது. அதனால், பிரபஞ்ச சொரூபமறிந்தவன் பிரபஞ்சவிகாரங்களை யெல்லாம் எளிதிலுணர்வதுபோல, பிரணவ சொரூபமறிந்தவன் அதன் காரியபேதங்களனைத்தையும் அறிந்தவனாகின்றான். அவன் நினைத்தமாத்திரத்தில் சர்வ வேதங்களும் அவனுக்கு முன்னிலைப்படும். அப்பொழுது அவற்றின் ரஹஸியார்த்தங்களை சுலபமாய்த் தெரிந்துகொள்ளுகிறான். பிரணவம் என்னுஞ்சொல் “நு” துதித்தல் என்னுந் தாதுவினின்றுந் தோன்றியது. பிறகு தோத்திரம் என்றபொருளில் “நவ:” என்னுஞ் சொல்லுண்டாக அதனோடு “ப்ர” என்ற உபசர்க்கஞ் சேர்ந்து “ப்ரணவ:” என்றாயிற்று. அதனால் பிரணவத்தினின்றுந் தோன்றிய சமஸ்தவாக்கியங்களும் பிரணவாபின்ன தேவதையாகிய பரப்பிரம சிவத்தின்

தோத்திரங்களாய் அமைவுறுவனவாயின. தோத்திரம் என்பது குணமுடைய பொருளினிடத்து அக்குணங்களை யெடுத்துப் புகழ்ந்து கூறுதல். உலகத்திலுள்ள எல்லாப் பொருளின் கண்ணும் அவ்வப்பொருட்குச் சிறப்பியல்பா யமைந்துள்ள சுகுணம் பரம சிவசொரூபமேயாம். ஆகையினாலே பரமசிவனே எல்லாத் தோத்திரங்கட்கும் உரியவராகின்றனர். ஒரு சக்கரவர்த்தியின் அதிகாரம் மந்திரிமுதல் கிராமாதிகாரிவரையிலும் மேலும் கீழுமாய் வகுத்து அளிக்கப்படினும் அவர்கள் யாவரிடத்தும் ஜனங்கள் செலுத்தும் கௌரவமுதலியன அரசன்பாற் செலுத்துங் கடமையேயன்றோ. அதுபோல எல்லாக் கடவுளருக்குச் செய்யும் நமஸ்காரமும் எல்லாக் கடவுளரும் தாமாக விளங்கப்பெற்ற சிவபெருமா னொருவருக்கே சொந்தமாகும். நமஸ்காரமெல்லாப் பரமசிவத்தின் சொந்தமென பல வேதபாகங்கள் நிரூபிக்கின்றமையால் அவருக்குச் செய்யும் பலவகை வழிபாடுகளில் நமஸ்காரம் ஒன்றே மிகச் சிறந்ததாகும். இக்கருத்தை அகத்திற் கொண்டே ருக்வேதத்தில் பல மந்திரங்கள் பின்வருமாறு கூறப்பட்டுள்ளன :—

𑌸𑍍𑌤𑍋𑌮𑌂𑌵𑍋 𑌅𑌦𑍍𑌯 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌯 𑌶𑌿𑌕𑍍𑌵𑌸𑍇 | 𑌕𑍍𑌷𑌯𑌦𑍍𑌵𑍀𑌰𑌾𑌯 𑌨𑌮𑌸𑌾 𑌦𑌿𑌦𑌿
𑌷𑍍𑌟𑌨 | 𑌯𑍇𑌭𑌿𑌶𑍍𑌶𑌿𑌵𑌸𑍍𑌸𑍍𑌵𑌵𑌾𑌁 𑌏𑌵𑌯𑌾𑌵𑌭𑌿𑌰𑍍 | 𑌦𑌿𑌵𑌸𑍍𑌸𑌿𑌷𑌕𑍍𑌤𑌿
𑌸𑍍𑌵𑌯𑌶𑌾 𑌨𑌿𑌕𑌾𑌮𑌭𑌿𑌃 |

ஸ்தோமம் வோ கத்யருத்ராய சிக்வஸே ! க்ஷயத்வீராய நமஸாதி
திஷ்டந । ஏபிச்சிவஸ்வ வாம் எவயா வபி: । திவஸ்ஸிஷக்தி
மருதோ நிகாமபி: ।

(இ-ள்) "ஓ தேவர்களே! உங்களைக் குறித்து நாங்கள் செய்த தோத்திரங்களையும் வணக்கங்களையும் எல்லாம் வல்ல உருத்திரமூர்த்தியினிடத்து அர்ப்பியுங்கள். இவற்றிற்கெல்லாம் உரியவர் அவரேயாம். அவர் நீங்கள்கொண்ட வெண்ணத்தை நிறைவேற்றி உங்களை அநுக்கிரகிப்பர்."

(1) 𑌨𑌮𑌶𑍍𑌶𑍍𑌲𑍋𑌕𑍍𑌯𑌾𑌯𑌚| (2) 𑌇𑌮𑌂 𑌸𑍍𑌤𑍋𑌮𑌮𑌰𑍍𑌹𑌤𑍇 ||

(1) நமச்லோக்யாயச । (2) இமம் ஸ்தோமமர்ஹதே ॥

(இ-ள்) (1) "தோத்திரங்களுக் குரியவரை வணங்குவாம். (2) இத்தோத்திரத்துக் கேற்றவர்."

(1) 𑌇𑌦𑌂 𑌪𑌿𑌤𑍍𑌰𑍇 𑌮𑌰𑍁𑌤𑌾𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌵𑌚𑌃| 𑌸𑍍𑌵𑌾𑌦𑍋𑌃 𑌸𑍍𑌵𑌾𑌦𑍀-
𑌯𑍋 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌯 𑌵𑌰𑍍𑌧𑌨𑌂| (2) 𑌇𑌮𑌾 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌯 𑌸𑍍𑌥𑌿𑌰𑌧𑌨𑍍𑌵𑌨𑍇 𑌗𑌿𑌰𑌃|

𑌗𑍃𑌣𑍀𑌮𑌸𑌿 𑌤𑍍𑌵𑍇𑌷𑌂 𑌰𑍁𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌨𑌾𑌮॥ (3) 𑌤𑌮𑍁 𑌷𑍍𑌟𑍁𑌹𑌿।

(1) இதம் பித்ரேமருதா முச்யதேவச: । ஸ்வதோஸ்வாதீயோ ருத்ரஸ்யவர்தநம் । (2) இமாருத்ராய ஸ்திரதந்வநேகிர: । க்ருணீமஸித்வேஷம் ருத்ரஸ்யநாம ॥ (3) தமுஷ்டுஹி ।

(இ-ள்) (1) "தேவதைகளின் பிதாவாகிய உருத்திரமூர்த்தி திருப்தியடையவேண்டி இனிமையினும் இனிமையான சொற்களை அவருக் களிப்போம். (2) ஸ்திரமான வில்லையுடைய உருத்திரமூர்த்திக்கு இவ் வாக்குகளை அர்ப்பிப்போம். பிரகாசமுள்ள உருத்திர நாமதேயங்களைக் கிரஹிப்போம். (3) அவரையே துதிப்பாயாக."

அன்றியும், அதர்வணவேத ஸம்ஹிதையில் பதினோராங் காண்டம், இரண்டாம் அத்தியாயமாகிய ஸ்ரீ ருத்ராத்தியாயம்.
𑌮𑍋𑌪𑌾𑌰𑌾𑌮 𑌜𑌿𑌹𑍍𑌵𑌯𑍇𑌯𑌮𑌾𑌨𑌂 - மோபாராம ஜிஹ்வயேயமாநம்.

(இ-ள்) "நாவினால் அடையப் படுபவரை என்றும் ஒழியற்க". என்றுணர்த்தியது. இவ் வேதவாக்கியங்களினாலே மும்மூர்த்திகளுக்கும் மேலாய்த்திகழும் ஓங்காரவாச்சிய பரமேசுவரரே சகலவேத புராணேதிஹாசங்களால் வந்திக்கப்படும் பிரமமெனவும், மற்றைய தேவர்களைத் துதித்தல் கௌணமெனவும் நன்கு நிரூபிக்கப்பட்டனர். இவ்வுண்மையையே கஞ்சனூர்ச் செல்வராகிய ஹரதத்த யோகிகளும் போகாவலியில் விரித்திருக்கின்றார். அவ்விரிவை அங்கே காண்க.

அல்லாமலும், "சர்வ வேதங்களும் எப்பதத்தைப் பகர்கின்றனவோ, பதங்களெல்லாம் எப்பதத்தைச் சொல்கின்றனவோ, பிரமசரியத்திருப்போர் எப்பதத்தை விரும்புகின்றனரோ அப்பதத்தைச் சங்கிரகமாக "ஓம்" என்று உனக்குச் சொல்லுகிறேன்" என்னும் பொருள் போதர

கிருஷ்ணயஜுர்வேத கடோபநிஷத்.

𑌸𑌰𑍍𑌵𑍇 𑌵𑍇𑌦𑌾 𑌯𑌤𑍍𑌪𑌦𑌮𑌾𑌮𑌨𑌨𑍍𑌤𑌿 𑌤𑌪𑌾𑌂𑌸𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌚 𑌯𑌦𑍍𑌵𑌦𑌨𑍍𑌤𑌿।
𑌯𑌦𑌿𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌂 𑌚𑌰𑌨𑍍𑌤𑌿 𑌤𑌤𑍍𑌤𑍇 𑌪𑌦𑌂 𑌸𑌙𑍍𑌗𑍍𑌰𑌹𑍇𑌣
𑌬𑍍𑌰𑌵𑍀𑌮𑍍𑌯𑍋𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌤𑌤𑍍॥

ஸர்வேவேதாயத்பதமாமநந்தி தபாம்ஸிஸர்வாணி சயத்வதந்தி ।
யதிச்சந்தோ ப்ரஹ்மசர்யம்சரந்தி தத்தேபதம் ஸங்க்ரஹேண
ப்ரவீம்யோமித்யேதத்॥..........என்று சாற்றியது.

இதனாலே பிரணவமே ஸர்வ வேத மூலமெனவும், அதுவே எல்லாத்தவமெனவும் அதைவிரும்பியே பெரியோர் பிரமசரியம் பெறுவரெனவும் ஸ்தாபிக்கப்பட்டது. படவே சமஸ்தவேதங்களுக்கும் மூலமாயுள்ள "ஓம்" என்னும் பதத்தால் நிர்ணயிக்கப்பட்டபொருள் சாக்ஷாத் சிவபெருமான் என்றே அறிவுறுத்தப்பட்டது.

மா.—தாரம் என்னும் பதத்தின் பொருளைப் பலசமயிகள் பலவாறாகக்கூறுதலால் அதன் இரகசியப் பொருளையும் விளக்கியருள வேண்டும்.

ஆ.—அப்படியேசொல்லுகிறோம். கவனமாய்க்கேட்பாயாக.

அதர்வணவேத அதர்வசிகோபநிஷத்.

𑌸𑌰𑍍𑌵𑍇𑌭𑍍𑌯𑍋 𑌦𑍁𑌃𑌖𑌭𑌯𑍇𑌭𑍍𑌯𑌃 𑌸𑌨𑍍𑌤𑌾𑌰𑌯𑌤𑍀𑌤𑌿 𑌤𑌾𑌰𑌣𑌾𑌤𑍍𑌤𑌾𑌰𑌃।

ஸர்வேப்யோ து:கபயேப்யஸ் ஸந்தாரயதீதி தாரணாத்தார:।

(இ-ள்) "எல்லாவித துக்க பயங்களினின்றுந் தாரணஞ்செய்விப்பதால் தாரம் என்று சொல்லப்படுகிறது" எனவும்,

அதர்வணவேத அதர்வசிரோபநிஷத்.

𑌅𑌥 𑌕𑌸𑍍𑌮𑌾𑌦𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌤𑌾𑌰𑌂 𑌯𑌸𑍍𑌮𑌾𑌦𑍁𑌚𑍍𑌚𑌾𑌰𑍍𑌯𑌮𑌾𑌣 𑌏𑌵 𑌗𑌰𑍍𑌭 𑌜𑌨𑍍𑌮 𑌜𑌰𑌾𑌮𑌰𑌣 𑌸𑌂𑌸𑌾𑌰𑌮𑌹𑌤𑍍𑌭𑌯𑌾𑌤𑍍 𑌸𑌨𑍍𑌤𑌾𑌰𑌯𑌤𑌿 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌤𑌾𑌰𑌂।

அதகஸ்மாதுச்யதே தாரம் யஸ்மாதுச்சார்யமாணஏவ கர்ப்ப ஜந்ம ஜராமரணஸம்ஸாரமஹத்பயாத் ஸந்தாரயதி தஸ்மாதுச்யதே தாரம்।

(இ-ள்) "இனி எதனால் தாரமெனப்படுவான். எதனால் உச்சரித்தமாத்திரத்தில் கர்ப்பம், ஜன்மம், ஜரை, மரணம் ஆகிய சம்சாரமகாபயத்தினின்றுந் தாண்டும்படிச்செய்வான் அதனால் தாரம் எனப்படுவான்" எனவும் மொழிந்தன. சம்சாரபயமாவது—கருக்குழியிலமைதலும், யோனிவாய்ப்பட்டுப்பிறத்தலும், பலவகைச் சரீராவஸ்தைகளையடைதலும், சரீரம் நீங்கினபின் பலபல நரகயாதனாதிகளை அநுபவித்தலும், யான் எனது என்னும் அகங்காரமமகாரங்களுக்கு இருப்பிடமாகிய சரீரம், மனைவி, மக்கள், பந்து, மித்திரர், வீடு, நிலம், குளம், கூவம், தோட்டம் முதலியவைகளிடம் அபிமானம் வைத்திருத்தலுமேயாம். இவற்றால்விளையும் அபாயங்களோ அபாரமாகும். இத்தகைய மகாபயத்தினின்றுந் தாண்

டிச்செல்வதற்கு இப்பிரணவமே பரமதாரகமாயிருத்தலால் இதை த்தாரமென்று ஆரணங்கள் வழங்கின. தாரம் என்ற சொல்லுக்குப் பொருளாயுள்ளவர் பரமசிவனேயாம். “ [illegible] நமஸ்தாராய நமச்சம்பவேச மயோபவேச” என்றற்றொடக்கத்தனவான ஸ்ரீ ருத்ரநமகத்திலுள்ள தாரசப்தம் அவரையே பிரதிபாதிக்கின்றது. ஆத்மாக்களுக்குப் புனர்ஜனனம் உண்டாகாது காக்கும் புண்ணியமூர்த்தியும் அவரே. அவரொருவரே ஜனனமரணமென்னும் கொடியபவப்பிணியணுகப் பெறாத முழுமுதற்கடவுள். ஏனையபிரமன்மால் முதலிய சமஸ்த சுரர்களும் ஸர்வஞ்ஞர்களாயும் ஈசுவரர்களாயும் இருப்பினுங்கூட அவர்களனைவரும் அக்கொடிய பவப்பிணியை யகற்றிக்கொள்ள சக்தியற்றவர்கள். அவர்கள் ஏதாவதொருகாரியத்தை முன்னிட்டுத்தங்கள் இச்சையாலாவது பிறர்சங்கற்பத்தாலாவது கருக்குழி நாற்றங்கமழப்பெறுஞ் சர்ப்பவாசத்தையடைந்து பிறக்கின் ர்களென்றால் அதுவுங் குற்றங்குற்றமே. “மற்றைத்தெய்வங்கள் வேதனைப்படுமிறக்கும். பிறக்குமேல் வினையுஞ்செய்யும்” என்னுஞ் சிவஞான சித்தியாரின் பிரமாணப்படி அத்தகைய குற்றங்கள் சிறிதும் அணுகப்பெறாத ஒருபொருளுண்டாயின் அது அவர்களினுஞ் சிறந்ததன்றோ. பிறவியென்னும் பெரும்பிணி நீக்காதபோது பிறர்சங்கற்பத்துக்கும் கர்மத்துக்கும்வசப்பட்டே தீரவேண்டும்.

அப்பொழுது தாம்கருதியவண்ணம் எதையும் பூர்த்திசெய்பக்கூடாமையாய்விடும். பலவித இடையூறுகளுக்கும் ஆளாகவேண்டிவரும். அதனால் அவர்களுக்குச் சுதந்தரஹீனம் சம்பவிக்கும். இவ்வித பல ஏதுக்களால் அரிபிரமாதி அமரர்களனைவரும் சுருதியிலோதியவாறு ஜீவர்களாதலின் சம்சாரமகாபயத்துக்கு உட்பட்டவர்களென்றே ஆரணங்கள் பலவிடத்தும் பன்முறையும் அறைகின்றன. அவர்களில் ஒருவரும் மோக்ஷதாதாவாகக் கருதப்பட்டிருக்கவில்லை. பிறவிப்பிணியால் பீடிக்கப்பட்டிருக்கிற ஜீவர்களைக் காக்கவேண்டுமாயின் அப்பிணிபிடித்து அலைகின்றவர்களுக்கு அது சாத்தியமாகுமோ! அம்புலிசூடிய அம்பிகைபாகனை எம்பிரானொருவனே திரிமூர்த்திகளையும் ஈன்ற துரியமூர்த்தியாதலின் அவனே பிறப்பிலிப்பெருமானவன். அவனை ஈன்றவர்கள் ஒருவருமேயில்லை. அவன் இயல்பாகவே

பாசங்களினின்றும் நீங்கி சர்வசுதந்தரனாய் விளங்குபவன். அவனே தாரபத்துக்குப் பொருளாயுள்ளானென்பது சர்வவேதாந்த பிரதிபந்நம். மோக்ஷதாதா, ஞானதாதா, ஆத்மபந்து, சர்வசொரூபன் அவனேயாம்.

கிருஷ்ணயஜுர்வேத ச்வேதாச்வதரோபநிஷத்.

𑌅𑌜𑌾𑌤 𑌇𑌤𑍍𑌯𑍇𑌵𑌂 𑌕𑌶𑍍𑌚𑌿𑌦𑍍𑌭𑍀𑌰𑍁𑌃 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌤𑍇
𑌰𑍁𑌦𑍍𑌰 𑌯𑌤𑍍𑌤𑍇 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌮𑍁𑌖𑌂 𑌤𑍇𑌨 𑌮𑌾𑌂 𑌪𑌾𑌹𑌿 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑍍

அஜாதஇத்யேவகச்சித்பீரு: ப்ரபத்யதே
ருத்ரயத்தே தக்ஷிணமுகம் தேநமாம் பாஹிநித்யம்॥

(இ-ள்) "ஜனனமரணசம்சாரத்துக்குப்பயந்த ஒருவன் பிறக்காதவனென்றே உன்னைவழிபடுகின்றான். ஏருத்ரா! எது உனது தென்முகம் அதனால் என்னைநித்தியமுங்காப்பாயாக" எனவும்,

𑌨 𑌤𑌸𑍍𑌯 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌪𑌤𑌿𑌰𑌸𑍍𑌤𑌿 𑌲𑍋𑌕𑍇 𑌨 𑌚𑍇𑌶𑌿𑌤𑌾 𑌨𑍈𑌵 𑌚 𑌤𑌸𑍍𑌯
𑌲𑌿𑌙𑍍𑌗𑌮𑍍 । 𑌸 𑌕𑌾𑌰𑌣𑌂 𑌕𑌰𑌣𑌾𑌧𑌿𑌪𑌾𑌧𑌿𑌪𑍋 𑌨 𑌚𑌾𑌸𑍍𑌯 𑌕𑌶𑍍𑌚𑌿𑌜𑍍
𑌜𑌨𑌿𑌤𑌾 𑌨 𑌚𑌾𑌧𑌿𑌪𑌃 ॥

நதஸ்யகச்சித்பதி ரஸ்திலோகே நசேசிதாநைவசதஸ்யலிங்கம்।
ஸகாரணம் காரணாதிபாதிபோ நசாஸ்யகச்சிஜ்ஜநிதாநசாதிப:॥

(இ-ள்) "உலகத்தில் அவ்வுருத்திரமூர்த்திக்கு மேலானபதியுமில்லை. பிரபுவுமில்லை. அவருக்குக் குறியுமில்லை. அவரேகாரணர். காரணாதிபதிகளுக்கு அதிபர். அவரைப்பிறப்பித்தவரும் அவருக்கு நாயகருமில்லை" எனவும்,

𑌜𑌨𑍍𑌮𑌨𑌿𑌰𑍋𑌧𑌂 𑌪𑍍𑌰𑌵𑌦𑌨𑍍𑌤𑌿 𑌯𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌾𑌦𑌿𑌨𑍋 𑌹𑌿 𑌪𑍍𑌰𑌵𑌦
𑌨𑍍𑌤𑌿 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑍍 ॥

ஜந்மநிரோதம் ப்ரவதந்தியஸ்ய ப்ரஹ்மவாதிநோயம் ப்ரவதந்திநித்யம்॥

(இ-ள்) "எவருக்குஜன்மமில்லை. எவர் நித்யர் என்று பிரம்மவாதிகள் சொல்வார்கள்" எனவும்,

𑌅𑌜𑌂 𑌧𑍍𑌰𑍁𑌵𑌂 𑌸𑌰𑍍𑌵𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑍈𑌰𑍍𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌮𑍍 ।

அஜம்த்ருவம் ஸர்வதத்வைர் விசுத்தம்।

(இ-ள்) "பிறப்பில்லாதவர். நித்தியர். தத்துவங்களையெல்லாங்கடந்தவர்" எனவும் முழக்கிப்போந்தன. இவ்வாக்கியங்களால் துரீயருத்திரமூர்த்தியின்பிறப்பு வேதத்தில் கேட்கப்படவில்லையென்பது பசுமரத்தறைந்த ஆணிபோன்றதாம். "பிறப்

பில் பெருமானைபின்றாழ்சடையானை'' என்றது தமிழ்மறை. “பிறப்பிலிபிஞ்ஞகன் பேரருளாளன், இறப்பிலியாவர்க்குமின்பமருளும்” என்றார் திருமூலதேவர். “பிறப்பதுமிறப்பதும் பெயருஞ் செய்கையு. மறப்பது நினைப்பதும் வடிவும் யாவையுந், துறப்பதுமின்மையும் பிறவுஞ் சூழ்கலா, சிறப்புடையரனடி சென்னிசேர்த்துவாம்” என்றார்கச்சியப்பசிவாசாரியர்.

என்னை! ‘‘[illegible] ஜாயதே-நாராயணாத்ருத்ரோஜாயதே-நாராயணனிடத்திலிருந்து உருத்திரன் பிறந்தான்'' என்று கிருஷ்ணயஜுர்வேத நாராயணோபநிஷத்தும், ‘‘[illegible]- ப்ரஹ்மண:புத்ராய'' என்றதற்றொடக்கத்தவாக்கியத்தில் பிரமனுடையபுத்திரர் இவர்'' இவரை (துரீயசிவனுக்கேரூபமாக உரிய) பசுபதி, சர்வர், பவர், உருத்திரர், உக்கிரர், பீமர், ஈசானர், மகாதேவர் என்னும் அஷ்டநாமங்களைக்கொண்டு இவர் தந்தையாகியபிரமா அழைத்தாரென்று ருக்வேத சாங்காயனப் பிராம்மணமும், ஸாமவேத சதபதப் பிராம்மணமும் கூறுதலால், உருத்திர மூர்த்தியைப்பிறக்காதவரென்று எவ்வாறு அங்கீகரிக்கக் கூடுமென்றாலோ, அதர்வசிகை, அதர்வசிரஸ், கைவல்லியம், சுவேதாசுவதரம், சரபம், பஸ்மஜாபாலம், பிரமம், முதலியபல உபநிஷத்துக்கள் பிரமன், விஷ்ணு, உருத்திரன் என்னுந் திரிமூர்த்திகளுக்கும் ஜனகர் துரீயப்பிரமமாகிய குணத்திரயாதீத ருத்ரமூர்த்தி என்று நிருபித்திருத்தலால் வேதங்களில் ஒருவனையே பெற்றவனாகவும் பிறந்தவனாகவுங் கூறுவதாகப்பொருள்கொண்டு அவ்வேதவாக்கியங்களை அப்பிரமாணமாக்குதல் முற்றும் அசம்பாவிதமாகும். ஆதலால் பிறவாத்தன்மையைச்சர்வகாரணருத்திர மூர்த்தியினிடத்தும் பிறப்பைக் காரியமூர்த்தியினிடத்துஞ் சேர்த்திடல்நடுநிலை நின்றவைதிகர்களனைவருக்கும் ஒப்பமுடிந்ததீர்வையாகும் இந்தத் துரீயப்பொருளினிடமே சர்வ வேதாந்தங்களும் நிலைபெறுகின்றன. இதுவே சமஸ்த பிரமவித்துக்களாலும் அடையற்பாலதான பரமதத்துவம். சர்வாந்தர்யாமிபாவத்தால் பரிபூரணசொரூபமாய் விளங்கும் பொருளும் இதுவேயாம். வேதங்களில் மிகவும் ரகசியமென உபநிஷத்துக்களிற் மறைக்கப்பட்ட பிரம்ப்பொருள் இத்துரீயசிவமே. இதுவன்றி வேறுதாரகம் சிற்றுயிர்களுக்கில்லையில்லை. சுவேதாசுவதரமும்,

𑌤𑌦𑍍𑌵𑍇𑌦𑌗𑍁𑌹𑍍𑌯𑍋𑌪 𑌨𑌿𑌷𑌤𑍍𑌸𑍁𑌗𑍂𑌢𑌂
தத்வேதகுஹ்யோப நிஷத்ஸுகூடம் ... என்றது.

இவ்வுண்மை குருபக்தி சிவபக்தி நிறைந்த ஒருவர்க்கே விளங்கும். அவை யில்லாதார்க்கு கன்மேல்மழை, கானகத்துநிலா முதலியவற்றைப்போல் வாளாவொழியும்.

பராசர புராணமும்.

𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑍇𑌷𑍁 𑌪𑍁𑌰𑌾𑌣𑍇𑌷𑍁 𑌯𑍋𑌽𑌪𑌕𑌰𑍍𑌷𑌸𑍍𑌤𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇।
𑌰𑍁𑌦𑍍𑌰𑌸𑍍𑌯𑍈𑌵 𑌹𑌰𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌯 𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌰𑍇𑌵 𑌕𑍇𑌵𑌲𑌮𑍍॥
வைஷ்ணவேஷு புராணேஷு யோऽபகர்ஷஸ்தத்ருச்யதே :
ருத்ரஸ்யைவ ஹரஸ்யாஸ்ய விபூதிரேவ கேவலம் ||

(இ-ள்) "வைஷ்ணவபுராணங்களிலே எந்தஉருத்திரர் அபகர்ஷமுடையராய்த் தோன்றுகின்றாரோ அந்தஉருத்திரர் இந்தத்துரீயசிவனது கேவலம் விபூதியாம் (காரியமூர்த்தியாம்)" எனப் போதித்துள்ளது. ஆகையால் சுருதிகளில் உருத்திரருக்கு அபகர்ஷங்காணுமிடந்தோறும் இவ்வாறே பொருள்கொள்ளவேண்டுமென்பது சர்வவேதாந்த வேதிகளின் தீர்மானம். உபப்பிருங்கணமாகிய சிவமகா புராணம்.

𑌅𑌜𑌾𑌤𑌮𑌿𑌮𑌮𑍇𑌵𑍈𑌕𑌂 𑌮𑌤𑍍𑌵𑌾 𑌜𑌨𑍍𑌮𑌭𑍀𑌰𑌵𑌃।
𑌰𑍁𑌦𑍍𑌰𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌰𑌕𑍍𑌷𑌾𑌰𑍍𑌥𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌮𑍁𑌖𑌮𑍍॥
அஜாதமிமமேவைகம் மத்வாஜந்மபீரவ:
ருத்ரஸ்யாஸ்யப்ரபத்யந்தே ரக்ஷார்த்தம் தக்ஷிணம் முகம்||

(இ-ள்) "இந்த (துரீயருத்திரமூர்த்தி) ஒருவரே பிறவிப்பிணியற்றவரென நம்பி ஜனனத்தில் அச்சமுற்றோன் இவருடைய தென்திருமுகத்தைக் காத்தலுக்காகச்சரணமடைவன்" என்று மேற்காட்டிய மந்திரோபநிஷத் வாக்கியத்தைத் தெளிவாய்விரித்தது. சர்வேசுவரன மகேசுவரன், பரமேசுவரன், விசுவேசுவரன் முதலிய திருநாமங்கள் அத்துரீயப்பொருளுக்கே அமைவனவன்றி ஏனையோருக்கு எட்டுணையும் அமைவனவல்ல. அத்தகைய அசாதாரண இலக்கணங்களமைந்த சிவபிரானொருவரே யாவராலும் வழிபடத்தக்க சர்வபிராம்மணகுலதேவதையென்று வேதங்களே குருவாய்நின்று அடியில்வருமாறு உபதேசியாநின்றன.

கிருஷ்ணயஜுர்வேத சுவேதாசுவதரோபநிஷத்.

𑌤𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑌾𑌣𑌾𑌂 𑌪𑌰𑌮𑌂 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌂 𑌤𑌂 𑌦𑍈𑌵𑌤𑌾𑌨𑌾𑌂 𑌪𑌰𑌮𑌂 𑌚
𑌦𑍈𑌵𑌤𑌮𑍍 । 𑌪𑌤𑌿𑌂 𑌪𑌤𑍀𑌨𑌾𑌂 𑌪𑌰𑌮𑌂 𑌪𑌰𑌸𑍍𑌤𑌾𑌦𑍍 𑌵𑌿𑌦𑌾𑌮
𑌦𑍇𑌵𑌂 𑌭𑍁𑌵𑌨𑍇𑌶𑌮𑍀𑌡𑍍𑌯𑌮𑍍 ॥

தமீச்வராணும் பரமம் மஹேச்வரம் தம்தைவதாநாம்பரமஞ்சதைவதம்।
பதிம்பதீநாம்பரமம்பரஸ்தாத் விதாமதேவம் புவநேசமீட்யம்॥

(இ-ள்) "ஈசுவரர்களாகிய மும்மூர்த்திகளுக்கும் மேலோராய்த்திகழும் மகேசுவரரும், அக்கினி முதலிய தேவர்களுக்குச் சிறந்தோராய்விளங்கும் மகாதேவரும், இந்திரன் முதலிய பதிகளுக்கும் பரமராய் இலங்கும் பசுபதியும், புகழத்தக்க புவனேசுவரரும், தமசுக்கு அப்பாற்பட்ட தேவரே என அறிவோம்." எனவும்,

‘𑌨 𑌤𑌸𑍍𑌯 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌕𑌰𑌣𑌂 𑌚 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌨 𑌤𑌤𑍍𑌸𑌮𑌶𑍍𑌚𑌾𑌭𑍍𑌯𑌧𑌿
𑌕𑌶𑍍𑌚 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇 । 𑌪𑌰𑌾𑌸𑍍𑌯 𑌶𑌕𑍍𑌤𑌿𑌰𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑍈𑌵 𑌶𑍍𑌰𑍂𑌯𑌤𑍇 𑌸𑍍𑌵𑌾𑌭𑌾
𑌵𑌿𑌕𑍀 𑌜𑍍𑌞𑌾𑌨𑌬𑌲𑌕𑍍𑌰𑌿𑌯𑌾 𑌚 ॥

நதஸ்ய கார்யம் கரணஞ்ச வித்யதே நதத்ஸமச்சாப்யதிகச்ச வித்யதே।
பராஸ்யசக்திர் விவிதைவச்ரூயதே। ஸ்வபாவிகீ ஜ்ஞாந பலக்ரியாச॥

(இ-ள்) "அவருக்குக் காரியமுமில்லை கரணமுமில்லை. அவருக்குச் சமானருமில்லை அதிகருமில்லை. அவருடைய சக்திபரையெனவும் பல்வகையாகவுங் கேட்கப்படுகின்றனர். ஆயினும் இயற்கையிலமைந்தது ஞானமும் பலமுங் கிரியையுமாம்." எனவும் போந்தன.

இவ்வாக்கியங்களால் வேதங்களுக்குப் பேரணியாயுள்ள பரமேசுவரரை எந்நாளும் புகழ்வதும், பாடுவதும், உணர்த்துவதுமே அவைகளுக்குப் பெருமையென்றாயிற்று. அதனால் சமஸ்த வேதபுராணேதிகாசங்களால் புகழப்படுபவரும் உணர்த்தப்படுபவரும் அவரேயாம். அவரே வேதோக்தமான வைதிக சைவநெறி நின்றோராகிய எம்மனோரால் எக்காலமும் வழிபடும் நான்காவது தெய்வம். அவர் பஞ்சகிருத்திய அதிகாரஞ்செய்து நிற்குந்தன்மையில் பதி எனவும், அவ்வதிகாரத்தினின்றும் நீங்கித் தன்னியல்பில் அறிவுமாத்திரையாய் நிற்குந்தன்மையில் சிவம் எனவும் போற்றப்படுகின்றனர். காந்திப்பொருளில் வரும் "வஶ - வச" என்னும் வினைப்பகுதியினின்றும் "ஶிவ-சிவ" என்

னுஞ் சொல் பிறந்தமையானும், “𑌵𑌶𑌕𑌾𑌨𑍍𑌤𑍌 - வசகாந்தௌ” என்று பாணினி வியாகரணசூத்திரம் அதை விளக்கினமையானும், “𑌪𑌶𑍍𑌯𑌕𑌃 - பச்யக:” என்பது “𑌕𑌶𑍍𑌯𑌪𑌃 - கச்யப:” எனவும், “𑌹𑌿𑌂𑌸𑌿 - ஹிம்ஸி” என்பது “𑌸𑌿𑌂𑌹 - ஸிம்ஹ” எனவும் வர்ணவிபர்யயமுற்று வந்தாற்போல, “𑌵𑌶 - வச” என்னுந் தாதுவும் வர்ணவிபர்யயமடைந்து “𑌶𑌿𑌵 - சிவ” எனப்போந்தது. இவ்வாறே ஸ்ரீ அப்பையதீக்ஷித சுவாமிகள் தாம் இயற்றியருளிய சிவதத்துவவிவேக உபோற்காதத்தில் சிவ என்னுஞ் சொல்லுக்குரைத்த பொருளில் கூறியுள்ளார். மேலும்,

“சீ” என்னுந்தாது கிடத்தலெனப் பொருள்படுதலின் சர்வசேதனாசேதனப்பிரபஞ்சங்களும் இறுதிக்காலத்துத் தன்மாட்டுவந்து ஒடுங்கத் தான் ஒன்றினும் ஒடுங்குதலின்றி அவற்றிற்கெல்லாம் புகலிடமாய் நிலைபெற்று நின்று என்றும் ஒரேபடித்தாயிருக்கும் நீர்மையதாம். அதாவது, ஸம்ஹாரக்காலத்து உலகமனைத்தும் தத்துவங்களினும், தத்துவங்கள் மாயையினும், மாயை சிவசக்தியினும், சிவசக்தி சிவத்தினும் ஒடுங்கச் சிவம் அவையனைத்தையும் தன் மாட்டொடுக்கிக்கொண்டு சுயம்பிரகாசமாய் விளங்காநிற்கும். “சி” என்னும் வினைப்பகுதி மெலிவித்தல் எனவும், கூருவித்தல் எனவும் பொருள்படுதலின் ஆத்மாக்களின் ஆணவமலசக்தியை மெலிவித்துச் சிவசத்தியைக் கூருவித்தல் என்பதும் அதன்பொருளாம். “வ” என்பது சிவசக்தியையுணர்த்தாநிற்கும். சிவசக்தியாவது சிவத்தினது குணம். அது சூரியனில் ஒளிபோல்வது. சூரியனும் ஒளியும் வெவ்வேறு பொருள்களல்லவாயினும் விஷயங்களை விளக்குமிடத்து ஒளியெனவும், தன்னை விளக்குமிடத்துச் சூரியனெனவும் தாதாத்மியமாய் இருதிறப்பட்டுக் குணகுணிபாவத்தால் இருமையாக எண்ணப்படுவதுபோலச் சக்தியும் சிவமும் புறப்பொருளைநோக்கி நிற்குநிலையில் சக்தியெனவும், புறப்பொருளை நோக்காது அறிவுமாத்திரமாய் நிற்குநிலையில் சிவமெனவும் இருதிறமாக எண்ணப்பட்டுக் குணத்தன்மை குணித்தன்மை என்னுந் தன்மை வேறுபாட்டால் இருவகையாகப் போற்றப்பட்டு நிற்கும். அவ்வாறு போற்றப்பட்டிருப்பினும் இருதன்மையும் வேறல்லவாதலால் ஈரியல்பினையும் அடக்கிக்கொண்டு பேரறிவாம் சுத்தசைதன்னியம்

எனப் பொருள்கொள்ளும்படி "சிவம்" என விளங்காநிற்கும். இதுவே வேதவேதாந்தங்களாலும் சிவாகமங்களாலும் பிரதிபாதிக்கப்படும் உண்மை. வேதமூலமாகிய ஓங்காரமும். காயத்திரி மகாமந்திரமும், மகாவாக்கியங்கள் நான்கும் உணர்த்தும் பொருளுமிதுவே. ஆத்மாக்களுக்கு அந்தர்யாமியாய் அறிவாய் நிலவுவதும் இந்தச் சிவமே. இதுவன்றி வேறுதாரகம் சிற்றுயிர்களுக்கில்லை. சிவமென்னும் நாமம் சிவபெருமானுக்கேயன்றி வேறு எக் கடவுளருக்கும் எவ்விடத்தும் வேதங்கள் மறந்தும் மொழிந்ததின்று. ஆகையினாலன்றோ திருநாவுக்கரசுமூர்த்திகள்,

சிவனெனுநாமந்தனக்கேயுடைய செம்மேனியம்மான்
அவனென்னையாட்கொண்டளித்திடுமாகி லவன்றனையான்
பவனெனுநாமம் பிடித்துத்திரிந்து பன்னாளழைத்தால்
இவனெனைப்பன்னாளழைப் பொழியானென்றெதிர்ப்படுமே.

என்று திருவாய்மலர்ந்தருளினார். திருமூலதேவரும், "சிவசிவ வென்கிலர் தீவினையாளர், சிவசிவ வென்றிடத் தீவினைமாளும், சிவசிவ வென்றிடத் தேவருமாவர், சிவசிவ வென்ன சிவகதி தாமே" என்று பணித்தருளினார்.

அதர்வணவேத பிருஹஜ்ஜாபாலோபநிஷத்தும்.

𑌧𑌿𑌗𑍍𑌭𑌸𑍍𑌮𑌰𑌹𑌿𑌤𑌂 𑌫𑌾𑌲𑌂 𑌧𑌿𑌗𑍍𑌗𑍍𑌰𑌾𑌮𑌮𑌶𑌿𑌵𑌾𑌲𑌯𑌮𑍍 ।
𑌧𑌿𑌗𑌨𑍀𑌶𑌾𑌰𑍍𑌚𑌨𑌂 𑌜𑌨𑍍𑌮 𑌧𑌿𑌗𑍍𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌮𑌶𑌿𑌵𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑍍 ॥

திக்பஸ்மரஹிதம் பாலம் திக்ராமம சிவாலயம் ।
திகநீசார்சநம் ஜந்ம திக்வித்யாம சிவாச்ரயாம் ॥

(இ-ள்) "பஸ்மமணியாத நெற்றியைச்சுடு. சிவாலயமில்லாத கிராமத்தைக் கொளுத்து. சிவார்ச்சனையில்லாதவன் ஜன்மத்திலே தீயை வை. சிவனை ஆச்சிரயிக்காத சாஸ்திரங்களை யெறிந்துவிடு" என்றோதியது. இந்தச் சுருதிவாக்கியமே கூர்மபுராணத்தினும் வந்துளது. பாவமனைத்தையும் தகிக்கும் இச்சிவநாமம் மங்களம், இன்பம் என்னும் பொருளினுங்கூட வருதலுமுண்டு. "மனிதர்களுக்கு இன்பஞ்செய்ய விரும்பி எப்பொருள்களுக்கும் நித்தியமாய் உபக்கிரமமாயுள்ளதை விருத்திசெய்தலினால் அந்தத் தேவன் சிவன் எனப்படுவன்" என்னும் பொருள்பட மஹாபாரதம் திரோணபர்வம் அடியில்வருமாறு வியாக்கியானஞ் செய்துள்ளது.

𑌸𑌮𑍇𑌧𑌯𑌤𑌿 𑌯𑌨𑍍𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑌾𑌮𑍁𑌪𑌕𑍍𑌰𑌮𑌮𑍍 ।
𑌶𑌿𑌵𑌮𑌿𑌚𑍍𑌛𑌨𑍍𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌣𑌾𑌂 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌦𑍇𑌵𑌃 𑌶𑌿𑌵𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌃 ॥

ஸமேதயதியந்நித்யம் ஸர்வார்த்தாநா முபக்ரமம் ।
சிவமிச்சந்மநுஷ்யாணும் தஸ்மாத்தேவச்சிவஃ ஸ்ம்ருதஃ ॥

அன்றியும், "இரு அக்ஷரமாகிய சிவநாமத்தை வாக்கினாலொருமுறை யுச்சரிப்பின் அது விரைந்து மனிதர் பாவங்களையெல்லாம் நாசமாக்கும்" எனப் புராணமும் மொழிந்துள்ளது. பதினெண்வித்தைகளுக்குள்ளே மேலானது சுருதி. அச்சுருதியுள்ளும் மேலானது ஸ்ரீ ருத்ரம். அவ்வுருத்திரத்துள்ளும் மேலானது ஸ்ரீ பஞ்சாக்ஷரம். அப் பஞ்சாக்ஷரத்துள்ளும் சிவ என்னும் ஈரெழுத்தே மிகவும் மேலானது என்றோர்க.

இஃதிவ்வாறிருக்க, "யோனியைவிட்டு வெளிவருவேனாயின் பரமேசுவரரும், பர்க்கரும், பசுபதியும், உருத்திரரும், ஜகத்குருவுமான மகாதேவரைச் சரணமடைவேன்" என்னும் பொருள்தோன்ற

𑌯𑌦𑌿 𑌯𑍋𑌨𑍍𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌮𑍁𑌚𑍍𑌯𑍇𑌯𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 ।
𑌭𑌰𑍍𑌗𑌂 𑌪𑌶𑍁𑌪𑌤𑌿𑌂 𑌰𑍁𑌦𑍍𑌰𑌂 𑌮𑌹𑌾𑌦𑍇𑌵𑌂 𑌜𑌗𑌦𑍍𑌗𑍁𑌰𑍁𑌮𑍍 ॥

யதியோக்யாம் ப்ரமுச்யேயம் ப்ரபத்யே பரமேச்வரம் ।
பர்க்கம் பசுபதிம்ருத்ரம் மஹாதேவம் ஜகத்குரும் ॥ என்ற

தாயினுடைய கர்ப்பத்திலிருக்குஞ் சிசுவுக்குங்கூட சிவோபாசனாவுணர்ச்சி இயற்கையிலமைந்துள்ளதென கிருஷ்ண யஜுர் வேத கர்ப்போபநிஷத்து கழறுமாயின் தார பதார்த்தின் பொருள் சிவபெருமான் அல்லவென்று சொல்ல யார்தான் துணிவர். அப்படித் துணிந்து சொல்ல ஒருவன் முற்பட்டுவருவானாயின் அவனை ஆணவத்தடிப்பேறிய அகாரண சிவத்துவேஷங்கொண்ட அசடனென்றே மேதாவியர் மதிப்பார்களன்றோ. வேதவுண்மை இவ்வாறிருக்கவும், பாத்மோத்தர முதலிய புராணவசனங்கள் சிலவற்றைப் பேராதரவாகக்கொண்டு வேறு தேவதைகளுக்கு மோக்ஷதானாதிபத்தியங் கூறுதல் கேவலம் அசங்கதமாம். 'உருத்திரன் என்ற சொல்லுக்கு "மோக்ஷதாதா" "முத்திநாதன்" என்று சர்வ வேதங்களுக்கும் வியாக்கியானஞ்செய்த மாதவாசாரியரும், எல்லா வேதவேதாந்த பாஷ்யக்காரர்களும் பொருள் கூறியிருத்தல் பிரத்தியட்சம். உருத்திரசப்தத்துக்கு யாம் விரி

வாக எழுதியுள்ள பொருளை எமது திருவாசக விஷய சூசனத்தில் "உருத்திரனுக்குந் தீபற" என்பதற்கு எழுதியவற்றை வாசித்து மகிழ்க. ஏனைய வானோர்க்கு என்றும் அமையாத சிறப்பியல்புகள் இந்நாமத்தில் அடங்கியுள்ளன. பந்தமுத்தி பதமுத்தி ஆகிய இரண்டினையே விஷ்ணுமுதலிய சுரர்கள் கொடுக்குந் தகைமையுடையவர்களன்றி சமுசாரநாசகமா[illegible]கியாகிய அபரமுத்தி பரமுத்திகளையளிக்க அவர்கள் தாமே சுதந்தரரல்லர். அவற்றைப் பிரசாதிப்பவர் திரிமூர்த்திகளுக்கும் மேலாகத் திகழும் பரமாத்மாவாகிய பசுபதியென்னும் சிவபெருமானேயாம். அவற்றிற்குப் பிரமாணம் வருமாறு.

அதர்வணவேத சரபோபநிஷத்.

𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍍𑌯 𑌧𑍍𑌯𑍇𑌯𑌾𑌨𑍍𑌵𑌿𑌷𑍍𑌣𑍍𑌵𑌾𑌦𑌿𑌕𑌾𑌨𑍍𑌸𑍁𑌰𑌾𑌨𑍍 ।
𑌶𑌿𑌵 𑌏𑌵 𑌸𑌦𑌾 𑌧𑍍𑌯𑍇𑌯𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌸𑌂𑌸𑌾𑌰𑌮𑍋𑌚𑌕𑌃 ॥
தஸ்மாத்ஸர்வாந் பரித்யஜ்ய த்யேயாந் விஷ்ண்வாதிகாந் ஸுராந் ।
சிவஎவ ஸதாத்யேயஸ்ஸர்வ ஸம்ஸாரமோசக: ॥

(இ-ள்) "சமுசாரநாசமுக்திப்பிராப்தியின்பொருட்டு தியேயவிஷ்ணுமுதலிய சர்வதேவர்களையும் விட்டு எப்பொழுதும் தியேயனாகவுள்ள சிவபெருமானையே தியானிக்கவேண்டும்." (இம்மந்திரத்தில் சிவபெருமானைச் சேவிப்பவர்கள் விஷ்ணுவாதிசுரர்களென்று பெறப்பட்டமையால் தேவர்களாகிய இவர்கள் பிரமபர்காதொழிந்தனர்) எனவும்,

அதர்வணவேத அதர்வசிகோபநிஷத்

𑌶𑌿𑌵 𑌏𑌕𑍋 𑌧𑍍𑌯𑍇𑌯𑌃 𑌶𑌿𑌵𑌙𑍍𑌕𑌰𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌮𑌨𑍍𑌯𑌤𑍍𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍍𑌯
சிவஏகோத்யேயச் சிவங்கரஸ்ஸர்வ மந்யத்பரித்யஜ்ய

(இ-ள்) "மோட்சமென்னும் இன்பகரமாகிய சிவத்துவத்தைக்கொடுப்பவரான சிவபெருமானொருவரே அந்நியமாயுள்ள எல்லாவற்றையும் விட்டுவிட்டுத் தியானிக்கத்தக்கவர்." (சிவன் ஒருவரே என்ற பிரயோகத்தால் உற்பத்தி, திதி, நாசமுடைய பிரம விஷ்ணு ருத்ராதியர்கள் த்யேயரல்லரென்று விலக்கப்பட்டனர்.) எனவும்,

சுக்லயஜுர்வேத நிராலம்போபநிஷத்.

[illegible]
[illegible]

ஸர்வதர்மாந் பரித்யஜ்ய நிர்மமோ நிரஹங்காரோ
பூத்வா ப்ரஹ்மைகம் சரணமுபகம்ய

(இ-ள்) "எல்லாத்தருமங்களையும் விட்டுவிட்டு நான் எனது என்னும் அகங்கார மமகாரமில்லாதவனாய்ப் பிரமமொன்றையே சரணமாகவடைந்து" (பிரமம் என்னும் பெயர் சிவத்துக்கே ரூடியாக உரியது. விஷ்ணுமுதலிய தேவர்களை அப்பெயர்கொண்டு வேதமழைத்தல் சிவதர்மாரோபணத்தாலென்றறிக.) எனவும்,

கிருஷ்ணயஜுர்வேத கைவல்யோபநிஷத்.

𑌤𑌮𑌾𑌦𑌿𑌮𑌧𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌵𑌿𑌹𑍀𑌨𑌮𑍇𑌕𑌂 𑌵𑌿𑌭𑍁𑌂 𑌚𑌿𑌦𑌾𑌨𑌨𑍍𑌦𑌮𑌰𑍂𑌪𑌮𑌦𑍍𑌭𑍁𑌤𑌂 । 𑌉𑌮𑌾𑌸𑌹𑌾𑌯𑌂 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌂 𑌪𑍍𑌰𑌭𑍁𑌂 𑌤𑍍𑌰𑌿𑌲𑍋𑌚𑌨𑌂 𑌨𑍀𑌲𑌕𑌣𑍍𑌠𑌂 𑌪𑍍𑌰𑌶𑌾𑌨𑍍𑌤𑌮𑍍 । 𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑌾 𑌮𑍁𑌨𑌿𑌰𑍍𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 𑌭𑍂𑌤𑌯𑍋𑌨𑌿𑌂 𑌸𑌮𑌸𑍍𑌤𑌸𑌾𑌕𑍍𑌷𑌿𑌂 𑌤𑌮𑌸𑌃 𑌪𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍 ॥

தமாதிமத்யாந்த விஹீநமேகம் விபும் சிதாநந்தமரூபமத்புதம் । உமா ஸஹாயம் பரமேச்வரம் ப்ரபும் த்ரிலோசனம் நீலகண்டம் ப்ரசாந்தம் । த்யாத்வாமுனிர்கச்சதி பூதயோநிம் ஸமஸ்தஸாக்ஷிம் தமஸ: பரஸ்தாத் ॥

(இ-ள்) "தத்பதப்பொருளாயும், முதல்நடு ஈறிலராயும், ஏகராயும், வியாபகராயும், ஞானாநந்தரூபராயும், அரூபராயும், அற்புதராயும், உமாசகாயராயும், பரமேசுவரராயும், பிரபுவாயும், முக்கண்ணராயும் நீலகண்டராயும், மிக்க சாந்தமுள்ளவராயும், பூதகாரணராயும் சமஸ்தசாக்ஷியாயுமிருப்பவரைத் துறவியானவன் தியானித்துப் பிரகிருதிக்கு மேலே செல்வான்" (இம்மந்திரங்களில் சிவபரம்பொருளே தியானிக்கப்படுபொருள் என விளக்கிக்காட்டியதுமல்லாமல் அவரது முக்தப் பிராப்பிய உபாசகாயாதி லிங்கங்களையும் ஸ்பஷ்டமாய்க் குறிப்பிட்டிருப்பதைக் கவனிக்க) எனவும்,

ஸாமவேத தர்சனோபநிஷத்.

𑌪𑍁𑌰𑍁𑌷𑍇 𑌸𑌰𑍍𑌵𑌶𑌾𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌬𑍋𑌧𑌾𑌨𑌨𑍍𑌦𑌮𑌯𑌂 𑌶𑌿𑌵𑌮𑍍 ।
𑌧𑌾𑌰𑌯𑍇𑌦𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌮𑌾𑌨𑍍𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌯𑍇 ॥

புருஷே ஸர்வசாஸ்தாரம் போதாநந்தமயம்சிவம் ।
தாரயேத் புத்திமாந்நித்யம் ஸர்வபாப விசுத்தயே ।

(இ-ள்) "புருஷனிடத்தே எல்லாவற்றிற்கும் நியந்தாவும், போதாநந்தமயனுமான சிவபெருமானைப் புத்திமானாயுள்ளவன் எல்லாப் பாவங்களும் ஒழிய எஞ்ஞான்றும் தரிக்கவேண்டும்"

(இவ்வசனத்தில் ஜீவனுக்கு அந்தர்யாமி சிவபெருமான் என நிரூபிக்கப்பட்டது.) எனவும்,

சுவேதாசுவதரோபநிஷத்.

𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍍𑌯𑍈𑌕𑌂 𑌪𑌰𑌿𑌵𑍇𑌷𑍍𑌟𑌿𑌤𑌾𑌰𑌂 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌶𑌿𑌵𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌮𑍇𑌤𑌿।

விச்வஸ்யைகம் பரிவேஷ்டிதாரம் ஜ்ஞாத்வாசிவம் சாந்திமத்யந்தமேதி।

(இ-ள்) "உலகமெல்லாம் சூழ்ந்துகொண்டிருக்கின்ற ஒருவரான சிவபெருமானையறிந்து துக்கவொழிவை ஸம்பூரணமாய் அடைகின்றனன்." (இவ்வாக்கியத்தில் சர்வபரிபூரணத்வம் சிவபெருமானுக்கே சொந்தம் என்று பெறப்படுகின்றது.) எனவும்,

𑌤𑌮𑍀𑌶𑌾𑌨𑌂 𑌵𑌰𑌦𑌂 𑌦𑍇𑌵𑌮𑍀𑌡𑍍𑌯𑌂 𑌨𑌿𑌚𑌾𑌯𑍍𑌯𑍇𑌮𑌾𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌮𑍇𑌤𑌿।

தமீசாநம் வரதம் தேவமீட்யம் நிசாய்யேமாம் சாந்திமத்யந்தமேதி।

(இ-ள்) 'அந்த வரதனும், துதிக்கத்தக்கவனுமான ஈசானனெனுந் தேவனையறிந்து இந்தப்பிரபஞ்ச வொழிவைப் பூரணமாய்ப்பெறுவன்.'' எனவும்,

𑌯𑌦𑌾 𑌚𑌰𑍍𑌮𑌵𑌦𑌾𑌕𑌾𑌶𑌂 𑌵𑍇𑌷𑍍𑌟𑌯𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌮𑌾𑌨𑌵𑌾𑌃।
𑌤𑌦𑌾 𑌶𑌿𑌵𑌮𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌯 𑌦𑍁𑌃𑌖𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑍋 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿॥

யதாசர்மவதாகாசம் வேஷ்டயிஷ்யந்திமாநவா:।
ததாசிவ மவிஜ்ஞாய துஃகஸ்யாந்தோபவிஷ்யதி॥

(இ-ள்) "எப்பொழுது மனிதர்கள் ஆகாசத்தைத் தோலாடையாக எடுத்துப் போர்த்துக்கொள்வார்களோ அப்பொழுது தான் சிவனை யறியாமல் பாசக்ஷயமாகிய துக்கநிவிர்த்தியை யடைவார்கள்.'' எனவும் கூறிப்போந்தவாறறிக. இக்கடைசி மந்திரம் ஆகாசத்தைத் தோலாகப் போர்த்துக்கொள்ளுதல் எவ்வாறு அசம்பாவிதமோ அவ்வாறே சிவனை யறியாமல் மோட்சங் கூடுமெனல் முற்றும் அசம்பாவிதமென ஸ்பஷ்டமாய்த் தெரிவிக்கின்றது. ஆகாசவாடையால் ஒருவருக்கு வெய்யில், மழை, பனி, குளிர் முதலிய உபத்திரவங்கள் நீங்குவனவன்று. அது போல சிவனை யறியாமல் ஏனைய கடவுளரது உபாசனையால் ஜனனமரணரூபமான சம்சாரதுக்கம் நீங்குவதில்லை. அது நீங்காதாயின் மோட்சமடைவதும் முயற்கோடேயாம். ஆகையினு

லன்றே மோட்சத்தை விரும்பும் ஒவ்வொருவரும் பரம்சிவத்தையே அடையவேண்டுமென்பது சுருதியின் இருதயம்.

𑌯𑍋𑌽𑌨𑍍𑌯𑌾𑌂 𑌦𑍇𑌵𑌤𑌾𑌮𑍁𑌪𑌾𑌸𑍍𑌤𑍇 𑌨𑌸𑌵𑍇𑌦 𑌯𑌥𑌾 𑌪𑌶𑍁𑌃 |
யோந்யாம் தேவதா முபாஸ்தே நஸவேத யதா பசு: |

(இ-ள்) "எவன் வேறான தேவதையை யுபாசிப்பான் அவன் உண்மையை யறியான். பசுவைப்போல" என்று புராணங்களும் இவ்வேத மந்திரத்தையே அநுசரித்து மொழிந்தன. மேலே காட்டிய சுருதிவாக்கியங்களில் சிவஞானம் ஒன்றே மோட்சசாதனமென்றும், வீடுகூட வேறுவழியில்லையென்றும் வற்புறுத்தினமையால் கேவலம் பக்தி மாத்திரமே மோட்சசாதனமெனக் கூறும் துவைதிகளும், கர்மமே மோட்சத்தைக் கொடுக்குமென்று வாதிக்கும் மீமாம்ஸகரும், பிரகிருதிபுருஷபேத விஞ்ஞானமே மோட்சத்துக்கு நேர்வாயிலெனப்பகரும் சாங்கியரும், ஜீவாத்ம பரமாத்ம சம்யோகசாதனமே முக்திசாதனமென மொழியும் யோகிகளும், தீக்ஷாதி சமஸ்காரங்களே மோட்சவேதுவென மயங்கும் சைவருள் ஒருசாராரும், கர்மம், ஞானம், பக்தி, பிரபத்தி, ஆசாரியாபிமானம் ஆகிய இவையெல்லாம் ஒருங்குசேர்ந்தே மோட்சசாதகமென அறையும் பாஞ்சராத்திரிகளும், கேவலம் காமயஜனாதிகளே முத்திசாதனமெனக் குறிக்கும் பாகவதரும், கிரியாரூபமான பகவதர்ச்சனமே மோட்சசாதகமெனச் சாற்றும் சிலவைகானசரும், கர்மஞானங்களிரண்டுமே சேர்ந்து முக்திசாதனமாமெனுஞ் சில சைவ வைஷ்ணவர்களும் மறுக்கப்பட்டவாறறிக. ஆனால் இவற்றாற் பிரயோசன மில்லையோவெனின்! அற்றன்று. கர்மமுதலியவற்றுள் சில சித்தசுத்தியைக் கொடுப்பனவாகவும், வேறு சில சுத்தியடைந்த சித்தத்தில் தோன்றும் ஞானத்துக்கு நேர்சாதனமாகவும் அமைந்திருத்தலால் கர்மங்களும், யோகங்களும், பக்தியும், ஆசார்ய பிரபத்தியும் ஞானோற்பத்திக்கு ஒன்றன்மேலொன்றாய்ச் சிறப்புற்று விளங்கும் பரமசாதனங்களாமென அறிவாயாக. அன்றியும் அவற்றைப் பிரதிபாதிக்குஞ் சாஸ்திரங்களும் இன்றியமையாத உத்தம சாதனங்களாக வமைந்துள்ளன

அங்ஙனமாயின் ஆளுடையவடிகள் "பக்திவலையிற் படுவோன்காண்க." எனவும், பிரபல உபநிஷத்துக்கள் "

யின் வசப்பட்டவன்." "பக்தியாலடையற்பாலன்" "சம்சாரத்தில் பிணக்குற்றவெவர்க்கும் பரமேசுவர சரணாகதியே பரமதாரகம்" எனவும் மொழிந்தவற்றின் உண்மைக்கருத்து யாதெனின், பல்கோடி பவங்களிலீட்டிய நல்வினைகளின் பரிபாகப் பயனானும், படைப்பளிப்பழிப்பு என்னும் முத்தொழில்களைச் செய்யும் மும்மூர்த்திகளுக்கும் மேலாய் முக்கண் முதல்வனையன்றி வேறெப்பொருளையும் பொருளெனமதியாத இடையறு வுள்ளன்பானுங் கிடைத்த அருள்வழிநிற்றலாகிய பரானுரக்தியே பேரன்பு என்று சொல்லப்படும். அது கால முதலிய அளவைகளைக் கடந்த சுத்தமான அந்தக்கரண விருத்திரூபம். அது ஞானத்துக்கு அடுத்ததும் பரமாந்தரங்க முக்கிய சாதனமுமாகும். அஃதின்றி மோட்சஹேதுவான ஞானம எஞ்ஞான்றுங் கைகூடாது. உள்ளன்பிலாது கொடுக்கும் உணவினை சிற்றறிவினராகிய நாமே அங்கீகரிக்கமாட்டோமானால் பக்தியில்லாமற் செய்யும் பூஜையைச் சர்வ ஜகக்காரண சர்வஞ்ஞராகிய சிவபெருமானோ அங்கீகரிப்பர். பக்தியில்லாமல் நாடகமாகவும் சரீரப்பழக்கமாகவும் செய்யும் பூஜை, தவம், ஜபம், தியானம், ஆராதனை, திருப்பணி ஆகிய இவைகள் எப்பொழுதும் திருவருளையுண்டாக்கமாட்டாது. திருவருள்கிட்டாதாகவே மோட்சமும் சித்திக்கமாட்டாது. ஆதலால் நாடகமின்றி உள்ளன்போடு செய்யும்பக்தியே உண்மைப்பக்தியாகும். அப்பக்தி சரியை, கிரியை, யோகம், ஞானம் என்றும் நான்குபாதங்களில் நிறைந்திருத்தலால் உபாஸகனையும் உபாஸ்யனையும் கீழ்மேலாகக்காட்டிச் சிறிது பேதஞானத்தை மிச்சப்படுத்தினும், பக்தியின்முதிர்ச்சியாகிய சொரூபபக்தி என்னும் இறுதியிற்கூறிய சிவஞானமே ஜீவபோதத்தைமுற்றுந்தவிர்த்துச் சிவபரிபூரணத்தை மேலிடும்படிச்செய்து, வேறெதன்தோற்றத்தையுந் தலையெடுக்காவண்ணஞ் சூன்யப்படுத்தித் தன்மயமாக்கிவிடும். அதுவேஸாக்ஷாத்காரமும், பிராம்ஹீபாவமும், சுத்தாத்வைதநிலையுமாம். ஆகையினாலன்றோ ஸ்ரீ தாயுமானசுவாமிகள் பக்தியின்படித்திறத்தைக் கூறிவரும்போது "விரும்புஞ்சரியைமுதன் மெய்ஞ்ஞானநான்கும், அரும்புமலர்காய்கனிபோலன்றோ பராபரமே" என்று இடித்துரைத்தனர். அப்படியிருந்தும், சிலர் வாசாஞானஆவேசத்தைமேற்கொண்டு மோட்சத்துக்குச்சாதன சதுஷ்டயங்களை

முக்கியமன்றி சரியையாதிகள் அநாவசியமென்றும், அவை தாழ்ந்தபடியென்றுங் கூறுவர். அந்தோ இவர்கள் வினை இருந்தவாறென்னே! சாதன சதுஷ்டயங்களால் அடையப் பெறும் இறுதிப்பலன் முமுட்சுத்துவமாகும். முமுட்சுத்துவமோ மோட்சத்தில் இச்சையுடைமை. சரியையாதிகளால் அடையப்பெறும் முக்கியப்பலன் பரமுக்தி. அது தேகத்தைச் சிவத்துக்கு அர்ப்பணஞ்செய்தலினாலும், இந்திரியங்களை அர்ப்பணஞ்செய்தலினாலும், அந்தக்கரணங்களை அர்ப்பணஞ்செய்தலினாலும், ஆத்மாவாகிய தன்னையே அர்ப்பணஞ்செய்தலினாலும் கிடைக்கப்பெறுவது. ஆகையினாலே சாதன சதுஷ்டயங்கள் தாழ்ந்தபடியென்றும், சரியையாதிகள் மேலான படியென்றும், சாதன சதுஷ்டயங்கள் கைவரப்பெற்ற முமுட்சுத்துவம் அடைந்தபின்னரே உண்மைச் சரியையாதிகளின்றிறம் உள்ளவாறு விளங்குமென்றுங் கூர்த்தமதிகொண்டுணரக்கிடக்கின்றது. [illegible] சுவாமிகளும் “நாந்த சாதனமு மோர்ந்திட்டான நெறியாஞ் சரியையாதி சோபானமுற்று” என்று சாதன சதுஷ்டயங்களை முன்னும் சரியையாதிகளைப் பின்னும் வைத்துக் கூறி மகிழ்ந்தனர். இவ்வுண்மையைக் கடைப்பிடித்து நிற்க. மேலே நிரூபித்த சுத்தாத்வைத நிலையே சுக்லயஜுர்வேத மண்டலப்ராஹ்மணோபநிஷத்திலும்.

𑌤𑌨𑍍𑌮𑌨𑍋𑌵𑌿𑌲𑌯𑌂𑌯𑌾𑌤𑌿 𑌤𑌦𑍍𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌪𑌰𑌮𑌂𑌪𑌦𑌮𑍍। 𑌤𑌲𑍍𑌲𑌯𑌾𑌚𑍍𑌛𑍁
𑌦𑍍𑌧𑌾𑌦𑍍𑌵𑍈𑌤𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌃। 𑌭𑍇𑌦𑌾𑌭𑌾𑌵𑌾𑌤𑍍। 𑌤𑌦𑍇𑌵 𑌪𑌰𑌮𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑍍॥

தந்மநோவிலயம்யாதி தத்விஷ்ணோ: பரமம்பதம்| தல்லயாச்சுத்தாத்
வைதஸித்தி:| பேதாபாவாத்| ததேவபரமதத்வம் ||

(இ-ள்.) “மனோலயமுண்டாயபோது விஷ்ணுவின் பரமபதமெய்தும். அப்பதம் லயமாயபோது சுத்தாத்வைத சித்தியுண்டாம். பேதமின்மையே பரமதத்வம்” என நிறுவியுள்ளது. ஸ்ரீ தாயுமானசுவாமிகளும் “பொய்கண்டார் காணாப் புனிதமெனு மத்துவிதம்” எனப் புகழ்ந்துள்ளார். (புனிதம்-சுத்தம்). ஏகாத்மவாதிகள்கொள்ளுங் கேவலாத்வைதமும், வைஷ்ணவர்கள் கொள்ளும் விசிஷ்டாத்வைதமும், துவைதிகள் கொள்ளும் துவிதாத்வைதமும் வேதங்களில் யாண்டும் படிக்கப்பட்டிருக்கவில்லை. சுத்தாத்வைதமொன்றே கூறப்பட்டுள்ளது. ஆகையினாலே அது முக்கியமான சித்தாந்தமாகும். ஆகையே “சைவ சித்தாந்தம்”

என்றும், "வைதிக சைவம்" என்றும், "சித்தாந்த சைவம்" என்றும் மேலோர் வழங்குவர். இடையில் தோன்றிய மதத்திரயத்தில் அது சேராததற்குக் காரணமும் அதுவேயாம். அதன் ஆசிரியர்கள் குருக்கள்மாரெனவும், சிவாசாரியரெனவும், சிவத்விஜர் எனவும், ஆதிசைவரெனவும் பண்டைக்காலந்தொட்டு அழைக்கப்பட்டு வருகின்றார்கள். முப்பொழுதும் திருமேனி தீண்டுவாரென்றால் அவர்கள் மகிமைக்கு எல்லையுமுளதோ!

உலகத்திலுள்ள எல்லா ஆத்மாக்களும் நல்லறிவுபெற்று உண்மையுணர்ந்து உய்வதற்கு ஏதுவாயுள்ளது வேதம். அது புண்ணியப் பேற்றையுடையாருக்கும் சமயாசார வெல்லைக்குட்பட்டவருக்கும் பொதுவகையா யமைந்துள்ளது. ஆகையினாலே அவ்வவ்வாத்மாக்கள் தந்தம் அறிவுக்கும், ஆற்றலுக்கும், காதலுக்கும் ஏற்றவாறு அவ்வேத மார்க்கங்களை அநுஷ்டித்து உய்தி பெறலாம். வேதத்திற் கூறியுள்ள புண்ணியங்களும் சத்கருமங்களும் பலவகைப்பட்டிருத்தலின் அதன் போதனைகளும் அவ்வாறே பலதிறப்பட்டு விளங்குகின்றன. அப்பலவகைப் போதனைகளுள் பூர்வபட்சமதங்கள் ஒவ்வோர் பகுதியினைத் தனித்தனியெடுத்துக்கொண்டு ஒவ்வோர் அதிகாரியை நோக்கித் தனித்தனி போதியாநிற்கும். அம்மதங்களை உலகிற் பரப்பினோர் பிறந்திறந்துழலும் உயிர்களாகிய மனிதரும், சித்தரும், முனிவரும், தேவரும், பிறருமாம். ஆனால் சித்தாந்த செந்நெறியாகிய வைதிக சைவத்தை மனிதராவது, சித்தராவது, முனிவராவது, தேவராவது, உருத்திரர் முதலியோராவது நிலைநிறுத்தவில்லை. பிறந்திறவாப் பெருவாழ்வுடைய அநாதி மல முத்த சித்துருவென்னும் பரமபதியாகிய சிவபெருமானே நிலைநிறுத்தியுள்ளார். ஏனைய சமயங்கள் வேத வேதாந்தங்களில் பூர்வபட்சங்களாய்த் திகழ இச்சித்தாந்த செந்நெறியொன்றே சித்தாந்த பக்கமாய் விளங்குகின்றது. இந்நெறியாலடையும் பலன் மேலான பரமுத்தியேயாம். இதையடையும்பொருட்டே மற்றைச் சமயங்கள் யாவும் சோபனமாய் வைக்கப்பட்டிருக்கின்றன. அதனால் அச்சமயங்கள் ஒருபோதும் அவலமான மார்க்கங்களாகா. அந்த மார்க்கங்களில்லையாயின் ஆத்மாக்கள் சித்தாந்த நெறியிற்றலைப்படுதலும், முத்தியடைதலும் முயற்கோடாம். அஃதுணர்ந்தே அந்தந்த சமயாசாரிகள் அவ்வவ்மார்க்கங்களை உலகில் போதித்து

வளர்த்தார்கள்: அவர்கள் செய்த அச்செயலும் அவர்கள் சுதந்தரத்தாலாயதின்று. சிவபரம்பொருளே அவர்களை யதிஷ்டித்து அவ்வக்காலங்களுக்கேற்ப அவ்வவ் மார்க்கங்களை உண்டுபண்ணி வைத்தனரென்று கொள்ளவேண்டும். காலபேதத்தால் ஒவ்வோர் சமயம் வளர்ச்சி பெறுதலும், பின்னர் சித்தாந்த செந்நெறி மேம்பட்டு அதை யழித்தலுமாகிய இவையெல்லாம் அப்பரம்பொருளின் செயலால் நடப்பனவேயன்றி வேறல்ல. ஆதலால் சித்தாந்தமாகிய வைதிகசைவநெறி யொன்றே பூரண சமயமாகும். அதன் இயல்பு என்றுந் திரியாமல் ஒரே படித்தாயிருக்கும். அது பல நதிகள் சென்றடையுங் கடலை நிகர்த்தது. தாயுமானசுவாமிகள் "வேறுபடுஞ் சமயமெலாம் புகுந்து பார்க்கின் விளங்கு பரம்பொருளே நின் விளையாட்டல்லால், மாறுபடுங் கருத்தில்லை முடிவில் மோனவாரிதியினதித்திரள்போல் வயங்கிற்றம்மா" எனவும். "நிரமென்று தந்தம் மதத்தைமேய தாமதச் செய்கை கொடுமுறையறிவார், ஆறு சமயங்கடோறும் வேறுவேறாகி விளையாடுமுனையாவரறிவார், அண்ட பகிரண்டமு மடங்கவொரு நிறைவாகி யானந்தமானபரமே" எனவும், திருமூலர் "ஒன்றதே பேரூர்வழியாறதற்குள" எனவும் வற்புறுத்தியுள்ளார்கள்.

வைதிக சைவத்தில் கூறப்படாத பொருளியல்புகள் ஒன்றுமே கிடையா. வேறு சமயங்கள் போதிக்கும் பொருளியல்புகளெல்லாம் அதன் சில பகுதிகளில் அடங்கிவிடும் அதன் பொருளியல்புகளோ அவ்வாறு அடங்குவதின்று. சைவத்திலடங்காத ஒருண்மையை வேறொருசமயம் அரிதாகக்கண்டு கூறிற்றென்பதை நாமறியோம். உதாரணமாக, உலகத்திலுள்ள சமயங்கள் பலவற்றுள் சில பௌதிகமான உலகத்தை மாத்திரம் ஏற்று மற்றுள்ள பொருள்களை மறுக்கும். வேறு சில பௌதிக உலகத்தோடு அதன் காரணமான பூதங்களையும் ஏற்று மற்றுள்ள பொருள்களை மறுக்கும். மற்றுஞ் சில பூதபௌதிகங்களோடு அவற்றின் காரணமான தத்துவங்களையும் ஏற்று ஏனையவற்றை மறுக்கும். இன்னுஞ் சில அவற்றோடு பிரகிருதி, கர்மம், ஆத்மா ஆகிய இவைகளை ஏற்று மற்றவற்றை மறுக்கும் வேறு சில அவற்றோடு பிரபஞ்ச காரண கர்த்தாக்களிற் சிலர் சிலரை ஏற்று மற்றவற்றை மறுக்கும். பின்னுஞ்சில அவர்களோடு ஆணவ

மலத்தினையும், சுத்த தத்துவங்கள் ஒவ்வொன்றனையும், அவற்றின் காரண கர்த்தாக்களான அதிகார போக லய சிவபேதங்களில் ஒவ்வொன்றனையும் ஏற்று ஏனையவற்றை மறுக்கும். சில இறைவனுடைய தடஸ்தநிலையே நிலையாகக்கொண்டு நிலவும். இவ்வாறு சமயங்கள் யாவும் ஒவ்வொரு வகையாகக்கூறித் தம்முள் மாறுபட்டு நிற்கவும் வைதிக சைவமோ அச்சமயபேதங்கள் கூறும் பொருளியல்புகள் யாவற்றையும் தன்னகத்தே அடக்கி அப்பௌதிக உலகவியல்பினையும், அதன் காரணபூதங்கள், தத்துவங்கள், பிரகிருதிகள் ஆகிய அவற்றின் தன்மைகளையும், ஆணவமலம், கர்மமலம் ஆகிய அவற்றின் வேறுபாடுகளையும், ஆத்மா சிவம் என்னும் பொருள்களின் சொருபதடஸ்த நிலைகளையும் உள்ள உள்ளவாறு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் எடுத்து விளக்கி அச்சமயபேதங்கள் யாவற்றினும் முதன்மைபெற்றுத் தானென்றே சித்தாந்தமெனச் சிறப்புப் பெயர்பெற்றுப் புகழ் அச்சமய பேதங்கள் பலவற்றுள்ளும், தலையாயும், தாயகமாய்ப் விளங்கிக்கொண்டு நிற்கும். அத்தகைய அரிய பெரிய சைவத்திறமாகிய செந்நெறியை ஏனைய சமயங்களுள் ஒன்றென மதித்தல் கேவலம் அசங்கதம். "சைவ நெறியே உய்யுநெறியது" எனவும், "சைவ சமயமே சமயம்" எனவும், "சைவத்தின் மேற்சமயம் வேறிலை" எனவும், "சைவமாஞ்சமயஞ்சாரும் ஊழ் பெறலரிது" எனவும், "வேதச்சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றால் சைவத்திறத்தடைவர்" எனவும், பலவான்றோர் பரிந்து பகர்ந்தவற்றை யுய்த்துணர்க. அன்றியும்,

அதர்வணவேதமுண்டகோபநிஷத்.

ததா வித்வாந் புண்யபாபே விதூய
நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி

(இ-ள்). "மலமற்றவனாய்ப் பரம சாம்மியத்தை யடைகின்றான்" எனவும்,

ஸ யோ ஹவை தத்பரமம் ப்ரஹ்மவேத ப்ரஹ்மைவபவதி

(இ-ள்). "பிரமத்தை யறிபவன் பிரமமாக ஆகின்றான்" எனவும்;

ஸாமவேத சாந்தோக்யோபநிஷத்.

ச்ருதம்ஹ்யேவமே பகவத்த்ருசேப்ய:— தரதி சோகமாத்மவித்

(இ-ள்): "பரமாத்மாவையறிந்தவன் சோகத்தைத் தாண்டுகின்றான்" எனவும்;

தைத்திரீயோபநிஷத், ஆனந்தவல்லி.

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌪𑌰𑌮𑍍—ப்ரஹ்மவிதாப்நோதிபரம்

(இ-ள்) "பிரமத்தையறிந்தவன் நிரதிசயபிரமானந்தத்தையடைகின்றான்" எனவும்,

வாயுஸம்ஹிதை பூர்வபாகம்.

𑌮𑍁𑌕𑍍𑌤𑌶𑍍𑌶𑌿𑌵𑌸𑌮𑍋 𑌭𑌵𑍇𑌤𑍍—முக்தச்சிவஸமோபவேச்

(இ-ள்). "முக்தன் சிவசமமாகின்றான்" எனவும் அறிவுறுத்தியபடியே திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் "விதிபாலேத்தப் பதிபாவரே" எனவும், மாணிக்கவாசக சுவாமிகள் "சிவமானவாபாடித்தெள்ளேணங்கொட்டாமோ" எனவுஞ் சாற்றியருளினார்கள். இவ்வாறு ஆரிய வேதங்களும் தமிழ் மறைகளும் மோட்சத்தின்பொருட்டு முமூட்சுக்களாலே சேவிக்கப்படும் பொருள் பரமசிவமேயன்றி வேறு கடவுளரல்லரென்று ஒருங்கெழுந்து ஒரேமுடிபாய் முரசடித்து முழக்கினமை கண்கூடாக அறியக்கிடக்கின்றது. "சிவனொடொக்குந் தெய்வந்தேடினுமில்லை, அவனொடொப்பாரிங்கியாவருமில்லை" எனத் திருமந்திரமும், "சிவனை யாவரே யருச்சனை செயாதவர் சிவன் மற்றெவரையாயினு மருச்சனையியற்றியதுண்டோ" எனக் காஞ்சிபுராணமும் வற்புறுத்தியுள்ளன. திருவாசகம் "செய்யானை வெண்ணீறணிந்தானைச் சேர்ந்தறியாக் கையானை" எனவும், திருத்தாண்டகம் "தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான சங்கரனை" எனவும் விளக்கியுள்ளன. ஸ்ரீமத். தாயுமானசுவாமிகளும் தம்மநுபவத்தில் இரண்டு உண்மைகளைக் கைகண்ட பலனை உணர்ந்தாரென்றும், அவற்றால் தான் உய்ந்தாரென்றும் அடியில்வரும் பாசுரத்தால் நன்குவிளக்கிக் காட்டியுள்ளார். அதாவது "தெய்வம் வேறுளதென்பவர் சிந்தனை, நைவரென்பதும் நற்பரதற்பர. சைவசிற்சிவனேயுனைச் சார்ந்தவர், உய்வரென்பதும் யானுணர்ந்தேனுற்றேன்" என்பதே. நிற்க மேலே உதாஹரித்த சரப்போபநிஷத்மந்திரத்தில் (123-ம் பக்கம் பார்க்க) பர்க்கம் என்னும் ஒரு தெய்வப்பெயர் வந்துளதன்றே. அது சிவபெருமானுக்கேயுரிய

குறிநாமம். வடமொழிநிகண்டுகள் "[illegible]-பர்க்கஸ்த்ர்யம்பக:" எனவும், "ஹர: ஸ்மரஹரோ [illegible]-ஹர: ஸ்மரஹரோ பர்க்க:" எனவுங் கூறின. அத்தெய்வத் திருநாமம் காயத்ரீ மகாமந்திரத்தில் கூறப்பட்டிருத்தலானும், வேறு தெய்வப் பெயர் அதில் காணாமையானும் அம்மகா மந்திரத்தின் அரும் பொருளாயுள்ளவர் சிவபெருமான் என்பது கரதலாமலகமாம். அவரே சர்வ பிராமணகுல உபாஸ்யரென்று பண்டைக்காலந் தொட்டு அநுஷ்டானத்திலும் வந்துகொண்டிருக்கின்றது.

ஸாமவேதம் (பிரபதப்ராஹ்மணம்).

𑌤𑍍𑌵𑌂 𑌦𑍇𑌵𑍇𑌷𑍁 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋𑌽𑌸𑌿 𑌅𑌹𑌂 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑍇𑌷𑍁
𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌹𑌿 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌮𑍁𑌪𑌧𑌾𑌵𑌤𑌿 𑌉𑌪𑌤𑍍𑌵𑌾𑌧𑌾𑌵𑌾𑌮𑌿
𑌤𑍍𑌵𑌯𑌾 𑌪𑍍𑌰𑌸𑍂𑌤 𑌇𑌦𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 ||

த்வம் தேவேஷு ப்ராஹ்மணோஸி அஹம் மநுஷ்யேஷு
ப்ராஹ்மணோஹி ப்ராஹ்மண முபதாவதி உபத்வாதாவாமி
த்வயாப்ரஸூத இதம் கர்ம கரிஷ்யாமி ||

(இ-ள்). "உருத்திரமூர்த்தி என்னும் நீ தேவர்களுள் பிராம்மணன். நான் மனிதர்களுள் பிராம்மணன். பிராம்மணன் பிராம்மணனையன்றோ வழிபடுவான். ஆதலின் யான் உன்னை வழிபடுவேன். உன்னுடைய ஆணையையேற்று இக்கருமத்தைச் செய்கிறேன்" எனவும்,

கிருஷ்ணயஜுர்வேதசுவேதாசுவதரோபநிஷத்.

𑌯𑍁𑌞𑍍𑌜𑌤𑍇 𑌮𑌨 𑌉𑌤 𑌯𑍁𑌞𑍍𑌜𑌤𑍇 𑌧𑌿𑌯𑍋
𑌵𑌿𑌪𑍍𑌰𑌾 𑌵𑌿𑌪𑍍𑌰𑌸𑍍𑌯 𑌬𑍃𑌹𑌤𑍋 𑌵𑌿𑌪𑌶𑍍𑌚𑌿𑌤𑌃

யுஞ்ஜதேமந உதயுஞ்ஜதேதியோ
விப்ராவிப்ரஸ்ய ப்ருஹதோவிபச்சித:

(இ-ள்). "பிராம்மணர்கள் அந்த வித்வான் (முற்றறிவுடையவன்) ஆன பெரிய பிராம்மணனிடத்து மனத்தையும் சித்த விருத்திகளையும் சேர்த்திடுவர்" எனவுங் கூறிப்போந்தன. இவ்வாக்கியங்களால் பரமசிவன் ஒருவனே பிராம்மணோபாஸ்யன் என்றமை பொருந்தியவாறறிக. காஞ்சிப்புராணமும் "பிராமணனீயே கடவுளர் தம்முட் பிஞ்ஞகா வேதியர் தம்முட், பிராமணன் யானே பிராமணன் றனக்குப் பிராமணன்கதி" எனவுஞ் சாற்றுவது. இவற்றையெல்லாந் தழுவியே மநுஸ்மிருதியும்,

𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌂𑌦𑍈𑌵𑌤𑌂 𑌶𑌂𑌭𑍁𑌃 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌾𑌂𑌤𑍁 𑌮𑌾𑌧𑌵𑌃।
𑌵𑍈𑌶𑍍𑌯𑌾𑌨𑌾𑌂𑌤𑍁 𑌭𑌵𑍇𑌤𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌗𑌣𑌨𑌾𑌯𑌕𑌃॥

விப்ராணாம் தைவதம் சம்பும் க்ஷத்ரியாணாந்து மாதவ:।
வைச்யாநாந்து பவேத் ப்ரஹ்மா சூத்ராணாம் கணநாயக:॥

(இ-ள்). "பிராம்மணருக்குத் தெய்வம் சிவன். க்ஷத்திரியருக்குத் தெய்வம் விஷ்ணு. வைசியருக்குத் தெய்வம் பிரமன். சூத்திரருக்குத் தெய்வம் கணநாயகன்" என்று விளக்கியது. கணநாயகன் மருதநிலக்கடவுளான இந்திரன். உண்மையிவ்வாறிருக்கவும் சிவபிரானை வழிபடாத ஏனைய கடவுளரைப் பரமுத்தியின்பொருட்டு வழிபடுவோர் ஒருபோதும் துக்கநிவர்த்தி எய்தப்பெறார்! எய்தப்பெறார்!!

இனி வேத சம்பந்தமான காயத்திரி மகா மந்திரத்தைப்பற்றியும் உனக்கு ஸங்கிரகமாகச் சொல்வோம் கேட்பாயாக. சித்தசுத்தி சாதகமான நாற்பது ஸம்ஸ்காரங்களாற் ஸம்ஸ்கரிக்கப்பட்ட பிராம்மணர்களுக்கு விதிக்கப்பட்ட வைதிக கர்மங்களில் மிகவும் முக்கியமான கர்மம், காலையிலும் மாலையிலும் செய்யப்படும் சந்தியாவந்தனம். அவ்வந்தனம் வேதங்களிலே விதிக்கப்பட்டுள்ளது. மத்தியானத்தில் செய்யப்படும் மாத்தியாஹ்நிகம் வேதத்தில் விதிக்கப்பட்டதன்று. அது ஸ்மிருதி புரோக்தம். சந்தியாவந்தனம் சைவர், வைஷ்ணவர், ஸ்மார்த்தர், மாத்துவர் என்னும் நால்வருக்கும் பொதுநோக்கில் ஒன்றுபோலிருப்பினும் சிறப்புவகையில் பேதப்பட்டேயிருக்கின்றது. அவ்வவர் முத்திநிலை வெவ்வேறு வகைப்பட்டிருத்தலே அதற்கு முக்கிய காரணமாகும்.

ஆத்மாக்கள் உண்மையறிந்துய்யும் வண்ணம் பரமேசுவரரால் அருளிச்செய்யப்பட்ட பதினெண்வித்தைகளுக்குள் ருக், யஜுர், ஸாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களே மிகவும் சிரேஷ்டமானவை. ஏனெனில் சர்வ வித்தைகளும் அவ்வேதங்களுக்குள் அடக்கம். அவ்வேதங்களோ காயத்திரி மகா மந்திரத்திற்குள் அடக்கம். அக்காயத்திரி மந்திரமோ பிரணவத்துக்குள் அடக்கம். அதனால் பிரணவத்தின் பொருளும் காயத்திரி மந்திரத்தின் பொருளும் ஒன்றேயாம். ஒவ்வொரு மந்திரத்

காயத்திரி மந்திரத்திற்கும் உண்டு. சந்தஸ் - இருபத்துநான்கு அக்ஷரமுள்ள காயத்திரி சந்தஸ், ரிஷி - விசுவாமித்திரர். இவர் ராஜாவாகவிருந்து பிறகு பிரம்மரிஷி ஆனவரல்லர். சிருஷ்டி காலத்திற்றோன்றிய சப்த ரிஷிகளில் ஒருவர். அதிதேவதை-ஹ்ருதீ பீடத்திலுள்ள ஞானஸ்வரூபராகிய ஹிரண்மய பரமாத்ம புருஷர். இவரது ஞான தேஜஸே சித்ரூபிணியாகிய பராசக்தி.

மந்தேகாள் என்னும் அசுரர்கள் (அதாவது மூலமலகாரியமும் உயிர்ப்பகையுமாயுள்ள காமம், குரோதம், லோபம், மோஹம், மதம் மாற்சரியம் என்னும் அரிஷ்டவர்க்கங்கள்) தினந் தினம் ஸ்தூல சித்தாகிய ஆத்மாவை மறைத்துப் பீடிக்கின்றபடியினாலே அவற்றைத் துரத்தியோட்டும்பொருட்டுக் காயத்திரி மந்திரத்தைத் தியானித்து உச்சரித்து, அம்மந்திர ஜலத்தைக் கையிலெடுத்து அம்பு எய்தல்போல அவற்றின்மீது தெளித்தலாம். அதாவது மார்ஜனம், ஆசமனம், பிராணாயாமம் முதலிய கிரியைகளால் பிராமணன் வாக்கு, காயங்களைச் சுத்தி செய்துகொண்டு பிறகு காயத்திரி மந்திரத்தால் மனத்தைத் தூய்மைப்படுத்திக் கொள்ளுதலாம்.

ஒருவர் காயத்திரி மந்திரத்தின் உண்மையை யுணர்ந்து அதை வாய்மையோடும் பக்தியோடும் ஜபித்துவரின் அவர் நலப் பெறுவது திண்ணம், அன்றியும் அவரது உபாசனை கிரமமாக நடைபெற்றுவருமாயின் அவர்மூலமாக உலகம் முழுதும் நலம் பெற யாதொரு தடையுமின்று. “நல்லாரொருவருளரேலவர் பொருட்டெல்லார்க்கும் பெய்யுமழை” என்பது மூதறிஞர்வையன்றோ. அவரே பிராஹ்மணன் என்னுஞ் சொல்லுக்கு இலக்கானவர். காயத்திரி மந்திரத்தில் இரண்டு பன்மைகள் பிரயோகிக்கப்பட்டிருத்தலால் அம்மந்திரத்தை ஜபிக்கின்றவர்கள் சர்வ ஜீவராசிகளின் நலத்தையும் விரும்பினவராகவே அந்தப் பன்மைகள் தெரிவிக்கின்றன. ஆகையினாலன்றோ மநுஸ்மிருதி “மைத்ரோ ப்ராஹ்மண உச்யதே-மைத்ரோப்ராஹ்மண உச்யதே - பிராஹ்மணன் எல்லாஜீவராசிகளுக்கும் மித்திரன்” என்றுகூறிப்போந்தது. இவ்வுண்மையையே தெய்வப்புலமைத் திருவள்ளுவரும் “அந்தணரென்போ ரறவோர் மற்றெவ்வுயிர்க்குஞ், செந்தண்மை பூண்டொழுகலான்” என்று திருக்குறளில் விளக்கியருளினர். இதனால்

ஜாதியினால் மாத்திரம் பிராஹ்மணரென்று தம்மைத்தாமே புகழ்ந்துகொள்வது அவ்வளவு சிறப்புடையதன்று "பிறப்பொழுக்கங் தன்றக்கெடும்" என்றது ஒத்து. ஜாதிப்பெருமை ஒன்றையே பாராட்டி பூணூல் தரித்துக்கொண்டு ஏனைய வருணத்திலுள்ள சிவஞானச் செல்வர்களை இழித்துக்கூறுதல் எப்பொழுதும் மோக்ஷப்பிராப்திக்கு விக்கினமேயாகும். ஆதலின் அது கூடாதென்று "வருணாச்சிரம கரும கரும சங்கல்பம் பந்தம்" என்னும் பொருள்போதர "𑌵𑌰𑍍𑌣𑌾𑌶𑍍𑌰𑌮 𑌧𑌰𑍍𑌮 𑌕𑌰𑍍𑌮 𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑍋 𑌬𑌨𑍍𑌧𑌃 வர்ணாச்ரம தர்ம கர்ம ஸங்கல்போபந்த:" என்று யஜுர்வேத நிராலம்போபநிஷத் சாற்றியது. எம்மை அடிமையாகவுடைய ஆளுடையவடிகளும் "சாதி குலம் பிறப்பென்னுந்தடஞ் சுழியிற் தடுமாறி" என்று திருவாய்மலர்ந்தருளினர்.

கிருஷ்ணயஜுர்வேதப்ரஹ்மோபநிஷத்.

𑌯𑌦𑌕𑍍𑌷𑌰𑌂 𑌪𑌰𑌂𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑌤𑍍𑌸𑍂𑌤𑍍𑌰𑌮𑌿𑌤𑌿 𑌧𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 ।
யதக்ஷரம் பரப்ரஹ்ம தத்ஸூத்ரமிதி தாரயேத்।

(இ-ள்) "எது அக்ஷரப்பரப்பிரமம் அது தரித்துக்கொள்ளத்தக்க சூத்திரம்" என்றோதியது. இம்மந்திரத்தை ஆதாரமாகக்கொண்டே "𑌕𑍃𑌷𑌿𑌗𑍌𑌰𑌕𑍍𑌷𑌵𑌾𑌣𑌿𑌜𑍍𑌯𑌂 𑌵𑍈𑌶𑍍𑌯𑌕𑌰𑍍𑌮 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌜𑌮𑍍 — க்ருஷிகோரக்ஷவாணிஜ்யம் வைசியகர்ம ஸ்வபாவஜம்."

(இ-ள்). "பயிரிடுவதும் பசுகாத்தலும் வியாபாரஞ் செய்தலும் வைசியருடைய சுவபாவமாயுள்ள தொழில்கள்" என்று கண்ணபிரான் கீதையில் மொழிந்துள்ளபடி வைசிய குலமாகிய வேளாண்மரபிலுதித்த சிவம்பழுத்த நெஞ்சத்துப் பத்தி வடிவினரனைவரும் உலகினர் காணுமாறு உடம்பில். பரமமாயும் பவித்திரமாயுமுள்ள பூணூலைத் தரிக்காது, இவ்வுண்மை ஞானசூத்திரத்தையே எஞ்ஞான்றும் தரித்து வருகின்றார்களென்பதை கண்டு குறிப்பித்தாம். "நூலுஞ் சிகையும் உணரார் நின்மூடர்கள், நூலது வேதாந்தம் நுண்சிகை ஞானமாம்" என்னும் திருமந்திரத்திருத்தூக்கானு மோர்க. கிருஷித்தொழில், கோரக்ஷணம், பிரதமமொத்த வர்த்தகமாகிய வாணிபம் ஆகிய இம்மூன்றையும் ஒருங்கே செய்பவர் வேளாளரே. அவர்கள் உழவுத்தொழில் முதலியவற்றை செய்யுங்காலத்து கீழ்வருணத்தாரோடு

பொழுதுந் தரிக்காது விவாகம், சீமந்தம், தர்ப்பணம், அந்தியேஷ்டி, ஆப்தீகம் முதலிய முக்கிய வைதிக கருமங்களில் மாத்திரம் தரித்து வருகின்றார்கள். அதனால் அவர்கள் வைசியர்களல்லரென்று புறங்கூறி அவர்களிடத்தில் தானத்தைமாத்திரம் பிராம்மணர்கள் பெற்றுக்கொள்ளுதல் பெரியதோர் ஏதமாம். சூத்திரனிடத்தில் தானம்வாங்கப் பிராம்மணனுக்கு விதியில்லை. ஆரியர்கள் தென்னாட்டில் குடிபுகுந்தபொழுது அவ்விடத்திலிருந்த வேளாளரையுஞ்சேர்த்து நான்காம் வருணத்தாரென்று தாம் அழைத்ததுமல்லாமல் தம் நூல்களிலும் வரைந்துவைத்து விட்டார்கள். அக்கருத்தைப் பின்பற்றியே சில தமிழ் நூல்களும் எழுந்தன. சில நூல்களில் அக்கருத்து நுழைக்கவும்பட்டன. அதனால் அவைகள் கீதா வாக்கியத்தின்முன்னே பிரபல பிரமாணங்களாகா. இதை விரிக்கிற் பெருகுமாதலால் இம்மட்டில் நிறுத்தி எடுத்துக்கொண்ட விஷயத்தைக் கூறுவாம்.

காயத்திரி மந்திரத்திலுள்ள உண்மையை அறிவிப்பது சப்தவியாஹிருதிகளாம் அவற்றையுச்சரித்த பின்னரே மந்திரத்தையுச்சரிக்கவேண்டியது வேதவிதியாகும். சப்தவியாஹிருதிகளாவன:—‘‘𑌭𑍂𑌃, 𑌭𑍁𑌵𑌃, 𑌸𑍁𑌵𑌃, 𑌮𑌹𑌃, 𑌜𑌨𑌃, 𑌤𑌪𑌃, 𑌸𑌤𑍍𑌯-

பூ:, புவ:, ஸுவ: மஹ:, ஜந: தப:, ஸத்யம்’’ என்பவைகளாம். இவற்றின் உபாசனைக்கிரமம் தைத்திரீயாருணசாகை நாராயண, பிருஹதாரண்யக, சாந்தோக்ய, ஸூர்யோபநிஷத்துக்களிற் கூறப்பட்டிருக்கின்றது. ஆங்கு கண்டு தெளிக.

காயத்திரி என்ற சொல் வடமொழியில் ஸ்திரி லிங்கமாகப் படிக்கப்பட்டிருக்கின்றமையால் அம்மந்திரம் பரமேசுவரப் பிரதிபாதிதமாயிருப்பினும் தேவியாகவேஉபாசிக்கப்பட்டுவருகின்றது. அப்படி உபாசனை நிகழும்போது அக்கினியிற் சூடுபோல ஹிரண்மயமான சிவபெருமானை விட்டுப்பிரியாமல் அபின்னமாயுள்ள பராசக்தியையே யுபாசிக்கவேண்டியது இன்றியமையாத கடனாம். சிவோபாசனைக்குச் சிவசக்தியே நியமமாக வேண்டப்படுகின்றனர். பரமேசுவரன் பரன் ஆகவே அவரது சக்தி பரையென்று சொல்லப்படுகின்றனர். அவ்வம்மைக்கே தனியாலயங்கள் எங்கும் பிரசித்தம். கேனோபநிஷத்தில் தேவேந்திரனுக்குத் தத்துவோபதேசஞ்செய்த உமாதேவியே காயத்திரியின் தேவ

வதையாகும். அந்தத்தேவியே சுவேதாசுவதரோபநிஷத்தில் பலவகைச் சங்கைகளுற்று உண்மை தெரியாது உழன்ற பிரஹ்மவாதிகளுக்கு உண்மைபுகட்டி யருள்புரிந்த தேவாத்மசக்தி. அப்பராசக்தி சர்வலோக மாதாவாயிருக்கின்றாள் என்பதை ருக்வேத பஹ்வ்ருசோபநிஷத் “தெவைஷஜமஹூண ஊஸ்ருஜத-ஸைவ ஜகதண்டமஸ்ருஜத-அந்தத்தேவியே ஜகத்தாகிய அண்டங்களை யீன்றவள்” என்று முழக்கியது. அவ்வம்மையைக் காலையில் சிவப்பு வஸ்திர மணிந்த காயத்திரி தேவியாக மூலாதாரத்தில் தியானஞ்செய்ய வேண்டும். மத்தியானத்தில் வெள்ளை வஸ்திரமணிந்த சாவித்திரி தேவியாக புருவமத்தியில் தியானம் பண்ணவேண்டும். சாயங்காலத்தில் நீலவஸ்திரமணிந்த சரஸ்வதி தேவியாக ஹிருதயத்தில் தியானஞ்செய்யவேண்டும்.

காயத்திரிக்கு மூன்று பாதங்கள் உள்ளன. அம்மூன்று பாதங்களும் முறையே பூலோக, புவர்லோக, சுவலோக சம்பந்தங்களைத் தெரிவிக்கின்றன. “ஸோஹம்’ “ஹம்ஸ:” “தத்வமசி” முதலிய மகாவாக்கியங்களின் அர்த்தங்களையே காயத்திரி மந்திரம் அடக்கியுள்ளதென்பது பேரறிவாளர் கொள்கை. ருக்வேதிகள், யஜுர்வேதிகள், ஸாமவேதிகள் ஆகிய எல்லோரும் ஒரே காயத்திரியை உபாசிக்கின்றார்கள். ஆனால் அவர்களுக்குள் ஸ்வரபேதமாத்திரமுண்டு. சந்தியா அங்கங்கள் விஷயத்திலும் சில வேற்றுமைகளுள்ளன.

இம்மந்திரத்தின் பொருளை மதபேதங்களுக்குத் தக்கவாறு பல வாசிரியர்கள் பலவிதமாக உரைசெய்திருக்கின்றார்கள். ஆயினுஞ் சாதாரணமான வாக்கியார்த்தத்தை ஈண்டு பதச்சேதஞ் செய்து காட்டுகின்றோம்.

தைத்திரீயாருண சாகை நாராயணம்.

𑌤𑌤𑍍𑌸𑌵𑌿𑌤𑍁𑌰𑍍𑌵𑌰𑍇𑌣𑍍𑌯𑌂 𑌭𑌰𑍍𑌗𑍋 𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌧𑍀𑌮𑌹𑌿।
𑌧𑌿𑌯𑍋 𑌯𑍋 𑌨𑌃 𑌪𑍍𑌰𑌚𑍋𑌦𑌯𑌾𑌤𑍍 ॥

தத்ஸவிதுர் வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி ।
தியோ யோநஃ ப்ரசோதயாத் ॥

(இ-ள்.) 𑌯𑌃-எவன், 𑌨𑌃-நம்முடைய, 𑌧𑌿𑌯𑌃-புத்திகளை, 𑌪𑍍𑌰-நன்றாக. 𑌚𑍋𑌦𑌯𑌾𑌤𑍍-நடத்துவானோ, 𑌤𑌤𑍍-அந்த, 𑌸𑌵𑌿𑌤𑍁𑌃-ஸவிதாவென்னுஞ் சூரியனுக்கு அந்தர்யாமியாகிய, 𑌭𑌰𑍍𑌗𑌃-பார்க்கனென்

னும் நாமம் வகித்த, 𑌦𑍇𑌵𑌸𑍍𑌯-ஹிரண்மயபுருஷராகிய மகாதேவருடைய, 𑌵𑌰𑍇𑌣𑍍𑌯𑌂-மேன்மையான (ஞானதேஜஸை), [illegible]-தியானிப்போம்.

இம்மந்திரத்தில் கூறிப்போந்த பரமபுருஷர் சகுணப்பிரமமாகிய ஹிரண்மய சிவபெருமான். அவருடைய பராசக்தியே ஞானதேஜஸ் என்று சொல்லப்படுபவர். அவர் சூரியனுக்குப் பிரகாசத்வத்தைக் கொடுத்துக்கொண்டு அவனுக்கு அந்தராத்மாவாக விளங்குகின்றனர். சிவபெருமானுடைய அஷ்டமூர்த்தங்களுள் சூரியனும் ஒன்றாகலின் சூரியனுள் சிவன் இருக்கின்றனன் என்பது பொருத்தமே. மேலும் விளக்கின்பெயர் அவ்விளக்கிருக்குந் தண்டிற்குமாவதுபோல் சிவநாமமாகிய பர்க்கச்சொல் சூரியனுக்குமாயிற்று. திரிகுணரஹிதமான பிரமம் சகுணமாக உபாசிக்கப்படும்பொழுது சூரியனைக் கருதப்படுகின்றது. அப்பொழுது உபாசனைக்குப் பலன் அளிப்பதற்காகப் பிரமப்பொருள் சூரியன் வாயிலாக உபாசனையைக்கிரஹித்துக்கொண்டு வேண்டும்பேற்றை அளிக்கின்றது. இதனால் உபாசிக்கப்படும் பொருள் சூரியனல்ல. அந்தச் சூரியனுக்கு ஆத்மாவாயுள்ள பரப்பிரமசிவபிரானே. இத்தகைய உபாசனைக்கே அந்தராதித்திய வித்தையென்றபெயர். இதை ஸ்ரீகண்ட சிவாசாரியர் ‘‘[illegible]-அந்தஸ்தத்தர்மோபதேசாத் (இ-ள்) உள்ளேயுள்ளார் (சிவபெருமான்) அவர் குணங்கள் கூறப்படலால்’ என்னும் பிரம சூத்திரத்தில் நன்றாக விளக்கியுள்ளார்.

காயத்திரி மகாமந்திரத்தின் அரும்பொருளை விளக்க எழுந்த சாமவேத மைத்ராயண்யுபநிஷத் அம்மந்திரத்தின் மூன்று பாதங்களை அடியில் வருமாறு விரிக்கின்றது.

(முதற்பாதம்) 𑌤𑌤𑍍𑌸𑌵𑌿𑌤𑍁𑌰𑍍𑌵𑌰𑍇𑌣𑍍𑌯𑌮𑌿𑌤𑍍𑌯𑌸𑍌 𑌵𑌾 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌸𑍍
𑌸𑌵𑌿𑌤𑌾𑌸𑌵𑌾𑌏𑌵𑌂 𑌪𑍍𑌰𑌵𑌰𑌣𑍀𑌯 𑌆𑌤𑍍𑌮𑌕𑌾𑌮𑍇 𑌨𑍇𑌤𑍍𑌯𑌾𑌹𑍁𑌰𑍍
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌾𑌦𑌿𑌨𑌃

தத்ஸவிதுர் வரேண்யமித்யஸௌவா ஆதித்யஸ் ஸவிதாஸவா ஏவம் ப்ரவர்ணீய ஆத்மகாமே நேத்யாஹுர்ப்ரஹ்மவாதிந:

(இ-ள்) தத்ஸவிதுர்வரேண்யம் என்றால் ‘‘இந்த ஆதித்யனே ஸவிதா. அவனே இவ்விதமான சித்தியை அபேட்சிக்கும் ஆத்மகாமனால் (உபாசிக்கத் தக்கவன்) என்று பிரமவாதிகள் சொல்லுகிறார்கள்.’ எனவும்,

(இரண்டாம் பாதம்) 𑌭𑌰𑍍𑌗𑍋 𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌧𑍀𑌮𑌹𑍀𑌤𑌿 𑌸𑌵𑌿𑌤𑌾 𑌵𑍈 𑌦𑍇𑌵𑌸𑍍𑌤𑌤𑍋 𑌯𑍋𑌽𑌸𑍍𑌯 𑌭𑌰𑍍𑌗𑌸𑍍𑌤𑌂 𑌸𑌂𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌾𑌮𑍀𑌤𑍍𑌯𑌾𑌹𑍁𑌰𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌾𑌦𑌿𑌨𑌃

அதபர்கோ தேவஸ்ய தீமஹீதி ஸவிதாவை தேவஸ்ததோயோஸ்ய பர்கஸ்தம் ஸம்சிந்தயாமீத்யாஹுர் ப்ரஹ்மவாதிந:

(இ-ள்) இனிபர்கோ தேவஸ்யதீமஹி என்றால் “ஸவிதாவே இங்கு தோன்றும் பொருள்களெல்லாம். அவனுடைய பர்க்கன் எவனோ அவனைச் சிந்திக்கின்றேன் என்று பிரமவாதிகள் சொல்லுகிறார்கள்.” எனவும்,

(மூன்றும் பாதம்) 𑌧𑌿𑌯𑍋 𑌯𑍋 𑌨𑌃 𑌪𑍍𑌰𑌚𑍋𑌦𑌯𑌾𑌦𑌿𑌤𑌿 𑌬𑍁𑌦𑍍𑌧𑌯𑍋 𑌵𑍈 𑌧𑌿𑌯𑌸𑍍𑌤𑌾 𑌯𑍋𑌽𑌸𑍍𑌮𑌾𑌕𑌂 𑌪𑍍𑌰𑌚𑍋𑌦𑌯𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌾𑌹𑍁𑌰𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌾𑌦𑌿𑌨𑌃

அததியோயோந: ப்ரசோதயாதிதி புத்தயோவை தியஸ்தாயோஸ்மாகம் ப்ரசோதயாத் இத்யாஹுர் ப்ரஹ்மவாதிந:

(இ-ள்) இனித்யோயோந: ப்ரசோதயாத் என்றால் “புத்திகளை எவன் எமக்குப்பிரேரணஞ் செய்வான் அவன் என்று பிரமவாதிகள் சொல்லுகிறார்கள்” எனவுமாம்.

இன்னும் அம்மந்திரத்தில் பரமரகசியமாய் அமைந்துள்ள பர்க்க சப்தத்தின்பொருளை அந்த உபநிஷத்தே அடியில் காட்டியபடி நிரூபிக்கின்றது.

𑌭𑌰𑍍𑌗 𑌇𑌤𑌿 𑌯𑍋 𑌹 𑌵𑌾 𑌅𑌮𑍁𑌷𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑍇 𑌨𑌿𑌹𑌿𑌤𑌸𑍍𑌤𑌾𑌰𑌕𑍋𑌽𑌕𑍍𑌷𑌿𑌣𑌿 𑌚𑍈𑌷 𑌭𑌰𑍍𑌗𑌾𑌖𑍍𑌯𑍋 𑌭𑌾𑌭𑌿𑌰𑍍𑌗𑌤𑌿𑌰𑌸𑍍𑌯 𑌹𑍀𑌤𑌿 𑌭𑌰𑍍𑌗𑍋 𑌭𑌰𑍍𑌜𑌯𑌤𑍀𑌤𑌿 𑌵𑍈𑌷 𑌭𑌰𑍍𑌗 𑌇𑌤𑌿 𑌰𑍁𑌦𑍍𑌰𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌾𑌦𑌿𑌨𑌃॥

அதபர்க இதியோஹவா கஸ்மிந்நாதித்யே நிஹிதஸ் தாரகேக்ஷிணி சைவ பர்காக்யோ பாபிர்கதி ரஸ்யஹீதி பர்கோ பர்ஜயதீதி வைஷ பர்கா இதிருத்ரோ ப்ரஹ்மவாதிந:।

(இ-ள்) “இனி பர்க்கனென்பான், எவன் இந்த ஆதித்தியனிடத்தும் கண்ணின் கருவிழியினிடத்தும் உள்ளவன். பர்க்கனென்ற பேருடையவன் பா என்ற பிரகாசத்தால் இவனுக்குக் கதியிருத்தலின் பர்க்கன். வெதுப்புவதால் (சங்கரிக்குந் தொழிலால்) பர்க்கன் இவன். உருத்திரன் என்று பிரமவாதிகள் சொல்லுகிறார்கள்.” இம்மந்திரத்தால் அந்தராதித்ய வித்தை

வித்தை ஆகிய விரண்டும் சிவபரமேயென நிரூபிக்கப்பட்டது. இவ்விரு வித்தையிலும் பிரதிபாதிக்கப்பட்ட பரமபுருஷரே காயத்திரி மகாமந்திரத்தின்கண் பர்க்கன் என்னுஞ்சொல்லாற் குறிப்பிக்கப்பட்டா ரென்றுணர்த்த "𑌭𑌰𑍍𑌗𑌾𑌖𑍍𑌯𑌃-பர்காக்ய: -பர்க்கனெனப் பெயருடையான்" என இடு குறிப்பெயரால் சுருதி நிச்சயித்தது. இனி அதன் காரணப்பொருளையும் சுருதி அட்சரப்பிரிவு செய்து விளக்குகின்றது.

𑌅𑌥 𑌭𑌰𑍍𑌗 𑌇𑌤𑌿 𑌭𑌾𑌸𑌯𑌤𑍀 𑌮𑌾𑌨𑍍𑌲𑍋𑌕𑌾𑌨𑍍 𑌇𑌤𑌿 𑌰𑌞𑍍𑌜𑌯𑌤𑍀
𑌮𑌾𑌨𑌿𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌗𑌚𑍍𑌛𑌤 𑌇𑌤𑌿 𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑍍𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌾 𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑍍𑌯𑌸𑍍𑌮𑌾 𑌇𑌮𑌾𑌃
𑌪𑍍𑌰𑌜𑌾𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌭𑌾𑌰𑌗𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌭𑌰𑍍𑌗𑌃।

அதபர்கஇதிபாஸயதீமாங் லோகாங்இதி ரஞ்ஜயதீமாநி பூதாநி கச்சந இதி கச்சத்யஸ்மிந்நா கச்சத்யஸ்மா இமாஃ ப்ராஜாஸ்தஸ்மாத் பரகத்வாத் பர்கஃ।

(இ-ள்) "இனி பர்க்கனென்றது (𑌭)ப-உலகங்களை விளக்கி நிற்போன். (𑌰)ர-எல்லாவுயிர்களுக்கும் பிரீதிவிளைவிப்போன். (𑌗) க-எல்லாவுயிர்களும் (சம்ஹாரகாலத்தில்) இவனை யடைகின்றன. மீளவும் (சிருஷ்டிகாலத்தில்) வெளிப்படுகின்றன. ஆதலின் பர்க்கனெனப்படுகின்றான்." என்பதாம். இங்கு பிரமவாதிகள் சொல்லுகிறார்கள் என்றதனல் பிரமவாதிகளாவார் வேதங்களை முற்றுங் கசடறக் கற்றுணர்ந்த மேதாவியர். அவர்களே இவ்வாறு உண்மைப் பொருளைத் தெளிந்தோதினார்களென்றால் வேதங்களைச் செவ்வையாய் உணராத ஏனையோர் இத்தகைய அரிய பெரியவுண்மையைத் தெளியமாட்டார்களென்றும், அவர்கள் லௌகிக நியாயங்களைக்கொண்டே வேறு கடவுளருக்குப் பொருட்படுத்தி இடர்ப்படுவார்களென்றும் ஏற்பட்டது. அத்தகையோர்களது பதர்மொழிகளைத் துச்சமென்றெறுதுக்குவதே விவேகிகளுக்கு ஒப்பமுடிந்த துணிபாம். இவ்வாறு சுருதியுக்தமான ஏதுக்களால் ஓங்காரவாச்சியப் பொருளாயுள்ளவர் எவரோ அவரே உயர்காயத்திரியின் ஒப்பிலாப் பொருளான உமையொரு பாகரெனவும், தண்மதிசூடிய தனிமுதற்கடவுளெனவும், கைகூப்பியறியாக் கண்ணுதற் பெருமானெனவும் பசுமரத்தாணிபோல் இறுக்கி காட்டப்பட்டது.

இஃதிங்ஙன மிருக்க, வைஷ்ணவர்களுக்குள் காயத்திரி இராமாயணம் என்னும் ஓரரிய நூல் மிக்க பக்திசிரத்தை ஆராதனை

களோடு வழங்கப்பட்டு வருகின்றது. அவ்விராமாயணம் வால்மீகிபகவான் அருளிச்செய்த 24000 கிரந்தங்களமைந்துள்ள ஒவ்வோர் ஆயிரஞ்சுலோகங்களினின்றும் காயத்திரி மந்திரத்தின் ஒவ்வொரு அட்சரத்தையும் முதலிற்கொண்ட 24 சுலோகங்களால் திரட்டப் பட்டுள்ளது.

சாதாரணமாய் வால்மீகி இராமயணம் ஆத்மாக்களுக்குரிய சர்வதர்மங்களையும் கதா நாயகர் மூலமாய் அநுஷ்டித்துக் காட்டும் ஒப்பற்ற காவியம் என்பது யாவரும் அறிந்தவிஷயம். இந்த * 24 சுலோகங்களும் கதா சந்தர்ப்பத்தில் அந்தந்த இடங்களுக்குத் தக்கவாறு பொருளமைந்திருப்பினும் அந்தச் சுலோகங்களை ஒருங்குசேர்த்துப் பொருள் கொண்டால் அவை ஒருவன் உபநயனஞ் செய்து கொண்டது முதல் அவன் ஜன்ம முடியும் வரையிலும் அநுசரிக்கவேண்டிய முக்கிய தர்மங்களை வியவகரித்து அவனுடைய புத்தியைச் செவ்வையாய் நெறிநடத்துந்திறன் வாய்க்கப் பெற்றதென அறியலாம். முதல் மூன்று சுலோகங்களும் பிரமசரிய ஆச்ரமதர்மத்தையும், 4 முதல் 12 வரையிலுமுள்ள சுலோகங்கள் கிருகஸ்தாச்ரம தர்மத்தையும், 13 முதல் 18 வரையிலுமுள்ள சுலோகங்கள் வானப்பிரஸ்தாச்ரமதர்மத்தையும், 19 முதல் 23 வரையிலுமுள்ள சுலோகங்கள் சந்நியாச ஆச்ரமதர்மத்தையும், 24 வது சுலோகம் மோக்ஷப்பிராப்தியையும் ஸங்கிரஹமாகக் குறிப்பிடுகின்றன. ஆகையால் வால்மீகி இராமாயணம் காயத்திரியிலும், காயத்திரிமந்திரம் பிரணவத்திலும், பிரணவம் பராசக்தியினிடத்திலும், பராசக்தி பரப்பிரமத்தினிடத்திலும் ஒடுங்குமென அறிக.

---

* இச்சுலோகங்களை வரைந்து அவற்றின் பொருளை விளக்கின் நூல் விரியுமென்றஞ்சி அவற்றை ஈண்டு வரையாது விடுத்தனம். ஆயினும் சுலோகங்கள் வரும் இடங்களை மாத்திரம் எடுத்துக்காட்டும். முதற்சுலோகம்-பாலகாண்டம் முதல்ஸர்க்கம் முதற்சுலோகம்; 2ம்சு-30-22; 3ம்சு-67-12 4ம்சு-அயோத்தியாகாண்டம் 15-20, 5ம்சு-40-15. 6ம்சு-67-34. 7ம்சு-99-25. 8ம்சு-ஆரண்யகாண்டம் 11-14. 9ம்சு-43-17. 10ம்சு-72-17. 11ம்சு-கிஷ்கிந்தாகாண்டம் 22-20, 12ம்சு-43-34. 13ம்சு-சுந்தரகாண்டம் 4-1, 14ம்சு-26-41, 15ம்சு-53-27, 16ம்சு-யுத்தகாண்டம் 10-27, 17ம்சு-41-67, 18ம்சு-59-139, 19ம்சு-72-112, 20ம்சு-94-26, 21ம்சு-119-23. 22ம்சு-உத்தரகாண்டம் 16-26, 23ம்சு-34-41, 24ம்சு-66-1.

அதர்வணவேத ராமரஹஸ்யோபநிஷத்

𑌰𑌾𑌮𑍈𑌵 𑌪𑌰𑌂𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌰𑌾𑌮𑍈𑌵 𑌪𑌰𑌂𑌤𑌪𑌃।
𑌰𑌾𑌮𑍈𑌵 𑌪𑌰𑌂𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑌾𑌰𑌕𑌂।

ராமஏவபரம்ப்ரஹ்ம ராமஏவபரந்தப:।
ராமஏவபரம்தத்வம் ஸ்ரீராமோ ப்ரஹ்மதாரகம்॥

(இ-ள்). வெளிப்படை. இந்தச்சுருதி இராமனை பரப்பிரமமென்று நிச்சயித்தலால் காயத்திரி இராமாயணம காயத்திரி மந்திரத்தை விளக்க எழுந்ததென்பது அவர்களது அபிப்பிராயம். அதனால் இராமாயண பாராயணஞ் செய்தால் காயத்திரியை அநுஸந்திப்பதாக அவர்களது நிச்சயம். அதற்குயாதொரு சந்தேகமுங் கிடையாது. எப்படி இராஜாங்க உத்தியோகஸ்தனை ஒருவன் அரசமுத்திரையைச் சிரசிற்றாங்கிக் கனம்பெறுகின்றானோ அப்படியே சர்வமந்திரங்களும் அக்ஷரத்திரயாத்மக பிரமவாசகமாகிய பிரணவஞ்சேர்ந்தே பயன்படுவது சர்வவேத சம்மதம். அதுபோல இவ்விராமாயணமும் காயத்திரி மகா மந்திரத்தின் சார்பால் மிக்க சிரேயஸை யடைந்து ஆதிக்கியம் பெற்று நித்திய பாராயணத்துக்கு யோக்கியமாயிற்றென்பதே தேற்றம். மந்திரங்களுள் பிரணவமும், பஞ்சாக்ஷரமும், காயத்திரியும், திரியம்பக மந்திரமும் ஒன்றையொன்று அபேக்ஷியாமல் தனியாகவே உபாசகர்களுக்குப் பலன்கொடுப்பது உலகப் பிரசித்தமன்றோ. காயத்திரிமந்திரத்திற்கு விசுவாமித்தரர் ரிஷியாகவும், ஸவிதாவாகிய சூரியமண்டல மங்கள மணியான பர்க்கன் (சிவபெருமான்) அதிதேவதையாகவும் இருப்பதுபோல ஆதித்திய குலத்தில் இராமன் அவதரித்தவுடனே விசுவாமித்திர மஹாரிஷிவருவதும் இதற்கு நிதரிசனமாம். அவ்வபேதத்தைப்பற்றியே காயத்திரி ராமாயணம் எனப்பெயர் பெற்றதென்றுணர்க.

ஆயின் சதுர்த்த சப்த வாச்சியப்பொருளாகிய சிவபெருமானையல்லாமல் திரிமூர்த்திகளை உபாசிப்பது வீண்செயலோவெனின், அற்றன்று. அம்மூர்த்திகளின் பதவிகளை அவாவுவோரும், மோக்ஷத்திற்காக விரூபாக்ஷனை வழிபடுவதற்குப் பூரணாதிகாரம் பெறாதவர்களும், அப்பரமேசுவரன் திருவருள் கிட்டவேண்டி அவனது விபூதிகளாயும், அவனது திருமேனிகளாயும், அவனுக்கடுத்தபடியில் நிற்பவர்களாயுமுள்ள அக்கடவுளரை

உபாசிக்கவேண்டியது இன்றியமையாத கடனும். ஆதலினன்றோ கூர்மபுராணத்து இறுதி அத்தியாயம்,

𑌅𑌤𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌶𑌕𑍍𑌤𑍋 𑌰𑍁𑌦𑍍𑌰𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣 𑌮𑌰𑍍𑌚𑌯𑍇𑌤𑍍।
அத்ராப்யசக்தோ ருத்ரம் விஷ்ணும் ப்ரஹ்மாண மர்ச்சயேத்|

(இ-ள்). "(திரிகுணாரஹித சிவோபாசனையைச் செய்யமுடியாத) அசக்தன் உருத்திரனையும், விஷ்ணுவையும், பிரமனையும் வழிபடுக" என்று கூறிப்போந்தது. என்னை!

கிருஷ்ண யஜுர்வேத ஸ்கந்தோபநிஷத்.

𑌶𑌿𑌵𑌾𑌯 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑍂𑌪𑌾𑌯 𑌶𑌿𑌵𑌰𑍂𑌪𑌾𑌯 𑌵𑌿𑌷𑍍𑌣𑌵𑍇।
𑌶𑌿𑌵𑌸𑍍𑌯 𑌹𑍃𑌦𑌯𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌶𑍍𑌚 𑌹𑍃𑌦𑌯𑌂 𑌶𑌿𑌵𑌃॥
𑌯𑌥𑌾𑌨𑍍𑌤𑌰𑌂 𑌨 𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌿 𑌤𑌥𑌾 𑌮𑍇 𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿𑌰𑌾𑌯𑍁𑌷𑌿।
𑌯𑌥𑌾𑌨𑍍𑌤𑌰𑌂 𑌨 𑌭𑍇𑌦𑌾𑌃 𑌸𑍍𑌯𑍁𑌃 𑌶𑌿𑌵𑌕𑍇𑌶𑌵𑌯𑍋𑌸𑍍𑌤𑌥𑌾॥

சிவாய விஷ்ணு ரூபாய சிவரூபாய விஷ்ணவே|
சிவஸ்யஹ்ருதயம் விஷ்ணுர் விஷ்ணோச்சஹ்ருதயஞ்சிவ:||
யதாந்தரம் நபச்யாமி ததாமே ஸ்வஸ்திராயுஷி|
யதாந்தரம் நபேதாஸ்யுச்சிவ கேசவயோஸ்ததா||

(இ-ள்). "விஷ்ணு ரூபமாயிருக்கிற சிவன் பொருட்டும், சிவரூபமாயிருக்கிற விஷ்ணுவின்பொருட்டும் (நமஸ்காரம்). சிவனுடைய ஹிருதயமே விஷ்ணு. விஷ்ணுவினுடைய ஹிருதயமே சிவன். எப்படி இவ்விருவரிலும் நான் பேதங்காணவில்லையோ அப்படியே எனக்குச் சந்தோஷமும் ஆயுளும் உண்டாக்கடவது" என்று சிவ விஷ்ணுக்களை அபேதமாகப் பாவிக்கவேண்டுமென்று முழக்கிய மறைமொழி அற்ப மொழிகளாமெனின், அஞ்சவேண்டாம். சமாதானம் மொழிவாம்.

பெருந்தேவர்களாகிய விஷ்ணு சிவன் என்னும் இருவரும் தனித்தனி மூர்த்திகளாயிருப்பினும் விஷ்ணுமூர்த்தி தமது வலப்பாகத்தைச் சிவனுக்கும், சிவமூர்ததி தமது இடப்புறத்தை விஷ்ணுவுக்குங் கொடுத்திருத்தலால் இருவர் உருவமும் ஒருருவமாக வமைந்து ஒரேமூர்த்தமாயிருக்கின்றது. ஆதலால் இருவருக்கும் பேதமில்லையென்பது சுருதியின் தாற்பரியம். ஆழ்வார்களுக்கும் இவ்விதக்கருத்தே உடன்பாடாதலின் இரண்டுருவமும் ஒன்றேயென்று மங்களாசாஸனஞ் செய்துள்ளார்கள்.

பேரியாழ்வார் இயற்பா.

தாழ்சடையு நீண்முடியு மொண்மழுவுஞ் சக்கரமுஞ்
சூழரவம் பொன்னாணுந் தோன்றுமால்--சூழும்
திரண்டருவி பாயுந் திருமலைமே லெந்தைக்
கிரண்டுருவு மொன்றா யிசைந்து .... எனவும்.

பொய்கையாழ்வார் இயற்பா.

அரனா ரணனாம மான்விடைபுள் ளூர்தி
யுரைநூன் மறையுறையுங் கோயில் - வரைநீர்
கருமம் மழிப்பளிப்புக் கையதுவே நேமி
யுருவமெரி கார்மேனி யொன்று.. ....எனவும்.

வருமாறுகாண்க. இதையே கேசவார்த்த மூர்த்தமெனவும், சங்கர நாராயண மூர்த்தமெனவுங் கூறுப. புராணங்களும்.

𑌸𑌰𑍍𑌵𑌶𑌕𑍍𑌤𑌿𑌮𑌯𑍋𑌹𑍍𑌯𑍇𑌷𑌃 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌸𑍍𑌸𑌮𑌨𑌨𑍍𑌤𑌰𑌃।

ஸர்வசக்திமயோஹ்யேஷ: ப்ரஹ்மணஸ்ஸமநந்தர:।

(இ-ள்). "சர்வ சக்திகளுமுடையவனிவன். பிரமத்திற்கடுத்தவன்." என விஷ்ணுவின் பெருமையை எடுத்துச் சாற்றின. உண்மை இவ்வாறிருக்க ஹரன் ஹரியைப்பற்றி யிராதபோது அவருக்குச் சத்தை குலையுமென்றும், பற்றியிருக்கும்போது பகவத் ஸ்தோத்திரத்திற்கு யோக்கியரென்றும், வேறுபட்டபோது அவ்வித யோக்கியத்திற்கு அருகரல்லரென்றும், இக்காரணங்களால் ஹரியும் ஹரனுமாயுள்ள மூர்த்தியை ஆழ்வார்கள் துதித்தார்களென்றும் வைஷ்ணவபுமான்கள் கூறுவதுண்டு. அவ்வெம்மொழிகள் ஆதரிக்கத்தக்கனவோ அல்லவோவென்பதை முமூட்சுக்களே பகுத்தறியக்கடவர்.

அன்றியும், இளஞ்சந்திரனை ஜடாமண்டலத்தில் தரித்த சிவபிரானை நாயனாக வலப்புறத்தில் வைத்துக்கொண்டு பிரமதேவனாகிய புத்திரனைத் தமது உந்தியாகிய கமல யோனிவழியாய்த் தந்தவர் விஷ்ணுமூர்த்தியாதலானும், பிரமதேவர் தந்தையைப்போலவே சுவர்ண நிறமுடையராய் ஐந்து முகங்களோடு தோன்றினமையானும், சிவசக்திமூர்த்தம் நான்கனுள் விஷ்ணுமூர்த்தி புருஷசக்தியாயிருத்தலானும், அச்சிவ சக்திகளுள்ளும் திருமால் பிரகிருதி ரூபிணியாகிய மாயாசக்தியாய் விளங்களானும், சிவகேசவர்களிருவரும் அபேதமாகவே எண்ணப்பட்டுள்ளார்கள். இவ்விருவருக்குமுள்ள பர்த்ருபார்யா சம்பந்தத்தைக்குறித்து

யஜுர்வேத ருத்ர ஹ்ருதயோபநிஷத்.

𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 𑌬𑍀𑌜𑌂 𑌬𑍀𑌜𑌯𑍋𑌨𑌿𑌰𑍍𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨𑌃।
𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌕𑌾𑌰𑌣𑌂𑌤𑍁 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌃॥

ருத்ராத் ப்ரவர்த்ததே பீஜம் பீஜயோநிர்ஜநார்தந:।
கார்யம் விஷ்ணு: க்ரியா ப்ரஹ்மா காரணந்து மஹேச்வர:॥

(இ-ள்). "பிரபஞ்ச சிருஷ்டியாகிய கிரியையை நடத்தப் பிரமதேவனைத் தருங்காரணத்தினாலே உருத்திரமூர்த்தி பீஜமெனவும், அந்தப்பீஜத்துக்கு யோநிஜநார்த்தனனாகிய விஷ்ணுவெனவும் சொல்லப்படுகின்றார்கள்" என்று விளக்கியுள்ளது. இதனால் சிவபெருமான் பீஜமுடைய பீஜீ, பிரமன் பீஜம், ஹரி யோநி என்று ஏற்பட்டது. பீஜமாவது சிவனாது ஊர்த்வ சுவர்ண ரேதஸ். இச்சுருதியில் விஷ்ணுவையும், பிரமனையும், சிவனையும் கூறிய முறைப்படியே சடகோபரும் தாம்பாடியருளிய திருவாய்மொழியின் இறுதிப்பத்து இறுதிச்செய்யுளில் "அவாவறச் சூழரியை யயனை யரனை யலற்றி, அவாவற்று வீடுபெற்ற குருகூர்ச் சடகோபன்" என்று அவர்களை யமைத்துத் துதித்துள்ளார். அக்கப்பாசுரத்தில் "ஹரன்" என்னுஞ் சொல்லுக்குப்பின்னே யாதொரு தெய்வப் பெயரும் இல்லாமையானும், "சிறப்புடைப் பொருளைப் பிற்படக்கிளத்தல்" என்னுஞ் சூத்திரப்படி அரனையே அவர் வாக்கினின்றும் முடிபாக எழுந்தமையானும், ஒருபுடை "முற்படக்கிளத்து பொருள் சிறப்புடைத்தாகும்" என்னும் பிரமாணப்படி ஹரியை முதலில் வைத்து மகிழ்ந்தமையானும், அவ்விருவர்மத்தியில் அவர்களது காரியமாகிய பிரமனை வைத்து ஓதினமையானும், அவ்வாழ்வாருக்கும் பர்த்ருபார்யா சம்பந்தம் உடன்பாடாகி, அவ்விருவருக்குமுள்ள அபேதத்தன்மையைச் செவ்வனே நிலைநாட்டியருளினாரென்பது வெள்ளிடைமலைபோல் விளங்குகின்றது. மேலும் திருமங்கையாழ்வாரும் பெரிய திருமொழியில் "ஒருகுறளாய்" என்றபத்தில் "பிறைதங்கு சடையானை வலத்தேவைத்துப் பிரமனைத் தன்னுந்தியிலே தோற்றுவித்துக், கறைதங்கு வேற்றடங்கண் திருவை மார்பிற் கலந்தவன்" என்னும் பாவில் இந்த உண்மையைச் சிறப்பித்துச் சாதித்தருளினார். "வைத்து" என்னும் பதப்பிரயோகம் இப்பாவில் தெளிவாயமைந்திருத்தலின் பிரமனுடைய தோற்றத்துக்கு முன்னரே சிவபெருமான் இருந்தனரென்பது ஆழ்வாருக்குஞ் சம்மத

மாயிற்று. இதுநிற்க, ஆசிரியராகிய கண்ணபிரானும் “ஸ்ருஷ்டிஸ்திதிஸம்ஹார காரண த்ரயம்-அஹம்ப்ரஹ்மா சசர்வச்சஜகதஃகாரணத்ரயம்-யானும், பிரமனும், உருத்திரனும் உலகத்துக்கு முக்காரணங்களாம்” என்றருளிச் செய்தனர்.

இலக்குமிக்குப் பதி விஷ்ணு என்னும் அர்த்தத்தில் “லக்ஷ்மீ பதிஃ” என்னுஞ்சொல் வைதிக நூல்களில் வழங்கப்பட்டு வருதல் போல ஹரிக்குப் பதி ஓங்காரசிவன் என்னும் அர்த்தத்தில் “ஹரிஃஓம்” என்னும் மாற்றமும் வழங்கப்பட்டு வருகின்றது. சிவன் ஹரனாகவே விஷ்ணு ஹரியாயினர். ஆகையினாலே திருத்தாண்டகவேந்தர், “பிரிவிலா வமரர்கூடிப் பெருந்தகைப் பிரானென்றேத்தும், அரியலாற் றேவியில்லை யையனை யாறனார்க்கே” என்று திருவாய்மலர்ந்தருளினர். இலிங்கபுராணமும், “மலைமகள் கொழுநன் பிசிநீ பீசமற்றியான் யோநிதன்பீசம், உலகெலாமுன்னந்தோற்றுவிப்பதற்கென் யோநியில் வைத்தனன்” எனவும், மதுரைக்கலம்பகம், “போதலர்பைந் துழாய்ப்படலைப் புயல்வண்ணந் தொருவனிரு பூவைமார்க்குக், காதலனாய் மற்றுனக்கோர் காதலியாய் நிற்பதொரு காட்சிதானே” எனவுங் கூறிப்போந்தன. சக்தன் சக்தி என்பனபோல ஹரன் ஹரி என நின்றமையால் திராவிட வேதபாராயணத்துக்கு முதலினும் முடிவினும் “திருச்சிற்றம்பலம்” என்று கூறுமாறே ஆரிய வேதபாராயணத்துக்கும் ஆதியினும் அந்தத்தினும் ஹரிநாமத்தை வந்தன வசனமாகச் சில வைதிகர் வழங்கிவருவது, ஹரனது சக்திபால் அனைத்தும் உதித்தொடுங்குமென்பதை குறிப்பிக்கும்பொருட்டே.

சிவபெருமானுக்கும் விஷ்ணுவுக்கும் நாயக நாயகி சம்பந்தத்தால் யாதொரு பேதமுமில்லாதிருந்தாலும் உள்ளே சத்துவமும் வெளியே தமசுமுடைய இக்குணசிவமூர்த்தி, உள்ளும் புறமும் ரஜசுடைய பிரமனையும், உள்ளே தமசும் வெளியே சத்துவமுமுடைய விஷ்ணுவையும் சம்ஹாரகாலத்தில் தம்மிடத்தில் ஒடுக்கிக்கொண்டு பின்னர் சிருஷ்டிகாலத்தில் தோற்றுவிக்கின்ற காரணத்தால் இவ்விருவரினும் அவரே உயர்ந்தோராவர். இதற்குச ஸ்ருதிப்ரமாணம்,

அதர்வண வேத சரபோபநிஷத்.

[illegible] ஹரிஃ।
[illegible] நஹி॥

பராத்பரதரோப்ரஹ்மா தத்பராத்பரதோஹரி:
தத்பராத்பரதோ ஹீசஸ்தஸ்மாத்துல் யோதிகோநஹி॥

(இ-ள்). "பரத்துக்குப் பரம் பிரமன். அவருக்குப் பரம் ஹரி. அவருக்குப் பரம் ஈசன். அவருக்குச் சமானரும் அதிகருமில்லை" என்றது. இத்தகைய சுருதியின் உண்மையை யுணராமலும், "அறிவும் சிவமும் ஒன்று" என்னும் ஆன்றோர் அநுபவவுரையைப் பொருட்படுத்தாமலும் "அரியுஞ் சிவனும் ஒன்று அறியாதவன் வாயில் மண்ணு" என்று தம் மனம்போனவாறு பிதற்றிக்கொண்டு திரியும் மந்தப் பிரஞ்ஞையுடையோரது வாழ் இருந்தவாறு என்னே! என்னே!! சங்கார கர்த்தாவாகிய உருத்திரமூர்த்தியையும், திதிகர்த்தாவாகிய விஷ்ணுமூர்த்தியையும் சமப்படுத்தல் இராஜாவையும் மந்திரியையும் சமப்படுத்தலுக்கொக்கும். ஆகையினாலன்றோ ஸ்ரீதாயுமானசுவாமிகள், "அல்லலாக் தொழில் படைத்தே அடிக்கடி யுருவெடுத்தே, மல்லன்மாஞாலங் காக்க வருபவர் கடவுளென்னின், தொல்லையாம் பிறவிவேலை தொலைந்திடா திருணீங்காது, நல்லது மாயைதானுங் காளென வந்துநிற்கும்.' என வற்புறுத்தியருளினர். இந்தக் குண சிவம் நான்காவது தெய்வத்துக்குரிய எல்லாப் பெயரும், வடிவும், தொழிலும் பெற்றிருந்தாலும், சதர்த்த சப்த வாச்யப் பொருளென்று வேதங்களால் வந்திக்கப்பெற்ற எங்கள் பரசிவமல்லர். இவருக்கும் பஞ்சவக்திரங்களும், சதாசிவன் என்னும் பெயரும், பிறவுமுள. அவைபற்றி மயங்கற்க. "பண்டையிற் படைப்புங் காப்பும் பறந்தன மாயையோடே" என்று ஷை சுவாமிகள் பூஷித்தபடி, படைப்புத் தொழிலையும், காப்புத் தொழிலையும் தன்னிடத்தில் அடக்கும் ஆற்றல்பெற்ற இக்குணமூர்த்தியையுங்கூட ஒடுக்குபவர் ஐந்தொழில் முதல்வரான பரமசிவமே. இவ்வாய்மையை யுணராது பரமசிவத்தை மூவரில் ஒருவராகத் தியானிப்பவரெல்லாம் பதமுத்தியை யடைவரன்றி அபரமுத்தி, பரமுத்திகளையடையாரென்பது திண்ணம்.

சக்லயஜுர்வேத ஈசாவாஸ்யோபநிஷத்.

𑌅𑌨𑍍𑌧𑌂 𑌤𑌮𑌃 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑌿 𑌯𑍇𑌽𑌸𑌮𑍍𑌭𑍂𑌤𑌿𑌮𑍁𑌪𑌾𑌸𑌤𑍇।
𑌤𑌤𑍋 𑌭𑍂𑌯 𑌇𑌵 𑌤𑍇 𑌤𑌮𑍋 𑌯 𑌉 𑌸𑌮𑍍𑌭𑍂𑌤𑍍𑌯𑌾𑌂 𑌰𑌤𑌾𑌃॥

அந்தந்தம: ப்ரவிசந்தி யேऽஸம்பூதி முபாஸதே।
த்தோபூய இவதே தமோ யஉஸம்பூத்யாக்ரதா:॥

(இ-ள்). "எவர்கள் (ஜடமாகிய) பிரகிருதியை உபாசிக்கின்றார்களோ அவர்கள் மிக்க அஞ்ஞான இருட்டை யடைகின்றார்கள். எவர்கள் உற்பத்தியுடையதில் ஆசையுடையவர்களோ அவர்கள் முற்கூறிய இருட்டைப்பார்க்கிலும் விஸ்தாரமான இருளில் பிரவேசிக்கின்றார்கள்" என்று நல்லறிவு புகட்டியது. அசம்பூதி-பிரகிருதி. சம்பூதி-உற்பத்தி நாசமுடைய பொருள்கள். அதாவது ஜடமாகிய பிரதானத்தையே பிரமமென்று உபாசித்தலையும், உற்பத்தி நாசமுடைய பிரம விஷ்ணு ருத்ராதிகளையும், சூரியன் அக்கினி முதலிய இயற்பொருள்களையும் பிரமமெனப்பாவியாது பிரமமென்றே உபாசித்தலைச் செய்வோர் அந்தகாரத்தையடைவர் என்பது கருத்து. ஆகையினாலே "பெம்மானுன்னையல்லாற் பெரிதேத்தமாட்டேனே" எனவும், "உன்னேன் பிறதெய்வமுன்னையல்லா தெங்களுத்தமனே" எனவும் தேவாரமும் திருவாசகமும் முழக்கின. மணிவாசகப்பிரானும், "ஆட்டுத்தேவர்தம் விதியொழித்தன்பா லையனேயென்றுன் னருள்வழி யிருப்பேன்" என்று மனங்கசிந்துருகினார். (ஆட்டுத்தேவர் - ஆட்டப்பட்டதேவர். அவர்களை பிரமாதிகிருத்தியக் கடவுளர்)

இனி எடுத்துக்கொண்ட தாரசப்தப்பொருளை விளக்குவாம். தாரமென்றாலும், தாரகமென்றாலும், தாரகப் பிரமமென்றாலும் பொருள் ஒன்றே. இம்மூன்று சொற்களும் ஓங்காரமென்னும் பிரணவத்தையே குறிக்கின்றன. தாரகப்பிரமம் என்னும் இரு சொற்கள் ஒன்றாகச்சேர்ந்து வரும்போது அவை பிரணவத்தினிடத்தே யமையுமென்பது வேதவிற்பன்னர்களின் தீர்மானம். இராமன் தாரகப்பிரமம் என்பார்கூற்றை இடம்வந்துழி விசாரிப்பாம்.

மா - தாரக மந்திரம் பிரணவமென்றியம்புதற்கு வேதப்பிரமாணங்களுளவோ ?

ஆ - ஆம். உள அவற்றை விரிவாய் விளக்கிக் காட்டுவாம்.

சுக்ல யஜுர்வேத ஜாபாலோபநிஷத்.

அத்ர ஹி ஜந்தோ: ப்ராணேஷூத்க்ரமமாணேஷு ருத்ர ஸ்தாரகம் ப்ரஹ்ம வ்யாசஷ்டே| யேநாஸா வம்ருதீ பூத்வா மோக்ஷீ பவதி|

அத்ரஹிஜந்தோ: ப்ராணேஷூத்க்ரமமாணேஷு ருத்ரஸ்தாரகம் ப்ரஹ்மவ்யாசஷ்டே। யேநாஸாவம்ருதீ பூத்வா மோக்ஷீபவதி॥

(இ-ள்). "இங்கு ஜந்துக்களுக்குப் பிராணன் வெளிப்படும் பொழுது உருத்திரமூர்த்தி தாரகப் பிரமோபதேசஞ்செய்வர். அதனல் அச்செந்து அமிர்தமாய் மோட்சத்தைப்பெறும்." என்றது. (இங்கு - ஸ்ரீ காசி க்ஷேத்திரத்தில்)

வாரணாசி என்னுங் காசி க்ஷேத்திரத்திலே சர்வஞ்ஞத்துவம் வாத்ஸல்லியம் முதலிய அற்புத குணங்கள் நிறைந்த ஸ்ரீவிசுவேசுவரர், பிரமவித்தியாநாயகி என்னும் விசாலாக்ஷியம்மையார் தமது அருட்டிருமேனியில் விளங்க, மரிக்கின்ற ஜந்துவின் எதிரே பிரசன்னமாகி, அச்செந்து இளைப்பாறும் பொருட்டு அதன் வலது செவியில் மெதுவாகத் தாரக மந்திரோபதேசஞ்செய்து பாசத்தைச் சேதிக்கின்றார் என்பதாதி தாரக மந்திரவித்தை காசிகண்ட முதலிய புராணபாகங்களில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. அச்சுலோகங்களின் மொழிபெயர்ப்பு "இத்தலமெய்தி யிறக்குநர் யாருமிளைப்பாற, உத்தரியந்தொடுமேதுமைவீசிட வுமையோர்பால், வைத்தவரும் பொருள் மேவருதாரக மறையோதி, முத்தியளித்திடு மிப்பதியார்விட முயல்வாரே" எனவும், "காசிதன்னிடைமுடிபவர்க் கெம்பிரான் கழறும், மாசில்தாரகப் பிரமமாயதன் பயனுய்ந்தான்" எனவும் வருமாறுகாண்க. இத்தாரக மந்திரம் பிரணவமே என்பதற்கு மேலே எடுத்துக்காட்டிய அதர்வசிகை அதர்வசிரசுக்களின் மந்திரங்களல்லாமல் அடியில்காட்டும் உபநிஷத் வாக்கியங்களுஞ் சிறந்த பிரமாணங்களாகும்.

சுக்லயஜுர்வேத அத்வய தாரகோபநிஷத்.

𑌗𑌰𑍍𑌭𑌜𑌨𑍍𑌮 𑌜𑌰𑌾𑌮𑌰𑌣 𑌸𑌂𑌸𑌾𑌰 𑌮𑌹𑌦𑍍𑌭𑌯𑌾𑌤𑍍 𑌸𑌂𑌤𑌾𑌰𑌯𑌤𑌿

𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑌾𑌰𑌕𑌮𑌿𑌤𑌿।

கர்ப்பஜந்ம ஜராமரண ஸம்ஸார மஹத்பயாத் ஸந்தாரயதி
தஸ்மாத்தாரகமிதி।

(இ-ள). "கர்ப்பம், ஜன்மம், ஜரை, மரணம், சம்சாரம் ஆகிய மகாபயத்தினின்றுந் தாண்டச்செய்கின்றது. அதனலே தாரகமென்று சொல்லப்படுகின்றது' எனவும்,

அதர்வணவேத ராமோத்தர தாபநீயோபநிஷத்.

𑌤𑌾𑌰𑌕𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌤𑌾𑌰𑌕𑍋 𑌭𑌵𑌤𑌿 - 𑌤𑌦𑍇𑌵 𑌤𑌾𑌰𑌕𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌤𑍍𑌵𑌂
𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 - 𑌤𑌦𑍇𑌵𑍋𑌪𑌾𑌸𑌿𑌤𑌵𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 𑌜𑍍𑌞𑍇𑌯𑌃। 𑌗𑌰𑍍𑌭𑌜𑌨𑍍𑌮 𑌜𑌰𑌾𑌮𑌰𑌣𑌃

𑌸𑌂𑌸𑌾𑌰𑌮𑌹𑌦𑍍𑌭𑌯𑌾𑌤𑍍 𑌸𑌂𑌤𑌾𑌰𑌯𑌤𑍀𑌤𑌿 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌷𑌡𑌕𑍍𑌷𑌰𑌂 𑌤𑌾𑌰𑌕𑌮𑌿𑌤𑌿।

தாரகத்வாத்தாரகோபவதி ததேவதாரகம் ப்ரஹ்மத்வம் வித்தி-ததேவோபாஸிதவ்யமிதிஜ்ஞேயம்। கர்ப்பஜன்ம ஜராமரண ஸம்ஸாரமஹத்பயாத் ஸந்தாரயதீதி தஸ்மாதுச்யதே ஷடக்ஷரம் தாரகமிதி।

(இ-ள்). "தாரகமாதலால் தாரகமெனப்படும். அதையே தாரகப் பிரமமென்றறி. அதுவே உபாசிக்கப்பாலதென்றுணர். கர்ப்பம், ஜன்மம், ஜரை, மரணம், சம்சாரமாகிய மகா பயத்தினின்றுந் தாரணஞ் செய்விப்பதால் அது தாரக மெனப்படும். அது ஷடக்ஷரதாரகமாம்." (ஷடக்ஷரம்-அகாரம், உகாரம், மகாரம், அர்த்தமாத்திரை, பிந்து, நாதம்) எனவும்,

அதர்வணவேத பாசுபத ப்ரஹ்மோபநிஷத்.

𑌪𑍍𑌰𑌣𑌵𑌸𑍍𑌤𑌾𑌰𑌕𑌸𑍍𑌸 𑌵𑍈 𑌵𑍇𑌦-ப்ரணவஸ்தாரகஸ்ஸவம்வேத்

(இ-ள்). "பிரணவம் தாரகம், அதை யெவன் அறிவான்" எனவும்,

அதர்வணவேத பஸ்ம ஜாபாலோபநிஷத்.

𑌜𑌪𑌂𑌸𑍍𑌤𑌾𑌰𑌕𑌂 𑌪𑍍𑌰𑌣𑌵𑌂 𑌮𑍋𑌦𑌮𑌾𑌨𑌾𑌸𑍍𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌤𑌿।

ஜபம்தஸ்தாரகம் ப்ரணவம் மோதமா நாஸ்திஷ்டந்தி।

(இ-ள்). "தாரகமாகிய பிரணவத்தை ஜபித்துக்கொண்டு சந்தோஷத்தோடிருக்கின்றார்கள்" எனவும்,

சுக்லயஜுர்வேத தார ஸாரோபநிஷத்.

𑌤𑌾𑌰𑌕𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌤𑌾𑌰𑍋 𑌭𑌵𑌤𑌿 𑌤𑌦𑍇𑌵 𑌤𑌾𑌰𑌕𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑍍𑌵𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌤𑌦𑍇𑌵𑍋𑌪𑌾𑌸𑌿𑌤𑌵𑍍𑌯𑌂।

தாரகத்வாத்தாரகோபவதி ததேவதாரகம் ப்ரஹ்மத்வம்வித்தி ததேவோபாஸிதவ்யம்।

(இ-ள்). "அது தாரகமாதலால் தாரகமெனப்படும். அதைத்தாரகப் பிரமமாக அறி. அதையே உபாசிக்கவேண்டும்" எனவும் வருமாறுகாண்க.

இவ்வாறே இன்னும் பல உபநிஷத்துக்களும் தாரகம் பிரணவமென்றே சித்தாந்தப்படுத்தியிருக்கின்றன. அல்லாமலும், எல்லாமந்திர சாஸ்திரங்களும் தாரமென்ற சொல்லுக்குப்பிரணவம் பொருளாவதன்றி வேறெதுவும் பொருளாவதில்லையென்று விளக்கியிருக்கின்றன. ஸ்ரீ ருத்திரத்திற்கு வியாக்கியானஞ்செய்த

சர்வ பாஷ்யக்காரர்களும் "நமஸ்தாராய" என்ற மந்திரத்திலுள்ள தாரபதத்துக்குப் பிரணவப்பொருளாயுள்ளவர் சிவபெருமானென்றே பொருள்விரித்து அதற்கு வேண்டிய பிரமாணங்களையும் எடுத்துக் காட்டியிருக்கின்றார்கள். வசிஷ்டாதிஸ்மிருதிகளும்,

𑌅𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌥𑌿𑌤𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌣𑌮𑍂𑌲𑍇 𑌸𑌦𑍋𑌹𑌰𑌃।
𑌪𑍍𑌰𑌣𑌵𑌂 𑌤𑌾𑌰𑌕𑌂 𑌬𑍍𑌰𑍂𑌤𑍇 𑌨𑌾𑌨𑍍𑌯𑌥𑌾 𑌕𑌸𑍍𑌯𑌚𑌿𑌤𑍍 𑌕𑍍𑌵𑌚𑌿𑌤𑍍॥

அவிமுக்தஸ்திதஸ்தஸ்ய கர்ணமூலே ஸதோஹர:।
ப்ரணவம் தாரகம் ப்ரூதே நாந்யதா கஸ்யசித் க்வசித்॥

(இ-ள்). "அவிமுக்தம் என்ற க்ஷேத்திரத்தில் சந்நிதானஞ் செய்யும் விசுவேசுவரர் அங்குமரிப்பவர்களின் செவியில் தாரகமாகிய பிரணவத்தை உபதேசிக்கின்றார். வேறெங்கும் அவ்விதமில்லை" என்று பிரணவத்தையே தாரகமென்று வழங்கின. அநேக புராணங்களிலும் அப்படியே சொல்லியிருக்கின்றன. ஆகையினாலே சுருதி, ஸ்மிருதி, புராணேதிகாசங்களின் சம்மதமாவது பிரணவமே தாரகமாம். சிற்சில இடங்களில் மற்றத் தேவமந்திரங்களையும் தாரகமென்று வற்புறுத்திக் கூறியது அம்மந்திரங்களிடத்து உபாசகர்களுக்குப் பற்றுண்டாகும்பொருட்டுத் துதி ரூபமாகவும், கௌணமாகவுஞ் சாற்றியதேயன்றி வேறல்ல. ஆகையினாலே அவை விதிவாக்கியங்களல்ல. இதுவே மேதாவியர் துணிபு. சித்தர்கள் பாடல்களிலும் பிரணவம் தாரகமென்று பிரத்தியக்ஷமாய் அறியக்கிடக்கின்றது. (அவிமுக்தம்-அண்டத்தில் காசிப்பதியும், பிண்டத்தில் புருவ நடுவுமாம்.)

மா. அப்படியானால் ராமமந்திரத்தைத் தாரக மந்திரமென்று சுருதி முதலிய பிரமாணங்களைக்கொண்டு சிலர் சாதிக்கின்றார்களே அதன் கருத்துத்தான் யாது? பகவானே! கூறியருளும்.

ஆ. கூறுகின்றோம், கேட்பாயாக ராமமந்திரத்தை மாத்திரமல்ல. அஷ்டாக்ஷரமந்திரத்தையும் பஞ்சாக்ஷரமந்திரத்தையுங்கூட தாரகமந்திரமென்றே சாதிக்கப் பல சுருதி வாக்கியங்கள் இடந்தருகின்றன. அவற்றால் அம்மந்திரங்களை நேரே தாரகமென்று அறுதியிட்டுரைக்க யாராலும் முடியாது. அவையாவும் சாமான்ய வாக்கியங்களென்றே கொள்ளவேண்டும். அந்தந்த ஆத்மாக்களின் பரிபாகத்துக்கேற்ப அவ்வாறு சுருதிகள் துதித்

துமகிழ்ந்தன. அக்கருத்தை யறியாமல் சாமான்ய வாக்கியங்களைக்கொண்டு விசேஷவாக்கியங்களைப் பூர்வபட்சப்படுத்த முயன்றிடுவர் சமயப்பற்றுடையார். ஆனால் சமயாதீத சுத்தாத்வைத வைதிக சைவ செந்நெறியில் நின்றோர் அப்படிச்செய்யத் துணிவு கொள்ளார். சாமான்ய விசேஷ வாக்கியங்களிரண்டையும் ஒத்தப் பிரமாணங்களாகத் தழுவிக்கொண்டு சந்தர்ப்பத்துக்கேற்றவாறு பொருள்விரித்து மகிழ்வர். ஏனெனில் வேதங்களிற் கூறப்பட்ட ஒவ்வொரு வாக்கியமும் பிரமாணமாகுமேயன்றி அப்பிரமாணமென்று அவற்றை யொதுக்குதல் மிகவுந் தவறாம்.

கிருஷ்ண யஜுர்வேத தைத்ரீயோபநிஷத் - சிக்ஷாவல்லீ.

𑌨𑌮𑌸𑍍𑌤𑍇 𑌵𑌾𑌯𑍋 𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌸𑌿।

„நமஸ்தே வாயோ த்வமேவ ப்ரத்யக்ஷம் ப்ரஹ்மாஸி|

(இ-ள்). ‘‘வாயுவே உனக்கு நமஸ்காரம், நீ பிரத்தியக்ஷப் பிரமமாகிறாய்'' என்று வாயுவைப் பிரமமென்று துதித்தது.

ஸாமவேத சாந்தோக்கியோபநிஷத் - வாமதேவ்ய வித்தை.

𑌤𑍍𑌵𑌂 𑌰𑌾𑌜𑌨𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌸𑌿-த்வம் ராஜன் ப்ரஹ்மாஸி|

(இ-ள்). ‘‘ஓ அரசனே! நீ ப்ராஹ்மணனாகிறாய்'' என்று ராஜகுதிட்ஷிதனைப் பிராமணனென்று புகழ்ந்தது.

அன்றியும், மேலேகூறிய தைத்திரீயோபநிஷத்து அன்னமயம், பிராணமயம், மநோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் ஆகிய பஞ்சகோசங்கள் ஒவ்வொன்றையும் பிரமமென்று முதலில் நிருபித்துப் பின்னர் ஒன்றன்மேலொன்றாய்ச் சிறப்பித்து, இறுதியில் ஆனந்தமே பிரமமென்று வற்புறுத்தியது எவ்வாறோ அதுபோல ராம, அஷ்டாக்ஷர, பஞ்சாக்ஷர மந்திரங்களையும் தாரகமென்று வேதம் புகழ்ந்தோதியதேயன்றி வேறன்று. அதனாலே அம்மந்திரங்கள் உண்மையில் தாரகமாகமாட்டா. வேதங்களிலுள்ள பல அர்த்தவாதங்களில் சில சொற்களுக்குச் சிலவிடத்தில் சிறப்புப்பொருள் கூறப்பட்டிருக்கின்றது. அப்பொருளை எல்லாவிடத்துங் கொள்ளவேண்டுமென்னும் நியமமில்லை. அப்படிக் கொண்டால் வேதம் உன்மத்தர் கூற்றாய் முடியும். வேதத்திலுள்ள ஓர் வைரசாமமாகிய மகேந்திரஸ்தோத்திரத்திற்கு ‘‘வ்ருஷ°-ப்ருஷ்டம்'' என்னும் பெயருண்டு. அதே பெயர் ரதந்தரமென்னுஞ் சாமத்திற்கும் அவ்வேதமே கூறியுள்ளது. ஸோமலதை விஷ்ணு

வைப்பெற்றதென ஆரணங்கூறிற்று. புராணங்களும் அதையே பின்பற்றிப் புகன்றன. வேதத்தில் ருத்ரன் என்ற சொல்லுக் எங்கும் பிரசித்தமான பொருள் அம்பிகாபதி. ஓரிடத்தில் அ கினி அதன் பொருளெனக் கூறியிருக்கின்றது. மற்றோரிடத்தி ஜ்வரமும் அதன் பொருளென்று சொல்லியிருக்கின்றது. ப்ரஹ் என்ற சொல்லுக்கு எங்குமுள்ள பொருள் பிரமம். அச்சொல்லை பிராம்மணனிடத்தும் வேதம் விநியோகித்துள்ளது. இப்படி இவ் னும் அனேக பிரயோகங்களுள, இந்தப் பிரயோகங்களைக்கொண் டே ப்ருஷ்டம் என்றசொல் ரதந்தரத்தையே கூறுமெனவும் ஸோமலதை விஷ்ணுவுக்குத் தகப்பனெனவும், அக்கினி அல்லது ஜ்வரமே ருத்திரனுக்குப் பொருளெனவும், பிராம்மணனே பிர மத்துக்கு அர்த்தமெனவும் யாராலும் நிலைகாட்ட முடியுமோ முடியாதன்றே. அவ்வச்சொற்களுக்கு அவ்வப் பிரகரணங்க ளுக்கேற்றவாறு பொருட்படுத்தவேண்டுமே யல்லது மற்றைய விடங்களிலெல்லாம் அதே பொருளென்றுகூறுதல் ஆரண வழக் குக்கும், ஆன்றோர் வழக்குக்கும் முரணாகும். ஆகையினாலே, துதிவாக்கியம் இது, விதிவாக்கியம் இது என்றறிந்துகொள்ள வேண்டியது அறிஞர் கடனாம். ராமோத்தரதாபநியோபநிஷத்தி லும் தாரசாரோபநிஷத்திலும் தாரகம் யாதென வினவிய பரத் வாஜ மஹரிஷிக்கு ஓரிடத்தில் ராமமந்திரம் தாரகமெனவும், மற் றோரிடத்தில் அஷ்டாக்ஷரம் தாரகம் எனவும் விடையிறுக்கப்பட் டன. அது எதனாலெனின் தமது தந்தையாகிய வருணபகவானை பிரமம் யாதென வினவிய பிருகுமகாரிஷிக்கு அத்தந்தையார் முதலில் ‹‹அந்நம் ப்ரஹ்ம-அந்நம் ப்ரஹ்ம, ப்ராணோ ப்ரஹ்ம-ப்ரா ணோப்ரஹ்ம, மநோ ப்ரஹ்ம- மநோப்ரஹ்ம, விஜ்ஞாநம் ப்ரஹ்ம-விஞ் ஞானம்ப்ரஹ்ம என்றற்றொடக்கத்தனவாயுள்ள வாக்கியங்களை உபதேசித்தாற்போன்றனவாம். அங்ஙனமில்வழி இராமமந்திரம் தாரகமாயின் அஷ்டாக்ஷரம் தாரகம் என்றதூஉம், அஷ்டாக்ஷ ரம் தாரகமாயின் இராமமந்திரம் தாரகம் என்றதூஉம் ஒன்றோ டொன்று முரண்பட்டுச் சுருதிகள் அப்பிரமாணங்களாயழிந்து போம். இனி இராமமந்திர முதலியவை தாரகமென்றதற்குச் சுருதிப் பிரமாணங்களும் வருமாறு,

சுக்ல யஜுர்வேத முக்திகோபநிஷத்.

யத்ர குத்ராபி வா காஶ்யாம் மரணே ஸ மஹேஶ்வர:।
ஜந்தோர் தக்ஷிணகர்ணே து மத்தாரம் ஸமுபாதிஶேத்॥

யத்ரகுத்ராபி வாகாச்யாம் மரணே ஸமஹேச்வர:|
ஜந்தோர்தக்ஷிண கர்ணேது மத்தாரம் ஸமுபாதிசேத்||

(இ-ள்). "காசியில் எந்த இடத்திலாவது எந்த ஜந்துவேனும் மரித்தால் அதன் வலது செவியில் என்னுடைய தாரக மந்திரத்தை விசுவேசுவரர் உபதேசிக்கின்றார்." என்றது. (இது ஸ்ரீராமமூர்த்தியினுடைய வாசகம்).

அதர்வணவேத ராமோத்தர தாபங்யோபநிஷத்.

𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌮𑌨𑍁𑌂 𑌕𑌾𑌶𑍍𑌯𑌾𑌂 𑌜𑌜𑌾𑌪 𑌵𑍃𑌷𑌭𑌧𑍍𑌵𑌜𑌃।
𑌉𑌪𑌦𑍇𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑌿 𑌮𑌨𑍍𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌂 𑌸 𑌮𑍁𑌕𑍍𑌤𑍋 𑌭𑌵𑌿𑌤𑌾 𑌶𑌿𑌵𑌃॥

ஸ்ரீராமஸ்ய மநும் காச்யாம் ஜஜாப் வ்ருஷபத்வஜ:| ....
உபதேக்ஷ்யஸி மர்மந்த்ரம் ஸமுக்தோ பவிதாசிவ:||

(இ-ள்) "ஸ்ரீராமமந்திரத்தைக் காசியில் சிவபிரான் ஜபித்தார்." (என்று தொடங்கி) "ஏ சிவமூர்த்தி! என் மந்திரத்தை நீர் உபதேசித்தால் அந்தச்சீவன், முக்தனாவான்" என்று முடிந்துள்ளது. (இது யாஜ்ஞவல்கியருடைய வாசகம்.)

𑌕𑌿𑌂 𑌤𑌾𑌰𑌕𑌂 𑌕𑌿𑌂 𑌤𑌾𑌰𑌯𑌤𑍀𑌤𑌿 𑌸 𑌹𑍋𑌵𑌾𑌚 𑌯𑌾𑌜𑍍𑌞𑌵𑌲𑍍𑌕𑍍𑌯𑌃।
𑌤𑌾𑌰𑌕𑌂 𑌦𑍀𑌰𑍍𑌘𑌾𑌨𑌲𑌂 𑌬𑌿𑌨𑍍𑌦𑍁𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌂 𑌪𑍁𑌨𑌰𑍍𑌮𑌾𑌯𑌨𑌮𑌃॥

கிம்தாரகம் கிம்தாரயதீதி ஸஹோவாச யாஜ்ஞவல்க்ய:|
தாரகம் தீர்காநலம் பிந்து பூர்வகம் புநர்மாயநம:||

(இ-ள்). "எது தாரகம். எது தாரணஞ்செய்விக்கும். அந்த யாஜ்ஞவல்கியர் மறுபடியுங் கூறுகின்றார் தாரகமாவது ரகாரத்துடன் அகரநெடில் சேர்ந்து, பிந்துவுஞ்சேர்ந்து, பின்னர் அகர நெடிலேறிய அந்த ரகாரத்துடன் மாயநம: என்பதே" என்றியம்பியது. (இதுவும்யாஜ்ஞவல்கியருடைய வாசகம்)

சுக்ல யஜுர்வேத தாரஸாரோபநிஷத்.

𑌕𑌿𑌂 𑌤𑌾𑌰𑌕𑌂 𑌕𑌿𑌂 𑌤𑌾𑌰𑌯𑌤𑍀𑌤𑌿 𑌸 𑌹𑍋𑌵𑌾𑌚 𑌯𑌾𑌜𑍍𑌞𑌵𑌲𑍍𑌕𑍍𑌯𑌃॥
𑌓𑌂 𑌨𑌮𑍋 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌾𑌯𑍇𑌤𑌿 𑌤𑌾𑌰𑌕𑌂 𑌚𑌿𑌦𑌾𑌤𑍍𑌮𑌕𑌂 𑌇𑌤𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑌿𑌤𑌵𑍍𑌯𑌂॥

கிம்தாரகம் கிம்தாரயதீதி ஸஹோவாசயாஜ்ஞவல்க்ய:|
ஓம் நமோநாராயணாயேதி தாரகம் சிதாத்மகம் இத்யுபாஸிதவ்யம்||

(இ-ள்). "எது தாரகம், எது தாரணஞ் செய்விக்கும். அந்த யாஜ்ஞவல்கியர் சொன்னார். ஓம் நமோ நாராயணாவென்று. தாரகம் சிதாத்மகமாயுள்ளது. அதுவே யுபாசிக்கற்

பாலது'' என்றுகூறியது 'இதுவும் யாஜ்ஞவல்கியருடைய வாசகம்).

அதர்வண வேத பஸ்ம ஜாபா லோபநிஷத்.

𑌤𑌾𑌰𑌕𑌂 𑌶𑍈𑌵𑌂 𑌉𑌪𑌦𑌿𑌶𑌾𑌮𑌿। 𑌤𑌤𑍍𑌰𑍈𑌵 𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌮𑍁𑌪𑌦𑌿𑌶𑍍𑌯𑌤𑍇। 𑌶𑍈𑌵𑍋𑌽𑌯𑌂 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌃 𑌪𑌞𑍍𑌚𑌾𑌕𑍍𑌷𑌰𑌃। 𑌪𑌰𑌮𑍋 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌤𑌾𑌰𑌕𑍋𑌽𑌯𑌂 𑌪𑌞𑍍𑌚𑌾𑌕𑍍𑌷𑌰𑌃। 𑌓𑌮𑌿𑌤𑍍𑌯𑌗𑍍𑌰𑍇 𑌵𑍍𑌯𑌾𑌹𑌰𑍇𑌤𑍍। 𑌨𑌮 𑌇𑌤𑌿 𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍। 𑌤𑌤𑌶𑍍𑌶𑌿𑌵𑌾𑌯𑍇𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌰𑌤𑍍𑌰𑌯𑌮𑍍। 𑌨𑌾𑌤𑌸𑍍𑌤𑌾𑌰𑌕𑌃 𑌪𑌰𑌮𑍋 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌤𑌾𑌰𑌕𑍋𑌽𑌯𑌂 𑌪𑌞𑍍𑌚𑌾𑌕𑍍𑌷𑌰𑌃। 𑌵𑍇𑌦𑌾𑌵𑌤𑌂 𑌸𑌂 𑌶𑍈𑌵𑌂 𑌪𑌞𑍍𑌚𑌾𑌕𑍍𑌷𑌰𑌂 𑌜𑌪𑌨𑍍𑌤𑌸𑍍𑌤𑌾𑌰𑌕𑌂 𑌸𑌰𑍍𑌵 𑌏𑌵 𑌮𑍋𑌦𑌮𑌾𑌨𑌾𑌸𑍍𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌤𑌿।

தாரகம் சைவம் மநுபதிசாமி। தத்ரைவ முக்த்யர்த்த முபதிச்யதே। சைவோயம் மந்த்ர: பஞ்சாக்ஷர:। பரமோமந்த்ரஸ் தாரகோயம் பஞ்சாக்ஷர:। ஓமித்யக்ரே வ்யாஹரேத்। நம இதிபச்சாத் ததச்சிவாயேத் யக்ஷரத்ரயம்। நாதஸ்தாரக: பரமோ மந்த்ரஸ் தாரகோயம் பஞ்சாக்ஷர:। வேதாவதம் ஸம் சைவம் பஞ்சாக்ஷரம் ஜபந்தஸ்தாரகம் ஸர்வ ஏவம் மோதமாநாஸ்திஷ்டந்தி॥

(இ-ள்) ''தாரகமாகிய சைவமந்திரத்தை யுபதேசிப்போன். அங்கு முக்திக்காக உபதேசிக்கப்படுவது சைவமந்திரமாகிய பஞ்சாக்ஷரமே. இப்பரமமாகிய சைவ பஞ்சாக்ஷரமே தாரகமாம். ஓம் என்று முதலில் சொல்லுக. பிறகு நம வென்க. அதற்கு மேல் சிவாய என்று மூன்று அக்ஷரத்தைச் சொல்லுக. இதிலும் மேலான மகா மந்திரமாகிய தாரக மந்திரமில்லை. வேதங்களுக்குப் பேரணியாயுள்ள சைவ பஞ்சாக்ஷரமாகிய தாரக மகா மந்திரத்தை ப்ரணவத்துடன் ஜபித்துக்கொண்டு சந்தோஷத்தோடிருக்கின்றார்கள்'' என்றது (இது ஸ்ரீ விசுவேசுவரருடைய வாக்கியம்.)

இவ்வாக்கியங்களனைத்தையுஞ் சித்த சமாதானத்தோடு ஆராய்ந்துபார்க்கின் இராமமந்திரத்தையும் அஷ்டாக்ஷரமந்திரத்தையும் தாரகமென்று கூறிய இராமசந்திரன், யாஜ்ஞவல்கியர் இவர்கள் வசனங்களைக் காட்டிலும் ஸ்ரீ காசிப்பதியில் தாரகோபதேசஞ்செய்யும் மந்திராசாரியராகிய சிவபிரானது சொந்த வாக்கியங்களை சிறந்த பிரமாணங்களாகுமன்றோ. ஆகையினாலே இராம மந்திரமாவது அஷ்டாக்ஷர மந்திரமாவது ஒருபோதும் தாரகமாகாதென்பது வெளிப்படை. அல்லாமலும், இராம மந்

திரம் பரமுத்தி பெறுவதற்கு நேர் சாதனமான தாரகமாயின் அது வைணவர் வழங்கும் "ரஹஸ்யத்திரயத்தில்" சேர்க்கப்படாத காரணமென்னோ! இராமனுடைய பெருமையையும் அவனது ஆதிக்கியங்களையுங் கூறவந்த வான்மீகத்தில் அது விடுபட்ட காரணம் யாதோ! விவேகிகள் இவ்விரகசியத்தை உணராமலிருக்கவில்லை. குருஞானவாசிஷ்டம் சுகப்பரீக்ஷித்து சம்வாதத்தில் "இராமதாபநீயிற் சொல்லப்படுகிற இராமதாரகத்வம் முக்கியமன்று. அது கிரமமுக்திக்கே பிரயோசனப்படும். சிவனுக்குச் சிஷ்யத்வம் குணருத்ரபரமாகும்" என்று பரிஷ்கரித்திருக்கின்றதையும் மேதாவியர் உணரக்கடவர்.

இதுநிற்க, துவாபரயுகமுடிவில் சதுர்முகப் பிரமாவானவர் நாரதருக்கு உபதேசஞ்செய்த கிருஷ்ண யஜுர்வேத கலிஸந்தாரணோபநிஷத்தில் கலிதோஷத்தை நாசஞ்செய்யும் மந்திரங்கள் பதினாறு என்று கூறி அவை,

𑌹𑌰𑍇𑌰𑌾𑌮 𑌹𑌰𑍇𑌰𑌾𑌮 𑌰𑌾𑌮𑌰𑌾𑌮 𑌹𑌰𑍇𑌹𑌰𑍇 ।
𑌹𑌰𑍇𑌕𑍃𑌷𑍍𑌣 𑌹𑌰𑍇𑌕𑍃𑌷𑍍𑌣 𑌕𑍃𑌷𑍍𑌣 𑌕𑍃𑌷𑍍𑌣 𑌹𑌰𑍇𑌹𑌰𑍇
𑌇𑌤𑌿𑌷𑍋𑌡𑌶𑌕𑌂 𑌨𑌾𑌮𑍍𑌨𑌾𑌂 𑌕𑌲𑌿𑌕𑌲𑍍𑌮𑌷𑌨𑌾𑌶𑌨𑌂 ।

ஹரேராம ஹரேராம ராமராம ஹரேஹரே।
ஹரேக்ருஷ்ண ஹரேக்ருஷ்ண க்ருஷ்ணக்ருஷ்ண ஹரேஹரே
இதிஷோடசகம் நாம் நாம் கலிகல்மஷ நாசநம்।

(இ-ள்). வெளிப்படை. இவ்வாக்கியத்தினாலே இராமமந்திரத்தின் மஹிமை வேதவிற்பன்னர்களுக்கு இலேசாக விளங்கத் தடையின்று. இம்மந்திரங்களை உச்சரிக்க விதிவிலக்குகள் கிடையா. மூன்றரைக்கோடி வுருவானால் ஒருவன் பந்தத்தினின்றும் விடுபடுகின்றான் என்பது அவ்வுபநிஷத்தின் ஹ்ருதயம். நாளொன்றுக்கு லக்ஷமந்திரம் ஜபமானால் கொஞ்சங் குறைய ஒரு வருஷத்திலும், பதினாயிரமானால் கொஞ்சங் குறைய பத்து வருஷத்திலும் ஆயிரமானால் கொஞ்சங்குறைய நூறுவருஷத்திலும் கணக்காகின்றது. இத்தகைய காலநீடிப்பையுடைய மந்திரமோ தாரகமாகும். பளா! பளா!! நன்று, நன்று. தத்துவாதீதயோகிகள் தம் மனநாசத்துக்கும் நிஷ்டைக்கும் இதையே பொருளாக மதிப்பார்கள். மரிக்கின்ற ஜந்துவின் சாந்திக்கும் இதுவோ தாரகமாகும்.

இது நிற்க, இவ்விராமதாரகத்தைப்பற்றி வேறுவிதமாகவும் பொருள்கூறுதும். ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தில் சி என்னும் எழுத்து சிவனையும், வ என்னும் எழுத்து சக்தியையும் குறித்து நிற்றல் போல "ஹரா" என்னுஞ் சிவநாமத்தின் இறுதியெழுத்தும், உமா என்னுஞ் சக்திநாமத்தின் இறுதியெழுத்தும் ஒன்றாகச் சேர்ந்து "ராமா" எனவாயிற்று. ஆகையினாலே இது சிவநாமமென்பதே தேற்றம். சிவஸஹஸ்ர நாமத்தினும் "நாராயணாய" "ராமாய' என்னும் பிரயோகங்கள் வருமாறு காண்க.

அதர்வணவேத ராம ரஹஸ்யோபநிஷத்.

𑌶𑌿𑌵𑍋𑌮𑌾𑌃 𑌰𑌾𑌮𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑍋𑌤𑍍𑌰 𑌦𑍇𑌵𑌤𑌾 𑌪𑌰𑌿𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌃।

ஸிவோமா: ராமசந்த்ரோத்ர தேவதா பரிகீர்த்தித:।

(இ-ள்). "சிவன் உமை என்பவர்களுடைய ரூபமாயிருக்கும் இராமசந்திரன் இங்கே தேவதையாகச் சொல்லப்படுகின்றனன்' என்று முழக்கியது. இதுபற்றியே சைவர்கள் தங்கள் புதல்வர்களுக்குச் சிவராமன், வரதுங்கராமன், அதிவீரராமன், இராமன் எனப் பெயரிட்டு மகிழ்கின்றார்கள். இவ்வாறே தசரதச்சக்கரவர்த்தியும், ஜமதக்கினி முனிவரும் தங்கள் மக்களுக்கு அப்பெயரிட்டு வழங்கினார்கள். இராமர் சிவனடியாரென்பதைப் பற்றி அதே உபநிஷத்து,

𑌰𑌾𑌮𑌂 𑌤𑍍𑌰𑌿𑌣𑍇𑌤𑍍𑌰𑌂 𑌸𑍋𑌮𑌾𑌰𑍍𑌧𑌧𑌾𑌰𑌿𑌣𑌂 𑌶𑍂𑌲𑌿𑌨𑌂 𑌪𑌰𑌮𑍍।
𑌭𑌸𑍍𑌮𑍋𑌦𑍍𑌧𑍂𑌲𑌿𑌤𑌸𑌰𑍍𑌵𑌾𑌙𑍍𑌗𑌂 𑌕𑌪𑌰𑍍𑌦𑌿𑌨𑌮𑍁𑌪𑌾𑌸𑍍𑌮𑌹𑍇॥

ராமம் த்ரிணேத்ரம் ஸோமார்த தாரிணம் சூலிநம்பரம்।
பஸ்மோத்தூளித ஸர்வாங்கம் கபர்தின முபாஸ்மஹே॥

(இ-ள்). "இராமர் முக்கண்ணுடையவர். அர்த்தசந்திரனைத் தரித்தவர். சூலத்தைக் கையிலேந்தியவர். விபூதிதாரணத்தால் நிறைந்த ஸர்வாங்கங்களையுடையவர். செவ்விய சடைமுடியினையுடையவர்" என்று சைவமங்கலந்தழைக்கச் சாற்றியது. இவர் அகஸ்தியமஹா முனிவரிடத்தில் விரஜாதீக்ஷை பெற்றுக்கொண்டு சிவபக்தாக்ரேசராய் விளங்கிய வைபவம் புலவதிகநூல்களிலுங் கேட்கப்படுகின்றது. இவருக்குத் திருமண்தாரணம் உண்டென்று எந்த வேதத்திலுங் கேட்கப்படவில்லை. புராணங்களிலாவது, ஆழ்வார்கள் பிரபந்தத்திலாவது கூறப்பட்டிருக்கின்றதோவென்னின் அவற்றினுமில்லை. அதனை விஷ்ணுவினது உபா

சனைக்கு விபூதி தாரணமே வேதப் பிரதிபாதிதமாமென்பது நன்கு உணரப்படும். இதற்குரிய சுருதிப்பிரமாணம் 37-ம் பக்கத்தில் காண்க. வால்மீகி-பகவானும் இவர் சிவப்பிரசாதமெய்தினவரென்று அடியில்வருஞ் சுலோகங்களால் ஸ்பஷ்டமாகத் தெரிவித்திருக்கின்றார்.

𑌅𑌤𑍍𑌰𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌮𑌹𑌾𑌦𑍇𑌵𑌃 𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌮𑌕𑌰𑍋𑌤𑍍 𑌪𑍍𑌰𑌭𑍁𑌃।

அத்ரபூர்வம் மஹாதேவ: ப்ரஸாத மகரோத் ப்ரபு:।

(இ-ள்). "எனக்கு இவ்விடத்தில் பிரபுவாகிய மகாதேவர் முன்னே பிரசாதம் புரிந்தருளினர்." எனவும்,

𑌵𑌰𑌦𑌾𑌨𑌂 𑌮𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑍇𑌣 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌾 𑌵𑌰𑍁𑌣𑍇𑌨𑌚।
𑌮𑌹𑌾𑌦𑍇𑌵 𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌾𑌚𑍍𑌚 𑌪𑌿𑌤𑍍𑌰𑌾𑌮𑌮 𑌸𑌮𑌾𑌗𑌤𑌃॥

வரதாநம் மஹேந்த்ரேண ப்ரஹ்மணா வருணேநச।
மஹாதேவ ப்ரஸாதாச்ச பித்ராமம ஸமாகத:॥

(இ-ள்). "நான் இந்திரனிடத்தும், பிரமனிடத்தும், வருணனிடத்தும் வரம் பெற்றேன். மகாதேவருடைய பிரசாதத்தால் என் பிதாவைத் தரிசித்தேன்" எனவும் போந்தன.

முதல் சுலோகத்திலுள்ள மஹாதேவ சப்தத்திற்கு வருணனென்று தப்பர்த்தஞ்செய்வார்களென்றுபயந்தேமுனிசிரேஷ்டர் இரண்டாவது சுலோகத்தில் வருணனையும் மஹாதேவரையும் தனித்தனியாக வெடுத்துக்கூறினர். மஹாதேவரைப்பிரபுவென்றழைத்து அவரிடம் பிரசாதம் பெற்றேனென்றமையால் சிவபரத்வம் செவ்வனே நாட்டப்பட்டது. பிரபு-போஷிப்பவர். தண்டனுதிகாரி. அதாவது சிக்ஷாரக்ஷை செய்பவர். இராமரது சைவநலம் இவ்வாறு பிரகாசித்துக்கொண்டிருக்கவும், இவருக்கு மூலபுருஷராயுள்ள விஷ்ணுவும் காசியில் தென்புறத்தில் ஸ்ரீவிசுவேசுவரரை உபாசித்துக்கொண்டிருக்கிறாரென்பதற்குப் பிரமாணம்.

அதர்வணவேத பஸ்மஜாபா லோபநிஷத்.

𑌵𑍇𑌦𑌾𑌸𑍍𑌸𑌾𑌙𑍍𑌗𑌾𑌸𑍍𑌸𑍋𑌪𑌨𑌿𑌷𑌦𑌸𑍍𑌸𑍇𑌤𑌿𑌹𑌾𑌸𑌾 𑌨𑌚𑍈𑌵𑌦𑍇𑌵𑌾𑌶𑍍𑌚𑌸𑌰𑍍𑌵𑍇 𑌋𑌷𑌯𑌶𑍍𑌚𑌸𑌰𑍍𑌵𑍇 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌾। 𑌤𑌤𑌃𑌕𑌾𑌶𑍍𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌦𑍇𑌶𑍇 𑌵𑌾𑌰𑌾𑌣𑌸𑍀 𑌨𑌾𑌮 𑌸𑌂𑌜𑍍𑌞𑌃।........𑌤𑌤𑍍𑌰 𑌸𑌮𑌸𑍍𑌤𑌾𑌯𑌾𑌂 𑌦𑌿𑌶𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌕𑍃𑌤𑌾𑌞𑍍𑌜𑌲𑌿𑌰𑍍𑌵𑌿𑌶𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑍁𑌪𑌾𑌸𑍍𑌤𑍇। 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌸𑍍𑌯𑌾𑌂 𑌦𑌿𑌶𑌿 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌕𑍃𑌤𑍈𑌕𑌚𑌿𑌤𑍍𑌤𑌃 𑌸𑍍𑌵𑌯𑌮𑍇𑌵 𑌵𑌿𑌶𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑍁𑌪𑌾𑌸𑍍𑌤𑍇। 𑌪𑍍𑌰𑌤𑍀𑌚𑍍𑌯𑌾𑌂 𑌦𑌿𑌶𑌿 𑌰𑍁𑌦𑍍𑌰𑌸𑌨𑍍𑌤𑌾𑌨 𑌉𑌪𑌾𑌸𑍍𑌤𑍇॥

வேதாஸ் ஸாங்காஸ் ஸோபநிஷதஸ் ஸேதிஹாஸா ஸமத்தோந்ய தஹமேவ ஸர்வம் மயிஸர்வம் ப்ரதிஷ்டிதம்। ததஃ காச்யாம் ப்ரயதைரேவாஹமந்வஹம்பூஜ்யஃ।...... ..தத்ரபூர்வஸ்யாந்திசி ப்ரஹ்மாக்ருதாஞ்ஜலிரஹர்நிசம் மாமுபாஸ்தே। தக்ஷிணஸ்யாந்திசி விஷ்ணுஃ க்ருத்வைவ மூர்த்தாஞ்ஜலிம்மாமுபாஸ்தே। ப்ரதீச்யா மிந்த்ரஸ்ஸந்நதாங்க உபாஸ்தே॥

(இ-ள்). "சாங்கங்களோடுகூடிய வேதங்களும், உபநிஷத்துக்களும் இதிகாசத்தோடு என்னையே துதிக்கின்றன. எனக்கு வேறாக யாதொன்றுமில்லை. நானே யாவுமாயிருக்கிறேன். என்னிடத்திலேயே யாவும் நிலைபெற்றுள்ளன. அதனாலே காசியில் இறக்க விருப்பமுடையோருக்கு இரவும் பகலும் பூஜிக்க நானே யுரியவன். அங்கே பூர்வதிசையில் பிரமன் அஞ்சலியஸ்தனாகி இரவும் பகலும் என்னையே உபாசித்துக்கொண்டிருக்கிறான். தக்ஷிணதிக்கில் விஷ்ணு தலையிற்கூப்பிய கரங்களையுடையவராகி என்னையே உபாசித்துக்கொண்டிருக்கின்றார். மேற்றிசையில் இந்திரன் வணக்கத்துடன் என்னையே உபாசிக்கின்றான்" என வருமாறு காண்க. இதனால் ஸ்ரீ காசிப்பதியில் எழுந்தருளியிருக்குந் தெய்வம் சிவபரஞ்சுடரெனவும், அவரொருவரே ஸேவ்யர் ஏனையோரெல்லாம் ஸேவகரெனவும் வெளியாயிற்றன்றோ. ஆகையினாலே அங்கு மரிக்கின்றவர்களுடைய வலக்காதில் ஸ்ரீ விசுவேசுவரர் உபதேசிக்கும் மந்திரம் தமது நாமமாகிய தாரகமேயொழிய தசரதன் சேயாகிய இராமநாமமன்று. அப்படியானால் "ராமமந்திரத்தைக் காசியில் விருஷபத்துவஜனாகிய சிவன் ஆயிரம் மநுவந்தரம ஜபித்து ஜப ஓமாதிகளால் அர்ச்சனைபுரிய இராமன் பிரத்தியக்ஷமாகி சிவனைப்பார்த்து உனக்குவேண்டிய வரத்தைக் கேள் தருகிறேன் எனக் கூறினன்" என்னும் பொருளைத் தரும் வாக்கியங்கள் ராமதாபிந்யுபநிஷத்தில் காணப்படுகின்றனவே அவற்றிற்குப் பரிகாரம் யாதெனிற் சொல்வோம்.

உபநிஷத்துக்கள் எப்பொழுதும் ஒன்றோடொன்று விரோதிக்கமாட்டா. தாபந்யுபநிஷத்தில் கூறப்பட்ட ராமமந்திரம் சிவமந்திரமென்று துணிவதே சால்புடைத்து. இராமன் விரஜாதீக்ஷையின் பெருமையால் சிறந்த சாம்பவனாகி தன்னைச் சிவமாகப் பாவித்துச் சிவாநுபூதியிற்றிளைத்த பெரியோனாதலின் சிவத்தினிடத்துவைத்த பரத்துவ புத்தியால் சிவநாமமாகிய ராமதாரகத்தைத் தன்மாட்டு ஆரோபித்துக்

முடையதாம். சிவபெருமான் சிலமுனிவர்கள் அகத்திலிருந்தும், சில அமரர்களை அதிஷ்டித்தும் "நானே பிரமம்" என்றோதியது போல தன் பக்தனாகிய இராமனிடத்துமிருந்து விளம்பினான் என்பதே தாரகமந்திரோபாசகர்களின் தீர்வை. ராமரஹஸ்யோபநிஷத்தும் "ராம ஏவ பரம் ப்ரஹ்ம' என்றுகூறி அவ்வளவில் நில்லாது உடனே "ராம ஏவ பரந்தப:" என்று உண்மை நிறுவியது. தைத்திரீயாருணசாகையும் "நாராயண பரப்ரஹ்மா" என்றோதிப் பின்னர் "நாராயண பரோத்யாதா" என்று பிரகாசப்படுத்தியது. அந்நியாயங்களால் இராமரும், அவரது மூலபுருஷராகிய நாராயணரும் பரசிவதர்மாரோபணத்தால் பரப்பிரமமானார்களே ஒழிய ஜகஜ்ஜந்மாதிகாரண பரப்பிரமமல்லர். அவர்கள் சிவபரம்பொருளுக்கு என்றும் மீளாவழியடியார்கள். தமிழ்வேதமாகிய திருவாசகம் "ஆனாலுங் கேளா யயனுந் திருமாலும், வானாடர்கோவும் வழியடியார் சாழலோ" எனவும், திருவிளையாடற்புராணம் "முண்டக மலரோன் மாயோன் புரந்தரன் முதன்மற்றேனை, யண்டருந்தன் குற்றேவ லடிமையாக் கொண்டவம்மான்" எனவுஞ் சாற்றின.

சிவனடியார்களைச் சிவனென்றும், விஷ்ணுவடியார்களை விஷ்ணுவென்றும் கூறுதல் குற்றமாமோ. வேதமும் அவ்வாறே உபசரித்தது. இவ்வுண்மையையறியாமல் அவர்களையே பிரமமெனக் கூறுதல் மதாபிமானமும் விசாரக்குறைவுமேயாம். "தபஸ்வி" என்பதும் "த்யாதா" என்பதும் ஒரு பொருளையே குறிக்கும்.

மேலே காட்டலுற்ற ராமதாபநி வாக்கியத்திலுள்ள விருஷபத்துவஜனாகிய சிவன் குணருத்திரனேயன்றி அதே உபநிஷத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட "சிவமத்வைதம் சாந்தம் சதுர்த்தம்" என்னுந்துரீய சிவமன்று. அத்துரீயசிவம், ஸேவகராயும் ஸேவ்யராயும் வைஷ்ணவர்களாலே முறையேகூறப்பட்ட உருத்திரனுக்கும் இராமனுக்கும் அப்பாற்பட்டவர். அவர் பரப்பிரமமாதலால் அவரை எந்தச்சுருதியும் இழித்துக்கூற உடன்படாது. குணருத்திரரை இராமனுபாசிப்பதும், இராமனைக் குணருத்திரர் உபாசிப்பதுங் கற்பபேதங் காரணமாகும். அதைப்பற்றி வைதிக சைவர்கள் மனம்வருந்த ஹேதுவில்லை. அக்குண ருத்திரரும் இராமனுக்குத் தாழ்ந்தவராகார். இராமன் யயாதி, நகுஷன்,

புரூரவன், மாந்தாதா, சோமன், இலக்ஷ்மணன், பிரதர்த்தன் மு
லினரோடு யமதருமராஜனை உபாசித்துக்கொண்டிருந்த க
மகாபாரதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றமையானும், வருணன்
இந்திரன், பிரமன் ஆகிய இவர்களிடத்து வரம்பெற்ற வைபவ
மேலேகாட்டிய வால்மீகி ராமாயண சுலோகத்தால் அறியக்கிட
கின்றமையானும், கோசலையின் கருக்குழிநாற்றங் கமழப்பெற்ற
யோனித்தழும்பேறிப் பிறந்தமையானும், அத்தகைய சம்பவங்
கள் குணருத்திரர்பால் என்றும் நிகழாமையானும் இராமனைக்
காட்டிலும் விருஷபத்துவஜர் உயர்ந்தவரே. இத்தகைய நியா
யங்களானே ராமதாரகம் துரீய சிவபரமென நிரூபித்தற்கு "எவ்
வுருவில் யாரொருவ ருள்குவா ருள்ளத்துள், அவ்வுருவாய் நின்
றேயருள்கொடுப்பான்" எனவும், "யாதொரு தெய்வங் கொண்
டீரத்தெய்வ மாகி யாங்கே, மாதொரு பாகனார்தாம் வருவர் மற்
றைத் தெய்வங்கள், வேதனைப்படு மிறக்கும் பிறக்குமேல் வினை
யுஞ் செய்யும், ஆதலா லவை யிலாதா னறிந்தருள் செய்வ
னன்றே" எனவும் போந்த பிரபல பிரமாணங்களால் குணருத்தி
ரர்முன் வெளிப்பட்டு அருள்புரிந்த பரம்பொருள் அச்சிவ பரஞ்
சுடரே எனவும், அவ்விராமதாரகத்தால் எய்தப்பெறும் முத்தி
கிரமமுத்தி எனவும் நன்றாக நிரூபித்துக் காட்டப்பட்டது. எல்
லாவற்றையும் தெய்வ விபூதியில்வைத்துப் பரவுவது முழுமுதற்
கடவுளைப் புகழ்ந்தபடியன்றோ. அதனாற்றான் சூதஸம்ஹிதை
யும் "சங்கரிமந்துகை நாரணன் முதலியோர் தம்மைச், சங்கரா
சிவ சம்புவே சாம்பமாதேவா, எங்கனையகவெனத் துதித்தேத்தி
னும்பாசம், எங்குமாகிய தம்பிரானருளினாலிரியும்" என்று முழக்
கியது. இவ்வுண்மையை நுனித்தமதிகொண்டோர்க.

இனி ஸ்ரீபஞ்சாக்ஷரமந்திரம் தாரகமெனக்கூறிய சுருதியின்
தாற்பர்யத்தையுஞ் சிறிது ஆராய்வாம். ஸ்ரீராமர் ஆஞ்சநேய
ருக்கு உபதேசித்தருளிய முக்திகோபநிஷத்தில் நூற்றெட்டு உப
நிஷத்துக்களின் நாமங்கள் கேட்கப்படுகின்றன. அவற்றுள்
ஜாபாலோபநிஷத்துக்கள் ஐந்து. அவற்றின் வேற்றுமை தெரி
வதற்காகவே ஜாபாலம், ப்ருஹஜ்ஜாபாலம், பஸ்மஜாபாலம், ருத்
திராக்ஷஜாபாலம், ஜாபால்யு எனத் தனித்தனி பெயர்கள் வழங்
கப்பட்டுவருகின்றன. முதலிற்கூறிய ஜாபாலத்துக்கு அவிமுக்த
ஜாபாலம் என்னும் பெயருமுண்டு. அது சுக்ல யஜுர்வேதத்தி

Noolaham Digitization Muthulakshmi Research Academy

லும்; ருத்ராக்ஷஜாபாலம், ஜாபால்யு சாமவேதத்திலும்; பிருஹஜ்ஜாபாலம், பஸ்மஜாபாலம் அதர்வணவேதத்திலும் உள. இவ்வைந்தும் பஸ்மம், ருத்ராக்ஷம், பஞ்சாக்ஷரம், சிவார்ச்சனம், வில்வபத்திரம் ஆகிய பஞ்ச வைதிக பாசுபத முத்திரைகளைச் சிறப்பித்து நிரூபித்தனவாயினும், அவிமுக்தஜாபாலம் மோக்ஷசாதனமான வைதிக மந்திரங்களுள் தனிப் பிரணவத்தையும் பஞ்சாக்ஷரத்தையுமே தாரகவித்தை எனவும், அந்தத் தாரக மந்திரோபதேசத்தினாற்றான் ஸ்ரீகாசிப்பதியில் மரிக்கின்றவர்களுக்குச் சிவபிரான் தனது இணையற்ற சாயுஜ்ஜியத்தைத் தருகின்றார் எனவும் அத்தகைய முத்திக்குரியவர் அண்டத்திலே ஸ்ரீகாசிப்பதியிலுள்ள சர்வ ஜந்துக்களும், பிண்டத்திலே அவிமுக்தோபாசகர்களான எல்லாரும் எனவும் ஸ்பஷ்டமாய் விளக்கியிருக்கின்றது.

அல்லாமலும், பஸ்மஜாபாலோபநிஷத்தில் ஸ்ரீகாசியில் விஷ்ணுமுதலிய சகல தேவர்களும் பஸ்மருத்ராக்ஷதாரிகளாய் மூர்த்தித்திரயாதீத மோக்ஷ சொருபனான விசுவநாதனை உபாசித்துக் கொண்டிருக்கிறார்களெனக் கூறியிருத்தலானும், அதற்கு மாறாக விசுவேசுவரர் திரிமூர்த்திகளிலொருவராகிய நாராயணரைத் தியானஞ்செய்துகொண்டிருக்கின்றதாகக் குறிக்கும் ராமதாபநீயோபநிஷத் வசனம் சாமான்யமும் துதிபரமுமாகக்கொள்ளக் கிடத்தலானும், வேறு தேவதைகளின் மந்திரங்களைத் தாரகமெனச் சித்தாந்தப்படுத்தாத வேதங்களுக்குப் பேரணியாயுள்ள ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தையே தாரகமென்று தாரகமந்திரோபதேசியாகிய விசுவநாதரே உறுதிபயன்றமையானும், காசிப்பதியில் உபதேசிக்கப்படும் மோக்ஷமந்திரம் பிரணவத்தைவிட்டு நீங்காது அதற்கு உள்ளொளியாய் விளங்கும் பிரணவாபின்ன ஸ்ரீ பஞ்சாக்ஷரமேயென்று கூறினுங் குற்றமேதுமில்லை. அதர்வசிரோபநிஷத்திலும் ஏகன், ஏகருத்திரன், ஈசானன், பகவான், மகேசுவரன், மகாதேவன் என்னுஞ் சிவநாமங்களோடு ஒருபொருட்கிளவிகளாய் ஓங்காரம், பிரணவம், தாரகம், சுக்லம், பிரம்ம என்பனவாதி பெயர்கள் அபேதமாய்க் குறிக்சப்பட்டிருத்தலே போதுமான சான்றாம். தைத்திரீய முதலிய ஸம்ஹிதைகளிலும் சிவபெருமானே தாரனென்றோதி யிருத்தலால் சிவதாதாத்மியம் மிகுதிபற்றி தாரம் (தாரகம்) என்ற சொல் சிவாபின்ன பிரணவத்திற்கு இன்றியமையாது அமைக்கப்பட்டுள்ளது. மேலும், "ஓம்

தத்ப்ரஹ்ம-ஓம் தத் என்பது பிரமம்," "ஓமிதீதம் ஸர்வம்-ஓமென்பதே ஈதெல்லாம்," "ஸதாசிவோம்-சதாசிவனே பிரணவம்" என்பதாதி வேதவாக்கியங்கள் ஒருங்குசேர்ந்து பிரணவத்தைப் பிரமமென நிரூபித்த நியாயத்தானும், வாசக வாச்சிய சம்பந்தத்தானும், பிரணவ வொளியாயுள்ள ஸ்ரீபஞ்சாக்ஷரமும் அதன் பொருளாமென்பது வெள்ளிடை மலைபோல் விளங்குகின்றது. திராவிட சிசுவாகிய ஸ்ரீஜ்ஞானசம்பந்தப் பெருமானும் "வேதநான்கினு மெய்ப்பொருளாவது, நாதனாம நமச்சிவாயவே" என்றுநவின்றருளினர். இப்பஞ்சாட்சரம் ஓது முறையில் மூன்றுவகைப்படும். அவையாவன: (1) ஸ்தூலபஞ்சாக்ஷரம். (2) ஸூக்ஷ்மபஞ்சாக்ஷரம். (3) காரணபஞ்சாக்ஷரம். அவற்றுள் ஸ்தூலபஞ்சாக்ஷரம்-நமச்சிவாய. ஸூக்ஷ்மபஞ்சாக்ஷரம்-சிவாயநம:. அதிஸூக்ஷ்ம பஞ்சாக்ஷரம் அல்லது காரணபஞ்சாக்ஷரம்-சிவாயசிவ. ஸூக்ஷ்மபஞ்சாக்ஷரம் ஒருதலை மாணிக்கமெனவும், காரணபஞ்சாக்ஷரம் இருதலை மாணிக்கமெனவுங் கூறப்படும். இவை நிற்குமுறையும் ஓதுமுறையும் குருமுகத்தாலறிந்து தெளிக. இவற்றின் இரகசியப் பொருளை ஆளுடைய வடிகள் கோயில் மூத்த திருப்பதிகத்தில் "உடையாளுன்ற னடுவிருக்கு முடையாளுருவ னீயிருத்தி, யடியேனடுவுளிருவீருமிருப்பதானாலடியேனுன், னடியார் நடுவுளிருக்கு மருளைப்புரியாய்" என்னும் இருதயமந்திரத்திருச்செய்யுளினும், "முன்னின்றாண்டாயெனை முன்னமியானுமதுவே முயல்வுற்றுப், பின்னின்றேவல் செய்கின்றேன் பிற்பட்டொழிந்தேன் பெம்மானே" என்னுந் திருத்தாக்கினுங் குறிப்பாயுணர்த்தினமை காண்க. மெய்கண்ட சாஸ்திரங்களிலொன்றாகிய நெஞ்சுவிடுதூதும், "நாடரிய, அஞ்செழுத்தினுள்ளீடறிவித்தானஞ்செழுத்தை நெஞ்சழுத்திநேயமயலாக்கி யஞ்செழுத்தை, உச்சரிக்குங் கேண்மையுணர்த்தி யதிலுச்சரிப்பு, வைச்சிருக்கு மந்தவழி காட்டி" என்று சாற்றியது. இஃதிங்ஙனமிருக்க,

"ஓம் நமோ நாராயணாய" என்னும் அஷ்டாக்ஷரமந்திரத்துக்கும் அடியில்வருமாறு வேதோக்தமான வியாக்கியானமுமுண்டு. அதாவது, ஓம் என்பது ஓரெழுத்து, நம என்பது இரண்டெழுத்து. நாராயணாய என்பது ஐந்தெழுத்து. இம்மந்திரம் இயல்பில் ஏழெழுத்துடையதாயினும் பிரணவத்தைச் சிரமேற்கொண்டு விளங்குதலால் எட்டெழுத்தாயிற்று. இதில் நம என்ற

பதத்தின் பொருளாய ஜீவனை, நாராயணன் என்ற பதத்தின் பொருளாய ஈசுவரனிடத்து, ஆய-பிரணவ வாயிலாக ஒன்று சேர்த்தல் என்று தாற்பர்யம். பிரணவத்தை ஏகாக்ஷரமென்று தனிமந்திரமாக எடுத்துக்காட்டிய வேதத்தின் ஹிருதயம் மற்றைய பகுதிகளான ஏழெழுத்துக்களின் பொருள்களும் இவ்வோரெழுத்தின்கண்ணே அமைந்துள்ளனவென்பதே. ஆதலாற்றான் தாரசாரோபநிஷத்தில் பிரணவமே சூக்ஷ்மாஷ்டாட்சரம் என்று நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. அதன் விரிவை அங்கே காண்க.

மா-பிரணவத்தின் வாச்சிய நாமங்களிலொன்றாகிய "பகவான்" என்னுஞ் சொல்லின் பொருளையும் விளக்கியருள வேண்டும்.

ஆ-விளக்கியருளுவோம், கேட்பாயாக.

அதர்வணவேத அதர்வசிரோபநிஷத்.

𑌅𑌥 𑌕𑌸𑍍𑌮𑌾𑌦𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌯𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍𑌭𑌾𑌵𑌾 𑌨𑍀𑌕𑍍𑌷𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌨𑌿𑌰𑍀𑌕𑍍𑌷𑌯𑌤𑌿 𑌯𑍋𑌗𑌂𑌗𑌮𑌯𑌤𑌿 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍।

அதகஸ்மாதுச்யதே பகவாந் யஸ்ஸர்வாந்பாவா நீக்ஷத்யாத்மஜ்ஞானம் நிரீக்ஷயதி யோகம்கமயதி ஸவவதஸ் மாதுச்யதே பகவாந்।

(இ-ள்). "இனி எதுபற்றி பகவான் எனப்படுகின்றான். எவன் எல்லாப் பிரபஞ்சங்களையும் சாக்ஷியாய்க் காண்கின்றான். பரமாத்ம ஞானத்தை ஆத்மாக்களுக்கு அளிக்கின்றான். அதற்கு அந்தரங்க சாதனமாயுள்ள ராஜயோகத்தையுண்டாக்குகின்றான். அதனால் அவன் பகவான் எனப்படுகின்றான்" என்று இயம்பியது. பகவான் என்றதற்குப் பககுணமுடையோன் என்று பொருள். அதாவது ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் ஆகிய ஆறு குணங்களும் பகம் என்று சொல்லப்படும். அக்குணங்களையுடையவன் எவனோ அவனே பகவான் எனப்படுவான். இப்பெயர் சிவபெருமானொருவருக்கே ரூடியாகப்பொருந்தும். ஏனையோருக்கு எட்டுணையுஞ் சித்திக்காது. சிங்கத்தைச் சிங்கமெனல் முக்கியவிருத்தி. சிங்கத்தின் வீரம், பெருமை முதலிய குணங்களை ஒருவரிடத்தே காணப்பெறின் அவரைச் சிங்கமெனல் கௌணவிருத்தி. அதுபோல வேத ஸம்ஹிதாபாகங்க

டையாரெனச் சிறப்பிலக்கணங்கொண்டு சிறப்பித்துக் கூறவில்லை. மூர்த்தித்திரயாதீத சிவபெருமானுடைய மகிமைகளைக்குறிக்கும் திவ்விய நாமங்களாகிய ஈசுவரன், உக்கிரன், சிவன், ஸ்ரீமாந், சந்திரசேகரன்; அமிர்தன், ஸர்வஞ்ஞன்; காமரிபு, மஹரிஷி என்பதாதி பெயர்களை அவர் பககுணமுடையாரென ஸ்பஷ்டமாய் நிரூபிக்கின்றன. ஈசானன்; ஈசன், சம்பு, பசுபதி முதலிய நாமங்கள் எத்தேவருக்கும் எவ்விடத்தும் முக்கிய விருத்தியாய் உபயோகிக்கப்படாத பேராற்றல் பெற்றனவாம். சங்கரன், மயஸ்கரன், மயோபு, சதாசிவன் ஆதியாய பெயர்கள் மறைமுடிகளிற் சொல்லப்பட்ட அபஹதபாப்மா முதலிய திவ்விய குணங்களைக் குறிப்பிக்கின்றன. நீலகண்டன், விரூபாக்ஷன், கபாலி, வைரவன், கங்காளன் சரபன் என்பதாதி நாமதேயங்கள் அவருடைய அற்புத வீரச்செயல்களை விளக்குகின்றன.

உலகத்தில் கட்டியக்காரர் தங்கள் அரசனைப் பொருளை விரும்பிப் புகழ்கின்றார்கள். ஆனால் அநாதியாயுள்ள வேதங்களோ அப்படியன்று. தம்முடைய நாயகனைப் புகழவேண்டிப் பரமார்த்தத்தை விரும்பி ருத்ரஸம்ஹிதைகளைத் தம்முடைய சாகைகடோறும் அமைத்துக்கொண்டன. மேலும் வேதத்துரோகிகள் தம்மைக் கெடுக்காவண்ணம் சிவநாமதேய ரத்ந ரக்ஷா பந்தனத்தையுமிட்டு நிலவுகின்றன. ருத்ர ஸம்ஹிதை யஜுர் வேதத்தில் மாத்திரமல்ல, ருக்வேத ஸாமவேத அதர்வண வேதங்களிலுங்கூறப்படிக்கப்பட்டிருக்கின்றமை பிரத்தியட்சம். ருக்வேதத்தில் ஐந்து சூக்தங்கள் பஞ்ச ருத்ரங்களெனவும், ஸாமவேதத்தில் “ஆவொராஜா-ஆவோராஜா” முதலிய சில சாமங்களை ருத்ர ஸம்ஹிதையெனவும், அதர்வண வேதத்தின் ஓர் காண்டத்திலுள்ள ஓர் சூக்தம் மஹா ருத்ரமெனவும் வழங்கப்பட்டு வருகின்றன. இவைகளெல்லாவற்றிலும் பரமேசுவர நமஸ்காரங்களும், பரமேசுவர தோத்திரங்களும், பரமேசுவரரை நானாரூபமாக நிரூபித்தலுமே காணப்படுகின்றன. ஆதலால் வேதங்களின் பெருவழக்கு “யஸ்ய நாம மஹத்யஶ:-யஸ்யநாம மஹத்யச:” (74-ம் பக்கம் பார்க்க) என்றபடி பெரிய புகழையுடைய சிவபெருமானை ஷாட்குண்ணிய பரம புருஷரென்று பல்லோருமறியமுரசறைந்து

சிவபெருமான் பககுணத்துக்குடைய பகவானாகவே அவரது சக்தி பகவதீ என்று அழைக்கப்படுகின்றனர். "𑌹𑍍𑌰𑍀𑌂𑌕𑌾𑌰𑍇𑌣 𑌹𑍃𑌲𑍍𑌲𑍇𑌖𑌾𑌖𑍍𑌯𑌾 𑌭𑌗𑌵𑌤𑍀-ஹ்ரீங் காரேண ஹ்ருல்லேகாக்யா பகவதீ" என்று அதர்வணவேத திரிபுராதாபிந்யுபநிஷத்தும், '𑌭𑌗𑌵𑌤𑍍𑌯𑌨𑍍𑌨𑌪𑍂𑌰𑍍𑌣𑍇𑌤𑌿-பகவத் யந்நபூர்ணேதி" என்று அந்நபூர்ணோபநிஷத்தும் "𑌪𑍁𑌂𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌸𑌰𑍍𑌵𑌮𑍀𑌶𑌾𑌨𑌃 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌭𑌗𑌵𑌤𑍍𑌯𑍁𑌮𑌾-புல்லிங்கம் ஸர்வமீசாநஃ ஸ்திரீலிங்கம் பகவத்யுமா" என்று கிருஷ்ண யஜுர்வேதருத்ரஹ்ருதயோபநிஷத்தும் வற்புறுத்தின. வேறு தேவதைகளின் சக்திகளுக்கோ அத்தகைய நாமம் கிடையாது. ஆதலால் அத்தேவர்களைப் பகவான் என்றழைப்பது உபசாரமே. பகவான் என்றும் பெயர் சிவபெருமானுக்கே சிறப்புரிமையாயுள்ளதென்பது அடியில் காட்டும் பிரமாணங்களானுந் தெளிக.

அதர்வணவேத சரபோபநிஷத்.

𑌶𑌾𑌙𑍍𑌕𑌰𑍋 𑌭𑌗𑌵𑌾𑌨𑌾𑌦𑍍𑌯𑍋 𑌰𑌰𑌕𑍍𑌷 𑌸𑌕𑌲𑌾𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃।

சாங்கரோ பகவாநாத்யோ ரரக்ஷ ஸகலாஃ ப்ரஜாஃ।

(இ-ள்). "பகவானும், முதற்கடவுளு (ஆத்யன்) மான சங்கரர் எல்லாப் பிரஜைகளையும் ரக்ஷித்தருளினார்" எனவும்,

கிருஷ்ணயஜுர்வேதசுவேதாசுவதரோபநிஷத்.

𑌧𑌰𑍍𑌮𑌾𑌵𑌹𑌂 𑌪𑌾𑌪𑌨𑍁𑌦𑌂 𑌭𑌗𑍇𑌶𑌂 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌸𑍍𑌥𑌮𑌮𑍃𑌤𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌧𑌾𑌮।

தர்மாவஹம் பாபநுதம்பகேசம் ஜ்ஞாத்வாத்மஸ்த மம்ருதம் விச்வதாம।

(இ-ள்). "தவமுதலிய தர்மங்களை நிலைபெறச் செய்வித்து மேலான பலனாகிய மோக்ஷபரியந்தம் ஐச்வரியத்தைத் கொடுப்பவரும், பாவத்தை விளைவிக்கும் மும்மலங்களை யொழிப்பவரும், பகமெனப்படும் ஷாட்குண்ணியத்துக்கு ஈசரும், அமிர்தரும், எல்லாப் பிரபஞ்சத்துக்கும் அதிஷ்டானமானவருமான அவரை ஆத்மாவினிடத்துள்ளவராயறிந்து (அவரையடைவன்)" எனவும்,

ஸர்வாநநசிரோகிரீவஸ்-(49-ம் பக்கம் பார்க்க) எனவும்,

அதர்வணவேத அதர்வசிரோபநிஷத்.

𑍐 𑌯𑍋 𑌹 𑌵𑍈 𑌰𑍁𑌦𑍍𑌰𑌸𑍍𑌸 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌯𑌶𑍍𑌚 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾। 𑌯𑌶𑍍𑌚 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃। 𑌯𑌶𑍍𑌚 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌃।

ஓம் யோஹவைருத்ரஸ்ஸபகவாந் யச்சப்ரஹ்ம। யச்சவிஷ்ணுஃ। யச்சமஹேச்வரஃ।

(இ-ள்). "எந்தத் துரீயருத்திரராகிய அந்தப் பகவான் பிரமஸ்வரூபன், விஷ்ணுஸ்வரூபன், மகேசுவரஸ்வரூபன், (குணருத்திரன்). எனவும்,

ஸாமவேதமைத்ராயண்யுபநிஷத்.

𑌮𑍂𑌢𑌤𑍍𑌵𑌾𑌦𑌾𑌤𑍍𑌮𑌸𑍍𑌥𑌂 𑌪𑍍𑌰𑌭𑍁𑌂 𑌭𑌗𑌵𑌨𑍍𑌤𑌂 𑌕𑌾𑌰𑌯𑌿𑌤𑌾𑌰𑌂 𑌨𑌾𑌪𑌶𑍍𑌯𑌤𑍍।

மூடத்வாதாத்மஸ்தம் ப்ரபும் பகவந்தம் காரயிதாரம் நாபச்யத்।

(இ-ள்). "(பிரகிருதியின் குணங்களால் கட்டுண்டு) மூடனைப் போனபடியால் ஆத்மாவினிடத்துள்ளவனும், பிரபுவும், பகவானுமாகிய பிரேரகனைக் காணவில்லை" எனவும்,

அதர்வணவேதபஸ்மஜாபாலோபநிஷத்.

அத்வைதம் சதுர்த்தம்............பகவந்தம் சிவம். (70-ம் பக்கம் பார்க்க). எனவும்,

கூர்மபுராணம்.

பகவான் ஸர்வ விஜ்ஞானத் (18-ம் பக்கம் பார்க்க) எனவும் வருவனவாற்றறிக. அன்றியும் சுருதிகற்பசூத்திரங்களிலும்,

𑌨𑌮𑌸𑍍𑌤𑍇𑌽𑌸𑍍𑌤𑍁 𑌭𑌗𑌵𑌃। 𑌭𑌗𑌵𑌃 𑌪𑌰𑌾𑌙𑍍𑌮𑍁𑌖𑌾𑌕𑍃𑌤𑌿। 𑌅𑌯𑌂𑌮𑍇 𑌅𑌸𑍍𑌤𑍁 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍। 𑌨𑌮𑌸𑍍𑌤𑍇𑌽𑌸𑍍𑌤𑍁 𑌭𑌗𑌵𑌨𑍍𑌵𑌿𑌶𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑌾𑌯। 𑌓𑌂 𑌭𑌗𑌵𑌤𑍇 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌯।

நமஸ்தே அஸ்து பகவ:। பகவ: பராங்முகாக்ருதி। அயம்மே அஸ்து பகவாந்। நமஸ்தே அஸ்து பகவந் விச்வேச்வராய। ஓம் பகவதே ருத்ராய।

(இ-ள்). "ஓபகவ! உன்னை வணங்குவாம். ஓபகவ! அப்புறம் நோக்கிய திருமுகமண்டலத்தை எமது பக்கம் திருப்பியருளுக. இந்தப் பகவான் எமக்காகுக. ஓபகவ! விசுவேசுவரா!! உன்னை வணங்குவாம். ஓபகவ! உருத்திர!! உன்னை வணங்குவாம்" எனவும்,

ஜாபாலசாகை.

𑌤𑍍𑌵𑌂𑌵𑌾 𑌅𑌹𑌮𑌸𑍍𑌮𑌿 𑌭𑌗𑌵𑍋 𑌦𑍇𑌵𑌤𑍇 𑌅𑌹𑌂 𑌵𑍈 𑌤𑍍𑌵𑌮𑌸𑌿 𑌭𑌗𑌵𑍋𑌦𑍇𑌵𑌤𑍇।

த்வம்வா அஹமஸ்மி பகவோ தேவதே அஹம்வைத்வமஸி பகவோ தேவதே।

(இ-ள்). "நீயே நானன்றோ பகவ! ஓதேவ! நானே நீயன்றோ பகவ! ஓதேவ!" எனவும்.

ஸ்ரீருத்ரநமகத்திலும்.

𑌨𑌮𑌸𑍍𑌤𑍇 𑌅𑌸𑍍𑌤𑍁 𑌭𑌗𑌵𑌨𑍍 𑌵𑌿𑌶𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑌾𑌯 𑌮𑌹𑌾𑌦𑍇𑌵𑌾𑌯।
நமஸ்தே அஸ்துபகவந் விச்வேச்வராய மாஹாதேவாய।

(இ-ள்). "பகவனாகிய விசுவேசுரர் பொருட்டும் மஹாதேவர்பொருட்டும் நமஸ்காரம் ஆகுக" எனவும் சிவபெருமானைப் பகவான் என்னும் சிறப்புப்பெயரால் புகழ்ந்துள்ளன. திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளும் "பாகந்தோய் பகவா பலியேற்றுழல் பண்டரங்கா" எனவுந் திருவாய்மலர்ந்தருளினர். சதுர்த்த சப்த வாச்சியப்பொருளாயுள்ள பிரமத்தின் சகளவடிவம் ஆதிபராசத்தியோடியைந்த அருண்மூர்த்தமாகும். அதுவே அப்பரம்பொருளின் பழையகோலம். ஆதிபகவன் என்றதும் அக்கருத்து நோக்கியே. ஸ்ரீமத் தாயுமானசுவாமிகளும் "ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்ததெது." என்றனர். இவ்வருட்கோலத்தையே,

அதர்வணவேதந்ருசிம்ஹதாபநீயோபநிஷத்:

𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌰𑍇𑌤𑌂 𑌵𑌿𑌰𑍂𑌪𑌾𑌕𑍍𑌷𑌂 𑌶𑌙𑍍𑌕𑌰𑌂 𑌨𑍀𑌲𑌲𑍋𑌹𑌿𑌤𑌂।
𑌉𑌮𑌾𑌪𑌤𑌿𑌃 𑌪𑌶𑍁𑌪𑌤𑌿𑌃 𑌪𑌿𑌨𑌾𑌕𑍀𑌹𑍍𑌯𑌮𑌿𑌤𑌦𑍍𑌯𑍁𑌤𑌿𑌃॥
ஊர்த்வரேதம் விரூபாக்ஷம் சங்கரம் நீலலோஹிதம்।
உமாபதி: பசுபதி: பிநாகிஹ்ய மிதத்யுதி:॥

(இ-ள்.) "ஊர்த்துவவீரியரும், மேனோக்கிய நேத்திரமுடையவரும், சங்கரரும், நீலலோஹிதரும், உமாபதியும், பசுபதியும், பிநாகியும், அளவில் பிரகாசமுள்ளவரும்" என்றும்,

கிருஷ்ணயஜுர்வேதயோகதத்வோபநிஷத்.

𑌤𑍍𑌰𑌿𑌲𑍋𑌚𑌨𑌂 𑌉𑌮𑌾𑌰𑍍𑌧𑌦𑍇𑌹𑌂 𑌵𑌰𑌦𑌂।
த்ரிலோசனம் உமார்த்ததேஹம் வரதம்।

(இ-ள்.) "முக்கண்ணன், உமைபாகன், வரதன்" என்றும்,

சுக்லயஜுர்வேத மண்டல ப்ராஹ்மணோபநிஷத்.

𑌉𑌮𑌾𑌸𑌹𑌾𑌯𑌂 𑌨𑍀𑌲𑌕𑌣𑍍𑌠𑌂 𑌪𑍍𑌰𑌶𑌾𑌨𑍍𑌤𑌂।
உமாசஹாயம் நீலகண்டம்ப்ரசாந்தம்।

(இ-ள்.) "உமாசகாயனே, நீலகண்டனே, பிரசாந்தனே" என்றும்,

தைத்திரியாருணசாகை நாராயணம்.

𑌕𑍃𑌷𑍍𑌣𑌪𑌿𑌙𑍍𑌗𑌲𑌂। 𑌉𑌮𑌾𑌪𑌤𑌯𑍇 𑌪𑌶𑍁𑌪𑌤𑌯𑍇 𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃॥
க்ருஷ்ணபிங்களம்। உமாபதயே பசுபதயே நமோநம:॥

(இ-ள்.) "கருமையுஞ்செம்மையுங் கலந்த திருமேனியுடையவருக்கு, உமையம்மையின்பதிக்கு, பசுபதிக்கு நமஸ்காரம், நமஸ்காரம்" என்றும்,

கிருஷ்ணயஜுர்வேத கைவல்யோபநிஷத்.

𑌉𑌮𑌾𑌸𑌹𑌾𑌯𑌂 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌂 𑌪𑍍𑌰𑌭𑍁𑌂 𑌤𑍍𑌰𑌿𑌲𑍋𑌚𑌨𑌂 𑌨𑍀𑌲𑌕𑌣𑍍𑌠𑌂।

உமாசகாயம் பரமேச்வரம் ப்ரபும் த்ரிலோசனம் நீலகண்டம்।

(இ-ள்.) "உமாசகாயராய், பரமேசுவரராய், பிரபுவாய், மூக்கண்ணராய், நீலகண்டராய்" என்றும்,

புருஷ ஸூக்தம்.

𑌅𑌹𑍋𑌰𑌾𑌤𑍍𑌰𑍇 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇।-அஹோராத்ரேபார்ச்வே।

(இ-ள்.) "பகலும் இரவும், அதாவது செம்மையுங் கருமையும் இருபக்கங்களாகும்" என்றுங் கூறி மகிழ்ந்தன. இன்னும் அநேக உபநிஷத் பிரமாணங்களும் போதுமான எதுக்களாய் நிலவுறுகின்றன. இந்தக்கோலமே தகரவித்தையின்கண் உபாசிக்கப்படும் திவ்விய சொரூபமாகும். பரம கருணையத் திருமேனி தாங்கியுள்ள இப்பொன்வண்ணரே பற்பல வேதவாக்கியங்கள் ஓயாது துதிக்கவும், அந்தணர் உயர்காயத்திரி மந்திரத்தால் உபாசிக்கவும், சூரியமண்டல மத்தியில் எழுந்தருளியிருக்கின்றனர். பிரம விஷ்ணு ருத்திரர்களுக்குமேலாய், துரீயதத்துவமாய் நித்திய விபூதிமய ஸ்ரீ சோம லோகமென்னும் மஹா சிவபுரத்தில் எழுந்தருளியிருக்கும் உயர்வொப்பற்ற சகள வடிவமும் இதுவே. இத்தகைய அநாதியாயுள்ள பழைய திருக்கோலத்தையே ஆளுடையவடிகள் "தோலுந் துகிலுங் குழையுஞ் சுருடோடும், பால் வெள்ளை நீறும் பசுஞ் சாந்தும் பைங்கிளியும், சூலமுந்தொக்க வளையுமுடைத் தோன்மைக், கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய்க் கோத்தும்பீ" என்று வாழ்த்தி உள்ளங் குளிர்ந்தனர். வேதமும்,

𑌯𑌤𑍍𑌤𑍇 𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌂 𑌰𑍂𑌪𑌂 𑌤𑌤𑍍𑌤𑍇 𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌿।

யத்தேகல்யாணம் ரூபம் தத்தேபச்யாமி।

(இ-ள்.) "எது உனது திவ்விய மங்கள விக்கிரஹம் அதைக் காண்கின்றேன்," என்று சாற்றியது. இவ்வாறு சுருதிகளெல்லாம் துரீயமூர்த்திக்கு மாதாளும் பாகமுதலியவற்றை ஒப்பியிருக்க நான்காவது தெய்வத்திற்கு உமாசகாயத்வாதி லிங்கங்கள்

டையாவென்று போலி அத்வைதிகளாகிய ஏகாத்மவாதிகள் சாதிப்பது சிவாபராதத்தை விலைகொடுத்து வாங்கிய பாவத்தின் பயனேயாம். ஐயகோ! இவர்கள் ஏனோ வேதோக்தமான விபூதி, உருத்திராட்ச ஸ்ரீபஞ்சாட்சர முதலிய சைவ மங்கலங்களைத் தாங்கி அம்மையப்பரை வழிபடுஞ் சைவர்கள்போல் திரிய வேண்டும். வினை கொடிது! கொடிது!! என்னை! தத்துவாதீதராகிய கடவுள் அங்கிங்கெனாதபடி எங்கும் பரிபூரணமாய் நீக்கமற நிறைந்துநிற்கும் இயல்புடையவராயிற்றே அவருக்குச் சரீரமுண்டென்று ஒப்புக்கொள்வது எங்ஙனமெனிற் கூறுதும்:—

ஆத்மாக்களுக்குப் பெத்தநிலை யெனவும் முத்திநிலை யெனவும் இருவித நிலைகளுண்டு. அதனால் முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளாயுள்ள பிரமத்தினது நிலையும் இருவகைப்படுவதாயிற்று. அவற்றுள் பஞ்சகிருத்தியஞ்செய்து நிற்குநிலை தடஸ்தநிலை யெனப்படும். அவ்வாறு கிருத்தியஞ் செய்யாது ஒழிந்து தான் மாத்திரமாய் ஞானானந்தமயமாய் நிற்குநிலை சொரூபநிலை யெனப்படும். அந்த ஞான சொரூபமே கடவுளுக்கு உண்மை நிலையாகும். அதைத்தான் உண்மை ஞானிகள் தம் மெய்யறிவால் வழிபடுவர். அது கண் முதலிய ஞானேந்திரியங்களாலும் மனமுதலிய அந்தக்கரணங்களாலும் எட்டப்படுவதன்று. ஞானிகள் இந்திரியங்களும் அந்தக்கரணங்களும் ஏகதேச அறிவை உண்டாக்குவனவென்று நன்குணர்ந்தவர்களாதலின் அவற்றைவிட்டகன்று திருவருளையே துணையாகக்கொண்டு அவ்வருளின் வசப்பட்டு நின்று வழிபடுகின்றவர்கள். அதனால் அவர்களுடைய வழிபாடு ஞானவழிபாடாகின்றது. அதற்கே அதீத வழிபாடென்றும் அறிவுத்தொழில் வழிபாடென்றும் பெயர். சிவபரம்பொருள் அறிவுருவாதலின் அப்பரம்பொருளுக்கு அவ்வழிபாடொன்றே முக்கியமாகும். அதில் பரிபாகம் ஏற்படவேண்டுமானால் மனத்தூய்மையே அத்தியாவசியகம். அவ்வழிபாடியற்றும் மாசற்ற அறிவாளர் மனத்தை ஒடுக்குவதில் முயற்சி செய்யாமல் எப்பொழுதும் அறிவை வெளிமுகப்படுத்தாது உள்ளொடுக்கி அருளில் நிறுத்தி, ஆனந்தத்தில் அமிழ்ந்தி யாதொரு சேபனுமற்ற, அசைவின்றி அறிவாய் இருந்துவிடுவார்கள். அதைத்தான் "ஓங்குணர்வினுள்ளொடுங்கி யுள்ளத்துளின்பொடுங்கத், தூங்குவர் மற்றேதுண்டு சொல்'' என்று திரு

வருட்பயன் கூறியது. "தொட்டுக்காட்டாதவித்தை சுட்டுப்போட்டாலும் வாராது" என்னும் பழமொழிக்கிணங்கக் குருபக்தியுள்ளவர்களுக்கே இவ்வுண்மை விளங்கும். சாதாரண ஆத்மாக்களோ இந்திரிய அந்தக்கரணங்களின் துணையில்லாமல் ஜீவிப்பதில்லை. ஆகையினாலே அவர்கள் கேவலம் ஓர் சாராரியற்றியபசு நூல்களை வாசித்துவிட்டுத் தாங்கள் ஞானவழிபாடு செய்வதாக நடிப்பதும் பிதற்றித்திரிவதும் பெரும் பேதமையேயாம்.

கிருஷ்ணயஜுர்வேத தைத்திரீயோபநிஷத்.

𑌯𑌤𑍋𑌵𑌾𑌚𑍋 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 𑌅𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌮𑌨𑌸𑌾𑌸𑌹|
𑌆𑌨𑌨𑍍𑌦𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍 𑌨𑌬𑌿𑌭𑍇𑌤𑌿𑌕𑌦𑌾𑌚𑌨||
யதோவாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸாஸஹ|
ஆநந்தம் ப்ரஹ்மணோவித்வாந் நபிபேதிகதாசந||

(இ-ள்.) "எதினின்றும் வாக்குகள் மனதுடன்கூட அதன் முடிவைச் சொல்ல இயலாமலும் அடையமுடியாமலும் திரும்பிவிடுகின்றனவோ அந்தப் பிரமத்தின் சொரூபமான ஆநந்தத்தை அறிகிறவன் எக்காலத்திலும் பயப்படுகிறானில்லை" எனவும்,

ஸாமவேதகேனோபநிஷத்.

𑌯𑌸𑍍𑌯𑌾𑌮𑌤𑌂 𑌤𑌸𑍍𑌯𑌮𑌤𑌂 𑌮𑌤𑌂𑌯𑌸𑍍𑌯 𑌨𑌵𑍇𑌦𑌸𑌃|
𑌅𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌂 𑌵𑌿𑌜𑌾𑌨𑌤𑌾𑌂 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤 𑌮𑌵𑌿𑌜𑌾𑌨𑌤𑌾𑌂||
யஸ்யாமதம் தஸ்யமதம் மதம்யஸ்ய நவேதஸ:|
அவிஜ்ஞாதம் விஜாநதாம் விஜ்ஞாத மவிஜாநதாம்||

(இ-ள்.) "எவனுக்குப் பிரம்மசொரூபம் தெரியவில்லை என்னும் அபிப்பிராயமோ அவனுக்குத் தெரிந்தது. எவனுக்குப் பிரம்மசொரூபம் தெரிந்தது என்னும் அபிப்பிராயமோ அவன் தெரிந்தானில்லை. தெரிந்தவர்களுக்கு அறியப்படாதது. தெரியாதவர்களுக்கு அறியப்பட்டது" எனவும் கூறிப்போந்தன. திருவாசகமும், "சொற்பதங்கடந்த தொல்லோன் காண்க." "சித்தமுஞ் செல்லாச் சேட்சியன் காண்க." "நூலுணர் வுணரா நுண்ணியோன் காண்க" எனவும் வற்புறுத்தியது. இன்னோரன்ன பிரமாணங்களால் இந்திரியங்களையும் அந்தக்கரணங்களையும்வென்று அருள்வழி நின்றவர்களுக்கே அந்த ஞான வழிபாடு கைகூடுவதாகும். ஏனையோருக்கு அது எட்டுணையுஞ் சாத்தியமான காரியமன்று. ஜகஜ்ஜீவபரங்கள் மூன்றும் மித்தையெனவும், அகமே

பிரமமெனவும், தானே சிவமன்றித் தனிச்சிவம் வேறில்லையெனவும் கூறித்திரியும் அபேதவாதிகளுக்கு இந்த ஞானவழிபாடு கைகூடுவதரிது. அகண்டாகார நித்திய வியாபக சச்சிதாநந்த பிரமமும் அவர்களால் அறியப்படமாட்டாது. ஏனெனில் அவர்கள் கற்பித்த பொய் நெறியை ஸ்ரீ தாயுமானசுவாமிகள் முதலிய மூதறிஞர் அடியில் வருமாறு கண்டித்துள்ளார்கள்.

1. சொல்லுக் கடங்காச் சுகப்பொருளை நாமெனவே
அல்லும் பகலு மரற்றுவதென்—நல்லசிவ
ஞானமயம் பெற்றோர்கள் நாமில்லை யென்பரந்தோ
மோனமய மான வுரை.

2 நான்றா னெனுமயக்கம் நண்ணுங்கா லென்றனை
வான்றா னெனநிறைய மாட்டாய்நீ—மூன்றுமல
வைத்த மவுனத்தாலே மாயை மனமிறந்து
துய்த்துவிடு ஞான சுகம்.

3. பன்முகச் சமயநெறி படைத்தவரு மியாங்களே கடவுளென்றி
டும் பாதகத் தவரும்; வாதத்தர்க்கமிடு படிறரும் தலைவணங்கிட.

4. நானென நிற்குஞானம் ஞானமன் றந்தஞானம்
மோனமா யிருக்க வொட்டா.

5. நாம்பிரமமென்றால் நடுவேயொன் றுண்டாமால்
தேம்பியெல்லா மொன்றாய்த நிகழுநா ளெந்நாளோ.

6. நானான தன்மை நழுவியே யெவ்வுயிர்க்கும்
தானான வுண்மைதனைச் சாருநா ளெந்நாளோ.

7. ஊனென்றி நாத னுணர்த்துமதை விட்டறிவேன்
நானென்ற பாவி தலைநாணுநா ளெந்நாளோ.

8. தாம்பிரமங் கண்டவர்போல் தம்மைக்கண் டாங்கதுவே
நாம்பிரம மென்பவர்பால் நண்ணாதே. (நெஞ்சுவிடுதூது)

9. பரமதனோ டுலகுயிர்கள் கற்பனையே யெல்லாம்
பகர்சிவமே யெனவுணர்ந்தோ மாதலினால் நாமே
பிரமமெனப் பிறர்க்குரைத்துப் பொங்கிவழிந் தாங்கே
பேசகின்ற பெரியவர்தம் பெரியமதம் பிடியேல். (திருவருட்பா)

அல்லாமலும், பிருதிவியாதி அஷ்டமூர்த்தங்களும் பரப்பிரம சிவனாரது திருமேனியாதலின் ஆத்மாவையும் பிரமமெனக் கூறிய வேதத்தின் கருத்தை அம்மகான்களே கீழ்வருமாறுங் கூறியிருக்கின்றார்கள். (அதர்வசிரசிலும் சிவபெருமான் சேதனாசேதனப் பிரபஞ்சமனைத்தையும் அந்தர்யாமியாய்ப் பிரவேசித்து நின்

றமைபற்றி எல்லாப் பெயர்களினாலும் அழைக்கப்பட்டனர் என்று மொழிந்திருக்கின்றது.)

1. விளக்குந் தகளியையும் வேறென்னார் நின்னைத்
துளக்கமறச் சிவனென்று சொல்வார் பராபரமே.

2. பாராதி யாயப் பகர்ந்தா லகமெனவும்
ஆராயுஞ் சீவனுநீ யாங்காண் பராபரமே.

3. வானாதி நீயெனவே வைத்தமறை யென்னையுநீ
தானாகச்சொல்லாதோ சாற்றாய் பராபரமே.

இந்தப்பிரமாணங்களால் சீவனைக்காட்டிலும் சிவன் வேறாக விருந்தும் சீவனைச் சிவனென்றது உபசாரம். வாய்மை இவ்வாறிருக்கவும் அபேதவாதிகளாகிய ஏகாத்மவாதிகள், ஆத்மா சிவம் என இரண்டு பொருள்களில்லையெனவும், ஆத்மாவே சிவமெனவும் அக்கருத்தையே வேதாந்தங்களாகிய உபநிஷத்துக்கள் கூறிப் போந்தனவெனவும், ஆத்மா சிவம் என இருபொருள்கள் உண்டென்று சைவர்கள் கூறுவது சுருதிக்கு முற்றும் விரோதமெனவும், அவ்விஷயத்தில் யாதொரு சுருதிப்பிரமாணமுங் கிடையாதெனவும் வாய் கூசாது பேசி மகிழ்வர். அன்றியும் நாமே சிவம், நாமே பிரமம், நம்மின்மேல் ஒரு பிரமும் இல்லையென்றும் போதிப்பார்கள். இவர்களது சழக்குரையைச் சுருதிகொண்டோட்டி எமது வைதிக சைவவுண்மையை விளக்குவாம்.

பஞ்சருத்ரங்களிலொன்றாகிய சுவேதாசுவதரோபநிஷத்

𑌕𑌿𑌂𑌕𑌾𑌰𑌣𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌕𑍁𑌤𑌸𑍍𑌮𑌜𑌾𑌤𑌾𑌃।
𑌜𑍀𑌵𑌾𑌮𑌕𑍇𑌨𑌕𑍍𑌵 𑌚𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌃।
𑌅𑌧𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌾𑌃 𑌕𑍇𑌨𑌸𑍁𑌖𑍇𑌤𑌰𑍇𑌷𑍁
𑌵𑌰𑍍𑌤𑌾𑌮𑌹𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍋 𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌾𑌮𑍍॥

கிம்காரணம் ப்ரஹ்ம குதஸ்மஜாதா: ஜீவாமகேநக்வசஸம்ப்ரதிஷ்டா:।
அதிஷ்டிதா: கேநஸுகேதரேஷுவர்தாமஹேப்ரஹ்மவிதோவ்யவஸ்தாம்।

(இ-ள்.) "எது காரணமாகிய பிரமம், யாம் எதனிடம் பிறந்தோம், எதனால் ஜீவித்திருக்கின்றோம், எதனிடத்து எமக்கு ஒடுக்கம், சொற்பனந்தவிர மற்றைய ஜாக்கிராவஸ்தையில் எவனால் அதிஷ்டிக்கப்பட்டிருக்கின்றோம். பிரமவித்துக்காள்! இதன் விவஸ்தையைச் சொல்லுங்களென்று வினவி,

𑌕𑌾𑌲𑌸𑍍𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑍋 𑌨𑌿𑌯𑌤𑌿𑌰𑍍𑌯𑌦𑍃𑌚𑍍𑌛𑌾
𑌭𑍂𑌤𑌾𑌨𑌿𑌯𑍋𑌨𑌿𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌇𑌤𑌿𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌾।
𑌸𑌂𑌯𑍋𑌗 𑌏𑌷𑌾𑌂 𑌨𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮 𑌭𑌾𑌵𑌾𑌤𑍍
𑌆𑌤𑍍𑌮𑌾𑌪𑍍𑌯𑌨𑍀𑌶𑌸𑍍𑌸𑍁𑌖𑌦𑍁𑌃𑌖𑌹𑍇𑌤𑍋𑌃।

காலஸ்வபாவோ நியதிர்யத்ருச்சா பூதாநியோநி: புருஷ இதிசிந்த்யம் ஸம்யோக ஏஷாம் நத்வாத்ம பாவாத் ஆத்மாப்யநீசஸ்ஸுகதுக்கஹேது:।

(இ-ள்.) "காலம், சுபாவம், கர்மம் அல்லது தலைவிதி, தற்செயலென்ற சூனியம், பூதம், பிரகிருதி, புருஷன் என்ற சரீரம், இவற்றின் கூட்டுறவு ஆகியவிவைகள் அசேதனங்களாதலால் விசாரிக்கப்படவேண்டுவன. ஆத்மா (சுதந்தரமின்றிப் பரதந்திரப்பட்டுச்) சுகதுக்கங்களை நுகர்தலால் அநீசனுவன்" என்று ஆதர்ந்து விடையிறுத்தி,

𑌯𑌃𑌕𑌾𑌰𑌣𑌾𑌨𑌿 𑌨𑌿𑌖𑌿𑌲𑌾𑌨𑌿𑌤𑌾𑌨𑌿 𑌕𑌾𑌲𑌾𑌤𑍍𑌮𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑍍𑌯𑌧𑌿𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍍𑌯𑍇𑌕𑌃

ய:காரணாநி நிகிலாநிதாநி காலாத்ம யுக்தாந்யதிதிஷ்டத்யேக:॥

(இ-ள்.) "காலம். ஆத்மா முதலியவற்றுடன்கூடிய பற்றெல்லாக் காரணங்களையும் எவனொருவன் அதிஷ்டித்திருக்கிறான்" என்று முடிவுசெய்து அதிஷ்டிப்பவன் ஈசனெனவும், அதிஷ்டிக்கப்படுபவன் ஆத்மாவெனவும் வேறுபடுத்தி பிரமம் ஆத்மா என்னும் இருபொருளையும் நாட்டி ஸ்திரப்படுத்தியது. இத்தகையப் பிரமாணங்களால் ஆத்மா பிரமமாகாதொழிந்தமை பிரத்தியட்சமன்றோ. இன்னும் ஆத்மா பரமாத்மா பேதங்களைப்பற்றி பிரபல சுருதிப்பிரமாணங்களிற் சிலவற்றை ஈண்டு எடுத்துக் காட்டுவாம்.

கிருஷ்ணயஜுர்வேதகடவல்லியுபநிஷத்.

𑌤𑌮𑌾𑌤𑍍𑌮𑌸𑍍𑌥𑌂𑌯𑍇𑌽𑌨𑍁 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿𑌧𑍀𑌰𑌾𑌃
𑌤𑍇𑌷𑌾𑌂𑌸𑍁𑌖𑌂 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌂 𑌨𑍇𑌤𑌰𑍇𑌷𑌾𑌂॥

தமாத்மஸ்தம்யேநு பச்யந்திதீரா: தேஷாம்ஸுகம் சாச்வதம் நேதரேஷாம்॥

(இ-ள்.) "ஆத்மாவிடத்துள்ள அவனை எந்தத் தீரர்கள் காண்பார்களோ அவர்களுக்கே சாசுவத ஆனந்தம். பிறர்க்கில்லை" இம்மந்திரம் சுவேதாசுவதரோபநிஷத்திலும், பிரம்மோபநிஷத்திலுமுள்ளது.

அதர்வணவேதமுண்டகோபநிஷத்.

𑌦𑍍𑌵𑌾 𑌸𑍁𑌪𑌰𑍍𑌣𑌾 𑌸𑌯𑌜𑌾 𑌸𑌖𑌾𑌯𑌾
𑌸𑌮𑌾𑌨𑌂 𑌵𑍃𑌕𑍍𑌷𑌂 𑌪𑌰𑌿𑌷𑌸𑍍𑌵𑌜𑌾𑌤𑍇।
𑌤𑌯𑍋𑌰𑌨𑍍𑌯𑌃 𑌪𑌿𑌪𑍍𑌪𑌲𑌂 𑌸𑍍𑌵𑌾𑌦𑍍𑌵𑌤𑍍𑌤𑍍𑌯
𑌅𑌨𑌶𑍍𑌨𑌨𑍍𑌨𑌨𑍍𑌯𑍋 𑌅𑌭𑌿𑌚𑌾𑌕𑌶𑍀𑌤𑌿॥

த்வாசுபர்ணாஸயுஜாஸகாயா ஸமாநம்வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே।
தயோரேக: பிப்பலம ஸ்வாத்வத்தி அநச்நந்ந்யோ அபிசாகசீதி॥

(இ-ள்.) "இரண்டு அழகிய பட்சிகள் ஒருங்குகூடி சிநேகப்பட்டுற்றன. ஒரு விருட்சத்திலேயே சேர்ந்துகொண்டிருக்கின்றன. அவைகளுள் ஒன்று கைப்பை நன்றாகப்புசிக்கின்றது; மற்றொன்று ஒன்றையும் புசிக்காமலே பிரகாசித்துக்கொண்டிருக்கின்றது." (விருட்சம்-சரீரம்) எனவும்,

𑌸𑌮𑌾𑌨𑍇 𑌵𑍃𑌕𑍍𑌷𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌨𑌿𑌮𑌗𑍍𑌨𑍋
𑌽𑌨𑍀𑌶𑌯𑌾 𑌶𑍋𑌚𑌤𑌿 𑌮𑍁𑌹𑍍𑌯𑌮𑌾𑌨𑌃।
𑌜𑍁𑌷𑍍𑌟𑌂 𑌯𑌦𑌾 𑌪𑌶𑍍𑌯𑌤𑍍𑌯𑌨𑍍𑌯𑌮𑍀𑌶𑌂
𑌤𑌸𑍍𑌯 𑌮𑌹𑌿𑌮𑌾𑌨𑌮𑌿𑌤𑌿 𑌵𑍀𑌤𑌶𑍋𑌕𑌃॥

ஸமாநே வ்ருக்ஷே புருஷோநி மக்நோ நீசயாசோசதி முஹ்யமாந:।
ஜுஷ்டம்யதா பச்யத்யந்யமீசம் தஸ்யமஹிமாந மிதிவீதசோக:॥

(இ-ள்.) "ஒரே விருட்சத்திலிருந்தும் புருஷன் சுதந்தரமற்றவனாய் மோஹித்துத் துக்கிக்கின்றான். எப்பொழுது நித்ய திருப்தனையும் வேறானவனையுமுள்ள ஈசனைக் காண்பானோ அப்பொழுதே சோகங்களையெல்லா மொழித்து அவன் மஹிமையைப் பெறுவான்." (இம்மந்திரங்கள் சுவேதாசுவதரத்திலும் ருக்வேதத்திலுமுள்ளன) எனவும்,

கிருஷ்ணயஜுர்வேத சுவேதா சுவதரோபநிஷத்.

𑌅𑌨𑍀𑌶𑌶𑍍𑌚𑌾𑌤𑍍𑌮𑌾 𑌬𑌧𑍍𑌯𑌤𑍇 𑌭𑍋𑌕𑍍𑌤𑍃𑌭𑌾𑌵𑌾𑌤𑍍
𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌦𑍇𑌵𑌂 𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌶𑍈𑌃॥

அநீசச்சாத்மாபத்யதே போக்த்ருபாவாத்
ஜ்ஞாத்வாதேவம் முச்யதே ஸர்வபாசை:॥

(இ-ள்.) "அநீசனான ஆத்மா போக்தாவென்ற பாவனையால் பந்தமடைகின்றான். தேவனை அறிந்தபோது எல்லாப் பாசங்களினின்றும் விடுபடுகின்றான்."

𑌜𑍍𑌞𑌾𑌜𑍍𑌞𑍌 𑌦𑍍𑌵𑌾𑌵𑌜𑌾 𑌵𑍀𑌶𑌨𑍀𑌶𑍌।

ஜ்ஞாஜ்ஞௌத்வாவஜாவீசநீசௌ।

(இ-ள்.) "பிறவாதவர்களாகிய பேரறிவினனும், சிற்றறிவினனுமாகிய இருவரும் ஈசனும் அநீசனுமாம்." எனவும்,

𑌕𑍍𑌷𑌰𑌂 𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌮𑌮𑍃𑌤𑌾𑌕𑍍𑌷𑌰𑌂 𑌹𑌰𑌃
𑌕𑍍𑌷𑌰𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌾𑌵𑍀𑌶𑌤𑍇 𑌦𑍇𑌵 𑌏𑌕𑌃॥

க்ஷரம்ப்ரதாநமம்ருதாக்ஷரம்ஹர: க்ஷராத்மாநாவீசதே தேவ ஏக:॥

(இ-ள்.) "க்ஷரம் பிரதானம் அக்ஷரம் அமிருதம். க்ஷராத்மாக்களை ஆளுபவர் ஒரே தேவராகிய ஹரர்." எனவும்,

𑌕𑍍𑌷𑌰𑌂 𑌤𑍍𑌵𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌹𑍍𑌯𑌮𑍃𑌤𑌂 𑌤𑍁 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾
𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌵𑌿𑌦𑍍𑌯𑍇 𑌈𑌶𑌤𑍇 𑌯𑌸𑍍𑌤𑍁 𑌸𑍋𑌽𑌨𑍍𑌯𑌃।

க்ஷரந்த்ய வித்யாஹ்யம்ருதந்து வித்யா
வித்யாவித்யே ஈசதேயஸ்து ஸோந்ய:॥

(இ-ள்.) "அவித்தையென்றது அசேதனம். வித்தையென்றது சேதனம் (ஆத்மா). இவ்விரண்டையும் ஆளுபவர் அவற்றிற்கு வேறாயுள்ள ஈசர்." எனவும்,

𑌯 𑌈𑌶𑍇𑌽𑌸𑍍𑌯 𑌦𑍍𑌵𑌿𑌪𑌦𑌶𑍍𑌚𑌤𑍁𑌷𑍍𑌪𑌦𑌃
𑌕𑌸𑍍𑌮𑍈 𑌦𑍇𑌵𑌾𑌯 𑌹𑌵𑌿𑌷𑌾 𑌵𑌿𑌧𑍇𑌮॥

யஈசேஅஸ்ய த்விபதச் சதுஷ்பத: கஸ்மைதேவாய ஹவிஷா விதேம॥

(இ-ள்.) "எவன் இந்த இருகால்களுக்கும் நாற்கால்களுக்கும் நாயகன். அத்தகைய தேவனுக்கு அவிசு கொடுப்போம்."

𑌅𑌣𑍋𑌰𑌣𑍀𑌯𑌾𑌨𑍍𑌮𑌹𑌤𑍋 𑌮𑌹𑍀𑌯𑌾𑌨𑍍
𑌆𑌤𑍍𑌮𑌾 𑌗𑍁𑌹𑌾𑌯𑌾𑌂 𑌨𑌿𑌹𑌿𑌤𑍋𑌽𑌸𑍍𑌯 𑌜𑌨𑍍𑌤𑍋𑌃।
𑌤𑌮𑌕𑍍𑌰𑌤𑍁𑌂 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌵𑍀𑌤𑌶𑍋𑌕𑍋
𑌧𑌾𑌤𑍁𑌃 𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌾𑌨𑍍𑌮𑌹𑌿𑌮𑌾𑌨𑌮𑍀𑌶𑌮𑍍॥

அணோரணீயாந்மஹோமஹீயாந் ஆத்மாகுஹாயாம் நிஹிதோஸ்யஜந்தோ:।
தமக்ரதும் பச்யதிவீதசோகோ தாதுப்ரஸாதாந்மஹிமாநமீசம்॥

(இ-ள்) "அணுவுக்கணுவாயும் மகத்துக்கு மகத்தாயுமுள்ள பரமாத்மா இந்த ஜந்துவின் இருதய குகையில் உள்ளார். கிரியையில்லாதவரும், மகிமை பொருந்தினவருமான அவ்வீசனை அவரது பிரசாதத்தால் சோகமில்லாதவனைக் காண்கின்றான்;" (இதே மந்திரம் கடம், சரபம், நாரதபரிவ்ராஜகம் என்னும்

உபநிஷத்துக்களிலும், தைத்திரீயாருணசாகை நாராயணத்திலும் கூறப்பட்டுள்ளது). (மஹிமாநமீசம் சர்வவேதவேதாந்தங்களிலும் புகழப்பட்ட பெருமையுடைய பரமேசுவரராகிய சிவபெருமானை). (பரமாத்மா-மஹேசுவரர்) எனவும்,

யஜுர்வேதம் (தைத்திரீயஸம்ஹிதை.)

𑌏𑌷𑌾𑌮𑍀𑌶𑍇 𑌪𑌶𑍁𑌪𑌤𑌿𑌃 𑌪𑌶𑍂𑌨𑌾𑌂 𑌚𑌤𑍁𑌷𑍍𑌪𑌦𑌾𑌮𑍁𑌤𑌚
𑌦𑍍𑌵𑌿𑌪𑌦𑌾𑌮𑍍।

ஏஷாமீசே பசுபதிঃ பசூநாம் சதுஷ்பதா முதச த்விபதாம்।

(இ-ள்.) "இருகாற் பசுக்கள், நாற்காற்பசுக்கள் ஆகிய இருவகைப் பசுக்களுக்கும் பசுபதியே பதி." எனவும்,

சுக்லயஜுர்வேத ப்ருஹதாரண்யகோபநிஷத்.

(1) 𑌆𑌤𑍍𑌮𑌨𑍍𑌯𑍇𑌵𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌪𑌶𑍍𑌯𑍇𑌤𑍍 (2) 𑌯𑍋𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑍇 𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍,

(1) ஆத்மந்யே வாத்மாநம் பச்யேத் (2) யோவிஜ்ஞானே திஷ்டன்.

இ-ள்.) (1) "ஆத்மாவிலே ஆத்மாவைக் காண்க. (உபாசிக்க)" (2) "எவர் விஞ்ஞானத்தில் (ஆத்மாவில்) இருக்கின்றவரோ.' எனவும் வருமாறு காண்க.

இத்யாதி வேதப் பிரமாணங்கள் இன்னும் பலவுள. அவற்றையெல்லாம் ஈண்டுகூறின் விரியுமென்றஞ்சி விடுத்தனம். ஸ்மிருதிகளும், இதிஹாசங்களும், புராணங்களும், வேதாந்தசித்தாந்த சாஸ்திரங்களும் இவ்வுண்மையையே எடுத்துப் போதிப்பனவென் றுணர்வாயாக.

இனி ஜகத்விஷயமாகவும் அம்மூதறிஞர்களது அபிப்பிராயத்தைக் கூறுதும். தாயுமானசுவாமிகள் பாடல்,

1. அண்டபகி ரண்டமும் மாயாவிகாரமே அம்மாயை யில்லாமையே.
2. உண்டுபோ லின்று முலகைத் திரமெனவுட்
   கொண்டோன் பெற்றபயன் கூறாய் பராபரமே.
3. வருவான்வந் தேனெனல்போன் மன்னியழியுஞ் சகத்தைத்
   தெரிவாக வில்லையென்ற தீரம் பராபரமே.
4. இல்லாத காரியத்தை யிச்சித்துச் சிந்தைவழி
   செல்லாமை நல்லோர் திறங்காண் பராபரமே.
5. உண்டுபோ லின்றும் பண்பி லுலகினை யசத்துமென்பர்

இவற்றால் உலகம் முக்காலத்தும் மித்தையென்பாரை மறுத்துக் காரிய ரூபத்தால் உள்ளதுபோலத் தோன்றினுங் காரண ரூபத்தால் இல்லதென்பதை நிறுவியதாயிற்று. ஞானிக்கு ஜகமில்லையென்ற தீரம் காரியப்பாட்டினை நோக்கியேயாம். சூனியம் என்னும் பொருள்படவன்று. எச்சமயத்தவர்களாலும் புகழ்ந்து பேசப்படும் ஸ்ரீ தாயுமானசுவாமிகள் காணப்படும் பிரபஞ்சமெல்லாம் சைவநூற்களிலே கூறப்பட்ட உபமானங்களாகிய கானற்சலம், சொப்பனவுலகு, இந்திரஜாலம், நீரிலெழுத்து ஆகாயத்தாமரை, முயற்கொம்பு ஆகிய இவற்றைப்போல் பொய்யாயொழியுமென்று அவற்றின் நிலையாமையை விளக்கிக் காட்டினரேயன்றி ஏகாத்மவாதநூல்களிலே சொல்லப்படும் கயிற்றரவு, கிளிஞ்சல்வெள்ளி, கந்தர்வநகரம், மலடிபுத்திரன், தாணுபுருஷன் ஆகிய இந்த உவமைகளைச்சொல்லிச் சூனியமென்று மறுத்துக்கூறினாரல்லர். இதுவே சற்காரிய வாதங்கூறும் வைதிக சைவமரபாகும். ஆதலால் தாயுமானவர் வைதிக சைவரே.

இவையிங்ஙனமிருக்க, மேற்சொன்ன ஞானவழிபாடென்னும் அறிவுத்தொழில் வழிபாட்டைச் செய்ய இயலாதவர்க்கும் அவர்கள் உய்யவேண்டி கடவுள் அருவம், அருவுருவம், உருவம் என்னும் மூன்று வடிவங்களையும் கருணையால் கொண்டருளுவாராயினர். அவ்வருட்கோலங்களை தடஸ்தநிலையென்று சொல்லப்படும். அவற்றுள் அருவவழிபாடு மனத்தை இந்திரியங்களின் வழி செல்லவொட்டாது தடுத்து அந்தச் சுத்தமனத்தால் அகத்தே தியானிக்கப்படுவதாகும். அவ்வாறு தியானமியற்றுவோர் யோகிகள் என்று சொல்லப்படுவர். அந்தத்தியான வழிபாடே பதிப்பொருளைப்பற்றியது. அப்பொருளுக்கு வடிவ முதலாயின இல்லாமையால் சர்வ வியாபகஞ் சிறக்கும். அப்படியிருந்தும் அது ஞானவழிபாட்டினுந் தாழ்ந்ததாகும். இனி அருவுருவ வழிபாடாவது மனத்தை ஒருவாறு அடக்கியும், இந்திரியங்களின் வழி பெரிதும் செலுத்தியும் வழிபடுவதாகும். அதாவது, அகத்தே மனத்தினால் இருதயத்தில் பூஜையும், உந்தியில் ஓமமும், புருவநடுவில் தியானமும் செய்தலோடு புறத்தே இந்திரியங்களால் இலிங்கவடிவில் பூஜையும், அக்கினியில் ஓமமுஞ் செய்தலாம். இவ்வழிபாடு செய்வோர் கிரியையாளர் எனப்படுவர். உருவவழிபாடாவது ஆலயத்திலே சென்று அங்கு அருட்குறி

தோன்ற எழுந்தருளியிருக்கின்ற அருவுருவத் திருமேனியையுடைய சிவலிங்கப் பெருமானையும், சந்திரசேகரர், உமாமகேசுவரர் முதலிய மூர்த்தங்களையும் வழிபடுவதாகும். அது புறத்தே இந்திரியங்களால் வழிபடுவது. அதைச் சுருக்கமாகக்கூறின் கண்ணாகிய இந்திரியம் உருவத்தைத் தரிசிக்கவும், காதாகிய இந்திரியம் அவருடைய குணமகிமைகளைக் கேட்டுநிற்கவும் பெற்று மெய்மறந்து நிற்றலாம். இவ்வாறு ஞானேந்திரியங்கள் மாத்திரமல்ல. கர்மேந்திரியங்களுள் கால்கள் வலம்வருவதும், கைகள் கூப்புவதும், வாக்கு வாழ்த்துவதுஞ் செய்தலாம். தெய்வவழிபாட்டில் பிரயோசனப்படும் இவ்விந்திரியங்கள் ஒருவழிப்பட்டு நிற்கும்போது மற்றைய இந்திரியங்களுங்கூட ஒடுங்கி அவற்றின் வழியே சார்ந்து நிற்கும். அப்பொழுது கரணங்களும் கசிந்துருகி இந்திரியங்களின் வழியேநின்று உண்மைபக்தி செய்து பரவசப்பட்டுநிற்கும். இவற்றின் விரிவான தத்துவார்த்தத்தைத் தடுத்தாட்கொண்டபுராணம்.

ஐந்துபேரறிவுங் கண்களேகொள்ள வளப்பெருங் கரணங்க ணான்குஞ்
சிந்தையேயாகக் குணமொருமூன்றுந் திருந்துசாத்து விதமேயாக
இந்துவாழ்சடையா னாடுமானந்த வெல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேரின்ப வெள்ளத்துட் டிளைத்து மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

என்ற திருச்செய்யுளில் கண்டுதெளிக. இவ்விதமானகாயத்தால் வழிபாடியற்றுவோர் அயராவன்புடைய சரியையாளரெனப்படுவர். அவர்கள் மாத்திரமல்ல. மேற்சொன்ன கிரியையாளரும், யோகியரும், ஞானிகளுங்கூட மனமும் அறிவும் புறத்திந்திரியங்களின்வழி செல்லும்போதெல்லாம் அவற்றை விஷயங்களிலே செல்லவொட்டாது தடுத்துக் கடவுளிடத்துச் செலுத்துதற்பொருட்டு ஆலயவழிபாடு செய்யாநின்றார்கள் அவ்வாறு ஞானிகள் செய்வதால் அவர்களை ஞானிகளல்லவென்று புறங்கூறுதல் கூடுமோ! திருத்தாண்டகவேந்தர் "ஞானத்தாற் றொழுவார் சிலஞானிகள், ஞானத்தாற் றொழுவேனுனை நானலேன், ஞானத்தாற் றொழுவார்க டொழக்கண்டு, ஞானத்தானுனைநானுந் தொழுவனே" என்று வற்புறுத்தியுள்ளார். சிவஞான சித்தியாரும் "ஞானயோகக்கிரியா சரியைநாலு நாதன்
ன் பணிஞானி நாலினுக்குமுரியன்" என்று பணித்தருளியது.

இதுகாறுங் கூறியவற்றால் கடவுளுடைய உண்மைச் சொரூபமான ஞானநிலை ஒன்றெனவும், ஆத்மாக்களின்பொருட்டு அருவமுதலாகக்கொண்ட நிலை மூன்றெனவும் நிரூபிக்கப்பட்டது. படவே, இந்நான்கு நிலையும் அறிவால்மட்டும் வழிபடுதலும், மனத்தால்மட்டும் வழிபடுதலும், மனத்தாலும் காயத்தாலும் வழிபடுதலும், - காயத்தால்மட்டும் வழிபடுதலும் ஆகிய நான்குவகையுள் ளடங்கியுள்ளன. அவையே மோட்சஹேதுவான சிறந்த சிவாராதனங்களாம். அவற்றின் பலனாகிய முக்திகளும் பரமுக்தி, அபரமுக்தி, பதமுக்தியென மூன்றுபகுதிகளாகின்றன. வைதிகசைவத்தில் பிரதிபாதிக்கப்பட்ட கடவுளுடைய நான்கு நிலைகளுக்கும் பிரமாணம் வருமாறு:—

சிவஞான சித்தியார்.

உருமேனி தரித்துக் கொண்ட தென்றலு முருவிறந்த
அருமேனி யதுவுங் கண்டோ மருவுரு வானபோது
திருமேனி யுபயம் பெற்றோஞ் செப்பிய மூன்று நந்தங்
கருமேனி கழிக்கவந்த கருணையின் விளைவுகாணே.

உருவருள் குணங்களோடு முணர்வரு ளுருவிற் றோன்றுங்
கருமமு மருளரன்றன் கரசரணாதி சாங்கம்
கருமரு ளுபாங்கமெல்லாந் தானருடனக் கொன்றின்றி
அருளுரு வுயிருக்கென்றே யாக்குவ னசிந்தனன்றே.

திருவிளையாடற் புராணம்.

அருவாகி யுருவாகி யருவுருவுங் கடந்தண்மை யறிவானந்த
உருவாகி யளவிறந்த வுயிராகி யவ்வுயிர்க்கோ ருணர்வாய்ப்பூவின்
மருவாகிச் சராசரங்க ளகிலமுந்தன் னிடையுதித்து மடங்கநின்ற
கருவாகி முளைத்தசிவக் கொழுந்தை யாயிரங்கண்ணுங் களிப்பக்கண்டான்.

கந்த புராணம்.

அருவமு முருவுமாகி யநாதியாய்ப் பலவா யொன்றாய்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்க ளாறுங் கரங்கள்பன் னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தன னுலக முய்ய. .. என்பனவாம்.

இனி கடவுள்கொள்ளும் அருவுருவத்திருமேனி ஈசானாதி மந்திரங்களால் அமைக்கப்பட்டுள்ளது. அம்மந்திரத் திருமேனியை நேரே தரிசிக்கமுடியாது. அதனால் அதைச் சிலைமுதலியவற்றால் சமைத்த உருவிற்பாவித்துப் பிரதிஷ்டைசெய்து வழிபடவேண்டியிருக்கின்றது. அவ்வடிவில் கடவுள் மந்திரசரீரி

பாப் ஆவிர்ப்பவித்து ஆத்மாக்கள் செய்யும் வழிபாட்டை மிக்க கருணையோடு ஏற்றுக்கொண்டு அருள்புரிகின்றனர். அல்லாமலும், அவ்வருவுருவத் திருமேனியேயன்றி உருவத்திருமேனிகளையும் ஆத்மாக்களின்பொருட்டு அவர் தாங்குகின்றனர். அந்தத்திருமேனிகளுங்கூட சிலை முதலிய உருவங்களிற் பாவிக்கப்பட்டு வழிபடப்படுகின்றன. அத்தகைய அருவுருவ உருவத்திருமேனிகளைத் தான் விக்கிரகாராதனம் என்று சிலர் குறைகூறி வருகின்றார்கள் அந்தோ! இது கேவலம் அஸங்கதம். வேதங்கள் ஆகமங்கள் முதலிய எந்த வித்தையும் அவ்வழிபாட்டை விக்கிரகாராதனம் என்று வழங்கினதேஇல்லை. கடவுள் எங்கும் நிறைந்த சர்வபரிபூரணராதலின் மந்திர சம்ஸ்காரம், பிரதிஷ்டை முதலியவற்றோடுங்கூடிய திருமேனிகளையும், அன்பேவடிவாய்த் திகழ்ந்த பாவிக்கப்பட்ட திருவுருவையும் அதிஷ்டித்து அவற்றின்வழி ஆத்மாக்கள் செய்யும் வழிபாட்டை ஏற்றுக்கொள்ளுதல் அவருக்கு இன்றியமையாத பரமகருணாமய விலக்கணமாம். ஆதலால் அது கடவுள் வணக்கமாகுமேயன்றி விக்கிரகவணக்கமாகமாட்டாது. விக்கிரகவழிபாடு சரீரவழிபாடாகும். நாம் வழிபடுவது சரீரத்தையன்று சரீரத்துக்குள் எழுந்தருளியிருக்குஞ் சரீரியாகிய தேவாதிதேவனை. உயிர்சித்தாயினுஞ் சடமாகிய சரீரத்தை இடமாகக்கொண்டு அதை இயக்குதலைக் கண்கூடாக அறிகிறோம். அதுபோல கடவுளுஞ் சித்துப்பொருளாய் எங்கும் நீக்கமற நிறைந்தவராயினும் விக்கிரகமாகிய உருவத்தைத் தமக்கு இடமாகக்கொண்டு நின்று ஆத்மாக்களுக்கு அநுக்கிரகஞ்செய்கின்றனர். எப்படி அக்கினியானது விறகு, திரி முதலியவற்றை இடமாகக்கொண்டு அடுதல், சுடுதல், ஒளிகாலல் முதலியவற்றைச் செய்கின்றதோ அப்படியே கடவுளும் குருலிங்க ஜங்கமங்களை இடமாகக்கொண்டு ஆத்மாக்கள் புறத்திற் செய்யும் வழிபாடுகளை ஏற்று அருள்புரிகின்றனர். அல்லாமலும், விக்கிரஹம் என்னுஞ் சொல் (வி - விசேஷமாக, கிரஹம் - கிரஹித்தல்) விசேஷமாகக் கிரஹித்தற்குரிய உருவம் என்று பொருள்படும். அதாவது வியாபகமாயுள்ள சூரியனுடைய கிரணங்களுக்கெதிரே பஞ்சைப்பிடித்தால் அப்பஞ்சில் அக்கினி பற்றக்காணவில்லை. ஆனால் அக்கிரணங்கள் பலவற்றையும் கண்ணாடி யொன்றில் ஒருமுகப்படுத்தி அதன் எதிரே பஞ்சைப்

பிடிக்கின் அப்பஞ்சில் அக்கினிபற்றுதல் பிரத்தியட்சமன்றே. அதுபோல பரமசிவத்தினுடைய அருட்குணங்களனைத்தையும் விக்கிரகத்தில் ஒருமுகப்படுத்தி வழிபடல் மூர்த்திவணக்கமென்றுசொல்லப்படும். திருவெண்காட்டடிகளும் "சொல்லினுஞ் சொல்லின் முடிவினும் வேதச்சுருதியினும், மல்லினும் மாசற்ற வாகாயந்தன்னிலும் மாய்ந்துவிட்டோர், இல்லினு மன்பரிடத்திலு மீசனிருப்பதல்லாற், கல்லினுஞ் செம்பினுமோ யிருப்பானெங்கள் கண்ணுதலே" என்றனர். இதனால் கல்லினுஞ் செம்பினுங்கூட கண்ணுதற்பெருமான் இருந்து அநுக்கிரகஞ்செய்கின்றார் என்று பெறப்பட்டது. ஒலிவடிவாகிய எழுத்துக்களை வரிவடிவாகிய எழுத்துக்களாற் கண்டறிவதுபோல அருவமாகிய கடவுளை அவரால் தோற்றுவிக்கப்பட்ட வுருவங்களில்வைத்து அறிதல் வேதசம்மதமாகும்.

இத்தகைய வழிபாடெல்லாம் கேட்டுச்சிந்தித்துத் தெளிந்த மெய்யன்பர்களாகிய வைதிக சைவர்களுக்கே சிறப்பாகவுரிய சொரூப சிவவணக்கம் ஆகா. அது ஆன்மாவின் நேர்வணக்கமாதலின் கேவலம் ஞானமார்க்கத்தாலன்றி வேறெதனாலும் வழிபடத்தக்கதன்று. மற்று கடந்த சிவபேதத்துட்பட்ட மூர்த்திகளின் வணக்கமென்றே அறியக்கடவாய். அநுக்கிரகார்த்தமாகக்கொண்ட இம்மூர்த்தங்கள் பலவகைப்படினும் முடிவில் ஏகமாகிய சிவபரஞ்சுடரேயாம். பசுக்கள் பலநிறங்களை யுடையனவாக விருப்பினும் அவைகளினின்றும் வெளிப்பட்ட பாலானது ஒரே நிறமாயிருத்தல்போல மூர்த்திபேதங்கள் அனந்தமாக விருப்பினும் எங்கும் நிறைந்த சிவபரம்பொருள் நிர்ணயத்தில் பேதமேகிடையாது. "ஏகனனேகன் இறைவனடிவாழ்க" என்றார் திருவாதவூரடிகள். இறைவன் எடுக்குங் கோலங்கள் பிறரார் படைக்கப் படுதலின்றி அவனருளால் எடுக்கப்படுவனவாதலால் அவைபற்றி அவன் வேறுபாடுறுதல் சிறிதுமில்லை. அவ்வடிவங்கள் அவனது அறிவின்கண் தோன்றும் ஞானவடிவங்களாம். ஆகையினாலே ஸ்ரீ தாயுமான சுவாமிகளும், "ஞானமேவடிவாய்த் தேடுவார்தேடும் நாட்டமே" என்று வாழ்த்தினர். மைத்ராயண்யுபநிஷத் த்வேவாவ ப்ரஹ்மணோ ரூபே மூர்த்தஞ்சாமூர்த்தஞ்சாத|

யந்மூர்த்தம் ததஸத்யம் யதமூர்த்தம் தத்ஸத்யம் தத்ப்ரஹ்ம
தஜ்ஜ்யோதி:||

த்வே வாவ ப்ரஹ்மணோ ரூபே மூர்த்தஞ்சாமூர்த்தஞ்சாத।
யன்மூர்த்தம் ததஸத்யம் யதமூர்த்தம் தத்ஸத்யம் தத்ப்ரஹ்ம தஜ்ஜ்யோதி:॥

(இ-ள்). "பிரமத்துக்கு மூர்த்தம் அமூர்த்தம் என இரண்டு ரூபங்களுண்டு. எது மூர்த்தமோ அது அசத்தியமானது (அதாவது தோன்றிநின்று மறைவது). எது அமூர்த்தமோ அது சத்தியமானது. அது பிரமம் அது தேஜஸ்" என்று நவின்றது.

மா - மஹாதேவ சப்தத்தையும் விளக்கியருளல்வேண்டும்.

ஆ - விளக்குதும். 'அதர்வணவேத அதர்வசிரோபநிஷத்.

𑌅𑌥 𑌕𑌸𑍍𑌮𑌾𑌦𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌮𑌹𑌾𑌦𑍇𑌵𑌃 𑌯𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌭𑌾𑌵𑌾𑌨𑍍 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍍𑌯 𑌆𑌤𑍍𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌗𑌐𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑍇 𑌮𑌹𑌤𑌿 𑌮𑌹𑍀𑌯𑌤𑍇 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌮𑌹𑌾𑌦𑍇𑌵𑌃॥

அதகஸ்மாதுச்யதே மஹாதேவ: யஸ்ஸர்வான் பாவான் பரித்யஜ்ய
ஆத்மஜ்ஞானயோகைஶ்வர்யே மஹதி மஹீயதே தஸ்மாதுச்யதே மஹாதேவ:।

(இ-ள்). "பின்னர் எதுபற்றி மஹாதேவர் எனப்படுகின்றார். எல்லாவியல்புகளையும் விடுத்து மகத்தாகிய பரமாத்மானந்த யோகைசுவர்யத்தின் பொருட்டுப் பூசிக்கப்படுகின்றனர் அதுபற்றி மஹாதேவர் எனப்படுகின்றனர்' என்று மொழிந்தது. இம்மந்திரத்தில் கூறப்பட்டுள்ள மஹாதேவநாமம் சிவபரம்பொருளுக்கே ரூடியாக உரியது. (123 - ம பக்கத்தில் எடுத்துக்காட்டிய கர்ப்போபநிஷத் மந்திரத்தானும், (53-ம் பக்கத்தில் விளக்கிய காயத்திரி மந்திரங்களானுந் தெளிக). இவர் தேவர்களுக்கெல்லாந் தேவராயிருத்தலினாலே தேவாதிதேவரென்றழைக்கப்பட்டனர். "𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑌂 𑌦𑍇𑌵𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌵𑌿𑌶𑍍𑌵𑌮𑍇𑌤𑌚𑍍𑌚𑌰𑌾𑌚𑌰𑌮𑍍 - விக்ரஹம் தேவதேவஸ்ய விச்வமேதச்சராசரம்-இந்தச்சராசரம் யாவும் தேவாதி தேவருடைய வடிவம்" என்னும் வாயுஸம்ஹிதை உத்தரபாகப் பிரமாணப்படி சர்வ சேதநாசேதனப் பிரபஞ்சங்களையும் தமக்குச் சரீரமாகக்கொண்டு விளங்குகின்றவரும் இம்மஹாதேவரே. எப்படி விருட்சமூலத்தில் ஊற்றியஜலம் அவ்விருட்ச சாகைகளைப் புஷ்பிக்கும்படிச் செய்கின்றதோ அப்படியே சிவபெருமானுடைய பூசையினாலே அவருடைய சரீரமாகிய சர்வ வுலகங்களும் செழிக்கின்றன. பிருதிவிமுதல் நாதமீறாகச்சொல்லப்பட்ட முப்பத்தாறு தத்துவங்களையும் சிவபெரு

மான் வியாபித்து நின்றமையால் விஷ்ணு எனப்பட்டனர். படவே விஷ்ணுநாமம் நாராயணருக்கே உரித்தென்னுங்கூற்று பயனற்றதாயிற்று. அதர்வசிரோபநிஷத் "𑌸𑌰𑍍𑌵𑍇 𑌦𑍇𑌵𑌾𑌃 𑌸𑌂𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑍀𑌤𑌿 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃-ஸர்வேதேவாஸ்ஸம் விசந்தீதிவிஷ்ணு:-எல்லாத் தேவர்களும் எங்கு அடங்குவார்கள் அவர் விஷ்ணு" என்று விஷ்ணுநாமத்தைச் சிவபரமாக நாட்டியது. சிவபெருமான் சர்வதேவ வியாபகராயிருத்தல் பற்றியே கூர்மபுராணமும்.

> 𑌶𑌿𑌵𑍋 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌶𑍍𑌚𑍈𑌵 𑌰𑍁𑌦𑍍𑌰𑍋 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌪𑌿𑌤𑌾𑌮𑌹𑌃
> 𑌸𑌂𑌸𑌾𑌰𑌵𑍈𑌦𑍍𑌯𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌃 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑍇𑌤𑌿 𑌤𑌤𑍍𑌵𑌤𑌃।
> 𑌏𑌤𑌨𑍍𑌨𑌾𑌮𑌾𑌷𑍍𑌟𑌕𑌂 𑌪𑍁𑌣𑍍𑌯𑌂 𑌶𑌿𑌵𑌸𑍍𑌯 𑌪𑌰𑌮𑌾𑌦𑍍𑌭𑍁𑌤𑌮𑍍
> 𑌰𑌹𑌸𑍍𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌭𑍍𑌯𑌸𑍍𑌸𑌾𑌰𑌭𑍂𑌤𑌂 𑌸𑌮𑍁𑌦𑍍𑌧𑍃𑌤𑌮𑍍॥

> சிவோ மஹேச்வரச்சைவ ருத்ரோ விஷ்ணு பிதாமஹ:
> ஸம்ஸாரவைத்யஸ்ஸர்வஜ்ஞ: பரமாத்மேதிதத்வத:॥
> ஏதந்நாமாஷ்டகம்புண்யம் சிவஸ்யபரமாத்புதம்
> ரஹஸ்யம்ஸர்வசாஸ்த்ரேப்யஸ் ஸாரபூதம் ஸமுத்ருதம்॥

(இ-ள்.) "சிவன், மகேசுவரன், உருத்திரன் விஷ்ணு, பிதாமஹன், ஸம்ஸார வைத்தியன், ஸர்வஞ்ஞன், பரமாத்மா என்னும் எட்டுநாமங்கள் மஹா அற்புதராயும், புண்ணியராயுமுள்ள சிவபெருமானுக்குச் சமஸ்த சாஸ்திரங்களினின்று சாரமாகவும் ரகசியமாகவும் எடுக்கப்பட்டன" என்று நிர்ணயித்தது. மேலும் அஷ்டமூர்த்தங்களுள் ஒன்றாகிய ஆகாசத்தில் மஹாதேவ சப்தத்தால் எழுந்தருளியிருப்பவரும் அவரேயாம். அவரது பெயராகிய இம்மஹாதேவநாமம் பரத்தியல்பை முக்கியமாயும் தெளிவாயும் உணர்த்துதலினாலே வேதநாயகி மற்றைத் தேவர்கள் அளவுள்ள ஆனந்தத்தையுடையவர்களென்றும், அவர்களை முற்றும் ஒழித்துவிட்டு அந்தமிலாவானந்தமுடையவர் சிவபெருமான் ஒருவரேயென்று அவரை ஸ்பஷ்டமாய் எடுத்துக்காட்டி, மோட்சாபேட்சையுடைய முமுட்சுக்கள் வேறு தேவதைகளைப் பூசிக்கும் பேதைமையைச் சிறிதுஞ் சகிக்காமல் சிவோபாசனத்தால் அடையப்பெறும் நித்திய நிர்மல நிரதிசய பரமானந்த அற்புத நிஷ்டையொன்றே முக்கியமென்று அவர்களுக்கு நல்லறிவுச்சுடர் கொளுத்த இந்நாமத்தைப் பிரகரணத்தின் இறுதியில்வைத்து நிருபித்தனள். இதனால் அயன், அரி, அரன் என்னுந் திரிமூர்த்

திகள் பரமுக்தியின்பொருட்டுச் சேவியராயினரல்லர் என்று பெறப்பட்டது. படவே சர்வமூலகாரண துரீய மூர்த்தியாகிய மஹாதேவரே பாசமோசனத்தின்பொருட்டுச் சர்வாத்மாக்களாலும் சேவிக்கப்படுஞ் சேவியப்பொருள் ஆயினரென்று பிரமவித்தை காட்டியதாயிற்று. திருத்தாண்டகவேந்தரும், "மாதேவா மாதேவா வென்றுவாழ்த்தி நீராண்டபுரோதாயமாடப்பெற்றேம்" எனவும், "வாதுசெய்து மயக்குமனத்தராய், ஏது சொல்லுவீராகிலு மேழைகாள், யாதோர் தேவரெனப்படுவார்க்கெலாம், மாதேவனலாற் றேவர் மற்றில்லையே" எனவும் ஓதிபரத்துவ நிர்ணயஞ் செய்தருளினர். மஹா என்னும் வடமொழிப்பதம் தமிழில் மா என வழங்கிற்று. திருமூலதேவரும், "உய்யவல்லார்கட் குயிர் சிவஞானமே, உய்ய வல்லார்கட் குயிர்சிவந்தெய்வமே, உய்யவல்லார்கட் கொடுக்கம் பிரணவம், உய்யுவல்லாரறிவுள்ளறிவாமே." என்று நிறுவினர்.

உலகெலாங்கடந்த உண்மைப்பொருளாகிய சிவபெருமானை மஹாதேவர் ஆனந்த வடிவினரென்பது அவரது ஆனந்த நடராஜகோலமே செவ்வனே விளக்குகின்றது. வேதமும், "ஆநந்தோ ப்ரஹ்ம-ஆனந்தோப்ரஹ்ம-ஆனந்தமுடையது பிரமம்" எனவும், "ஸர்வாநந்தமயஶ்ஶிவ:-ஸர்வாநந்தமயச்சிவ: - சர்வானந்தமயர் சிவபெருமான்" எனவும் ஓதியது. முக்தாத்மாக்களுக்கு நித்தியானந்தமளித்தலால் அவரது நடனம் ஆனந்தத்தாண்டவமெனப்படுகிறது. அது ஒருகாலத்தும் ஒழிவதில்லையாகலின் அநவரதத்தாண்டவமெனவும் படுகின்றது. அந்தத் திருத்தாண்டவம் நிகழும் தெய்வஸ்தானம் அண்டத்தில் சிதம்பராலய நடுவிலுள்ள சிற்சபை ஆனந்த நடராஜமூர்த்தியின் திருவுருவம் பிரணவத்தின் உள்ளொளியாயுள்ள ஸ்ரீபஞ்சாக்ஷரம். அவரை அடக்கியுள்ள திருவாசி (பிரபை) பிரணவம். அவர் எழுந்தருளியிருக்கும் ஆசனமாகிய பீடம் பிரணவம். அவர் எழுந்தருளியுள்ள சுவர்ணவிமானம் அப்பிரணவத்தினின்றும் எழுந்தவேதம். இவ்வாறு பிரணவமும் பிரணவப்பொருளாயுமுள்ள பரமசிவமே எவ்வளவிலும் அடங்காத இணையற்ற ஆனந்தக்கடலாதலின் அவரது மஹாதேவ நாமத்தைப் பிரணவவித்தை இறுதியில் வைத்துத் துதித்தது. மணிவாசகப்பிரானும், "அந்தமிலாவானந்த மணிகொடில்லை கண்டேனே" எனவும், "அண்டமுதலாயி

ளுனந்தமிலர்வானந்தம், பண்டைப் பரிசேபழவடியார்க் கீந்தருளும்" என்வும், திருமூலதேவரும், "பேச்சற்றவின்பத்துப் பேரானந்தத்திலே, மாச்சற்றவென்னைச் சிவமாக்கி மாள்வித்து" எனவும் வலியுறுத்தினார்கள். இன்னும் ஆனந்த நடராஜரது குஞ்சிதபாதமே ஆனந்தாநுக்கிரகமாகும். அதற்கே எடுத்து மடித்தாநிக் திருவடியென்று பெயர். அது ஆத்மாவின் ஜீவன் முக்திநிலையிலே சர்வஞ்ஞத்வாதி அறுகுணங்களையும் விளங்கச்செய்தல் திருவடியாவது சிவத்தின் அறுகுணமாகும். திருவடியை உயரவெடுத்தலாவது அவ்வறுகுணங்களையும் ஆத்மாவின் வியாபகமுழுதும் மேலிடச்செய்தல். திருவடியை மடித்தலாவது அவ்வாறு மேலிட்ட அறுகுணங்களையும் எஞ்ஞான்றும் நிலைபெறநிறுத்துதல்; பாச க்ஷயமும் வீடுபேறுமாகிய இருதொழில் திருவருளால் நடக்குமென்பது தோன்றவே அவ்வருட்சக்தி வடிவாகிய இரண்டு திருவடியில் ஒன்று கிரியாசக்தி-மலத்தைப் பக்குவப்படுத்தி மேலிடாது அழுத்த, மற்றத் திருவடியாகிய ஞானசக்தி-ஆத்மாவின் வியாபகமுழுதும் தான் மேற்பட்டு நின்று சிவானந்தத்தை நித்தமாய்ப் பதித்தலாம். அதனால் நித்தியமாயும நிர்மலமாயும், நிரதிசயமாயுமுள்ள பிரமானந்தத்தை ஆத்மாக்களுக்கு அளிப்பவர் மஹாதேவரே.

மா - பிரணவத்துக்கே இயல்பாகவுள்ள இவ்வரிய பெரிய மஹிமைகளெல்லாம் சிவபெருமான் ஒருவரிடத்தே சேர்க்கவேண்டுமென்று கூறுவது எற்றுக்கு? அதர்வசிகாவிலாச முதலிய பெருநூல்களில் வைஷ்ணவர்கள் இம்மஹிமைகளனைத்தையும் விஷ்ணுபரமாகக்கொள்வதே பொருத்தமுடையதென்று செப்பியிருக்கின்றார்களே அதற்கேதாவது பரிகாரமுண்டோ? ஐயனே! கூறியருளுக.

ஆ - வைஷ்ணவர்கள் அவ்வாறு விஷ்ணுபரமாகக்கொண்டது தம்மதத்திற்குப் பெருமையுண்டாக்கும்பொருட்டேயன்றி வேறன்று. அகாரணசிவத்துவேஷமும் ஒருவாறு காரணமாகலாம். எவ்வாறெனில், வேதத்தின் உச்சியிலமைந்த அதர்வசிகோபநிஷத் அதர்வசிரோபநிஷத்தை அநுவதித்தே அதிற்கண்ட வைதிகபாசுபத பிரமவித்தையைச் சிறப்பித்துக் கூறியிருக்கின்றது. அதனாலே அவ்விரண்டு உபநிஷத்துக்களுக்கும் வித்தை ஒற்றுமை கூறவேண்டியது அத்தியாவசியகம். ஏனைய உபநிஷத்துக்.

கனைப்போல் "𑌇𑌤𑍍𑌯𑍁𑌪𑌨𑌿𑌷𑌤𑍍-இத்யுபநிஷத்-இங்ஙனம் உபநிஷத் முடிந்தது" என்று பொதுவாகக்கூறி முடிக்காமல் "𑌶𑌿𑌵 𑌏𑌕𑍋 𑌧𑍍𑌯𑍇𑌯𑌃 𑌶𑌿𑌵𑌙𑍍𑌕𑌰𑌃 𑌸𑌰𑍍𑌵𑌮𑌨𑍍𑌯𑌤𑍍 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍍𑌯 𑌸𑌮𑌾𑌪𑍍𑌤𑌾𑌥𑌰𑍍𑌵𑌶𑌿𑌖𑌾-சிவ ஏகோத்யேயச்சிவங்கர: ஸர்வமந்யத் பரித்யஜ்ய ஸமாப்தா தர்வசிகா-சிவத்துவமென்னும் மோட்சத்தையளிப்பவரான சிவபெருமானொருவரே அந்நியமாயுள்ள எல்லாவற்றையும் விட்டுவிட்டுத் தியானிக்கத்தக்கவர். அதர்வசிகை முடிந்தது" என்று அதர்வசிகை தானே கூறி முடித்துக்கொண்டமையால் அதர்வசிரத்திற்போந்த வைதிக பாசுபத பிரணவாபின்ன பிரமவித்தையே மிகச் சிரேஷ்டமென்றும், அவ்வித்தையின் வழி பரமாத்ம பிரணவ சிவோபாஸ்தி செய்வதே மோட்சத்துக்கு நேர் சாதனமென்றும்; ஏனைய வேதாந்தங்களிற் குறிக்கப்படும் வித்தைகளும் தேவோபாசனைகளும் அதை நோக்கத் தாழ்ந்தபடியென்றும் நிரூபித்தவாறாயிற்று ஆத்மகோடிகள் நற்கதியடைய உபதேசிக்கவேண்டிய சத்தியப்பொருள் சிவத்தைத்தவிர வேறொன்றுமில்லையாதலின் வேதத்துரோகிகள் வேறு தேவதாபரங்களை இடையில் நுழைத்துச் சிவபரத்துவத்தைக் கெடுக்காவண்ணம் சிவமஹிமையினைக்கூறி முடித்தவுடன் அதர்வசிகைமுடிந்தது என்று தன் சமாப்தியைத்தானே இயம்பி முத்திரையிட்டுக்கொண்டது அப்படியிருந்தும் திக்விஜயம் எம்பாவையங்கார் என்பவர் அதர்வசிகாவிலாசம் என்னும் ஓர் நூல் அதர்வசிகோபநிஷத்துக்கு வைஷ்ணவபரமாக இயற்றியுள்ளார். அது சிவத்துவேஷங்காரணமாக வெழுந்ததென்பது அதை வாசிக்கின்றவர்களே எளிதிலுணரலாம். அதற்கு அதர்வசிகாவிலாசநிரசனம் என்னும் ஓரரியகண்டனநூல் அப்பொழுதே வெளிப்பட்டு அவ்விலாசத்தைச் சின்னபின்னப்படுத்தியிருக்கின்றது. அந்நிரசனம் இயற்றியவர் மைசூர் வீரபத்ர ஆராத்ய சுவாமிகள். அவரோடு வாதஞ்செய்த இவ்வெம்பாவையங்கார் அவரை வாதத்தில் வெல்லமுடியாமல் பரிபவப்பட்டுத் தம்முடைய விருதுமுதலியவற்றை அச்சுவாமிகளுக்களித்து தாமுந் தங்கூட்டத்தினரும் அவருக்கு அடிமையாய் உய்ந்தனரென்று சங்கரபட்டராலியற்றப்பட்ட சகலவேதசிகாமணி என்னும் நூல் சாற்றுகின்றது.

அது அவ்வாறிருக்கப் பிரணவ மஹிமைகளனைத்தையும் சிவபெருமான் ஒருவரிடத்தே சேர்க்கவேண்டுமென்பதற்கு வே

றொரு சிறந்த நியாயத்தையுங் கூறுதும், அதர்வசிரோபநிஷத் பிரணவப்பெயர்களையும், அவற்றின் பொருளாயுள்ள சிவநாமங்களையும் கிரமமாகக்கூறி முடித்தவுடனே “தடெதத்³ருத்³ரசரிதம்-தமேதத்ருத்ரசரிதம்—அந்த ஈதெல்லாம் உருத்திரமூர்த்தியினுடைய பிரபாவம் (மஹிமை எனவும், “தடெதது³பாஸிதவ்யம்-தமேததுபாஸிதவ்யம்-அந்த இதனை உபாசிக்கவேண்டும்” எனவும் உபசங்கரித்தது. உபசங்காரத்தில் ஏனைய தெய்வங்களின் பெயர்களையும், வாசுதேவ நாராயணாதி நாமங்களையுங் கூறாதகாரணம் அத்தெய்வங்களுக்குத் தியேயத்வம் வேதாந்தங்களில் யாண்டும் படிக்கப்படா திருப்பதன்றே, பிரணவபீடத்திருப்பவரும், பிரணவத்திருமேனியுடையவரும், பிரணவப்பொருளாயுள்ளவருமான சிவபெருமானொருவருக்கே தியேயத்துவஞ் சொந்தமாதலால் உருத்திரமஹிமையென்று பிரமவித்தை முடிந்தது. மும்மூர்த்திகளுக்கும் மேலான சமாநாதிக ரஹிதர் உருத்திரமூர்த்தியேயென்று முன்னரே விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றது இவற்றால் “இனி எதனால் ஓங்காரனெனப்படுகின்றான்” என்று தொடங்கியது முதல் “இதனால் மஹாதேவன் எனப்படுகின்றான்” என்பதீறாக நிரூபிக்கப்பட்ட சர்வ லட்சணங்களும் மஹா ருத்திரராகிய ஸ்ரீபரமேசுவரரையே பற்றியுள்ளனவெனவும், அவரது காளகண்டம், திரிநேத்திரம், சதுர்புஜம், மான், மழு, மங்கைபாகம் முதலிய வேதோக்தமான இலக்கணம்பொருந்திய சிவசொரூபத்தையே அவித்தையிருளிரிய எல்லாவற்றையும் பரித்தியாகஞ் செய்துகொண்ட சந்நியாசிகளுங்கூட உபாசிக்க வேண்டுமெனவும் சுருதி சகல ஐயங்களுமற நிச்சயப்படுத்திற்று.

மா.—தியேயப்பொருளாகிய துரீயருத்திரமூர்த்தியின் உபாசனையால் கிடைக்கத்தக்கபேறு மோட்சமாயின் அம்மோட்சத்தின் சொரூபம் எத்தன்மைத்து? ஐயனே! அநுக்கிரகஞ்செய்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்தான்.

ஆ.—ஆம் அப்படியே செய்வோமென்று களிப்புற்றவராய்க் கூறுவாராயினர்.

அதர்வணவேத அதர்வசிரோபநிஷத்.

[illegible]-ருத்³ர ஏகத்வமாஹு:।

(இ-ள்.) “உருத்திரர் ஒருவரேயாமென்பர்” என்று பிரகாசப்படுத்தியது, ஈண்டும் உருத்திரநாமமே கேட்கப்படுகின்றது.

திகளிலே உருத்திரர் ஒருவரிடத்தே தான் ஏகத்வமுளதென்பது சுருதியின் இருதயமாயிற்று. அவர் விசுவகாரணராயும், விசுவசொரூபராயும், விசுவாந்தர்யாமியாயும், விசுவாதீதராயும், விசுவசேவியராயும், பரமசாந்தராயும், பரமசாந்தியைக் கொடுப்பவராயும் இருத்தலால் அவரை முக்தி சொரூபரென்று பெரியோர் அழைத்தனர் அவரோடு ஐக்கியமடைதலே பரமுக்தியாம். ஐக்கியமாவது இரண்டு தனிமுதல்கள் வெவ்வேறாகவிருந்து பின்பு ஒன்று கூடியதல்ல. அநாதியே சிவத்தோடு அனன்னியமாய் அத்துவிதப்பட்டிருந்தும் மலத்திற்கட்டுண்டிருந்த ஆத்மா கட்டுவிட்டுச் சிவத்துவமடைந்து வானோடடங்கும் வளிபோல அருள் நிறைவிலழுந்தி ஒன்றிரண்டென்னாமற் சும்மாவிருக்கும் அறிவுமயமான சுத்தாத்வைத சித்தியென்னும் இன்பாதீத பரிபூரண நிலையாம். அதனாற்றான் "ஆணவத்தோடத்துவிதமானபடி மெய்ஞ்ஞானத் தாணுவினோடத்துவிதஞ் சாருநாளெந்நாளோ" என்று தாயுமானவர் குறிப்பித்தருளினர். அந்நிலையில் ஆனந்தமன்றி வேறொன்றும் அநுபவிக்கப்படுவதன்று. அவ்வானந்தமே பரமானந்த சிவமாம்.

ஸாமவேதசாந்தோக்யோபநிஷத்.

𑌯𑌤𑍍𑌰 𑌨𑌾𑌨𑍍𑌯𑌤𑍍𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌨𑌾𑌨𑍍𑌯𑌚𑍍𑌛𑍃𑌣𑍋𑌤𑌿 𑌨𑌾𑌨𑍍𑌯𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌨𑌾𑌤𑌿 𑌸 𑌭𑍂𑌮𑌾।

யத்ரநாந்யத்பச்யதி நாந்யச்ச்ருணோதி நாந்யத்விஜாநாதிஸபூமா

(இ-ள்.) "எங்குவேறொன்றுங் காண்கிலனாய், வேறொன்றுங் கேட்கிலனாய், வேறொன்றும் அறிகிலனாய் ஆகின்றானோ அது பூமா எனப்படும்" என்றும்,

ஸைஷெவெல்லாவழ-பூமைவஸுகம்।

(இ-ள்.) "பூமாவே இன்பம்" என்றும் வியந்தோதிற்று. சுந்தரமூர்த்தி சுவாமிகளும், "இறைகளோ டிசைந்தவின்பம் இன்பத்தோடிசைந்தவாழ்வு' என்று வற்புறுத்தியருளினர். இப்பெருவாழ்வாகிய பேரின்பம் சுவர்க்கலோக, பிரமலோக, வைகுந்த கைலாச வாழ்க்கைகளைப்போன்றதன்று. மூலப்பிரகிருதி, அபரப்பிரகிருதி, பரப்பிரகிருதி ஆகிய இவற்றினுட்பட்ட எவ்விதமான உலகவாழ்வுமன்று. எல்லா உலகங்களையும், எல்லாத் தத்துவங்களையும், எல்லா மாயைகளையுங் கடந்த அதீதமாயுள்ள

பரமானந்த சிவத்தோடு இரண்டறக்கலந்து நிற்றலாகிய சிவாநுபவ பரிபூர்ண நிலையாம். சிவம் சர்வானந்தமயமாதலால் அச்சிவத்தை யடைந்தவர்களுக்கே பரமானந்தம் பிராப்தமாகும். மாயா புவனங்களில் எந்தப்பகுதியை யடைந்தாலும் ஒருகாலத்தில் உபாதிவந்தடையத் தடையில்லையாதலின் மாயையின் ஓர் பகுதியை மோட்ச நிலையாகக்கொள்ளும் எந்தச்சமயமும் உண்மையான மோட்ச சாதன மார்க்கங்களாகா. அவற்றில் சென்றடையும் இன்பமெல்லாம் சிவத்திலெழுந்த பரமானந்தலேசமாகும். அதாவது பிரமானந்தத்தின் நுண்ணிய பரமாணுக்களென்றறிவாயாக.

இனி சிவ பரம்பொருள் ஒருவரிடத்தேதான் ஏகத்துவமுளதென்பதைப்பற்றியுஞ் சிறிது கூறுவாம்.

கிருஷ்ணயஜுர்வேத கடோபநிஷத்.

𑌏𑌕𑌸𑍍𑌤𑌥𑌾 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌮𑌾|

ஏகஸ்ததாஸர்வபூதாந்தராத்மா।

(இ-ள்.) "சர்வ சித் ஜடப்பிரபஞ்சங்களுக்கும் அந்தர்யாமியாகிய ஏகர்." எனவும்

அதர்வணவேத முண்டகோபநிஷத்

𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂𑌪𑌤𑌿𑌰𑍇𑌕𑌃-தேவாநாம்பதிரேக:|

(இ-ள்.) "தேவர்களுக்குப் பதியாயுள்ள ஏகர்" எனவும்

அதர்வசிரஸ், சுவேதாசுவதரம், ப்ரஹ்மம், சரபம் முதலியன.

𑌯 𑌏𑌕𑌸𑍍𑌸 𑌏𑌕𑍋 𑌰𑍁𑌦𑍍𑌰𑌃-யஏகஸ்ஸஏகோருத்ர:|

(இ-ள்.) "எவர் ஏகர் அவர் ஏகராகிய உருத்திரர்." எனவும்,

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌕𑌂𑌤𑍍𑌵𑌮𑍍-ப்ரஹ்மைகம்த்வம்|

(இ-ள்.) "ஏகமாகிய பிரமம் நீ." எனவும்,

𑌏𑌕𑍋 𑌵𑌶𑍀 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌮𑌾|

ஏகோவசீஸர்வபூதாந்தராத்மா।

(இ-ள்.) "சர்வசேதனா சேதனப் பிரபஞ்சங்களுக்கும் அந்தராத்மாவாயுள்ள ஒருவரே ஏகர்." எனவும்,

ஏக ஏவ ருத்ரோ நத்விதீயாயதஸ்து:-(79-ம் பக்கம் பார்க்க.)

வ்ருக்ஷ இவஸ்தப்தோ திவி திஷ்டத் ஏக:-(49-ம் பக்கம் பார்க்க.)

ஏகோதேவஸ் ஸர்வபூதேஷுகூட:. (50-ம் பக்கம் பார்க்க.)

ஏகமேவாத்விதீயம்-(81-82-ம் பக்கம் பார்க்க.)

தமாதி மத்யாந்தவிஹீநமேகம் (125-ம் பக்கம் பார்க்க.)

விச்வஸ்யைகம் பரிவேஷ்டிதாரம். (126-பக்கம் பார்க்க.)

யோந்தகாலே ஸர்வலோகாந் ஸம்ஹாரஸ்யேக:-(80-ம் பக்கம் பார்க்க.)

நஸந்நசாஸச்சிவஏவகேவல: (10-ம் பக்கம் பார்க்க.)

ஹர: க்ஷராத்மாநா வீசதேதேவஏக: (178-ம் பக்கம் பார்க்க).

என வருமாறு காண்க. இன்னும் அநேக சுருதிப் பிரமாணங்களுள. விரிவஞ்சிவிடுத்தனம். சர்வ சொரூபராய் விளங்கும் சிவபெருமான் ஒருவரே ஒப்புயர்வற்ற பரம்பொருளாதலின் எல்லா வேதங்களும் ஒருங்குசேர்ந்து அவரையே ஏகரென்று நிரூபித்தன. பிரமாதி தேவர்களைச் சில சுருதி வசனங்கள் சர்வ சொரூபர்களென விதித்து அவர்களின் வழிபாடே வீடுபேறெய்துவதற்கு ஹேதுவென வியந்து கூறினும், அவ்வசனங்களெல்லாம் பிரபல பிரமாணங்களுடன் முரணுவண்ணம் ஒரு பரம்பொருளினிடத்துச் சேர்த்தலே வேதசம்மதமாகும். எவ்வாறெனின், பிரமன், விஷ்ணு, சிவன் முதலிய கடவுளர் பிராணி அசேதனங்களைப்போல அப்பொருளின் விபூதிகளென அடியிற் காட்டலுறும் வேதவாக்கியங்கள் தெளிவாய்ப் போதித்தலே போதுமான நிதரிசனமாம் (விபூதி-திருமேனி, வைபவம்.)

கிருஷ்ணயஜுர்வேத கைவல்யோபநிஷத்.

𑌸 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌸 𑌶𑌿𑌵𑌸𑍍 𑌸𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍍 𑌸𑍋𑌕𑍍𑌷𑌰𑌃 𑌪𑌰𑌮𑌃 𑌸𑍍𑌵𑌰𑌾𑌟𑍍 ।
𑌸 𑌏𑌵 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌸𑍍 𑌸 𑌪𑍍𑌰𑌾𑌣𑌸𑍍 𑌸 𑌕𑌾𑌲𑍋𑌗𑍍𑌨𑌿𑌸𑍍 𑌸 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌾𑌃 ॥
𑌸 𑌏𑌵 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌯𑌦𑍍𑌭𑍂𑌤𑌂 𑌯𑌚𑍍𑌚 𑌭𑌵𑍍𑌯𑌂 𑌸𑌨𑌾𑌤𑌨𑌮𑍍 ।
𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌤𑌂 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌮𑌤𑍍𑌯𑍇𑌤𑌿 𑌨𑌾𑌨𑍍𑌯𑌃 𑌪𑌨𑍍𑌥𑌾 𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌯𑍇 ॥

ஸப்ரஹ்மா ஸசிவஸ் ஸேந்திரஸ் ஸோக்ஷர: பரமஸ்வராட்।
ஸஏவவிஷ்ணுஸ் ஸப்ராணஸ் ஸகாலோக்நிஸ்ஸசந்த்ரமா:॥
ஸஏவஸர்வம்யத்பூதம் யச்சபவ்யம் ஸநாதநம்।
ஜ்ஞாத்வாதம்ம்ருத்யுமத்யேதி நாந்ய: பந்தாவிமுக்தயே॥

(இ-ள்.) "(சிவபரம்பொருளாகிய) அவரே பிரமன், அவரே சிவன், அவரே இந்திரன், அவரே அட்சரன், அவரே பரமன்,

அவரே ஸ்வராட்டு (சொப்பிரகாசன்), அவரே விஷ்ணு, அவரே பிராணன், அவரே காலன் (யமன்), அவரே அக்னி, அவரே சந்திரன், அவரே எல்லாம், எது சென்றது, எது வருவது, எது என்றுமுள்ளது. அவரையறிந்து மிருத்துவைத் தாண்டுவான். வேறுவழி மோட்சத்துக்கில்லை'' எனவும்,

ஸாமவேத மைத்ராயண்யுபநிஷத்.

𑌤𑍍𑌵𑌂𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌤𑍍𑌵𑌂𑌚𑌵𑍈𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌤𑍍𑌵𑌂𑌰𑍁𑌦𑍍𑌰𑌸𑍍𑌤𑍍𑌵𑌂𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌃।
𑌤𑍍𑌵𑌮𑌗𑍍𑌨𑌿𑌰𑍍𑌵𑌰𑍁𑌣𑍋𑌵𑌾𑌯𑍁𑌃 𑌤𑍍𑌵𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍍𑌤𑍍𑌵𑌂𑌨𑌿𑌶𑌾𑌕𑌰𑌃॥

த்வம்ப்ரஹ்மாத்வஞ்சவை விஷ்ணுஃ த்வம்ருத்ரஸ் த்வம்ப்ரஜாபதிஃ।
த்வமக்நிர்வருணோவாயுஃ த்வமிந்த்ரஸ்த்வம்நிசாகரஃ॥

(இ-ள்.) "நீ பிரமன், நீ விஷ்ணு, நீ ருத்திரன். நீ பிரஜாபதி; நீ அக்கினி, வருணன், வாயு, நீ இந்திரன், நீ சந்திரன்'' எனவும்,

கிருஷ்ண யஜுர்வேத தைத்திரீயாருணசாகை நாராயணம்.

𑌤𑍍𑌵𑌂𑌯𑌜𑍍𑌞𑌸𑍍𑌤𑍍𑌵𑌂𑌵𑌷𑌟𑍍𑌕𑌾𑌰𑌸𑍍𑌤𑍍𑌵𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍍𑌤𑍍𑌵𑌁 𑌰𑍁𑌦𑍍𑌰𑌸𑍍𑌤𑍍𑌵𑌂𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌸𑍍𑌤𑍍𑌵𑌂𑌬𑍍𑌰𑌹𑍍𑌮
𑌤𑍍𑌵𑌂𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌃। 𑌤𑍍𑌵𑌂𑌤𑌦𑌾𑌪 𑌆𑌪𑍋𑌜𑍍𑌯𑍋𑌤𑍀 𑌰𑌸𑍋𑌽𑌮𑍃𑌤𑌂
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌭𑍂𑌰𑍍𑌭𑍁𑌵𑌸𑍍𑌸𑍁𑌵𑌰𑍋𑌮𑍍॥ 𑌸𑌵𑍈𑌸𑌰𑍍𑌵𑌮𑌿𑌦𑌂𑌜𑌗𑌤𑍍𑌸𑌂
𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌂॥

த்வம்யஜ்ஞஸ்த்வம் வஷட்காரஸ் த்வமிந்த்ரஸ் த்வம் ருத்ரஸ் த்வம் விஷ்ணுஸ் த்வம் ப்ரஹ்ம த்வம் ப்ரஜாபதிஃ। த்வம்ததாப ஆபோஜ்யோதீ ரஸோம்ருதம் ப்ரஹ்ம பூர்புவஸ் ஸுவரோம்॥ ஸவைஸர்வமிதம் ஜகத்ஸம் தத்ஸர்வ॥

(இ-ள்.) "நீயக்ஞம், நீவஷட்காரன், நீ இந்திரன், நீ உருத்திரன், நீ விஷ்ணு, நீ பிரமன், நீ பிரஜாபதி, நீ அது, நீர், நிருட்ஜோதி, ரசம், அமிர்தம், பிரமம், பூலோகம், புவர்லோகம், சுவலோகம்.'' "அவனே இச்சகமெல்லாம்." "பிரணவமே சமெதல்லாம்,'' எனவும,

கிருஷ்ணயஜுர்வேத சுவேதாசுவதரோபநிஷத்

𑌤𑌦𑍇𑌵𑌾𑌗𑍍𑌨𑌿𑌸𑍍𑌤𑌦𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌸𑍍 𑌤𑌦𑍍𑌵𑌾𑌯𑍁𑌸𑍍𑌤𑌦𑍁𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌾𑌃।
𑌤𑌦𑍇𑌵𑌶𑍁𑌕𑍍𑌰𑌂 𑌤𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑌦𑌾𑌪𑌸𑍍𑌸 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌃॥
𑌤𑍍𑌵𑌂𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌤𑍍𑌵𑌂𑌪𑍁𑌮𑌾𑌨𑌸𑌿 𑌤𑍍𑌵𑌂𑌕𑍁𑌮𑌾𑌰 𑌉𑌤𑌵𑌾𑌕𑍁𑌮𑌾𑌰𑍀। [𑌮𑍁𑌖𑌃॥
𑌤𑍍𑌵𑌂𑌜𑍀𑌰𑍍𑌣𑍋𑌦𑌣𑍍𑌡𑍇𑌨𑌵𑌞𑍍𑌚𑌸𑌿𑌤𑍍𑌵𑌂𑌜𑌾𑌤𑍋𑌭𑌵𑌸𑌿𑌵𑌿𑌶𑍍𑌵𑌤𑍋

ததேவாக்நிஸ் ததாதித்ய: தத்வாயுஸ் தது சந்த்ரமா:|
ததேவசுக்ரம் ஸப்ரஹ்ம ததாபஸ் ஸப்ரஜாபதி:||
த்வம்ஸ்த்ரீ த்வம் புமானஸி த்வம் குமார உதவாகுமாரீ|
த்வஞ்ஜீர்ணோ தண்டேந வஞ்சஸி த்வம் ஜாதோ பவஸி விச்வதோமுக:||

(இ-ள்.) "அதுவே அக்கினி, அதுவே ஆதித்தன், அதுவே
வாயு, அதுவே சந்திரன், அதுவே பிரகாசம், அவனே உருத்தி
ரன், அதுவே நீர், அவனே பிரஜாபதி; நீ பெண் (ஆதிசத்தி சொ
ரூபம்); நீ ஆண் (மகாதேவ சொரூபம), நீ குமாரன் (ஷண்முக
சொரூபம்), நீ குமாரி (லளிதாகுமாரி யெனப்படும் பால சொ
ரூபம்). நீ கிழவனாய்த் தடிகொண்டு நடக்கிறாய் (இமயமலையின்
இளங்கொடியாய் அவதரித்த அம்மையின் அருந்தவப் பரீக்ஷைக்
காகத் திருமேனிகொண்டருளினை) நீ எங்கும் முகமுள்ளவ
னாய்த் தோன்றினை" எனவருமாறு காண்க.

அதர்வணவேத அதர்வசிரோபநிஷத்தும்.

"[illegible]வாது-ஓம் யோவை ருத்ரஸ்ஸப
கவான். எந்தக் ஸ்ரீ யருத்திரராகிய அந்தப்பகவான்" என்று
ஆரம்பித்து, எவன் உமாதேவி, எவன் விநாயகன், எவன் ஸ்கந்
தன் என்பதாதி முப்பத்துமூன்று தியான மந்திரங்களையுங் கூறி
இறுதியில் முப்பத்து நான்காவது மந்திரமாகிய "[illegible]-
பச்சஸத்யம் - எது சத்தியம்" என்று முடித்து, "[illegible]
[illegible] நமொநம:| [illegible]-
பூர்புவஸ்ஸுவஸ்தஸ்மைவை நமோநம: சீர்ஷம்ஜகபதோம் விச்வரூ
போவஸி-வியாஹ்ருதிகளின் பொருளாயுள்ளவர். அவருக்கேநமஸ்
காரம். தலைமையாயுள்ளவர். பிறவியை யொழிப்பவர். பிரணவ
ரூபர். விசுவரூபர். ஆகிறாய்." என்று முதலிலும், முடிவிலும் பிர
ணவத்தை அமைத்து பிரணவப்பொருளும் பிரணவ சொரூப
ரும் அவரேயென அங்கை நெல்லிக்கனிபோல் காட்டி அவர் சர்
வசொரூபரென அர்த்த நிர்ணயஞ்செய்து உபசாந்தமடைந்தது.
அப்படியே தமிழ் வேதமும், "ஓசையொலியெலாமானாய் நீயே"
என்றற் றொடக்கத்தனவான திருவையாற்றுத் திருத்தாண்டகத்
தில் சிவபெருமான் எல்லாமாயிருப்பவரென்று விளக்கியுள்ளது.
நக்கீரதேவநாயனர் அருளிச்செய்த பெருந்தேவபாணியிலும், "வே
தமுநீயே, வேள்வியுநீயே, நீதியுநீயே, நிமலனீயே, புண்ணிய
னீயே, புனிதனீயே, பண்ணியனீயே, பழம்பொருணீயே, ஊழியு

நீயே. யுலகமுநீயே, வாழியுநீயே, வரதனுநீயே, தேவருநீயே, தீர்த்தமுநீயே, மூவருநீயே முன்னெறிநீயே, மால்வரைநீயே, மறிகடல்நீயே, யின்பமுநீயே, துன்பமுநீயே, தாயுநீயே, தந்தையுநீயே, விண்முதற்பூதமைந்தவை நீயே, பத்தியுநீயே, முத்தியுநீயே, சொலற்கருந்தன்மைத் தொல்லோய் நீயே'' என்று இவ்வாறே கூறப்பட்டிருக்கின்றது. இத்தகைய பிரபலப்பிரமாணங்கள் இன்னும் அநேகமிருக்கின்றன. இவையாவும் பிராணன், ஆகாசம், சூரியன், சந்திரன் உருத்திரன் முதலான மூர்த்திகளும் சிவபிரான் வைபவங்களென்று விரித்தமையால் எவரெவருக்கு எத்தேவரிடத்து அபராவன்புமலிகின்றதோ. அத்தேவர் திருமேனிகளை பரமேசுவரன் திருமேனியென்று துணிந்து வழிபடுவோர்க்கே மோட்சம் பிராப்தமாகுமேயன்றி அவர்களைத் தனிமுதல்களாகக் கருதி வழிபடுவோர் எஞ்ஞான்றும் இடர்ப்படுவர். அன்றியும், வைதிகசைவ செந்நெறி கடந்து வேதபாஹ்யமாயுள்ள பாசுபத பாஞ்சராத்திர சாக்தாதி தந்திர வழிகளிற் சென்று மயங்கி பிரம்ம விஷ்ணு ருத்திராதிகளை அச்சிவ பரம்பொருளுக்குமேலாந்தனிமுதலெனவும், அவருக்குங் காரணமாம் பரம்பொருளெனவும் வழிபட்டுய்ய எண்ணுகின்றவர்களுக்கு எஞ்ஞான்றும் அந்தகாரமேபிராப்தமாவதன்றித் தொல்லையாம் பிறவிவேலைத் தொலைந்திடாது, இருளும் நீங்காதென்றுணர்வாயாக. அது எதுபோலுமெனின், அரசன் பரிவாரங்களான மந்திரி முதலியோரை அவன் ஆணையேற்ற பரிவாரங்களென்றறிந்து அவர்களுக்குரியபடி நடப்பவர்களுக்கே இகலோக சுகமன்றி அவர்களே அரசரென நடப்போர்க்கு யாண்டும் சுகமில்லையன்றோ! அல்லாமலும், அவ்வளவில்நில்லாது அரசனை அவமதித்து அவனினும்மேலானவன்மந்திரியேயெனக்கொண்டவர்கள் படுங்கடுந்துயரமும் இதற்கு நிதரிசனமாம். “அரையரெனக் காண்பரமைச்சரை யமைச்சர, யரையனைக் கண்டாற் றுயரமாம்'' எனவும், “இட்டனெனக் காண்பனவ னேவலரை யேவலனென், றிட்டனையார் காண்பாரிபம்பு'' எனவும், “சிவனெனவே தேவரையுஞ் சிந்திசிவனை, அவரெனக் கண்டார் நிரயத்தார்'' எனவும், “மாநில் வேந்தனை தாசனுமதிக்கில் வாழ்வுண்டோ'' எனவும் கூறப்போந்தபாக்கள் இக்கருத்தையே பின்பற்றினவாமென்றுணர்க.

ஹரன் பரிபூரண பரப்பிரம சொரூபமாயிருத்தலினாலே அவரது ஏகத்துவத்தை உபாசித்து சித்திபெற்றோர் சுத்தாத்வைத சித்தாந்த வைதிக சைவ நன்னிலையில் நின்று திருவருளிற்றிளைப்பவராதலின் அவர்களை மனிதவர்க்கத்தில் சேர்ந்தவரென்று மனத்தினாலும் நினைத்தல் பெரும்பாதகமாகும். அவர்களை அருள் வர்க்கத்தவரென்றே கொள்ளவேண்டும். அவர்களது அருளிச் செயல்களே அருட்பாக்களாகும். ஸ்ரீ தாயுமானசுவாமிகளும், “நிர்த்த நன்னிலை நிற்கப்பெற்றாரருள், வர்க்கமன்றி மனிதரன்றே யையவ, தார்க்குணக்கடல் சோங்கன்ன பாவியேற், கெற்குணங் கண் டென்பெயர் சொல்வதே’ எனவும், “கண்டேனிங் கென்னையு மென்றனையு நீக்காக்கருணையு நின்றன்னையுநான் கண்டேன் கண்டேன், விண்டேனென் றனைப்புறம்பாத்தள்ள வேண்டாம் விண்டனாநின்னருட் களிப்பின்னிப்பாலன்றே” எனவும் அருளிச்செய்தனர். இன்னும்,

அசர்வணவேதமுண்டகோபநிஷத்.

𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍁 𑌭𑌗𑌵𑍋 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌮𑌿𑌦𑌂 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌂 𑌭𑌵𑌤𑌿।

கஸ்மிந்நுபகவோ விஜ்ஞாதே ஸர்வமிதம் விஜ்ஞாதம் பவதி।

(இ-ள்.) “பகவானே! எவனொருவனை யறிந்தால் எல்லா மறிந்தவனாக ஆவாய்” எனவும்,

அதர்வணவேத அதர்வசிரோபநிஷத்.

𑌮𑌾𑌮𑍇𑌵 𑌮𑌾𑌂𑌯𑍋 𑌵𑍇𑌦 𑌸𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌦𑍇𑌵𑌾𑌨𑍍𑌵𑍇𑌦।

மாமேவமாம்யோவேத ஸஸர்வாந் தேவாந்வேத।

(இ-ள்.) “என்னையே யானென எவனறிவான் அவன் எல்லாத் தேவர்களையுமறிவான்” எனவும் எழுந்த காரண வாக்கியங்களிற் குறித்த பிரமலட்சணம் சிவபிரானிடத்தே அமையுமென்றும், அதற்குப் பிரணவ வுபாசனையே சர்வ வேதசாரமான சித்தாந்த சாதனமென்றும், அப்பிரணவத்தின் நான்காவதான அர்த்தமாத்திரை எனப்படும் சர்வ பிரபஞ்ச காரண நாதத்தின் தேவதை சித்தாந்த சைவத்தெய்வமாகிய அம்மூர்த்தியே எனவும் தெளிவாய் நிரூபிக்கப்பட்டது.

இனி ஏகராயும் பிரணவப் பொருளாயும் விளங்கும் பரப்பிரம சிவபிரானார் வேறு நான் வேறு என்று பேதபுத்தி பண்ணாது பஞ்சருத்ரங்களிலொன்றாகிய கைவல்யோபநிஷத் “𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 𑌤𑍍𑌵𑌮𑍇𑌵𑌤𑌤𑍍-தத்வமேவ த்வமேவதத்- அதுநீயே நீயேஅது” என்

றும் ஜாபாலசாகை ‘‘நீயே நானன்றோ பகவ! ஓதேவ! நானே நீயன்றோ பகவ! ஓதேவ! (169-ம் பக்கம் பார்க்க) என்றும், புகன்றபடி அவரே நான் என்று ஏகாக்கிர சித்தத்துடன் தைல தாரையைப்போல் இடையறாது சிந்தனைசெய்து நிஷ்டை கூடுகின்றவர்களுக்கே அத்வைத ஞானமுண்டாகி மோட்சபலன் சித்திக்குமேயன்றி ஏனையோருக்குச் சித்திக்காது. ஓங்காரச் சிந்தனை பகிர்முக புருஷருக்கு ஒருபோதும் வாய்க்காது. அந்தர்முகியாயிருப்பவருக்கே கைகூடும். அவருக்குத்தான் முனி என்னும் பெயரும் வைதிகநூல்களில் கேட்கப்படுகின்றது. முனி என்றால் மனனம் செய்கின்றவர் என்று பொருள். அச்சிந்தனை ஹம்ஸனுடைய ரஹஸியத்தனமாயிருக்கிறது. ஹம்ஸமந்திரம் (ஹம்+ஸ:) என்றும் இரண்டு சொற்களால் ஆக்கப்பட்ட ஒரு தொடர்மொழி. அவற்றுள் ஹம்-என்பது உச்வாசமும், ஸ:-என்பது நிச்வாசமுமாகும். முற்பகுதியாகிய ஹம் என்னுஞ் சொல் பந்தத்தையும், சப்தத்துக்கு ஆதாரமான பூதாகாசத்தையும் பொருளாகக்கொண்டு அஹம் என்ற மாற்றத்தால் ஆத்மாவைக் குறிக்கும். பிற்பகுதியாகிய ஸ: என்னுஞ்சொல் மோக்ஷரூபமாயும் சரஸ்வதி பீஜமாயும் நின்று நாதத்தைக் குறிப்பதாய்ச் சிவத்தை விளக்கும். இம்மந்திரத்தை ஒவ்வொரு ஆத்மாவும் ஜனனமுதல் மரணபரியந்தம் ஓயாது ஜபித்துக்கொண்டிருப்பினும் அதை அவன் அறிந்தானில்லை. அது தியானத்துடன் கூடாமையால் பயனற்றதாய் விடுகின்றது. அது தியானத்தோடு கூடினதாயின் மேலான பரசிவ நிஷ்டையாய்விடும். அம்மந்திரத்திற்கே அவ்வியக்த காயத்திரி எனவும், அஜபாமந்திரம் எனவும் பெயருமுண்டு. அவ்வியக்தம்-சூக்ஷ்மம். அதாவது காயத்திரியின் சந்தமாகிய ஆறெழுத்துக்கள் ஸ்தூலத்திலமையாது ஸூக்ஷ்மத்தில் அமைந்திருப்பது என்றுபொருள். அவ்வாறெழுத்துக்களாவன:-ஹ்+அ+ம்+ஸ்+அ+:என்பனவாம். அதில் இரண்டு உயிரும், மூன்றுமெய்யும், உயிரும்மெய்யும் ஆகாத ஓர் அயோகவாஹமும் அடங்கியிருத்தலின் அதன் சந்தம் காயத்திரி எனக் குறிக்கப்பட்டது. மெய்யெழுத்துக்கள் மூன்றும் மூவித மலங்களையும், உயிரெழுத்துக்கள் இரண்டும், ஜீவாத்மா பரமாத்மாக்களையும், ஒரு அயோகவாஹ எழுத்து ஆணவமலத்தினையும் குறிப்பிக்கின்றனவென்பது மூதறிஞரது இரகசியாநுபவம்.

இனி அஜபையாவது-ஜபிக்கக்கூடாதது என்று பொருள். அதாவது ஓரெழுத்தை உச்சரித்தற்குரிய இதழ்குவிவு, நாவசைவு முதலிய எவ்விதத்துணைக்காரணங்களையும் விரும்பாமல் ஆத்மாவினிடத்து யாதொரு முயற்சியுமின்றி உயிர்த்தலுடன் பொருந்தியதாய் ஸ்வரூபமாத்திரத்தில் அறிவு நிலைபெற வேண்டி அவாவப்படுவதாய் சரீரத்தில் இயல்பாய் அமைந்திருப்பது. முன்னோர்கள் சேமித்துவைத்த பெருநிதி அடுக்களையின் அடிப்புறத்தேயிருப்பினும் அஞ்சன சித்தியில்லாதார்க்கு அது எப்படி அகப்படாதோ அப்படியே ஆத்ம சொரூப ஹம்ஸ அஜபாகாயத்திரி தேகத்தில் இயற்கையாய்ப் பொருந்தியிருப்பினும் சத்குரு கடாட்சமும் சிவராஜயோக சித்தியும் இல்லாதார்க்கு அது எட்டுணையும் புலப்படாதென்பது திண்ணம். அம்மந்திரத்தில் அஹம் (நான்) என்னும் முனைப்பு முற்பட்டு நிற்றலால் அதை முன்பின்மாற்றி உச்சரிக்கும்படி வைதிகசைவம் பகர்கின்றது. அப்படி உச்சரிக்கிறபொழுது ''ஸோஹம்'' என ஆகிறது. அதிலும் ஆறு மாத்திரைகளிருக்கின்றன. அம்மந்திரத்திலுள்ள இரண்டு மெய்களை நீக்கிவிட்டால் எஞ்சுவது ஒப்பர பிரணவ மந்திரமே. அப்பிரணவம் முமுக்ஷுக்களுடைய பூஜ்யவாசகமும் விசேஷ யந்திரமுமாயிருக்கின்றது. ஆகையினாலே அம்மந்திரத்தின் இரகசியோபாசனத்தை எவனொருவன் சத்குரு கடாட்சத்தால் அறிந்து அப்பியசித்துச் சித்திபெறுவானோ அவனே பரமயோகியாவன். அவனே பிரமநிஷ்டர்களுள் முக்கியமானவன். அவனுக்கே ஈசுவர சம்பந்தமான ஐஸ்வரியத்தன்மையுண்டு. அவன் "ஸர்வம் ஸமாப்நோஷி ததோஸி ஸர்வ:-ஸர்வம் ஸமாப்நோஷிததோஸிஸர்வ: - எல்லாவற்றையுமடைவாய் எல்லாமுமாவாய்" என்று ஸ்ரீ கண்ணபிரான் கீதையில் உபதேசித்தருளியபடி பிரபஞ்ச பேதமெல்லாம் இன்பாகாரமாகத் தோன்றச் சர்வசொரூபனைத் தானே தானாய் அறிவாய் விளங்குவன். ஸ்ரீமத். தாயுமான சுவாமிகளும், சிதம்பர ரகசியத்தில் "ஆகாரபுவன மின்பாகாரமாக அங்ஙனே யொருமொழியா லகண்டாகார, யோகாநுபூதி பெற்றவன்பர்" என்றருளிச்செய்தனர். இன்பாகாரமாவது சிவாகாரம். இப்பாசுரத்தில் பிரபஞ்சம் உருவமாகவுள்ளதேயன்றி தோற்றமாத்திரமன்றென வற்புறுத்தப்பட்டமை ஏகாத்மவாதக் கொள்கைக்கு முற்றும் விரோதமாயிருத்தலையுமோர்க.

அல்லாமலும், ஸ்ரீபஞ்சாக்ஷரத்திலுள்ள சிவய என்னும் மூன்றெழுத்துக்களுள் சிவ என்னும் இரண்டக்ஷரம் அருளோடுகூடிய சிவபிரானையும், ய என்னும் ஓரக்ஷரம் ஆத்மாவையும் உணர்த்தாநின்றன. யஜுர்வேத தாரஸாரோபநிஷத் 'வகாரோவா–ரூமெஷாஹவதி-யகாரோபுருஷோபவேத்' என்று கூறுமாற்றால் புருஷன் ஜீவனென அறியக்கிடக்கின்றனன். அச்சிவன் அஹம் என்ற சொல்லாற் குறிக்கப்பட்டிருத்தலாற் சிவம் நான் என்னும் பொருளைத்தரும் சிவோஹம் பாவனையும் ஏற்படுகிறதென்றே ஸ: + அஹம் என்னும் இரண்டு சொற்களும் வடநூல் இலக்கணவிதிப்படி புணரும்போது ஸோஹம் என்று ஆனாற்போல, சிவ: + அஹம் என்னும் இரண்டு சொற்களும் சந்தியாம்போது சிவோஹம் என ஆயிற்று. இவ்விருதிற மந்திரங்களும் ஓங்காரத்தில் ஒன்றுபட்டுக் கிடத்தலானும், பொருட்பேதஞ் சிறிதுமின்மையானும் ஒரே மந்திரமாகக் கருதப்பட்டுள்ளன. அப்படியானால் வைதிக சைவர்கள் ஸோஹம், சிவோஹம் என்று கூறுவதுபோல் ஏகாத்மவாதிகளும் ஸோஹம், சிவோஹம் என்று உச்சரிக்கின்றார்களே அவ்விருதிறத்தாருக்கும் இவ்வாக்கியங்களில் கருத்தும் பயனும் ஒன்றேவெனின், அல்ல. ஏகாத்மவாதிகள் கடாகாசத்தையும், மகாகாசத்தையும் ஒன்றென்று கூறுவதுபோல் கூடஸ்த பிரம ஐக்கியங்கொள்வர். எம்மவர்களோ ஆத்மாவைக் கருடனாகப் பாவித்தல். (அதாவது ஆத்மாவைக் கருடனுக்கு அதிதெய்வமாம் மந்திரரூபமாகப் பாவித்தல்) போலச் சிவத்தைத் தான் எனப் பாவித்து அச்சிவ குணங்கள் தம்மாட்டு விளங்கப்பெற்றுச் சிவமேயாய் நின்றுவிடுவர். அப்படிநிற்கும் அற்புத நிலையினையே தாயுமானவர், "இரப்பானங் கொருவனவன் வேண்டுவகேட் டருள்செயென வேச்ற்நேதான், புரப்பான்ற னருளுடி யிருப்பதுபோ லெங்குநிறை பொருளே கேளாய், மரப்பான்மை நெஞ்சினன்யான் வேண்டுவகேட் டிரங்கெனவே மௌனத்தோடங், தரப்பான்மை யருணிறைவி லிருப்பதுவோ பராபரமே சகசநிட்டை" என்று உபமானவாயிலாக விளக்கியருளினர். இதனால் ஏகாத்ம வாதிகளுக்கும் வைதிக சைவர்களுக்கும் இம்மஹா வாக்கியங்களில்கருத்தும் பயனும் வேறுமென்றறிக. இன்னும் இதனை விரிக்கின்,

ஏகாத்மவாதிகள் ஸோஹம், சிவோஹம் என்று கூறினும் அஹம் பிரமம் என்பதே அவர்களது மதக்கொள்கையாகும். அஹம் பிரமம் என்பதற்கும் சிவோஹம் என்பதற்கும் உள்ள வித்தியாசம் மலையிலக்காகும். அஹம் பிரமம் என்னும் வாக்கியத்தில் (அஹம்) நான் என்னும் ஆத்மா முற்பட்டு நிற்கின்றது. பிரமம் பிற்பட்டு நிற்கின்றது. அவ்வாறிருத்தலினாலே நான் என்பது முனைத்துத்தோன்றி எல்லாவாற்றலும், எல்லாவறிவும், எல்லாவநுக்கிரகமும் உடைய முதல்வன் முன்னே தன்னையொரு பொருளாகப்பெரிதும் எண்ணியகுற்றம் நேர்ந்து, அதனால் அறியாமையே மேலிட்டுப் பேரின்பப் பெருவாழ்வையடைய வொட்டாது தடைசெய்து நிற்கின்றது. ஆகையினாலே அவ்வாக்கியம் பசுஞானிகள் கூற்றேயாய் முடிந்தது. சிவஞான சித்தியாரும், "காதலினால் நான் பிரமமென்னுஞானங் கருது பசுஞானம்" என வற்புறுத்தியது. சிவோஹம் என்னும் வாக்கியத்தில் சிவம் என்னும் பிரமம் முற்பட்டு நிற்கின்றது. (அஹம்) நான் என்னும் ஆத்மா பிற்பட்டு நிற்கின்றது. அவ்வாறிருத்தலால் ஆத்மா ஆணவமுனைப்பு முற்றுங் கைவிட்டுச் சிவ பரிபூரணம் தன்மாட்டு மேலிடப்பெற்றபடியினாலே அவ்வருணிறைவில் நிறைந்து சிவமேயாய் நிற்கின்றது. அதனால் அவ்வாக்கியம் ஜீவன் முக்த சிவ வாக்கியமாய் முடிந்தது. "பொருளே நின்பூரண மேலிட்டகாலம் போக்குவரவுண்டோதற் போதமுண்டோ, இருடானுண்டோ வல்லால் வெளிதானுண்டோ வின்பமுண்டோ துன்பமுண்டோ யாமங்குண்டோ" என்னுந் தாயுமானவர் திருவாக்கையுப் கண்டு கருதுக. இந்நியாயங்களால் அஹம் பிரமம் பெத்த நிலையும், சிவோஹம் முத்தி நிலையுமாய் விளக்கமுற்றதென்றுணர்க. இவ்விரகசியத்தை யுணராதார் நான் பிரமம் என்றாலும் பிரமம் நான் என்றாலும் இரண்டும் ஒன்றுதானே என்று சாதிப்பர். அவர்கள் கூற்று வெறுங் கூற்றாம். மெய்கண்டசிவம் "நானவனென்றெண்ணினர்க்கு நாடுமுளமுண்டாதல் தானெனவொன்றின்றியே தானதுவாய்" எனவும், திருவெண்காட்டடிகள் "மாயப்படலங் கீறித்தூய ஞானநாட்டம் பெற்றனன் பெற்றபின், நின்பெருந் தன்மையுங் கண்டேன் காண்டலும் என்னையுங் கண்டேன் பிறரையுங் கண்டேன், நின்னிலையனைத்தினுங் கண்டேன் என்னை, நின்னைக் காணுமாந்தர் தன்னையுங் காணாத்தன்மையோ

ரே" எனவும், ஸ்ரீ தாயுமானசுவாமிகள் "அருளாலெவையும் பாரென்றான்—அத்தை, அறியாதேசுட்டி யென்னறிவாலே பார்த்தேன், இருளான பொருள்கண்டதல்லால்-கண்ட, வென்னையுங் கண்டிலேனென்னேடிதோழி" எனவுங்கூறி உண்மையை நிறுவினார்கள். பிங்கலநிகண்டும், "ஒன்றெனப்படுவது வீடுபெறலே" என்று சாற்றியது. இத்தன்மைத்தாகிய துரீயமலரா உருத்திரருடைய ஏகத்துவமென்னும் பரம சாம்ராஜ்ஜியமான மோட்ச நிலையையே அருள்நெறி நின்றறிந்தபடி நற்குணமிகுந்த மாணாக்கனாகிய உனக்குச் சொன்னேம். கடைப்பிடிக்க.

மா - பரம சாசுவத சாந்திரூபமான பரமுத்தியையளிப்பது சர்வவேத சாரமான பிரணவ வித்தையாயிருக்க அவ்வித்தையை வைதிக பாசுபத பிரணவாபின்ன பிரமவித்தையென்று கூறுவது என்னை? பகவானே! திருவுளம்பற்றி யருளவேண்டும்.

ஆ - அத்வைத ஞானத்தை யடைவதற்குப் பல சாதனங்கள் வேதங்களிலே கூறப்பட்டிருப்பினும் அவனேதான் என இடையறாத நிஷ்டைக்கு ஏதுவாய், பரமாந்தரங்க சாதனமாய், பசுவின் பாசத்தை முற்றுமொழிப்பதாயுள்ளது வைதிக பாசுபத விரதமேயன்றி வேறில்லை அதர்வணவேத அதர்வசிரோபநிஷத் "ருத்ர ஏகத்வமாஹு:" என்றுமோட்சசொரூபத்தைச் சொல்லி முடித்தவுடனே,

𑌰𑍁𑌦𑍍𑌰𑌂 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌂 𑌵𑍈 𑌪𑍁𑌰𑌾𑌣𑌮𑌿𑌷𑌮𑍂𑌰𑍍𑌜𑌂 𑌤𑌪𑌸𑌾𑌨𑍍𑌯
𑌚𑍍𑌛𑌤 𑌵𑍍𑌰𑌤𑌮𑍇𑌤𑌤𑍍 𑌪𑌾𑌶𑍁𑌪𑌤𑌮𑍍।

ருத்ரம் சாச்வதம் வை புராண மிஷமூர்ஜம் தபசாநியச்சத வ்ரதமே
தத் பாசுபதம்।

(இ-ள்.) "நித்தியராய், பழையோராய், அன்னரசரூபராய் பலரூபராய் உள்ள உருத்திரமூர்த்தியைத் தபசினாலே (ஞானத்தினாலே) ஒருக்கிப்பற்றுதல் இந்தப் பாசுபத விரதமாம்" என்றோதியது. இதனாலே இப்பிரணவ வித்தை வைதிக பாசுபத பிரணவாபின்ன பிரமவித்தை என்று அழைக்கப்பட்டது. இந்தப் பாசுபத விரதத்துக்கே சிரோவிரதம் எனவும், விரஜாதீக்ஷை எனவும், மந்திரஸம்ஸ்காரதீக்ஷை எனவும் பெயர்கள் வழங்கப்பட்டு வருகின்றன. தண்டகாரண்ணியத்தில் இராமருக்கு அகஸ்திய முனிவர் செய்தது இந்தத் தீக்ஷையே. உபமன்னிய மகா

முனிவர் கிருஷ்ணருக்குச் செய்ததும் இதுவேயாம். பிரமா, விஷ்ணு, மார்க்கண்டேயர், ததீசி, துர்வாசர், கவுதமர், ஜாபாலர், ஆதர்வணர், காத்தியாயனர், அகஸ்தியர், பிருங்கி, உபமன்னியர் முதலாயினோர் இந்தப் பாசுபத விரதத்தை அனுஷ்டித்தே பாசுபதராயினர். ஈசகேநாதி உபநிஷத்துக்களில் சொல்லப்பட்ட பரவித்தையை அநுஷ்டித்தற்கு இதுவே முக்கியாங்கமாகும். இதன் பரம பாவனகரமான பகிர்முகவிரதமே பஸ்மதாரணமென்று சொல்லப்படும். அதர்வண வேதத்தில் "அக்னி" என்பதாதி எழு மந்திரங்கள் பஸ்மதாரணத்தில் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன.

அதர்வசிரசும்.

𑌅𑌗𑍍𑌨𑌿𑌰𑌿𑌤𑌿 𑌭𑌸𑍍𑌮 𑌵𑌾𑌯𑍁𑌰𑌿𑌤𑌿 𑌭𑌸𑍍𑌮 𑌜𑌲𑌮𑌿𑌤𑌿 𑌭𑌸𑍍𑌮 𑌸𑍍𑌥𑌲𑌮𑌿𑌤𑌿 𑌭𑌸𑍍𑌮 𑌵𑍍𑌯𑍋𑌮𑍇𑌤𑌿 𑌭𑌸𑍍𑌮 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌹 𑌵𑌾 𑌇𑌦𑌂 𑌭𑌸𑍍𑌮 𑌮𑌨 𑌏𑌤𑌾𑌨𑌿 𑌚𑌕𑍍𑌷𑍂𑌂𑌷𑌿 𑌭𑌸𑍍𑌮 𑌅𑌗𑍍𑌨𑌿𑌰𑌿𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾 𑌭𑌸𑍍𑌮 𑌗𑍃𑌹𑍀𑌤𑍍𑌵𑌾 𑌵𑌿𑌮𑍃𑌜𑍍𑌯𑌾𑌙𑍍𑌗𑌾𑌨𑌿 𑌸𑌂𑌸𑍍𑌪𑍃𑌶𑍇𑌤𑍍 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌵𑍍𑌰𑌤𑌮𑍇𑌤𑌤𑍍𑌪𑌾𑌶𑍁𑌪𑌤𑌂

அக்நிரிதிபஸ்ம வாயுரிதிபஸ்ம ஜலமிதிபஸ்ம ஸ்தலமிதிபஸ்ம வ்யோமேதிபஸ்ம ஸர்வம்ஹவா இதம்பஸ்ம மந இத்யேதாநி சக்ஷூம்ஷிபஸ்ம அக்நிரித்யாதிநாபஸ்ம க்ருஹீத்வாவிம்ருஜ்யாங்காநி ஸம்ஸ்ப்ருசேத் தஸ்மாத்வ்ரதமேதத்பாசுபதம்।

(இ-ள்.) "அக்கினி என்பது பஸ்மம். வாயு என்பது பஸ்மம். ஜலம் என்பது பஸ்மம். ஸ்தலம் (பிருதிவி) என்பது பஸ்மம். ஆகாசம் என்பது பஸ்மம். எல்லாமன்றோ இந்தப்பஸ்மம். மனம் என்பதாதி நேத்திரமும் பஸ்மம். அக்கினி என்பதாதியால் பஸ்மத்தைக் கிரஹித்து அங்கங்களில் உத்தூளனமாகப் பூசித்தரிக்க. ஆகையினாலே இந்த விரதம் பாசுபதம்." என்றோதியது. இதனாலே பாசுபதம் என்னும் பரவித்தைக்கு பஸ்மோத்தூளனமே பரமாங்கமாகும். அதுவே சர்வ சொரூபமாகவும் இருக்கின்றது. அக்கினி, வாயு, ஜலம், பிருதிவி, ஆகாசம் என்னும் பஞ்சபூதங்களும், அவற்றின் காரியமான பௌதிகங்களும், பூதங்களுக்குக் காரணமான தன்மாத்திரைகளும், கண் முதலிய இந்திரியங்களும், மனமுதலிய அந்தக்கரணங்களும், மற்றுமுள்ள தத்துவங்களும் பஸ்மமாயிருத்தலானும், பஸ்மம் சிவாக்கினி சொரூபமாதலானும் அது சர்வசொரூபமாகத் துதிக்கப்பட்டது. நூற்றெட்டு உபநிஷத்துக்களின் சாரமென ஸ்ரீராம

ரால் புகழ்ந்து பேசப்பட்ட தசோபநிஷத்துக்களில் ஆதியந்தங்களிலுள்ள ஈசாவாஸ்ய ப்ருஹதாரண்யகங்கள் ‘‘𑌭𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌤𑌂 𑌶𑌰𑍀𑌰𑌂-பஸ்மாந்தம் சரீரம்-பஸ்மத்தை அந்தமாகவுடையது சரீரம்-(அதாவது) எல்லாப் பிரபஞ்சங்களும் சர்வகாரணமான பஸ்மாவினிடம் ஒடுக்கம்’’ என நிரூபித்தன. ஆளுடையபிள்ளையாரும் ‘‘அந்தமதாவதுநீறு’ என்றருளிச் செய்தனர். அவ்வாறே முக்கியமான தைத்திரீயமும் ‘𑌭𑍂𑌤𑍍𑌯𑍈 𑌨 𑌪𑍍𑌰𑌮𑌦𑌿𑌤𑌵𑍍𑌯𑌂 - பூத்யை நப்ரமதி தவ்யம்-விபூதியை விடக்கூடாது’’ என்று பஸ்மதாரணத்தை விதித்துள்ளது. வேதங்களில் பதினைந்து உபநிஷத்துக்கள் திருநீற்றின் பெருமையைப் புகழ்கின்றனவென்றால் பஸ்மத்தின் மகிமை அளவிடக்கூடியதோ. பஸ்மதாரணம் சகல கர்மங்களுக்கும் முக்கியாங்கமாகவும், ஞானாங்கமாகவும் கூறப்பட்டிருக்கின்றது.

மஹாபாரதம் சாந்திபர்வம்.

𑌆𑌯𑍁𑌷𑍍𑌕𑌾𑌮𑍋𑌥𑌵𑌾 𑌰𑌾𑌜𑌨𑍍𑌭𑍂𑌤𑌿𑌕𑌾𑌮𑍋𑌥𑌵𑌾 𑌨𑌰𑌃।
𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌵𑍈 𑌧𑌾𑌰𑌯𑍇𑌦𑍍𑌭𑌸𑍍𑌮 𑌮𑍋𑌕𑍍𑌷𑌕𑌾𑌮𑍀 𑌚 𑌵𑍈 𑌦𑍍𑌵𑌿𑌜𑌃॥

ஆயுஷ்காமோதவா ராஜந் பூதிகாமோதவாநர:।
நித்யம் வைதாரயேத் பஸ்ம மோக்ஷகாமீசவைத்விஜ:॥

(இ-ள்.) ‘‘தருமராஜனே! ஆயுள்விருத்தியை விரும்புவோரும், செல்வத்தை யிச்சிப்போரும், மோட்சத்தை யவாவுவோருமான துவிஜர் தினந்தோறும் பஸ்மதாரணஞ் செய்யவேண்டும்.’’ எனவும். (இதனால் பிராமணன் பஸ்மதாரணமின்றி யிருத்தல் கூடாதென்பது பெறப்பட்டது.)

கூர்மபுராணம்.

𑌸𑍍𑌰𑌷𑍍𑌟𑌾 𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌂 𑌚 𑌵𑍈 𑌨𑌾𑌹 𑌤𑍍𑌰𑌿𑌪𑍁𑌣𑍍𑌡𑍍𑌰𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌶𑌸𑍍𑌤𑌤𑌾𑌂।
𑌸𑌸𑌰𑍍𑌜 𑌲𑌲𑌾𑌟𑌂 𑌹𑌿 𑌤𑌿𑌰𑍍𑌯𑌗𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌂 𑌨 𑌵𑌰𑍍𑌤𑍁𑌲𑌂।
𑌤𑌥𑌾𑌪𑌿 𑌮𑌾𑌨𑌵𑌾 𑌮𑍂𑌰𑍍𑌖𑌾 𑌨 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌿 𑌤𑍍𑌰𑌿𑌪𑍁𑌣𑍍𑌡𑍍𑌰𑌕𑌂।

ஸ்ரஷ்டாஸ்ருஷ்டிச்சவேநாஹ த்ரிபுண்ட்ரஸ்யப்ரசஸ்ததாம்।
ஸஸர்ஜ லலாடம்ஹி திர்யங்கோர்த்வம் நவர்த்துலம்।
ததாபிமாநவா மூர்க்கா நகுர்வந்தி த்ரிபுண்ட்ரகம்।

(இ-ள்.) ‘‘பிரமதேவர் சிருஷ்டிசெய்ய ஆரம்பித்தபோது பஸ்மாவின் திரிபுண்டர மஹாத்மியத்தைக் கூறி அதனையணிந்து கொள்ளும்பொருட்டே நெற்றியைக் குறுக்காகப்படைத்தார்.

மேனிக்காகவும், வட்டமாகவும் படைத்தாரல்லர். அப்படிச் செய்திருந்தும் மூர்க்கர் சிலர் நெற்றியிலே திரிபுண்டரம் தரிக்கிறதில்லை'' எனவும்,

மநுஸ்மிருதி.

𑌤𑍍𑌰𑌿𑌪𑍁𑌣𑍍𑌡𑍍𑌰𑌧𑌾𑌰𑌣𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌵𑌨𑍍𑌦𑌨𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍।
𑌤𑍍𑌰𑌿𑌪𑍁𑌣𑍍𑌡𑍍𑌰𑌂 𑌪𑌰𑌮𑌂 𑌪𑍁𑌣𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌶𑌿𑌵𑌾𑌤𑍍𑌮𑌕𑌮𑍍॥

த்ரிபுண்ட்ரதாரணம் க்ருத்வா ஸந்த்யாவந்தந மாசரேத்।
த்ரிபுண்ட்ரம் பரமம்புண்யம் ப்ரஹ்ம விஷ்ணுசிவாத்மகம்॥

(இ-ள்.) "திரிபுண்டரதாரணஞ் செய்துகொண்டே சந்தியாவந்தனஞ்செய்யவேண்டும். திரிபுண்டரம் மிக்கபுண்ணியமாகும். பிரமவிஷ்ணு சிவசொரூபமாயுமுள்ளது" எனவுஞ் சாற்றிமகிழ்ந்தன. ஔவையாரும் "நீறில்லாநெற்றி பாழ்" என்று ஆணையுந்தருளினர். ப்ருஹஜ்ஜாபலமும், "𑌧𑌿𑌗𑍍𑌭𑌸𑍍𑌮𑌰𑌹𑌿𑌤𑌂𑌭𑌾𑌲𑌮𑍍-திக்பஸ்மரஹிதம்பாலம்-பஸ்மமணியாதநெற்றியைச்சுடு" என்றுசாற்றியது. அன்றியும், அக்கினிஹோத்திரம், விரஜாக்கினி ஆகிய இவைகளிலுண்டான பஸ்மத்தையாவது மற்ற வேதாந்தங்களிற் சொன்ன வேறுவிதமான பஸ்மத்தையாவது அக்கினி என்பதாதி ஏழு மந்திரங்களால்கிரகித்து ஜபித்து, காலாக்னி ருத்ரோபநிஷத் முதலியவற்றிற் சொன்ன தாரணவிதிப்படி தேகத்தில் உத்தூளனமாகவும் திரிபுண்டரமாகவுந் தரிக்கவேண்டும். இவ்வாறு வைதிக சம்பிரதாய சித்தமான பிரணவாபின்ன சிவோபாஸ்தியும், வைதிக பஸ்மதாரணமுமாகியவிரண்டுமே ஒன்றுக்கொன்று உபகாரமாயும், பாபக்ஷய ஹேதுவாயும், மோட்சசாதகமாயும் விளங்குகின்றன. நெய் ஆயுளை விர்த்திசெய்வதுபோல் பஸ்மதாரணமும் மோட்சசாதகமான பிரமஞானத்தை விர்த்திசெய்ய யாதொரு தடையுமில்லை. பாசுபதவிரதமென்றால் பசுபதியைத் தேவதையாகவுடைய விரதம் என்று பொருள்.

மா-பாசுபதம் அவைதிகமென்று சிலசாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கின்றதே அந்தச் சந்தேகத்தையும் போக்கியருளவேண்டும். அண்ணலே!

ஆ-பாசுபதம் சிரௌதபாசுபதம் எனவும், அசிரௌதபாசுபதம் எனவும் இருவகைப்படும். அவற்றுள் அசிரௌதபாசுபதம் மோஹனார்த்தமாகக் கூறப்பட்டதாதலின் அது மோஹசாஸ்திர

மும்வேதபாஹியமுமாகும். அது முமுட்சுக்களாற் சேவிக்கப்பாலதன்று. அதுவே பிரமசூத்திரத்தில் "[illegible]-பத்யுரஸா மஞ்ஜஸ்யாத்" என்னுஞ்சூத்திரத்தில் கண்டிக்கப்பட்டது. ஸ்ரீநீலகண்ட சிவாசாரியரும், ஸ்ரீசங்கராசாரியரு ஸ்ரீஉமாபதி சிவாசாரியரும், ஸ்ரீஅப்பையதீக்ஷிதரும் இக்கருத்தையே கொண்டார்கள். இராமாநுஜரும் அவைதிகமாகி காளாமுகம், காபாலம் என்னும் இரண்டு மதங்களின் லட்சணங்களை எடுத்துக்கூறிக் கண்டித்தனரேயன்றி வைதிக பாசுபத லட்சணத்தை மறுத்துத்தம் பாஷியத்தில் கண்டித்தாரல்ல. ஆகையினாலே வைதிக பாசுபதம் எஞ்ஞான்றும் வேதோக்தமாகவே நிலவுறும்.

கூர்மபுராணம்.

𑌨𑌿𑌰𑍍𑌮𑌿𑌤𑌂𑌹𑌿𑌮𑌯𑌾𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌶𑍍𑌰𑍌𑌤𑌂 𑌪𑌾𑌶𑍁𑌪𑌤𑌂𑌶𑍁𑌭𑌂।
𑌗𑍁𑌹𑍍𑌯𑌾𑌦𑍍𑌗𑍁𑌹𑍍𑌯𑌤𑌮𑌂 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌂 𑌵𑍇𑌦𑌸𑌾𑌰𑌂 𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌯𑍇॥
நிர்ம்மிதம் ஹிமயாபூர்வம் ச்ரௌதம் பாசுபதம் சுபம்।
குஹ்யாத் குஹ்யதமம் ஸூக்ஷ்மம் வேதஸாரம் விமுக்தயே॥

(இ-ள்.) "மறைவினும் அதிமறைவாய், சூக்ஷமமாய், வேதசாரமாய் சுபமாயுள்ளது சிரௌதபாசுபதம்" என்று மொழிந்தது. இதனால் வேதசஹிதமாயுள்ள வைதிக பாசுபதம் முமுட்சுக்களாலே என்றும் சேவிக்கப்பாலதென்றுணர்க. 108 உபநிஷத்துக்களிலும் பாசுபதப்ரஹ்மோபநிஷத் என ஒரு வைதிக சைவோபநிஷத்து பிரகாசித்துக்கொண்டிருக்கின்றது

மா-ஆயின் வைதிக பாசுபத விரதத்தின் பலனை உபதேசித்தருளல் வேண்டும்.

ஆ-அப்படியே உபதேசஞ்செய்கிறோம். அதர்வசிரசு, "𑌪𑌶𑍁𑌪𑌾𑌶𑌵𑌿𑌮𑍋𑌕𑍍𑌷𑌾𑌯-பசுபாசவிமோக்ஷாய-பசுவின்பாசம் தொலைதற்காக" என்று பாசுபத விரதத்தின்பலனைக் கூறிமுடித்தது. ஆத்மா அநாதியே பாசத்தால் பந்திக்கப்பட்டிருத்தலால் பசு என்னும் நாமம்பெற்றது. இப்பாசபந்தம் எப்பொழுது ஒழியுமோ அப்பொழுதே மோட்சம்வந்து பொருந்தும். மோட்சமென்றாலும், முக்தியென்றாலும், வீடென்றாலும் பொருள் ஒன்றே. முக்தி என்னும் பதப்பொருளை விசாரிக்கின் இவ்வுண்மை எளிதில் விளங்கும். முக்தி என்பது வடமொழிச்சொல், அச்சொல்

முச் + இ என்னும் இரண்டு சொற்கள் சேர்ந்து உண்டாயிற்று. முச்—பகுதி; இ - தொழிற்பெயர்விகுதி; அவற்றுள் முச் - என்பது விடுதல் என்று பொருள்படும். படவே முக்தி என்பது விடப்படுதல் என்று அர்த்தமாகும். விடப்படுதலாவது பந்தத்தினின்றும் விடப்படுதலாம். இதனால் விடப்படவேண்டியது ஒன்று; விடுவது ஒன்று என இரண்டு பொருள்கள் சித்தித்தன. இவ்விரண்டு பொருள்களும் செம்பிற் களிம்புபோல அநாதியே ஒன்றாகக்கூடியிருந்து விடாதிருந்தபடியால் அவற்றை உரியகாலத்தில் விடுவிக்க மற்றொரு பொருளும் உண்டென்பது சொல்லாமே அமையும். அதனாலே விடப்படுவதும், விடுவதும், விடுவிப்பதுமாகிய பாசம், பசு, பதி என்னும் திரிபதார்த்தங்களும் அநாதி நித்தியமென்பது முக்தி என்னுஞ் சொல்லானே நிரூபிக்கப்பட்டது.

ஸாமவேத மஹோபநிஷத்.

𑌤𑌣𑍍𑌡𑍁𑌲𑌸𑍍𑌯 𑌯𑌥𑌾 𑌚𑌰𑍍𑌮 𑌯𑌥𑌾 𑌤𑌾𑌮𑍍𑌰𑌸𑍍𑌯 𑌕𑌾𑌲𑌿𑌮𑌾।
𑌜𑍀𑌵𑌸𑍍𑌯 𑌤𑌣𑍍𑌡𑍁𑌲𑌸𑍍𑌯𑍈𑌵 𑌮𑌲𑌂 𑌸𑌹𑌜𑌮𑌪𑍍𑌯𑌲𑌮𑍍॥

தண்டுலஸ்ய யதாசர்ம யதாதாம்ரஸ்ய காளிமா।
ஜீவஸ்யதண்டுலஸ்யைவ மலம்ஸஹஜ மப்யலம்॥

(இ - ள்.) "நெல்லினிடத்து உமியைப்போலவும், செம்பினிடத்து களிம்பைப்போலவும், ஜீவாத்மாவுக்கு மலம் (பாசம்) ஸஹஜமா யுள்ளது" என்றும்,

க்ருஷ்ணயஜுர்வேத ஸ்கந்தோபநிஷத்.

𑌜𑍀𑌵𑌶𑍍𑌶𑌿𑌵𑌶𑍍𑌶𑌿𑌵𑍋𑌜𑍀𑌵𑌸𑍍𑌸𑌜𑍀𑌵𑌃 𑌕𑍇𑌵𑌲𑌶𑍍𑌶𑌿𑌵𑌃।
𑌤𑍁𑌷𑍇𑌣𑌬𑌦𑍍𑌧𑍋 𑌵𑍍𑌰𑍀𑌹𑌿𑌸𑍍𑌯𑌾 𑌤𑍁𑌷𑌾𑌭𑌾𑌵𑍇𑌨 𑌤𑌣𑍍𑌡𑍁𑌲𑌃॥
𑌏𑌵𑌂𑌬𑌦𑍍𑌧𑌸𑍍𑌤𑌥𑌾𑌜𑍀𑌵𑌃 𑌕𑌰𑍍𑌮𑌨𑌾𑌶𑍇 𑌸𑌦𑌾𑌶𑌿𑌵𑌃।
𑌪𑌾𑌶𑌬𑌦𑍍𑌧𑌸𑍍𑌤𑌥𑌾𑌜𑍀𑌵𑌃 𑌪𑌾𑌶𑌮𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌤𑌥𑌾𑌶𑌿𑌵𑌃॥

ஜீவச்சிவச்சிவோஜீவஸ் ஸஜீவ: கேவலச்சிவ:।
துஷேணபத்தோ வ்ரீஹிஸ்யாத்துஷாபாவேது தண்டுல:।
ஏவம்பத்தஸ்ததா ஜீவ: கர்மநாசே ஸதாசிவ:।
பாசபத்தஸ்ததாஜீவ: பாசமுக்தஸ்ததாசிவ:॥

(இ-ள்.) "ஜீவனே சிவன். அந்த ஜீவன் சிவனேதான். உமியினால் கட்டுண்டிருக்கிறபோது நெல்லாயிருக்கிறது. உமி நீங்கினால் அது அரிசியாகிறது. அப்படியே ஜீவனும் பந்திக்கப்பட்

டிருக்கிறான். கருமநாசமானால் எப்பொழுதும் சிவனாயிரு
றான். பாசத்தினால் பந்தப்பட்டிருக்கிறவரையில் ஜீவனாயிரு
றான். பாசத்திலிருந்து விடுபட்டால் அப்பொழுது சிவனாகிற
என்றும் மொழிந்தன. அன்றியும், ஸாமவேதஜாபால் யுபநி
“கிஂதக்வா - கிம்தத்வம்-தத்துவம்யாது”, “கொஜீவ:-கோஜ்
ஜீவன்யார்”, “கஃவஶு:-க:பசு:-பசுயாது”, “கஈஶாந:-க:ஈச
ஈசானர்யார்”, “கொமொக்ஷொவாய:-கோமோக்ஷோபாய: -
க்ஷோபாயம் யாது” என்று வினவி அவற்றிற்குமுறையே “த
வஶுவதி: - ஊஹாகாராவிஷ்டஸ்ஸாஸாரிஜீவ: - ஸவணவவஶ
ஸவஜ்ஞவஂவக்ருத்யஸஂவந்நஸவெஶ்வர ஈஶ: வஶுவத்
விஹூதியாரணாதெவ—தத்வம்பசுபதி: - அஹங்காரா விஷ்
ஸம்ஸாரிஜ்வ:-ஸஏவபசு: - ஸர்வஜ்ஞபஞ்சக்ருத்ய ஸம்பந்நஸ்
வேச்வர ஈச: பசுபதி: விபூதிதாரணாதேவ=தத்துவம் (உன்ன
பொருள்) பசுபதி-அகங்காரத்தோடுகூடிய சம்சாரி ஜீவன்-அ
ஜீவனே பசு-ஸர்வஞ்ஞரும், பஞ்சகிருத்திய ஸம்பந்நரும்,
வேசுவரரும், ஈசரும், பசுபதியுமாவாரே ஈசானர் - விபூதித்
ணமே மோக்ஷோபாயம்” என்று விடைகளைப் பகர்ந்தது.
ஞானபோதமும், “நெல்லிற் குமியும் நிகழ்செம்பினிற்களிம்
சொல்லிற் புதிதன்று தொன்மைபே” என்று சாற்றிய
ஸ்ரீதாயுமானசுவாமிகளும், “அருளுடைய பரமன்றோ வவ்
தானே யானுளனென் றும்மெனக்கே யாணவாதிப், பெரு
வினைக் கட்டென்று மென்றாற் கட்டிப்பேசிய தன்றே யருளு
பேசிற்றன்றே” என்றும், “என்று நீயன்று நானுன்னடிமை
லவோ” என்றும், “களிம்புதோய் செம்பனையயான்” என்
நவின்று முப்பொருளை அநாதி சித்தியமென்று நிர்ணயஞ் செ
தனர். இந்தப்பிரமாணங்களால் என்று சிவமுண்டோ அன்
அதன் குணமாகிய அருளுண்டு. என்று அருளுண்டோ அன்
அவ்வருள் பதியும்படியான ஆத்மா உண்டு. என்று ஆத்
உண்டோ அன்றே அவ்வருள் பதிந்தால் ஒழியத்தக்க
முண்டு எனப் பெறப்பட்டன வன்றோ. அப்படியானால் இம் மு
பொருள்களும் முக்தியிலும் உண்டோவெனின், உண்டு. ஆ
அவை அந்த பூனைத்தத்தோன்று வென்பதே வைதிக சை
கொள்கையாம்.

அஃதெவ்வாறெனின், அசைவோடு கூடியகாற்று ஆகாசத்தில் அசைவற்று நிற்கிறபோது ஆகாசம் ஒன்றுமேயுள்ளதென்னுவது, ஆகாசமுங் காற்றும் வெவ்வேறாய் இரண்டாய் இருக்கிறதென்னுவது, அவ்வாகாசமுங் காற்றும் கண்ணுக்குப் புலப்படாமையால் அவையில்லையென்னுவது கூறுதல் எப்படி அசாத்தியமோ அதுபோல சிதாகாசமென்னும் அருணிறைவில் ஆத்மா அறிவாய் நிற்கும் ஐக்கிய வீட்டுநிலையும் அத்தன்மைத்தாம். அந்த அதிசய அத்வைதக்கலப்பாகிய நிலையினையே தாயுமானவர், “காண்பானுங் காட்டுவதுங் காட்சியுமாய் நின்றவந்தவீண்பாவம் போயதுவாய் மேவுநாளெந்நாளோ” என்றும், “தானான தன்மயமே யல்லாலொன்றைத் தலையெடுக்க வொட்டாது தலைப்பட்டாங்கே, போனாலுங் கற்பூரதீபம்போலப் போயொளிப்பதல்லாது புலம்பேவறின்றும், ஞானகாரத்தினொடு ஞேயமற்ற ஞாதுருவு நழுவாம லழுவிநிற்கும், ஆனாலுமிதன்பெருமையெவர்க்கார் சொல்வார், அதுவானாலதுவாவதுவேசொல்லும்” என்றும், “அதுவென்று லெதுவெனவென் றடுக்குஞ்சங்கையாதொன்றலதுவெனலு மறவேவிட்டு, மதுவுண்ட வண்டெனவுஞ் சநகனாதி மன்னவர்கள் சுகர்முதலோர் வாழ்ந்தாரென்றும், பதியிந்த நிலையெனவு மென்னையாண்ட படிக்குநிருவிகற்பத்தாற் பரமானந்தக், கதிகண்டு கொள்ளவு நின்னருள் கூரிந்தக் கதியன்றிப் புறக்கேன் மேற்கருமம் பாரேன்” என்றும் வைதிகசைவர்கள் மதுகையுறுமாறு திருவாய் மலர்ந்தருளினார். தென்முகத் தெய்வம் சின்முத்திரையாற் குறித்த அற்புத நிலையுமிதுவே. சின்முத்திரையாவது-ஞானக்குறி-அது சிவம், ஆத்மா, மலம் (ஆணவம், கர்மம், மாயை) என்னும் ஐந்து பொருள்களின் இயல்பை ஐந்து விரல்களாற் குறிப்பதாம். அவற்றுள் நடுவிரல், அணிவிரல், சிறுவிரல், ஆகிய மூன்றையும் சுட்டுவிரலை விட்டு வேறுபிரித்துக் காட்டுவது மும்மலங்களும் வேறுபட்டொழிதலைக் குறிப்பது. அம்மூன்று விரல்களினின்றும் வேறுபட்டுப் பிரிந்த சுட்டுவிரல் அம்மலபந்தத்தினின்றும் நீங்கிய ஆத்மாவைக் குறிப்பது. அச்சுட்டுவிரல் பெருவிரலடியில் அமர்ந்திருத்தல், மலத்தினின்றும் நீங்கிய ஆத்மா சிவத்தினது திருவருளில் நிறைந்து நிற்றலைக் குறிப்பது. இந்தக்குறிக்கே மௌனமுத்திரை என்றும் பெயர். இது ஞானாசிரியர் தமது திருவுள்ளத்திற் கொண்ட உபதேசப்

பொருளை குறிப்பாலுணர்த்திவைக்கும் அற்புத நிலையாகும். இவ்வற்புத நிலையொன்றே பரிபூரண இன்பமான பேரானந்தமோட்சமாதலின் இது பிரணவ மஹாமந்திராநுபூதி வாயிலாக அடையப்பெறுவதன்றி வேறெதனாலும் அணையப்பெறுவதன்று.

கிருஷ்ணயஜுர்வேத கைவல்யோபநிஷத்தும்.

𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌰𑌣𑌿𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌣𑌵𑌂 𑌚𑍋𑌤𑍍𑌤𑌰𑌾𑌰𑌣𑌿𑌮𑍍।
𑌧𑍍𑌯𑌾𑌨𑌨𑌿𑌰𑍍𑌮𑌥𑌨𑌾𑌭𑍍𑌯𑌾𑌸𑌾𑌤𑍍 𑌪𑌾𑌶𑌂 𑌦𑌹𑌤𑌿 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌃।

ஆத்மாநமரணிம் க்ருத்வா ப்ரணவம் சோத்தராரணிம்।
த்யானநிர்மதனாப்யாஸாத் பாசம் தஹதிபண்டித:॥

(இ-ன்.) "ஆத்மாவை அரணியாகவும் பிரணவத்தை உத்தராரணியாகவும் வைத்து, (இடையறாத்) தியானம் என்றகடைதலைப் பன்முறை அப்பியசித்தலால் பண்டிதன் பாசத்தை ஒழித்துக்கொள்வான் (முக்திபெறுவான்)" என்றது. இதே மந்திரப் பிரம்மோபநிஷத்திலும் சுவேதாசுவதரோபநிஷத்திலும் சிறிது பேதந் தோன்றப் படிக்கப்பட்டுள்ளது. ஆனால் பொருளில் பேதமில்லை. அரணி-அக்கினியை உற்பத்திசெய்வதற்காக உபயோகிக்கப்படும் அரசு முதலியமரங்களின் ஒரு துண்டுகட்டை. உத்தராரணி - அவ்வரணியின்கண் ஊன்றிக்கடையும் மரத்துண்டு. கடைதலை ஒரேமுறைசெய்தால் அக்கினி உண்டாகாது. பலமுறையுஞ் செய்யவேண்டும். அதுபோல தியானத்தையும் இடையறாது செய்தால் தான் பலன்கிட்டும். திருநாவுக்கரசு மூர்த்திகளும், "உறவுகோ னட்டுணர்வு கயிற்றினால், முறுகவாங்கிக் கடைய முன்னிற்குமே" என்றருளிச் செய்தனர். கடைய, வாங்கிக்கடைய, முறுகவாங்கிக்கடைய என்னும் அப்பெருந்தகையாரது அற்புதப் பிரயோகங்களை யூகித்துணர்க.

அவ்வாறிருத்தலின், "அப்பிரணவ மந்திரத்தின் சொரூபத்தையும் இரகசியப் பொருளையும் அருண்மயமான மைந்தனே! நீ உடல், பொருள், ஆவிமூன்றையும் எமது திருவடிகளுக்குத் தத்தஞ்செய்து, கேட்கு முறைப்படிகேட்டுக் கண்ணீருங் கம்பலையுமாய்ப்பரவசப்பட்டு நின்றபடியால் உன்னுடைய அதிதீவிரபக்குவத்தைக் குளிர்ந்துநோக்கி அஞ்ஞான சந்தேக விபரீதமற அருளிச்செய்தோம். "தனத்தில் பெரியவன், வயதில் பெரியவன், வித்தையில் பெரியவன் ஆகிய இவர்கள் ஞானத்தில் பெரியவனுக்

கும் அவன் மாணாக்கர்களுக்கும் வேலைக்காரர்களா யிருக்கின்றார்கள்" என்று மைத்ரேயோபநிஷத் ஓதுகின்றமையால் ஞானத்தில் பெரியோனாகிய உனக்கு இவ்வரிய பிரணவ வித்தையைத் தந்தோம்." என்று நன்னடையும், நற்குணமும், திருவருள் ஞானமும் பிரகாசியாநின்ற ஆசிரியர் அருட்களிப்பின் மிகுதி பால்மொழிந்து சர்வமும் தற்சொரூபமாய் விளங்கும் துரியப் பொருளான மஹா உருத்திரராகிய சிவபரம்பொருளை அடியில் காட்டலுற்ற வேதவாக்கியங்களால் ஆராமையோடு துதிசெய்து பேரின்பமயமாய்ப் பிரகாசித்தனர். ஓம்

𑌯𑍋 𑌰𑍁𑌦𑍍𑌰𑍋 𑌅𑌗𑍍𑌨𑍌 𑌯𑍋 𑌅𑌪𑍍𑌸𑍁 𑌯 𑌓𑌷𑌧𑍀𑌰𑍍𑌵𑍀𑌰𑍁𑌧 𑌆𑌵𑌿𑌵𑍇𑌶|
𑌯 𑌇𑌮𑌾 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾 𑌭𑍁𑌵𑌨𑌾𑌨𑌿 𑌚𑌾𑌕𑍢𑌪𑍇 𑌤𑌸𑍍𑌮𑍈 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌯 𑌨𑌮𑍋 𑌅𑌸𑍍𑌤𑍁||
யோருத்ரோ அக்னௌயோ அப்ஸு யஓஷதீர்வீருத ஆவிவேச।
யஇமாவிச்வா புவநாநிச க்லிபே தஸ்மைருத்ராய நமோ அஸ்து॥

(இ-ள்.) "எந்த ருத்ரமூர்த்தி அக்கினியில் உட்பிரவேசித்தார். அப்புவில் உட்பிரவேசித்தார். ஓஷதிகளிலும், மரங்களிலும் உட்பிரவேசித்தார். எவர் இந்தப்புவனங்களை யெல்லாம் சிருஷ்டித்தார். அந்தருத்ரமூர்த்திக்கு நமஸ்காரம் ஆகுக' ஓம்

𑌯𑍋 𑌦𑍇𑌵𑍋 𑌅𑌗𑍍𑌨𑍌 𑌯𑍋 𑌅𑌪𑍍𑌸𑍁 𑌯𑍋 𑌵𑌿𑌶𑍍𑌵𑌂 𑌭𑍁𑌵𑌨𑌾𑌵𑌿𑌵𑍇𑌶|
𑌯 𑌓𑌷𑌧𑍀𑌷𑍁 𑌯𑍋 𑌵𑌨𑌸𑍍𑌪𑌤𑌿𑌷𑍁 𑌤𑌸𑍍𑌮𑍈 𑌦𑍇𑌵𑌾𑌯 𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃||
யோதேவோ அக்னௌயோ அப்ஸு யோவிச்வம் பவமாவிவேச।
ய ஓஷதீஷு யோவநஸ்பதிஷு தஸ்மைதேவாய நமோநம:॥

(இ-ள்.) "எந்தத்தேவன் அக்கினியிலுள்ளவன். எவன் நீரிலுள்ளவன். எவன் எல்லாப்புவனங்களிலுள்ளவன். எவன் ஓஷதிகளிலுள்ளவன், எவன் மரங்களிலுள்ளவன். அந்தத்தேவனுக்கு நமஸ்காரம், நமஸ்காரம்".

மாணாக்கன்-அவ்வாறு பேரின்பமயமாய்ப் பிரகாசித்துக் கொண்டிருக்கும் அருள்வடிவாகிய ஆசிரியருடைய சுத்தமான திருவடிக்கமலங்களை உளமொழிமெய்களால் நன்றாக இறைஞ்சி "ஒருமொழி என்னும் ஒப்பற்ற உபதேசமொழியையும், அநுபூதி வாயிலாக அணையப்பெறும் பரமுக்தியைப் நல்கியருளிய ஆனந்த ரூபியே! மனத்தூய்மைகொண்ட பாசற்ற குருநாதா!! தேவரீர் அநுக்கிரஹித்த உபதேசமொழிகளனைத்தையும் செவியேவாயாகவும், நெஞ்சேகளனாகவுங் கிரஹித்து, உளத்தமைத்து

அடியேனுக்கு உண்டாயிருந்த ஐயங்களையெல்லாம் அஞ்ஞான மயக்கமறப் போக்கிக்கொண்டேன். "பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னுஞ், செம்பொருள் காண்பதறிவு" என்ற தெய்வப்புலமைத் திருவள்ளுவதேவர் குறித்த செம்பொருளைக் கண்டேன்! கண்டேன்!! திருவருட் செல்வத்தையும் பெற்று உய்ந்தேன்! உய்ந்தேன்!! மிக்கசமுசாரமாகிய பவக்கடலைக் கடந்து எல்லையில்லா இன்பசாகரத்தில் அமிழ்ந்தினேன். ஞான வைராக்கிய பரிபூரணமூர்த்தியாகிய தேவரீருடைய பரமகாருண்யத்திற்குச் சுதந்தரவினனாகிய அடியேன் செய்யத்தக்க கைம்மாறு முளதே! அறியேன்" என்று தன்னுடைய ஞானாசிரியரது இரண்டு திருவடிப்போதுகளையும் மீளவும் வணங்கி நின்று ஆனந்தமயமாய் விளங்கினன்.

ஆசிரியர்-அப்பொழுது இன்பமயமாய் விளங்கும்தம் மாணாக்கரை உளங்குளிர்ந்து உவப்புடன் நோக்கி, சிறந்த ஆசிமொழிகளைக்கூறி, வன்றொண்டப் பெருமானாகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள், "இறந்து போக்கில்லை வரவில்லையாகி யின்ப வெள்ளத்து ளிருப்பர்களினிதே" என்றருளிச்செய்தபடி சிவஸ்தவஞ்செய்து பரிபூரண சிவானந்தாநுபூதியாகிய இன்பவெள்ளத்துள் அழுந்தி இருக்கக் கடாட்சித்தருளினர். சுபம்! சுபம்!! சுபம்!!! ஓம் தத்ஸத்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண் புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீய தெல்லா மரனாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

என்றுமின்பம் பெருகு மியல்பினால்
ஒன்றுகாதலி னுள்ளமு மோங்கிட
மன்றுளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கு நிலவியுல கெலாம்.

திருச்சிற்றம்பலம்.

ப்ரணவ வித்யாபரிமளம் என்னும்
ஓங்காரவிளக்கம்
முற்றுப்பெற்றது.

* * *

மெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

புருஷ ஸூக்தம்.

எல்லாத்தெய்வங்களும் தாமாகவிருக்கப்பெற்ற ஸ்ரீபசுபதியின் பெருமையினை விளக்கும் புருஷ ஸூக்தம் ருக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம் என்னும் மூன்று வேதங்களினும் படிக்கப்பட்டிருப்பினும், யஜுர்வேதத்தில் இருபத்துநான்கு மந்திரங்களாய் இரண்டு அநுவாகங்களுடன் விளங்குகின்றது. ஏனைய இரண்டு வேதங்களிலோ பதினாறு மந்திரங்களாகச் சுருக்கப்பட்டுள்ளது. முன்னோர் யஜுர் ஆரண்யகத்திற்கூறிய புருஷ ஸூக்தத்துக்கே பாஷ்யம் இயற்றினராதலானும், யஜுவிற் புருஷ ஸூக்தத்தைத் தொடர்ந்துவரும் பகுதிகள் சிவபரப் பங்களைக்கூறிவருதலானும், அவை சிவபரமெனச் சாதித்தற்குப் போதுமான ஆதாரமாய் நிற்றலானும், அவற்றைத் தொடர்ந்தே தைத்திரீயம், மஹோபநிஷத் முதலிய உபநிஷத்துக்கள் அமைந்திருத்தலானும் அப்புருஷ ஸூக்தத்தையே ஈண்டு வரைகின்றாம். ஸூக்தத்துக்கு ரிஷி-நாராயணரென்று பெயர்கொண்ட ஓர் ரிஷி. தேவதை-புருஷன் (சிவபெருமான்). சந்தஸ்-அநுஷ்டுப் இறுதியிலுள்ள மந்திரம் த்ருஷ்டுப்.

முதலாம் அநுவாகம்.

𑌸𑌹𑌸𑍍𑌰𑌶𑍀𑌰𑍍𑌷𑌾𑌪𑍁𑌰𑍁𑌷𑌃। 𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍍𑌸𑌹𑌸𑍍𑌰𑌪𑌾𑌤𑍍।
𑌸𑌭𑍂𑌮𑌿𑌂𑌵𑌿𑌶𑍍𑌵𑌤𑍋 𑌵𑍃𑌤𑍍𑌵𑌾। 𑌅𑌤𑍍𑌯𑌤𑌿𑌷𑍍𑌠𑌦𑍍𑌦𑌶𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍍।

ஸஹஸ்ரசீர்ஷாபுருஷ:। ஸஹஸ்ராக்ஷஸ்ஸஹஸ்ரபாத்।
ஸபூமிம்விச்வதோ வ்ருத்வா। அத்யதிஷ்டத்தசாங்குலம்। 1

𑌪𑍁𑌰𑍁𑌷𑌏𑌵𑍇𑌦𑌂𑌸𑌰𑍍𑌵𑌮𑍍। 𑌯𑌦𑍍𑌭𑍂𑌤𑌂𑌯𑌚𑍍𑌚𑌭𑌵𑍍𑌯𑌮𑍍।
𑌉𑌤𑌾𑌮𑍃𑌤𑌤𑍍𑌵𑌸𑍍𑌯𑍇𑌶𑌾𑌨𑌃। 𑌯𑌦𑌨𑍍𑌨𑍇𑌨𑌾𑌤𑌿𑌰𑍋𑌹𑌤𑌿।

புருஷஏவேதம்ஸர்வம்। யத்பூதம்யச்சபவ்யம்।
உதாம்ருதத்வஸ்யேசாந:। யதந்நேநாதிரோஹதி। 2

𑌏𑌤𑌾𑌵𑌾𑌨𑌸𑍍𑌯𑌮𑌹𑌿𑌮𑌾। 𑌅𑌤𑍋𑌜𑍍𑌯𑌾𑌯𑌾𑌂𑌶𑍍𑌚𑌪𑍂𑌰𑍁𑌷𑌃।
𑌪𑌾𑌦𑍋𑌽𑌸𑍍𑌯𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌭𑍂𑌤𑌾𑌨𑌿। 𑌤𑍍𑌰𑌿𑌪𑌾𑌦𑌸𑍍𑌯𑌾𑌮𑍃𑌤𑌂𑌦𑌿𑌵𑌿।

ஏதாவாநஸ்யமஹிமா। அதோஜ்யாயாம்ச்சபூருஷ:।
பாதோऽஸ்யவிச்வாபூதாநி। த்ரிபாதஸ்யாம்ருதந்திவி। 3

𑌤𑍍𑌰𑌿𑌪𑌾𑌦𑍂𑌰𑍍𑌧𑍍𑌵 𑌉𑌦𑍈𑌤𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑌃। 𑌪𑌾𑌦𑍋𑌽𑌸𑍍𑌯𑍇𑌹𑌾𑌭𑌵𑌾𑌤𑍍𑌪𑍁𑌨𑌃।
𑌤𑌤𑍋 𑌵𑌿𑌷𑍍𑌵𑌙𑍍𑌵𑍍𑌯𑌕𑍍𑌰𑌾𑌮𑌤𑍍। 𑌸𑌾𑌶𑌨𑌾𑌨𑌶𑌨𑍇 𑌅𑌭𑌿।

த்ரிபாதூர்த்வஉதைத்புருஷ:। பாதோऽஸ்யேஹாபவாத்புந:।
ததோவிஷ்வங்வ்யக்ராமத்। ஸாசநாநசநே அபி। 4

𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌵𑌿𑌰𑌾𑌡𑌜𑌾𑌯𑌤। 𑌵𑌿𑌰𑌾𑌜𑍋 𑌅𑌧𑌿𑌪𑍂𑌰𑍁𑌷𑌃।
𑌸 𑌜𑌾𑌤𑍋 𑌅𑌤𑍍𑌯𑌰𑌿𑌚𑍍𑌯𑌤। 𑌪𑌶𑍍𑌚𑌾𑌦𑍍𑌭𑍂𑌮𑌿𑌮𑌥𑍋 𑌪𑍁𑌰𑌃।

தஸ்மாத்விராடஜாயத। விராஜோ அதிபூருஷ:।
ஸஜாதோ அத்யரிச்யத। பச்சாத்பூமிமதோபுர:। 5

𑌯𑌤𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑍇𑌣 𑌹𑌵𑌿𑌷𑌾। 𑌦𑍇𑌵𑌾 𑌯𑌜𑍍𑌞𑌮𑌤𑌨𑍍𑌵𑌤।
𑌵𑌸𑌨𑍍𑌤𑍋 𑌅𑌸𑍍𑌯𑌾𑌸𑍀𑌦𑌾𑌜𑍍𑌯𑌮𑍍। 𑌗𑍍𑌰𑍀𑌷𑍍𑌮 𑌇𑌧𑍍𑌮𑌶𑍍𑌶𑌰𑌦𑍍𑌧𑌵𑌿𑌃।

யத்புருஷேண ஹவிஷா। தேவாயஜ்ஞமதந்வத।
வஸந்தோ அஸ்யாஸீதாஜ்யம்। க்ரீஷ்மஇத்மச்சரதவி:। 6

𑌸𑌪𑍍𑌤𑌾𑌸𑍍𑌯𑌾𑌸𑌨𑍍𑌪𑌰𑌿𑌧𑌯𑌃। 𑌤𑍍𑌰𑌿𑌸𑍍𑌸𑌪𑍍𑌤 𑌸𑌮𑌿𑌧𑌃 𑌕𑍃𑌤𑌾𑌃।
𑌦𑍇𑌵𑌾 𑌯𑌦𑍍𑌯𑌜𑍍𑌞𑌂 𑌤𑌨𑍍𑌵𑌾𑌨𑌾𑌃। 𑌅𑌬𑌧𑍍𑌨𑌨𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌪𑌶𑍁𑌮𑍍।

ஸப்தாஸ்யாஸந்பரிதய:। த்ரிஸ்ஸப்தஸமித:க்ருதா:।
தேவாயத்யஜ்ஞம்தந்வாநா:। அபத்நந்புருஷம்பசும்। 7

𑌤𑌂 𑌯𑌜𑍍𑌞𑌂 𑌬𑌰𑍍𑌹𑌿𑌷𑌿 𑌪𑍍𑌰𑍌𑌕𑍍𑌷𑌨𑍍। 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌜𑌾𑌤𑌮𑌗𑍍𑌰𑌤𑌃।
𑌤𑍇𑌨 𑌦𑍇𑌵𑌾 𑌅𑌯𑌜𑌨𑍍𑌤। 𑌸𑌾𑌧𑍍𑌯𑌾 𑌋𑌷𑌯𑌶𑍍𑌚 𑌯𑍇।

தம்யஜ்ஞம்பர்ஹிஷிப்ரௌக்ஷந்। புருஷந்ஜாதமக்ரத:।
தேநதேவா அயஜந்த। ஸாத்யாருஷயச்சயே। 8

𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌯𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌹𑍁𑌤𑌃। 𑌸𑌂𑌭𑍃𑌤𑌂 𑌪𑍃𑌷𑌦𑌾𑌜𑍍𑌯𑌮𑍍।
𑌪𑌶𑍂𑌸𑍍𑌤𑌾𑌂𑌶𑍍𑌚𑌕𑍍𑌰𑍇 𑌵𑌾𑌯𑌵𑍍𑌯𑌾𑌨𑍍। 𑌆𑌰𑌣𑍍𑌯𑌾𑌨𑍍𑌗𑍍𑌰𑌾𑌮𑍍𑌯𑌾𑌶𑍍𑌚 𑌯𑍇।

தஸ்மாத்யஜ்ஞாத்ஸர்வஹுத:। ஸம்ப்ருதம் புருஷதாஜ்யம்।
பசூம்ஸ்தாம்ச்சக்ரே வாயவ்யாந்। ஆரண்யாந்க்ராம்யாச்சயே। 9

𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌯𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌹𑍁𑌤𑌃। 𑌋𑌚𑌸𑍍𑌸𑌾𑌮𑌾𑌨𑌿 𑌜𑌜𑍍𑌞𑌿𑌰𑍇।
𑌛𑌨𑍍𑌦𑌾𑌂𑌸𑌿 𑌜𑌜𑍍𑌞𑌿𑌰𑍇 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍। 𑌯𑌜𑍁𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌜𑌾𑌯𑌤।

தஸ்மாத்யஜ்ஞாத்ஸர்வஹுத:। ருசஸ்ஸாமாநிஜஜ்ஞிரே।
சந்தாம்ஸிஜஜ்ஞிரே தஸ்மாத்। யஜுஸ்தஸ்மாதஜாயத। 10

𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌶𑍍𑌵𑌾 𑌅𑌜𑌾𑌯𑌨𑍍𑌤। 𑌯𑍇 𑌕𑍇 𑌚𑍋𑌭𑌯𑌾𑌦𑌤𑌃।
𑌗𑌾𑌵𑍋 𑌹 𑌜𑌜𑍍𑌞𑌿𑌰𑍇 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍। 𑌤𑌸𑍍𑌮𑌾𑌜𑍍𑌜𑌾𑌤𑌾 𑌅𑌜𑌾𑌵𑌯𑌃।

தஸ்மாதச்வா அஜாயந்த । யேகேசோபயாதத: ।
காவோஹ ஜஜ்ஞிரே தஸ்மாத் । தஸ்மாஜ்ஜாதா அஜாவய: ॥ 11
യത്പുരുഷം വ്യദധുഃ । കതിധാ വ്യകല്പയൻ ।
മുഖം കിമസ്യ കൗ ബാഹൂ । കാവൂരൂ പാദാവുച്യേതേ ।

யத்புருஷம்வ்யதது: கதிதாவ்யகல்பயந் ।
முகங்கிமஸ்யகௌபாஹூ । காவூரூபாதாவுச்யேதே । 12
ബ്രാഹ്മണോഽസ്യ മുഖമാസീത് । ബാഹൂ രാജന്യഃ കൃതഃ ।
ഊരൂ തദസ്യ യദ്വൈശ്യഃ । പദ്ഭ്യാം ശൂദ്രോ അജായത ।

ப்ராஹ்மணோ஽ஸ்யமுகமாஸீத் । பாஹூராஜந்ய:க்ருத: ।
ஊரூததஸ்ய யத்வைச்ய: । பத்ப்யாம் சூத்ரோ அஜாயத: 13
ചന്ദ്രമാ മനസോ ജാതഃ । ചക്ഷോഃ സൂര്യോ അജായത ।
മുഖാദിന്ദ്രശ്ചാഗ്നിശ്ച । പ്രാണാദ്വായുരജായത ।

சந்த்ரமா மநஸோ ஜாத: । சக்ஷோஸ்ஸூர்யோ அஜாயத ।
முகாதிந்த்ரச்சாக்நிச்ச । ப்ராணாத்வாயுரஜாயத । 14
നാഭ്യാ ആസീദന്തരിക്ഷം । ശീർഷ്ണോ ദ്യൗഃ സമവർതത ।
പദ്ഭ്യാം ഭൂമിർദിശഃ ശ്രോത്രാത് । തഥാ ലോകാം അകല്പയൻ ।

நாப்யா ஆஸீதந்தரிக்ஷம் । சீர்ஷ்ணோ த்யௌஸ்ஸமவர்த்தத ।
பத்ப்யாம்பூமிர்திசச்ச்ரோத்ராத் । ததாலோகாம் அகல்பயந் । 15
വേദാഹമേതം പുരുഷം മഹാന്തം । ആദിത്യവർണം തമസസ്തു പാരേ ।
സർവാണി രൂപാണി വിചിത്യ ധീരഃ । നാമാനി കൃത്വാഽഭിവദൻ യദാ
[സ്തേ ।

வேதாஹமேதம்புருஷம்மஹாந்தம் ஆதித்யவர்ணம்தமஸஸ்துபாரே ।
ஸர்வாணிரூபாணிவிசித்யதீர: । நாமாநிக்ருத்வாபி வதந்யதாஸ்தே 16
ധാതാ പുരസ്താദ്യമുദാജഹാര । ശക്രഃ പ്രവിദ്വാൻ പ്രദിശശ്ച
തസ്രഃ ।
തമേവം വിദ്വാനമൃത ഇഹ ഭവതി । നാന്യഃ പന്ഥാ അയനായ വിദ്യതേ

தாதாபுரஸ்தாத்யமுதாஜஹார । சக்ர: ப்ரவித்வாந் ப்ரதிசச்சதஸ்ர: ।
தமேவம்வித்வாநம்ருத இஹபவதி । நாந்ய:பந்தா அயநாயவித்யதே । 17
യജ്ഞേന യജ്ഞമയജന്ത ദേവാഃ । താനി ധർമാണി പ്രഥമാന്യാസൻ ।
തേ ഹ നാകം മഹിമാനഃ സചന്തേ । യത്ര പൂർവേ സാധ്യാഃ സന്തി ദേവാഃ ।

யஜ்ஞேநயஜ்ஞமயஜந்ததேவா: । தாநிதர்மாணிப்ரதமாந்யாஸந் ।
தேஹநாகம்மஹிமாநஸ்ஸசந்தே । யத்ரபூர்வே ஸாத்யாஸ்ஸந்திதேவா: 18

முதலநுவாகம் முற்றுப்பெற்றது.

இரண்டாம் அநுவாகம்.

𑌅𑌦𑍍𑌭𑍍𑌯𑌃 𑌸𑌂𑌭𑍂𑌤𑌃 𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑍈 𑌰𑌸𑌾𑌚𑍍𑌚। 𑌵𑌿𑌶𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌣𑌃 𑌸𑌮𑌵𑌰𑍍𑌤
𑌤𑌾𑌧𑌿। 𑌤𑌸𑍍𑌯 𑌤𑍍𑌵𑌷𑍍𑌟𑌾 𑌵𑌿𑌦𑌧𑌦𑍍𑌰𑍂𑌪𑌮𑍇𑌤𑌿। 𑌤𑌤𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌯
𑌵𑌿𑌶𑍍𑌵𑌮𑌾𑌜𑌾𑌨𑌮𑌗𑍍𑌰𑍇।

அத்ப்யஸ்ஸம்பூத꞉ப்ருதிவ்யைரஸாச்ச। விச்வகர்மணஸ்ஸமவர்த்ததாதி।
தஸ்யத்வஷ்டா விததத்ரூபமேதி। தத்புருஷஸ்யவிச்வமாஜாநமக்ரே। 19

𑌵𑍇𑌦𑌾𑌹𑌮𑍇𑌤𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌮𑌹𑌾𑌨𑍍𑌤𑌮𑍍। 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌵𑌰𑍍𑌣𑌂 𑌤𑌮𑌸𑌃
𑌪𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍। 𑌤𑌮𑍇𑌵𑌂 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑌮𑍃𑌤 𑌇𑌹 𑌭𑌵𑌤𑌿। 𑌨𑌾𑌨𑍍𑌯𑌃 𑌪𑌨𑍍𑌥𑌾 𑌵𑌿𑌦𑍍𑌯
𑌤𑍇𑌽𑌯𑌨𑌾𑌯।

வேதாஹமேதம்புருஷம் மஹாந்தம்। ஆதித்யவர்ணந்தமஸ꞉பரஸ்தாத்।
தமேவம்வித்வாநம்ருதஇஹபவதி। நாந்ய꞉பந்தாவித்யதேயநாய। 20

𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌶𑍍𑌚𑌰𑌤𑌿 𑌗𑌰𑍍𑌭𑍇 𑌅𑌨𑍍𑌤𑌃। 𑌅𑌜𑌾𑌯𑌮𑌾𑌨𑍋 𑌬𑌹𑍁𑌧𑌾
𑌵𑌿𑌜𑌾𑌯𑌤𑍇। 𑌤𑌸𑍍𑌯 𑌧𑍀𑌰𑌾𑌃 𑌪𑌰𑌿𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑌿 𑌯𑍋𑌨𑌿𑌮𑍍। 𑌮𑌰𑍀𑌚𑍀𑌨𑌾𑌂 𑌪𑌦𑌮𑌿𑌚𑍍𑌛
𑌨𑍍𑌤𑌿 𑌵𑍇𑌧𑌸𑌃।

ப்ராஜாபதிச்சரதிகர்ப்பேஅந்த꞉। அஜாயமாநோ பஹுதாவிஜாயதே।
தஸ்யதீரா꞉பரிஜாநந்தியோநிம்। மரீசீநாம்பதமிச்சந்திவேதஸ꞉। 21

𑌯𑍋 𑌦𑍇𑌵𑍇𑌭𑍍𑌯 𑌆𑌤𑌪𑌤𑌿। 𑌯𑍋 𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌪𑍁𑌰𑍋𑌹𑌿𑌤𑌃।
𑌪𑍂𑌰𑍍𑌵𑍋 𑌯𑍋 𑌦𑍇𑌵𑍇𑌭𑍍𑌯𑍋 𑌜𑌾𑌤𑌃। 𑌨𑌮𑍋 𑌰𑍁𑌚𑌾𑌯 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌯𑍇।

யோதேவேப்யஆதபதி। யோதேவாநாம்புரோஹித꞉।
பூர்வோயோதேவேப்யோஜாத꞉। நமோருசாய ப்ராஹ்மயே। 22

𑌰𑍁𑌚𑌂 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌂 𑌜𑌨𑌯𑌨𑍍𑌤𑌃। 𑌦𑍇𑌵𑌾 𑌅𑌗𑍍𑌰𑍇 𑌤𑌦𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍।
𑌯𑌸𑍍𑌤𑍍𑌵𑍈𑌵𑌂 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌤𑍍। 𑌤𑌸𑍍𑌯 𑌦𑍇𑌵𑌾 𑌅𑌸𑌨𑍍𑌵𑌶𑍇।

ருசம்ப்ராஹ்மஞ்ஜநயந்த꞉। தேவா அக்ரே ததப்ருவந்।
யஸ்த்வைவம் ப்ராஹ்மணோவித்யாத்। தஸ்யதேவா அஸந்வசே। 23

𑌹𑍍𑌰𑍀𑌶𑍍𑌚 𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌶𑍍𑌚 𑌪𑌤𑍍𑌨𑍍𑌯𑍌। 𑌅𑌹𑍋𑌰𑌾𑌤𑍍𑌰𑍇 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇।
𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌰𑍂𑌪𑌮𑍍। 𑌅𑌶𑍍𑌵𑌿𑌨𑍌 𑌵𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑌮𑍍। 𑌇𑌷𑍍𑌟𑌂 𑌮𑌨𑌿𑌷𑌾𑌣।
𑌅𑌮𑍁𑌂 𑌮𑌨𑌿𑌷𑌾𑌣। 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌮𑌨𑌿𑌷𑌾𑌣।

ஹ்ரீச்சதேலக்ஷ்மீச்சபத்ந்யௌ। அஹோராத்ரே பார்ச்வே।
நக்ஷத்ராணி ரூபம் அச்விநௌவ்யாத்தம்। இஷ்டம்மநிஷாண।
அமும்மநிஷாண। ஸர்வம் மநிஷாண। 24

இரண்டாம் அநுவாகம் முற்றுப்பெற்றது.

புருஷஸூக்தம் முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்

ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய

திருத்தொண்டத்தொகை.

ஏழாந்திருமுறை-பண்-கொல்லிக்கௌவாணம்.

அடிமை

திருச்சிற்றம்பலம்.

தில்லைவா ழந்தணர்த மடியார்க்கு மடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க்கடியேன்
இல்லையே யென்னாத வியற்பகைக்கு மடியேன்
இளையான்றன் குடிமாற னடியார்க்கு மடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க் கடியேன்
அல்லிமென் முல்லையந்தா ரமர்நீதிக் கடியேன்
ஆரூர னாரூரி லம்மானுக் காளே (1)
இலைமலிந்த வேனம்பி யெறிபத்தர்க் கடியேன்
ஏனாதி நாதன்ற னடியார்க்கு மடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க் கடியேன்
கடவூரிற் கலையன்ற னடியார்க்கு மடியேன்
மலைமலிந்த தோள்வள்ளன் மானக்கஞ் சாறன்
எஞ்சாத வாட்டாய னடியார்க்கு மடியேன்
அலைமலிந்த புனன்மங்கை யானாயர்க்கடியேன்
ஆரூர னாரூரி லம்மானுக் காளே (2)
மும்மையா லுலகாண்ட மூர்த்திக்கு மடியேன்
முருகனுக்கு முருத்திர பசுபதிக்கு மடியேன்
செம்மையே திருநாளைப் போவார்க்கு மடியேன்
திருக்குறிப்புத் தொண்டர்தம் மடியார்க்கு மடியேன்
மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினா லெறிந்த
அம்மையா னடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்ற னடியார்க்கு மடியேன்
பெருநம்பி குலச்சிறைத னடியார்க்கு மடியேன்
பெருமிழலைக் குறும்பர்க்கும் பேயார்க்கு மடியேன்
ஒருநம்பி யப்பூதி யடியார்க்கு மடியேன்
ஒலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கர்க் கடியேன்
அருநம்பி நமிநந்தி யடியார்க்கு மடியேன்
ஆரூர னாரூரி லம்மானுக் காளே. (4

வம்பறா வரிவண்டு மணநாற மலரும்
மதுமலர்நற் கொன்றையா னடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்த னடியார்க்கு மடியேன்
ஏயர்கோன் கலிக்காம னடியார்க்கு மடியேன்
நம்பிரான் திருமூல னடியார்க்கு மடியேன்
நாட்டமிகு தண்டிக்கு மூர்க்கர்க்கு மடியேன்
அம்பரான் சோமாசி மாறனுக்கு மடியேன்
ஆரூர னாரூரி லம்மானுக் காளே. (5)

வார்கொண்ட வனமுலையா ளுமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியர்க்கு மடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கு மடியேன்
செங்காட்டக் குடிமேய சிறுத்தொண்டர்க் கடியேன்
கார்கொண்ட கொடைக்கழறிற் றறிவார்க்கு மடியேன்
கடற்காழிக் கணநாத னடியார்க்கு மடியேன்
ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக் கோனடியேன்
ஆரூர னாரூரி லம்மானுக் காளே. (6)

பொய்யடிமை யில்லாத புலவர்க்கு மடியேன்
பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழற் கடியேன்
மெய்யடியா னரசிங்க முனையரையற் கடியேன்
விரிதிரைசூழ் கடனாகை யதிபத்தர்க் கடியேன்
கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழற்சத்தி வரிஞ்சையர்கோ னடியார்க்கு மடியேன்
ஐயடிகள் காடவர்கோ னடியார்க்கு மடியேன்
ஆரூர னாரூரி லம்மானுக் காளே. (7)

கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண் டிருந்த
கணம்புல்ல நம்பிக்கும் காரிக்கு மடியேன்

நிறைகொண்ட சிந்தையா னெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாற னடியார்க்கு மடியேன்
துறைக்கொண்ட செம்பவள மிருளகற்றுஞ் சோதித்
தொன்மயிலை வாயிலா னடியார்க்கு மடியேன்
அறைக்கொண்ட வேனம்பி முனையடுவார்க் கடியேன்
ஆரூர னாரூரி லம்மானுக் காளே. (8)

கடல்சூழ்ந்த வுலகெலாங் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்க னடியார்க்கு மடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி யிடங்கழிக்குந் தஞ்சை
மன்னவனாஞ் செருத்துணைதன் னடியார்க்கு மடியேன்
புடைசூழ்ந்த புலியதண்மே லரவாட வாடி
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கு மடியேன்
அடல்சூழ்ந்த வேனம்பி கோட்புலிக்கு மடியேன்
ஆரூர னாரூரி லம்மானுக் காளே. (9)

பத்தராய்ப் பணிவார்க ளெல்லார்க்கு மடியேன்
பரமனையே பாடுவா ரடியார்க்கு மடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கு மடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்க ளெல்லார்க்கு மடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கு மடியேன்
அப்பாலு மடிச்சார்ந்த வடியார்க்கு மடியேன்
ஆரூர னாரூரி லம்மானுக் காளே. (10)

மன்னியசீர் மறைநாவ னின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கு நேசனுக்கு மடியேன்
தென்னவனா யுலகாண்ட செங்கணார்க் கடியேன்
திருநீல கண்டத்துப் பாணனார்க் கடியேன்
என்னவனா மரனடியே யடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் றிருநாவ லூர்க்கோன்
அன்னவனா மாரூர னடிமைகேட் டுவப்பார்
ஆரூரி லம்மானுக் கன்பரா வாரே. (11)

திருச்சிற்றம்பலம்.

திருத்தொண்டத்தொகை முற்றுப்பெற்றது.

ஓங்காரவிளக்கத்தில் எடுத்துக்காட்டியுள்ள மந்திரசுலோகங்களின் முதற்குறிப்பு அட்டவணை.

மந்திரம். பககம்.

அ

அகாரம் ப்ரஹ்மாணம்நா 101
அக்நிமீளே 19
அக்நிரிதிபஸ்ம் 203
அங்குஷ்ட மாத்ரஃ 59, 62
அஜம் த்ருவம் ஸர்வ 117
அஜாத இத்யேவகச்சித் 117
அஜாத மிமமேவைகம் 119
அணோரணியாந்மஹ 178
அதஸமாதுச்யத ஈசா 97
,, தே ஏகோ 79
,, ,, ஓங்கார 108
,, ,, தாரம் 115
,, ,, பகவா 166
,, ,, ப்ரணவ 112
,, ,, மஹாதே 185
அத த்யோயோகஃ 141
அதபராயயாததக்ஷர 9
அதபர்கஇதி 141, 142
அதபர்கோதேவஸ்ய 141
அதாதோ ப்ரஹ்மஜிஞ் 42
அதிஷ்டிதாகோ 175
அத்ரஹிஜந்தோ 150
அத்ராப்யசக்தோ 145
அத்ருஷ்டமவ்யய 67
அத்வைதம் சதுர்த்தம் 70
அநாவ்ருத்திசப்தா 43
அநாதிமத்யாந்த 88
அநீசச்சாத்மாபத்ய 177
அநுபூதிம்விநாமூ 13
அந்தந்தமஃப்ரவிச 147
அந்தர்பஹிச்ச 85
அந்தஸ்ததர்மோபதே 140
அந்நம்ப்ரஹ்ம 155
அமாத்ரஸ் சதுர்த்தோ 67
அவஸ்தாத்ரிதயாதி 12
அவிமுக்தஸ்திதஸ்தஸ் 153
அஸௌயோ அவஸர் 65
அஸ்யபாதாச்சத் 26
அஸ்வரேணநுபாவே 44

மந்திரம். பக்கம்.

அஹம்காராவிஷ்டல் 208
அஹம்யதாவதாராத் 36
அஹோராத்ரேபாச் 99, 171
அக்ஷரம்ப்ரஹ்மபரம் 12
ஆகாசாத்வாயுஃ 84
ஆசார்யசாஸத்ர 4
ஆசார்யதேவோ 4
ஆசிரோகயிசாஸ் 3
ஆதமர்வாத்மாநம் 179
ஆத்மாநமரணிம்க்ருத் 210
ஆநந்தோப்ரஹ்ம 187
ஆயுஷ்காமோதவா 204
ஆவோராஜா 167
இதம்பித்ரேமருதா 113
இத்யுபநிஷத் 189
இமம்ஸ்தோமமர்ஹ 113
இமாருத்ராயஸ்திர 113
இஷ்டிந்தேஹம் 107
ஈசாவாஸ்யஜகதஃ 62
ஈசாவாஸ்யமிதம் 50
ஈசாநஸ்ஸர்வவித் 41
ஈச்வரஏவப்ரஹ்ம 92
உமாஸஹாயம் பர 88, 125
,, ,, நீல 170
ஊர்த்வபூரணம் 40
ஊர்த்வரேதம் 61, 170
ஏகமேவாத்விதீயம் 82
ஏகஸங்க்யாவிஹீ 102
ஏகஸ்ததாஸர்வபூ 192
ஏகோதேவஸ்ஸர்வ 50
ஏகோவசீஸர்வபூ 192
ஏகோஹவைநாரா 77
ஏததக்ஷரம்பரம் 7
ஏதந்நாமாஷ்டகம்புண் 186
ஏதஸ்மாத் ஜீவகநாத் 59
ஏகாக்ஷரம்புருஷ 59
ஏவமுக்த்வாததா 36
ஏவம்பந்தஸ்ததாஜீ 207
ஏஷ ஆத்மா அபஹத 73
ஏஷபுருஷஏஷபூதா 62

மந்திரம்	பக்கம்.
ஏஷஹ்கல்வாத்	97
ஏஷாமீசேபசுபதிஃ	179
ஓங்கார்ரதமாருஹ்	35
ஓமிதிப்ரஹ்ம	18
ஓமிதீதம்ஸர்வம்	165
ஓமித்யேகாக்ஷரம்	17
ஓமித்யேதக்ஷரம்பரம்	17
,, ,, மாமிதஸ	5
,, ,, மிதம்	16
ஓமித்யேததாத்மா	17
ஓமித்யக்ரே	157
ஓம்தத்ப்ரஹ்ம	165
ஓம்தத்ஸர்வம்	164
ஓம்நமோநாராய	156
ஓம்யோவைருத்ர	168, 195
க	
கர்ப்பஜந்மஜரா	151
கர்மாநிபத்யே	75
கர்மாத்யக்ஷஸ்ஸர்	50
கவிம்புராணம்புரு	87
கஸ்மிந்நுபகவோ	197
காத்யாயநாயவித்	54
காலஸ்வபாவோ	176
கிம்காரணம்ப்ரஹ்ம	175
கிம்தத்ப்ரஹ்ம	12
கிம்தத்வம் கோஞ்வ:	208
கிம்தாரகம்கிம்தார	156
குருரேவ பரம்ப்ரஹ்ம	4
க்ருஷ்ணபிங்களம்	170
ச	
சதுர்த்தம் க்ருத்தரூடம்	68
ஜ	
ஜந்மசிரோதம்ப்ர	117
ஜபம்தஸ்தாரகம்	152
ஜீவச்சிவச்சிவோ	207
ஜீவன்முக்தபதந்த்ய	31
ஜாவ்ஷ்டம்யதாபச்	177
ஜ்ஞாஜ்ஞௌத்வா	178
த	
தண்டுலஸ்யயதாசர்ம	207
ததக்ஷரம் தத்ஸவிது	10
ததஃகாச்யாம்ப்ரய	160
ததாநிமத்யாந்தவி	125
ததாபிமாநவாமூர்கா	204
ததாவித்வாந்நாமரூப	58

மந்திரம்.	பக்கம்.
ததூர்த்வமுன்மநா	34
தத்தேதத்துபாவிதவ்யம்	190
தத்தேதத்ருச்ரசரிதம்	190
தத்தேவாக்கிஸ் ததாதி	194
தத்த்ருஷ்டிகோசராத்	4
தத்புருஷாயவித்மஹே	53, 54
ததஃசதுஷ்பாதம்	10
தத்ஃபூர்வஸ்யாந்	160
ததஃபராருக்வே	9
தத்வம்பசுபதிஃ	208
தத்வித்வாநக்ஷரம்	44
தத்வித்வாந்புண்ய	58
தத்வேதகுஹ்யோப	119
தத்ஸவிதுர்வரேண்யம்	139, 140
தந்மத்கோவிலயம்	127
தபச்சதேஜபச்சதே	75
தமக்ரதும்பச்யதி	178
தமாத்மஸ்தம்யேநு	176
தமீசாநம்வரதம்	126
தம்சவைராஜம்	120
தமுஷ்டிஹ	114
தமேவம்விதித்வாதி	57
தமேவம்வித்வாநம்ரு	99
தமோங்காரேணைவா	35
தயாசஸ்தநுவாசக்	74
தயோரேகஃபிப்பலம்	179
தரதிசோகமாத்மவித்	132
தர்மாவஹம்பாப	108
தவச்ரியேயருதோ	104
தக்ஷிணஸ்யாம்திசி	160
தஸ்மாத்விராட	60
தஸ்மாத்ஸர்வாந்	124
தஸ்யப்ரோக்தோ	92
தஸ்யோத்தரதஸ்	25
தாரகத்வாத்தாரகோ	151, 152
தாரகம் சைவம்	157
திக்பந்மரஹிதம்	122
துர்லபம்ப்ராப்ய	2
தேசதஃகாலதோ	48
தேசகாலவஸ்து	48
தேவாநாம்பதிரே	192
தேஹஸாமம்ப்ராப்	35
த்யாநவாமூநீர்	87
த்யேயஸ்ஸதாஸவி	64
த்ர்யக்ஷரம்புநஃ	68

முதற்குறிப்பு அட்டவணை.

மந்திரம். பக்கம்.
த்ரிபுண்ட்ரதாரணம் 205
த்ரிலோசநம் உமார் 170
த்வம்ப்ரஹ்மாத்வம் 164
த்வம்வாரஹமஸ்மி 169
த்வம்ததாபஆபோ 194
த்வம் தேவேஷு 134
த்வம்யஜ்ஞஸ்த்வம் 194
த்வம்ராஜந்ப்ர 154
த்வம் ஸ்திரித்வம் 194
த்வாஸுபர்ணா 173
த்வேவாவப்ரஹ் 184

ந
நதஸ்யகச்சித்பதி 117
நதஸ்யகார்யம் 120
நதஸ்யப்ரதிமா 74
நதஸ்யரோகோ 109
நமச்லோகாயச 113
நமஸ்தேஅஸ்துபக 169, 170
நமஸ்தேதுநமஸ்தேது 37
நமஸ்தேவாயோ 154
நமோஹிரண்யபா 64, 170
நாடிமூலாவ்ருதா 24
நாந்தப்ரஜ்ஞம் 67
நாப்ரசாந்தாயதா 3
நாயமாத்மாப்ரவச 15
நாராயணாத்ப்ர[illegible] 77
நாராயணாயவித்ம 54
நிரஞ்ஜந:பரமம் 132
நிர்மிதம்ஹிமயாபூர் 206
நைகமூர்த்வம் 74

ப
பகவத்யந்தபூர்ணேதி 168
பஞ்சக்ருத்யநியந்தா 80
பஞ்சப்ரஹ்மஸம்ஹா 80
பதிம்பதீநாம்பரமம் 120
பந்தமோக்ஷவிஹீநோ 82
பராத்பரதரோப்ரஹ்ம 148
பராஸ்யசக்திர் 120
பர்கஸ்த்ரயம்பக: 134
பஸ்மதாரணஸம் 37
பஹுசாஸ்த்ரகதாக் 13
பாஸ்கராயவித்மஹே 54
புத்திகுஹாயாம்ஸர் 60
புராதநோஹம்புரு 57
புருஷஏ வேதம்ஸர் 60

மந்திரம். பக்கம்.
புருஷம் நிர்குணம் 106
புருஷஸ்யவித்ம 52
புருஷேஸர்வசாஸ் 125
புருஷோவை ருத்ரஸ் 51, 56
புருஷோஹவைநாரா 55
புல்லிங்கம்ஸர்வமீசா 168
பூத்யைநப்ரமதி 204
பூர்ணத்வாத்புருஷ 48
ப்ரசந்நவதநம்த்யா 25
ப்ரசந்நாநம் 25
ப்ரசந்நோமத்தவார 25
ப்ரணவோதநு 24, 35
ப்ரணவஸ்தாரகஸ் 152
ப்ரதமம்தாரகாகாரம் 24
ப்ரதமாரக்தாபீதா 47
ப்ரதாநக்ஷேத்ரஜ்ஞ 89
ப்ரதிச்யாமித்ரஸ் 160
ப்ரஹ்மணபுத்ராய 118
ப்ரஹ்மலோகபதாந் 35
ப்ரஹ்மலோகமபிஸம் 43
ப்ரஹ்மவிதாப்நோதி 133
ப்ரஹ்மவேதப்ரஹ்மை 132
ப்ரஹ்மாவிஷ்ணுச்ச 11
ப்ரஹ்மைகம்த்வம் 192
ப்ராணம்மநஸிஸஹ 69
ப்ராணைர்ஸர்வாந் 111
ப்ருதிவ்யாப்யதேஜோ 109

ம
மமாபிவிஷ்ணோர்ஜநகம் 83
மஹாந்ப்ரபுர்வைபுருஷ 56
மாண்டுக்யமேகமே 67
மாமேவமாம்யோ 197
முக்தச்சைவஸமோ 137
மூடத்வாதாத்மஸ்தம் 169
மைத்ரோப்ராஹ்மண 136

ய
யஇமாம்லோகாநீ 59
யஇமாவிச்வாபுவநா 211
யச்சேஅஸ்யத்விப 178
யஏகஸ்ஸஏகோரு 192
யஏஷஸுப்தேஷு 59
யஏஷோக்ஷராந்த் 63
யஏஷோந்தர்ஹ்ருத 62
யஜுஷதீக்ஷுயோவ 211
யதக்ஷரம் பரம்ப்ரஹ்ம 137

மந்திரம்.	பக்கம்.
யதாசர்மவதாகாசம்	126
யதாதமஸ்தந்நதிவா	10
யதாநத்யஸ்யந்த	58
யதாந்தரம் கபச்யாமி	145
யதாபச்யபச்யதே	58
யதியோர்யாம்ப்ர	123
யதோவாசோநிவர்த்	173
யத்தேகலியாணம்	171
யத்ருத்ராபவாகாச்	155
யத்ரநாந்யத்பச்யதி	191
யயாகிராத்ஸர்வபாப	57
யஸ்மாத்பரம்நாபர	40
யஸ்யதேவேபராபக்தி	3
யஸ்யநாமமஹத்	167
யஸ்யாங்கஜோஹம்	83
யஸ்யாதித்யசரீரம்	65
யஸ்யாமதம்தஸ்யமதம்	173
யஸ்ஸர்வோபரமகா	80
யஃகாரணாநி நிகிலாந்	176
யஃபாநரேதம் த்ரிமாத்ர	60
யாஜ்ஞவல்க்யயோஹ	66
யாதேருத்ரசிவாதநு	74
யஞ்ஜேதமகயுதயுஞ்ஜ	134
யோதேவாநாம்ப்ர	28
யோதேவோ அக்நௌ	211
யோநிஸ்ஸமுத்ரா	19
யோந்தகாலேஸர்வ	80
யோர்யாயதேவதா	127
யோப்ரஹ்மாணம்வித	27
யோயம்விஜ்ஞானமய	59
யோருத்ரோ அக்நௌ	211
யோவிஜ்ஞானதிஷ்டந்	179

ர

மந்திரம்.	பக்கம்.
ரமமேவபரம்ப்ரஹ்ம	144
ராமம்த்ரிணேத்ரம்	159
ருதம்ஸத்யம்பரம்	61
ருத்திஸம்ஸாரஜம்தக்	42
ருத்ரஏகத்வமாஹுஃ	190
ருத்ரம்சாச்வதம்மை	202
ருத்ராத்ப்ரவர்த்ததே	147
ருத்ரோவாஏஷயதக்நி	74
ரௌத்ரம்லிங்கரூபி	104

ல

மந்திரம்.	பக்கம்.
லிங்கரூபிணம்	104

வ

மந்திரம்.	பக்கம்.
வஜ்ரநகாயவித்மஹே	54
வாரதாநாம்மஹேந்த்	160
விக்ரஹம்தேவதேவஸ்	185
விச்வதச்சக்ஷுருத	96
விச்வம்நாராயணம்	41
விச்வம்பூதம்புவனம்	50
விச்வம்விஷ்ணு	41
விச்வஸ்யைகம்	126
விபூதிதாரணேதேவ	208
விப்ராணும் தேவதம்	135
விஷ்ண்வாதிகாக்ஷ	93
வேதாத்மநாயவித்ம	54
வேதாந்தேபரமம்	3
வேதாவதம்ஸம்சைவ	157
வேதாஹமேதம்புருஷம்	57
வேதாஸ்ஸாங்காஸ்	160
வேதைரநேகைரஹ	27
வைச்வாநராயவித்	54
வைஷ்ணவேஷுபுரா	119
வ்ருக்ஷஇவஸ்தப்தோ	49

ஸ

மந்திரம்.	பக்கம்.
ஸகலஸர்வம்பச்யு	193
ஸஹஸ்ராரோயதுக்	105
ஸகாரணம்காரணாதி	117
ஸதாசிவோக்ஷரவிம	9
ஸதாசிவோம்	165
ஸக்ருதுச்சரிதமாத்	107
ஸத்யஞ்ஜ்ஞாநம	82
ஸபூமைவஸாகம்	
ஸப்ரஹ்மாஸசிவஸ்	193, 87
ஸமாநம்வரம்	19
ஸமாநேவ்ருக்ஷே	173
ஸமேதயநியந்நீத்யம்	123
ஸம்யோகஏஷாம்	176
ஸர்வகாரணீபாவி	69
ஸர்வசக்திமயோஹேஷ	146
ஸர்வஜ்ஞ பஞ்சக்ருத்ய	208
ஸர்வதர்மாந்பரித்யஜ்	124
ஸர்வதஃபாணிபாதம்	95
ஸர்வதேவவேதயோநி	16
ஸர்வமிதம்ப்ரஹ்ம	11, 87
ஸர்வம்ஜக்ஷிசம்வா	16
ஸர்வவ்யாபீசபகவாந்	49
ஸர்வாநநசிரோக்ரீவ	49, 96
ஸர்வாநந்தமயச்சிவ	187

மந்திரம்.	பக்கம்.
ஸர்வேதேவாபசுதாம	93
ஸர்வேந்த்ரியகுணாபா	95
ஸர்வேப்யோதுக்க	151
ஸர்வேவேதாயத்பத	115
ஸர்வோவைருத்ரஸ்	
ஸவேத்திவேத்யம்	50
ஸஹஸ்ரசீர்ஷா	94
ஸைவஸர்வமிதம்	194
ஸுநிர்மலாமிமா	56
ஸூர்யத்வாரே	58
ஸைவஜகதண்ட	139
ஸோமஸ்ஸஹோம	34
ஸோஸ்நுஜக்தக்ஷ்ணு	89
ஸ்ரஷ்டாஸ்ருஷ்டிச்சலே	204
ஸ்திரேபிரங்கைபுரு	73
ஸ்தோமம்வோகத்	113
ஸ்வரேணஸந்தயேத்	44
ஶ	
ஶங்கரோபகவாஜ்யோ	168
ஶப்தப்ரஹ்மமணி	14
ஶப்தாக்ஷரம்பரம்	44

மந்திரம்.	பக்கம்.
ஶிரச்சோத்தர	26
ஶிவஏகோத்யேய	124. 189
ஶிவஏவஸதாத்யேய	124
ஶிவமக்ஷரமவ்யயம்	10
ஶிவாயவிஷ்ணுரு	145
ஶிவோமஹேஶ்வரச்	186
ஶிவோமா ராமசந்	159
ஶீர்ஷாத்தர்கதமண	60
ஶ்ரீராமஸ்யமநும்	156
ஹ	
ஹரஃஸ்மரஹரோ	138
ஹரேராமஹரேராம	158
ஹிரண்யகர்ப்பம்	24
ஹ்ரீச்சதேலக்ஷ்மீ	99
ஹ்ருதயக்ரந்திவிஹீ	103
ஹ்ருதிக்ஷமஸியோ	102
ஹ்ருதிஸ்தாதேவதா	102
ஹ்ரீங்காரேண	168
க்ஷ	
க்ஷராந்த்யவித்யா	178
க்ஷரம்ப்ரதாநம்	178

ஓங்காரவிளக்கத்தில் எடுத்தக்காட்டியுள்ள மந்திரசுலோகங்களின் முதற்குறிப்பு அட்டவணை முற்றுப்பெற்றது.

☞ இந்நூல் விலை ரூபா 2—4—0. விபூதிருத்ராக்ஷ மஹத்வ விளக்கம் விலை அணா 0—2—0. வேண்டுவோர் அடியில்கண்ட விலாசத்துக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

சோ. சிவ அருணகிரி முதலியார்,
"ஆனந்த நிலயம்"
சோளங்கிபுரம்.
(வடஆர்க்காடு ஜில்லா)
SHOLINGHUR (NORTH ARCOT DISTRICT.)

drasekharendra Saraswati
ernational Library,
HUR-KANCHIPURAM
No. 38755
No.

உபோற்காதம்.

சைவசமயஸ்தாபனாசாரியருள் ஒருவராகிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் க்ஷமணர் என்னுமிரவரும் கழுவேறினமைக்குக் காரணராயிருந்தார் என்றும், அதனால் அவர் சீவகாருண்ணியமிலராயினர் என்றும், யேசுக்கிறிஸ்து சீவகாருண்ணியமுடையரென்றும் திருவனந்தபுரத்துதித்த "அறிவுவிளக்கப்" பத்திரிகையில் ஓர் நிருபர் "மதக்ஷமை" என்னும் முகவுரையின் கீழே தாபித்து வரைந்திருந்தமைகண்டு, சென்ற பிலவவருட ஆடி மாசத்திலே, அர்த்தநாரீசுவரப்பெருமானும் முருகப்பிரானும் ஒருங்கு எழுந்தருளியிருக்கும் கொடிமாடச்செங்குன்றூர் எனப்படும் திருச்செங்கோட்டிலே செல்வச்சிரஞ்சீவி தி. ச. முத்துச்சாமிக்கோனாரவர்களால் நடாத்தப்பட்ட "விவேகதிவாகரன்" பத்திரிகையிலே, அந்த "மதக்ஷமை" விஷயத்தை "ஸ்ரீச்காழிப்பெருவாழ்வின் சீவகாருண்ணியமாட்சி" என்னும் முகவுரையிட்டெழுதி மறுத்தேம்.

இதிற் பிரபஞ்சோற்பத்தி வெகுகாலத்தினதென்றும், பிற்காலத்துக் கிறிஸ்தவர் முதலியோர் புன்சமய நூல்களுக்கெல்லாம் முற்பட்டது இருக்காதி வைதிக சைவசாஸ்திரம் என்றும், இந்த அகண்ட சத்திய சாஸ்திரத்திற் பிரதிபாதிக்கப்பட்ட வைதிகசைவத்தைப் போற்றி வந்தவர் பாண்டிவளநாட்டார் முதலாயினோர் என்றும், இந்த உத்தமோத்தம வைதிகசைவப் பாண்டிதிலகத்தினைத் துர்ப்போதனைக் கனைகளினால் மூடிக்கெடுத்தவர் க்ஷமணர்களாம் என்றும், அதுபற்றித் தருமசாஸ்திரத்திற் பிரதிபாதிக்கப்பட்டவாறு தருமரூபமாகிய கழுவேற்றத் தண்டனை செய்து, க்ஷமண் காட்டை வெட்டி க்ஷமணர்மீதும் குடிகண்மீதும் மற்றெல்லா நாட்டார்மீதும் எக்காலத்தும் பரிபூரண சீவகாருண்ணியம் பாலித்தருளினவர் ஸ்ரீசிகாழிப் பெருவாழ்வாகிய ஸ்ரீஞானசம்பந்தவள்ளலாராம் என்றும் வரையப்பட்டுள்ளது. இதனை அந்த "விவேகதிவாகரன்" பத்திரிகையினின்று பெயர்த்து இப்போது புஸ்தகரூபமாக்கிவிட்டேம்.

இங்ஙனம்,
ஸ்ரீகாசிவாசி—செந்திநாதையர்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ரீசீகாழிப் பெருவாழ்வின்

சீவகாருண்ணியமாட்சி.

மலைநாட்டைச் சார்ந்த திருவனந்தபுரத்தினின்று “அறிவு ரக்கம்” என்னும் மாசிகபஞ்சிகை ஒன்று நாலைந்து மாசங்களாக த்து நிலவுகின்றது. இப்பஞ்சிகை நடாத்துபவர் ஸ்ரீவள்ளல் ர. சிவஞானதேசிகரவர்களே. அதற்கு விஷயதானஞ் செய் ரர் ஆங்கிலேய பட்டம் பூண்ட பலரேயாம். அவ்விஷயங்களி ன்று “மதக்ஷமை” என்பது. இதில் யேசுக்கிறிஸ்து பெரி ர் என்றும், ஸ்ரீசீகாழிப்பெருவாழ்வாகிய ஸ்ரீஞானசம்பந்தர் ணரைக் கழுவேற்றிவைத்தமையின் சீவகாருண்ணிய மில , அவர் பேராற்றலுக்கும் பெருமைக்கும் இழுக்காய் முற்றினார் றும் வரையப்பட்டிருக்கின்றது. அம்மதக்ஷமை வரைந்தவர் ந்துத் தவறுமென்பது முன்னர்க் காட்டுதும்.

ஆங்கிலேய பாஷையிற்றேறினோர் பலர் சிறுவயசிலே தங் முழுமையும் அவ்வாங்கிலேய பாஷையிற் செலுத்தி மனசைக் க்கிவிட்டமையின் தஞ்சமயநூலாராய்ச்சியேனும், சமயநூலா சியுடையார் சகவாசமேனுமிலராய், ஆங்கிலேய பாஷாசம்பந்த விவிலியநூலையும் அதைச் சார்ந்த நூல்களையுமே அப்பிய வந்தமையானும் வருகின்றமையானும், அவ்விவிலியநூலு ார் சகவாசம் பெரிதுமுடையராய்க் கிறிஸ்து மதமே மோக்ஷத் நன்னெறி [illegible] ம் கோட்பாடுடையராகின்றனர்; வேறு கிறிஸ்துமதம், இஸ்லாமதம், பௌத்தமதம், க்ஷமணமதம்,

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீசீகாழிப் பெருவாழ்வின்

சீவகாருண்ணியமாட்சி.

மலைநாட்டைச் சார்ந்த திருவனந்தபுரத்தினின்று "அறிவு விளக்கம்" என்னும் மாசிகபஞ்சிகை ஒன்று நாலைந்து மாசங்களாக உதித்து நிலவுகின்றது. இப்பஞ்சிகை நடாத்துபவர் ஸ்ரீவள்ளல் சோ. சிவஞானதேசிகரவர்களே. அதற்கு விஷயதானஞ் செய்வோர் ஆங்கிலேய பட்டம் பூண்ட பலரேயாம். அவ்விஷயங்களிலொன்று "மதக்ஷமை" என்பது. இதில் யேசுக்கிறிஸ்து பெரியவர் என்றும், ஸ்ரீசீகாழிப்பெருவாழ்வாகிய ஸ்ரீஞானசம்பந்தர் க்ஷமணரைக் கழுவேற்றிவைத்தமையின் சீவகாருண்ணிய மிலராய், அவர் பேராற்றலுக்கும் பெருமைக்கும் இழுக்காய் முற்றினார் என்றும் வரையப்பட்டிருக்கின்றது. அம்மதக்ஷமை வரைந்தவர் கருத்துத் தவறாமென்பது முன்னர்க் காட்டுதும்.

ஆங்கிலேய பாஷையிற்றேறினோர் பலர் சிறுவயசிலே தங் காலமுழுமையும் அவ்வாங்கிலேய பாஷையிற் செலுத்தி மனசைக் கூராக்கிவிட்டமையின் தஞ்சமயநூலாராய்ச்சியேனும், சமயநூலாராய்ச்சியுடையார் சகவாசமேனுமிலராய், ஆங்கிலேய பாஷாசம்பந்தமுற்ற விவிலியநூலையும் அதைச் சார்ந்த நூல்களையுமே அப்பியசித்து வந்தமையானும் வருகின்றமையானும், அவ்விவிலியநூலுடையார் சகவாசம் பெரிதுமுடையராய்க் கிறிஸ்து மதமே மோக்ஷத்துக்கு நன்னெறி என்னும் கோட்பாடுடையராகின்றனர்; வேறு பலர் கிறிஸ்துமதம், இஸ்லாமதம், பௌத்தமதம், க்ஷமணமதம்,

ஷ்ணவமதம், சைவமதமுதலிய எல்லா மதத்துக்கும் கடவுள் ருவரே என்னும் பொதுவறிவுமாத்திர முடையராகின்றார்; வேறு ர் முற்செனனத்தீட்டிய சிவபுண்ணிய மேலீட்டினாலே சைவமே ச்சமயங்களினுஞ் சிறந்தது எனக் கடைப்பிடிக்கும் நன்னெறி க்கணின்று சைவத்தை மிருதியும் பாராட்டி ஆராய்வாராயினார். திறினின்றொழிந்து, பிறரெல்லாம் தத்தம் அன்பு மலினமுற்று டாயொழிந்தமையின், இவர் செவிகளில் நாம் உரைப்பது ஓர் பாதும் உறைக்காது, சுவைக்காது. ஆகலின், அவரை விடுத்து ர் தற்போதனைப்பற்றப்பட்டு நம் அன்பர் தீநெறிக்கட் பிறழ்ந்து ல்லாவண்ணம் இஃதெழுதுவேமாயினேம்.

இராப்பகல்களும், ஞாயிறு முதற் சனி யீறாகிய வாரங்களும், க்லபக்ஷ கிருஷ்ணபக்ஷங்களும், சித்திரை முதற் பங்குனி யீறாகிய சங்களும், உத்தராயண தக்ஷிணாயனங்களும், பிரபவ முதல் அக்ஷ ருதியாகிய வருஷங்களும் மாறி மாறி வருதல் போல, கிருதயுக் தற் கலியுகமிறுதியாம் நான்கு யுகங்களும் மாறி மாறி வருமென் ர்க. கிருதயுகத்திற் பதினேழுலக்ஷத்திருபத்தெண்ணாயிரம் 28000) வருஷமும், திரேதயுகத்திற் பன்னிரண்டு லக்ஷத்துத் ண்ணூற் றாறாயிரம் (1296000) வருஷமும், துவாபரயுகத்தில் டுலக்ஷத் தறுபத்துநாலாயிரம் (864000) வருஷமும், கலியுகத் நான்கு லக்ஷத்து முப்பத்தீராயிரம் (432000) வருஷமுமாக க்கு யுகங்கட்கும் வருஷங்கள் நாற்பத்துமூன்றுலக்ஷத்திருபதினா மாம் (4320000). இங்ஙனம் ஆயிரஞ் சென்றால் (நானூற்று ப்பத்திரண்டுகோடி 4320000000 வருஷஞ் சென்றால்) பிரமா கு ஓர் பகலாம்.

இன்னும் அத்துணை வருஷஞ் சென்றால் (எண்ணூற்றறுபத்தி குகோடி 8640000000 வருஷஞ் சென்றால்) பிரமாவுக்கு ஓர் ம். இங்ஙனம் முன்னூற்றறுபது சென்றால் (முப்பத்தோராயி நூற்றுநான்குகோடி 311040000000 வருஷஞ் சென்றால்) வுக்கு ஓர் வருஷமாகும். இங்ஙனம் நூறு சென்றால் (முப் தோர் லக்ஷத்துப் பதினோராயிரத்து நானூறுகோடி 31,10,400,00 0 வருஷஞ் சென்றால்) பிரமாவின் ஆயுள் முடியும். இது பிர

மப் பிரளயம் எனப்படும். இந்தப் பிரமாவின் ஆயுள் முடிவுக்கு இத்துணைக்கோடி லக்ஷம் வருஷஞ் செல்லுமேல் விஷ்ணு உருத்திரர் முதலாயினோர் பிரளயகாலவருஷத்தை யார் குறித்தறியவல்லார்! இங்ஙனம் எண்ணிறந்த பிரமாக்களும் எண்ணிறந்த விஷ்ணுக்களும், எண்ணிறந்த உருத்திரர்களும், எண்ணிறந்த இந்திரர்களும், எண்ணிறந்த காலர்களும் அழிந்தழிந்துபோக, அழிவில்லாது சேஷித்து நிற்பவர் சிவபெருமான் ஒருவரேயாம். ஸ்காந்தபுராணமும் இலிங்கபுராணமும் முறையே,

(௧) 𑌅𑌸𑌂𑌖𑍍𑌯𑌾 𑌵𑌿𑌲𑌯𑌂 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑌃 [illegible]
𑌮𑌾𑌃। 𑌅𑌸𑌂𑌖𑍍𑌯𑌾 𑌵𑌿𑌷𑍍𑌣𑌵𑍋 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾 𑌅𑌸𑌂𑌖𑍍𑌯𑌾 𑌵𑌾𑌸𑌵𑌾𑌦𑌯𑌃॥

(௨) 𑌅𑌸𑌂𑌖𑍍𑌯𑌾𑌤𑌾𑌶𑍍𑌚 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌖𑍍𑌯𑌾 𑌅𑌸𑌂𑌖𑍍𑌯𑌾𑌤𑌾𑌃 𑌪𑌿𑌤𑌾
𑌮𑌹𑌾𑌃। 𑌹𑌰𑌯𑌶𑍍𑌚𑌾𑌪𑍍𑌯𑌸𑌂𑌖𑍍𑌯𑌾𑌤𑌾 𑌏𑌕 𑌏𑌵 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌃॥

என்று கூறின. இவ்வுண்மையுணர்ந்த ஸ்ரீவாகீசமூர்த்திகளும்

நூறுகோடிபிரமர்கணொந்தினா
ராறுகோடிநாராயணரங்ஙனே
யேறுகங்கைமணலெண்ணிலிந்திர
ரீறிலாதவனீசனொருவனே.

என்றருளினர். மேலே உரைத்த பிரமாவின் பகற் போதாகிய நானூற்றுமுப்பத்திரண்டுகோடி வருஷங்களுள்ளே பதினான்கு மனுக்கள் அரசுபுரிவார். ஓர் மனு அரசு புரியுங்காலம் ஏறக்குறைய எழுபத்தொரு சதுர்யுகமாகும். இது மனுவந்தரம் எனப்படும். அப்பதினான்கு மனுக்களுள்ளே அரசுபுரிந்தொடுங்கினோர் சுவாயம்புவர், சுவரோசிஷர், அவுத்தமி, தமசர், இரைவதர், சாட்சுஷர் என்னும் அறுவர். இப்போது பரிபாலனஞ் செய்யும் மனுவின் பெயர் வைவசுவதர் என்பதாம். கிருத திரேத துவாபரம் என்னும் மூன்றுயுகத்துள் முப்பத்தெட்டுலக்ஷத் தெண்பத்தெண்ணாயிரம் வருஷஞ் சென்றுவிட, கலியுகத்துக்குள்ள நான்குலக்ஷத்து முப்பத்தீராயிர (வருஷங்களுள்), ஐயாயிரத்து மூன்றாவது பிலவ வருஷ ஆடிமாதம் இப்போது நிகழாநின்றது. ஆகவே, கிருதயுகந்

தொடுத்து முப்பத்தெட்டுலக்ஷத்துத்தொண்ணூற்று மூவாயிரத்து மூன்றும் வருஷம் நடை பெறுகின்ற தென்றவாறாயிற்று. இதற்குச் சான்று நாம் தினந்தோறும் ஸ்நான சந்தியாவந்தனாதிகளிலே சொல்லிவருஞ் சங்கற்பமும் பஞ்சாங்கமுமேயாம். பிறிது சான்று வேண்டாம்.

துவாபரயுகத்தின் முதற்கண்ணே சுவாயம்புவியாசரும், இரண்டாவது பிரசாபதிவியாசரும், மூன்றாவது உசனவியாசரும், நான்காவது பிரகஸ்பதிவியாசரும், ஐந்தாவது சவிதாவியாசரும், ஆறாவது மிருத்தியுவியாசரும், ஏழாவது இந்திரவியாசரும், எட்டாவது வசிட்டவியாசரும், ஒன்பதாவது சாரசுவதவியாசரும், பத்தாவது திரிதாமவியாசரும், பதினொராவது திரிவிருஷவியாசரும், பன்னிரண்டாவது பரத்துவாசவியாசரும், பதின்மூன்றாவது அந்தரிக்ஷவியாசரும், பதினான்காவது வப்பிறீவியாசரும், பதினைந்தாவது திரயாருணவியாசரும், பதினாறாவது தனஞ்சயவியாசரும், பதினேழாவது கிருதஞ்சயவியாசரும், பதினெட்டாவது இருணசெயவியாசரும், பத்தொன்பதாவது பரத்துவாசவியாசரும், இருபதாவது கவுதமவியாசரும், இருபத்தோராவது அரியதவியாசரும், இருபத்திரண்டாவது வேணவியாசரும், இருபத்துமூன்றாவது சுவுஷ்மாயனவியாசரும், இருபத்துநான்காவது வால்மீகிவியாசரும், இருபத்தைந்தாவது சக்திவியாசரும், இருபத்தாறாவது பராசரவியாசரும், இருபத்தேழாவது சாதுகர்ணவியாசரும், இருபத்தெட்டாவது கிருஷ்ணதுவைபாயன்வியாசருமாக இருபத்தெட்டு வியாசர்களும் தனித்தனி ஒருவர் பின் ஒருவராய் இருக்கு யசுர் சாமம் அதர்வணம் என்னும் நான்கு வேதங்களை வகுத்தார் என்று கூறப்பட்டிருக்கின்றது. அடுத்த துவாபரயுகத்திலே திரௌணிவியாசர் தோற்றுவார் எனவும், கிருஷ்ணதுவைபாயனர் தம் வியாசத்தொழிலினின்று நீங்கிவிடுவார் எனவும் உரைக்கப்படுகின்றது. இருக்குவேதாதி சூக்தங்களினிறுதியில் இவ்விருபத்தெட்டு வியாசர்களுட் பலவியாசர் பெயர்கள் காணப்படுகின்றமையின், அவ்வேத பாகங்கள் உள்ளபடி இருந்தன என டாக்டர் வில்சன் (Dr. Wilson) பண்டிதர் உரைக்கின்றார். வேதங்கள் வகுத்தமைக்கப்பட்டனவாகக் கூறப்

சிவகாருண்ணியமாட்சி.

படும் (கிருத திரேத யுகங்களை விடுத்து) துவாபரயுகவருஷத்தை மாத்திரமெடுத்து நிகழுங் கலியுகவருஷத்தோடு சேர்த்துக் கணிக்கினும், இப்போதுஎட்டிலக்ஷத்தறுபத்தொன்பதினாயிரத்துமூன்றும் (869003) வருஷம் நிகழாநின்றது. துவாபரயுகத்து இருபத்தெட்டாராவது வியாசர் அரியதர் என்பவர் பெயரை வகித்த இருக்குவேதத்து எட்டாம் மண்டலத்து எழுபத்திரண்டாம் சூக்தத்து மூன்றாம் மந்திரம்

அந்தரிச்சந்தி தம் ஜநே ருத்ரம் பரோ மநீஷயா க்ருப்ணந்தி
ஜிஹ்வயா ஸஸம்|

“சனங்களிடத்து அந்தரியாமியாயிருக்கும் சர்வோத்கிருஷ்டராகிய சிவபிரானை எவர் (அருட்) சத்தியோடு தியானிக்கின்றாரோ அவர் அன்னத்தை நாவினாற் கிரகிக்கின்றார்” என்று கூறுகின்றது. இங்ஙனம்

அந்தரிச்சந்தி யே ருத்ரம் ஸதா ஸக்த்யா உமயா| க்ருஹ்ண
ந்தி ஜிஹ்வயா தே ஹி ரஸவதண்ணாம்ருதோதகம்| நாந்தரிச்
ச்சந்தி யே ருத்ரம் பவாநீ ஸஹிதம் ஸிவம்| விஷ்டாமேவ
க்ருஹ்ணந்தி ஜிஹ்வயா தே ந ஸம்ஸயஃ||

“எவர் அருட்சத்தியாரோடு கூட வந்திக்கற்பாலராகிய சிவபிரானை எக்காலமும் தியானிக்கின்றாரோ; அவர் இரச நிறைந்த அமிர்தோதகத்தை நாவினாலே கிரகிக்கின்றார்; எவர் பவானியாம் சத்தியாரோடுகூட அச்சிவபெருமானைத் தியானிக்கவில்லையோ, அவர் மலத்தையே நாவினாற் கிரகிக்கின்றார், சந்தேகமில்லை” என்று பராசரோபபுராணமும் கூறுகின்றது. இவ்வுண்மை “பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவாநாளே,” “நாகைக் காரோணங் கருதியேத்தப்பெற்றவர் பிறந்தார் மற்றுப்பிறந்தவர் பிறந்திலாரே,” “உண்பதன்முன் மலர் பறித்திட்டுண்ணாராகில் ... பெருநோய்கள் மிகநலியப்பெயர்த்துஞ் செத்துப் பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே” என்னும் திராவிட சுருதிகளானும் அறியற்பாற்றும். “பூசையிலாதானுண்டிப் பெருக்கினம் புலையின்

கட்ட, மாசுளபாபமொக்கும் வாளினிற்றியில் வீழ்ந்த, நாசமாவதுவேநன்று நற்குலம் பிறந்தானேனுங், தேசுளா ரவனைத்தீண்டிற் றெரிசிக்கினினைக்கிற் பாவம்” என்றார் பிறரும். மேலே உரைத்த இருக்கு வேத மந்திரத்துக்கியையக் கடவல்லியும் சுவேதாசுவதரமும் உரைத்த

𑌤𑌮𑌾 𑌤𑍍𑌮𑌸𑍍𑌥𑌂 𑌯𑍇𑌽𑌨𑍁𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌧𑍀𑌰𑌾𑌸𑍍𑌤𑍇𑌷𑌾𑌂 𑌸𑍁𑌖𑌂
𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌂 𑌨𑍇𑌤𑌰𑍇𑌷𑌾𑌮𑍍।

மந்திரத்துக்கு, வியாசர்

𑌤𑌸𑍍𑌮𑌾𑌚𑍍𑌚 𑌸𑌹 𑌤𑌯𑌾 𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌹𑍃𑌦𑌿 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌯𑍇 𑌶𑌿𑌵𑌮𑍍।
𑌤𑍇𑌷𑌾𑌂 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌿𑌕𑍀 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌰𑍍𑌨𑍇𑌤𑌰𑍇𑌷𑌾𑌮𑌿𑌤𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌃॥

“எவர் ஆன்மாவின்கண்ணே (அருட்) பராசத்தியாரோடுகூடச் சிவபிரானைத் தியானிக்கின்றாரோ, அவர்க்கே நித்தியமாகிய இன்பம் பிறக்கின்றும் எனச் சுருதி கூறிற்று” என்றார். இங்ஙனம் வேதத்துக் கன்மகாண்டம் ஞானகாண்டம் இரண்டினும் சூரியனிற் கிரணம் போல அருளாம்பிகையினின்று வேறுபடாச் சிவபிரானார் தியானிக்கற்பாலர் எனச் சிவோபாசனை விதிக்கப்பட்டவாறு காண்க. மேலே இருக்கு வேதமந்திரங்களிற் கண்ட மநீஷா என்னும் மொழி ஐதரேயோபநிடதத்து (௫. ௨) ஆம் மந்திரத்திலே காணப்பட்டு, சைவபுராண வாயுசங்கிதை உத்தர பாகத்து எட்டாம் அத்தியாயத்து ஐந்தாம் ஆறும் சுலோகங்களினும் பராசத்தியாரின் பெயராய்ப் போந்தவாறு பெறப்படுகின்றது. அஃதன்றி, அதனைப் பொருட்படுத்துமாறு மேலே போந்த பராசரோபப் பிருங்கணமும் பவாநீ என்று விளங்கவைத்தமை காண்க. இங்ஙனமுரையாது மாயாவாதாசாரியர்கள் ‘மநீஷா’ என்பதைப் ‘புத்தி’ என உரைத்து, வேதபரிபாஷாமொழிப்பொருள் அறியாது விபரீதப்பொருள்படுத்தி, வேதம் அனைத்தையும் அன்னணம் மலினஞ்செய்துவைத்தார்கள். மேலே உரைத்த ‘அம்பிகாபதி’ எத்தத்துவத்தினர் எனவும், அவர் வியாபகத்தான் என்னை எனவும் ஆராயுங்கால், இருக்கு வேதத்து முதலாம் மண்டலத்து இருபத்திரண்டாம் சூக்தத்தி இருபதாம் மந்திரம்

தத்விஷ்ணோ: பரமம் பதம் ஸதா பச்யந்தி ஸூரய:।

"அந்த வியாபகசீலராம் சிவபிரானாருடைய பரமாகாச பரமபதத்தை யக்காலமும் பெரியோர் பார்க்கின்றார்" என்று கூறிற்று. ஈண்டு "விஷ்ணு" என்னும் பதம் நாராயணருக்காகாது சிவபிரானார் திருநாமமாகப் பின்வருஞ் சுலோகத்தினாற் போந்தது.

சிவோ மஹேச்வரச்சைவ ருத்ரோ விஷ்ணு: பிதாமஹ:।
ஸம்ஸாரவைத்ய: ஸர்வஜ்ஞ: பரமாத்மேதி முக்யத:।
நாமாஷ்டகமிதம் நித்யம் சிவஸ்ய ப்ரதிவாசகம்॥

"சிவன், மகேசுவரர், உருத்திரர், விஷ்ணு, பிதாமகர், சம்சாரவைத்தியர், சர்வஞ்ஞர், பரமாத்துமா" என்னுஞ் சிவனுடைய அட்ட நாமங்களுள்ளே, அவ்விஷ்ணு என்னும் பதம் படிக்கப்படுதலின். விசேஷமென்னையெனிற் கூறுதும்.

சிவதத்வாதிபூம்யந்தம் சரீராதி கடாதி ச।
வ்யாப்ய திஷ்டதி சிவஸ்தேந விஷ்ணுருதாஹ்ருத:॥

"சிவதத்துவமுதற் பிருதிவியிறுதியாகச் சரீராதிகளையும் கடாதிகளையும் சிவபிரானார் வியாபித்து நின்றமையான் விஷ்ணு எனப்படுவர்" என்று சைவபுராணங் கூறிற்று. கூறவே, பிருகச்சாபாலோபநிடதத்து (4—19)ற் சிவதத்துவம் ஐந்தும், சுவேதாசுவதரத்து (1—2)ல் வித்தியாதத்துவம் ஏழும், பிரசினோபநிடதத்து (4—8)ல் ஆன்மதத்துவம் இருபத்துநான்குமாக முப்பத்தாறு தத்துவமும் சுருதியுக்தமாய், சிவதத்துவமுதற் பிருதிவியந்தமாய் முடிதலான், அந்த மகாதத்துவவியாபகம் மூவகைத் தத்துவங்களுள்ளே அதோபாகத்துற்ற ஆன்மதத்துவம் இருபத்துநான்பாற்பட்ட மூலப்பிரகிருதிவரையும் வியாபித்துநின்ற சகுணமூர்த்தியாம் பாஞ்சராத்திரர் விஷ்ணுவுக்கேனும், மாயாவாதிகள் நிர்க்குணப் பிரமத்துக்கேனும் எய்தாமையின், விஷ்ணு என்னும் நாம இருதிறத்து நாராயணர்க்கேனும் நிர்க்குணப் பிரமத்துக்கேனுஞ் செல்லாது; செல்லுமேல் அது உபசாரமாத்திரத்தால் என்றோர்க. வேதத்திலும் சைவபுராணாதிகளினும் காணப்படுகின்ற பஞ்சாக்கரத்

நின் பொருளாய் நின்றது இருக்கு யசுர் சாமம் அதர்வணம் என்னும் நான்கு வேதங்களின் சாரமாய்ப் போந்த ஸ்ரீகாயத்திரி மகாமந்திரமாம் என்க. இஃதுணர்ந்தே பாலறாவாயர் "அந்தியுண் மந்திரமைஞ்செழுத்துமே" என்றார். இங்ஙனம் மிக மிக நீடூழி காலமாய்ப் பரம்பரையாய்ப் பரதகண்டத்தில் வழிபடப்பட்டுவரும் பரமசிவசம்பந்தமாகிய சைவமதம் எச்சமயத்தார் தெய்வமெல்லாம் தன்னுள் வியாப்பியமாய் ஒடுங்க உயர்வொப்பின்றிப் போற்றப்பட்டு வருவதேயாமெனக் கடைப்பிடிக்க. ஏழாவது மனுவாகிய வைவசுவதர் தாம் இயற்றிய மநுநூலின் முதற்கண்ணே

விப்ராணாம் தைவதம் ஸம்பு: க்ஷத்ரியாணாந்து மாதவ:|
வைஸ்யாநாந்து பவேத் ப்ரஹ்மா ஸூத்ராணாம் கணநாயக:||*

"பிராமணர்களுக்குத் தெய்வம் சிவபிரானார் என்றும், க்ஷத்திரியர்களுக்குத் தெய்வம் விஷ்ணு என்றும் வைசியர்களுக்குத் தெய்வம் பிரமா என்றும், சூத்திரர்களுக்குத் தெய்வம் கணநாயகர்" என்றும் உரைத்தார். இச்சுலோகம் சைவமதத் துவேஷிகளால் தற்காலத்து மநுதருமசாஸ்திரத்தினின்று தொலைக்கப்பட்டமையாற் காணப்பட்டிலது.

"மற்றெல்லா நாட்டாரும் அறிவுசூனியராய் நாகரீகமிலராய் ஒழுகிய காலத்துக்கு மிக மிக நீடிய காலத்திலே சிற்பசாஸ்திரத்தினும், தருமசாஸ்திரத்தினும், ஞானசாஸ்திரத்தினும் மேன்மை படைத்தது இந்தியாதேசம்" என்றவர் இருபத்தொரு பாஷையில் வல்ல செர் வில்லியம் ஜோன்ஸ் (Sir William Jones) என்பவரேயாம். சோகிறேடீஸ் (Socrates), பிளேற்றோ (Plato), கிறிஸ்து முதலாயினோர்க்கு முற்பட்டவர்கள் சைமினியும் வேதவியாசரும் என்றார் ஓர் பிரான்சு ஜாக்காலியட் பண்டிதர். அமெரிக்காவின் மிசிசிப்பாய் நதியின் கழிமுகத்தெதிர் கிடக்கிய டெல்டாவில் (Delta) ஐம்பத்தேழாயிர வருஷத்து மனுஷனென [illegible] படுகின்றன என்றும், நியூ ஓர்லியான்ஸ் (New Orleas), லூசியானா (Lousina) என்னும் இடங்களிலுள்ள கழி [illegible] பரிசோதனை செய்தபோது, அதன் [illegible]

---

* [illegible] புராணம் [illegible] படலம், ௨௬. [illegible]

பத்தெண்ணா : (158000) வருஷத்ததென்றும் டாக்டர் பெனெற் டவுலர் (Dr. Benet Dowler) என்பவர் பூமி விவரணசாஸ்திரப் பிரகாரம் கூறுகின்றார். கூறவே, விவிலியநூலார் இப்பூமியை ஆரம்ப வருஷத்தது என்று கூறுவது தவறேயாம். மோக்ஷமூல (Max Muller) பண்டிதர் ஆயிரத்தெண்ணூற்றெண்பத்திரண்டாம் வருஷத்து டிசெம்பர் மாச மூன்றாந் தேதியைக்கொண்ட "தத்துவ ஞானவிசாரணி" எனப்படும் பத்திரிகைவாயிலாக லௌகிக வைதிக ஞானம் அனைத்துக்கும் இப்பூமியின்கண்ணே ஆனந்தஸ்தலமாய் வாய்ந்தது இந்தியாதேசம் எனப் பலவாறு வலியுறுத்தி உரைத்திருக்கின்றார். இங்ஙனம் புறதேசத்துப் பரசமயத்தாராலும் புகழப்படுகின்ற நமது சமயசாஸ்திரங்களையும் சமயாசாரியர்களையும் அலட்சியஞ்செய்து, "ஜீவான்மகோடிகள் ஆன்மரக்ஷிப்புக்கு ஓர் மரக்கலமென ஏறிச்செல்லும் கிறிஸ்துமதப் புணையைமுடித்து இத்துக்கசாகரத்தில் மிதக்கச்செய்தவர் யேசுக்கிறிஸ்து என்னும் பெரியவர்" என்று மதக்ஷமைக்காரர் வரைந்தார். நக்ஷத்திரங்களுளெல்லாம் நமக்கு மிகச் சமீபித்ததாய், இப்பூமியிலிருந்து ஆயிரத்துத்தொள்ளாயிரத்திருபதுகோடி (19200000000) மைல் தூரத்தினதாயுள்ள சீரியஸ் (Sirius) என்னும் இந்த நக்ஷத்திரத்தினும் முப்பத்தையாயிரம் மடங்கு பெரியதாய்த் தூரதிருஷ்டியந்திரம் எட்டற்பாலதாம் வெகுதூரத்தினதாய் நின்ற மாகெலனிக் கிளவுட்ஸ் (Magellanic Clouds) என்பதின் பாலதாகிய முப்பது டோரேடஸ் (30 Doradus) என்னும் நக்ஷத்திரக்கூட்டம் உளதாம். கிறிஸ்து செத்தெழுந்து மூன்றாம் நாட்டொடுத்து ஒலிவெட் (Olivet) மலையிலிருந்து மணி ஒன்றுக்கு ஆயிரம் மைல் வீதமாய்ப் பறந்தாலும் ஆயிரத்துத்தொண்ணூற்றெண்பத்துநான்காம் வருஷம் வரையும் நமக்கு மிகச் சமீபத்தினதாயுள்ள சீரியஸ் நக்ஷத்திரத்தையே அணுகமாட்டாது வெகு கோடி மைலுக்கப்புறம் நின்றார் என்றும், அதனால் அதற்கு மேலுள்ள நக்ஷத்திரத்தையேனும், அதற்குமேலுள்ள பரமண்டலத்தையேனும் கிட்டியவாறில்லை என்றும் ஆங்கிலேயநாட்டு ஆங்கிலேய பண்டிதர்கள் கூறுவார்களாயின், துக்கசாகரத்தினின்றேறக் கிறிஸ்து அமைத்த புணையை விசுவசித்து எங்ஙனம் மதக்ஷமைக்காரர் அதிலேறத் திடங்கொண்டாராயினரோ? நமது பண்டு தொட்ட

மதுரைச் சைவசமயக் குடிகள் அளவில்லார் அறிவையெல்லாம் தர்ப்போதனையினாலே பாழாக்கிக் கெடுத்த! க்ஷமணர் என்னுபிரவரைத் தருமசாஸ்திரப் பிராயச்சித்தநெறியானே கழுவிலேற்றித் தண்டித்த ஞானசம்பந்தப் பெருமானைச் சீவகாருண்ணியமிலர் என்றும், பெரியவரன்றென்றும், பேராற்றலிலரென்றும்வரைந்த மதக்ஷமையினர் 'உயிர்க்கொலை செய்யாதே' என்று தாம் விதித்த சட்டத்துக்கு மாறாக ஆகாரத்துக்குத்தானும் உதவாதனவாய்த் தீங்கிலாதனவாய்த் தீங்கு விளைக்காதனவாய் மலையின்மீது வாளாமேய்ந்து கொண்டு நின்ற பன்றிகள் இரண்டாயிரத்தை (மத்தேயு 8: 32-ஆம் வசனம் கூறுமாறு) சலத்திலமிழ்த்திக் கொன்று மிதக்கச்செய்தும், வளர்தல் அழிதல் என்னும் இருவகைப் பொதுவிலக்கணமுடையதாய்ப் பகுத்தறிவிலாத விலங்காய்த்தானுமிலதாய் நின்ற அத்தி மரத்தை (மத்தேயு 21: 19-ஆம் வசனம் கூறுமாறு) தம்பசிக்குப் பழங்கொடாமைகாரணமாக அதனை நீதிக்கு மாறாய்ச் சபித்து வாடுமாறுஞ்செய்துவிட்ட ஏசுக்கிறிஸ்துவைச் (சீவகாருண்ணியமுடைய) பெரியவர் என்றும், சீவகோடிகளைத்துக்கசாகரத்தினின்று மிதக்கச் செய்ய மரக்கலம் அமைத்தார் என்றும்; எங்ஙனம் எழுதத்துணிந்தார்?. ஏசுக்கிறிஸ்து பரமண்டலமடையமாட்டாது செத்தெழுந்து போய் ஆகாயத்திலே மிதந்துநின்றவாறுபோலவும், இரண்டாயிரம் பன்றிகள் வாவிச்சலத்திலிறந்து அவராற் பிரேதங்களாய் மிதந்து நின்றவாறுபோலவும், மதக்ஷமையினரும் துக்கசாகரத்தில் அமைக்கப்பட்ட கிறிஸ்துமதப்புணையில் மிதந்து கொண்டிருக்கின்றாரென்பதன்றித் துக்கசாகரத்தைக் கடந்து கரைசேர்ந்தவாறின்றும் என்பது அவர் வாயிலாகப் பெறப்படுகின்றது.

மேலும், கிறிஸ்துவின் காருண்ணிய விசேஷம் வியக்கும் மதக்ஷமைக்காரரே! "1539-ஆம் வருஷம் கிறிஸ்துமதத்தைச் சார்ந்த விதிகள் ஆறையும் அங்கீகாரஞ் செய்யாத ஐஞ்ஞூறு பேர் சிறையில் சாட்டப்பட்டமைக்கும், அநேகர் நெருப்பிலிட்டுக் கொல்லப்பட்டமைக்குங் காரணம் கிறிஸ்து போதித்த சீவகாருண்ணியமன்றோ! ஆறுவது எட்வேட் காலத்தில் யோக்கரும் பாறேயும் எரிக்கப்பட்டமைக்குக் காரணம் அவர் காருண்ணியப்பயனன்றோ! மேரி

என்னும் அரசிகாலத்தில் உரோமன் கத்தோலிக்கப் பாலர்களும், பெண்களும், ஆண்களுமாகச் சேர்ந்த இருநூற்றெழுபத்தேழுபேர் கொளுத்தப்பட்டமைக்குக் காரணம் அவர் காருண்ணியப்பேறன்றே! எலிசபேத் என்னும் அரசிகாலத்திலே புரோடெஸ்டாண்டு மதத்துக்கு வாராத ஆங்கிலேயரை, ஓர்வகை வேதனையந்திரத்திற் கைகளையும் கால்களையும் மாட்டி வருத்தினமைக்கும், நெருப்பிலிட்டமைக்கும், தூக்கிலிட்டமைக்கும், சிறையிலிட்டமைக்கும், பொருள் பறித்தமைக்கும் காரணம் அவர் போதனைப் பயனேயன்றே! சிந்தூர மரச்சட்டமொன்று நிலத்திலிருந்து மூன்றடி உயரத்துள்ளதேயாக, மதக்கோட்பாட்டுக்கிணங்காத ஆங்கிலேயரை நிலத்தின்மீது முதுகுபுறமாகக் கிடத்தி, அவருடைய மணிக்கட்டுகளையும் கணுக்கால்களையும் அந்தச் சட்டத்தின் ஓரங்களிலே சேர்க்கப்பட்டிருந்த உருளைகளிலே கயிறுகளால் இழுத்துக் கட்டிச் சட்டத்தோடு மருவுமாறு மிண்டிகளால் உயர்த்திவிட்டு, புரோடெஸ்டாண்டு சமயஞ் சார்தற்கு வேண்டப்படும் வினாக்களுக்கு அவர் தக்கவிடை கூறாராயின், அவ்வுருளைகளை உருட்டி உருட்டிச் சரீரத்தை எதிர்ப்புறமாக விரியச் செய்து என்புகளெல்லாம் பூட்டுவிடும்படி ஆக்கிவிட்டமைக்களுக்குக் காரணம் அவர் போதனைவிசேஷமன்றே! கிறிஸ்துமத விரோதிகளுள்ளே பல்லாயிரவர் வீடுமுதலிய இழந்தமைக்கும், வேதனையந்திரங்களிலே தைத்துமாட்டி இறுக்கி என்புகள் நொறுக்கப்பட்டமைக்கும், பல்லாயிரவர் இருட்டறைகளுள்ளே மீளா நீடிய சிறைகளிற் புகுத்தப்பட்டமைக்கும், பல்லாயிரவர் கிவோலெட் என்னும் யந்திரவாயிலாகத் துணி தொண்டைவரையும் திணித்துக் கொல்லப்பட்டமைக்கும், மொட்டையடித்துக் கொடுமை செய்யப்பட்டமைக்கும், நிருவாணமாக்கி மானபங்கஞ் செய்யப்பட்டமைக்கும், அண்டலூசியாவில் மூவாயிரம் பேர் கொளுத்தப்பட்டமைக்கும், பதினேழாயிரம் பேர் வேறு பிரகாரமாகக் கொல்லப்பட்டமைக்கும், ஸ்பானியாவில் முப்பத்தோராயிரத்துத் தொளாயிரத்துப் பன்னிருவர் கொளுத்தப்பட்டமைக்கும்; பேசியாவில் அறுபதினாயிரம் பேர் சங்காரஞ் செய்யப்பட்டமைக்கும், 1502-ஆம் வருஷம் முப்பதுலக்ஷம் பேர் ஊரைவிட்டு ஒட்டப்பட்டமைக்கும், இருவரைச் சேர்த்துக்கட்டி அவ்விரு

வர் பெருவிரல்களிற் கயிறுமாட்டி மரத்திலே தலைகீழாக இராமுழுதும் தூங்கவிடப்பட்டமைக்கும், ஓர் பெண் தீக்குச்சிகளால் அவள் கை எரிந்துபோம்வரையும் கொளுத்தப்பட்டமைக்கும், தேள்களும் துஷ்டசெந்துக்களும் நிறைந்திருந்த ஓர் ஆழிய குழிக்குள் ஒருத்தி குளறக்குளற விழுத்தப்பட்டமைக்கும், ஐந்தாம் நூற்றாண்டில் ஓர் சிறந்த தத்துவசாஸ்திரியாகிய ஹிப்பேதியா என்பவள் வண்டியிலே தன் இருப்பிடநோக்கிச் செல்லுங்கால் அவளை வண்டியினின்று இழுத்து நிருவாணமாக அவள் தோலை உரித்து அடித்து, அவள் சரீரத்தைச் சிப்பி ஓடுகளால் வெட்டிப் பொசுக்கிக்கொன்றமைக்கும் காரணம் கிறிஸ்து போதனையினால் விளைந்த சிவகாருண்ணியமன்றோ! 1619-ஆம் வருடம் தூலூசிலே வாணினி என்பவரின் நாக்கைப் பிடுங்கி அவரைக் கொளுத்திவிட்டமைக்கும், 1572-ஆம் வருஷம் ஆகஸ்டு மீ 24-ஆம் தேதி பாரேபட்டணத்தில் அரசனொருவன் ஆயிரத்து நானூறுபேரைத் தனது அரண்மனைச் சாளரத்திலிருந்து ஓட ஓடச் சுட்டுக்கொன்றமைக்கும், 1685-ஆம் வருஷம் சிற்சிலர்க்குப் பாதாதிகேசாந்தம் குண்டூசிகளாற் குத்தியும், சிறு கத்திகளால் வெட்டியும், ஒழுகக் காய்ச்சிய குறடுகளால் மூக்குகளைப் பிடுங்கியும் உபத்திரவஞ் செய்தமைக்கும் காரணம் கிறிஸ்துவின் ஞானோபதேசகாருண்ணியமன்றோ!!!" கூறுதிர். மதக்ஷமைக்கர்ரர் இவற்றை ஆங்கிலேய புஸ்தகங்களிற் படித்து மேலே கூறியவை பொய்யோ மெய்யோ என்றும், கிறிஸ்துமத சிவகாருண்ணியம் எவ்வளவு ஓங்கி நின்றதென்றும் ஓர்வாராக.

'களவு' என்னுஞ் சொற் கேட்டுக் களவு தீதெனலும், 'காமம்' என்னுஞ் சொற் கேட்டுக் காமம் தீதெனலும் அடாது. அவை நல்லவாமாறுமுண்டு. ஒருத்தி தன் பந்துக்களை வெறுத்து நஞ்சுண்டு சாவேன் என்னுங் கருத்துடையவளாய் நஞ்சு கூட்டிவைத்து விலக்குவாரில்லாதபோது உண்பதாக யோசித்து வைத்தவிடத்து, அவளுடையானொருவன் அதனைக் கண்டு இவள் இதனை உண்டு இறந்து போகாது கொண்டுபோய் உகுப்பதாக எண்ணி அவளைக் காணாது கொண்டுபோய் அதனை உகுத்துவிட்டான். அவளும் ஜனங்களில்லாதபோது நஞ்சுண்டு சாவேன் என்று எழுந்துசென்று

13

தான் நஞ்சூட்டி வைத்தவிடத்திற் காணுமையால் உயிர்பிழைத்தமை பற்றி, அது களவாகாதவாறு தேர்க.

சுவர்க்கத்திற் சென்று போகந் துய்ப்பேன் என்றும், ஞானம் பெற்று வீடு பெறுவேன் என்றும், தெய்வத்தை வழிபடுவேன் என்றும் எழுந்த காமம் பெரியோராலும் புகழப்பட்டு மறுமைக்கும் உறுதிபயக்குமாதலின், இக்காமம் நன்றுமாறும் ஓர்க என்றார் கணக்காயனார் மகனார் நக்கீரர். 'தீங்கு பயவாத நிகழ்ந்தது கூறலும், நன்மை பயக்கும் நிகழாதது கூறலும் மெய்ம்மையாமென்றோர்ந்தே, "பொய்ம்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின்" என்றார் உத்தரவேதமுடையாரும். மகாபாரதத்துக் கர்ணபருவத்து அறுபத்தொன்பதாம் அத்தியாயத்து முப்பத்துநான்காஞ் சுலோகத்தில் இன்ன இன்ன இடங்களிற் பொய்சொல்லலாம் என்று கூறப்படுதலான், பொய் நன்றுமாறும் உண்டு. அவ்வாறே

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible] துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனஞ் செய்து பிரஜைகளைக் [illegible] அடைகின்றார்; யாவரையும் [illegible] சுவர்க்கத்தை [illegible] துஷ்டர்களைத் தண்டித்தும் வரும் அரசன் [illegible] யாகவுடைய யாகஞ்செய்த [illegible]

புண்ணியத்தை அடைகின்றான்; அரசன் சோம்புதலின்றித் தண்டிக்கற்பாலரைத் தண்டிக்காவிடின், பெரிய மீன்கள் சிறு மீன்களை வாயிலிட்டுக்கொள்வது போல, பலமுள்ளார் பலமில்லார் பொருள் முதலியவற்றை அபகரித்து அவர்களைக் கொன்றுவிடுவர்; அரசன் தக்கவாறு தண்டனை செய்யாவிடின் அந்தத் தேசத்தின் யஞ்ஞயாகங்களின் புரோடாசத்தைக் காக்கை முதலியன தின்றுவிடும்; அவிசை நாய் முதலியன நக்கிவிடும்; அவன் அவன் பொருள் அவன் அவனுக்காகமாட்டாது; தண்டமானது பிரசைகளையெல்லாம் ஆஞ்ஞை செய்கின்றது; எல்லாரையும் காக்கின்றது; தூங்குபவரிடத்தில் விழிப்போடிருக்கின்றது; ஆகலின் பெரியோர் தருமத்தையே தண்டரூபமாகக் கூறுகின்றார்; இந்திரன், வாயு, இயமன், சூரியன், அக்கினி, வருணன், சந்திரன், குபேரன் என்னும் எண்மர் அம்சங்களினாலே அரசன் படைக்கப்பட்டான்" என்று தரும சாஸ்திரம் கூறுகின்றது. இது நிற்க.

குடிகளுக்குச் செய்யும் கொலை முதலிய தீமையினும் மகாராஜாவுக்குச் செய்யும் தீமையானது இராசத்துரோகமாய் (High treason) மிகக் கொடியதாகும். அதுபோலவே, ஆன்மாக்களுக்குச் செய்யும் துரோகத்தினும் கடவுளுக்குச் செய்யும் துரோகம் மிகக் கொடியது. குடிகளுக்குச் செய்த தீமை அரசனாலே பொறுக்கப்படினும் பொறுக்கப்படும். அரசனுக்குச் செய்த துரோகமோ பொறுக்கப்படமாட்டாது. அதுபோலவே, ஆன்மாக்களுக்குச் செய்த துரோகம் கடவுளாலே பொறுக்கப்படினும் பொறுக்கப்படும்; கடவுளுக்குச் செய்த துரோகமோ பொறுக்கப்படமாட்டாது. [illegible]

இராசத்துரோகிகளுக்கு நரகத்திலே யமதூதர்கள் இரத்த வெள்ளஞ் சிந்தும்படி தலையிலும் கண்களிலும் செவிகளிலும் நாசிகளிலும் வாயிலும் மார்பிலும் அறைந்து, உடம்பு முழுதும் தாமிர முதலிய உலோகங்களையுருக்கிய நீரைச் சொரிவார்கள்; மயிர்க்கால்தோறும் அக்கினியிற் காய்ச்சிய ஊசிகளை அழுத்துவார்கள்; அவ [illegible] இருப்பாம்புகளை மாட்டுவார்கள்; பின்பு [illegible] நிறைந்த செப்புக்கடாரத்தில் வீழ்த்திக் காய்ச்சுவார்கள். [illegible]

துரோகிகள் அந்தச் செப்புக்கடாரநெய்யிலே சந்திர சூரியர் உள்ளவரையும் குப்புறக்கிடந்து வருந்துவார்கள். இப்படி நரகத் துன்பத்தை அனுபவித்தபின், பூமியிலே மலத்திற் கிருமி முதலிய வைகளாய்ப் பிறந்திறந்துழன்று பின்பு மனிதப் பிறப்பை எடுத்து வலி குட்டம் க்ஷயம் நீரிழிவு பெருவியாதி மூலவியாதி முதலிய மிகக் கொடிய நோய்களினாலும் பசியினாலும் வருந்துவார்கள்" என்று சிவதருமோத்தரம் கூறுகின்றது.

அதிபாதகம் மகாபாதகம் உபபாதகம் எனப் பாபம் மூவகைப் படும். இவற்றுள் அதிபாதகங்களாவன:—சிவநிந்தை, சிவத்திர வியம் புசித்தல், குருநிந்தை, சிவனடியார் நிந்தை, வேதாகம நிந்தை முதலியவைகளாம். இதனாற் சிவதூஷணமும் புன்மத பூஷ ணமுஞ் செய்தலாற் குடிகள் சிவநெறியிற் பிறழ்ந்து புன்னெறியிற் பட்டொழுகச் செய்தல் முதலியனவும் அதிபாதகம் என்பது இராசத்துரோகத்தில் ஒட்டிக் காண்க. மகாபாதகங்களாவன:— பிராமணரை வதைத்தல், பிராமணர் சுராபானஞ் செய்தல், குரு மனைவியைப் புணர்தல் முதலியனவாம். உபபாதகங்களாவன:— பிராமணர் பெரியோராயினோர் பொருளைத் திருடுதல், தபத்தின ரைக் கோபித்தல், விபசாரஞ்செய்தல், ஆசுரமணஞ்செய்தல், குணசீலரைக் கோபித்துக் கொலைசெய்தல், உறவினர், புண்ணியர், பசுக்கள், அரசன், பெண்கள் முதலாயினோரைக் கோபித்து வதைத்தல், புறச்சமயத்தவரின் நிலைமை கெடுத்தல் முதலாயினவாம்.

மதுராபுரியிலே கூன் பாண்டியன் அரசுபுரியுங்கால், 'குடிகள் தாஞ் செய்யும் மெய்யொழுக்கமாகிய சைவசமயத்தினில்லாது, தீத் தொழில் செய்யும் அருகசமயம் யாண்டும் பரவுதலான் ஒழுக்க நீதி நீங்கிக் கலங்க, பாண்டியனும் சமணர் துர்ப்போதனையால் வைதிகசைவநெறியில் வழுவி அருகசமயநெறியை நன்னெறியெனக் கருதி அந்நெறியில் ஒழுகினன்; 'அரசன் எப்படி மன்னுயிர் அப் படி' என்றவாறு, அரசன் அருகசமயத்தானமையால் அரசன் வழித்தாகிய மதுராபுரிவாசிகளும் தம்மொழுக்கங்குன்றி கோடினர்; கேட்டிலே வாய்மையாம் வைதிகசைவ மார்க்கம் மாறுபட்டுத் [illegible] [illegible] பாண்டிநாடெங்கும் [illegible]

கோயில்களும் சமண்பள்ளிகளுமாயின; இருட்கூட்டம் போன்ற மயிற்பீலி கைக்கொண்டு, கமண்டலிகைக் கயிற்றுற்றூக்கி யாவரும் சமணரேயாய்ப் பொய்த்தன்றி; மயிர்பறித்தலும், உடுத்தபாயும், பிடித்த மயிர்க்கற்றையும்; இடுக்கிய தடுக்கும், உடம்பு, மார்பு, நெற்றி, தோள்முதலிய தானங்களில் அடையாளமாக எழுதிய அருகன் முக்குடையுமாய் யாண்டும் சஞ்சரித்தார் சமணர். அதனாற் பாண்டிநாட்டுள்ளார் வேதசாரமாகிய வைதிகசைவமார்க்கத்தில் மனஞ் செலுத்தாதொழிந்தார். பாண்டியன் நெடுமாறு சோழராசன் பெற்றெடுத்த செல்வப் புத்திரியாராகிய பாண்டிமாதேவியார், மந்திரியாராகிய குலச்சிறைநாயனார் என்னும் இருவரிடத்தன்றிச் சைவமார்க்கம் அந்நாட்டில் வழங்காதொழிந்தது. நித்திய நைமித்திய பூசைகள் நடாத்தவேண்டியவனாகிய அரசன் சமணர்ப்போதனைக்குட்பட்டமையானும், குடிகளும் அவ்வாறு ஆருகதமதப்பிரவேசஞ் செய்தமையானும் மீனாக்ஷியம்மை சமேத சோமசுந்தரப்பெருமானது நித்திய நைமித்திகங்களெல்லாம் வேதசிவாகமப்பிரகாரம் நடைபெறமாட்டாவென்பது ஆயவும் வேண்டுமோ? ஆகவே, இச்சிவத்துரோகத்துக்கெல்லாம் காரணராகி, அரசன் முதற் குடிகளீறாகிய யாவர் மனதையும் தம்வசப்படுத்திக் காடுபோல் மூடிக்கெடுத்தவர், அதிபாதகசிரோமணிகளாகிய சமணர்களேயாம். இவரெல்லாம் 'சம்சாரமோசகதாதாவாகிய சர்வேசுவரரை எவன் நிந்திக்கின்றானோ, அவன் பாபத்துக்கு உடனே மகா தண்டனை வந்தடையும்'

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

மூண்டதமிழ் [illegible] முருகன் [illegible]
பண்டுணர்வற் [illegible] பரமே [illegible]
தெரிந்து [illegible] மெய்யோர்க்கெல்லாந்
தண்டம்வந்திடுமென மறைதஞ்சாற்றுமால்

[illegible] அறிந்தார் [illegible] உடப்பித்தம்

[illegible] அதிபாதகர் என்னும் [illegible] பாதகர்கள் அதிகோடிம்

சிவத்துரோக அதிபாதகத்துட்பட்டவர் சமணர் என்பது அகஸ்தியபக்தவிலாசம், பெரியபுராணம், அகஸ்திய சங்கிதை, திருவிளையாட்டல் என்பவைகளால் அறியக்கிடக்கின்றது; நெற்பயிர்களை வளரவொட்டாது தடுத்து இடையூறு விளைக்கும் களைகளைப் பறித்தல் பாபமாகாதவாறு போலவும், நிலங்களிற் படர்ந்து வளர்ந்த முட்புதர் கட்டை வெட்டிக்களைதல் பாபமாகாதவாறுபோலவும், பசுக்களை மனிதர் முதலாயினோரைக் கொல்லவரும் துஷ்டமிருகங்களைக் கொல்லுதல் பாபமாகாதவாறு போலவும்; குடிகளைத் திருடிக்கொல்லும் கள்வரைக் கொல்லுதல் பாபமாகாதவாறுபோலவும், தத்தம் மதத்தை அநுசரித்துப் பிறரைக் கெடுக்காது வாளாவிராது, மீனாக்ஷியம்பாசமேத சோமசுந்தரேசுவர பூமியினும், மதுராபுரிவாசிகளாம் பயிர்களினும் விரைவிலே விஷந்தலைக்கொண்டாற்போல எதிர்ப்பட்டுப் படர்ந்த சமண் காட்டைவெட்டி ஸ்ரீஞான சம்பந்தப்பெருமான் சீர்செய்து வைத்தமை மதக்ஷமையினர்க்குச் சீர்கேடாயிற்றோ? குலச்சிறைநாயனார் மங்கையர்க்கரசியார் என்னும் இருவரும் ஸ்ரீஞானசம்பந்தசுவாமிகளை மதுராபுரிக்கு எழுந்தருளிவரச்செய்யாது வாளாவிருந்து தேகவியோகமெய்திடுவாரேல், திருப்பாண்டிநாடும், திருவிதாங்கோடும், பிறநாடுகளும் சமண்பள்ளிகளேயாக, மதக்ஷமையினர் முன்னோரும் அவர் பின்னோருமாகிய எல்லோரும் சமணசமயத்தவராய், முக்குடைச்சின்னங்களோடு மயிற்பீலி கைக்கொண்டு திரிவாராக, சைவமதம் என்று பேசவேனும், நினைக்கவேனும் ஓர் சமயம் வாய்த்தலுமாமோ! மேலும், சமணர் எண்ணாயிரவரும் பதினாறாயிரம் திருக்கூட்டத்தோடு ஸ்ரீஞானசம்பந்தப்பெருமான் எழுந்தருளியிருந்த திருமடத்திலே தீக்கொளுவி மடத்தையும், மடத்தினரையும் ஓர் கால் தந் தீக்குட்படுத்தவராயின், "ஞானசம்பந்தர் தம்பால் அன்பில்லாத செங்கோன்மன்னர் தலைமீதில் பிரிந்துயிர் துறந்தொழிவதென்றார்" என் மங்கையர்க்கரசியார் குலச்சிறைநாயனார் என்னும் இருவரும் செய்துகொண்ட சபத்தத்தை நிறைவேற்றுமாறு உயிர்துறந்துவிடுவார்களன்றோ, இச் சமணர்க்குப் பேருக்கிருக்கும் மதக்ஷமையினர் ஞானசம்பந்தர்க்கோ சமணர்க்கோ சிவகாருண்ணியம் தோன்றுமென்று எழுந்துமுன் வருவார்தாமோ! பதினாறாயிரவரைப் ஞானசம்பந்தரோடு தீக்

எண்ணாயிரவரும் அரசனோடாலோசித்துத் தீக்கொளுவமுயன்றார் என்பதை, மதக்ஷமையினர் முதற்கண்ணே ஆராயாது போதற்குப் போந்த அறியாமை யாதோ? உத்தமோத்தமசமயத்து உத்தமர் பதினாறாயிரவரும் ஒருங்கிறந்தால் அது மதக்ஷமையினர்க்கு இன்பமும், புன்மத க்ஷமணர் எண்ணாயிரவரும் இறந்தமையால் அது துன்பமுமாய் முற்றியதோ? இவர் ஓர் போது எல்லாப் பரீக்ஷையிற் றேற, இவருக்குத் தெய்வாதீனத்தால் ஓர் சிறந்த உத்தியோகஞ் சித்திக்குமாயின், இவர் குடிகளுள்ளும் நீதி அநீதி விசாரியாது மனம் போயவாறு தண்டிப்பாரோ! அந்தோ!!

௬௨ குலச்சிறைநாயனார் மங்கையர்க்கரசியார் என்னும் இருவரும் தங்கள் அரசனும் புருஷனுமாய் நின்ற பாண்டியனையும் அவன் குடிகளையும் பிடித்த க்ஷமண் நோயை ஒழிக்கும்பொருட்டுப் பரமாசாரிய மகாவைத்திய சிகாமணியாகிய ஸ்ரீஞானசம்பந்தப் பெருமானை வருவித்து க்ஷமண் நோயை நீக்கி, பாண்டிநாட்டை வாழ்வித்தது மதக்ஷமையினர்க்கு ஓர் அதிபாதகத் துரோகமாய் முடிந்ததோ? இவருள்ளவாறு சைவராய் அக்காலத்திலிருந்து க்ஷமணரிற் குடிகள் பட்டபாட்டை அநுபோகத்தில் அறிந்திருப்பாரேல், அவரையெல்லாம் கழுவிலேயன்று நெருப்பிலேயிட்டுப் பொசுக்கிவிட வேண்டுமென்று குலச்சிறைநாயனார் மங்கையர்க்கரசியார் என்னும் இருவர்க்கும் முற்பட்டுநிற்பாரன்றோ. இவர் இப்போது சிவப்பற்றொழிந்து கிறிஸ்தவப்பற்றுடையராயினமையினாற்றான் கிறிஸ்தவர் மீதும் க்ஷமணர்மீதும் இரங்க எழுந்தார்.

௬௩ கழுவேற்றி உயிர்போக்குதல் அதிபாதகம் மகாபாதகம் என்னும் இரண்டினுந் தாழ்ந்த உபபாதகத்தின்பாலதேயாம். க்ஷமணர் பாண்டிநாடு முழுமையுங் கெடுத்ததோடமையாது, ஞானசம்பந்தப்பெருமானோடு பதினாறாயிரம் திருக்கூட்டத்தோடும் எழுந்தருளியிருந்த திருமடத்திலே தீக்கொளுவினமையுமாகிய பாபம் உபபாதகம் மகாபாதகம் என்னும் இரண்டினுங் கடந்த சிவத்துரோக அதிபாதகமுமாம். குடிகள் செய்த பாபம் அரசனையும், அரசன் செய்த பாபம் ஆசாரியனையும் அடையும் என்பது

[illegible] துராத்மநாம் [illegible] ஶாஸ்தா வைவஸ்வதோ யம:||
[illegible] ப்ரச்சந்ந பாபாநாம் [illegible]

ப்ரபஞ்சத்தினின்று நீங்கிச் சிவபிரானை உணர்வோரை ஆளுபவர்
ஆசாரியரே. துஷ்டர்களைத் தண்டித்து ஆளுபவன் அரசனே, அர
சனுக்குப் புலப்படாது மறைந்து செய்யும் பாபமுடையாரைத் தண்
டித்தாளுபவன் வைவஸ்வதனே' எனச் சிவதருமோத்தரம் கூறிற்று.
குடிகளை நன்னெறிப்படுத்தவேண்டியவர் ஆசாரியர்; இருட்போதிற்
குடிகள் பொருளைத்திருடிக் குடிகெடுக்கும் கள்வரைத் தண்டிக்கும்
பாண்டியனுடைய மகாவுத்தமோத்தம. பரம்பரைச் சைவசமய
அறிவை க்ஷமணிருள் மூடி அவனைத் தம்வசப்படுத்துங்கால், அந்த
க்ஷமணிருளை ஓட்டி க்ஷமணரைக் கழுவில் மாட்டிச் சிவஞானப்பிர
காசத்தைக் கான்று அரசன் அறிவையும் குடிகள் அறிவையும் காக்
கவேண்டிய பாரம் ஈண்டுச் சீகாழிப்பெருந்தகையாராகிய ஞான
சம்பந்த பாலசூரியன் மேலாயிற்று. மதக்ஷமையினர்போன்ற செல்
வத்தாலோங்கிய ஒரு தக்கார் வீட்டில் இருநூறு திருடர்கள் சேர்
ந்து அவ்வீட்டிலுள்ளாரை இம்சைசெய்து வீட்டை இடித்துக் கத
வுகளை உடைத்துக் கல்லெறிந்து மண்ணெறிந்து ஆயுதம் வீசிப்
பொருள் கவருங்கால், அக்கள்வரையெல்லாம் கொன்று தம்பொரு
ளைக் கவர்விக்க எண்ணுவாரோ? இன்றேல் தாம் யாது பாடுபடி
னும் கள்வர் எல்லோரையும் வதைத்தல் சீவகாருண்ணிய பங்க
மென்றுகொண்டு ஒருவர் இருவரை வதைப்பிக்கமாத்திரம் சித்
தமுடையாரவரோ? மதக்ஷமையினர் அவ்விருநூறு கள்வரையும்
ஒருங்கு சேர்த்துத் தூக்கிலிட மிக ஆவலுடையராயிருப்பாரன்றோ!
இந்த [illegible] இவர் யோசியாது 'க்ஷமணரிற் சிலர் துஷ்டரென்
றும் இக்குரூர தண்டனையை ஒருங்கே அனைவர்க்கும் கூறுதல்
அவர் தம்பெருமைக்கழகோ' என்று உணர்ந்தெழுதத் துணிந்
தார்? இவர் தமக்கோர் நியாயமும் பிறர்க்கோர் நியாயமும் நோக்
இச் "சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல மைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க்கணி," என்னும் நீதி சூத்திரத்தை யாது
பற்றி மறந்தார்? என்னுமிவருள்ளே சிலரைத் துட்டரென்று
சுட்டொன்று ஈந்த ஞானக்கண்
கொண்டு மற்றெல்லோரையும்.

னும் கண்டார்? சமணர் என்றுமிரவரும், வெகு தூரத்திலே பரந்து நின்றாராக, இவரெல்லாம் ஒருங்கு ஓர் சிறிய நெருப்பை ஒரே நேரத்திற் கைகளாற்பற்றி ஞானசம்பந்தர் மடத்திற் கொளுத்தவல்லரல்லர்; ஆகலான் இரண்டொருவரே தீக்கொளுவி விட்டிருப்பார் என்னும் குணித [illegible]லையுட்கொண்டு, மதகுருமாரினூர் [illegible] அவ்விரண்டொருவரையுமே [illegible]டென்று கொண்டார் போலும். அங்ஙனமாயின், அவர் அறிவு [illegible] கொலைச்சூழ்ச்சிசெய்த்தோர் பலரேயாகுக, கொலைசெய்தோன் ஒருவனேயாயினும், அவரெல்லாம் கொலைக்குற்றத்துக்காளாவார் என்பது லௌகிக சட்டத்தினும் பெறப்படுகின்றதன்றோ. இதை அவர் விவேகியாயிருந்தன்னேயோ? [illegible]

ஸ்ரீஞானசம்பந்தப் பெருமான் கேவலாவஸ்தையிற் புரியாத, துரிய, சுழுத்தி, சொப்பன, சகலத்திலேனும், சகலத்துச் சகலம், சகலத்துச் சொப்பனம், சகலத்துச் சுழுத்தி, சகலத்துத் துரியம், சகலத்துத் துரியாதீதம் என்பவற்றிலேனுமில்லாது, அமலசாக்கிர, அமலசொப்பன, அமலசுழுத்தி கடந்த அமல துரியத்தின்மேலாம் அமலதுரியாதீதத்தினின்றமையான், "தொண்டனேன் நினையுமா நினையே விரும்புமா விரும்பே தொட்டருமா தொட்டே [illegible]" [illegible] சச்சிதானந்த பரிபூர்ண பரசிவந்தானாயிருந்தமையான், அவர் நினைத்தனவும் விரும்பினவும் செய்தனவுமாகியவெல்லாம் சிவன் நினைத்தனவும், சிவன் விரும்பினவும், சிவன் செய்தனவுமாய் முற்றுமன்றே. [illegible] பசுகரணமுற்ற [illegible]போலியர் போலா ஏகதேசக் காட்சிப்பாடாது நின்மல துரியாதீதத்து நின்ற ஸ்ரீஞானசம்பந்தப் பெருவாழ்வுக்கு (சமணர்வாதிலே) ஞானக் [illegible] ப்பத்தே செல்வினைக்கு அவர் நின்மல துரியத்தை நாடி [illegible] சகலசாக்கிரத்தினின்று நினைந்து விரும்பிச் [illegible] நினைந்து விரும்பிச் செய்வார் என்று [illegible]

[illegible] தொண்டர்க்குச் சாக்கிரம்
துரியங் கடந்தவித் [illegible]
துரியுமாய் நின்ற தென்றந்தப்பற
[illegible]
துறந்தாரவர்களென் றந்தப்பற
[illegible]

பசிபோரை ஞானசம்பந்தப் பெருமானது நின்மல துரிய[illegible]

தினின்று செய்தனவெல்லாம் திருவருட்குணங்களாயே மாறும். திருவாலவாயின் கண்ணே பிள்ளையார் எழுந்தருளி, திராவிட சுருதியினால் "சமண்சித்தரை யழிக்கத் திருவுள்ளமே." என்று வினவிய போது, சிவபெருமான்

யுஷ்மாகம் ஸம்மதம் யத்தத் அஸ்மாகம் ச ஸம்மதம் ஹி| ஜயோ பவதி யுஷ்மாகம் நாத்ர நாஸ்தி ஸம்ஶய:| பவிஷ்யந்த்யேவ தே க்ஷபணா: ஶூலமாரோஹணே| யுஷ்மாகம் ஸ்வபக்ஷாணாம் விஜயோ பவிஷ்யதி||

'நுங்கட்கிசைந்ததே எமக்கு மிசைந்ததாம், அதனால் வெல்லற்பாலர் நீவிரே, க்ஷமணரோடு வாதுசெய்யின் அவர் தோற்றுத்தாமே கழுவிலேறிவிடுவார்' என அசரீரிவாக்கினால் அருள் புரிந்தார் என அகஸ்திய சங்கிதை கூறிற்று. கூறவே, ஸ்ரீஞானசம்பந்த மூர்த்திகளேனும், அரசனேனும், குலச்சிறைநாயனாரேனும் வலிது பற்றி அந்த க்ஷமணர்களைக் கழுவிலேற்றல் அவசியகமின்று; நீவிர் தடுப்பினும் கேளாது பொறாமை மேற்கொண்டு மானமுற்று அவர் தாமே ஏறிவிடுவார் என்பது திருவாலவாயுடையார் திருவாக்கினாற் பெறப்பட்டது. மேலும், ஒரு கல்லைத் தன்றலைக்கு மேலே கவிந்துள்ள மலையின்மீது எறியுங்கால், அது மலையை ஊடுருவிச் செல்லமாட்டாது மீண்டு முன் விசையினும் கதித்த விசையோடு தன்றலையிலே வீழ்ந்து அதனைத் தகர்த்தல் போல, சிவபோகச் செல்வராகிய திருஞானசம்பந்தப்பெருமானுக்கும் மற்றைச் சிவனடியார்க்கும் க்ஷமணர் செய்த தீங்கெலாந் திரண்டு க்ஷமணர்மீதே மிகுதியும் மண்டி அவர் உயிரை யெல்லாம் போக்கின. ஞானசம்பந்தப்பெருமான் தீங்கு யாதும் அவர் பாலியற்றினரல்லர்; அப்படித் தீங்குவிளைத்தாரெனக்கொண்டாலும், அப்பாபம் அக்கினியில் வறுத்த வித்துக்கள் பூமியிலேகிடந்து நீருள் நனைந்தாலும் மீள முளையாதவாறுபோல வெந்துபோம். இவ்வுண்மை 'இலங்குமிந் நெறியினின்றா ரிதமகிதங்களெல்லாம், நலந்தீமை யிவர்க்குச் செய்தார் பாற் சென்று நலிவதாகும்,' 'திவவங்கிசேர்ந்த வித்துத் திரிந்து போய் முளையாவாறே' என்னும் திருவாக்குகளான் உணர்க. இவ்வுண்மை நோக்கியே சுந்தரமூர்த்திநாயனார் 'நற்றமிழ்வல்ல

22

ஞானசம்பந்த னுவிலுக்கரிய னுளைப் போவாரும்…………குற்றஞ் செய்யினுங் குணமெனக்கருதும்’ என்றருளினர். ஞானசம்பந்தப் பெருமானும் திருவாலவாயுடையாரைத் தரிசித்து, ‘சுவாமீ, நீவிரே சமணரையெல்லாம் கழுவேற்றினீர்; அதற்கு அடியேனுளாகேன், அடியேனை ஆவேசித்துநின்று நீவிர் முன்னர்த் திருவாய்மலர்ந்தருளியவாறு அவரையெல்லாம் கழுவேறச் செய்தீர்’ என்னும் கருத்தினாலன்றோ ‘குற்றநீகுணங்கணீகூடலாலவாயிலாய்’ என அருளிச்செய்தார். நாடோறும் சிவோகம்பாவனை செய்து உடல் பொருள் ஆவி மூன்றும் சிவனதேயாய்த் தத்தஞ்செய்து ‘சிவோ தாதா சிவோ போக்தா’ என்றும், “அடியே னுண்டலூ னுனக்காம் வகையென் னுள்ளமுள்கலந் தெழுபரஞ்சோதி” என்றும் கருதும் கொள்கைபோல, “குற்றநீகுணங்கணீ” என்றார் ஸ்ரீஞானசம்பந்தப் பெரியோர்.

ராஜபிர்த்ருததண்டாஸ்து க்ருத்வா பாபாநி மாநவா: |
நிர்மலாஸ் ஸ்வர்கமாயாந்தி ஸந்த: ஸுக்ருதிநோ யதா ||

“அரசனால் ஒருவர் தண்டிக்கப்படின் தண்டிக்கப்பட்டோர் பாபங்க ணீங்கிப் பெரியோராய்ச் சுவர்க்கத்தை அடைகின்றார்” என்று மனுதருமசாஸ்திரம் கூறுதலான், இவ்வுலகத்திலே இராஜ தண்டமெய்தினோர்க்கு மறு லோகத்தில் நரகயாதனை இல்லை என்றாயிற்று. அரசனேனும், ஆசாரியரேனும் செய்வது அருள் வழியாம் என்பது

“அரசனுஞ் செய்வ தீச னருள் வழி யரும்பா வங்க
டரையுளோர் செய்யிற் றீய தண்டலின் வைத்துத் தண்டத்
துரை செய்து தீர்ப்பன் பின்பு சொல்வழி நடப்பர் தூயோர்
நிரயமுஞ் சேரா ரந்த நிரயமுன் னீர்மை யீதாம்,

……………………………………மண்டெரியிற்
“காய்ச்சிச் சுடவறுக்கக் கண்ணுரிக்க நன்னிதிய
மீய்த்துத்தாய் தந்தைதம ரின்புறுதல் - வாய்த்தநெறி
யோடிப் பித்த ரின்றி யுயிர் போன கன்றுமில்
நீடு பெரும் பாவமின்றே நீக்குமென - நாடித்தன்
மைந்தனையூர்ந்தான் வழக்கே வழக்காகும்”

என்னும் திருவாக்குகளானும் உணர்க. ஆதலின்று என்று

யிரம் க்ஷமணரையுங் கழுவிலேற்றி அவர்களைச் சுத்தர்களாக் அடுத்த சென்மத்திலே செந்நெறியில் ஒழுகச் செய்து பாண்டி நாட்டரசன் முதற் குடிகளீறாயுள்ள எல்லோரையுந் திருநீறிடச் செய்து போந்த இரு புறச் சிவகாருண்ணியமும் மதக்ஷமையினர் புறக்கண்ணுக்குச் சிவகாருண்ணியமிலாது முடிந்ததோ? க்ஷமணர் செய்த குற்றத்துக்கு அவர்கள் உயிரைப் போக்காது மற்றோர் சிறிய தண்டஞ் செய்து அவர் உயிரோடிருக்கச் செய்தாலாகாதோ? எனின்,

ஶிவநிந்தாரதம் ஹத்வா அவிசாரத: ஸ்வயமேவ வா | யஸ்த்யஜேத்ஸ்வான் ப்ராணான்ஸ ந பூய: ப்ரஜாயதே | ஶிவநிந்தாரதம் ஹந்தும் அஶக்தோ ய: ஸ்வயம்ம்ருத: | ஸத்ய: ஸ ஏவ விமுச்யேத த்ரிஸப்தகுலஸம்யுத: ||

"சிவநிந்தை செய்வோனைக் கொல்க, இன்றேல் வருந்தித்தன் பிராணனை விடுக; அங்ஙனஞ் செய்பவனுக்கு மீண்டுப் பிறப்பில்லை; சிவநிந்தை செய்பவனைக் கொல்வதற்கு அசக்தனாயின், தானே இறந்து விடுக, அதனால் அவன் இருபத்தொரு குலத்தோடும் முத்தியடைகின்றான்" எனச் சிவபுராணம் கூறுகின்றது, அங்ஙனம், கூர்மபுராணம்

"திங்களங் கண்ணி வேய்ந்த செல்வனை யிகழ்ந்த பாவ
மிங்கிது தன்னிற் றீரா தென்னறும் விரத மாற்றிப்
பொங்கழ னுப்பண் வைகி யருந்தவம் புரிந்திட்டாலு
மங்கவ னருளினன்றித் தீர்ந்திட லரியதாமால்,"

எனவும், சித்தாந்தசிகாமணி

"கண்டன னாயின் முக்கட் கடவுளை நிந்திப் போனைத்
தண்டனை புரிந்து கொல்க வரிதெனிற் சமிக்க னின்றி
மண்டனில் வலிய னன்றேல் வான்செவித் துளைகள்பொத்திக்
கொண்டவ ணகன்று செல்க குலகுலந்தமல பக்தன்,"

"எயுமா சார நிந்தை யாண்டுள தவ்வி டத்திற்
பேர்புற லொழிக வென்றும் புகல் சிவ நிந்தை செய்வோன்

தீபக முறுத் திற்க் சிவ நிந்தை யவர்க்கு அருண்-
டாயினும் பரிகா ரஞ்செய் தகற்றிடற் கரிது மாதோ.”

எனவும் கூறின. இங்ஙனம் சிவத்துரோகிகளுக்குப் பிராயச்சித்தம் மரணாந்த தண்டனையேயன்றி வேறுதண்டனை விதிக்கப்பட்டிலது. ஆகலான் அவர்கள் உயிர்பிழைத்திருக்கத்தக்க மற்றோர் தண்டனை செய்தல் இயலாதாயிற்று. இங்ஙனம் சமணர்களைக் கழுவேற்றத்தினின்று தவிர்க்காது விடுத்தது அந்த சமணர்மேற்கொண்ட சிவகாருண்ணியமும் குடிகண்மேற்கொண்ட சீவகாருண்ணியமுமாய இருமடங்கு சிவகாருண்ணியம் ஸ்ரீஞானசம்பந்தவள்ளலார்க்கெய்தினமை காண்க.

திருச்சிற்றம்பலம்.

பிழைதிருத்தம்.

13-ம் பக்கத்து 24-ம் வரியில் “ஆயிரத்துத்தொண்” என்பதை “ஆயிரத்தெண்” என்று வாசிக்க.

முன்னுரை.

சகல சம்பாதித சைவ சமயத் தெய்வமாகிய சிவபிரானே சகல தேவாதி தேவனென்று நிர்ணயிக்கும் நூல்கள் தமிழிலும் வடமொழியிலும் பலவுள. அவற்றுட் 'சுலோக பஞ்சகம்' என்பது ஒன்று. நான் அதற்கு வியாக்கியான மொன்றியற்றி அதனைச் 'சுலோகபஞ்சகவிஷயம்' எனப் பெயரிட்டுச் 'சிவநேசன்' அதிபரவர்கள் சகாயத்தாற் புத்தகரூபமாக அச்சிட்டு வெளிப்படுத்தினேன். சிவபரத்துவ சம்பந்தமாக அந்நூலில் வெளியாயின போக இன்னுஞ் சில வுண்மைகள் என்னுள்ளத்தி லிருந்தன. அவற்றையும் ஒரு நூலியற்றி வெளியிட வேண்டுமென்ற ஆசை எனக்குண்டாயிற்று. அவ்வாசை யாற் றோன்றியதே 'சிவபரத்துவ நிர்ணயம்' என்னும் இந்நூல். கூடியவரை இஃதொரு முழுநூலாயிருக்க வேண்டுமென்று நான் எண்ணியதால் என் 'விஷயம்' முதலியவற்றில் வெளியான கருத்துக்களும் இதில் வந்திருக்கும்.

முதன் முதலாக நானியற்றிய செய்யுணூல் இதுவே. சிவபரத்துவ வுண்மைகள் சைவமக்கட்கு மனப்பாடமாக வேண்டுமென்ற எண்ணமே நான் இச் சித்தாந்தத்தைச் செய்யுணூலாக இயற்றக் காரணமாயிற்று. வைதிக சைவோத்தமர்கள் இந்நூலிற் காணப்படுஞ் சொற்குற்றம் பொருட்குற்றங்களை க்ஷமித்து என்னை ஆதரிக்கும்படி நான் அவர்களைப் பிரார்த்திக்கிறேன். இந்நூற் செய்யுட்கள் இரு விநாயக வணக்கம் ஆசிரிய வணக்கம் உள்பட நூற்றுப் பதினொன்று.

நான் ஒருகடவை மதுரைக்குப் போயிருந்த காலத்தில் எனக்குப் பாட்டனார் முறையிலுள்ள ஸ்ரீமான் மு. ரா. அருணாசலக் கவிராயரவர்களிடம் இந்நூலைச் சுமார் ஒருமாதகாலம் வாசித்துக்காட்டினேன். அப்போது அவர்கள் மிக விருத்தாப்பியரா யிருந்தார்கள். ஆயினும் அவர்கள் இந்நூலைப் பொறுமையோடும் ஆதரவோடும் செவிமடுத்துப் பரம சந்தோஷமடைந்து என்னைப் பார்த்து, 'பேரப் பிள்ளாய்! உம்முடைய இந்நூலிலுள்ள செய்யுட்கள் மிகவும் நயமுடையனவா யிருக்கின்றன. கருத்துக்களும் உயர்ந்தனவே. ஆனால் இந்நூல் தழுவிச்செல்லும் பிரமாணங்களிற் பல வடமொழி வேதாதிகளி லுள்ளன வாகலின் அவை சம்பந்தமாக இதனை நான் மாத்திரம் ஆராய்ந்து அபிப்பிராயஞ் சொல்லுதல் போதாது. இவ்வூரிலுள்ள சிவஸ்ரீ கலியாண சுந்தர பட்டரவர்களை நான் உமக்கு அறிமுகப்படுத்தி வைப்பேன். அவர்களிடமும் நீர் இந்நூலை வாசித்துக்காட்டி அபிப்பிராயங் கேளும்' என்று கூறி எனக்கு அப்பட்டரவர்களை அறிமுகப்படுத்தி வைத்தார்கள். சுமார் பதினைந்து நாட்கள் நான் அவர்கள் வீட்டுக்குப்போய் இந்நூல் முழுவதையும் ஒவ்வொரு நாளும் பிற்பகலில் சுமார் இரண்டுமணி நேரம்வரை சிலசில செய்யுட்கள் வீதம் வாசித்துக்காட்டி முடித்தேன். இந்நூலில் முக்கியப்பிரமாணங்களாகக் கொள்ளப்பட்டிருக்கிற வாக்கியங்களுக்கெல்லாம் செவ்வையாகப் பொருள் கொள்ளப்பட்டிருக்கிறதென்று அவர்களுஞ் சம்மதித்தார்கள். அப்பால் அவ்விரு பெரியார்களிடத்திலும் அபிப்பிராயங்களை எழுத்துமூலம் தரும்படி நான் வேண்டினேன். அவர்களுந் தந்தார்கள். அவை இதிற் சேர்க்கப்பட்டுள்ளன.

அப்பால் என் வீட்டிற்கு அவ்வப்போது வந்த சைவ சித்தாந்த அறிஞர் சிலரிடம் பொழுது போக்காக நான் இந்நூலைக் காட்டினேன். அவர்கள் நூல் முழுவதையும் படித்துப் பார்க்க அவகாசமில்லாதவராய்ப் பார்த்தவரையும் மெச்சி இதனைச் சீக்கிரம் அச்சிடும்படி என்னைத் தூண்டிச் சென்றார்கள். அப்பெரியார்களுள் ஒருவரும் சைவசமயத்தில் ஆர்வமிக்கவரும் காழிக்கல்விக் கழகத்து உறுப்பினரும், காழி வித்வான் சைவத்திருவாளர் ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளை அவர்களின் மாணவரும், எனக்கு வெகு பிரியரும் ஆகிய ஸ்ரீமாந்-காழி. பி. அகோரம் பிள்ளையவர்கள் இந்நூலை முழுவ. .ம் படித்து உத்ஸாக மேலிட்டவராய்த் தாமே அரும்பதவுரை யெழுதிப் பிரமாணங்களையுஞ் சேர்த்துச் சிவகிருபையால் அச்சிட்டுப் பூர்த்தி செய்தார்கள். இப்பெரிய சிவபணியைச் செய்த அவர்களுக்கு என் வந்தனம் உரியதாவதுடன், அவர்களுக்குச் சகலவித நன்மைகளையுந் ஈந்து இத்தகைய சிவபணிகளில் அவர்களுடைய மனம் இடையீடின்றிச் செல்லத் திருவருள் சுரக்குமாறு ஸ்ரீ பார்வதி பதியாகிய ஸ்ரீ பரமசிவனாரின் உபய சரணாரவிந்தங்களையும் நான் பணிகிறேன்.

செங்கற்பட்டு ஸெயிண்ட் கொலம்பா உயர்தர பாடசாலைத் தமிழாசிரியர் வித்வான் பிரம்ஸ்ரீ K. M. வேங்கடராமையா அவர்கள் B. A., B. O. L., இந்நூலை வெளியிடுதற்கண் பெருமுயற்சி யெடுத்துக் கொண்டார்கள். இவ்வேலையைத் தம் சொந்த வேலைகளில் ஒன்றாகக்கொண்டு அச்சுப்பிழை சரி பார்த்தல் முதலியவற்றையெல்லாம் அவர்களே செய்து உபகரித்தார்கள். அவர்களுக்கு என் வந்தனம் உரியது.

ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளை,

1—12—1939.

நூலாசிரியன்.

உ

பதிப்புரை.

சைவசமயத்தில் முழுமுதற் கடவுளுக்குச் சிவன் சங்கரன் சம்பு ஈசான் உருத்திரன் ஈசன் அரன் முதலியனவே சிறந்த பெயர்கள் ; உமாசகாயம் நீலகண்டம் சந்திரசேகரம் முதலியனவே சிறந்த அடையாளங்கள் ; சர்வஞ்ஞதை திருப்தி அநாதிபோதம் முதலியனவே சிறந்த குணங்கள். அந்நாமங்களிலும் அவ்வடையாளங்களிலும் அக்குணங்களிலும் அருவை கொள்பவன் வைதிக சைவ சமயத்தவனாக மாட்டான். ஒருசைவனும் வைஷ்ணவ கிறிஸ்தவ இசுலாமிய மாதியவற்றுள் ஏதாவதொரு சமயத்தைச் சேர்ந்தவனும் கலந்து சம்பாஷிக்கத் தொடங்குங்கால் கடவுளைப்பற்றிய பிரஸ்தாபங்கள் வருமேல் அவ்விருவரும் தத்தம் மதங்களிற் கடவுளுக்கு வழங்கப்படுஞ் சிறப்புப் பெயரை வழங்காமல் கடவுள் ஆண்டவன் கருத்தன் முதலிய பொதுப்பெயர்களை வழங்கலாம். ஆனால் இரண்டு சைவர் தம்முட் கலந்து பேசுங்கால் தெய்வப் பிரஸ்தாபம் வருமிடங்களிலெல்லாம் தம் சமயத்திற் கடவுளுக்குச் சிறப்பாக வழங்கப்படுஞ் சிவாதி நாமங்களையே வழங்கவேண்டும். ஈசுர நாமங் கொண்டே முன்னுள்ள நாஸ்திகரும் இந்நாட்டில் விசாரித்து வந்துளார். இப்போதும் அந்நாமப் பிரஸ்தாபம் எங்குமுண்டு. சைவம் அப்போது எவ்வளவு வியாபகமுடையதாயிருந்தது, இப்போது எவ்வளவு வியாபகமுடையதாயிருக்கிறது என்பதை அவ்வீசுரநாம வியாபகமொன்றனாலேயே யறியலாம்.

'சிவபரத்துவ நிச்சயம்' என்னும் இந்நூல் அத்தகைய சிவபரம் பொருளின் பிரபாவங்களைச் சவிஸ்தாரமாய் எடுத்துவிளக்குவது. எனக்குச் சிறந்த நேசராகிய திருநெல்வேலிப்பேட்டை ஸ்ரீமான் உ. சங்கரலிங்கப்பிள்ளையவர்கள் இந்நூலையாக்கிப் பலரிடமுங் காட்டியது போல் என்னிடமுங் காட்டினார்கள். நான் இதனைப் படித்தறிந்ததும் அவர்களுக்குள்ள சைவசாத்திர ஆராய்ச்சியையும் சைவசமயப்பற்றையும் என்னால் அளவிட முடியவில்லை. இதையச்சிட்டுக் கொடுக்க யாரையாவது தேடியதுண்டாவென்று நான் அவர்களைக்கேட்டேன். சைவாபிமானமுள்ள தனவந்தர் யாரையுந் தமக்குத் தெரியாதென்று அவர்கள் சொன்னார்கள். நானே உரையெழுதிப் பிரமாணங்களையுந் திரட்டிச் சேர்த்து இதனை அச்சிடுகிறேன், என்னிடங் கொடுங்கள் என்றேன் நான். அவர்களும் கொடுத்து விட்டார்கள். நான் அரும்பதவுரையியற்றிப் பிரமாணங்களையுந் திரட்டிச் சேர்த்து இதனை அச்சிட்டுப் பூர்த்தி செய்தேன். இவ்வுரை முதலியவற்றுட் பிழைகளுளவேல் இந்நூலாசிரியரவர்களும் மற்றை அறிஞர்களும் பொறுத்தருள்க.

ஒவ்வொரு செய்யுட்குங் கிடைத்த பிரமாணங்கள் அச்செய்யுளடியில் வருகின்றன. அவை அச்செய்யுளிலுள்ள பல பகுதிகளுக்கும் பிரமாணங்களாக விருக்கும். ஒவ்வொரு பகுதிக்குமுரிய பிரமாணங்களை அவற்றிலிருந்து பிரித்தெடுத்துக்கொள்ளும்படி வாசகர்களை நான் வேண்டுகிறேன். பூர்வபட்சத்துக்குரிய பிரமாணங்களும் அங்குண்டு. வேண்டாதனபோலிருக்கும் பிரமாணங்களை ஒதுக்கிவிடலாம்.

இந்நூல் இவ்வழகான புத்தகவடிவில் மிகச்சுருங்கிய காலத்தில் அச்சாகி வருதற்குத் துணை புரிந்தவர்கள் என்னுடைய பழக்கரும் முன்னுரையிற் கண்டவருமாகிய பிரம்மஸ்ரீ K. M. வேங்கடராமய்யர் அவர்கள் B. A., B. O. L., அவர்கள். அவர்கள் செய்த அந்நன்றி மறக்கற்பாலதன்று.

காழி. P. அகோரம் பிள்ளை,
பதிப்பாசிரியன்.

6—1—1940

உ

28

அபிப்பிராயங்கள்.

வேத சிவாகமாதி சகல சாஸ்திர பண்டிதோத்தமமாகிய

மதுரை

சிவஸ்ரீ. ம. கல்யாணசுந்தர பட்டரவர்கள்

தந்தது.

ஆசிரியப்பா.

தென்றமிழ் நாடு செய்தவப் பயனென
வந்திடு நெல்லை வளம்பதிக் கணித்தாம்
பேட்டை யென்னும் பெருநக ரதனுள்
தாவில் பரம்பரைச் சைவ வேளாண்
மரபில் வந்தோன் மதிநலம் வாய்ந்தோன்
ஈசுர மூர்த்தி யெனும்பெய ருடையோன்
செய்சிவ பரத்துவ நிச்சயச் செழுநூல்
எவரும் பொருளை யெளிதிற் கண்டு
மகிழத் தக்க வகையில் விளக்கி
யருமறை யாகம புராண மாதி
சாத்திர மனைத்தொடுஞ் சமஞ்சஸ மாகி
வியனறி வுடையோர் வியக்க வுளதே.

13—6—1937.

திருக்குறள் தெளிபொருள் வசனம், பரங்கிரிப் பிரபந்தத்திரட்டு
முதலிய பலநூல்களுக்காசிரியரும் மதுரைத் தமிழ்ச் சங்க வித்துவானும்

ஆகிய

சைவத்திருவாளர்,

மு. ரா. அருணசலக் கவிராயரவர்கள்

தந்தது.

இந்நூலாசிரியர் தமிழ் வித்துவான் ஸ்ரீ த. ஆறழக நயினார் பிள்ளையவர்களுக்குச் சிறந்த புத்திரராய்ப் பிறந்து சிறுவயதிலே ஆங்கிலமுந் தமிழுங் கற்று ... உபாத்தியாயரா யிருக்கின்றனர். அப்படி யிருக்கும்போது தமிழ்க் கல்வியை ... நிரம்பக் கற்கவேண்டுமென்று நினைத்துக் கலியுக வரதாகிய முருகக்கடவுள் திருவருளால் நூலாராய்ச்சி செய்தனர். (அதனுல்) பரத்துவ

நிச்சயம் பிறப்பிறப்பில்லாத பரம்பொருளாகிய சிவபிரானொருவர்க்கே கூற வேண்டுமென்று தெரிந்தனர்.... மேற்கூறிய உண்மையைத் தெளிந்து 'தாமின்புறுவ துலகின் புறக்கண்டு' என்னுஞ் சுருதிக் கிணங்க இலை மறைகாய் போற் கிடந்த விஷயங்களை யெல்லாம் வெள்ளிடை மலைபோல் விளங்குமாறு தர்க்க சக்தியாகச் 'சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்' என்ற அழகுடனே இருநூற்றுப்பதினொன்று செய்யுளால் ஒரு சிறு நூல் செய்து ... மதுரைக்கு வந்து என்னிடம் ஒவ்வொரு பாடலையும் நேரிலே வாசித்துக் காட்டினர். பாடல்களைக் கேட்குந்தோறும் ... அதி மாதுரியமாக இருந்தனைக் கண்டு மிகுதியுஞ் சந்தோஷமுற்றேன். பற்பல சமயத்தாரும் இதற்கொரு மறுப்பெழுத வேண்டுமென்று துணிந்தால் அவருக்கு வேதாகமங்களிற் பிரமாணங் கிடைக்கமாட்டாது.... ஆதலால் அவர் கருத்து நிரம்பாததாய் முடியும். தமிழ்ச் செய்யுளில் பரத்துவ நிச்சயங் கூறும் இந்த நூல் போல் ஒரு நூல் இருக்கிறதாக நான் கேட்டதுமில்லை, கண்டதுமில்லை. பரத்துவ நிச்சயந் தெரியப்புகுவார் அரிய பெரிய நூல்களைப் படித்துப் பெருங்காலம் போக்காமல் இந்தச் சிறு நூலை ஒரு முறை படித்தாலே ஐயமறத் தெளிவாய் விளங்கும். தமிழுலகத்திற்கு இவ்வுதவி புரிந்த நூலாசிரியருக்கு நாமெல்லாம் என்றும் நன்றியறிதல் பாராட்டுங் கடப்பாடுடையோம்.

16—6—1937.

செங்கப்பட்டு ஸெயின்ட் கோலம்பா
உயர்தர பாடசாலைத் தமிழாசிரியர்

வித்வான்

பிரம்மஸ்ரீ. K. M. வேங்கட ராமையா, B. A., B. O. L. அவர்கள்

தந்தது.

'நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்' தாள் தொழு மன்பர்
கட்கெல்லாம் பெருவிருந்தளிக்கும் 'சிவபரத்துவ நிச்சயம்' என்னும் இந்நூல்,
'வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே' யிருக்கும் நம்மவர்களுக்கு
இத்தகைய நூலொன்று இன்றியமையாததே யன்றோ?

'விச்சை யாவதும் வேட்கைமை யாவதும்
நிச்சல் நீறணி வாரைநினைப்பதே' யென்ற தேவாரத்தைக் கடை
பிடித்தொழுகும் சைவ வள்ளலாராகிய திருநெல்வேலிப்பேட்டை திருவாளர்
ஆ. சுந்தரமூர்த்திப் பிள்ளையவர்கள் இந்நூலை யச்சிட்டு உலகுக்கு உதவியுள்ளார்
கள். இந்நூலுக்கு அரும்பதவுரையும், பிரமாண முதலியனவும் எனது ஆசிரியர்
சிவஸ்ரீ காஞ்சி பி. அகோரப்பிள்ளையவர்கள் எழுதிக் கொடுத்து உதவிய செயல்

காலச் சிறந்த தொன்று. — — — இந்நூற் பாடல்கள் செவிக்கின்பந் தருமாறும், கற்றோரும் மற்றோரும் அறியுமாறும், எளிய நடையில் இருக்கும்போதிலும், விஷயப் பெருமைக்கு ஏற்றவாறு ஆங்காங்குக் கடினமாக விருக்கும் சொற்றொடர்களுக்குத் தெளிபொருளெழுதி உபகரித்தல் கற்றறிந்தோர்தம் கடனே. அன்றியும், இந்நூற் பொருட்குக் கொடுத்துள்ள பிரமாணங்கள் கற்றறிந்தோர்க்கும் ஓர் விருந்தாகும்.

இந்நூலைச்சுவாசகனை மேறக்கால் எழுத்தெழுத்தாக இந்நூலை வாசிக்கும் பேற்றை நான் பெறவில்லை. அப்பொழுது யான் படித்தவற்றுள் என்னைக் கவர்ந்த — — — விஷயங்களுட் சில ஈண்டுக் குறிப்பிடத்தக்கன. அவை 25, 59, 60, 63, 92, 96, 108, 124, 151, 169, 170 ஆஞ் செய்யுள் முதலியவற்றின் கருத்துக்களென்க.

இவை நிற்க,

'நெஞ்சம் உமக்கே இடமாகவைத்தேன்
நினையா தொரு போதும் இருந்தறியேன்'

'சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோ டிசை பாடல் மறந்தறியேன்

நலந் தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்' ஆகிய இவை சூலை நோய் தீரப்பாடிய திருநாவுக் கரையாரது திருப்பதிகத்திற் காணப்படுகின்றன. இவற்றின் பொருள் தெளிவாக விளங்குகின்றிலது. அதற்குக் காரணம் இப்பதிகம் சமண சமயத்தினின்று சைவசமயம் புகுவதற்குக் காரணமாய சூலை வேதனையைத் தீர்க்க வேண்டுமென்று பாடிய திருப்பதிகத்தில் அமைந்திருத்தலே யாகும். சமண் சமயத்திருந்தபொழுது அப்பமூர்த்திகள் சிவ பரம்பொருளை நினைக்கவே யில்லையென்பது 'அறந்தெரியா ஊத்தைவாய் அறிவில் சிந்தை யாரம்பக் குண்டரோ டயர்த்து நாளும், மறந்துமரன் திருவடிகள் நினையமாட்டா மதியிலியேன்' என்ற வடிகளால் தெள்ளிதின் விளங்கும். அவ்வாறாயின், வாகீசப் பெருமான் மேற்கூறிய வாக்கியங்களிற் குறித்த வழிபாடு எப்பொழுது செய்யப்பட்டதெனின், பலர் பலவாறு கூறுப. ஒரு சாரார் முன் ஜன்மத்துள் என்ப. மற்றொரு சாரார் அச்சமண் சமயத்திருந்த பொழுது செய்த வழிபாட்டைக் குறிக்கும் என்றும், 'விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயஞ் செய்தே, எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற் கேற்றதாகும்' 'யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே, மாதொரு பாகனார்தாம் வருவர்' என்ற இன்னோரன்ன பிரமாணங்களைக் காட்டி, அவ்வழிபாடு முழுமுதல் தலைமையுடைய இறைவனையே சாருமென்றுங் கூறுவர். இதுவே எமக்கும் உடன்பாடு. இந்நூல் 64 ஆவது செய்யுளைக் கண்டதும் யான் கொண்ட மகிழ்ச்சிக்கு அளவில்லை; அதுவளவிருந்த சந்தேகமும் நீங்கிற்று. ஆனால் இச்செய்யுட் பிரமாணத்தில் கண்ட ஸ்மிருதிவாக்கிய பாடம் யான் உபதேசிக்கப்பட்ட வாக்கியத்தினும் சிறிது வேறாகும். 'சங்காரம் ப்ரதிகச்சதி' என்பது இந்நூலிற் கண்டது; 'கேசவம் ப்ரதிகச்சதி' என்பது எனக்கு உபதேசம். ஆயினும், மற்றைய ஆதாரங்களை நோக்குழி 'ஈச்வரம் ப்ரதிகச்சதி' என்பதே பொருத்தமான பாடமாகும் என்று கொள்ளற்பாற்று.

ஓத நிற்க,

ஞானிக்கு எம்மதமும் சம்மதமென்றல் சைவசமயக் கொள்கை யாகாது என்பது இந்நூல் 179 ஆவது செய்யுட் கருத்தாயினும், எம்மதமும் சம்மதமெனும் இக்காலத்து 168 ஆவது செய்யுட் கருத்துச் சிறிது பொருத்தம் இன்றாகும். உபநிடதகாலம் வேறு; இக்காலம் அத்தகையதொரு அபிப்பிராயத்துக்கு இடந் தராதன்றோ?........

இக்காலத்தில் நந்தம் செந்தமிழ் நாட்டினருட் சிலர் வடமொழிப் பயிற்சியை முற்றும் வெறுக்கின்றார்கள். - - - இந்நூல் 201 முதல் 206 ஆவது செய்யுள்வரை 'சைவனாவான் வடமொழியும் கற்றலவசியம்' என்ற விஷயத்தைப்பற்றி விரிவுற எழுதியுள்ளமையையும், வாழ்த்துச் செய்யுளையும் கண்டதும் என்மனம் வரம்பிகந்த மகிழ்வெய்திற்று. 'வாழ்த்துவார் வாயினுள்ளா'ரும், 'சிந்திப்பார் சிந்தையுள்ளாரு'மாகிய 'நீதியாற் றொழுவார்கள் தலைவனும்', 'தாயினும் நல்ல சங்கரன்', 'ஆரியமும் தமிழும் ஆவர்' என்பது தேவாராதிகளைப் படித்தவர் நன்கறிகுவர். 'ஆரியன் கண்டாய், தமிழன் கண்டாய், அண்ணாமலையுறை யெம் அண்ணல் கண்டாய்' என்றது காண்க. 'வடமொழியும் தென்றமிழும் மறைகள் நான்கும் ஆனவன்' பெருமை யறிய இருமொழியும் அறிவது இன்றியமையாததென்று குறித்தமை இந்நூலாசிரியருடைய மனவிரிவின் தன்மையைத் தெற்றென விளக்குகின்றது.

நாத்திகர்தாம் மிகுந்திடுமிக் கலிகாலத்தில், பணமே பந்துஞ் செய்யும் என்னும் இப்பாழ்காலத்தில், நாட்டை யாமே ஆளல் வேண்டும், யாமே ஆளல் வேண்டும், நாடுகள் யாவும் கொள்ளல் வேண்டும் என்ற அவாவிற்கு இரத்தம் சிந்தும் இக்காலத்தில் இத்தகைய நூலுக்கும் இடன் உண்டுகொல்?

ஆயினும், இந்நூல்

'செத்துச் செத்துப் பிறப்பதே தேவென்ற
பத்திசெய் மனப் பாறைகட் கேறுமோ?'

எனில் ஏறாதுதான். ஆயினும் புறச்சமய நெறிநின்ற அகச்சமயம் புக்கும் அம்முறையே மேற் சென்று சென்று சைவத் திறத்தடைந்து சிவனடிசேர வல்ல நற்றவமுடையார் இதனைப் பெரிதும் போற்றவே செய்வரென்க.

1—1—1940

32.

உ

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
10	29	ஸாபலோ	ஸாபலோ
,,	34	ஜயார	ஜயா
,,	36	பேருஹகார்ப	போருஹகர்ப
14	25	ஹ்ருதயோ	ருக்ஹ்ருதயோ
16	18	காண்க.	என்க.
,,	25	மிதிப்ப	மிசப்ப
17	17	கைவ்யோ	கைவல்யோ
22	11	டட்ருப்	புட்ருப்
24	9	ஸைத்தீ	ஸைத்தி
25	4	பஸ்யோ	யஸ்ய
27	23	யேதாத்மே	யேதாத்யே
29	34	ஸிகோப	ஸிகோப
32	4	சஷிஞை	ஸகஷிஞை
37	31	ஸாகுக்ஷ்யம்	ஸாக்ஷ்யம்
39	2	ஸங்க்ய	ஸங்க்யா
,,	4	மைத்ரே	மைத்ரேயோ
,,	13	றினிமை	ரனிமை
46	24	வாழ்க்கை டை	வாழ்க்கையை
48	2	க்ருதீ	க்ருதி
82	18	வெம்ப	வென்ப
83	15	தவமாத	தவமதா
86	22	கறிவெ	கறிவ

இன்னும் பிழைகள் உளவேல் அவற்றையும் அன்பர்கள் திருத்திக்கொள்க.

உ

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ மெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க.

சிவபரத்துவ நிச்சயம்.

இந்நூல் இனிது முடிதற்பொருட்டுச் செய்யப்படும் விநாயக வணக்கம்.

மன்னுசிவன் மெய்ப்புகழை வந்தமட்டில் யான்பாடற்
கென்னுடைய பேராசை யீர்த்ததெனை — யன்னதனா
லத்திமுக வுன்பதநா னஞ்சலித்துச் சில்பாடற்
கொத்துரைப்பே னெற்கருணீ கூட்டு.

(அரும்பதவுரை) மன்னு - நிலைபெற்ற; மெய்ப்புகழை - பொருள் நிறைந்த கீர்த்தியை; வந்தமட்டில் - பாடத்தெரிந்த வரையில்; ஈர்த்தது - இழுத்தது; அன்னதனால் - அதனால்; அத்திமுக - விநாயகரே! பதம் - திருவடிகளை; அஞ்சலித்து - வணங்கி; சில் - சில; கொத்து - திரட்டு; உரைப்பேன் - இயற்றுவேன்; எற்கு - எனக்கு; நீ எற்குஅருள் கூட்டு என்க.

இந்நூலை யாக்கியோர் தமக்குச் சைவசித்தாந்தங் கற்பித்த ஆசிரியரை வணங்குதல்.

விளங்கொளி வெள்ளி மலைமிசை யுமைதன்
னிடமுற வீற்றிருந் துயிர்க்குக்
களங்கம தொழித்துப் பரகதி யருளுங்
கண்ணுதற் பரமனை பரமென்
துளங்கொள நாயேற் கொளிருநான் மறையி
னுறுதியை யுணர்த்தி வாழ் வளித்த
வளங்கெழு நெல்லைச் சிதம்பர ராம
லிங்கரின் மலரடி சரணே.

(அ-ரை) வெள்ளி மலைமிசை - கயிலையில்; இடம் உற - இடப்பாகத்திற் பொருந்தும்படி; வீற்றிருந்து - மகிழ்ந்திருந்து; களங்கமது - பாசக்குற்றங்களை; பரகதி - மேலான முத்தியை; கண்ணுதற் பரமனை - சிவபிரானை; பரம் - முழுமுதற் கடவுள்; உளம் கொள - மனதிற் பதியும்படி; ஒளிரும் - பிரகாசிக்கிற; நால் மறை - இருக்கு எசுர் சாமம் அதர்வணம்; உறுதியை - சத்தியார்த்தத்தை; கெழு - நிறைந்த; நெல்லை - திருநெல்வேலி; சிதம்பர ராமலிங்கர் - அவ்வாசிரியரின் திருநாமம்; அச்சிதம்பர ராமலிங்க பிள்ளையவர்கள் திருநெல்வேலி ம-தி-தா-ஹிந்து கலாசாலையில் தமிழாசிரியராயிருந்து வருகிறார்கள்.

நூல்

வியட்டியாகிய அகர உகர மகரம் முறையே பிரம விஷ்ணு ருத்திரர்க்கு இருப்பிடம். அம்மூன்றின் சமட்டியாகிய பிரணவம் சிவபிரானுக்கு இருப்பிடம்.

இரணிய கருப்ப னவ்வி லிலக்குமி கணவ னுவ்வி
னாரமிகு சூல மேந்து முருத்திரன் மவ்வி லாவர்
பரசிவ பிரான்சம் வர்த்த காக்கினி பயில்பே ராகப்
பிரணவ சமட்டி யென்னும் பீடமீ திருப்ப னன்றே.

(அ-ரை) இரணிய கருப்பன் - பிரமன்; இரணிய கருப்பனும் இலக்குமி கணவனும் உருத்திரனும் என உம்மை விரித்து ஆவரென்பதற்குப் பன்மை வினைமுதல் காண்க. ஆவர் - இருப்பர்; தோன்றுவரெனினுமாம். பயில் பேர் ஆக - தனக்கு வழங்கப்படும் பெயராகக் கொண்டு; பிரணவ சமட்டி - சமஷ்டிப் பிரணவம்; பீடமீது - ஆசனத்தில்.

‘அகார: -- ப்ரஹ்மா -- உகார: -- விஷ்ணு -- மகார: -- ருத்ரா -- ஓங்கார: -- ஸம்வர்த்தகோக்நி --’ என்ற அதர்வசிகோபநிஷத்தும், ‘பூர்வா மாத்ரா -- ப்ரஹ்மா -- த்விதியா -- விஷ்ணு: -- த்ருதியா -- ருத்ர: -- சதுர்த்யா -- ஸம்வர்த்தகோக்நி --’ என்ற நாரஸிம்ஹ பூர்வதாபநீயோபநிஷத்தும், ‘அகாரே ஸம்ஸ்திதோ ப்ரஹ்மா உகாரே விஷ்ணுராஸ்தித: மகாரே ஸம்ஸ்திதோ ருத்ரஸ் ததோஸ்யாந்த: பராத்பர:’ என்ற ப்ரஹ்மவித்யோபநிஷத்தும், ‘அகாரம் ப்ரஹ்மாணம் -- உகாரம் விஷ்ணும் -- மகாரம் ருத்ரம் -- ஓங்காரம் ஸர்வேச்வரம்’ என்ற நாரஸிம்ஹோத்தரதாபநீயோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். ஸம்வர்த்தகாக்கினி பதமும் ஸர்வேச்வர பதமும் பரியாயங்களாய் வந்திருத்தல்காண்க. அவ் வீசுரபதம் சிவபிரானுக்கே உரியது. (க)

பிரணவத்தின் அர்த்த மாத்திரையிற் சிவலோக மிருக்குமென்பதால் அவ்வர்த்த மாத்ரா தெய்வம் சிவ பிரானே யென்பது.

அவ்வதி லிருக்கும் பூமி யந்தர மிருக்கு முவ்வில்
மவ்வதி லிருக்குஞ் சொர்க்கம் வாக்கொடு மனமுஞ் செல்லாத்
திவ்விய வுமைவாழ் பாகச் சிவபிரான் சோம லோக
மெவ்வமி லருத்தந் தன்னி லிருக்குமென் றுரைக்கும் வேதம்.

(அ-ரை) அந்தரம் - அந்தரிக்ஷம்; உமைவாழ்பாகச் சிவபிரான என்றது சாமன் என்றதை விளக்கியபடி; சோமலோகம் - சிவலோகம்; எவ்வம் - கேடு; அருத்தந் தன்னில் - அருத்த மாத்திரையில்.

‘கேவலமகாரோகார மகாரார்த்த மாத்ரா ஸஹிதம் ப்ரணவமூஹ்ய’ என்ற ராம ரஹஸ்யோபநிஷத்தும், ‘அகாரோகார மகாரார்த்த மாத்ராத்மகா’ என்ற வராகோபநிஷத்தும், ‘அர்த்தமாத்ரா ஸமாயுக்த: ப்ரணவோ மோக்ஷதாயக:’, ‘ப்ருதிவி -- அகாரே -- அந்தரிக்ஷம் -- உகாரே -- த்யௌ: -- மகாரே -- பஞ்ச

தைவதம் ஓங்காரம்' என்ற தியானபிந்தூபநிஷத்தும், 'ப்ருதிவ்யகார:--அந்தரிக்ஷம் ஸ உகார:--த்யௌ: ஸ மகார:--ஸோமலோக ஓங்கார:' என்ற நரஸிம்ஹ பூர்வ உத்தரதாபிந்யுபநிஷத்துக்களும் அதர்வசிகோபநிஷத்தும், 'அரையாத்திரையி லடங்கும்படி' என்ற தேவாரமும், 'மஹேசாநமவாங் மாநஸகோசரம்' என்ற சரபோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

(௨)

மற்றத் தேவர்களை வைத்துத் தியானிக்குந் தானங்களுக் கெல்லாம் உயர்ந்தது துவாதசாந்த ஸ்தானம். அங்குவைத்துத் தியானிக்கப் படுபவர் சிவபிரானென்பது.

ஈரிரு முகவ னாபி யிடத்தரி யிதயந் தன்னி
லோரிரு புருவ மையத் துருத்திரன் றுவாத சாந்தச்
சீரிய தான மீது சிவபிரா னிவர்க டம்மை
நேரிய யோகி யென்று நிறுத்துவன் றியானத் தாலே.

(அ-ரை) ஈர் இரு முகவன் - பிரமன்; நாபி - கொப்பூழ்; ஓர் - சிறந்த; மையத்து - நடுவில்; என்றும் - எப்போதும்; நிறுத்துவன் - வைத்து ஏத்துவான்.

'த்வாதசாந்தபதம் ஸ்தாநமிதி' என்ற தக்ஷிணாமூர்த்தி யுபநிஷத்தும், 'சிரஸோபரி த்வாதசாங்குல ஸமீக்ஷிதாம்ருதத்வம் பவதி' என்ற அத்வயதாரகோபநிஷத்தும், 'ப்ரஹ்மரந்த்ரே மஹாஸ்தாநே வர்த்ததே ஸததம் சிவா | சித்சக்தி:' என்ற யோகசிகோபநிஷத்தும், 'ப்ரஹ்மாணம் நாபௌ--விஷ்ணும் ஹ்ருதயே--ருத்ரம் ப்ருமத்யே--ஸர்வேச்வரம் த்வாதசாந்தே' என்ற நரஸிம்ஹோத்தரதாபிந்யுபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

(௩)

இன்றொரு வகைத் தியான முறையில் உச்சஸ்தானமா யிருப்பது நெற்றி. அதில் வைத்துத் தியானிக்கப் படுபவருஞ் சிவபிரானென்பது.

அயனெனு மவனை நெஞ்சி லரிதனைக் கண்டந் தன்னி
லுயவினை யுயிர்கட் கோட்டு முருத்திர தேவை நாவிற்
செயமெலா மன்பர்க் காக்குஞ் சிவபிரான் றன்னை நெற்றி
நயமிகு மிடத்தி னுட்டி நாளுநற் றியானஞ் செய்யே.

(அ-ரை) உயவினை - துன்பத்தை; நயம் - நன்மை; நாளும் - தினந்தோறும்.

'ப்ரஹ்மணோ ஹ்ருதய ஸ்தாநம் கண்டே விஷ்ணு: ஸமாச்ரித: தாலுமத்யே ஸ்திதோ ருத்ரோ லலாடஸ்தோ மஹேச்வர:' என்ற பிரமவித்யோபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம்.

(௪)

ஒவ்வொரு தேவரும் ஒவ்வொரு வண்ணராயிருக்கச் சிவபிரான் மாத்திரம் சர்வ வர்ணங்களையுந் தம்பாற் கொண்டவரென்பது.

மஞ்சளி னிறவ னாகி மாமறைக் கிழவன் வாழ்வா
னஞ்சன வண்ண னாவா னரவமீ துறங்குந் தேவன்
விஞ்சிய வெள்ளைத் தேவாய் விளங்குவ னரனால் வேதச்
செஞ்சொறு முரையு மான சிவபிரான் சருவ வண்ணன்.

(அ-ரை) நிறவன் - நிறத்தையுடையவன்; மாமறைக்கிழவன் - பிரமன்; அஞ்சனம் - மை; அரவமீது உறங்கும் தேவன் - விஷ்ணு; விஞ்சிய - மிகுந்த; அரன் - உருத்திரன்; உரை - பொருள்.

‘பீதா -- ப்ரஹ்மதைவத்யா -- க்ருஷ்ணா விஷ்ணு தைவத்யா -- சுக்லா ருத்ரா தைவத்யா -- ஸர்வ வர்ணா புருஷ தைவத்யா’ என்ற அதர்வசிரோபநிஷத்தும், ‘மற்றுமற்றும் பல்பல வண்ணத்தராய்’ என்ற தேவாரமும், ‘ருக்ரோர்த்த அக்ஷர: ஸ உமா’ என்ற ருத்ரஹ்ருதயோபநிஷத்தும், ‘ஸர்வ நாதமய: சிவ:’ என்ற தோஜோபிந்தூபநிஷத்தும், ‘ஸர்வாக்ஷரமய:’ என்ற நாரதபரிவ்ராஜகோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். புருஷ பதம் சிவபிரானுக்கே யுரிய பெயர். (ரு)

தம்பாற் சர்வ வர்ணங்களையுங் கொண்டதுபோல் ஒருவர்ணத்தையுங் கொள்ளாமல் ஸ்படிகம்போல விளங்குபவரும் சிவபிரானே யென்பது.

மருமலி மலரோன் செய்யன் மங்குலி னிறவன் மாலோ
னுருமலி கபில வண்ண னுருத்திர மூர்த்திக் குண்டால்
கருமலி யுயிர்கட் கெல்லாங் களைகணாய்த் தானோர் போதுஞ்
செருமல முருத செல்வச் சிவபிரான் படிக வண்ணன்.

(அ-ரை) மருமலி மலரோன் - பிரமன்; மங்குல் - இருள்; உருமலி - அழகு நிறைந்த; கருமலி - கருப்பசங்களை அளவு கடந்து அடைகிற; களைகண் - ஆதரவு; செருமலம் - போர் செய்கிற மும்மலம்; படிகம் - பளிங்கு. இச்செய்யுளில் மற்றொரு வகை வர்ண வரிசை யுண்மை காண்க.

‘ப்ரஹ்ம தேவத்யா ரக்தா வர்ணேன -- விஷ்ணு தேவத்யா க்ருஷ்ண வர்ணேன -- ஈசான தேவத்யா கபில வர்ணேன -- ஸர்வ தேவத்யா அவ்யக்தி பூதா ஸ்வம்விசாதி சுத்தாஸ்படிக ஸந்நிபா வர்ணேன’ என்ற அதர்வசிரோபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம். (ச)

ஸர்வ லோகாதீதமாய்ப் பரமுத்திஸ்தானமாய் விளங்குவது சிவலோகமென்பது.

இந்திர னுலகின் மேலே யிருந்திடும் பிரம லோகஞ்
செந்திரு கணவ னுடத் திசைமுக னுலகின் மேலா
முந்தொளி யுலகஞ் சேரு முருத்திரற் கதன்மே லங்காட்
டந்தம தாகு முத்தி யருள்சிவ பிராற்கு நாடே.

(அ - ரை) செந்திரு கணவன் - விஷ்ணு; உந்து ஒளி - வீசுகின்ற ஒளியையுடைய; அந்தமது - முடிவில்; ஆகும் - இருக்கும்; சிவபிராற்கு நாடு - சிவலோகம். முத்தி அருள் என்பது சிவபிரானுக்கு அடை. முத்தியருள் சிவபிராற்கு நாடு அந்நாட்டந்தமது ஆகும் என்க.

'ஷஷ்ட்யா மிந்த்ரஸ்ய ஸாயுஜ்யம் ஸப்தம் யாம் வைஷ்ணவம் பதம் அஷ்டம் யாம் வ்ரஜதே ருத்ரம் -- த்வாதச்யாம் ப்ரஹ்ம சாச்வதம் -- சிவம் --' என்ற நாதபிந்தூபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம். பிரமனுலகம் ஏழிலடங்குவதையும் விஷ்ணு பதத்தின் கீழிருப்பதையும் யூகித்தறிக. ஏனை உலகங்களின் வரிசையையும் அவ்வுபநிஷத்திற் காணலாம். (எ)

மற்று மூன்றவத்தைகளுக்கு அதீதமாய துரியத்துக்குத் தெய்வம் சிவபிரானென்பது.

மலரவ னனவில் வாழ்வன் மாலவன் கனவி லெய்வ
னுலவறு சுழுத்தி சேர்வ னுருத்திர னெங்கு மென்றுந்
திலமுறு நெய்போ னிற்குஞ் சிவபிரான் றுரியந் தன்னி
னிலவுவ னிதனை வேத நெறியின ரறிவ ரன்றே.

(அ - ரை) எய்வன் - பொருந்துவான்; உலவு அறு - கெடுதலற்ற; எங்கும் - சித்தசித்துப் பிரபஞ்ச முழுவதிலும்; என்றும் - எக்காலத்திலும்; திலம் - எள்; நிலவுவன் - விளங்குவான்.

'ஜாகரிதே ப்ரஹ்மா ஸ்வப்நே விஷ்ணு: ஸுஷுப்தௌ ருத்ரஸ் துரீய மக்ஷரம்' என்ற பிரமோபநிஷத்தும் பரப்பிரமோபநிஷத்தும், அவஸ்தாத்ரிய தயாதீதம் துரியம் -- ஈசாநம் --' என்ற பஞ்சப்பிரமோபநிஷத்தும், 'திலேஷு தைலம்' என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். அக்ஷர பதமும் ஈசாந பதமும் பரியாயங்கள். (அ)

வேதம் நாலாவது வஸ்துவைச் சிவநாமத்தாலேயே பிரஸ்தாபிக்குமென்பது.

நான்மறை சதுர்த்தந் தன்னை நலம்பெற வரைக்கும் போது
மான்மல ருறைவோ னாதி வானவர் பெயர்க ளன்றிப்
பான்மதி மிலைச்சுஞ் சென்னிப் பரமனுக் குரிய நாமந்
தான்மிக வழங்க லாலே தற்பர னவனே யன்றோ.

(அ - ரை) சதுர்த்தந்தன்னை - திரிமூர்த்திகளுக்கும் மேலாகிய நாலாவது பொருளை; நலம் பெற - தெளிவு உண்டாகும்படி; மால் - விஷ்ணு; மலர் உறைவோன் - பிரமன்; பெயர்களன்றி - பெயர்களைப் பிரஸ்தாபியாமல்; பான்மதி மிலைச்சுஞ் சென்னிப் பரமனுக்கு உரிய - சிவபிரானுக்குச் சொந்தமான; நாமம் தானே - பெயர்களையே; வழங்கலால் - பிரஸ்தாபித்தலால்; தற்பரன் - முழுமுதற் கடவுள்.

'சிவம் -- சதுர்த்தம்' என்ற மாண்டூக்கியோபநிஷத்தும், நரஸிம்ஹ பூர்வ உத்தரதாபிநியுபநிஷத்துக்களும், நாரதபரிவ்ராஜகோபநிஷத்தும், ராமோத்தரதாபிநியுபநிஷத்தும், 'சதுர்த்தம் -- சிவம்' என்ற பஸ்மஜாபாலோபநிஷத்தும், 'சதுர்த்த -- சிவ' என்ற மாண்டூக்கியோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (௯)

வணங்குகிறவர். திரிமூர்த்திகளும் வணங்கப் படுகிறவர் சிவபிரானுமாவாரென்பது.

சேவிய னுவ னென்று முபாசியன் றியேய னென்றுந்
தேவிக மறைக ளெல்லாஞ் சிவபிரான் றன்னைப் போற்றிச்
சேவக ராவ ரென்று முபாசகர் தியாதா மாரிங்
காவரோ யென்றுங் கூறி யகற்றிடு மூவர் தம்மை.

(அ·ரை) சேவியன் - சேவிக்கப்படுகிறவன் ; உபாசியன் - உபாசிக்கப் படுகிறவன் ; தியேயன் - தியானிக்கப்படுகிறவன் ; தேவிக - தெய்வீக ; சேவகர் - சேவிக்கிறவர் ; உபாசகர் - உபாசிக்கிறவர் ; தியாதாமார் - தியானிக்கிறவர் ; அகற்றிடும் - ஒதுக்கும் ; மூவர் தம்மை - பிரம விஷ்ணு ருத்ரரை.

'ப்ரஹ்ம விஷ்ணவாதிபி : ஸேவ்யம் -- ஈசாநம்' என்ற பஞ்சப்ரஹ்மோபநிஷத்தும், 'சிவம் -- ஸர்வேச்வரம் ஸர்வ தேவைவ ருபாஸ்யம்' என்ற மஹோபநிஷத்தும், 'ஸதாசிவம் ப்ரஹ்மாதி வந்திதம்' என்ற நரஸிம்ஹ பூர்வதாபிநியுபநிஷத்தும், 'ஸர்வ தேவைருபாஸ்யம்', 'ஸர்வஸ்ய சரணம்' - என்ற சுவேதா சுவதரோபநிஷத்தும், 'ப்ரஹ்ம விஷ்ணு புரந்தராத்யமரவா ஸேவிதம்', 'மாமே வோபாஸிதவ்யம்', 'ஏகாமாத்ர சாஸ்யம் -- சிவம்' என்ற பஸ்ம ஜாபாலோபநிஷத்தும், 'சிவ ஏகோ த்யேய:', 'த்யாயீதே சாநம்' என்ற அதர்வ சிகோபநிஷத்தும், 'ஏகோ ருத்ரோ த்யேய:', 'சிவ ஏவ ஸதா த்யேய:' என்ற சரபோபநிஷத்தும், 'நாராயண பரோத்யாதா' என்ற நாராயணோபநிஷத்தும், 'த்யாதா ருத்ர:' என்ற அதர்வ சிகோபநிஷத்தும், 'ராம ஏவ பரம் தப:' என்ற ராம ரஹஸ்யோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (௧௦)

சைவசமயத்து முழுமுதற் கடவுள் நாலாவது வஸ்துவாகிய சிவ பிரானே யென்பது.

சுத்தா சதுர்த்த னென்றுந் தகளறு துரிய னென்றுஞ்
சிந்தனை மறைக ணான்குஞ் செய்சிவ பிரானே மாயா
மந்திர மாமிப் பாரில் வழங்கிடு மதங்கட் கெல்லா
முந்திய சைவ மார்க்க முழுமுதற் கடவுள் காணே.

(அ·ரை) தகளறு - குற்றமற்ற ; மறைகள் நான்குஞ் சிந்தனை செய் சிவபிரானே என்க. - செய் என்பதன் வினைமுதல் மறைகள் நான்கும் என்பது ; சிந்தனை செய் - சிந்திக்கிற ; மாயா மந்திரம் ஆம் - மாயா காரிய [illegible] ; இப்பாரில் - இவ்வுலகில் ; வழங்கிடு - காணப்படுகிற - [illegible]

‘மூவரு முப்பத்து மூவரு மற்றொழிந்த தேவருங் காணாச் சிவபெருமான்’ என்ற திருவாசகம் இச்செய்யுட்குப் பிரமாணம்.

இதுவரை வந்தது நாலு தெய்வப் பிரஸ்தாபம். இனி வருவது ஐந்து தெய்வப் பிரஸ்தாபம். சதுர்த்த தெய்வம் இவ்வரிசையிற் சேராது. (கக)

பிரமனாதி ஐந்து மூர்த்திகளுட் சதாசிவனே பஞ்சகிருத்தியங்களையுஞ் செய்வரென்பது.

ஆக்குவ னயன்பா லாக்கி யளிப்பனு லாக்கிக் காத்துப்
போக்குவ னரன்பா மேகசப் புங்கவ னுக்கிக் காத்துப்
போக்கியே மறைப்ப னெண்ணில் புகழ்ச்சதா சிவன்றன்
[செய்வ
னுக்குத லளித்தல் போக்கல் மறைத்தனல் லருள்க ளம்மா.

(அ - ரை) மாகேசப் புங்கவன் - மகேச்சுரன் ; எண் இல் - அளவில்லாத.

‘பஞ்சக்ருத்ய நியந்தாரம்’ என்ற பஞ்சப்ரஹ்மோபநிஷத்தும், ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார திரோதா நுக்ரஹாதி ஸர்வசக்தி --’ என்ற தோப நிஷத்தும், ‘பஞ்சக்ருத்ய ஸம்பந்ந: -- பசுபதி’ என்ற ஜாபால்யுப ஷத்தும், ‘அயன் முதலிய மூவர்க்கும் முறையே படைப்பு முதலிய ன்றனுள் ஒரோவொன்று சிறப்புத்தொழிலும், ஏனைய பொதுத்தொழிலுமா னவும் ; மகேசன் சதாசிவன் இருவர்க்கும் முறையே மறைப்பும் அருளுஞ் ரப்பத் தொழிலும் ஏனைய பொதுத்தொழிலுமாம்’ என்ற சிவஞானமகா ஷ்யமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (கஉ)

உடம்பிற் பிரதான உறுப்பாகிய சிரசிற்குரிய தெய்வம் சதாசிவனே ன்பது.

அடிமுதல் முழங்கால் காறு மயனுள னதன்மேன் மாய
னிடைவரை யுள்ளான் றாணு விருதயம் வரையி லாவன்
வடுவறு புருவத் தெல்லை மகேச்சுரன் வதிவான் மேலாந்
தடமுடி தனினன் குற்றான் சதாசிவ பரமன் றானே.

(அ - ரை) இடை - இடுப்பு ; தாணு - உருத்திரன் ; வடு அறு - குற்ற ; வதிவான் - இருப்பான் ; தடமுடிதனில் - விசாலமான சிரசில்.

‘பாதாதி ஜா[illegible]ர் பர்யந்தம் -- சதுர்புஜாகாரம் சதுர்வக்த்ரம் ஹிரண்மயம் நாநோ: பாயுபர்யந்தம் -- நாராயணம் தேவம் -- ஆபாயோர் ஹ்ருதயாந்தம் த்ரம் -- ஆஹ்ருதயாத் ப்ருவோர் மத்யம் -- ஈச்வரம் -- ஆப்ருமத்யாத் மூ ர்த்தம் -- ஸதாசிவம்’ என்ற யோகதத்வோபநிஷத்து இச்செய்யுட்குப் ணம். (கங)

மற்றப் பூதங்களை யெல்லாம் வியாபித்துள்ள ஆகாச தெய்வம் சதாசிவனே யென்பது.

மண்ணதி லயன்மா னீரில் வன்னியி லரன்கா லீசன்
றண்ணளி வடிவ மான சதாசிவன் விண்ணி லுள்ளா
ரெண்ணிடு பூத மைந்து மேறலான் முறையா லாங்கே
நண்ணிடு மதிபர் தாமு நாசமி லதிக ரங்கண்.

(அ - ரை) வன்னியில் - தீயில்; அரன் - உருத்திரன்; கால் - காற்றில்; அயனும் மாலும் அரனும் ஈசனும் சதாசிவனும் என உம்மை விரித்து உள்ளார் என்பதற்குப் பன்மை வினைமுதல் காண்க; ஏறலான் - வியாபித்தலான்; ஆங்கே - அப்பூதங்களில்; நண்ணிடும் - இருக்கின்ற; அதிபர் - கடவுளர்; அதிகர் - வியாபகர்; அங்கண் - அப்பூதங்களின் வியாபக முறையில்.

‘ஆகாசாத் வாயு: வாயோ ரக்நி:| அக்நேராப:| அத்ப்ய: ப்ருதிவீ|| என்ற
தைத்திரீயோபநிஷத்தும், பைங்கலோபநிஷத்தும், ‘ஆகாசாத் வாயுர் வாயோ
ரக்நி ரக்நே ராபோத்ப்ய: ப்ருதிவீ’ என்ற ஜாபாலோபநிஷத்தும், ‘ஆகா
சாத் வாயு:| வாயோ ரக்நி: அக்நேராப: அத்ப்ய: ப்ருதிவீ| ஏதேஷாம்
பஞ்சபூதாநாம் பதய: பஞ்ச ஸதாசிவேச்வர ருத்ர விஷ்ணு ப்ரஹ்மாணச்சேதி’
என்ற யோகசூடாமணியுபநிஷத்தும், ‘ப்ருதிவீ -- சதுர்புஜாகாரம் சது
வக்த்ரம் ஹிரண்மயம் -- ஆப: -- நாராயணம் தேவம் -- வஹ்நி -- ருத்ரம் -- வாயு
-- ஈச்வரம் -- வ்யோம -- ஸதாசிவம்’ என்ற யோகதத்வோபநிஷத்தும்,
‘ப்ரஹ்மாணம் ப்ருதிவீ பாகே விஷ்ணும் தோயாம்சகே ததா| அக்ந்யம் சே
மஹேசாக மீச்வரம் சாநிலாம் சகே| ஆகாசாம்சே மஹா ப்ராஜ்ஞ தாரயேத்
ஸதாசிவம்’ என்ற ஸ்ரீ ஜாபாலதர்சனோபநிஷத்தும், ‘தரண்யேள ப்ரஹ்ம
தத்ராதி தேவதா -- ஜலம் விஷ்ணு ஸ்தஸ்யாதி தேவதா -- வஹ்நிருத்ரஸ்த
யாதி தேவதா வாயோர் பிம்பம் த -- ஈச்வரோஸ்யாதி தேவதா ஆகாசமண்
லம் -- தேவதாஸ்ய ஸதாசிவ:’ என்ற யோகசிகோபநிஷத்தும் இச்செய்யு
(க
குப் பிரமாணங்கள்.

பஞ்ச பூதங்களையும் ஒருசேரச் சதாசிவோபாசனை யாற்றான் சயி
முடியுமென்பது.

மண்டனை யயனால் வெல்க மாலினால் வெல்க மண்ணீர்
மண்புன லனலை வெல்க வயங்கரா முதலோன் றன்னால்
மண்புன லனல்கா றன்னை மகேசனால் வெல்க வெல்க
மண்புன லனல்கால் வானை வண்சதா சிவனால் மாதோ.

(அ - ரை) மண்ணீர் - பிருதிவியையும் அப்புவையும்; வயங்கு - பி
சிக்கிற; அராமுதலோன் றன்னால் - உருத்திரனால்.

‘த்யாயம்ச் சதுர் புஜாகாரம் சதுர் வக்த்ரம் ஹிரண்மயம் தாரயேத்
கடிகா: ப்ருதிவீ ஜயமாப்நுயாத் -- ஸ்மரந் நாராயணம் தேவம் -- தார
பஞ்சகடிகா— ததோ ஜலாத்பயம் நாஸ்திஜலே ம்ருத்யுர் நவித்யதே| ரு

தருணா மித்ய ஸங்கிபம் - - தாரயேத் பஞ்சகடிகா வஹ்நி நாஸௌ தாஹ்யதே - - தாரயேத் தத்ர ஸர்வஜ்ஞ மீச்வரம் விச்வதோமுகம் தாரயேத் பஞ்சகடிகா வாயுவத்வ்யோம பவேத் - - ஆகாசே வாயு மாரோப்ய ஹகாரோபரி சங்கரம் - - ஸதாசிவம் - - யத்ரகுத்ரஸ்திதோவாபிஸுக மத்யந்த மச்நுதே' என்ற யோகதத்வோபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம். (கரு)

ஆறாதாரங்களுள் உச்சமான ஆஞ்ஞைத் தெய்வம் சதாசிவனென்பது.

விதிபதி சுவாதிட் டானம் விட்டுணு மணிபூ ரத்த
னுதிகதி ரொளியாஞ் சீவர்க் குருத்திர னாக தத்தன்
வதிபதி விசுத்தி தன்னின் மகேச்சுர னாஞ்ஞை யென்னும்
பதியதி லுறைமேவா னன்னோர் பணிசதா சிவனே யாவன்.

(அ-ரை) விதி - பிரமனுக்கு; பதி - இடம்; சீவர்க்கு உதி கதிர் ஒளி ஆம் - உயிர்களுக்கு அந்தகாரத்தை நீக்குவதிற் காலைக் கதிரவன் போலுள்ள; விசுத்திதன்னில் வதிபதி என்க; வதிபதி - இருக்கிற தலைவன்; அன்னோர்-முன் நால்வரும்; எனவே மகேச்சுரனை முன்மூவரும், ருத்திரனை முன் இருவரும், விஷ்ணுவைப் பிரமனொருவனும் பணிவரென்பதூ ஞுசனே. ஆறாதாரங்களை யோககுண்டலியுபநிஷத்து 'மூலாதாரம் ஸ்வாதிஷ்டானம் - - மணிபூரம் - - அநாஹதம் விசுத்தம் ச ஆஜ்ஞா சக்ரம்' என்றும், ஹம்ஸோபநிஷத்து 'ஸ்வாதிஷ்டானம் - - மணிபூரகம் - - அநாஹதம் விசுத்தௌ - - ஆஞ்ஞாம் - - ப்ரஹ்மரந்த்ரம் - -' என்றும் கணக்கிடும். இங்கு மூலாதாரமும் பிரமரந்திரமுந் தள்ளி அம்மூர்த்திகளின் தாரதம்மியங்காட்ட மற்றவைமட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டன. (கசு)

மூன்று மூர்த்திக் கணக்க வரும்போது அவர்களுக்கதீதனாகிய நாலாவது மூர்த்தியாஞ் சிவபிரானே ஐந்து மூர்த்திக் கணக்க வரும்போது அவர்களுக்கதீதனாகிய ஆறாவது மூர்த்தியாயும் விளங்குவனென்பது.

அயனென வரியே யென்ன வரனென மகேச னென்னச்
சயசதா சிவனே யென்னச் சாற்றுமவ் வைவர் மேலாய்
மயலறு போதா நந்த மயசிவ னென்னு மாறுஞ்
சுயவொளி யிறைவ னாகித் துலங்கலுந் துரியற் குண்டால்.

(அ-ரை) துலங்கல் - விளங்குதல்.

'ப்ரஹ்மாணம் - - விஷ்ணும் - - மஹேசாந மீச்வரம் - - ஸதாசிவம் ; அதவா தவ வக்ஷ்யாமி தாரணாம் முநிபுங்கவ | புருஷே ஸர்வ சாஸ்தாரம் போதாநந்தமயம் சிவம்' என்ற ஸ்ரீ ஜாபாலதர்சநோபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம். (கஎ)

திரிமூர்த்திகளுட் சேர்ந்த உருத்திரன் சைவசமயக் கடவுளல்லரென்பது.

முத்தொழி லியற்றுந் தேவர் மூவருண் மூன்றாந் தேவே
சத்திய சைவ மார்க்கத் தனிமுத லென்பர் தேரா
ரத்தொழி லிறைவ ரெல்லா மஞ்சலி சிரமேற் கொண்டு
வித்தக சதுர்த்த னாறே வினைகளை யென்றுஞ் செய்வார்.

(அ - ரை) முத்தொழில் இயற்றுந்தேவர் - பிரமவிஷ்ணுருத்ரர் ; மூன்றாந்தேவு - உருத்திரன் ; சைவமார்க்கத்தனிமுதல் - சைவசமயக்கடவுள் ; தேரார் - அறியாதவர் ; அத்தொழிலிறைவரெல்லாம் - அம்மூவரும் ; அஞ்சலிசிரமேற்கொண்டு - வணங்கி ; வித்தக - ஞானமய ; ஆறே - திருவுள்ளப்படி ; வினைகளை - முத்தொழில்களையும்.

‘நம்மவ ரவரே, மூவரென்றே யெம்பிரானொடும் எண்ணி விண்ணாண்டு மண்மேல், தேவரென்றே யிறுமாந்தென்ன பாவந்திரிதவரே’ என்ற திருவாசகம் இச்செய்யுட்குப் பிரமாணம். (கஅ)

திரிமூர்த்திகளுஞ் சிவபிரானிடமே ஒடுங்கித் தோன்றுவரென்பது.

அயனரி தன்னி லாவ னயன்றனி லரிதா னாவ
னயனரி யரனி லாவ ரரனரி யயரி லாவ
னியலிவை கற்ப பேத மீசுர மூர்த்தி தானே
யயனரி யரரைத் தன்பா லாக்கிமுன் னழிப்பான் பின்னர்.

(அ - ரை) ஆவன் - வெளிப்படுவான், ஒடுங்குவான் ; இயல் இவை - இப்படி நிகழுகிற இவ்விரண்டும் ; கற்பபேதம் - அவாந்தர கற்பங்களிலுண்டாகும் மாறுபாடுகள் ; தன்பால் - தன்னிடத்திலிருந்து, தன்னிடத்தில் ; ஆக்கி - வெளிப்படுத்தி ; முன் - பிரதம சிருட்டியில் ; அழிப்பான் - ஒடுக்குவான் ; பின்னர் - சர்வ சங்காரத்தில்.

‘ஏகோஹவை நாராயண ஆஸீந் நப்ரஹ்மா நேசாந:’ என்ற மஹோபநிஷத்தும், ‘நாராயணாத் ப்ரஹ்மா ஜாயதே நாராயணாத் ருத்ரோ ஜாயதே’, ‘ருத்ரோ மஹர்ஷி:| ஹிரண்ய கர்பம் பச்யதி ஜாயமாநம்’ என்ற நாராயணோபநிஷத்தும், ‘லலாடாத் க்ரோதஜோ ருத்ரோஜாயதே’ என்ற ஸுபலோபநிஷத்தும், ‘[illegible]மாபிவிஷ்ணோர் ஜநகம்’ என்ற சரபோபநிஷத்தும், ‘நாராயணாத் திரண [illegible] ஜாயதே’ என்ற திரிபாத்விபூதிமஹாநாராயணோபநிஷத்தும், ‘ப்ர[illegible]யோநிம்’ என்ற கைவல்யோபநிஷத்தும், ‘ஈசம் புருஷம் ப்ரஹ்மயோநிம்’ என்ற முண்டகோபநிஷத்தும், ‘ருத்ரோ மஹர்ஷி:| ஹிரண்யகர்பம் ஜ[illegible]ஸபூர்வம்’, ‘ருத்ரோ மஹர்ஷி:| ஹிரண்யகர்பம் பச்யதி ஜாயமாநம்’, ‘ப்ரஹ்மயோநிம் யோப்ரஹ்மாணம் விததாதிபூர்வம்’ என்ற ச்வேதாச்வதரோபநிஷத்தும், ‘ஸர்வேச்வரம் - - சிவாச்யுதாம் பேருஹ கார்ப பூருஹம்’ என்ற

நாரதபரிவ்ராஜகோபநிஷத்தும்; 'சிவம் -- ஹரி ஹர ஹிரண்ய கர்ப ஸ்ருஷ்டாரம்' என்ற பஸ்மஜாபாலோபநிஷத்தும், 'த்ரயஸ்தை காரணாத்மனோ ஜாதாஸ் ஸாக்ஷாந் மஹேச்வராதித்யுபக்ரம்ய யஸ் பஷ்ட முக்தம் தபஸாதோஷயித்வாது பிதரம் பரமேச்வரம் | ப்ரஹ்ம நாராயணௌ பூர்வம் ருத்ரம் கல்பாந்தரே ஸ்ருஜத் | கல்பாந்தரே புநர்ப்ரஹ்மா ருத்ர விஷ்ணு ஜகந்மய : விஷ்ணுச்ச பகவாந் தத்வத் ப்ரஹ்மாணமஸ்ருஜத் ப்ரபு : | நாராயணம் புநர் ப்ரஹ்மா ப்ரஹ்மாணம் ச புநர்பவ : | ஏவம் கல்பேஷு கல்பேஷு ப்ரஹ்ம விஷ்ணு மஹேச்வரா : | பரஸ் பரஸ் மாஜ்ஜாயந்தே பரஸ்பரஜயைஷிண : | தத்தத் கல்பாந்த மதிக்ருத்ய மஹர்ஷிபி : | ப்ரபவ : கத்யதே தேஷாம் பரஸ்பர ஸமுத்பவா இதி' என்ற வாயு ஸம்ஹிதையும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

(கக)

திரி மூர்த்திகளையும் சிவபிரான் எளிதிற் சங்கரிப்பவ ரென்பது.

பார்தனை யாக்குந் தேவைப் பாற்கட லிறையைச் சூலஞ்
சேர்கர முதலை யீற்றிற் சிவபிரான் சங்க ரித்த
லார்கலி நீரை முற்று மாங்குறு வடவை யங்கி
யோர்கண மதனிற் சிறி யுண்பதற் கொப்பா மன்றே.

(அ - ரை) ஆர்கலி - கடல்; வடவை அங்கி - வடவாமுகாக்கினி.

'ப்ரஹ்மா விஷ்ணுச்ச ருத்ரச்ச ஸர்வேவாபூத ஜாதய : | நாசமேவாநுதாவந்திஸலிலா நீவபாடபம்' என்ற மஹோபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம்.

(உ0)

மூன்ற மூர்த்தியாகிய உருத்திரர் சிவபிரானை நோக்கித் தவஞ்செய்து அவரிடமிருந்து சிவநாம ரூபாதிகளைப் பெற்றரென்பது.

மேதகு மூன்று மூர்த்தி யிருப்புடன் சதுர்த்தன் றன்னைப்
பாதம திறைஞ்சி நோற்றுப் பரித்திடப் பெற்று னன்னு
னேதரு முருவும் பேரு முயர்மறை யதனு லந்தப்
பேதரை யபேத மாக்கிப் பேசலு மாங்காங் குண்டால்.

(அ - ரை) மேதகு - மேன்மையான; பரித்திட - தாங்க; பேதரை - மூன்றுமூர்த்தியையுஞ் சதுர்த்த மூர்த்தியையும்; அபேதம் ஆக்கி - ஒருவராக்கி மூன்று மூர்த்தியே பரமென்று; ஆங்காங்கு - ஒவ்வோரிடத்தில்; பின் சில செய்யுட்களில் மும்மூர்த்திப் பிரஸ்தாபமே வருகிறது; ஆங்கும் உருத்திரருக்கே பிரத்துவம் உளதாதல் காண்க.

[illegible] தச சக்த்யாதிஷ்டிதச்சச்வத்தச்சிஹ்னை ரபி சிஹ்நித: | தந்நாம ரூபதத்ருபஸ் தத்கார்ய கரணக்ஷம: | தத்துல்ய வ்யவஹாரச்சததாஜ்ஞா பரிபாலக:' என்ற வாயு ஸம்ஹிதை இச்செய்யுட்குப் பிரமாணம். (உக)

உருத்திரரே சர்வத்துக்குங் காரண சொரூபரென்பது.

கண்ணுத லுருவ மாகிக் காரண மனைத்து மோங்குங்
கண்ணர விந்த மாவோன் காரிய மனைத்து மாவான்
மண்ணுறு கிரியை யெல்லா மலரவ னுருவா மென்னி
னெண்ணுவ ரரனைச் சர்வ காரண னென்று மேலோர்.

(அ - ரை) கண் அரவிந்தமாவோன் - விஷ்ணு; மண் - உலகத்தில்.

'கார்யம் விஷ்ணு: க்ரியா ப்ரஹ்மா காரணம்து மகேச்வர:' என்ற ருத்ரஹ்ருதயோபநிஷத்தும், 'ஸர்வேசம் - - சிவம் - - ஸர்வகாரணம்' என்ற மண்டலப்ராஹ்மணோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (உஉ)

மோக்ஷ நாடிக்குத் தெய்வம் உருத்திரனே யென்பது.

நாடரு நாடி மூன்று ணாண னிடையின் றெய்வம்
பீடுறு கமல வாசன் பிங்கலைத் தெய்வ மாவன்
வீடெனு மின்பைச் சீவர் மேவிட முதுகென் பூடே
யோடிடு சுழுனைத் தேவா யுறைபவன் சிவனே யாவான்.

(அ - ரை) நாடு அரு - ஆராய்தற்கரிய; பீடு - பெருமை; கமலவாசன் - பிரமன்; வீடெனும் இன்பை - முத்தியை; மேவிட - அடைய; என்பூடே - எலும்புக்கு நடுவில்.

'இடாவாமே ஸ்திதா பாகே தக்ஷிணே பிங்களா ஸ்திதா || ஸுஷும்நா மத்ய தேசே' என்ற யோகசூடாமணியுபநிஷத்தும், 'ஸுஷும்நாது பரே லீநா விரஜா ப்ரஹ்ம ரூபிணி | இடா திஷ்டதி வாமேந பிங்களா தக்ஷிணேந ச' என்ற க்ஷுரிகோபநிஷத்தும், 'ஸுஷும்நாயா: சிவோ தேவ இடாயா தேவதா ஹரி: பிங்களா விரஞ்சி:' என்ற ஸ்ரீ ஜாபாலதர்சநோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (உ௩)

யோகிகளுக்குச் சரீரத்தைத் தளர்த்த உதவும் ரேசக வாயுவின் தெய்வம் உருத்திரனே யென்பது.

காலொரு மூன்றி னுள்ளே கண்ணுத லிரேசி யாவான்
மாலவ னவன் கும்பி மலரவன் பூரத் தாவான்
சாலவி ரேச மொன்றே தளர்த்திடு முடலை யென்னி
னாலம துண்டோ னன்றி யருந்துணை யோகர்க் குண்டோ.

(அ - ரை) கால் - காற்று; இரேசி - இரேசகத் தெய்வம்; கும்பி - கும்பகத்தெய்வம்; பூரத்து ஆவான் - பூரகத்தின் தெய்வமாயிருப்பான்; சால - மிகவும்; ஆலமது உண்டோன் - சிவபிரான்.

'ப்ரஹ்மா பூரக இத்புக்தோ விஷ்ணு: கும்பக உச்யதே | ரேசோ ருத்ர இதிப் ரோக்த: ப்ராணாயாமஸ்ய தேவதா' என்ற தியானபிந்தூபநிஷத்தும், 'தவமிக முயலும் போது தன்னுயிர்ப் புமிழ்வ தன்றிப் பவனெனு முணவுங் கொள்ளான்,' என்ற கோயிற் புராணமும், 'உணவு உடம்பை வாட்டுந் தவத்திற்கு விலக்கு' என்ற அதனுரைக் குறிப்பும், 'ஸதாசிவம் - - யோகித்யேயம்' என்ற நாரதபரிவ்ராஜகோபநிஷத்தும், 'விரூபாக்ஷம் - - த்யாயேத் யோகீச்வரேச்வரம்' என்ற ஸ்ரீ ஜாபாலதர்சனோபநிஷத்தும், 'ஜீவன்முக்த: சிவ யோக நித்ராச' என்ற நிர்வாணோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

(௨௪)

உருத்திரனே பிராம்மண தெய்வமென்பது.

பிறைபணி பரமன் றானே பிராமண தெய்வ மாவா
னிறைதிரு வுடைய வேந்தாய் நிலவுவன் சங்க மேந்தி
துறைவல வணிகன் வேதன் சூத்திரன் மகவா னென்னிற்
பிறைபணி பரனை யன்றிப் பிராமணர் வணங்க லாமோ.

(அ - ரை) பிறையணி பரமன் - சிவபிரான்; திரு - செல்வம்; வேந்து - க்ஷத்திரியன்; சங்கம் ஏந்தி - விஷ்ணு; துறை - வியாபார வித்தை; வணிகன் - வைசியன்; வேதன் - பிரமன்; மகவான் - இந்திரன்.

'த்வம் தேவேஷு ப்ராஹ்மணோ அஸி அஹம் மநுஷ்யேஷு ப்ராஹ்மணோவை ப்ராஹ்மணமுபதாவத் யுபத்வா தாவாமி' என்ற ஸாமவேத சதபத ப்ராஹ்மணமும், 'விப்ரா விப்ரஸ்ய' என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும், 'ப்ரஹ்மணோதிபதி: - - சிவோம்' என்ற நாராயணோபநிஷத்தும், 'விப்ராணாம் தைவதம் சம்பு: க்ஷத்ரியாணாம்து மாதவ: | வைச்யா நாந்து பவேத் ப்ரஹ்மா சூத்ராணாம் தேவேந்த்ர:' என்ற மனுஸ்மிருதியும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

(௨௫)

உருத்திரனே சர்வலோக பிதாவென்பது.

ஒருதிரு மருவு மார்பற் குறுகுறி யோனி யாகு
முருமிகு பீசந் தானே யுருத்திரன் குறியா மன்னோ
ரிருவரு மருவிப் பாரை யீனுவ ரென்னி னந்தப்
பெருவிடை யுயர்ப்போ னன்றிப் பிதாவெவ் வுலகுக்
[கெல்லாம்.

(அ - ரை) ஒரு திரு மருவு மார்பற்கு - விஷ்ணுவுக்கு; உறு - பொருந்திய; யோனி - பகம்; உரு - அழகு; பீசம் - லிங்கம்; மருவி - புணர்ந்து; ஈனுவர் - பெறுவர்; பெருவிடையுயர்ப்போன் - சிவபிரான்.

'ருத்ராத் ப்ரவர்ததே பீஜம் பீஜயோ னிர் ஜநார்தந:' என்ற ருத்ர ஹ்ருதயோபநிஷத்தும், 'பிதரம் மஹேசம்' என்ற சரபோப நிஷத்தும், 'இதம் பித்ரே -- ருத்ரஸ்ய வர்தநம்' என்ற ருக் மந்திரமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (உசு)

உருத்திரனே எல்லா வுலகிற்கும் ஆதிமூல மென்பது.

உலகெனு மரத்தி னுச்சி யுலகினை யளந்தோ னாவ
னுலகெனு மரத்தின் மைய முந்தியிற் பிறந்தோ னாவ
னுலகெனு மரத்தின் வேர்க ளுருத்திர னாவ னென்னி
னுலகினை வாழ வைப்போ னுருத்திர னன்றி வேறார்.

(அ - ரை) உலகினை அளந்தோன் - விஷ்ணு ; மையம் - அடிமரம்; உந்தியிற் பிறந்தோன் - பிரமன்.

'அஸ்ய த்ரைலோக்ய வ்ருக்ஷஸ்ய பூமௌவிடபசாகிந: | அக்ரம் மத்யம் ததா மூலம் விஷ்ணு ப்ரஹ்ம மஹேச்வரா:' என்ற ருத்ரஹ்ருதயோபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம். (உஎ)

உருத்திரனே தர்ம சொரூபி யென்பது.

போதின னுருவ மாகிப் பொருந்துநான் மறையின் ஞானஞ்
சீதர னுருவ மாகித் திரிவித வுலகந் தங்குந்
நீதக றரும மீசன் றிவ்விய வுருவா மந்தப்
போதமு முலகுங் கொண்டு புரிவதத் தருமங் கண்டாய்.

(அ - ரை) போதினன் - பிரமன் ; சீதரன் - விஷ்ணு; திரிவித - மூன்றுவகை; போதம் - ஞானம்; கொண்டு - சாதனமாகக்கொண்டு; புரிவது - செய்யத் தக்கது; அத்தருமம் - அச் சிவசொரூப தருமம்.

'தர்மோ ருத்ரோ ஜகத் விஷ்ணு: ஸர்வஜ்ஞாநம் பிதாமஹ:' என்ற ஹ்ருதயோபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம். (உஅ)

உருத்திரனே பரமாத்மா வென்பது.

சங்கரன் பரம வான்மாச் சார்ங்கம தேந்தி யான்மாப்
பந்தமுள வந்தரான்ம வெனமறை பகர்வ தோரா
ரிங்கொரு பரமான்மாவா யின்னொரு தேவைப்பேத்திச்
சங்கரன் றனக்குத் தொண்டு சாற்றிவெங் கதிலாழ்வார்.

(அ - ரை) சார்ங்கமதேந்தி - விஷ்ணு; பங்கயன் - பிரமன்; பகர்வது - சொல்வதை; ஓரார் - உணராதவர்; இன்னொரு தேவை - வேறேதேனும் ஒரு தெய்வத்தை; தோடம் - நிந்தை; சாற்றி - கூறி; வெம் - கொடிய; ஆழ்வார் - அழுந்துவார்.

'ஆத்மாநம் பரமாத்மாந மந்தராத்மாந மேவச | ஜ்ஞாத்வாத்ரிவித மாத்மாநம் பரமாத்மாந மாச்ரயேத் | அந்தராத்மா பவேத் ப்ரஹ்மா பரமாத்மா மஹேச்வர: | ஸர்வேஷா மேவ பூதாநாம் விஷ்ணு ராத்மா ஸநாதந: ' -- என்ற ருத்ரஹ்ருதயோபநிஷத்தும், 'யாஸ்ய ப்ரதமாரேகா -- ஸ்வாத்மா -- ப்ராஜாபதிர் தேவோ தேவதேதி | யாஸ் யாத்விதீயாரேகா -- அந்தராத்மா -- விஷ்ணுர் தேவோ தேவதேதி | யாஸ்ய த்ரிதீயா ரேகா -- பரமாத்மா மஹா தேவோ தேவதேதி --' என்ற ஜாபால்யுபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். ஆத்ம நிலையும் அந்தராத்ம நிலையும் பிரம விஷ்ணுக்களுக்கிடையில் மாறிக் கொள்வதையும் பரமாத்ம நிலைமாத்திரம் சிவபிரானை விட்டு விலகாமையையும் அவ்வுபநிஷத்துக்களிற் காண்க.

(உக)

உருத்திரனே ஒப்புயர்வற்ற பரம்பொருளென்பது.

அப்பணி வேணித் தேவுக் கரியினைப் பிரமன் றன்னை
யொப்புட னுயர்ச்சி சொல்லே லும்பரிற் பிரமன் மேலோன்
திப்பிய விதியின் மேலோன் றிருமகள் கணவ னம்மாற்
கொப்புட னுயர்ச்சி யில்லா வுருத்திரன் மேலோன் றனே.

(அ - ரை) அப்பணி வேணித் தேவுக்கு - சிவபிரானுக்கு; உம்பரின் - தேவர்களைவிட; திப்பிய - திவ்விய; விதியின் - பிரமனைவிட.

'பராத் பரதரம் ப்ரஹ்மா தத்பராத் பரதோ ஹரி: | தத்பராத் பரதோ ஹீச: தஸ்மாத் துல்யோதிகோ நஹி' என்ற சரபோபநிஷத்தும், 'தமீச் வராணும் பரமம் மஹேச்வரம் -- நதத் ஸமச் சாப்யதிகச்ச த்ருச்யதே' என்ற ச்வேதாச்வதரோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

(உஉ)

உருத்திரனே மற்றிருவரையுஞ் சங்கரிப்பா னென்பது.

(உங) மருத்திக ழலரோன் றன்னை வாலிய சோற தாக்கித்
திருத்திக ழுரவோன் றன்னைத் திப்பிய ரசமே யாக்கி
மிருத்துவை யூற வைத்த மெல்லிய காய்தா னாக்கி
யுருத்திர னெம்பா னெல்லா வுலகையு மொடுக்கு ஞான்றே.

(அ - ரை) மருத்திகழலரோன் றன்னை - பிரமனை; வாலிய - வெண்மையான; திருத்திகழுரவோன் றன்னை - விஷ்ணுவை; மிருத்துவை - எமனை; ஊறவைத்த மெல்லிய காய் [illegible]; ஒடுக்கு ஞான்று - சங்கரிக்குங் காலத்தில் [illegible]

'யஸ்ய ப்ரஹ்ம ச க்ஷத்ரஞ் சோபேபவத் வோதந : ம்ருத்யுர் யஸ்யோபஸேசநம்' என்ற கடோபநிஷத்தும், 'த்ரயம்பகே காதஷ்டுபேந | ம்ருத்யுஞ்ஜயம் தர்சயதி' என்ற திரிபுராதாபிநியுபநிஷத்தும், 'ப்ரஹ்மாந் நந்து ரஸோ ஹரிஸ்து பகவாந் போக்தா மஹேச :' என்ற ஸித்தாந்த ஸாராவளியும், 'அந்நம் ப்ரஹ்மாரஸோ விஷ்ணுர் போக்தாச் சைவ மஹேச்வர :' என்ற மந்திரமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். ரசங் கலந்த சோற்றுக்கு ஊறுகாய் தொட்டுக்கொள்ளும் வழக்கம் செங்கற்பட்டு ஜில்லாவில் இப்போதும் உண்டு.

(௩௧)

உருத்திரனே பாதசாத்திரத்தாலும் பாபேன வந்திக்கப்பட்டானென்பது.

தாமரைத் தவிசற் காகுந் தாமரை மலரின் சின்னந்
தாமரைக் கண்ணற் காகுஞ் சங்கெனுங் கருவிச் சின்னந்
தாமரைக் கையன் சின்னந் தலைமிசைக் கரங்கள் கூப்ப
லாமெனிற் பாத நூலு மரன்பாத் தைய முண்டோ.

(அ-ரை) தாமரைத் தவிசன் - பிரமன்; தாமரைக் கண்ணன் - விஷ்ணு தாம் மரைக் கையன் - உருத்திரன்; பாத நூலும் ஆகும் ஆகும் ஆ(கு) எனில் காண்க.

'வஜ்ரண்யா முத்ரயா சக்ரம் பத்மிந்யாதர் சயேத்விதிம் சங்கிந்யா கேவம் ருத்ரம் சிரஸ்யஞ்ஜலிமுத்ரயா' என்ற பரத சாஸ்திரம் இச்செய்யுட்கு பிரமாணம்.

(௩

உருத்திரனை நாராயணன் மீறமாட்டானென்பது.

அக்கினி தன்னைக் கண்டா லப்புருக் குலைந்து போகு
முக்கிர நெருப்பைத் தன்னு ளுருத்திர னடக்கி நிற்பான்
சக்கர பாணி நொய்ய சலந்தனில் மிதிப்ப னென்னி
னக்கன தானை மீற நாரணன் வல்லான் கொல்லோ.

(அ-ரை) அப்பு - ஜலம்; உருக்குலைந்து போகும் - சுவறும்; னது - சிவபிரானுடைய.

'ஆபஸ் தேஜஸி ப்ரலீயந்தே' என்ற சுபாலோபநிஷத்து இச்செகுப் பிரமாணம்.

தியானம் தியாதா தியேயர் இவரென்பது

சிதரன் தியான மாவன் சிவபிரான் தியேய னுவ
ஞேதவிர் தியாதா வாவ னுருத்திர னென்று சிவர்
தீதகன் றுய்யு மாறு சிவபிரான் மலர்மென் முளை
நாம் பெருக வேத்தி பதருவ சிகைபோய்த் தன்

(அ - ரை) ஓது - சொல்லப்பட்ட; அவிர் - சிறப்புடைய; அகன்ற - நீங்கி; ஆகரம் - அன்பு; ஓய்ந்தன்று - 'ஸமாப்தா தர்வசிகா' வென்று தன்னைத் தானே முடித்துக் கொண்டு முடிந்தது.

'த்யாநம் விஷ்ணு: - - த்யாதா ருத்ர: - - த்யாயீ தேசாநம்' என்ற அதர்வசிகோபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம். (கச)

இருதய குகையில் வசிப்பவர் சிவபிரானே யென்பது.

தகைபெறு பரம வான்மாச் சந்தத முயிர்க ளுள்ளக்
குகைதொறு மிருப்பன் கௌரி கொழுநனே யன்றோ வவ
னகையல் நறைமேவான் மூன்று நாதன்மா லாதி மற்றை
வகைபடு தேவ ரெல்லா மற்றவன் விபூதி யாவர்.

(அ - ரை) சந்ததம் - எப்போதும்; விபூதி - அதிஷ்டானங்கள்.

'மத்ய ஆத்மநி திஷ்டதி | ஈசாந:' என்ற கடோபநிஷத்தும், 'ப்ராணோஷ ஹ்ருத்யந்தர் ஜ்யோதி: புருஷ:' என்ற ப்ருஹதாரண்யகோபநிஷத்தும், 'பரமாத்மாவ்யவஸ்தித: | ஸ ப்ரஹ்மா ஸசிவ: ஸேந்த்ர:' என்ற நாராயணோபநிஷத்தும், 'உமாஸஹாயம் - - ஸப்ரஹ்ம ஸசிவ: -ஸ- விஷ்ணு:' என்ற கைவல்யோபநிஷத்தும், 'பரமாத்மாவ்யவஸ்தித: ஸ ப்ரஹ்மா ஸ ஈசாந: ஸேந்த்ர:' என்ற மஹோபநிஷத்தும், 'த்வம் ப்ரஹ்மா த்வம் விஷ்ணு: த்வம் ருத்ர:' என்ற கணபத்யுபநிஷத்தும், 'யோ வைஷ தேவோ பகவாந் ஸர்வைச்வர்ய ஸம்பந்ந: ஸர்வவ்யாபீ ஸர்வ பூதாநாம் ஹ்ருதயே ஸந்நி விஷ்டோ மாயாவி மாயயா க்ரீடதி ஸ ப்ரஹ்மா ஸ விஷ்ணு: ஸ ருத்ர: ஸ இந்த்ர: ஸ ஸர்வே தேவா:' என்ற சாண்டில்யோபநிஷத்தும், 'த்ருதீயம் பாபாதம் ஜாக்ரியாத் ஸ ப்ரஹ்மா ஸ சிவ: ஸ ஹரி:' என்ற நரஸிம்ஹ பூர்வ தாபிநியுபநிஷத்தும், 'அவிசேஷேண ஸர்வம் து ய: பச்யதி சிதந்வயாத் | ஸ ஏவ ஸாக்ஷாத் விஜ்ஞாநீ ஸ சிவ: ஸ ஹரிர் விதி:' என்ற வராஹோபநிஷத்தும், 'த்வம் ப்ரஹ்மா த்வம் ச வை விஷ்ணு: த்வம் ருத்ரஸ் த்வம் ப்ரஜாபதி:' என்ற மைத்ராயண்யுபநிஷத்தும், 'ஈச்வர ஏவ ப்ரஹ்ம விஷ்ணு வீசா - - ஜீவ:' என்ற நிராலம்போபநிஷத்தும், 'த்வம் ப்ரஹ்மா த்வம் ருத்ரஸ் த்வம் விஷ்ணு:' என்ற பிராணாக்கினிஹோத்ரோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (கரு)

சிவபிரானே சர்வகாரண காரணனென்பது.

காரணந் தனக்கொன் றில்லாக் காரண மூலகுக் காரென்
றாரணம் வினவிச் சத்தே யாத்துமா பிரம மென்றக்
காரணந் தனையுங் கூறுங் கபாலியே யதுவா மென்ற
வாரண விசேடத் தச்சா மானிய மமையு மன்றே.

(அ-ரை) ஆரணம் - வேதம்; சத்து ஆத்துமா பிரமம் என்று
அக்காரணந்தனையும் என்றதை சத்தென்றும் ஆத்துமாவென்றும் பிரம
மென்றும் எனத் தனித்தனி கூட்டி அக்காரணந்தனை என நிறுத்துக. அது
ஆம் - அக்காரணம் ஆகும்; விசேடத்து - விசேஷவாக்கியங்களுக்கேற்பவே;
அச்சாமானியம் - அந்தச் சாமானிய வாக்கியங்கள்; அவை சத்து காரண
மென்றலும் ஆத்துமா காரணமென்றலும் பிரமம் காரணமென்றலும் ஆம்.
அமையும் - பொருள் கொள்ளப்பட்டு அடங்கும்.

'ப்ரஹ்ம விஷ்ணு ருத்ரேந்த்ரா: - - நகாரணம்', 'காரணம் - - சம்பு:'
என்ற அதர்வசிகோபநிஷத்தும், 'விஷ்ணுச் சதுர்வக்த்ர: சம்புச்ச காரணு
திபா:' என்ற பைங்களோபநிஷத்தை வியாபித்த 'ஸகாரணம் காரணு
திபாதிப என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும், 'உமார்த்த தேகம் வரதம்
ஸர்வகாரண காரணம்' என்ற யோகதத்வோபநிஷத்தும், 'சம்போர் பஹூர
தேவம் - - ஸர்வகாரணகாரணம்' என்ற பஞ்சப்ரஹ்மோபநிஷத்தும், 'ய:
காரணுநி நிகிலாநி', 'கிம் காரணம் ப்ரஹ்ம' என்ற சுவேதா சுவதரோப
நிஷத்தும் இச்செய்யுட்குப் ப்ரமாணங்கள். ஜாபால்யுபநிஷத் முதலிய
வற்றிலும் அத்தகைய விஞைப்பார்க்கலாம். (கசு)

பாஞ்சராத்திரத் திரிமூர்த்திகள் வேறு வேதத்திரிமூர்த்திகள் வேறு என்பதும் சிவபிரான் வேதத்திரிமூர்த்திகளுக்கு மேற்பட்டவர் என்பதும்.

சங்கரு டணபி ரத்தி யுமவனி ருத்தர் தாமே
யிங்கொரு மூவர் மாமேலா னிவர்க்கிறை யென்னு மானூல்
பங்கய னரன்மா லென்னும் பரர்களுக் கதிதன் கௌரி
பங்கின னெனுநால் வேத பாகிய மாமந் நூலே.

(அ-ரை) இவர்க்கு - இம்மூவருக்கும்; இறை - அதீதன்; மால்நூல் -
பாஞ்சராத்திராகமம்; பரர் - தேவர்; அதீதன் - கடந்தவன்; எனும் -
என்கிற; வேத பாகியம் - வேதத்திற்குப்புறம்; அந்நூல் - அப்பாஞ்சராத்திரா
கமம்; பிரம ருத்ர இந்திர ரென்பவர் நாலாயிரப்பிரபந்தமூவர்.

'ரோஹிணீ தநயோ விச்வ அகாராக்ஷர ஸம்பவ: - - ப்ரத்யும்ந
உகாராக்ஷர ஸம்பவ: - - அநிருத்தோமௌள மகாராக்ஷர ஸம்பவ: அர்த்த
மாத்ராத்மக: க்ருஷ்ணோ யஸ்மிந் விச்வம் ப்ரதிஷ்டிதம்' என்ற கோபாலோத்
தரதாபிநியுபநிஷத்தும், 'ப்ரஹ்ம விஷ்ணு ருத்ராதீதம் - - சிவம்' என்ற
பஸ்மஜாபாலோபநிஷத்தும், 'சிவம் - - ப்ரஹ்ம விஷ்ணு ருத்ராதீ நாமேக:
என்ற மண்டலப்ராம்மணோபநிஷத்தும், 'நமே ப்ரஹ்ம நமே விஷ்ணுர்
நமே ருத்ரோ - -'; 'ப்ரஹ்ம விஷ்ண் வீச', 'ந ப்ரஹ்மா ந ஹரி: சிவ:'
என்ற தேஜோபிந்தூபநிஷத்தும், 'ப்ரஹ்மா நாராயண: சிவச்ச நாராயண:

சர்வச்ச நாராயண :', 'த்வமேவ ப்ரஹ்மேசாந புரந்தர - -' என்ற த்ரிபாத் விபூதிமஹாநாராயணோபநிஷத்தும், 'ப்ரஹ்மேந்த்ர ருத்ராதி', என்ற தேஜோபிந்தூபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

(கஎ)

சங்காரக் கடவுளே சிருட்டி திதிகளுக்குங் கர்த்தாவென்பது.

அழிதொழி லுஞற்றுந் தேவ னலதெவ னாதி தேவன்
பழிதவி ரவனே மாலைப் பதுமனை மீளத் தந்து
பொழிலினை யாள வல்ல புருடனு மாத லாலே
தொழிலவை மூன்று மந்தச் சுதந்தரன் றானே செய்வான்.

(அ - ரை) அழிதொழில் உஞற்றுந்தேவன் - சங்காரக்கடவுள்; ஆதி தேவன் - முதற்கடவுள்; பழிதவிர் - பொல்லாங்கு தவிர்ந்த; அவனே - அச்சங்காரக்கடவுளே; பதுமனை - பிரமனை; தந்து - சிருட்டித்து; பொழிலினை - உலகத்தை; தொழிலவை மூன்றும் - ஸ்ருஷ்டிஸ்திதி சங்காரங்களாகிய அம்முத்தொழில்களையுமே; அந்தச் சுதந்தரன்றானே - அந்தச் சங்காரக்கடவுளாகிய சிவபிரானே.

'யோவிஸ் புலிங்கேந லலாடஜேந ஸர்வம் ஜகத் பஸ்மஸாத்ஸம் கரோதி புநச்ச ஸ்ருஷ்ட்வா புநரப்ய ரக்ஷதேவம் ஸ்வதந்த்ரம் ப்ரகடீகரோதி', 'மஹேசோ பகவா நாதி தேவ:', 'சங்கரோ பகவா நாத்யோ ரக்ஷ ஸகலா: ப்ரஜா:', 'பரமேச்வரோ ஸௌ யஸ்யாங்கஜோ ஹம் ஹரிரிந்த்ர முக்யா', 'ஹரிம் ஹரந்தம் பாதாப்யாம்' என்ற சரபோபநிஷத்தும், 'ஹரிம் ஹரந்த மநுயந்தி தேவா விச்வஸ்யேசாநம் வ்ருஷபம் மதீநாம்' என்ற நாராயணோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

(கஅ)

திரிமூர்த்திகளும் உயிர்களே யென்பது.

மூவரு முயிர்க ளென்று முதல்வனுக் குடல்க ளென்றும்
யாவரு மறியச் சொல்லு மெழின்மறை சிலவ ரந்த
மூவரு மபேத மென்று மூன்றதி கார மென்று
மூவமி சங்க ளென்று-மூர ணுரைத் தழிவ ரந்தோ.

(அ - ரை) சிலவர் - சிலமனிதர்; முரண் - விபரீதம்.

'ஜீவ இதி ப்ரஹ்ம விஷ்ண் வீசா நேந்த்ராதீநாம் நாமரூபத்வாரஸ்தவோஹமிதி மித்யாஸ வலாஜ்ஜீவ:' என்ற நிராலம்போபநிஷத்தும். 'தஸ்யப்ரோக்தா: அக்ர்யாஸ் தநவோ ப்ரஹ்மா ருத்ரோ விஷ்ணுரிதி' 'ப்ரஹ்மா ருத்ரோ விஷ்ணு - - பரஸ்யாம்ருதஸ்ய சரீரஸ்ய' என்ற மைத்ராயண்யுபநிஷத்தும், 'அரியுந வியல்பரன்' என்ற தேவாரமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

(கக)

52

சிவபிரானே பிரம மென்பது.

பிரமவு பநிட மெல்லாம் பிரமனை யரிவை நீக்கிப்
பிரமமென் றானைப் போற்றும் பொருட் குமர வேள்சுப்
பிரமணி யப்பேர் கொண்டான் பிராமிகல் லுமைக்குப்
பிரமமென் றானை யுன்றிப் பேசிடே லாத லாலே. [பேராம்

(அ . ரை) பேசிடேல் - பிறதெய்வங்களைச் சொல்லாதே.

'நிர்விகல்பமநந்தம் - - பரமம்சிவம்' என்ற பிரமபிந்தூபநிஷத்தும்' 'துரீய மக்ஷரம் - - ஈச்வரச்ச' என்ற பிரமோபநிஷத்தும், 'தீபாகாரம் மஹாதேவம் - - ஜபேத்' என்ற பிரமவித்யோப நிஷத்தும், 'சிவ : பசு பதி : ஸாக்ஷீ ஸர்வஸ்ய ஸர்வதா' என்ற பாசுபதப்ரஹ்மோபநிஷத்தும், 'துரீய மக்ஷரம் சிர்மயம்' என்ற பரப்ரஹ்மோப நிஷத்தும், 'தஸ்மை நமோ மஹா தேவாய மஹா ருத்ராய ப்ரோவாச தஸ்மை பகவாந்மகேச :', 'துரீயம் ப்ரஹ்ம ஸம்ஜ்ஞிதம்' என்ற பஞ்சப்ரஹ்மோபநிஷத்தும், 'ப்ராஹ்மீ மாஹேச்வரீச் சைவ' என்ற நிகண்டும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (௪0)

இதுவுமது.

உட்டெளி வுடையோ னெப்பி லுருத்திரா ரத னைக்கு
விட்டுணு பாகா யோட்ட விரையுமோங் காரத் தேரில்
மட்டறு மன்பா லூர்ந்து மங்கலப் பிரம லோகம்
கிட்டுக வெனலின் வேதங் கிளாதிற் பிரமம் யாரே,

(அ - ரை) உள் தெளிவு - உள்ளத்தில் அறிவு விளக்கம்; பாகு - சாரதி; விரையும் - வேகமாய்ச் செல்லுகிற; மட்டு அறும் - அளவு கடந்த; ஊர்ந்து - ஏறிச்சென்று; கிட்டுக - அடைவாயாக; கிளர் அதில் - ஒளியுள்ள அந்தச் சுருதியிற் சொல்லப்பட்ட

'ஓங்கார ரதமாருஹ்ய விஷ்ணும் க்ருத்வாத ஸாரதிம் | ப்ரஹ்ம லோக பதாந் வேஷீ ருத்ராராதந தத்பர :' என்ற அம்ருதநாதோபநிஷத்து இ செய்யுட்குப் பிரமாணம். (௪

இதுவுமது.

பொங்கர வணிந்த பெம்மான் புண்ணிய முகங்க ளைந்தி
னிங்கித மனுக்க டம்மை மேவருஞ் செபித்து வாழ
மங்கல பிரம மென்ற மறையெடுத் துரைக்கு மென்னிற்
பங்குமை யம்மைக் கீந்த பரமனிற் பிரம முண்டோ.

(௪௨) (அ - ரை) பொங்கு அரவு அணிந்த பெம்மான் - சிவபிரான்; இ மனுக்கள் தம்மை - இனிய மந்திரங்களை; எடுத்து - விவரித்து;

'ஸத்யோ ஜாதாதி பஞ்ச ப்ரஹ்ம மந்த்ரை:' என்ற காலாக்நிருத்ரோபநிஷத்தும் ஜாபால்யுபநிஷத்தும், 'ஸத்யோ ஜாதம் ப்ரபத்யாமி ஸத்யோ ஜாதாயவை நமோ நம: -- வாமதேவாய நமோ ஜ்யேஷ்டாய நம: -- அகோரேப்யோர்த நமஸ்தே -- தத்புருஷாய -- ப்ரசோதயாத் || ஈசாந -- ஸதாசிவோம்' என்ற நாராயணோபநிஷத்தும், 'பஞ்சப்ரஹ்ம மந்த்ரை:' என்ற பஸ்மஜாபாலோபநிஷத்தும், 'தத்புருஷேசாநாகோரஸத்யோ ஜாதவாமதேவேப்யோ நம:' என்ற சுகாரஹஸ்யோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

(சஉ)

மோக்ஷயாத்திரை செய்யுஞ் சர்வான்மாக்களுக்கும் லக்ஷியம் சிவபிரானே யென்பது.

பிரணவ மென்னும் வில்லைப் பிடித்துப ரான்மாத் தன்னைச்
சரமென வைத்து வாங்கிச் சங்கர னடிக ளான
வரமுறு மிலக்கிற் பாய்ச்ச வல்லவன் றானே முத்தி
புரமதை யடைவா னென்று பொதுமறை சொல்லு மன்றே.

(அ-ரை) சரம் - அம்பு; வாங்கி - வளைத்து; வரம் - மேன்மை; இலக்கில் - லக்ஷியத்தில்; பாய்ச்ச - போய்த் தைக்கும்படி செலுத்த; முத்தி புரமதை - மோக்ஷ லோகத்தை.

'ப்ரணவோ தநுச் சரோஹ்யாத்மா ப்ரஹ்மதல் லக்ஷ்ய முச்யதே' என்ற முண்டகோபநிஷத்தும், தியாநபிந்தூபநிஷத்தும், 'தநுஸ்தாரம் சரோஹ்யாத்மா ப்ரஹ்மதல் லக்ஷ்ய முச்யதே', 'சிவ லக்ஷ்யம் ந ஸம்சய:' என்ற ருத்ரஹ்ருத்யோபநிஷத்தும், 'அந்தர் லக்ஷ்யம் -- உமாஸஹாயம் நீலகண்டம் ப்ரசாந்த மந்தர் லக்ஷ்யம்', 'ஸர்வேசம் -- சிவம் -- ஏகலக்ஷ்யம்' என்ற மண்டலப்ராஹ்மணோபநிஷத்தும், 'பஹூநி புண்யாநி க்ருதாநியேந தேநைவ லக்ஷ்ய: பரமேச்வர:' என்ற சரபோபநிஷத்தும், 'துரீயாதீதம் பரம் ப்ரஹ்ம ப்ரஹ்ம ரந்த்ரேது லக்ஷ்யேத்' என்ற திரிசிகிப்ராஹ்மணோபநிஷத்தும், 'எத்தவத்தோர்க்கு மிலக்காய் நின்ற எம்பெருமான்', 'மல்லல ஞாலத்து வாழுமுயிர்க்கெலா - மெல்லையான பிரானார்' என்ற தேவாரமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

(சங)

சிவபிரானே ஏகமும் அத்விதீயமுமானவரென்பது.

உயர்வுட னொப்பு தின்றி யுள்ளதே யேக மாகு
முயிரினொ டுடன்வே றொன்று யுறுவதத் துவித மாகு
மூரிய பிரமப் பேர்க்கு முருத்திரப் பெயர்க்குந் தானே
[illegible] யமுற வவற்றைக் கூட்டு நான்மறை யடைக ளாக்கி.

(அ-ரை) [illegible] ம் உற - ஏவகாரம் பொருந்த.

'போதமாமழை' என்ற சிந்தாமணிச் செய்யுளில் வரும் 'ஏகம்' என்ற பதத்திற்குத் 'தனக்கு நிகரில்லாத' என்ற நச்சினார்க்கினியருரையும், 'இவ்வத்துவிதம் -- கலப்பும் உடனாதலும் வேறுதலுமாகிய மூன்றாந் தன்கட்டோன்ற நிற்றல்பற்றி அம்மூன்றற்கும் பொதுவாகக் கூறப்படும்' என்ற சிவஞான மஹாபாஷ்யமும், 'ஏகமேவாத்விதீயம் ப்ரஹ்ம' என்ற பைங்களோபநிஷத்தும், சுகாலுஸ்யோபநிஷத்தும், திரிபாத்விபூதிமஹாநாராயணோபநிஷத்தும், 'ஏக ஏவ ருத்ரோ நத்விதீயாய தஸ்தே' என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும், 'ஏகோ நாராயணோ நத்விதீயோஸ்தி' என்ற திரிபாத்விபூதி மஹா நாராயணோபநிஷத்தும், 'ஏகமத்வைதம்' என்ற பஸ்ம ஜாபாலோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (௪௪)

நாராயணனைப் பிரமமென்பதற்குக் காரண மிதுவென்பது.

செருவல மாலோன் றன்னுட் சிவனைவைத் தேத்த லானும்
பொருவறு மனைவி யாயப் பூரணற் குறத லானும்
பெருகிடு பகுதி யண்டப் பிரானென நடாத்த லானுந்
திருமறை பிரம மென்று சிலவிடத் துபச ரிக்கும்.

(அ - ரை) தன்னுள் - தன் இருதயத்தில்; பகுதியண்டம் - பிரகிருதி புவனம் வரை; பிரானென - தலைவனாயிருந்து; நடாத்தலானும் - ஆளுதலானும்.

'நாராயண : ஸ்தித : -- பத்மகோசப்ரதீகாசம் ஹ்ருதயம் சாப்யதோமுகம் -- தஸ்ய மத்யே மஹாநக்நிர் விச்வார்ச்சிர் விச்வதோமுக : -- தஸ்ய : சிகாயா:மத்யே பரமாத்மா வ்யவஸ்தித :' என்ற நாராயணோபநிஷத்தும், 'நாராயணப்பிரகரணத்திற் கூறப்பட்ட விருதயம் பிறரைச் சார்தற்கியைபின்மையின் அஃது அவனுடையதென்றல் பொருந்துமெனக்' என்ற சதுர்வேத தாற்பரிய சங்கிரகமும், 'அரியலாற் றேவி யில்லை யையனையாறனார்க்கே' என்ற தேவாரமும், 'பிரகிருதிமாயைகாறும் வியாபித்து நிற்கும் பிரதிட்டாகலைக்கு மாயோன் அதிதெய்வம்' என்ற சிவஞான மஹாபாஷ்யமும், 'நாராயண பரம் ப்ரஹ்ம' என்ற நாராயணோபநிஷத்தும், 'நாராயணம் பரம் ப்ரஹ்ம' என்ற திரிபாத்விபூதிமஹாநாராயணோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.—— (௪௫)

பல பொருள்களைப் பிரமமென்பதற்குக் காரண மிதுவென்பது.

நாரணன் னளின னாத ஞாயிறு கர்ணம் பூதி
மாருயி ருட்கா லன்ன மறிவிவை பிரம மென்றே
யாரண முரைக்கும் வெவ்வே றவையெலாஞ் சோபா னங்க
டாரணி சைவஞ் சார்ந்து சுக்கா ருருவிற் கூட [illegible]

(அ - ரை) நளினன் - பிரமன்; நாதம் - சப்தம்; ஞாயிறு - ஆதித்தன்; கால் - பிராணன்; அறிவு - ஞானம்; ஆரணம் - வேதம்; சோபானங்கள் - படிக் கிரமங்கள்; தாரணி - உலகத்தோர்; அருளிற் கூட - அருளுக்குப் பாத்திரமாகும்படி.

'நாராயணம் பரம் ப்ரஹ்ம' என்ற நாராயணோபநிஷத்தும், 'பகவாந் ப்ரஹ்மா ஸர்வலோக பிதாமஹ:' என்ற மஹோபநிஷத்தும், 'அக்ஷரம் பரமோ நாத: சப்தப்ரஹ்மேதி கத்யதே' என்ற யோகசிகோபநிஷத்தும், 'ஆதித்ய - - த்வமேவ ப்ரத்யக்ஷம் ப்ரஹ்மாஸி' என்ற ஸூர்யோபநிஷத்தும், 'அயமாத்மா ப்ரஹ்ம', 'அந்நம் ப்ரஹ்ம' என்ற பிருஹதாரண்யகோபநிஷத்தும், 'நமஸ்தே வாயோ த்வமேவ ப்ரத்யக்ஷம் ப்ரஹ்மாஸி', 'அந்நம் ப்ரஹ்ம'. 'ப்ராணோ ப்ரஹ்ம', 'விஜ்ஞாநம் ப்ரஹ்ம' என்ற தைத்திரீயோபநிஷத்தும், 'ஓம் ப்ரஜ்ஞாநம் ப்ரஹ்ம' என்ற சுகரஹஸ்யோபநிஷத்தும், 'ஓமித்யேகாக்ஷரம் ப்ரஹ்ம' என்ற அம்ருதநாதோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (௪௬)

பிரமமுதலிய பெயர்கள் சிவபிரானுக்கே உண்மை வாசகமாமென்பது.

போற்றுரை மிகுதி யானும் பொருளதி னிறைத லானுந்
தூற்றுரை யிலாமை யானுந் துகளிலொப் புரைக ளெல்லாந்
தேற்றம துரைத்த லானுஞ் சிவபிராற் களவில் வேதஞ்
சாற்றிய பிரம மாதி தனிப்பெய ரனைத்து மெய்யே.

(அ - ரை) போற்றுரை - புகழ்மொழி; பொருள் - உண்மை; தூற்றுரை - நிந்தை; துகள் இல் - குற்றமில்லாத; ஒப்புரைகள் - தெய்வங்களை வரிசைப்படுத்தி ஒத்திட்டுப் புகழும் வாக்கியங்கள்; 'பராத் பரதரோ ப்ரஹ்மா - -' என்பது போலும். தேற்றம் - உயர்வு; நிச்சயம்.

'காரெழில் புரைமேனிக் கண்ணனை யென்னைப் பின்னை - யாரையும் புகழும் வேத மரன்றனைத் துதித்ததேபோ - லோருரை விளம்பிற்றுண்டோ வுரைத்தது முகமனென்றே - பேருலகறிய முன்னும் பின்னரும் விலக்கிற் றன்றே, என்ற கந்தபுராணம் இச்செய்யுட்குப் பிரமாணம். (௪௭)

பிரணவ மந்திரம் சிவசம்பந்தமுடையதென்பது.

பிரணவ முமையாந் தாய்க்குப் பெரும்பெய ராகிச் சாரு
மரவணி யமல னீன்ற வைங்கர னவன்பின் வந்த
சரவண னிவர்க்குச் சாருந் தண்ணருண் முகங்க ளாகிச்
சிரவண மறையு மஃதைச் செப்பிடுஞ் சைவ மென்றே.

(அ - ரை) பெரும்பெயர் - உயர்ந்த பெயர்; சாரும் - பொருந்தும்; ஐங்கரன் - விநாயகர்; சரவணன் - சுப்பிரமணியர்; தண் - குளிர்ந்த; சிரவண மறை - கேட்கத்தகுந்த வேதம்; அஃதை - அப்பிரணவத்தை.

‘உமாம் ஹைமவதீம்’ என்ற கேநோபநிஷத்தும், ‘ஓமெனப்படுங் குடிலையே யொப்பிலா முருகன் மாமுகத்துளொன்றும்’ என்ற கந்தபுராணமும், ‘ஓங்கார ஸ்வரூபிணம் மஹாதேவம்’ என்ற பஸ்மஜாபாலோப நிஷத்தும், ‘ஸிவோமே அஸ்து ஸதாசிவோம்’ என்ற நாராயணோப நிஷத்தும், ‘ஸுப்ரஹ்மண்யோம் ஸுப்ரஹ்மண்யோம் ஸுப்ரஹ்மண்யோம்’ என்ற தைத்திரீய ஆரண்யகமும், ‘ஓம் ப்ரணவாகார தேவாய நம:’ என்ற விநாயக மந்திரமும், ‘த்யாயே தோங்கார மீச்வரம்’. ‘ஓமித்யேகாக்ஷரம் ப்ரஹ்மத்யேயம் ஸர்வமுமுக்ஷுபி:’ என்ற த்யாநபிந்தூபநிஷத்தும், ‘உமாக்யா ப்ரணவாத்மிகா’ என்ற சம்பவ காண்டமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (௨௮)

ஹரி: ஓம் என்பது உமையொரு பாகனைச் சுட்டுமென்பது.

தூயவ ரரியோ மென்றே தொடங்குவர் வேதந் தன்னை
யேயிதை யறியாய் கொல்லோ வென்றிடி னியம்பக் கேணீ
தாயரி பதத்துக் கர்த்தந் தந்தையா மோமுக் கர்த்தம்
வேயுறு தோளி பங்கன் மேலதா மாத லாலே.

(அ - ரை) ஏ - நகையாடும் இடைச்சொல்; வேயுறுதோளிபங்கன் - அம்மையப்பன்; அது வேயுறுதோளிபங்கன் மேல் ஆம் என்க; அது - அந்த ஹரி: ஓம் என்பது.

‘அவரரியோமென்றுதி யறைகுவ துணர்வீரென்று - ரிவரஃதம்மையப்ப ரியற்றிரு நாமமென்றார்’ என்ற குமரகுருபர சுவாமிகள் சரிதம் இச்செய்யுட்குப் பிரமாணம். (௨௯)

காயத்திரி மந்திரத்தால் வந்திக்கப்படுந் தெய்வம் சிவபிரானே யென்பது.

உவமனில் பருக்கச் சொல்லை யுருடியாய் வைத்து வேதஞ்
சிவபிரான் றனையே காயத் திரிப்பொரு ளென்று செப்புங்
குவலயந் தன்னில் வேதக் கொலைஞரவ் வுருடிப் பேரை
யவமுறும் யோக மாக்கி யரிமுதற் பிறர்மேல் வைப்பார்.

(அ - ரை) பருக்கச் சொல்லை - ‘பர்க:’ என்ற பதத்தை; உருடி - இடுகுறி, காரண இடுகுறியுமாம்; குவலயந்தன்னில் - உலகில்; வேதக்கொலைஞர் - வேதத்துக்கு விபரீதார்த்தஞ் செய்து வேதபுருஷனை மனம் நோவச் செய்பவர்; அவம் உறும் - பலவற்றினும் பொய்ப்பற்றி விபசரிக்கிற; யோகம் - காரணப்பெயர்.

'தத்ஸவிதுர்வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி| தியோயோந: ப்ரசோதயாத்' என்ற நாராயணோபநிஷத்தும்; 'பர்காக்யோ - - பர்க இதி ருத்ரோ ப்ரஹ்ம வாதிநோத' என்று மைத்ராயண்யோபநிஷத்தும், 'பர: சிவ: - - பர்க உச்யதே' என்று திரிபுராதாபிநியுபநிஷத்தும் அம்மந்திரத்துக்கு உரை கூறியதும் இச் செய்யுட்குப் பிரமாணங்கள். (௫௦)

ஆதித்ய ஹ்ருதயத்திலிருப்பவர் சிவபிரானே என்பது.

பொன்னிற வுருவத் தெய்வம் பொருந்தின தெல்லி லென்று
மன்னதொ ருருவத் தெய்வ மற்புதச் சிவனே யென்றுஞ்
சொன்னது வேத மென்னிற் சூரிய வுலகந் தன்னுண்
மன்னிய வாதித் தன்பால் வதிபவன் சிவனே யன்றோ.

(அ - ரை) எல்லில் - சூரியனிடத்தில்; அன்ன - அப்படிப்பட்ட; அற்புதம் - அதிசயகுணங்கள்; மன்னிய - பொருந்திய; ஆதித்தன் என்பது சூரிய மண்டலத்தின் அதிதேவதைக்குப் பெயர்; வதிபவன் — இருப்பவன்.

'ய ஏஷோந்தராதித்யே ஹிரண்மய: புருஷ:' என்ற சாந்தோக்யோபநிஷத்தும் நாராயணோபநிஷத்தும் மைத்ராயண்யுபநிஷத்தும், 'ஸ்ஏர்யோந்தராத்யே ஹிரண்மய: புருஷ:' என்ற நரஸிம்ஹ பூர்வதாபிநியுபநிஷத்தும், 'ஹிரண்யவர்ணாய ஹிரண்யரூபாய - - அம்பிகாபதய - - பசுபதயே நமோ நம:' என்ற நாராயணோபநிஷத்தும், 'ஹிரண்யவர்ணம் ஹிரண்யரூபம் - - விரூபாக்ஷம்' என்ற ப்ருஹதாரண்யகோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (௫௧)

சிவபிரானே பகவானென்பது.

ஈசுரன் சிவன்சர் வஞ்ஞ னுக்கிர னிகல்செய் காம
நாசனென் பெயர்க டாமு நல்லிருக் குரையுங் காண்போர்
தேசமர் பகவ நாமஞ் சிவபிரான் றனக்கே யுண்மை
வாசகம் வேறு தேவர்க் குபசார வசன மென்பர்.

(அ - ரை) இருக்குரை - ருக்வேத வாக்கியம்; தேசுஅமர் - ஒளி பொருந்திய.

'ஐச்வர்யஸ்ய ஸமக்ரஸ்ய வீர்யஸ்ய யசஸச்சிய:| ஜ்ஞாந வைராக்யயோச் சேவ ஷண்ணாம் பக இதீரணா' என்ற விஷ்ணுபுராணமும், 'ஐசுவரியம் வீரியம் புகழ் திரு ஞானம் வைராக்கியம் என்னு மாறும் பகமெனப்படுதலின், இவை சிவபிரானுக்கே யுண்மையின் அவரே பகவனெனப்படுவர். அற்றேல், இவை யாறுஞ் சிவபிரானுக்கு உள்ளனவென்பதற்குப் பிரமாணமென்னையெனின்; அவருக்கு ஐசுவரிய முண்மைக்கு ஈசுரபதச் சுருதியும், வீரிய முண்மைக்கு உக்கிரபதச் சுருதியும், புகழுண்மைக்குச் சிவபதச் சுருதியும்,

திருவுண்மைக்கு இருக்குவேதமும், ஞானமுண்மைக்குச் சர்வஞ்ஞ சுருதியும், வைராக்கிய முண்மைக்குக் காமரிபுபதச் சுருதியும் பிரமாணமாமென்க' என்ற சதுர்வேத தாற்பரிய சங்கிரகமும், 'தவச்ரியே மருதோ மர்ஜயந்த ருத்ர:பத்தே ஜநிமசாருசித்ரம்', 'ச்ரேஷ்டோ ஜாதஸ்ய ருத்ர ச்ரியாஸி தவஸ்தமஸ்தவஸாம் 'வஜ்ர பாஹோ' என்ற ருக் வேதமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (௩௨)

இதுவுமது.

பதவுரை தொடங்க லுண்டாற் பகவனை யீச னென்று
விதமுறு வேதந் தன்னில் விளங்கிடும் பகேச நாமம்
பதமய வுமைக்குப் பேராம் பகவதி யாத லாலே
நிதநித மினிக்கு முக்க ணிமலனே பகவன் காணே.

(அ — ரை) பதவுரை - நிகண்டு; விதம் உறு - நான்கு வகைகளை யுடைய; நிதநிதம் - எப்போதும்.

'பகவனே யீசன் மாயோன் --' என்ற நிகண்டும், 'பகேசம்' என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும், 'பக : சக்திர் பகவாந் காம ஈச உமாதா தாராவிஹ ஸௌபகாநாம்' என்ற திரிபுரோப நிஷத்தும், 'அசுர : ஸோமா' என்ற ருத்ரஹ்ருதயோபநிஷத்தும், 'எப்போது மினியபிரான்' என்ற பெரிய புராணமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (௩௧)

சிவபிரான் சந்நிதானத்தில் யாருஞ் சாமியாதலில்லை யென்பது.

அம்புலி தேச னுவ னாதவ னொளியைப் பெற்றுச்
சம்புவி னருளைப் பெற்றுச் சாமிமா லாவ னந்த
வம்புலி தேச னாத லாதவன் முன்ன மில்லை
சம்புமு னந்த மாலோன் சாமிதா னாத லின்றே.

(அ — ரை) தேசன் - ஒளியுடையவன்; ஆதவன் - சூரியன்; சம்புவின் - சிவபிரானுடைய; மால் - விஷ்ணு; நாராயணனைச் சொன்னது இங்கு உபலக்கணம். (௩௪)

ஜகத் விஷ்ணுமய மென்பதும் சிவபிரான் ஜகத்கர்த்தா வென்பதும்.

மாலொரு விசுவ மாவன் மற்றதைத் தாண்டு சீரான்
மேல்பிற ரில்லா வீசன் விச்சுவ வதிக னாவன்
மாலொரு பகுதி மாயை மகத்தென விருப்பன் பொல்லா
மால்செயு மதையாள் சீரான் மகேச்சுர னாவன் சம்பு.

(அ — ரை) மால் - விஷ்ணு; சீரால் - தன்மையால்; பகுதி, மாயை, மகத் - பிரகிருதி; பொல்லாமால் - பொல்லாத மயக்கத்தை; அதை - அந்தப் பிரகிருதியை.

‘விச்வம் நாராயணம் - -’, ‘விச்வாதிகோ ருத்ரோ மஹார்ஷி:’, ‘விச்வம் நாராயணம் ஹரிம்’, ‘தஸ்யப்ரகிருதி லீநஸ்ய ய: பர: மஹேச்வர:’ என்ற நாராயணோபநிஷத்தும், ‘விச்வாதிகோருத்ரோ மஹார்ஷி:’ ‘மாயாந்து ப்ரக்ருதிம் வித்யாந் மாயிநந்து மஹேச்வரம்’, ‘புருஷம் மஹாந்தம்’ என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும், ‘மஹாந்தம் - -.சிவம்’, ‘புருஷம் மஹாந்தம்’ என்ற நாரதபரிவ்ராஜகோபநிஷத்தும், ‘விச்வம் நாராயணம் ஹரிம்,’ ‘மஹாந்தம் - - சிவம்’ என்ற மஹோபநிஷத்தும், ‘விச்வாதிகோருத்ரோ மஹார்ஷி:’ என்ற பஸ்ம ஜாபாலோபநிஷத்தும், ‘மஹேச்வர இதி | யஸ்மாந் மஹத ஈச:’ ‘மஹத ஈசதே தஸ்மாதுச்யதே மஹேச்வர இதி’, என்ற சாண்டில்யோபநிஷத்தும் ‘ஸ்வ மாயாவைபவாந்ஸர்வாந்’ என்ற பஞ்சப்ரஹ்மோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (௫௫)

சிவபிரானே அமிர்தவாசகத்துக்குரிய தெய்வமென்பது.

அமிருத நாமன் பொன்னி னழகிய வண்ண னவ
னமிருத மடியார் வாழ வருளுவ னீசா னன்று
னமிருத னாமச் செப்பா மருஞ்சத ருத்தி ரீய
மமிருத னரனே யென்ப தம்மறை மொழியாற் றேற்றம்.

(அ - ரை) நாமன் - பெயரையுடையவன்; அமிருதன் நாமச் செப்பு - அமிருதனுடைய பெயர்கள் வைக்கப்பட்ட சிமிழ்.

‘அம்ருதோ ஹிரண்மய:’ என்ற தைத்திரீயோபநிஷத்தும், ‘உதாம்ருதத்வஸ்யேசாந:’ என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும், ‘தேநாம்ருதத்வஸ்யேசாநம்’ என்ற கௌஷீதகிப்ராஹ்மணோபநிஷத்தும், ‘சதருத்ரியேணேத்யேதாந்யேவஹவா அம்ருதஸ்ய நாமாநி’ என்ற ஜாபாலோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (௫௬)

சிவபிரானே துன்பத்தை நீக்குபவரும் இன்பத்தை ஆக்குபவருமாவரென்பது.

துன்பினை நீக்க வல்லா னென்பது தோன்ற நிற்கு
மொன்பது வடிவன் கொண்ட வுருத்திர நற்பே ரன்னோன்
றன்பெய ராய சம்பு சங்கர சிவநற் சொற்க
ளின்பினை யாக்க வல்லா னென்பது தோன்ற நிற்கும்.

(அ - ரை) ஒன்பது வடிவன் - சிவபிரான்; அவ்வடிவங்கள் பிரமன் விட்டுணு உருத்திரன் மகேச்சுரன் சதாசிவன் அபரவிந்து அபரநாதம் பரவிந்து பரநாதம் என்பன. கடைசி நான்கை விந்து நாதம் சத்தி சிவம் என்றலு முண்டு.

‘குறைவிலாமங்கல குணத்த னாதலி - னிறைமலமறுதியி லீசனாதலி னறைகுவர் சிவனென வறிவின் மேலவர்’, ‘இன்பஞ் செய்தலிற் சங்கர னெம்பிரா - னின்பமாக்கலிற் சம்பு விடும்பை - யென்ப தோட்டு மியல்பி னுருத்திரன்’ என்ற காஞ்சிப்புராணமும், ‘இன்னலங் கடலுட் பட்டோர் யாரையு மெடுக்கு நீரா - லுன்னரும் பரமமூர்த்தி யுருத்திர னெனும்பேர் பெற்றான்’ என்ற கந்தபுராணமும், ‘ஸர்வாநந்தமய: சிவ:’ என்ற தேஜோபிந்தூபநிஷத்தும், ‘சிவ ஏகோத்யேய: சிவங்கர:’ என்ற அதர்வசிகோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (௧௭)

புலையன் சிவநாமத்தைச் சொன்னாலும் அவனை மதிக்கவேண்டு மென்பது.

பசியற வாவைத் தின்னும் பறையனே யெனினு மோர்காற்
கசிவொடு சிவனே யென்று கழறிடி னவன்பா லண்மிப்
புசியுறை பேசு மைந்தா வெனமறை புகற லாலே
வசிபுரி சிவப்பேர் மாண்பை மதியுளாய் கண்டு வாழே.

(அ - ரை) ஆவை - பசுவை; ஓர்கால் - ஒருதரம்; கசிவொடு - அன்புடன்; கழறிடின் - சொன்னால்; அண்மி - சென்று; புசி - உண்; உறை - உடன்வசி; புகறலாலே - சொல்கிறபடியால்; வசிபுரி - எல்லாவற்றையுந் தன் வசப்படுத்துகிற.

‘அபிவாயச் சண்டாளச் சிவ இதிவாசம் வதேத்தேந ஸஹஸம் வதேத் தேந ஸஹஸம் வஸேத்தேந ஸஹபுஞ்ஜீத’ என்ற முண்டகோபநிஷத்தும், ‘ஸர்வஸ்யவசீ ஸர்வஸ்யேசாந:’ என்ற ப்ருஹதாரண்யகோபநிஷத்தும், ‘ஏகோவசீ’ என்ற கடோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (௧௮)

சிவபிரானா லன்றி முத்தி சித்தியா தென்பது.

உருவமில் விசும்பைத் தோல்போ லுரித்துடுத் திடவல்
[லானே
சருவசம் பன்ன னான சம்புவின் ஞான மின்றிப்
பருவரல் சாய்ந்து முத்தி பற்றுவா னென்னும் வேத
மொருவரும் பவரே கொள்ளா ருமாதவன் றலைமை தன்னை.

(அ - ரை) உருவம் இல் - அருவமான; விசும்பை - ஆகாயத்தை; சருவசம்பன்னன் - எல்லாச் செல்வங்களையுமுடையவன்; சம்புவின்ஞானம் - சிவபிரானை அறியும் ஞானம்; பருவரல் - துன்பம்; சாய்ந்து - நீங்கி; பற்றுவான் - அடைவான்; ஒருவரும்பவர் - நீங்கமாட்டாத பாவங்களை யுடையவர்.

‘யதாசர்ம வதாகாசம் வேஷ்டயிஷ்யந்தி மாநவா: | ததாசிவ மவிஜ்ஞாய துக்கஸ்யாந்தோ பவிஷ்யதி’ என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும், ‘ஸர்வைச்

வர்ய ஸம்பந்த:-- சம்பு' என்ற அதர்வசிகோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (௫௯)

சிவபிரானுக்குப் பசுபதி நாமமும் விஷ்ணுவுக்குக் கோபாலநாமமும் வந்தவாறிது வென்பது.

> பசுவென லுற்ற தான்மாப் பாசமுற் றுழன்ற வாற்றாற்
> பசுபதி யெனலை யுற்றான் பரசிவன் பதியா யந்தப்
> பசுவினை யாண்ட சீராற் பாரிடை யிடையிற் றோன்றிப்
> பசுநிரை மேய்த்தே மால்கோ பாலனென் றிடலை யுற்றான்.

(அ - ரை) உழன்ற ஆற்றால் - வருந்துதலினால்; பாரிடை - உலகில்; இடையில் - இடைக்குலத்தில்; பசுநிரை - பசுமந்தைகளை.

'பாசம் பரம பந்தகம்' என்ற மஹோபநிஷத்தும், 'பாசபத்தஸ் ததா ஜீவ:' என்ற ஸ்கந்தோபநிஷத்தும், 'ஸம்ஸாரீ ஜீவ: ஸ ஏவ பசு:-- ஸர்வேச்வர ஈச: பசுபதி:' என்ற ஜாபால்யுபநிஷத்தும், 'ஜீவாத்மரூபம் ஜ்யோதிரூப மணுமாத்ரம் வர்த்ததே' என்ற த்யானபிந்தூபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (௬௦)

சிவபிரானே உத்தமோத்தம புருஷனென்பது.

> ஆரிய மறைசொல் காயத் திரிகளீ ராறு ளைந்தாஞ்
> சீரிய சைவ மாங்கே திகழ்ந்திடும் புருட நாம
> மேரி புருடர்க் குள்ளே யுத்தம னென்போர்க் கந்நூல்
> பூரண சிவனை யுத்த மோத்தம புருட னென்னும்.

(அ - ரை) ஈராறுள் - பன்னிரண்டனுள்; ஐந்து சீரிய சைவம் ஆம் என்க. சைவம் - சிவசம்பந்த முடையவை; ஆங்கே - அவ்வைந்தனுள்ளும், ஏர் - அழகு; பூரண - வியாபக.

சிவசம்பந்த முடையனவாய்ப் புருஷநாமம் வந்த ஐந்து காயத்திரிகள் 'புருஷஸ்ய வித்மஹே ஸஹஸ்ராக்ஷஸ்ய மஹாதேவாய தீமஹி தந்நோ ருத்ர: ப்ரசோதயாத்', 'தத்புருஷாய வித்மஹே மஹாதேவாய தீமஹி தந்நோ ருத்ர: ப்ரசோதயாத்'. 'தத்புருஷாய வித்மஹே வக்ரதுண்டாய தீமஹி தந்நோ தந்திப்ரசோதயாத்', 'தத்புருஷாய வித்மஹே சக்ரதுண்டாய தீமஹி தந்நோ நந்தி: ப்ரசோதயாத்', 'தத்புருஷாய வித்மஹே மஹாஸேநாய தீமஹி தந்ந: ஷண்முக: ப்ரசோதயாத்' என்பன. இவையும் மற்ற ஏழு காயத்திரிகளும் நாராயணோபநிஷத்தில் உள. அவ்வுபநிஷத்தும், 'ஊர்த்வ பூர்ணமத: பூர்ணம் மத்ய பூர்ணம் சிவாத்மகம்' என்ற முக்திகோபநிஷத்தும், '[illegible] புருஷதைவத்யா' என்ற அதர்வசிரோபநிஷத்தும், 'புருஷம் [illegible] அதர்வசிரோவித' என்ற மந்திரிகோபநிஷத்தும்,

'ஹிரண்மய: புருஷ ஏக ஹம்ஸ:' என்ற பிருஹதாரண்யகோபநிஷத்தும், 'புருஷோத்தமோத்தமம் - - ஸர்வேச்வரம்' என்ற நாரதபரிவ்ராஜகோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள், (௬௧)

விஷ்ணு பெண்ணும் சிவபிரானுக்கு மனைவியும் ஆவரென்பது.

சென்னிக ளொருநான் குள்ள தேவனைப் பெறவு மாழி
யின்னமு தமரர் தங்கட் கீயவுந் தாருக் காட்டின்
மன்னிய முனிவர் தம்மை மயக்கவு மால்பெண் ணான
னன்னளை யரன்கூ டேற்ற வையனை யவள்பெற் றாளே.

(அ - ரை) சென்னிகளொருநான்குள்ள தேவனை - பிரமனை; தாருக்காட்டில் - தாருகாவனத்தில்; மன்னிய - இருந்த; அன்னளை - அவ்விஷ்ணு மங்கையை; சூல் ஏற்ற - கருப்பம் உண்டாக்க; ஐயனை - ஹரிஹரபுத்திரனை.

'மாயோன் மகடூஉ வாகிய காலைத் தடமுலை திளைத்துச் சாத்தனைத் தருதலின்.' என்ற சுலோக பஞ்சகமும், 'பிறைதங்கு சடையானை வலத்தே வைத்துப் பிரமனைத் தன் னுந்தியிலே தோற்றுவித்து' என்ற பிரபந்தமும், 'முன்னை வேதன் முடிந்தனன் போதலு - முன்னரே வந்தவப்பொடு கூடினேம் - பின்ன ரிந்தப் பிரமனை யுந்தியா - லன்னை யாகி யளித்தனை யல்லையோ' என்ற கந்தபுராணமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (௬௨)

பஞ்சாக்ஷரமே தாரக மந்திரமென்பது.

வாரண வாசி தன்னின் மாரண மாவோர் காதிற்
றாரக முபதே சிக்குஞ் சம்புவே மறையி னுண்மைச்
சீரண வெழுத்தைந் தென்று செப்பின னறிந்தோர் வேறு
தாரக மனுக்க டம்மைத் தள்ளுவர் மூடமென்றே.

(அ - ரை) வாரணவாசிதன்னில் - காசியில்; மாரணமாவோர் - சாகிறவர்களுடைய; தாரகம் - தாரகமந்திரம்; சீர் அணவு - சிறப்புப் பொருந்திய எழுத்து ஐந்து - வியஷ்டிப் பிரணவமாகிய பஞ்சாக்ஷரம்; அறிந்தோர் - அவ்வுண்மையைத் தெரிந்தவர்கள்; மனு - மந்திரம்; வேறு தாரகமாவன நாராயணநாமமும் ராமநாமமுமாம்; ஓங்காரதாரகம் பஞ்சாக்ஷரத்தின் சமஷ்டியேயாகலின் வேறெனப்படாது.

'[illegible] ஸர்வாபணுயேதி தாரகம்' (இது யாக்ஞவல்கிய வாக்கியம்) என்ற தாரஸாரோபநிஷத்தும், 'யத்ருத்ராபிவா காச்யாம் மரணே மஹேச்வர: | ஜந்தோர் தக்ஷிண கர்ணேது மத்தாரம் ஸமுபாதிசேத்.' (இது ராமவாக்கியம்) என்ற முக்திகோபநிஷத்தும், 'தாரகம் சைவம் மனுபதி சாமிதத்வைவ முக்த்யர்த்தமுபதிச்யதே | சைவோயம் மந்த்ர: பஞ்சாக்ஷர: | பரமோமந்த்ரன் தாரகோயம் பஞ்சாக்ஷர:' (இது சிவவாக்கியம்), 'தாரகம் சைவம்' என்

பஸ்மஜாபாலோபநிஷத்தும், 'ஸ்ரீராமஸ்யமநும் காச்யாம் ஜஜாபவ்ருஷபத்வஜ:', 'யத்தாரகம் ப்ரஹ்ம' என்ற ராமோத்தரதாபிநியுபநிஷத்தும், 'ப்ரணவஸ்தாரக' என்ற பாசுபதப்ரஹ்மோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.
(௬௰௩)

சிவபிரானைச் சிலவேதவசனங்கள் சொல்லித் துதிக்கு முகத்தால் அவர் பெருமைகள் மேலும் இவையென்பது.

மறையினை யளிப்பான் றானு மறைநெறி புரப்பான் றானு
மறையொரு வடிவன் றானு மறைப்பொரு ளாவான் றானு
மறையள வடங்கான் றானு மாலவன் பிரமன் யார்க்கு
மறையுப தேசன் றானு மதிமுடிப் பரனே யாவான்.

(அ - ரை) அளிப்பான் - தருபவன்; புரப்பான் - ரக்ஷிப்பவன்; மறையளவு - சுருதிப் பிரமாணம்; மதிமுடிப்பரன் - சிவபிரான்.

'வேத சாஸ்திர புராணம் ச கார்யம் காரணமீச்வர:' என்ற தேஜோபிந்தூபநிஷத்தும், 'வேதைரநேகை ரஹமேவ வேத்யோ வேதாந்த க்ருத் வேத விதேவ சாஹம்' என்ற கைவல்யோபநிஷத்தும் 'யோப்ரஹ்மாணம் விததாதி பூர்வம் யோவை வேதாம்ச ப்ரஹிணோதி தஸ்மை', 'தத்வேத குஹ்யோபநிஷத்ஸு கூடம்', 'வேதாந்தே பரமம் குஹ்யம்' என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும், 'சம்போர் மஹாதேவம் ஜகத்குரும்' என்ற பஞ்சப்ரஹ்மோபநிஷத்தும், 'ஸர்வவேதாந்த ச்ருப்தோஸ்மி' என்ற மைத்ரேயோபநிஷத்தும், 'திவ்யஜ்ஞானோபதேஷ்டாரம் தேசிகம் பரமேச்வரம்' என்ற யோகசிகோபநிஷத்தும், 'மஹாதேவம் ஜகத்குரும்' என்ற கர்போபநிஷத்தும், 'தக்ஷிணாமுகமாச்ரித்ய ஜ்ஞானமுத்ராம் ப்ரகல்பயேத்' என்ற பிரமவித்யோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.
(௬௰௪)

இதுவுமது.

அக்கர மாவோய் நீயே யகரநீ யசர நீயே
தக்கண மூர்த்தி நீநாற் பொருள்களுந் தருவாய் நீயே
பக்குவ ருன்னை யன்றிப் பரமென வொட்டாய் நீயே
முக்குண ரகித னீயெம் முக்கண வனைத்து நீயே.

(அ - ரை) நாற்பொருள்கள் அறம் பொருள் இன்பம் வீடு. பக்குவர் - ஞானிகள்; அன்றி - அல்லாமல் வேறு தெய்வங்களில் எதையும்; பரம் என - பரதெய்வமென்று சொல்லுதற்கு; ஒட்டாய் - இடங்கொடுக்கமாட்டாய்; அனைத்தும் - எல்லாம்.

'ஸதாசிவோக்ஷரம்' என்ற திரிபுரதாபிநியுபநிஷத்தும், 'சிவமக்ஷரம்', 'அஹமேவ ஸர்வம் மயிஸர்வம் ப்ரதிஷ்டிதம்' என்ற பஸ்மஜாபாலோப

நிஷத்தும், 'அக்ஷரம் ஹர:', 'ருத்ரயத்தே தக்ஷிணமுகம் தேநமாம் பாஹி நித்யம்' என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும், 'அஜரம்சிவம்' என்ற மஹோபநிஷத்தும், 'தக்ஷிணாமுகமாச்ரித்ய ஜ்ஞாநமுத்ராம் ப்ரகல்பயேத்' என்ற பிரமவித்யோபநிஷத்தும், 'தர்மார்த்தகாம மோக்ஷம்சவிந்ததி', 'த்வம்குணத்ரயாதீத' என்ற கணபதியுபநிஷத்தும், 'சிவ: ஸர்வம் சிவாதந்யந்நகிம்சந:' என்ற வராஹோபநிஷத்தும், 'குணத்ரயமதீதம்' என்ற யோகசிகோபநிஷத்தும், 'குணாதீதம்' என்ற நாதபிந்தூபநிஷத்தும், 'த்ரிகுண ரஹிதம்' என்ற சுகரஹஸ்யோபநிஷத்தும், 'அகரமுதலானை', 'எல்லாமாமெம்பெருமான்' என்ற தேவாரமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (சரு)

இதுவுமது.

அஞ்செனு மறிவுக் கெட்டா னஞ்செனும் பூத மேலா
னஞ்செனு மவத்தை யில்லா னஞ்செனுங் கோசந் தோயா
னஞ்செனு மியாகர்க் கின்ப னஞ்செனுந் தேவர் தேவ
னஞ்செனு மெழுத்தா யுள்ளா னடியருக் கெளிய வீசன்.

(அ-ரை) அஞ்செனும் அறிவு - சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம்; அஞ்செனும் பூதம் - பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசம்; அஞ்செனும் அவத்தை - சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம்; அஞ்செனும் கோசம் - அன்னமயம் பிராணமயம் மனோமயம் விஞ்ஞானமயம் ஆநந்தமயம்; தோயான் - அகப்படான்; அஞ்செனும் யாகம் - கருமம் தவம் செபம் தியானம் ஞானம்; யாகர்க்கு - யாகம் செய்பவருக்கு; அஞ்செனும் தேவர் - பிரமன் விஷ்ணு உருத்திரன் மகேசுரன் சதாசிவன்; அஞ்செனும் எழுத்து - ந ம சி வ ய.

'சப்த ஸ்பர்ச ரூப ரஸ கந்த வர்ஜித' என்ற ஆத்மோபநிஷத்தும், 'ஸர்வேந்த்ரிய விவர்ஜிதம்', 'ஸர்வபூதகுஹாசய:' என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும், 'ஸர்வேந்த்ரிய விவர்ஜித:' என்ற பிரமவித்யோபநிஷத்தும், 'அதீந்த்ரியம்' என்ற நாதபிந்தூபநிஷத்தும், 'ஸர்வபூதாதிவாஸ:' என்ற கோபாலோத்தரதாபிநியுபநிஷத்தும், 'பஞ்சாவஸ்தா: ஜாக்ரத்ஸ்வப்நஸுஷுப்தி துரீய துரீயாதீதா:' என்ற மண்டலப் பிராமணோபநிஷத்தும், 'ஐவேள்வியான அருமறை நான்கும் - - பயின்ற படிறர்' என்ற தேவாரமும், 'பஞ்சப்ரஹ்ம புருஷாந்' என்ற சாந்தோக்யோபநிஷத்தும், 'பஞ்சப்ரஹ்மாத்மகம்' என்ற பஞ்சப்பிரமோபநிஷத்தும், 'பஞ்சப்ரஹ்ம மயரூபம்' என்ற யோகசிகோபநிஷத்தும், 'பஞ்சாக்ஷரமயம் சம்பும்' என்ற பஞ்சப்ரஹ்மோபநிஷத்தும், 'ஸர்வதாஸதாசிவோஸ்ம்யஹம்' என்ற மைத்ரேயோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (சசு)

இதுவுமது.

எங்கணுஞ் சிரங்க ளுள்ளா னெங்கணும் வதன முள்ளா
னெங்கணு நயன முள்ளா னெங்கணுங் கிரீவ முள்ளா
னெங்கணுங் கரங்க ளுள்ளா னெங்கணும் பதங்க ளுள்ளா
னெங்கணு நியம மாகி யிலங்கா னெல்லா முள்ளான்.

(அ - ரை) ஈற்றடி 'எங்கணும்' என்பதை 'எல்லாம்' என்பதன் முன்னாகக் கூட்டுக. எல்லாம் - மற்றையவயவங்களெல்லாமும்.

'ஸர்வாநந சிரோ க்ரீவ: ஸர்வத: பாணிபாதம். தத்ஸர்வதோக்ஷி சிரோ முகம் | ஸர்வத: ச்ருதிமல்லோகே ஸர்வமாவ்ருத்யதிஷ்டதி ||' என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும், 'விச்வதச் சக்ஷுருத விச்வதோ முகோ விச்வதோ ஹஸ்த உத விச்வதஸ் பாத்' என்ற நாராயணோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (கூஎ)

இதுவுமது.

ஆயிரந் தலைக ளுள்ளா னாயிர முகங்க ளுள்ளா
னாயிரங் கண்க ளுள்ளா னாயிரங் கண்ட முள்ளா
னாயிரங் கைக ளுள்ளா னாயிர மலர்த்தா ளுள்ளா
னாயிரம் பெயர்க ளுள்ளா னாருயிர்க் குயிரா மீசன்.

(அ - ரை) கண்டம் - கழுத்து; தாள் - பாதம்; ஆர் - அருமையாகிய.

'ஸஹஸ்ராக்ஷம் ஸஹஸ்ர சிர்ஷம் ஸஹஸ்ர சரணம்' என்ற பஸ்மஜாபாலோபநிஷத்தும், 'ஸஹஸ்ர சிரஷா புருஷ: ஸஹஸ்ராக்ஷ: ஸஹஸ்ரபாத்' என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும், 'ஸஹஸ்ர சிர்ஷா புருஷ: ஸஹஸ்ராக்ஷ: ஸஹஸ்ரபாத் | ஸஹஸ்ர பாஹு:' என்ற ஸுபாலோபநிஷத்தும், 'ஆத்மாந்தர்யாம் யம்ருத:' என்ற பிருஹதாரண்யகோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (கூஅ)

இதுவுமது.

ஆதியொ டந்த மாவா னகிலமும் வசியஞ் செய்வா
னோதரு சித்தி யெட்டு முதவுவன் சருவன் ஞான
ஞாதுரு ஞேய மாவா னற்பவன் றேவ தேவன்
சோதனை யெதற்கு மெட்டா னென்பவர் துயரம் போமே.

(அ - ரை) அகிலமும் - எல்லாவற்றையும்; வசியஞ் செய்வான் - வசப்படுத்துவான்; ஓதரு - சொல்லுதற்கரிய; உதவுவன் - கொடுப்பான்.

'ஸதாசிவ ஆதிபூத:' என்ற திரிபுராதாபநியுபநிஷத்தும், 'வசீஸர்வஸ்ய லோகஸ்ய ஸ்தாவரஸ்ய சரஸ்யச' என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும், 'அணிமாதிகமைச்வர்யம சிராத்தஸ்ய ஜாயதே' என்ற யோகசிகோபநிஷத்தும்,

'தஸ்மாதணிமாதி ஸித்திர்பவதி' என்ற அத்வயதாரகோபநிஷத்தும், 'அணிமாத்யஷ்டைச்வர்யாசாஸித்தஸங்கல்போ பந்த:' என்ற நிராலம்போபநிஷத்தும், 'பவாய நம: பவலிங்காய நம: | சர்வாய நம: சர்வலிங்காய நம:' என்ற நாராயணோபநிஷத்தும், 'ஓமித்யேவ யதத்பூதம்ஜ்ஞாநம் ஜ்ஞேயாத்மகம் சிவம்' என்ற சாண்டில்யோபநிஷத்தும், 'ஜ்ஞாத்ருஜ்ஞாந ஜ்ஞேயாநா மாவிர்பாவதிரோபாவ--' என்ற ஸர்வஸாரோபநிஷத்தும், 'ஜ்ஞாத்ரு ஜ்ஞாநஜ்ஞேய' என்ற முத்கலோபநிஷத்தும், 'தேவாதிதேவ--உமாரமண--' என்ற சுகரஹஸ்யோபநிஷத்தும், 'சோகமாப்நோதி' என்ற பஸ்மஜாபாலோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (௬௧)

இதுவுமது.

ஏதுவே திருட்டாந் தங்களெனுமிவை கடந்த தெய்வம்
பேதியா வுள்ளந் தோறும் பெருவிர லளவாந் தெய்வம்
நீதியா நிமலத் தெய்வம் நிட்கள சகளத் தெய்வ
மாதரா ளிடத்துத் தெய்வ மறைநடுத் தீபத் தெய்வம்.

(அ-ரை) பேதியா - வேறுபடாத; நீதியார் தெய்வம் நிமலமாந் தெய்வம் என்க. மாதராள் - உமாதேவியாரை; இடத்து - இடப்பாகத்திற் கொண்ட.

'ஹேது த்ருஷ்டாந்த வர்ஜிதம்--பரமம் சிவம்' என்ற பிரம பிந்தூபநிஷத்தும், 'ஹேது த்ருஷ்டாந்த வர்ஜிதம்' என்ற திரிபுராதாபிநீயுபநிஷத்தும், 'உமாஸஹாயம்--அங்குஷ்டமாத்ர:' என்ற மண்டலப்பிராமணோபநிஷத்தும், 'அங்குஷ்டமாத்ரம்--ஈச்வரம்' என்ற தியானபிந்தூபநிஷத்தும், 'அங்குஷ்ட மாத்ர: புருஷோங்குஷ்டம் ச ஸமாச்ரித: | ஈச:' என்ற நாராயணோபநிஷத்தும், 'அங்குஷ்ட மாத்ர: புருஷோந்தராத்மா ஸதாஜநாநாம் ஹ்ருதயே ஸந்நிவிஷ்ட:', 'அங்குஷ்டமாத்ரோ ரவிதுல்யரூப:' என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும், 'ப்ரஹ்ம அங்குஷ்டாப்யாம் நம:' என்ற சுகரஹஸ்யோபநிஷத்தும், 'நீதிபலவுந்தன்னதுருவாம்' என்ற தேவாரமும், 'க்ருஷ்ண பிங்களோ மமேச்வர இஷ்டே | ததிதமஸ்ய ஸகள நிஷ்கலம் ரூபம் |' என்ற சாண்டில்யோபநிஷத்தும், 'மூன்று வேதங்களின் நடுவிலுள்ளது யஜுர் வேதம். அதன் ஏழுகாண்டங்களினடுவிலுள்ளது நான்காவது காண்டம். அக்காண்டத்தினடுவிலுள்ளது ஐந்தாவது பிரச்னமாகிய ஸ்ரீருத்ரம். அதனடுவிலுள்ளது 'நமச்சோமாயசா' எனும் அநுவாகம் அதனடுவிலுள்ளது 'நமச்சிவாய சா' எனும் வாக்கியம். அதனடுவிலுள்ளது 'சிவ' எனும் பதியினது திருநாமம் என அறிக' என்ற வேதத்தைக் குறித்த வியாசமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (௭0)

இதுவுமது.

அரிதினு மரிதாந் தெய்வ மணுவினு மணுவாந் தெய்வம்
பெரிதினும் பெரிதாந் தெய்வம் பிரியருக் கெளிதாந் தெய்வங்
கரியுரி போர்க்குந் தெய்வங் கடவுள ரெலாமாந் தெய்வ
மெரிபொரு மூன்றுந் தெய்வம் யாமெலா மகிழுந் தெய்வம்.

(அ ரை) பிரியருக்கு - அன்பருக்கு; கரியுரி - யானைத்தோல்; எரி - அக்கினி.

‘அரியானை’, ‘மதயானையுரிபோர்த்து’, முத்தீயானவன் சிவன்’ என்ற தேவாரமும் ‘அணோரணீயாந் மஹதோ மஹீயாந் - - ஈசம்’ என்ற நாராயணோபநிஷத்தும், ‘அணோரணீயாந் மஹதோமஹீயா நாத்மாஸ்ய ஜந்தோர் நிஹிதோ குஹாயாம் | தமக்ரதும் ‘பச்யதி வீதசோகோ தாது: ப்ரஸாதாந் மஹிமாநமீசம்’ என்ற நாரதபரிவ்ராஜகோபநிஷத்தும் சரபோபநிஷத்தும், ‘அணோரணீயாந் மஹதோமஹீயாநாத்மா குஹாயாம் நிஹிதோஸ்ய ஜந்தோ: | தமக்ரதும் பச்யதி வீதசோகோ தாது: ப்ரஸாதாந் மஹிமாநமீசம்’ என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும், ‘ஸர்வதேவமயம் சிவம்’ என்ற தியானபிந்தூபநிஷத்தும், ‘ஸர்வதேவமய: - - சிவ:’ என்ற நாரதபரிவ்ராஜகோபநிஷத்தும், ‘ஸர்வதேவமயம்’ என்ற பஞ்சப்ரஹ்மோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

(௭௧)

இதுவுமது.

சருவஞன் சருவ சாக்கி சருவவி யாபி சத்த
னிருமல னசலன் வீர னிராமயன் காலா தீத
னுருமிகு கனக ரேத னூர்த்துவ விரேதன் சுத்தன்
பொருவில னிருவி காரி புராதன னவன் சம்பு.

(அ - ரை) உருமிகு - அழகுமிகுந்த; பொருவிலன் - சமமில்லாதவன்.

‘ஸர்வஜ்ஞ: - - பசுபதி’ என்ற ஜாபால்யுபநிஷத்தும், ‘ஸர்வஜ்ஞ - - சிவம்’ என்ற நரஸிம்ஹ பூர்வதாபநீயுபநிஷத்தும், ‘சிந்மாத்ரஜ்யோதிரஸ்ம்யஹம்’ என்ற மைத்ரேயோபநிஷத்தும், ‘ஸர்வஜ்ஞ - - உமாரமண’ என்ற சுகரஹஸ்யோபநிஷத்தும், ‘யத்கேவலம்ஜ்ஞாநகம்யம் - - சிவம்’ என்ற சாண்டில்யோபநிஷத்தும், ஸர்வஸாக்ஷீமஹேச:’ என்ற சரபோபநிஷத்தும், ‘ஸர்வஸாக்ஷிணம்’ என்ற சாண்டில்யோபநிஷத்தும், ‘பசுபதி: ஸாக்ஷீஸர்வஸ்ய ஸர்வதா’ என்ற பாசுபதப்ரஹ்மோபநிஷத்தும், ‘ஸமஸ்தஸாக்ஷீம் தமஸ: பரஸ்தாத்’, ‘ஸமஸ்தஸாக்ஷீம்’, ‘ஸாக்ஷீ - - ஸதாசிவ:’ என்ற கைவல்யோபநிஷத்தும், ‘ஸாக்ஷீ’ என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும், ‘புத்திஸாக்ஷிணம்’ என்ற பஞ்சப்ரஹ்மோபநிஷத்தும், ‘ஸர்வவ்யாபீ ஸ பகவாந் - - சிவ:’, ‘ஸர்வவ்யாபீ ஸர்வபூதாந்தராத்மா’ என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும், ‘விபுமீச்வரம்’ என்ற ஸ்ரீ ஜாபாலதர்சநோபநிஷத்தும், ‘ஸர்வவ்யாபீ’ என்ற அதர்வசி

ரோபநிஷத்தும், ‘ஸத் - - லக்ஷண உமாரமண’ என்ற சுகரஹஸ்யோபநிஷத்தும், ‘நிர்மலம் சிவம்’ என்ற நாதபிந்தூபநிஷத்தும், ‘அசலம்’ என்ற ஸ்ரீஜாபாலதர்சநோபநிஷத்தும், ‘வீராஸநாரூடம் - - சிவம்’ என்ற பஸ்மஜாபாலோபநிஷத்தும், ‘த்வம் காலத்ரயாதீத:’ என்ற கணபத்யுபநிஷத்தும், ‘த்ரிகாலாதீதம்’ என்ற நரஸிம்ஹ பூர்வதாபிநியுபநிஷத்தும், ‘காலத்ரய விமுக்தோஸ்மி’ என்ற மைத்ரேயோபநிஷத்தும், ‘ஹிரண்யரேதா’ என்ற ஏகாக்ஷரோபநிஷத்தும், ‘ஊர்த்வரேதம்’ என்ற பஸ்மஜாபாலோபநிஷத்தும், நரஸிம்ஹ பூர்வதாபிநியுபநிஷத்தும், ஸ்ரீஜாபாலதர்சநோபநிஷத்தும், ‘விசுத்தம்’ என்ற கைவல்யோபநிஷத்தும், ‘சுத்தம்’ என்ற நாதபிந்தூபநிஷத்தும், ‘அநூபமம்’ என்ற ஸ்ரீஜாபாலதர்சநோபநிஷத்தும் நாதபிந்தூபநிஷத்தும், ‘நிர்விகாரஸ்ததா சிவ:’ என்ற திரிசிகிப்ராஹ்மணோபநிஷத்தும், ‘புராதநோஹம்’ என்ற கைவல்யோபநிஷத்தும், ‘புராணம் - - ஸர்வேச்வரம்’ என்ற நாரத பரிவ்ராஜகோபநிஷத்தும், ‘புராணம் - - ஸநாதநம் ‘ஸர்வேச்வரம்’ என்ற மஹோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (எஉ)

இதுவுமது.

சத்திய ஞானா னந்த தத்துவா தீத வேக
வத்துவி தீய மூல வப்பிர மேய வங்கம்
நித்திய விரூப வக்க நிரஞ்சன வியோம ரூப
முத்தனு வதீத முத்த முழுவது முனையன் றின்றே.

(அ - ரை) முழுவதும் - சர்வப்பிரபஞ்சங்களும்; உனையன்றி இன்று - உன்னையல்லாமல் நிலைபெறா.

‘ஸத்யமீசாநம் ஜ்ஞாநமாநந்தம்’, ‘ஸச்சிதாநந்தம்’ என்ற ஸ்ரீஜாபாலதர்சநோபநிஷத்தும், ‘ஸத்யம் விஜ்ஞாநமாநந்தம் ப்ரஹ்ம’ என்ற சாண்டில்யோபநிஷத்தும், ‘தத்வாதீதம் மஹாதேவ - -’ என்ற யோகசிகோபநிஷத்தும், ‘ஸர்வதத்வைர்விசுத்தம்’ என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும், ‘ஏகமத்வைதம்’ என்ற பஸ்மஜாபாலோபநிஷத்தும், ‘யதேகமத்விதீயம்’ என்ற சாண்டில்யோபநிஷத்தும், ‘ஏகமேவாத்விதீயம்’ என்ற தேஜோபிந்தூபநிஷத்தும், ‘ஏக ஏவ சிவ:’ என்ற சரபோபநிஷத்தும், ‘மூலாதாரஸ்திதோஸி’ என்ற கணபத்யுபநிஷத்தும், ‘அப்ரமேயம்’ என்ற பஸ்மஜாபாலோபநிஷத்தும் ஸ்ரீஜாபாலதர்சநோபநிஷத்தும், ‘அப்ரமேயம் - - சிவம்’ என்ற பிரமபிந்தூபநிஷத்தும் மண்டலப்ராஹ்மணோபநிஷத்தும், ‘நித்யம்’ என்ற கணபத்யுபநிஷத்தும் ஸ்ரீஜாபாலதர்சநோபநிஷத்தும் ருத்ரஹ்ருதயோபநிஷத்தும், ‘சிவோ நித்ய:’ என்ற சரபோபநிஷத்தும், ‘ஸ்திரேபிரங்கை: புரூரூப உக்ர:’ என்ற ருக்வேதமும், ‘சிவ: புருஷ ஈசாநோ நித்யமாத்மேதிகத்யதே’ என்ற மஹோபநிஷத்தும், ‘விரூபாக்ஷம்’ என்ற பஸ்மஜாபாலோபநிஷத்தும் ஸ்ரீஜாபாலதர்சநோபநிஷத்தும், ‘நிரஞ்ஜநம்’ என்ற பஸ்மஜாபாலோபநிஷத்தும் சாண்டில்யோபநிஷத்தும் யோகசிகோபநிஷத்தும், ‘ஆகாசமய விக்ரஹம்’, ‘ஆகாசாத்மகம்’ என்ற பஞ்சப்ராஹ்மோபநிஷத்தும், ‘ஆகாச சரீர

ப்ரஹ்ம' என்ற தைத்திரீயோபநிஷத்தும், 'தேஹத்ரயம் ஸ்தூல ஸூக்ஷ்ம காரணாநி விதர்புதா' என்ற வராஹோபநிஷத்தும், 'த்வம்தேஹத்ரயாதீத:' என்ற கணபத்யுபநிஷத்தும், 'ஸர்வஸ்யேசாந:' என்ற பிருஹதாரண்யகோபநிஷத்தும், இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (எ௩)

இதுவுமது.

கலாமய பாவா பாவ கரநிரா லம்ப கஞ்ச
பொலாவிய லொன்று மில்லாய் பொருணிறை புகழே
[யுள்ளாய்
சிலாலிபி யெனவென் னெஞ்சிற் றீட்டிவை யுனக்கே முன்னூ
லெலாமுறை சிவப்பேர் தன்னை யீசுர சுவய மாமேதா.

(அ - ரை) பொலாஇயல் - கெட்டதன்மை; சிலாலிபி - கல்லிற் செதுக்கிய எழுத்து; தீட்டிவை - எழுதிவை; முன்னூல் - வேதம்.

'பஞ்சகலாமயம்', 'சகலகலாவ்யாபிநீம்' என்ற திரிபுராதாபநியுபநிஷத்தும்' 'பாவாபாவகரம் சிவம்' என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும், 'பாவாபாவவிஹீநோஸ்மி' என்ற மைத்ரேயோபநிஷத்தும், 'பாவாபாவாதித்வந்த்வாதீத:', 'சிவம் - - நிராலம்பம்' என்ற மண்டலப்ராஹ்மணோபநிஷத்தும், 'ஹம்ஸ ஏவ பரோருத்ரோ', 'ஹம்ஸ ஏவ மஹேச்வர:' என்ற பிரம்மவித்யோபநிஷத்தும், 'ஹிரண்மய: புருஷ ஏக ஹம்ஸ:' என்ற பிருஹதாரண்யகோபநிஷத்தும், 'எங்குமெங்கள் பிரானார் புகழல திகழ்பழியிலரே', 'ஈனமிலாப்புகழண்ணல்' என்ற தேவாரமும், 'சிவநாமாங்யவிசமுச்சாரந்தம்' என்ற பஸ்மஜாபாலோபநிஷத்தும், 'ஸ்வயமீச்வர:' என்ற நரஸிம்ஹோத்தரதாபநியுபநிஷத்தும், 'செல்லாத செல்வமுடையாய்', 'சென்றடையாத திருவுடையானை' என்ற தேவாரமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (எ௪)

இதுவுமது.

அந்தரி யாமி சிந்தைக் கரியவ னசன்சர் வாங்க
சுந்தரன் றீபா காரன் சூக்கும னிருவி கற்பன்
சந்ததங் குணமெட் டுள்ளான் சருவவித் தைக்கு மீசன்
வந்தித னகண்டன் றுக்க வகையுயிர்க் கொழிக்கும் வள்ளல்.

(அ - ரை) சந்ததம் - எப்போதும்.

[illegible] புருஷ: அந்தராத்மா', 'ஸூக்ஷ்மாதி ஸூக்ஷ்மம்', 'அஜம்', 'அஜாம்' என்ற ச்வேதாச்வதரோபநிஷத்தும், 'அசிந்த்யம்', 'ஸூக்ஷ்மாத் ஸூக்ஷ்மதரம்' என்ற கைவல்யோபநிஷத்தும், 'அஜம்', 'ஸர்வாங்கஸுந்தரம்' என்ற [illegible]ப்ராஹ்மணோபநிஷத்தும் 'தீபாகாரம் மஹாதேவம்' என்ற ப்ரஹ்ம[illegible]பநிஷத்தும், 'ஸூக்ஷ்மம்' என்ற ருத்ரஹ்ருதயோபநிஷத்தும்,

'நிர்விகல்பம் -- சிவம்' என்ற ப்ரஹ்ம பிந்தூபநிஷத்தும், 'ஏஷ ஆத்மாபஹத பாப்மா விஜரோ விம்ருத்யுர் விசோகோ விஜிகத்ஸோ பிபாஸஸ் ஸத்ய காம ஸத்ய ஸங்கல்ப:' என்ற சாந்தோக்யோபநிஷத்தும், 'ஈசா: ஸர்வவித்யாநாம்' என்ற நாராயணோபநிஷத்தும், 'தாபத்ரய ஸமுத்பூத ஜந்ம ம்ருத்யுஜராதிபி: நாநாவிதாநி துக்காநி ஜஹார பரமேச்வர:', 'நிர்விகல்பம்' என்ற சரபோபநிஷத்தும், 'அசிந்த்யம் -- சிவம்', 'ஈசாந: ஸர்வவித்யாநாம்' என்ற நரஸிம்ஹ பூர்வதாபநீயுபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (எ௩)

இதுவுமது.

சவுமிய பிரபு சாச்சு விதபர மேட்டி சாந்த
வவ்யய விசோக தீர்த்த வநாமய வநந்த ரூப
கவியவி யத்த யார்க்குங் கருத்தவென் றெவனை வேதம்
புவிதனி லுழைக்கு மெல்லாப் பொருளுமாஞ் சிவனை விட்டே.

'ஸௌம்யாம்' என்ற தேவ்யுபநிஷத்தும், 'ஈச: ஸர்வஸ்ய ஜகத: ப்ரபு:' என்ற நாராயணோபநிஷத்தும், 'சிவ: ப்ரபு:' என்ற வராஹோபநிஷத்தும், 'ஸர்வஸ்ய ப்ரபும்' என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும், 'ப்ரபும்' என்ற சரபோபநிஷத்தும், 'சாச்வதம் சிவம்' என்ற நாரதபரிவ்ராஜகோபநிஷத்தும், மஹோபநிஷத்தும், 'பரமேஷ்டிந: பரமேஷ்டீ' என்ற ப்ருஹதாரண்யகோபநிஷத்தும், 'ததவ்யயம்' என்ற ருத்ரஹ்ருதயோபநிஷத்தும், 'சிவம் -- அவ்யயம்' என்ற பஸ்மஜாபாலோபநிஷத்தும், 'விசோகம்' என்ற கைவல்யோபநிஷத்தும், 'அநாமயம்' என்ற பஸ்மஜாபாலோபநிஷத்தும், 'அநந்தரூபம்' என்ற கைவல்யோபநிஷத்தும், 'சிவம் சாந்தம்' என்ற நாரதபரிவ்ராஜகோபநிஷத்தும், 'சாந்தம்' என்ற பஞ்சப்ரஹ்மோபநிஷத்தும், 'கவிம்' என்ற நாரதபரிவ்ராஜகோபநிஷத்தும், மஹோபநிஷத்தும், 'அவ்யக்தம்' என்ற கைவல்யோபநிஷத்தும், 'கர்த்தாரமீசம்' என்ற முண்டகோபநிஷத்தும், 'ஸர்வஸ்யாதிபதி:' என்ற ப்ருஹதாரண்யகோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (எ௪)

இதுவுமது.

ஆதியு முடிவு மில்லா னன்னையும் பிதாவு மில்லான்
பேதமொ டபேத மில்லான் பெண்ணொடா ணலிக ளில்லான்
சாதலு முதிப்பு மில்லான் சத்தசத் திலன்பே ரில்லான்
பாதியி லுமைவா ழீசன் பந்தமும் வீடு மில்லான்.

'அநாத்யநந்தம்', 'அநாத்யந்தம்' என்ற பஸ்மஜாபாலோபநிஷத்தும், 'அநாத்யந்தம்' என்ற திரிபுராதாபநீயுபநிஷத்தும், 'அநாத்யந்தம்' என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும், 'ஆதிமத்பாந்தவர்ஜிதம்' என்ற ஸ்ரீஜாபாலதர்சனோபநிஷத்தும், 'ஆதிமத்யாந்த விஹீநம்' என்ற கைவல்யோபநிஷத்தும், 'நசாஸ்யகச்சிஜ்ஜநிதா' என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும், 'ஏக ஸங்க்யா

விஹீநோஸ்மி த்விஸங்க்ய நாஹம் நச' என்ற மைத்ரேயோபநிஷத்தும், 'நைவஸ்த்ரீநபுமாநேஷ நசைவாயந்நபும் ஸக:' என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும் 'ஸதஸத்பேத விஹீநோஸ்மி' என்ற மைத்ரோபநிஷத்தும், 'ஸதஸத்விஹீநம்' என்ற கைவல்யோபநிஷத்தும், 'ஸதஸத்வரேண்யம்' என்ற முண்டகோபநிஷத்தும், 'பந்தமோக்ஷாதிவிஹீநோஸ்மி' என்ற மைத்ரேயோபநிஷத்தும், 'நிராச்ய:' என்ற சரபோபநிஷத்தும், 'சிவம்.. அநாமகம்' என்ற மஹோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (எஎ)

சிவபிரானே யாருமில்லாத காலத்திலு மிருப்பவரென்பது.

எவரு மிறைஞ்சு ஞாயி றில்லையா யிரவு மின்றி
யாவது மசத்துஞ் சத்து மில்லையா மாதி நாளிற்
கேவல மாகி யுள்ளான் கேடிலாச் சிவனே யென்றான்
மூவரு மறிவார் சொல்லே முக்கணான் றனிமை யம்மா.

(அ - ரை) எவரும் - எல்லாரும்; இறைஞ்சும் - வணங்குகின்ற; அசத்தும் சத்தும் யாவதும் என்க. யாவதும் - எதுவும்; ஆதிநாள் - சிருஷ்டிக்குமுன்; கேவலம் - தனி; என்றான் - என்று வேதஞ்சொல்லுமாயின்; மூவரும் - பிரமனும் விட்டுணுவும் உருத்திரனும்.

'பலர்புகழ்ஞாயிறு' என்ற திருமுருகாற்றுப்படையும், 'யதாதமஸ் தந்நதிவா நராத்ரிர் நஸந்நசாஸச்சிவ ஏவ கேவல:' என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும், 'யத்கேவலம் .. சிவம்' என்ற சாண்டில்யோபநிஷத்தும், 'கேவல: சிவ:' என்ற ஸ்கந்தோபநிஷத்தும், 'சிவம்யாதிஸ: கேவலம்' என்ற ருத்ரஹ்ருதயோபநிஷத்தும், 'கேவல: சிவ', 'கேவலோஸ்ம்யஹம்' என்ற மைத்ரேயோபநிஷத்தும், ஸர்வம் ப்ரஹ்மைவகேவலம்' என்ற தேஜோபிந்தூபநிஷத்தும்', 'ப்ரஹ்ம கேவலம்' 'ப்ரஹ்மைவ கேவலம்' என்ற ஆத்மோபநிஷத்தும், திருக்குறள் 352 ஆம் குறளுக்குப் பரிமேலழகர்தந்த 'வீடாவது நிரதிசயவின்பமென்பதூஉம், அதற்கு நிமித்தகாரணம் கேவலப் பொருளென்பதூஉங் கூறப்பட்டன' என்ற உரைப்பகுதியும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (எஅ)

சிவபிரான் கிருத்தியங்கள் செய்யுஞ் சதுரப்பாடு இதுவென்பது.

செய்கலன் கருத்தா லொன்றுஞ் செய்குவன் கருத்தா
[லெல்லாஞ்
செய்கலன் றானே யொன்றுஞ் செய்குவ னுமையா லெல்லாஞ்
செய்கலன் றனக்கென் றொன்றுஞ் செய்குவ னுயிர்க்கே
[யெல்லாஞ்
செய்கலன் வினையொன் றுஞ் சிவபிரான் சதுர்தா
[னென்னே.

(அ - ரை) கரம் - கை; கரணங்களுக்கு உபலக்கணம்; கருத்து - சங்கற்பம்; சதுர் - சாமர்த்தியம்.

'அபாணிபாதோ ஜவநோக்ரஹீதா பச்யத்யசக்ஷுஸ் ஸச்ருணோத்ய கர்ண:' என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும் 'இறைவன் சத்தி - - சங்கற்பமாத்திரையானே எல்லாத்தொழிலுஞ் செய்யும்', 'முதல்வன் ஐந்தொழில் செய்தல் தன்பொருட்டோ? பிறர்பொருட்டோ? வீணே? தன்பொருட்டெனின், - - வரம்பிலின்பமுடைய முதல்வனுக்கு இச்செய்கையான் வரக்கடவதோர் பயனில்லை. - - வீணெனின், - - பித்தர்செய்யுந் தொழிலோடொக்கும். - - உயிர்கள் பொருட்டே முதல்வன் ஐந்தொழில்செய்வன்' என்ற சிவஞான பாஷ்யமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (௭௧)

சிவபிரானே அஷ்டமூர்த்தி யென்பது.

மன்னொரு பவனீர் சர்வ னுருத்திரன் வன்னி தன்னிற்
கண்ணிய பீமன் காற்றிற் ககனமீ தொளிர்மா தேவன்
றண்ணில வதனிற் சோம னுக்கிரன் றகிக்கு மெல்லிற்
பண்ணம ருமையாள் பாகன் பசுபதி யுயிரி லாவன்.

(அ - ரை) வன்னிதன்னில் - தீயில்; ககனமீது - வானில்.

'ப்ருதிவ்யோ பவ ஆபச் சர்வ அக்நேருத்ரோ வாயுர் பீம ஆகாசஸ்ய மஹாதேவ ஸூர்யஸ்யோக்ர: சந்த்ரஸ்ய ஸோம: ஆத்மாந: பசுபதி:' என்ற சுருதியும், 'அஷ்டமூர்த்தி:' என்ற பஸ்மஜாபாலோபநிஷத்தும் ப்ருஹஜ்ஜாபாலோபநிஷத்தும், 'அஷ்டமூர்த்யை' என்ற தத்தாத்ரேயோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (௮௦)

சிவபிரானே சர்வதத்வாதீத னென்பது.

முப்பது மாறு மாய தத்துவ முடிவி னின்ற
திப்பிய பினாகி தானே தீதறு முத்திக் கீசன்
முப்பதி னாறு போய தத்துவ முடிவி னின்ற
குப்பதி யதனுக் கீசன் கொஞ்சமு மாகா னம்மா.

(அ - ரை) முப்பதும் ஆறும் ஆய தத்துவம் - முப்பத்தாறு தத்துவங்கள்; பினாகி - சிவபிரான்; தீது அறு - அழிவில்லாத; முத்திக்கு ஈசன் - முத்தியை யருளுங் கடவுள்; முப்பதின் ஆறு போய - இருபத்துனான்கு; கு பதி - பூமியின் கொழுநனாகிய விஷ்ணு; அதனுக்கு - அந்த முத்தியை யருளுதற்கு; கொஞ்சம் கிஞ்சித் என்ற வட சொல்லின் திரிபு.

'ஷட்த்ரிம் சத் தத்வாதீத:' என்ற நாரத பரிவ்ராஜகோபநிஷத்தும், 'ஷ்ருதிவ்யாதி சிவாந்தம்' என்ற ப்ரஹ்மவித்யோபநிஷத்தும், 'சதுர்விம் சதி தத்வானி கேசிதிச்சந்திவாதிந: | கேசித் ஷட்த்ரிம் சத் தத்வானி கேசித் ஷண்ணவதீ நிச'. 'ஆஹத்ய தத்வ ஜாதாநாம் ஷட்த்ரிம் சந் முநயோவிது:' என்ற வராகோபநிஷத்தும், இருபத்துநான்கு தத்துவங்களைக் காட்டிலும் பிரஸித்தமான இருபத்தைந்தாமவரும் - - பரமாத்மாவுமான அந்த வாஸுதேவர்' என்ற பாரதம் சாந்தி 347 ஆம் அத்தியாயமும், 'பொங்கைம் புலனும் பொறியைந்தும் கருமேந்திரிய மைம்பூதம் - இங்கிவ்வுயிரேய் பிரகிருதி மானாங்கார மனங்களே' என்ற நாலாயிரமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (அக)

உபக்கிரம உபஸம்ஹார மத்யே பராமரிசைகளால் நூற்றெட்டு உபநிடதங்களிலுஞ் சிவபிரானே சொல்லப்படுகிறானென்பது.

முன்னதி லீசச் சொல்லே முடிவதிற் சிவச்சொ றன்னைச்
சொன்னது மன்றி யந்தச் சொற்பொரு டன்னை மத்தி
தன்னினு மேத்திற் றுண்மை சாருப நிடநூற் றெட்டு
மென்னினொ ரையந் தானு மீசுரன் முதன்மைக் குண்டோ.

(அ - ரை) முன்னதில் - உபக்கிரமத்தில்; முடிவதில் - உபஸம்ஹாரத்தில்; உபக்கிரமோப ஸம்ஹார மத்ய பராமரிசையென்பது பொருள்கோள் முறைக்கு ஒரு நியாயம்; ஐயம் - சந்தேகம்; முதன்மைக்கு - பரத்துவத்துக்கு.

'ஓம் ஈசாவாஸ்ய மிதம் ஸர்வம்' என்ற ஈசாவாஸ்யோபநிஷத்தும், 'ஊர்த்வ பூர்ண மத: பூர்ணம் மத்யபூர்ணம் சிவாத்மகம்' என்ற முக்திகோபநிஷத்தும், 'ராமம் த்ரிநேத்ரம் ஸோமார்த தாரிணம் சூலிநம் பரம்' என்ற ராமரஹஸ்யோபநிஷத்தும், 'ப்ரபஞ்சோபசமம் சாந்தம் சிவமத்வைதம் சதுர்த்தம் மந்யந்தே' என்ற ராமோத்தரதாபநியுபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (அஉ)

சிவபிரானைப் போது நீக்கித் தியானிக்கவேண்டுமென்று வேதத்துச் சொல்லுகிறதென்பது.

அதருவ மிறுதி வேத மதருவ சிகைதா னந்த
வதருவ முடிவா யோங்கு மழிவிலா வின்பஞ் சீவர்க்
குதவிடு சிவனே தேய னொதுக்குக பிறரை யென்ற
இதமுற விளம்ப லாலே யேந்துவ தெவனை வேதம்.

(அ - ரை) உதவிடு - கொடுக்கிற; என்று அது இதம் உற விளம்பலால் எனப்பிரிக்க. அது - அந்த அதருவசிகோபநிஷத்து; இதம் - நன்மை; விளம்பலால் - சொல்லுகிறபடியால்; ஏந்துவது - சிரமேற் கொள்ளுவது.

‘சிவ ஏகோ த்யேய: சிவம் கர: ஸர்வமந்யத்பரித்யஜ்ய’ என்ற அதர்வசிகோபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம். (அங)

யார் எத்தேவரை வணங்கினாலும் அத்தேவர் அவ்வணக்கத்தைச் சிவபிரானுக்கே அர்ப்பணஞ் செய்துவிடுவரென்பது.

அச்சுதன் பிரம னாதி யந்நிய தேவர் தம்மை
யிச்சகம் வாழ்வோர் பூசை யியற்றிடி னதனை யன்பு
மச்சமுங் கொண்டத் தேவ ரரனடிக் குய்ப்பா ரீது
பொச்சமில் சுருதி கைகள் பொருந்திடா னவன்றான் காணே.

(அ - ரை) இச்சகம் - இவ்வுலகத்தில்; உய்ப்பார் - அருப்பிப்பார்; ஈது - இவ்வுண்மை; பொச்சம் - குற்றம்; பொருந்திடான் - குவித்துப் பிறரைக் கும்பிடாதவன்; அவன்தான் - அந்த அரனே.

‘ஸ்தோமம் வோ அத்ய ருத்ராய சிக்வஸே க்ஷயத்வீராய நமஸா திதிஷ்டந | யேபி: சிவஸ்ஸ்வவாம் ஏவயாவபி: | திவஸ்ஸிஷக்தி ஸ்வயசா நிகாமபி:’ என்ற ருக்வேதமும், ‘ஆகாசாத் பதிதம் தோயம் யதாகச்சதி சாகரம் ஸர்வதேவ நமஸ்காரம் சங்கரம் ப்ரதிகச்சதி’ என்ற ஸ்மிருதியும், ‘சேர்ந்தறியாக் கையானை’ என்ற திருவாசகமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (அச)

சிவபிரானை வணங்காதவரில்லை; சிவபிரான் யாரையும் வணங்கிலரென்பது.

விண்ணவ ரியோகர் சித்தர் விஞ்சையர் முனிவர் யாழோர்
மண்ணவ ருரகர் மாப்புள் மரமுத லனைவோ ருள்ளுங்
கண்ணிய னெற்றித் தேவைக் கைதொழார் யாரே யந்தப்
பண்ணவ னேனோர் தம்மைப் பணிந்தது யாண்டு மின்றே.

(அ - ரை) விண்ணவர் - தேவர்; விஞ்சையர் - வித்தியாதரர்; யாழோர் - கந்தர்வர்; மண்ணவர் - மனிதர்; உரகர் - நாகலோகவாசிகள்; மா - மிருகங்கள்; புள் - பறவைகள்; கண் இயல் நெற்றித்தேவை - சிவபிரானை; யாரே - ஒருவருமில்லை யென்றபடி; அந்தப் பண்ணவன் - அந்தச் சிவபிரான்; ஏனோர் தம்மை - பிறரை; யாண்டும் - எக்காலத்திலும் எவ்விடத்திலும்: இன்று - இல்லை.

இச்செய்யுட்குப் பிரமாணம் விரிவாமாகலின் எடுத்தெழுதப் படவில்லை. பஸ்மஜாபாலோபநிஷத்து பாரதம் சிவரகசியம் முதலியவற்றுட் காண்க. (அரு)

முக்குண சம்பந்தமான மாயாகார்யம் சிவபிரானுக்கில்லை யென்பது.

அயனுட லிராச மாகு மரியுட றமச மாகு
முயரிய சத்து வத்தி லுருத்திரற் குடல முண்டா
மியலொரு தயவின் மூல மெனுஞ்சிவ பிரானம் மாயா
மயகுண தேகந் தாங்கான் மன்னுவன் றிரமா ரங்கம்.

(அ - ரை) ஒரு - ஒப்பற்ற: மன்னுவன் - உடையவனா யிருப்பன்; சத்துவம் இராசதம் தாமதம் [இம்மூன்று சரீரங்களும் மாயா காரியமாகலின் அழியும். சிவபிரான் கொள்ளும் அங்கம் ஸ்திரமானது. ஆகலின் அது அம் முக்குண மயமன்று.

'ஸத்வோத்ரிக்தாவ்யக்தாக்யாவரண சக்தி ராவீத் | தத் ப்ரதி பிம்பம் யத்தத்தீச்வர சைதந்ய மாவீத் -- ஈசாதிஷ்டிதாவர சக்திதோ ரஜோத்ரிக்தா மஹதாக்யா விக்ஷேப சக்தி ராவீத் | தத் ப்ரதி பிம்பிதம் | யத்தத்திரண்ய கர்ப சைதந்ய மாவீத் -- ஹிரண்ய கர்பாதிஷ்டித விக்ஷேபசக்தி தஸ்த மோத்ரிக்தா அஹங்காராபிதாஸ்தூல சக்திராவீத் | தத் ப்ரதி பிம்பிதம் யத்தத் விராட்சைதந்ய மாவீத் | ஸதத்பிமாநீஸ்பஷ்டவபுஸ்ஸர்வஸ்தூல பாலகோ விஷ்ணு: ப்ரதாந புருஷோபவதி' என்ற பைங்களோபநிஷத்தும், 'ஸாத்வீகீ ருத்ரே பக்ஷே ப்ரஹ்மணீ ராஜஸீ | தாமஸீ தைத்ய பக்ஷேஷு மாயாத்ரேதாஹ்யுதாஹ்ருதா', 'கோபரூபோஹரி:', 'ஸாக்ஷாத் மாயாவிக்ரஹ தாரண' என்ற கிருஷ்ணோபநிஷத்தும், 'ஓம் தமஸே நம: ஓம் ரஜஸே நம: ஓம் ஸத்வாய நம:' என்ற அக்ஷதாபநிஷத்தும், 'மாயோபாதிகோ நாராயண ஆவீத்' என்ற திரிபாத்விபூதி மஹா நாராயணோபநிஷத்தும், 'அஸத்வ மரஜஸ்க மதமஸ்க மமாய மபயம்' என்ற நரஸிம்ஹோத் தரதாபநியுபநிஷத்தும், 'ஸ்திரை ரங்கை:' என்ற நரஸிம்ஹபூர்வதாபநியுபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

(அகூ)

சிவபிரான் திருமேனிக்கு நரைதிரை யாதிகளில்லை யென்பது.

கண்ணனாய் விண்டு மேனிக் கருமயிர் பிறந்த தன்ன
னண்ணனாய் வெள்ளை ரோம மவதரித் திட்ட தென்னிற்
றிண்ணமாஞ் சாவு மூப்புத் திரை நரை யம்மாற் கோர்முக்
கண்ணுளான் றனுவி லன்ன கரிசுகள் கேட்ட துண்டோ.

(அ - ரை) விண்டு - விட்டுணு: அன்னான் - அக்கண்ணனுடைய; அண்ணன் - தமையன்: அவன் பலராமன்; அம்மாற்குத் திரை நரை மூப்பு சாவு திண்ணம் ஆம் என்க; திண்ணம் - சத்தியமாய்: ஆம் - உண்டு; தனுவில் - சரீரத்தில்; அன்னகரிசுகள் - அந்த நரைமயிர் முதலிய குற்றங்கள்.

'திருமாலானவர் ஒன்று வெண்மையும் மற்றொன்று கருமையுமாகிய இரண்டு கேசங்களைத் தலையிலிருந்தெடுத்தார். அந்த இரண்டு கேசங்களும் தேவகி ரோகிணி யென்னும் இரண்டு யாதவகுலத்து ஸ்திரீகளின்

கர்ப்பங்களில் பிரவேசித்தன.' அந்தத்திருமாலினுடைய அவ்விரண்டுகேசங்களில் வெண்மையாயிருந்தவொன்று பலராமனாகப் பிறந்தது. இரண்டாவது கறுத்த நிறமாகச் சொல்லப்பட்ட கேசம் கேசவனாகப் பிறந்தது' என்ற பாரதம் ஆதி 214ஆவது அத்தியாயமும், 'ஸ்ரீ ஹரியானவர் தம்முடைய அங்கத்திலிருந்து வெளுத்ததும் கறுத்ததுமான இரண்டு மயிர்களை எடுத்து எறிந்தார்' என்ற பாரதம் சாந்தி 206ஆவது அத்தியாயமும், 'ஆரணங் கலைகட் கெட்டா தகன்றபூ ரணனு மாகி - காரணன் சிரத்தி லார்ந்த நவிரு ரோமத்தி னொன்று - வாரணந் தன்னிற் போட மால்கலை யாகப் பார்மேற் - காரண னவத ரித்தான் கண்ணனாய் விண்ணோர் போற்ற' (அஎ) என்ற கூரேச விஜயமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

சிவபிரான் உமாசகாயத்வாதி திருமேனிகளை மாயையிலன்றி அதாளாசிய தமது சத்தியில் எடுப்பாரென்பது.

திரிகுண சொரூப மாயை சீவருக் குடல்க ளாகி
மருவலு மவைகள் பின்னர் மறைதலு முண்டு தூய
திரிவித மான சத்தி சிவபிராற் கியல்பா மன்னோ
னுருபல வதனிற் கொள்வ னுமையொரு பாக மாகி.

(அ - ரை) திரிகுண சொரூப - சத்வ ரஜஸ் தமோகுண மயமாகிய; மருவலும் - பொருந்துதலும்; அவைகள் - அவ்வுடல்கள்; திரிவிதமான; இச்சா கிரியா ஞானமயமான; அன்னோன் - அச்சிவபிரான்; உருபல - பல திருமேனிகளை; அதனில் - அச்சத்தியில்; கொள்வன் - எடுப்பான். அன்னோன் அதனில் உமையொருபாகமாகி பலவுருக்கொள்வன் என்க. ஆதியென்பதால் நீலகண்டம் சந்திரசேகரம் முதலியனவுங் கொள்ளப்படும்.

'உமார்த்த க்ருத சேகரம் - - நிர்குணம்' என்ற பஸ்மஜாபாலோபநிஷத்தும், 'உமாஸஹாயம் - - தமஸ: பரஸ்தாத்' என்ற கைவல்யோபநிஷத்தும், 'ஸ்வாபாவிகீஜ்ஞாந பலக்ரியா ச' என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும், 'நிர்குணம் ஸத்ய சித்கநம்' என்ற கடருத்ரோபநிஷத்தும், 'சைதன்ய ரூபிணீம்' என்ற திரிபுராதாபிநியுபநிஷத்தும், 'அகண்டாநந்தமயவிக்ரஹம்', 'நித்ய சிந்மாத்ர ரூபோஸ்மி' என்ற மைத்ரேயோபநிஷத்தும், 'இச்சித்க்ஷுபிதரூபா ஸாசிச் சக்திச் சிந்மயார்ணவே' என்ற மஹோபநிஷத்தும், 'சிவா | சிச் சக்தி:' என்ற யோகசிகோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (அஅ)

சிவமூர்த்தங்களைச் சகுணமென்பதற்கும் நிர்க்குணமென்பதற்குந் தாற்பரியம் இதுவென்பது.

எங்களை யாள ஞால மின்றுகொ ளுருக்க ளெல்லாம்
மங்கல சத்தி தன்பால் வரலினுஞ் சகுணந் தானும்
பங்கம துறுத்து மாயைப் பட்டிடா வாத லாலே
முங்கலி லறிஞர் சொல்வர் மன்னுநிர்க் குணமே யென்றே

(அ-ரை) ஆள - ஆட்கொள்ள; நாலாம் இறை - சிவபிரான்; கொள்ளும் - எடுக்கிற; உருக்கள் - திருமேனிகள்; சத்திதன்பால் - அருளாகிய குணத்திலிருந்து; வரலின் - உண்டாகிறபடியால்; சகுணமும் ஆம் என்க; மாயைப்பட்டிடா - மாயையின் குணத்திலிருந்து உண்டாகா; உருக்களெல்லாம் என்பது அதற்கு எழுவாய்; மன்னு - விளங்குகிற.

‘கேவலோ நிர்குணச்ச’, ஸத்வஸ்யைஷ ப்ரவர்த்தக: ஸுநிர்மலாமிமாம் ப்ராப்திமீசாநோஜ்யோதிரவ்யய:’ என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும், ‘ஸகுண நிர்குண ஸ்வரூபம் ப்ரஹ்ம’, ‘ஸகுண நிர்குண ஸ்வரூபோபவதி’ என்ற திரிபாத் விபூதி மஹா நாராயணோபநிஷத்தும், ‘நிர்குண: கேவலோஸ்ம்யஹம்’ என்ற மைத்ரேயோபநிஷத்தும், ‘புருஷம் நிர்குணம்’ என்ற மந்த்ரிகோபநிஷத்தும், ‘நிர்குணம் ஸத்ய சித்கனம்’ என்ற வராகோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (௮௯)

உருத்திரன் சத்துவகுணமூர்த்தி, விஷ்ணு தாமதகுணமூர்த்தியென்பது.

பின்னுறு முடிவு காறும் பிஞ்ஞகன் றன்னை யேத்தித்
தன்னரு ளுயிர்க்கு வைப்பாற் சத்துவன் மூன்று மூர்த்தி
பன்னக சயனத் தானும் புத்தனாய்ப் பவித்த லானும்
மின்னனா ராசை யாலும் விட்டுணு தமசி யாவான்.

(அ-ரை) பின் உறு - கடைசியில் நடக்கும்; முடிவு காறும் - சங்காரம் வரை; வைப்பால் - வைத்தலால்; மூன்றாம் மூர்த்தி - உருத்திரன்; பிரமனும் விஷ்ணுவும் ஸ்ருஷ்டி ஸ்திதிகளைச் சதா செய்துகொண்டிருக்கிற பிரவர்த்தகர்களாகலின் சிவோபாசனையாதி நலன்களைச் செய்யப்போதிய அவகாசமில்லாதவர்கள்; உருத்திரன் சங்காரம் வரை ஒரு பிரவிருத்தியுமில்லாதவன்; ஆகலின் அவனே அந்நலன்களைச் செய்யமுடியும்; பன்னகம் - பாம்பு; பவித்தல் - பிறத்தல்; மின்னனார் - பெண்கள்மேல் வைத்த; ஆசை - மோகம்.

‘ஆஸ்திகத்வம் - - ஸாத்விகஸ்ய விசேஷத:’, ‘நித்ரா - - மோஹ - - மைதுநம் - - தாமஸஸ்ய - - ப்ரஹ்ம வாதிபி:’, ‘ஸத்யஞ்ஞாநம் ஸாத்விகம் - - திமிராந்தம் தாமஸமிதி’ என்ற சாரீரகோபநிஷத்தும், ‘கலியுகத்தின் ஆதியில் - - புத்தனாகி - - ஜனங்களை மோகிக்கச் செய்வேன்’ (இது விஷ்ணுவாக்கியம்) என்ற பாரதம் சாந்தி 348 ஆவது அத்தியாயமும், ‘கள்ளவேடத்தைக் கொண்டுபோய்ப் புரம்புக்கவாறும் கலந்தசுரரை - உள்ளம் பேதஞ் செய்திட்டுயிருண்டவாறும்’ என்ற பிரபந்தமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (௯௰)

தீதிக்குத் தாற்பரியம் இதுவென்பது.

இருவினை யின்பத் துன்பத் திடைவிழுந் திளைக்கு மாறு
பெருகிய வுயிர்க டம்மைப் பிணித்துல கதனில் வைக்குந்
திருமக னளிப்பிற் கேற்றஞ் செப்புவர் கொல்லோ வீச
னருளொரு சங்கா ரத்தி ~~னரும்~~பொரு ளறிந்த நல்லோர்,

(அ - ரை) பிணித்து - பந்தப்படுத்தி; திருமகன் - விஷ்ணுவின்; அளிப்பை - திதித்தொழிலை; பயப்பாடு பற்றித் திதி தாமதமென்பது கருத்து.

'நகரச்செய்கை காப்பது' என்ற சித்தியார் இச்செய்யுட்குப் பிரமாணம். (௧௧)

சங்காரத்துக்குத் தாற்பரியம் இதுவேயென்பது.

காரண மதனில் மீளக் காரிய வுலகை வாங்கித்
தாரண மீசன் செய்வன் சங்கார மதுவே சீவர்
மாரண முற்று மீள வருமிளைப் பொழிக்க வந்தப்
பூரணனியற்று மஃதைப் புல்லரே கோற லென்பர்.

(அ - ரை) வாங்கி - ஒடுக்கி; தாரணஞ் செய்வன் - வைப்பான்; ஒடுக்கி வைப்பான் - ஒடுக்குவான்; ஆகவே வாங்கித்தாரணஞ் செய்வன் என்பது ஒரு சொல் நீர்மைத்து என்க; மாரணம் உற்று - இறந்து; மீளவரும் - திரும்பப்பிறக்கிற; இளைப்பு - சோர்வு; அஃதை - அச்சங்காரத்தை; புல்லர் - அற்பர்; கோறல் - கொலை; என்பர் - என்று பழிப்பார்; பயப்பாடுபற்றிச் சங்காரம் சாத்துவிக மென்பது கருத்து

'அழிப் பிளைப்பாற்றல்' என்ற சித்தியார் இச் செய்யுட்குப் பிரமாணம்.

(௧௨)

திதியும் சங்காரமும் முன்னின்ன பார்வையிற் சத்துவமா மென்பது.

உலகினை யளித்த லென்னு முலகுணி செயலைப் பாரின்
சலனவாழ் வுவந்த நொய்யர் சத்துவ குணத்த தென்ப
ருலகினை யழித்த லென்னு முருத்திரன் செயலைப் பாரின்
சலனவாழ் வுவர்த்த தீரர் சத்துவ குணத்த தென்பர்.

(அ - ரை) உலகுணி - விஷ்ணுவின்; பாரின் - உலகத்திலுள்ள; சலனவாழ்வு - துக்க வாழ்க்கையை; உவந்த - விரும்பிய; நொய்யர் - எளியவர்; உவர்த்த - வெறுத்த; தீரர் - வலியவர்; மதிப்பவன் யோக்கியதை பற்றித் திதி தாமசமும் சங்காரம் சாத்துவிகமுமாமென்பது தாற்பரியம்.

கருத்தா, பயப்பாடு, மதிப்பவன் என்னு மூன்றாலும் சங்காரம் சாத்துவிகமும் திதி தாமதமு மாகிச் சொரூபத்தில் மாத்திரம் மாறிக்கொள்ளும்; அது பற்றி ஆவ தொன்றுமில்லையென விடுக்க. (௧௩)

உருத்திரன் தாமதவினை செய்யக் காரணம் இது வென்பது.

சத்துவ குணத்தன் செய்யிற் றமச வினைநன் றாகுஞ்
சத்துவ வினையி லேவத் தமகுண னல்ல னாவன்
சத்துவ குணத்துச் சம்பு தாமத குணத்து மாலைச்
சத்துவ வினையி லேவித் தமவினை செய்வான் றானே.

(அ - ரை) நன்று ஆகும் - கர்த்தாவின் சாத்விக ஞான சாமர்த்தியத்தால் நலன் தருவதாகும்; ஏவ - நியமித்தால்; தமகுணன் நல்லன் ஆவன் - தாமஸி தன்னை நியமித்தவனின் அதிகாரத்துக்கு அஞ்சி அத்தொழிலைச் செய்து தன் சொரூபம் மறையப்பெற்று உத்யோக சொரூபத்தால் நல்லவன்போலாதல் கூடும்; ஏவி - நியமித்து; தாமஸி தாமஸத் தொழிலைச் செய்ய நேர்த்தால் அது பெருங்கொடுமையாய் முடியும்; உருத்திரன் பரம சாத்துவிகி; ஆகலின் அவன் சங்காரத்தைத் தன்பாலே வைத்துக் கொள்வன் என்க.

'ஸ்ருஷ்டி ஸ்திதி லயஸ்ய காரணத்வமேகஸ்ய ரக்தப்ர ராஜ: ஸத்வ தமோகுணை:' என்ற ராமபூர்வதாபிநியுபநிஷத்தும், 'தமோ மாயாத்மகோ ருத்ர: ஸாத்விக மாயாத்மகோ விஷ்ணு ராஜஸ மாயாத்மகோ ப்ரஹ்மா' என்ற பாசுபதப்ரஹ்மோபநிஷத்தும், 'ராஜஸோ - - ப்ரஹ்மா - - ஸாத்விக: - - விஷ்ணு - - தாமஸ: - - ருத்ரச்சேதிதமோச்யதே' என்ற யோகசூடாமணியுபநிஷத்தும், 'ஸத்வரஜஸ் தமாம்ஸி' என்ற தேஜபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

(௧௪)

சங்காரமே கடவுளுண்மையைக் காட்டவல்லதென்பது.

சிட்டியி லுளது பன்மை திதியினு மதுவா மான
லட்டபி னதுதான் போக வட்டவ னொருவ னிற்பான்
கட்டற ஞான மீயுங் கபாலியே முதல்வ னென்னப்
பட்டன னடலாற் றானே படைப்பளிப் பயன்மாற் றென்றும்.

(அ - ரை) சிட்டி - சிருட்டி; பன்மை - பலதேவர்களின் தொகுதி; அது ஆம் - அப்பன்மை உளதாகும்; அட்டபின் - சங்கரித்த பிறகு; அனைத்தும் - அப்பன்மை முழுவதும்; போக - ஒடுங்கலான்; அட்டவன் - சங்காரி; நிற்பன் - மீதமிருப்பன்; கட்டு - பந்தம்; அற - நீங்க; அடலால் - சங்காரத் தொழிலால்; என் ஆம் - என்னபயனைத் தருவதாகும்: சிருஷ்டியிலும் ஸ்திதியிலும் பிரமன் அரியென்னுமிவர்களோடு வேறுதேவர்களுமிருப்பார்களாதலால் தத்தம் கர்த்தாக்களை முதல்வரெனக் காட்டும் வன்மை அத்தொழில்கட் இல்லை; சங்காரமொன்றே எல்லாத்தேவர்களையும் நாசம்பண்ணித் தன் கர்த்தாவை மீதம் வைப்பதால் அதற்கே அக்கர்த்தாவை முதல்வனெனக் காட்டும் வன்மையுண்டு.

‘தஸ்ய ப்ரக்ருதி லீநஸ்ய ய: பர: ஸ மஹேச்வர:’ என்ற நாராயணோபநிஷத்தும், சுகரஹஸ்யோபநிஷத்தும் ‘அந்தமாதி’ என்ற சிவஞானபோதமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (கரு)

சர்வகிருத்தியங்களும் அநுக்கிரகார்த்தமே யென்பது.

திதியினு ளடங்கு மேனைச் சிருட்டியு மொடுக்கந் தானுந்
திதிபுரி விண்டு தானே தேவெனிற் செப்பக் கேணீ
திதியொடு பிறவு மெல்லாந் திகழநுக் கிரகத் தாமத்
திதிமுத லதனா லாவன் திகழ்சதா சிவனி லம்மா.

(அ - ரை) ஆம் - அடங்கும்; அத்திதிமுதல் - அவ்விஷ்ணு; அதனால் அப்படியடங்குவதால்; ஆவன் - அடங்குவன். (கசு)

தெய்வதனமாகாதன இவையென்பதும் அவை விஷ்ணுவிடமே காணப்படுமென்பதும்.

வஞ்சக முறுதல் சாமம் வணக்குத லழுகை மோகந்
துஞ்சறு படைகட் காசை சொன்னசொற் புரட்ட றோல்வி
யஞ்சிட லதர்மப் போரி லன்பரைச் செலுத்த லாதி
நஞ்சிவ தேவற் கில்லை நாரணா வுயிருக் குண்டால்.

(அ - ரை) வஞ்சகம் உறுதல் - பிறர் செய்யும் மாயையிலகப்பட்டு வருந்துதல்; மோகம் - அறிவிழத்தல்; துஞ்சு அறு - கெடுதலில்லாத; படைகட்கு - ஆயுதங்களுக்கு; தோல்வி - தோற்றல; அஞ்சிடல் - நடுங்கல்; ஆதி - முதலியவை; நாராயணனை உயிரென்னவே அவனிற்கீழிட்ட பிரமன் இந்திரன் முதலிய எல்லாத்தேவர்களையுமே உயிர்களென்று சொன்னதாயிற்று.

‘மாயமான்றன்னைப் பொய்ம்மானெனவறியா தரக்கன் மாயையிலகப் பட்டு’ என்ற சித்தியாரும், ‘மாயனாய் வேடங் கொண்டே வன்சலந்தரன் கிழத்திதூய நலங்கவர்ந்தான்’ என்ற சோமேசர்முதுமொழிவெண்பாவும், ‘ஜநார்த்தனர் -- எல்லா முனிவர்களையும் வணங்கிப் பூஜித்து’ என்ற பாரதம் உத்யோகம் 83 ஆவது அத்தியாயமும், ‘பலராமரும் ஜநார்த்தனரும் -- பாண்டு புத்ரர்களைப் பார்த்தும் -- திரௌபதியைப் பார்த்தும் மிக்கதுயரமுற்றவர்களாகத் துன்பக் குரல்களை வெளியிட்டுக்கொண்டு அழுதார்கள்’ என்ற பாரதம் வனம் 119 ஆவது அத்தியாயமும் ‘நானும் மோகத்தை அடைந்தவனாகித் தேர்த்தட்டில் உட்கார்ந்தேன்’ (நானும் - கிருஷ்ணனும்) என்ற ஷை 21 ஆவது அத்தியாயமும், விஷ்ணு சக்கரம் பெற ஆசைப்பட்டதும், கிருஷ்ணன் பாரதயுத்தத்தில் படைக்கலங்களைத் தொடுவதில்லையென்று பிரதிக்ஞை செய்திருந்தும் சில சமயங்களிற் குபிதராகி அவற்றை ஏந்தி யுத்தத்திற்குப் புறப்பட்டதும், அவன் வாணனிடம் பல முறை தோற்ற

தும், துருவாசருக்குப் பயந்து அவருடைய எச்சிற் பாயஸத்தைத் தன் உடம்பெங்கும் அக்கிருஷ்ணன் தடவிக்கொண்டதும், ராமன் மறைந்திருந்து வாலியைக்கொன்றதும், கிருஷ்ணன் தருமனைப் பொய்சொல்வித்துத் துரோணருயிரைத் வாங்குவித்ததும், 'ஸர்வேதேவா பசுதாமயாபு : ஸ்வயம் தஸ்மாத் பசுபதிர் பபூவ', 'ஹேயாந் விஷ்ண்வாதி காந்ஸுராந்' என்ற சரபோபநிஷத்தும், விஷ்ண்வாதி ஸுரை ரஜஸ்ரம்' என்ற தேஜோபிந்தூபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (௧௭)

சிவபிரானொருவரே பிறவாதவரென்பது.

ஒள்ளலர் மிசையோன் விண்டுவுருத்திரன் மகவா னென்போர்
கள்ளவிந் திரியத் தோடுங் கலகவைம் பூதத் தோடுந்
தள்ளரும் பிறப்பைக் கொள்வர் சம்புவே பிறவி தன்னைக்
கொள்ளலன் விளையாட் டானுங் குணமுளாய் மறையிற் [காணே.

(அ - ரை) ஒள் அலர் மிசையோன் - பிரமன்.

'ஸர்வமிதம் ப்ரஹ்ம விஷ்ணு ருத்ரேந்த்ராஸ்தே ஸம்ப்ரஸூயந்தே ஸர்வாணி சேந்த்ரியாணி ஸஹபூதைர் நகாரணம்' என்ற அதர்வசிகோபநிஷத்தும், 'ப்ரஹ்மா விஷ்ணுச்ச ருத்ரச்சஸர்வேவா பூதஜாதய :' என்ற மஹோபநிஷத்தும், 'ஸர்வேசம் - - அஜம் சிவம்' என்ற மண்டலப்ராஹ்மணோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (௧௮)

சிவபிரானே உயிர்களுக்குப் பிறப்பிறப்புத் துன்பத்தை நீக்குவாரென்பது.

மடநலார் வயிற்றில் வாரா மரித்திடா வியல்பு வாய்ந்த
கடவுளான் சிவனே யாவன் கருணையா லவனே சீவர்க்
கடவலான் பிறப்பைச் சாவை யச்சுதன் வல்ல னாயின்
முடமுளான் றன்னைத் தூக்கி முடவனு நடக்க வல்லான்.

(அ - ரை) மடநலார் வயிற்றில் வாரா - பிறவாத; மரித்திடா - இறவாத; அடவலான் - ஒழிக்கவல்லான்.

'அஜாத இத்யேவம் கச்சித் பீரு: ப்ரதிபத்யதே | ருத்ரயத்தே தக்ஷிணம் முகம் தேநமாம் பாஹி நித்யம்' என்ற சுவேதாசுவத்ரோபநிஷத்தும், 'உடைந்த மரக்கலம் பிறிதொருமரக்கலத்தைக் கரையடைவிக்கமாட்டாது; அதுபோலப் பிறந்திறந்துழலுந்தேவர் அவ்வாறுழலு மெம்மனோர்க்குச் சரணாகமாட்டார்' என்ற சதுர்வேத தாற்பரிய சங்கிரகமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (௧௯)

விஷ்ணு வீழ்ந்த தேவகி கோசலை முதலியோரின் கருவினுள்ளேயே சகலவுயிர்களும் விழாமையால் கருப்பத்துள் விழுந்தவுயிர்களைக் கடவுளுங் கருப்பத்துள் விழுந்தே யெடுப்பரென்றல் பொருந்தா தென்பது.

கூவிலி லாழுஞ் சேயைக் குதித்தெடுத் தாளுந் தாய்போற்
பாவம துடையார் வீழ்கூற் படுகுழி தனின்பால் வீழ்ந்தப்
பாவரை யெடுப்ப னென்றாய் பண்டவன் வீழ்ந்து நொந்த
தேவகி கருவுட் டானோ செறிவன வுயிர்க ளெல்லாம்.

(அ - ரை) கூவலில் - கிணற்றில்; ஆழும் - விழுந்த; சேயை - குழந்தையை; பண்டு - முன்காலத்தில்; அவன் - அம்மாலோன்; தேவகி - கண்ணன்தாய்; இங்கு உபலக்கணம்; செறிவன - புகுந்து அழுந்தவன. (௬00)

பிறப்பனவெல்லாம் உயிர்களே யென்பது.

எவனுரு நான்கு தோற்றத் தெழுவகைப் பிறப்பின் பாலா
மவலவெண் பத்து நானூ றுயிர யோனி புக்குப்
பவமுறு முயிரே யன்னோன் பகர்பரப் பிரம மல்லன்
சிவனல தாரே யாண்டுச் செறிந்துருச் சமைத லெயார்.

(அ - ரை) உரு சரீரம்; நான்கு தோற்றம் - கருப்பை முட்டை விதை வேர்வை; எழுவகைப் பிறப்பின் பாலாம் - ஊர்வன மனிதர் நீர்வாழ்வன விலங்கு பறவை தேவர் தாவரம் என்பவற்றைச் சேர்ந்த; அவலம் - துன்பம்; பவமுறும் - பிறக்கும்; எவனுருப் பவமுறும் அன்னோன் உயிரே, பரப்பிரமம் அல்லன் என்க. அன்னோன் - அந்தச் சரீரத்தையுடையவன்; பகர் - வேதத்திற் சொல்லப்பட்ட; ஆண்டு - அந்தயோனிகளில்; செறிந்து - புகுந்து; உருச் சமைதல் - சரீரம் உண்டாவதை; எயார் - பொருந்தார்.

'அண்டஜம் ஸ்வேதஜ முத்பிஜ்ஜம் ஜராயுஜம் யத் கிம் சைதத் ப்ராணி ஸ்தாவர ஜங்கமம் மனுஷ்ய மஜ்ஜாத்' என்ற பஹ்வ்ருசோபநிஷத்தும், 'உரைசேரும் எண்பத்து நான்கு நூறாயிரமாம் யோனிபேதம் நிரைசேரப்படைத்து' என்ற தேவாரமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (௬0௧)

கடவுள் கருவுள் உருவங்கொள்ளாமையால் அவருடைய வியாபகத்துவங் கெடாதென்பது.

கருவினுளுருவங்கொள்ளான் கடவுளென் றுரைக்கினன்னோன்
சருவவி யாபி யாதல் சரதமன் றென்று யாருங்
கருவினு ளில்லை யென்னார் கடவுளை கருவுட் கொள்ளுஞ்
சருவவி யாபி தேகஞ் சமைவதெவ் வண்ண மாங்கே.

(அ - ரை) சரதம் அன்று - உண்மையாகாது; சமைவது - உண்டாவது; எவ்வண்ணம் - எப்படி; ஆங்கே - அக்கருவுள். (௬0௨)

கடவுள் பிறந்தாலவரோடு உயிரிடை வேற்றுமை காணமுடியாதென்பது.

கருவதி லுயிரே சேருங் காரணங் கரும மாகு
மொருசில ரதனிற் றேவு முறுமது சுயேச்சை யென்ப
ருருவொடு பிறந்த பின்ன ருயிரிது தேவிஃ தென்றவ்
விருவரி னியல்பை வெவ்வே றெப்படி யறிதல் கூடும்.

(அ - ரை) தேவும் - கடவுளும் : உறும் - பொருந்தும் ; உருவொடு பிறந்த பின்னர் - கருவிலிருந்த சரீரத்தோடு வெளிப்பட்ட பிறகு ; இருவரின் . உயிர் கடவுள் என்னும் இருபொருள்களினுடைய ; எப்படி அறிதல் கூடும் - ஒருபடியாலும் அறியமுடியாது என்றபடி.

'இருவினை யின்பத் துன்பத் திவ்வுயிர் பிறந்திறந்து வருவது போவதாகும்' என்ற சித்தியாரும், 'நால்வகையோனியுள் ஒருயோனி வாய்ப்பட்டுப் பிறப்பன யாவை அவையெல்லாஞ் சீவவர்க்கம். அவ்வாறு பிறத்தலில்லது யாது அது பதிப்பொருளென்று மிது வொன்றே எனச் செயல்களான் வேற்றுமையறிய வாராத அவ்விரண்டற்குந் தம்முள் வேற்றுமையறிய நிற்பதாகலின் - -' என்ற சித்தியார்ப்பொழிப்பும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.
(௧0௬)

அற்புதங்கள் செய்வதனாலேயே ஒருவர் கடவுளென்று சொல்லப் படமாட்டாரென்பது.

உற்பவ மெடுத்த தேவ னெங்குதன் பரத்து வத்தை
யற்புத வினைக ளாற்றி யனைவர்க்குந் தெரிப்பா னென்பாய்
பற்பல வினைக ளந்தப் படிபல முனிவர் செய்வார்
தற்பர னிவனென் றன்னோர் தமையெவண் பிரித்துக்
[காண்பாய்.

(அ - ரை) அன்னோர் தமை - அந்தத் தேவனையும் அந்த முனிவர்களையும் ; எவண் - எப்படி ?
(௧0௭)

அயோனிசங்களாகிய சிலவுயிர்களின் அடிமைத்திறத்தால் அவற்றைக் கடவுளின் வேறெனப் பிரிக்கலாமென்பது.

எருக்கணி யீசன் போல விவ்விடைச் சீவர் சில்லோர்
கருக்குழி புகாமல் வந்தார் காட்டவர் பேத மென்னிற்
றிருக்கிள ரவன்பா லன்பார் சீவருட் சிலர்க்கே யுண்டவ்
வுருக்கொள லவன்மு னன்னோ ரொடுங்கலாற் பேதங் காணே.

(அ - ரை) இவ்விடை - இவ்வுலகில் ; அவர் பேதம் - அப்படிக் கருக்குழி புகாமல் வந்த சீவர்க்கும் கடவுளுக்கும் உள்ள பேதத்தை ; திருக்

கிளர் அவன்பால் - அந்தச் சிவபிரானிடத்து; அன்பு ஆர் - பக்தி பொருந்திய; அவன் முன் - அந்தச் சிவபிரானுடைய சந்நிதானத்தில்; அன்னோர் - கருக்குழி புகாமல் வந்த அச்சிவர்; ஒல்கலால் - தம்வலிகுன்றலால்; நரசிம்ம மூர்த்தி அயோனிஜர்; ஆயினும் அவ்வலி சரபமூர்த்திமுன் குன்றியது; சரபமூர்த்தியாய் வந்தவர் சிவபிரானே. (க௦௩)

திருமேனி தாங்கி வந்த கடவுளிடம் நிந்தைபோல் தோன்றும் லீலைகளும் அவரின் பிறவாமை யொன்றனையே மதிப்படையும் என்பது.

யோனியி லுதித்த பின்மா லுஞற்றிடு செயல்க ளுள்ளே
யீனமி திஃதா மென்று மேற்றமி திஃதா மென்று
மானவ னவற்றை யெல்லாம் வகுக்குமா றுளதோ நேரே
யீனர னுறவி னன்னோ னிலீலைகட் கிகழ்ச்சி யின்றே.

(அ - ரை) மால் உதித்தபின் உஞற்றிடு என்க; உதித்த பின் - பிறந்ததிலிருந்து; உஞற்றிடு - செய்த; இது இஃது ஈனம் ஆம். இது இஃது ஏற்றம் ஆம் என்க, இது இஃது - இன்ன இன்னசெயல்; ஈனம் - மனிதத்தன்மை; ஏற்றம் - தெய்வத்தன்மை; மானவன் - மனிதன்; அவற்றை யெல்லாம் - அம்மால் செத்ததவரைச் செய்தஎல்லாச் செயல்களையும் ஒன்றும் விடாமல்; வகுக்கும் ஆறு உளதோ - பிரித்துக் காணும் வழி உண்டா? நேரே - கருப்பவாச மின்றி; ஈன் - இவ்வுலகில்; உறவின் - திருமேனிதாங்கி வெளிப்படுவதால்; அன்னோன் - அவ்வரனுடைய; இலீலைகட்கு - மனிதச் செயல்போற் றோன்றுஞ் செயல்களுக்கு; இகழ்ச்சி - நிந்தை; இன்று - இல்லை. (க௦௪)

காரண காரியக்கிரமங்களை யறியாதவரே கடவுளுக்குப் பிறப்புண்டென்பா ரென்பது.

காரண வீசன் யாண்டுங் கருப்புகா மேன்மை தன்னைக்
காரண மின்றி யாருங் கருவினுட் புகுவா ரென்றுங்
காரண மவாவே யாகக் கடவுளுங் குறுவ னென்றுங்
காரண வழுக்கள் கூறுங் கற்றிலா ரறிவார் கொல்லோ.

(அ - ரை) அவா - இச்சை; வழுக்கள் - பிழைகள்; கற்றிலார் - படியாதவர்; காரணமின்றியாருங் கருவினுட் புகுவர் (Birth is accidental) என்பர் நாஸ்திகராதியோர்; விஷ்ணு இச்சைவசத்தாற் பிறப்பரென்பார் வைஷ்ணவராதியோர். (க௦௭)

சிவபிரான் சாகாதவரென்பது.

சூக்கும வுடம்பின் பாலாய்த் தோன்றுமித் தூல தேகஞ்
சூக்கும வுடம்பை விட்டித் தூலநீங் கிடலே சாவாஞ்
சூக்கும வுடம்பு மாயை யாதலாற் சோமன் றோயான்
சூக்கும தூல மாமத் துவயமு மதனாற் சாகான்.

(அ - ரை) சூக்கும வுடம்பும் மாயை - சூக்கும சரீரமுந்தூல சரீரம்போல் மாயாகாரியம்; சோமன் அத்துவயமும் தோயான் என்க. சோமன் - சிவபிரான்; தோயான் - மேற்கொள்ளமாட்டான்; அத்துவயமும் - அவ்விரண்டையும்; அதனால் - அப்படித்தோயாமையாலே. (கoஅ)

விஷ்ணு பிறந்தது அவரிச்சையாலென்பதற்குப் பொருளிதுவென்பது.

தீவினை தனக்குத் தந்த சென்மமெய்ப் பயனு மின்றிப்
போவது விரும்பா விண்டு புராரிபாற் பணிந்து தன்ம
தாவன முலகிற் செய்யுஞ் சதுரினை வேட்டா னம்மால்
மேவிடு பிறப்பின் வித்தா விளம்பவாய்ப் பொருடா னஃதே.

(அ - ரை) தன்மதாவனம் - தர்மஸம்ஸ்தாபனம்; சதுரினை - வன்மையை; வேட்டான் - வேண்டி நின்றான்; மேவிடு - கொண்ட; வித்து ஆ - காரணமாக; விளம்பு - சொல்லப்படுகிற; அவா - இச்சைக்கு; பொருள் - அருத்தம்; அஃதே - அவ்வேண்டி நின்றதே.

'நாராயணஸ்ய ஸ்வேச்சாநு சாரேணைநமேவேஷாஜாயதே', 'நாராயணஸ்யேச்சாவ சாந்நிமேவேஷாஜாயதே' என்ற திரிபாத்விபூதி மஹாநாராயணோபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம். (கoக)

தசாவதாரங்களுட் சில தண்டிக்கப்பட்டபடியால் அப்பத்தவதாரங்களும் பிறவும் கர்மவசமேயாமென்பது.

மாமியி னுயிரை வாங்கி மாமனாற் சபிக்கப் பட்டுப்
பூமிமா துதித்த போது புராரிகைப் பட்டு நைந்தான்
வாமன மச்சங் கூர்மம் வராகமா மடங்க றன்னிற்
காமமோ வதனா லந்தக் கார்வணற் கவதா ரங்கள்.

(அ - ரை) மாமி - பிருகுமகரிஷியின் மனைவி, கியாதி யென்ற பேருடையவள், ஒரு சமயம் இலக்குமி அவள் வயிற்றிற் பிறந்தாள்; மாமன் - பிருகுமகரிஷி; மடங்கல் - நரசிங்கம்; தன்னில் என்பதைத் தனித்தனிக் கூட்டுக; காமமோ - இச்சையோ; கார்வணற்கு - விஷ்ணுவுக்கு.

[illegible] காஞ்சிப்புராணம் அரிசாபபயந்தீர்த்ததானப் படலம் 5, 6, 7, 8 ஆவது செய்யுட்களும், 'யோ மத்ஸ்ய [illegible]வாக ஸிம்ஹார் விஷ்ணும் க்ரமந்தம்

வாமந மாதி விஷ்ணும் | விவிக்லபம் பீடமாநம் - - தஸ்மை ருத்ராய நமோ அஸ்து' என்ற சரபோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (௧௧0)

கடவுளுக்குக் கர்ப்பவாசம் வீண்காலப்போக்கென்பது.

வெப்புறு கருப்பை தன்னுள் விட்டுணு கிடந்த காலை
யப்பனை யன்னையே தானை யயலவர் தாமே கண்ட
தெப்பய னெடுமால் சர்ப்பத் திழிந்திட லிச்சை யென்று
யிப்படி. விருதா வேலை யியற்றிடா னெங்க ளீசன்.

(அ - ரை) அனை - தாய்; தான் - கருப்பத்துட்கிடந்தமால்; அயலவர் - பிறர்; இழிந்திடல் - பிரவேசித்தல்; விருதா - வீண்.

'பன்னிரு திங்கள் வயிற்றிற் கொண்ட வப்பாங்கினால்' என்ற பிரபந்தமும், 'பயனில் சொற் பாராட்டு வானை மகனெனல் மக்கட்பதடியெனல்' என்ற குறளும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (௧௧௧)

விஷ்ணுவின் அவதார சரீரங்கள் பெற்றோரின் சுக்கிலசோணித பரிணாமங்களே யாமென்பது.

கருவுட லனைத்தும் பெற்றோர் கழிமல பரிணா மங்கள்
மருவலி னுடல்மா லாங்கே மற்றது மலமா மன்னோற்
குருபிறி தாமங் கென்னி னொழிகுவர் தூணைப் பெற்றோர்
தருநிழ லுறலாஞ் சேயாய்த் தமர்க்குமா லீசன் போல.

(அ - ரை) கரு உடல் - கருப்பத்திலுண்டாகிற சரீரம்; கழி - விடுகிற; மலபரிணாமங்கள் - சுக்கிலசோணிதங்களாகிய அசுத்த பதார்த்தங்களின் காரியங்கள்; மால் ஆங்கே உடல் மருவலின் என்க. மருவலின் - அடைவதால்; ஆங்கே - அக்கருப்பத்துள்; அதும் - அம்மாலினுடம்பும்; அன்னோற்கு - அம்மாலுக்கு; உரு - உடம்பு; பிறிது ஆம் - அம்மலபரிணாமங்களல்லாமல் அப்பிராகிருதமாகும்; அங்கு - அக்கருப்பத்துள்; பெற்றோர் தூணைப் ஒழிகுவர் என்க. பெற்றோர் - தந்தைதாயர்; தூணைப் ஒழிகுவர் - நரசிம்மம் வந்ததூணை நரசிம்மத்துக்குத் தந்தையுந் தாயுமாகாதவாறு ராமன் முதலியோருக்குத் தசரதன் கோசலை யாதியோருந் தந்தை தாயராகமாட்டார்; ஈசன்போல் மால் தமர்க்கு தருநிழல் சேய் ஆய் உறலாம் என்க; ஈசன் - சிவபிரான்; மால் - விஷ்ணு; தமர்க்கு - தம் அன்பர்பொருட்டு; தரு - மரம்; சேய் - குழந்தை; ஆய் - வடிவெடுத்து; அன்பர் கண்காணக் குழந்தையாய் மரநிழல் குளக்கரை புஷ்பமத்தி முதலிய இடங்களிற் கிடத்தல்.

'ஜாதம் ம்ருதமிதம் தேஹம் மாதா பித்ரு மலாத்மகம்', 'மாத்ருஸூதக ஸம்பந்தம் ஸூதகே ஸஹஜாயதே || ம்ருத்ஸூதகஜம் தேஹம் ஸ்ப்ருஷ்ட்வா ஸ்நாநம் விதீயதே' என்ற மைத்ரேயோபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம். (௧௧௨)

அப்பிராகிருத சரீரம் நிழல்செய்யா தென்பது.

திருநிழ லாதி தன்னிற் சங்கர னருளாற் சேயி
னுருவது கொண்ட சீரை யுணர்குவ தெவ்வா றென்னிற்
கருவரு முடல்போ லன்றிக் காண்டகு மச்சேய் மேனி
யிருளுரு நிழலைச் செய்யா வியல்பினா லறிய லாமால்.

(அ - ரை) கருவரு - கருவிலிருந்து வருகிற ; காண்டகு - காணத்தக்க.

‘சடைமுடியும் வெண்ணீறுந் தாழ்வடமு மரவுரியு - முடையவளாய்த் தவம்புரிந்து முருநிழற்ற விலையென்பார் - கடைபயின்ற மடமுடையீர் கரிசு படு மாயையினும் - வடிவதுவோ வானந்த வடிவன்றோ விதுவென்பார்’ என்ற காஞ்சிப்புராணம் இச்செய்யுட்குப் பிரமாணம். (கக௩)

விஷ்ணு தந்தைகருவினுங் கிடந்தாரென்பது.

தாய்தலை துணித்தான் சாம தக்கினி தந்தை சொல்லா
லெய்வறு மனையை விட்டா னிராகவன் றானு மஃதாற்
காய்வினை யவரைத் தந்தை கருவினும் புகுத்திற் றென்றஃ
தாய்பவ ரறிவார் யாரே யாற்குமக் குறையுண் டென்பார்.

(அ - ரை) துணித்தான் - வெட்டினான் ; சாமதக்கினி - பரசுராமர் ; தந்தைசொல்லால் - பிதுர்வாக்கிய பரிபாலனத்தால் ; எய்வு அறு - நிகரற்ற ; மனையை - வீட்டை, மனைவியை ; இராகவன் - கோதண்டராமர் ; அஃதால் - அவ்விதமான பிதுர்வாக்கிய பரிபாலனத்தால் ; அவரை - அவ்விரண்டு ராமர்களையும் ; அஃது - அச்சரிதங்களை ; அக்குறை - அவ்வாறு தந்தை கருவினுட் டங்குதலாகிய இழிவு.

காஞ்சிப்புராணம் இரேணுகேசப்படலம் 9, 11, 13 ஆவது செய்யுட்களும், வீராகவேசப்படலம் 7, 8, 9 ஆவது செய்யுட்களும், ‘மணிவாயிடை முத்தர் தருதலு முன்றன் றாதையைப் போலும் வடிவுகண்டு கொண்டு உள்ளம் உள் குளிர’ என்ற பிரபந்தமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (ககச)

கடவுள் இச்சையாற் பிறந்தாராயின் தாய்க்குப் பிரசவம் சுகமாயிருந்தல் வேண்டும். உயிர்த்தாய்கட்கெல்லாஞ் சுகப்பிரசவங் கிடையாது. தேவகி கோசலை முதலியோர் உயிர்களே. அவர்கட்குப் பிரசவ வேதனையைத் தந்த விஷ்ணுவின் கர்ப்பவாசமும் கர்மவசமேயென்பது.

சங்கட மின்றிச் சூலைத் தாங்கலு முயிர்த்த றானு
மிங்கெவ டனக்கு மாகா யிருவினை யுயிரே யன்னாள்
மங்கல வுமைக்கே லீலை யாமவை யவாவால் மாலோன்
தங்கிய தகட்டிற் பாரிற் சனித்தது துயர்தாய்க் கன்றோ.

(அ - ரை) சங்கடம் - வேதனை; சூல் - கருப்பம்; உயிர்த்தல் - பிரசவித்தல்; இங்கு - இவ்வுலகில்; எவள்தனக்கும் - எவளுக்கும்; ஆகா - முடியா; அன்னாள் - அவன்; அவை - தாங்கலும் உயிர்த்தலும்; அவை உமைக்கே லீலை ஆம் என்க. அவளொருத்தியே தெய்வத்தாயாகலான் என்பது. அகட்டில் - வயிற்றில்; பாரில் - பூமியில்; சனித்தது - பிறந்தது; துயர் - துன்பந்தருவது; மாலோன் அவாவால் அகட்டில் தங்கியது பாரிற் சனித்தது (ஆகியவை) தாய்க்குத் துயர் அன்றோ என்க. (கக௩)

விஷ்ணு சாவரென்பது.

கோசலை யுதரம் பாய்ந்தோன் குதித்தொருநதியிற்செத்தான்
றேசறு கருவாய் வந்து தேவகி யுதரம் பாய்ந்தோ
னீசன தம்பாற் செத்தா னீதியோ வவர்தே வென்ற
ஞசமு முதிப்பு மில்லா நம்பனை வணங்க னன்றே.

(அ - ரை) கோசலை உதரம் பாய்ந்தோன் - இராமர்; நதி - சரயூ வென்னும் ஆறு; தேசு அறு - - பாய்ந்தோன் - கிருஷ்ணன்; நீசனது - ஜரனென்னும் பெயருள்ள வேடனுடைய; நம்பனை - சிவபிரானை.

'எந்தத் தீர்த்தத்தில் ராமர் தேகத்தைவிட்டு - - ஸ்வர்க்கத்தை அடைந்தாரோ (அந்த) ஸரயூநதி' என்ற பாரதம் வனம் 323 ஆவது பக்கமும், 'அந்த ராகவரே மாண்டார்' 'தசரத புத்திரரான ஸ்ரீராமரும் மாண்டார்', என்ற துரோணம் 59 ஆவது அத்தியாயமும், 'பிறகு, பலராமர் கிருஷ்ணர் இருவர்களுடைய சரீரங்களையும் பார்த்து - - எரிக்கும்படி செய்தான்' என்ற மௌஸலம் 8 ஆவது அத்தியாயமும், 'ஸ்ரீகிருஷ்ணர் பலராமருடன் சரீரத்தை விட்டுவிட்டுப் பரமபதம் சென்றுவிட்டார்' என்ற 9 ஆவது அத்தியாயமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (கக௪)

கருப்பத்திலிருக்குந் துழவியுஞ் சிவபிரானைத் தியானித்தே பிறவியை நீக்கிக்கொள்ள விரும்பு மென்பது.

பசுபதி நன்மா தேவ னுருத்திரன் பருக்க னாதி
சசிதா னுமஞ் செப்பித் தவிர்ப்பனென் பிறப்பை யென்று
சுசியறு கருவி னுள்ளுந் துணியுமே சிவ னென்னி
னுசிதம தாமோ வேனோ ருயிர்ப்பிறப் பறுப்ப ரென்றல்.

(அ - ரை) ஆதி - முதலிய; சசிதரன் - சிவபிரானுடைய; உசிதமது ஆமோ - தகுமோ; ஏனோர் - மற்றைத் தேவர்கள்; உயிர்ப்பிறப்பு - உயிர்களின் பிறவித்துயரை.

'யதியோர்யாம் ப்ரமுச்யேயம் ப்ரபத்யே பரமேச்வரம் பர்சம் பசுபதிம் ருத்ரம் மஹாதேவம் ஜகத்குரும்' என்ற கர்போபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம். (௧௧௭)

மாயையிலகப்பட்டு உழலுபவர் விஷ்ணுவாகலின் ஞானம் சிவோபாஸனையாலேயே வாய்ப்பால தென்பது.

பொய்யுரு மனைவி தன்னைப் பொய்யுருப் பிதாவைச் சென்னி
வெய்யவ ரறுத்த போது வெங்களத் திராமன் கண்ண
னையகோ வென்று தேம்பி யழுதவர் மாயத் துற்றார்
துய்யதொ ரறிவு வேட்டோர் தொழுதிட சிவனற் றாளே.

(அ - ரை) பொய்யுரு மனைவிதன்னை - மாயாசீதையை; பொய்யுருப் பிதாவை - மாயாவசுதேவனை; சென்னி - தலையில்; வெய்யவர் - இந்திரஜித்தும் சால்வராஜனும்; வெம்களத்து - போர்க்களத்தில்; அவர் - அவ்வெய்யவருடைய; மாயத்து உற்றார் - மாயையில் அகப்பட்டார்; துய்யதொரறிவு - திவ்வியஞானத்தை; வேட்டோர் - விரும்புபவர் (அதனைப் பெறுதற்கு); தொழுதிட - தொழுவாராக.

கம்பராமாயணம் மாயாசீதைப்படலமும், பாரதம் வனம் 20, 21, 22ஆவது அத்தியாயங்களும், 'அதிமோஹ கரீ மாயா மம விஷ்ணோச்ச ஸுவ்ரத | தஸ்ய பாதாம்புஜத்யாநாத் துஸ்தரா ஸுதராபவேத்' என்ற சரபோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (௧௧௮)

இராமநாம சரித்திரம் இது வென்பது.

தராதல மதிக்க வாழ்ந்த தசரதன் வசுதே வன்சீர்ப்
பிராமண சமதங் கிப்பேர்ப் பெரியனுஞ் சைவ மேலோ
ரராவுமா நாமத் தந்த மாகிய விராவை மாவை
விராவியே விராமா வென்றார் விளங்குதம் புதல்வர் தம்மை.

(அ - ரை) தராதலம் - பூமி; சமசங்கிப்பேர்ப்பெரியன் - ஜமதக்கினி முனிவர்; அந்தம் - கடைசியெழுத்து; விராவி - சேர்த்து; என்றார் - என்று பெயரிட்டழைத்தனர்; அந்த ராமர்களே ரகுராமன், பலராமன், பரசுராமன் என்பவர்கள்.

'சிவோமா ராம மந்த்ரோயம் வஸ்வர்ணஸ்தவஸுப்ரத:' என்ற ராமரஹஸ்யோபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம். (௧௧௯)

இதுவுமது.

கோசலை யீன்ற சேயே குவலயத் திராம னென்னி
னாசக லந்த ராம மவன்பினை பரவ வேண்டுந்
தேசுறு பரசி ராமன் றிகழ்ந்தன னவற்கு முன்னே
பேசிடு மிராம நாமம் பிஞ்ஞகற் கென்று வேதம்.

(அ - ரை) ஆசு அகல் - குற்றமற்ற; அவன் பினை - அவன் பிறந்ததற்குப் பின்னுள்ள காலத்திலேயே; திகழ்ந்தனன் - இருந்தான்; அவற்கு முன்னே - அந்தக் கோசலை ராமன் பிறந்ததற்கு முன்னுள்ள காலத்திலேயே; பிஞ்ஞகற்கு - சிவபிரானுக்கு.

'ராமம் த்ரிநேத்ரம் ஸோமார்த தாரிணம் சூலிநம்பரம் | பஸ்மோத்தூளித ஸர்வாங்கம் கபர்திந முபாஸ்மஹே' என்ற ராமரஹஸ்யோபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம். (௧௨௦)

இராமர் சிவோபாசனை செய்தாரென்பது.

சீமதோர் நீல கண்டன் சிறியனேற் கருண்மா தேவன்
தோமறு பிரபு வென்று துதித்தலோ டிராமே சத்தி
லோமொழி வாழ்வைப் பூசை யுஞற்றினன் சீதை நாத
னாமவி லவற்குச் சம்பு நற்குல தெய்வ மன்றோ.

(அ - ரை) தோம் அறு - குற்றமற்ற; இராமேசம் - இராமேசுவரம்; ஓம் மொழிவாழ்வை - சிவபிரானை; உஞற்றினன் - செய்தான்; நாம வில்லவற்கு - அந்த ராமருக்கு.

'ஸ்ரீமதோ நீலகண்டஸ்ய க்ருத்யம் ஹித ரதிக்ரமம்', 'அத்ரபூர்வம் மஹாதேவ: ப்ரஸாத மகரோத் ப்ரபு:', 'வாஸவேந மஹேந்த்ரேண ப்ரஹ்மணாவருணேநச | மஹாதேவ ப்ரஸாதாச்ச பித்ரா மம ஸமாகம:' என்ற வான்மீகராமாயணமும், 'பக்த்யாநம்ரதநோ விஷ்ணு ப்ரஸாதமகரோத் விபு:' என்ற சரபோபநிஷத்தும், 'ப்ரஸாதாத்தஸ்யேச்வர' என்ற யோகசிகோபநிஷத்தும், 'சிவபூஜாரதச்சைவ' என்ற ராமஸஹஸ்ரநாமமும், 'தக்ஷ ஹஸ்த ஸதாபூஜ்ய சிவலிங்க நிவிஷ்டதீ:' என்ற அநந்த பத்மநாபஸ்வாமி அஷ்டோத்தரமும், தேவாரத் திருவிராமேச்சுரப்பதிகமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (௧௨௧)

விஷ்ணுவைப் பரம்பொருளென்று வேதவிரோதம் பேசிய வியாசர் தண்டிக்கப்பட்டாரென்பது.

வாதரா யணனோர் காலை வன்கலிக் கஞ்சிக் காசி
போதரல் செய்து டாங்கே புத்திதான் கெட்டு மாலை
நாதனென் றுனை யிட்டா னந்தியாற் றானு மானு
னேதம தானைச் சொற்று மெங்கணுங் கலிக்குத் தப்பார்.

(அ - ரை) வாதராயணன் - வியாசன்; கலிக்கு - கலியுகம் பிறக்கப் போவதைக்கண்டு; போதரல் செய்தும் - போயும்; ஆங்கே - அக்காசியில்; என்று - என்று கூறி; ஆணையிட்டான் - சத்தியம் பண்ணினான்; தானும் ஆனான் - தானுஞ்சபிக்கவும்பட்டான்; அரனை ஏதமது சொற்றார் என்க; சிவபிரானுக்கே யுரிய பரத்துவத்தை ஏனையோர்பாற் சார்த்துவது சிவபிரானைப் பழிப்பதேயாகும்; அரனை - சிவபிரானுக்கு; ஏதமது - பரத்துவஹானியாகிய குற்றத்தை; சொற்றார் - சொன்னவர்; கலிக்கு - கலிபீடைக்கு.

காஞ்சிப் புராணம் சார்ந்தாசயப்படலம் இச் செய்யுட்குப் பிரமாணம்.

(௧௨௨)

சிவபிரானுடைய அடிக்கீழயும் முடியையும் அரியும் பிரமனும் தேடி அலுத்தன ரென்பது.

அடியினை யறியப் பன்றி யச்சுதக் கடவு ளானான்
முடியினை யறிய வன்ன முளரியோ னானா னாற்
கடிவிரி கொன்றை வேணிக் கண்ணுதல் கீழு மேலும்
வடிவுறு நெருப்பா யண்ணா மலையென வளர்ந்தா னங்கே.

(அ - ரை) முளரியோன் - பிரமன்; கடி - வாசனை; வடிவு - அழகு; அண்ணா - எட்டாத; ஆங்கே - அப்பிரமவிட்டுணுக்கள் சண்டையிட்டவிடத்தில்.

'ப்ரஹ்மாவை ஹம்ஸோ பூத்வா, சிரோங்வேஷ்டவ்ய: ஸஹஸ்ரம் ஸமா ஆஸ ப்ரஹ்மா ஆஹம் சிரோஜாநே த்வமேவ மாதாஸி, த்வமேவ பிதாஸி, த்வமேவ ப்ராதாஸி, த்வமேவ த்ருஷ்டாஸி, ச்ரோதாஸி, கர்த்தாஸி, காரயிதாஸி, ஜ்யேஷ்டோஸி, ச்ரேஷ்டோஸி, யஏவம்வேதா, சிவஸாயுஜ்ய மாப்நோதி சிவஸாயுஜ்யமாப்நோதி', 'விஷ்ணுர்வை வாராஹம் ரூபமாஸ்தாய, பூமிங் விதாரயங் ஸஹஸ்ரம்ஸமா ஆஸங், பாதாங்வேஷண பரோபூத்வா த்வமேவ மாதாஸி, த்வமேவ பிதாஸி. த்வமேவ ப்ராதாஸி, த்வமேவ ஜ்யேஷ்டோஸி, த்வமேவச்ரேஷ்டோஸி, யஏவம் மஹிமாநம் வேதா த்ருஷ்டாபவதி, விஜ்ஞாதாபவதி, கர்த்தாபவதி, காரயிதாபவதி, யஏவம் வேதா சிவஸாயுஜ்யமாப்நோதி சிவஸாயுஜ்யமாப்நோதி' என்ற ருக்வேதமும், 'யத்பாதாம் போருஹத்வந்த்வம் ம்ருக்யதே விஷ்ணுநாஸஹ' என்ற சரபோபநிஷத்தும், 'ப்ரஹ்மா விஷ்ணு ரஜஸா பத்தவைரௌமத்யேதயோங் த்ருச்யதி ஜாதவேதா: ஸ்தாணுருத்ரஸ்திஷ்டத் புவநஸ்யகோப்தா | த்ருஷ்ட்வாஸ்தாணுமுபரம்ய யுத்தம் ப்ரதஸ்தநர்தாரௌ நித்ருக்ஷு: | வராஹெள விஷ்ணுர்ணிம மஜ்ஜ பூமௌ ப்ரஹ்மோத்ய பாத பூமேர் திவ மாசுக்ருத்ர:' என்ற பாஸ்கரஸம்ஹிதையும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

(௧௨௩)

திருப்பதி முருகன் கோயிலென்பது.

வேங்கட ராம னென்போன் வேங்கட மலையாய் நின்றோன்
வேங்கட சுப்ப னென்போன் வேங்கட மலைமே னின்றோன்
வேங்கட மலையாய் நின்ற வேலனைச் சிரமேற் றாங்க
வேங்கட ராமன் செய்த விழுத்தவஞ் செப்பற் பாற்றோ.

(அ - ரை) சுப்பன் - சுப்பிரமணியர்; விழுத்தவம் - சிறந்ததவம்.

‘சிலாதர முனிவருடைய திருக்குமாரராகிய நந்திபகவான் தன்னைச் சிவபெருமான் வாகனமாக்கிக்கொண்டதுபோல ஆஸனமாகவும் கொண்டெழுந்தருளியிருத்தற்குச் சிந்தித்துத் தவங்கிடந்த ஸ்ரீசைலம் என்னும் மல்லிகார்ஜுன பர்வதமாகத் திருவுருக்கொண்டு ஸ்ரீசிவபெருமானைத் தமது முடிமீது தாங்கும்பேறெய்தினர். அவரைத் திரிபுரதகனகாலத்தி லுபாசித்து அவருருப் பெற்றுச் சிவபெருமானைத் தாங்கினோ மாகையால் அவருக்கும் நமக்கும் ஸம்பந்தமுடைமை காரணமாக அவர் பருப்பதமாய் நின்று சிவபெருமானைத் தாங்குவதுபோல நாமுமவரைப் பருப்பதவடிவாய் நின்று தாங்கவேண்டுமென்று விஷ்ணுவானவர் சிந்தித்துத் தவஞ் செய்கையில், சிவகுருவாகிய குமாரக் கடவுள் தோன்றி அவருக்கு வேங்கடமென்னும் மலையுருவந் தந்து அம்மலையினுச்சியிற் றாமெழுந்தருளித் தம்மைத்தாங்கும்படியான பெரும்பாக்கியத்தை அவருக்குப் பிரஸாதித்தனர் என்று திருவேங்கடமான்மியத்திற் சொல்லப்பட்டிருக்கிறது’ என்ற சிவாதிக்ய ரத்நாவளி இரண்டாம் பாகம் இச்செய்யுட்குப் பிரமாணம். (கஉச)

சிதம்பர நடராஜருடைய நடன வைபவத்தைக் கண்டு அவசமாகித் தலைகால் தெரியாமல் வீழ்ந்து கிடக்கின்றார் தில்லைக்கோவிந்த ரென்பது.

சித்தசன் றன்னைச் செற்றோன் சிதம்பரந் தன்னிற் செய்த
வித்தக நிருத்தங் கண்டு மெய்ம்மறந் தவச மாகிப்
பத்துறழ் பன்னி ரண்டு பகலவ னடியில் வீழ்ந்த
சித்திர கூட மாயன் செப்பருங் கிடக்கை பாராய்.

(அ - ரை) சித்தசன்றன்னைச் செற்றோன் - சிவபிரான்; வித்தக நிருத்தம் - ஞான நடனம்; மெய்ம்மறந்து - தன்னை மறந்து; அவசம் - பரவசம்; பத்துறழ் பன்னிரண்டு - நூற்றிருபது; பகல் - நாட்கள்; கிடக்கை - வீழ்ச்சி.

‘செல்லரிய பரவசமாய்த் திருமுன்னே வீழ்ந்திறைஞ்சித் - தொல்லைதனி லறிவிழந்து துணைவிழிகள் புனல்பெருகப் - பல்லுயிர்க்கு முயிராகும் பரமசிவ பூரணத்தி - னெல்லைதனிற் புக்கழுந்தி யெழுந்தில னீரிரு திங்கள்’ என்ற கந்தபுராணம் இச்செய்யுட்குப் பிரமாணம். (கஉரு)

இப்போதிருக்குந் தில்லைக்கோவிந்தரின் கோயில் அவருடையதன்றென்பது.

தில்லைக்கோ விந்தன் முன்னர்த் தில்லையின் முன்றில் [வீழ்ந்தான்
தில்லைக்கோ விந்தன் பின்னர்த் தெருநடுக் கிடந்தா னிப்பாற்
றில்லைக்கோ விந்தன் சென்றான் றிருப்பதி யென்னை மாயந்
தில்லைக்கோ விந்த னின்றெந் திருநடன் றளியுட் சேர்வே.

(அ - ரை) மாயம் - எமாற்றம்; நடன்தளியுள்சேர்வு - நடராஜருடைய கோயிலுக்குள் வந்திருத்தல்.

‘வரங்கிடந்தான் றில்லையம்பல முன்றிலம்மாயவனே’ என்ற திருக்கோவையாரும், ‘ஸ்ரீ சிதம்பரத்திலுள்ள வைதிக சைவர்களால் நடுத்தெருவிற் கிடத்தப்பட்ட நாராயண விக்கிரகத்தை’, ‘நடுத்தெரு நாராயணன் எனுஞ் சொல்லும் அது காரணமாக வுண்டாயிற்று’ என்ற சைவசமய சரபமும், ‘அந்த விழவெல்லாந் திரும்படி திருப்பதிக்கெழுந்தருளி ஸ்ரீ கோவிந்தராஜனை மூலபேரஸஹிதமாக திருப்ரதிஷ்டையும் பண்ணிவைத்து’ என்ற தென்கலைக் குருபரம்பரையும், ‘சென்றனன் றில்லைச் சித்திரகூடஞ் செறிந்தனன் செறிவதன் முன்னே - யன்றதிற் றிருக்கண் வளர்ந்தருண் மாயனைந்தனை முதலவரோடு - மொன்றுமாங்கின்றி மறைந்தனன் மறைந்தாங் கோங்கு வேங்கடமென மறைக - ளென்று நின்றேத்துந் திருப்பதி தனிலே யெழுந்தனன் யாவருமிறைஞ்ச’ என்ற எம்பெருமானார் வைபவமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

(௧௨௬)

அவனன்றி யோரணுவு மசையா தென்பது.

சங்கின னாதி வானோர் தாம்விடு படைக டம்மை
யங்கொரு துரும்பா லாற்ற லழிவுசெ யியக்கன் றன்னைச்
சங்கர னென்று தேர்ந்து தாழ்ந்தன ரென்னி னன்னோன்
மங்கலி லாண்மை தன்னை வரைசெய வல்லார் யாரே.

(அ - ரை) சங்கினன் - விஷ்ணு; படைகள் தம்மை - சக்கர முதலிய ஆயுதங்களை; இயக்கன்றன்னை - யக்ஷவடிவனை; தேர்ந்து - உமாதேவியா சொன்னதனால் தெரிந்து; தாழ்ந்தனர் - செருக்கு நீங்கினர்; அன்னோன் - அச்சங்கரனுடைய; வரைசெய - அளவிட; விடு, செய் இறந்த காலவினைத் தொகைகள்.

‘கிமிதம் யக்ஷமிதி’ என்று தொடங்கி ‘பஹுசோபமானாமுமாம் ஹைமவதீம் தாம்ஹோவாச கிமேதத் யக்ஷமிதி ஸாப்ரஹ்மேதி ஹோவாச’ என்றது வரையிலுள்ள கேனோபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம். இவ்வுபநிஷத்தில் மென்மை கூறப்பட்டவர் கூட்டத்தில் விஷ்ணுப் பிரஸ்தாபமில்லையென்பர் ஒரு சாரார்; யக்ஷவடிவமாய் வந்தவர் சிவபிரான்; அது உமா

தேவியாராலேயே தெளிவிக்கப்பட்டது. படவே அக்கூட்டத்துள் விஷ்ணு அடங்கவில்லையெனல் யாங்ஙனம்? அது உய்த்துணரவைக்கப்பட்டது. ஆகலினன்றோ 'அரியும் - அற்றப்படாத படைவீசி யார்ப்ப அவைகூர்மழுங்கியனவே' என்றது காஞ்சிப்புராணம். (௧௨௭)

விஷ்ணு யாகம், சிவபிரான் யாகதேவன் என்பது.

சங்கர பரனை நீக்கிச் சக்கர பரனை வைத்துப்
பொங்கிய தக்கன் வேள்வி புரிந்தன னங்கம் மாலை
வெங்கயி றதனால் யாத்தவ் வேள்வியை யழித்தான் வீரன்
சங்கர னியாக் தேவன் சக்கிரி யாகந் தானே.

(அ - ரை) சங்கரபரன் - சிவபிரான்; சக்கரபரன் - விஷ்ணு; பொங்கிய - செருக்குற்ற; ஆங்கு - அவ்வியாகசாலையில்; வெம் சயிறதனல் நாகபாசத்தால்; யாத்து - கட்டிபுருட்டி; வீரன் - வீரபத்திர மூர்த்தி; சக்கிரி - விஷ்ணு.

'யோ தக்ஷ யஜ்ஞேஸ்வர ஸங்காங் விஜித்ய விஷ்ணும் பபந்தோரக பாசேந வீர: தஸ்மை ருத்ராய நமோ அஸ்து' என்ற சரபோபநிஷத்தும், 'மேதபதிம் ருத்ரம்', 'ஆவோராஜாந மத்வரஸ்ய ருத்ரம் - - அவனேச்ருணுத்வம்', 'த்ரிஸ்ஸப்தயத்குஹ்யா நித்வே - - நிஹிதா', 'ருத்ரம் யஜ்ஞாநாமஸாத திஷ்டமபஸாம்' என்ற ருக்வேதமும், 'ருத்ரோ யாகதேவ:' என்ற பாசுபத ப்ரஹ்மோபநிஷத்தும், 'யஜ்ஞோவை விஷ்ணு:' என்ற சுருதியும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (௧௨௮)

சிவபிரானிருக்குஞ் சுடுகாடு இதுவென்பது.

முன்னவ னழிக்கும் போது முகுந்தனைப் பிறரை நெற்றி
தன்னெரி விழியா னீற்றித் தூவிட மயான மாகு
மன்னதி லவனே யேக னாகிவீற் றிருப்பா னப்போ
தின்னொரு தேவ னங்கே யிருப்பதற் குளனோ செப்பாய்.

(அ - ரை) முன்னவன் - சிவபிரான்; அழிக்கும்போது - சங்கரிக்கும் போது; தன் எரி விழி - இருக்கிற கண்ணின் தீ; நீற்றி - சுட்டுச்சாம்பராக்கி; தூவு இடம் - சிதறுகிற தனியிடமே; அன்னதில் - அந்தமயானத்தில்.

'பெருங்கடன்மூடி' என்ற தேவாரம் இச்செய்யுட்குப் பிரமாணம். (௧௨௯)

சிவபிரான் மன்மதனை யெரித்தாரென்பது.

வனிதைய ரின்பம் வேட்டு மாயவன் பிரம னாதி
யனைவரு மவர்தம் மாணைக் கடங்கிடச் செய்யும் வேளைத்
தனதொரு நுதற்கட் டீயாற் றகித்தவன் மலர்த்தா ளன்னை
பணிதின நினைவர் தாமே யாழ்குறார் காம நோயில்.

(அ - ரை) வேட்டு - விரும்பி ; அவர்தம் - அவ்வனிதையரின் ; வேளை - மன்மதனை ; ஆழ்குறார் - வீழ்ந்தழுந்தமாட்டார்.

‘யோ - - பஸ்மீசகாரம் மந்மதம் - - தஸ்மை ருத்ராய நமோ அஸ்து’ என்ற சரபோபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம். (௧௪0)

சிவபிரான் ஆலாலத்தை யுண்டாரென்பது.

கமலனும் புகைய மாலுங் கருகிடக் கடலில் வந்த
சமனிகர் விடத்தை யீசன் றன்மிடற் றடக்கி நூலை
விமலமென் பூமேன் மாதர் மிடற்றினிற் காத்தா னென்னி
னெமதிடர் களைய வல்லா னேவனவ் வீச னன்றி.

(அ - ரை) கமலன் - பிரமன் ; வந்த விடத்தை என்க ; விடத்தை - ஆலஹாலமென்னும் விஷத்தை ; சமன் - எமன் ; நூலை - தாலியை ; விமலம் மெல் பூமேல் மாதர் - இலக்குமியும் சரஸ்வதியும்.

‘பபேதோ ஹாலாஹலம் தஹந்தம் | தஸ்மை ருத்ராய நமோ அஸ்து’ என்ற சரபோபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம். (௧௪௧)

சிவபிரான் திரிபுர தகனஞ் செய்தாரென்பது.

பசுபதி நாமே யென்று பண்ணவர் செருக்குக் கொண்டார்
பசுபதி யதனைத் தந்தாற் பாற்றுவ னெயில்க ளென்றான்
பசுபதி சுயநீ யென்றப் பரமனைப் பணிந்தா ரன்னோர்
பசுபதி விரைந்து சென்று பாற்றினா னெயில்கண் மூன்றும்.

(அ - ரை) பண்ணவர் - தேவர் ; பாற்றுவன் - அழிப்பேன் ; எயில்கள் - முப்புரங்களை ; சுயம் - இயல்பாகவே ; அன்னோர் - அத்தேவர்கள்.

‘யோ லீலயைவத்ரிபுரம் ததாஹவிஷ்ணும் ஸல்யம் ஸோமாக்நிம்ச பாணம் - - தஸ்மை ருத்ராய நமோ அஸ்து’, ‘ஸ்வயம் தஸ்மாத் பசுபதிர் பபூவ’ என்ற சரபோபநிஷத்தும், ‘ஸோ ப்ரவீத்வரம்வ்ருணு அஹமேவ பசூநாமதிபதிரஸாநி’ என்ற எஜர்வேதமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (௧௪௨)

திரிபுர தகனசமயத்தில் சிவபிரான் கையில் விஷ்ணு அம்பானாரென்பது.

திரிபுர மெரித்த ஞான்று சீதர னம்பாய் வாசம்
விரிமல ருறைவோன் பாகாய் வேறுளார் வெவ்வே றாகி
யெரிநிற மேனி யீச னேவலிற் கிடந்த செய்தி
தெரிதவ முடையோர் தேர்வர் சிவபிரான் றனது மேன்மை.

(அ-ரை) ஞான்று - காலத்தில்; வாசம் விரிமலர் உறைவோன் - பிரமன்; பாகு - சாரதி; வேறு உளார் - மற்றைத்தேவர்கள்; வெவ்வேறு - அத்தேரின் பல்வேறு உறுப்புக்கள்: தெரி - தெரிந்து கொள்ளவல்ல.

பாரதம் கர்ணம் 26 ஆவது அத்தியாயம் இச்செய்யுட்குப் பிரமாணம். (௧௩௩)

விஷ்ணு ரிஷபமாகிச் சிவபிரானைச் சுமந்தாரென்பது.

அம்புரு வடைந்து மென்னை யடியனேன் றருக்கி நின்றேன்
வெம்பவ மகல வேண்டும் விமலனே யருளென் றன்று
சம்புவை யிரதத் தோடுந் தனிவிடை யாகி மாலோன்
கும்பிடு திறத்தா லேற்றான் குரவையிட் டார்த்தார் தேவர்.

(அ-ரை) தருக்கிநின்றேன் - அகங்கரித்தேன்; பவம் - பாவம்; அன்று - அத்திரிபுரதகனகாலத்தில்; இரதத்தோடும் - தேரோடும்; விடை - ரிஷபம்; குரவையிட்டு - கூத்தாடி; ஆர்த்தார் - ஆர்ப்பரித்தார்.

'மாயனு முப்புரங் கொன்ற வஞ்ஞான்று - றேறாயெமைத் தேரோடு தாங்கினன்' என்ற காஞ்சிப் புராணம் இச்செய்யுட்குப் பிரமாணம். (௧௩௪)

விஷ்ணுவின் நரசிம்மாவதாரத்தைச் சிவபிரான் கொன்றாரென்பது.

மானுட மடங்க றன்னை வலிதபக் கொன்று தோலை
மேனியி லணிந்தான் வீரர் வீரனுஞ் சரப மூர்த்தி
யானெனு மகங்கா ரத்தை யெனதெனு மமகா ரத்தை
மானவ னறுக்க வேண்டின் வழுத்துக வவன்மென் றாளே.

(அ-ரை) மானுட மடங்கல்தன்னை - நரசிங்கத்தை; வலிதப - ஆற்றல் கெடும்படி; மானவன் - மனிதன்; அவன் - அச்சரபமூர்த்தியின்.

'யோகோரம் வேஷமாஸ்தாய சரபாக்யம் மஹேச்வர: | ந்ருஸிம்ஹம் லோக ஹந்தாரம் ஸம்ஜகார மஹாபல: | ஹரிம் ஹரந்தம் பாதாப்யா மநுயாந்தி ஸுரேச்வரா: | மாவதீ: புருஷம் விஷ்ணும் விக்ரமஸ்வ மஹாநஸி || க்ருபயா பகவாந்விஷ்ணும் விததார நகை: கரை: சர்மாம்பரோ மஹாவீரோ வீரபத்ரோ பபூவஹ | ஸஏகோ ருத்ரோ த்யேய:' என்ற சரபோபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம். (௧௩௫)

விஷ்ணு தம் கண்ணைப்பிடுங்கிப் பூவாகவைத்துச் சிவார்ச்சனை செய்து சக்கரம் பெற்றாரென்பது.

சங்கரன் மலர்த்தா டன்னிற் றாமரை யெனத்தன் கண்ணைப்
பங்கமின் மால்சூன் றிட்டுப் பரசிவ வெனையா ளென்றான்
சங்கரன் கமலக் கண்ணு சக்கர மீந்தா வென்றான்
பங்கமின் மாலஃ தேற்றான் பணிந்திது சுருதி வாய்மை.

(அ - ரை) பங்கம் - குற்றம்; சூன்று - பிடுங்கி; இட்டு - தாமரைப் பூவாகக் கருதி அருச்சித்து; இந்தா - இதோ பெற்றுக்கொள்; ஏற்றான் பணிந்து - வணங்கிப் பெற்றுக்கொண்டான்; இது - இவ்வுண்மை.

'யோவாம பாதார்ச்சித விஷ்ணு நேத்ரஸ்தஸ்மை ததௌ சக்ர மதிவ ஹ்ருஷ்ட: தஸ்மை ருத்ராய நமோ அஸ்து' என்ற சரபோபநிஷத்து இச் செய்யுட்குப் பிரமாணம்.

(க௱சு)

சிவபிரான் கிருஷ்ணனுக்குப் பிள்ளைவரங் கொடுத்தாரென்பது.

மதனுட றன்னை நீற்றி மலரவன் சிரத்தைக் கொய்த
சதுரனை யடியில் வீழ்ந்து தமியனேன் மனைவி சாம்ப
வதிமன மகிழப் பிள்ளை வரமெனக் கெந்தாய் தாவென்
றிதமுற வேத்தக் கண்ண னிறைவனு மவற்கஃ திந்தான்.

(அ - ரை) நீற்றி - சாம்பராக்கி; சதுரன் - சிவபிரான்; சாம்பவதி - கிருஷ்ணனின் மனைவி பெயர்; இறைவன் - சிவபிரான்.

பாரதம் அநுசாசனம் 45, 46 ஆவது அத்தியாயங்கள் இச்செய்யுட்குப் பிரமாணம்.

(க௱எ)

அர்ச்சுனன் கிருஷ்ணனை விக்கிரகமாக வைத்துக் கொண்டு அதிற் சிவபூசை செய்தானென்பது.

மன்னவ னென்று செய்வர் மதிப்பவ னடியர் தம்மைத்
தன்னமு மெண்ணார் யாருந் தாசனென் றவன்றன் மேந்தைத்
தென்னுறு கண்ணன் மேலே சிவபூசை பார்த்தன் செய்து
தன்னிய னானெ னென்னிற் சாற்றுவாய் பரமா ரென்றே.

(அ - ரை) தன்னமும் - கொஞ்சமும்; தாசன் - அடியவன்; தென் - அழகு; பார்த்தன் - அருச்சுனன்; தன்னியன் - பாக்கியவான்.

பாரதம் துரோணம் 79, 80, 81 ஆவது அத்தியாயங்கள் இச்செய்யுட்குப் பிரமாணம்.

(க௱அ)

கிருஷ்ணன் சிவோபாசனையால் வாணனை வென்றானென்பது.

வாணனார் தம்மோ டேற்று மாயனார் முன்னந் தோற்றார்
வாணனார் கரங்க டம்மை மாயனார் பின்னர்க் கொய்தார்
வாணனார் மனத்த ரான மகேசனார் தந்தே யன்றோ
வாணனார் பரங்கள் போக்கும் வலியினை மாயர் பெற்றார்.

(அ - ரை) ஏற்று - எதிர்த்துப் போர் செய்து; கரங்கள் தம்மை - கைகளை; கொய்தார் - வெட்டினர்; பரங்கள் - கைகளாகிய சுமைகளை; வலி - ஆற்றல்.

"பகவான், 'நாராயணரே! - - என் அனுக்கிரகத்தினாலே ஒருவனும் உம்மை - - ஹிம்சிக்கமாட்டான். மேலும், யுத்தத்தை நீர் அடைவீராயின் என்னைக்காட்டிலும், மேற்பட்டவராவீர்' என்று கூறினர்" என்ற பாரதம் துரோணம் 202 ஆவது அத்தியாயம் இச்செய்யுட்குப் பிரமாணம். (க௩௯)

சிவபிரான் கொடுத்த வரத்துக்கஞ்சியே பஸ்மாசுரவதத்தில் விஷ்ணு பெண்வடிவங் கொண்டாரென்பது.

நீற்றன துடம்பை மாலோ னீற்றின னென்றுப் வெள்ளை
யேற்றவ னந்த நீற்றற் கீந்துள வரத்துக் கம்மா
லாற்றவு மஞ்சி யன்றோ வாரணக் குருவங் கொண்டான்
போற்றுக விளையாட் டென்றப் புராரியி னேட்டந் தன்னை.

(அ - ரை) நீற்றன் - பஸ்மாசுரன்; நீற்றினன் - எரித்தான்; வெள்ளை ஏற்றவன் - சிவபிரான்; வரமாவது யார் தலையில் அவ்வசுரன் கை வைத்தாலும் அவர் சாகவேண்டுமென்பது; ஆற்றவும் - மிகவும்; அணங்கு - மோகினி; போற்றுக - மதித்து உய்வாயாக; புராரி - சிவபிரான்.

இச்செய்யுள் பிறர் கொள்கையை உடம்பட்டு மறுத்தது. (க௪௦)

அனுமானைச் சிவாவதார மென்றல் அவைதிக மென்பது.

பிறப்பில னென்றே மேலோர் பிஞ்ஞக னடியை யேத்திச்
சிறப்பினை யடைந்தா ரென்று செப்பிடுஞ் சுருதி யந்த
வறப்பெரு நூற்கு மாறு யஞ்சனை கருவுட் பட்டுப்
புறப்பட லிலனே வன்னேன் புகலெனப் பிதற்ற லாமோ.

(அ - ரை) சிறப்பினை - பிறவாமையை; அன்னேன் அஞ்சனை கருவுட் பட்டுப் புறப்படலிலனே புகல் என அந்த அறப்பெருநூற்கு மாறாய்ப் பிதற்றலாமோ என்க; அஞ்சனை கருவுட்பட்டுப் புறப்படல் - ஆஞ்சநேயனாய் வருதல்; அன்னேன் - அச்சிவபிரான். (க௪க)

இதுவுமது.

உருத்திர னருளி னாலே யஞ்சனை யுதரந் தன்னின்
மருத்துவி னமிச மொன்று வந்ததிங் கனும னாகக்
கிருத்திம ரவனை யீன்ற கேசரி தனையச் சேயை
யுருத்திர னெனவத் தாயை யுமையெனப் பிதற்றி னைவார்.

(அ - ரை) மருத்துவின் - வாயுவினுடைய; இங்கு - இவ்வுலகில்; கிருத்திமர் - பொய்யர்; அவனை - அவ்வனுமனை; கேசரி - அவன் பிதா; கேசரிதனை அச்சேயை - கேசரி யென்னுந் தந்தையையும் அனுமனாகிய அப்பிள்ளையையும்; அத்தாயை - அந்த அஞ்சனை யென்பாளை; னைவார் - துன்புறுவர்; பூர்வபக்ஷிகள் ஒருசமயம் பரமசிவன் கேசரியாகவும் பார்வதி அஞ்சனையாகவும் உருமாறிவந்து புணர்ந்து அனுமானைப் பெற்றன ரென்பார்; மற்றொரு சமயம் அனுமனையே பரமசிவாவதாரமென்பார்.

'ருத்ரவீர்ய ஸமுத்பவாய', 'மாருதாத்மஜாய', 'கேசரீஸுதாய' என்ற ஆஞ்சனேயாஷ்டோத்தரமும், 'பரமனும் பரிவிற்பார்த்துத் - தடமுலையுமைக்குக் காட்டி வாயுவின் றனயனென்றான்' என்ற கம்பராமாயணமும் இச் செய்யுட்குப் பிரமாணங்கள். (௧௪௨)

பார்வதி தேவியாரை இராவணன் இச்சித்தான், பஸ்மாசுரன் துரத்தினன் என்பனவாகிய கதைகளெல்லாம் பூர்வபட்சிகள் துவேஷத்தாற் செய்த கற்பனைகளே யென்பது.

கவினுய ரிராமன் பெண்டைக் கண்ணனின் மனைவி மாரைப்
புவிதனி லயலார் கொண்டு போயின ரதற்கு நாணி
நவிலுவ ரொருபொய் கௌரி நாயகி தனக்குந் தீயோர்
தவிருவ துண்டோ வன்னோர் சம்புவி னுதற்கட் டீக்கே.

(அ - ரை) கவின் - அழகால்; நவிலுவர் - சொல்லுவர்; பொய் - கற்பனை; தவிருவது - விலகுவது; அன்னோர் - அத்தீயோர். (௧௪௩)

விட்டுணு யானைகாத்த சரிதத்தைவிடச் சிவபிரான் யானைகாத்த சரிதமே சிறந்தது. விட்டுணுகாத்த யானை விட்டுணுவைக் கருதிக்கொண்டே ஆதிமூலமென்றழைத்தது என்பது.

வேழமொன் றானைக் காவில் விமலனை யேத்தி யன்னான்
றாழ்வகல் பதத்தைப் பெற்ற சரித்திர நுணுக்கங் கண்டோர்
வேழமின் னென்று மாலை விளித்தவன் றுணையா லோர்கா-
லாழ்புனல் முதலை வாய்விட் டகன்றதை மதிப்பார் கொல்லோ.

(அ - ரை) ஆனைக்காவில் - திருவானைக்காவென்னுந் தலத்தில்; விளித்து - அழைத்து; ஆழ் - இறக்குவோர்யாரும் ஆழ்ந்து விடுகிற.

'பதகமுதலைவாய்ப் பட்ட களிறு - கதறிக் கைகூப்பி யென் கண்ணா கண்ணாவென்ன - வுதவப்புள்ளூர்ந்தங்குறு துயர் தீர்த்த - வதகன்', வேழம் - - முதலைபற்ற மற்றது நின் சரணினைப்ப', 'யானை - - கயம்புக்கஞ்சி - - இடரடுக்க, ஆழியான் பாதம் பணிந்தன்றே - - எய்திற்றுப் பண்டு' என்ற நாலாயிரம் இச்செய்யுட்குப் பிரமாணம். (கசச)

சிவபிரான் கபாலமாலை யணிவது தம் பரத்துவத்தை வெளிப்படுத்தற்கா மென்பது.

விதியரி விளிந்த வென்பை மேனியிற் றரித்துத் தானே
கதிபிற ரிலையென் றீசன் காட்டுவான் யார்க்கு மஃதை
மதியில ராகிச் சில்லோர் வைதுமால் பாஞ்ச சன்யம்
பதிதர வாய்வைத் தூதும் பண்பினை மதிப்பா ரந்தோ.

(அ - ரை) விதி - பிரமன்; விளிந்த - செத்த; என்பை - எலும்புகளை; கதி - புகலிடம்; அஃதை - அவ்வெலும்பாபரணத்தை; பதிதர - பதிய; பஞ்சசனனுடைய எலும்பாகிய பாஞ்சசன்யமென்னுஞ் சங்கை வாயில் வைக்கலாமோ வென்று கண்டித்தபடி. (கசரு)

பிரமனுடைய சிரசைக்கிள்ளிய பாவம் சிவபிரானைப் பற்றா தென்பது.

சிரமயற் கொழித்த பாவஞ் சிவற்கரி யொழித்தா னென்றாய்
சிரமயற் கேனம் மாயன் றிரும்பவுந் தந்தா னில்லை
சிரமயற் கொழித்தான் காரி சிவன்பழிக் கேது வென்னே
சிரமயற் கொழித்தா னென்றச் சிவனை நூல் முறையாற்
[போற்றும்.

(அ - ரை) காரி - பைரவமூர்த்தி; ஏது - காரணம்; என்னே? - இல்லையென்றபடி; முறையால் - மகனாகிய பைரவமூர்த்தி அப்பனாகிய சிவபிரானின் வேறல்ல னென்ற முறைமைபற்றி.

'வருபடை வேகக் காற்றினின் முரிய விரைந்து செல் வயிரவப் புத்தேன் - திருமலர்க்குரிசில் பழித்திடு மஞ்சாஞ் சிரத்தினை யுகிரினாற் கொய்தான்' என்ற காஞ்சிப் புராணமும், 'யோ ப்ரஹ்மண: பஞ்சம வக்த்ர ஹந்தா தஸ்மை ருத்ராய நமோ அஸ்து' என்ற சரபோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (கசசு)

சிவபிரானே பெண்டிரின் பாதிவிரத்திய தருமத்துக்கு அரணாயிருப்பவரென்பது.

தஞ்சம தென்று வந்த தாடகை மானங் காப்பான்
வஞ்சமி லீசன் சாய்ந்து மற்றவள் பூசை யேற்றான்
தஞ்சம தென்று வந்த சலந்தரன் மனைவி தன்னை
யஞ்சன வண்ணன் வஞ்சத் தணைந்துகற் பழித்து விட்டான்.

(அ - ரை) தஞ்சமது - அடைக்கலம்; காப்பான் - காக்கும்பொருட்டு; சலந்தரன் மனைவி - அவள் பெயர் பிருந்தை யென்பது; அஞ்சன வண்ணன் - விஷ்ணு; வஞ்சத்து - கரவால்; அணைந்து - புணர்ந்து; கற்பு - பதிவிரதா தருமத்தை.

'தாடகை மானங் காப்பான் றாழ்ந்துபூங் கச்சிட் டேர்க்கும் - பீடுறு சலய னன்பா னிமிர்ந்தவெம் பிரானா ரீதால்' என்ற திருவிளையாடற் புராணமும், 'மாயவனே டக்கொண்டே வன்சலந்த ரன்கிழத்தி - தூய நலங்கவர்ந்தான்' என்ற சோமேசர் முதுமொழி வெண்பாவும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (கசஎ)

இராமனும் பாண்டவரும் பகைவரை அழித்தது சிவானுக்கிரகத்தாலேயாமென்பது.

ஐயிரு தலையன் றன்னை யழித்தன னிராமன் பார்த்த
ரையிரு பதின்மர் தம்மை யழித்தன ரென்றா யீச
னையிரு சரண்புக் கன்றே யையிரு தலையன் றன்னை
யையிரு பதின்மர் தம்மை யழித்தன ரந்த நல்லோர்.

(அ - ரை) ஐயிருதலையன் - இராவணன்; பார்த்தர் - பாண்டவர்; ஐயிருபதின்மர்தம்மை - கௌரவர்களை; ஐ இரு சரண் புக்கு அன்றே - அழகிய இரண்டு திருவடிகளையும் புகலிடமாகக் கொண்டல்லவா?; நல்லோர் - இராமனும் பாண்டவரும்.

இராவணவதம் சித்தியாகும்பொருட்டு ராமருக்கு அகஸ்தியர் ஆதித்ய ஹ்ருதயோபதேசஞ் செய்தாரென்ற வான்மீகமும், பாரதம் துரோணம் 203 ஆவது அத்தியாயமும், இச்செய்யுட்குப் பிரயாணங்கள். (கசஅ)

சிவபிரானே அடியார்க்குச் சிரஞ்சீவித்துவங் கொடுக்கவல்லவரென்பது.

சற்பர சிவப்பேர் முன்னாந் தத்துவ ஞான மீந்த
தற்புறு மார்க்கண் டேயர்க் காயுளை யென்னும் வேதந்
தற்பம துடையோர் மாலை தந்தன னவர்க்கலை தென்றார்
சிற்பன ரிகழ்வ ரென்ற வெட்கமே தவருக் கம்மா,

(அ-ரை) சத்பர - சத்தாயும் பரமாயுமுள்ள; சிவப்பேர் முன்னார் தத்துவ ஞானம் - சிவதத்வஞானம்; அற்பு உற - அன்பு பொருந்திய; ஆயுளை - சிரஞ்சீவித்துவத்தை; தர்பம் - செருக்கு; அவர்க்கு - அம்மார்க்கண்டேயருக்கு; அஃது - அச்சிரஞ்சீவித்துவத்தை; விற்பனர் - அறிஞர்; அவருக்கு - அந்தற் பமதுடையோருக்கு.

'ப்ரஹ்மாவர்த்தே மஹாபாஞ்சாலவடேம்லே மஹா ஸத்ராய ஸமேதா மஹர்ஷயச் சௌநகாத் யஸ்தேஷாமத்ராஜ்ஞயஸ்தத்வஜிஜ்ஞாஸவோ மார்க்கண்டேயம் சிரஜீவி ஸமுபஸங்கம்ய பப்ரச்சு:, கேநத்வம் சிரஜீவ்யஸிமோகா வாநந்த மநுபவஸி, பரமரஹஸ்ய சிவதத்வ ஜ்ஞாநம், ஸதோஷாவாசயோ தக்ஷிணாமுகச் சிவோபமோ லக்ஷீக்ருதோ பவதி தத்பரம ரஹஸ்ய சிவதத்வ ஜ்ஞாநம், யஸ்ஸர்வோபரமேகாலே ஸர்வாந்ஸ்வாத்மந்யுபஸம்ஹ்ருத்ய ஸ்வாத்மாநந்த ஸுக மோததே ப்ரகாசதே வாஸதேவ:' என்ற தக்ஷிணாமூர்த்தியுபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம். (க௪க)

சிவபிரான் எமனை யார்க்கும் அடங்காமலே கொன்றரென்பது.

அந்தக னுயிரை வாங்க வரற்குமால் பணித்தா னென்று
யந்தக னயோத்தி ராம னவியை யவண்போய்க் கொண்டா
னந்தக னடியைக் கும்பிட் டவன்முனவ் விராம னெய்வா
னந்தக னுயிரை வாங்க வரற்குமால் பணித்தல் யாண்டே.

(அ-ரை) அந்தகன் - எமன்; பணித்தான் - கட்டளை யிட்டான்; ஆவி - உயிர்; அவண் - அவ்வயோத்திக்கு; அவன்முன் - அந்த எமனுடைய சந்நிதியில்; எய்வான் - இருப்பான்; யாண்டு - எப்படி?

'தென்றிசைக் கடவுளுந் தேவனேவலா - லன்றுதன் னுருவொழித் தயோத்தி மாநகர்க் - குன்றுமின் னிலையதோர் கோயில் வாயிலில் - நின்றிய முனிவர னுருவங் கொண்டுளான்' என்ற இராமாயணமும், 'தஸ்யாம் ராஜர்ஷய: புண்யஸ்ததா தேவர்ஷயாமலா: யமம் வைவஸ்வதம்தாதப்ரஹ்ருஷ்டா: பர்யுபாஸதே | யயாதிர் நஹுஷ: பூருர்மாந்தாதா ஸோமகோந்ருக: | ராமோ தாசரதிச் சைவலக்ஷ்மணச்சப்ரதர்தந:' என்ற பாரதம் ஸபா 8 ஆவது அத்தியாயமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (க௩௦)

மார்க்கண்டேயருக்குக் கிடைத்ததே உண்மையான சிரஞ்சீவித்துவம் மற்றவர்க்குக் கிடைத்தது அத்துணை யுண்மை யன்றென்பது.

நற்றவ மதனாற் கூற்றி னல்லுயிர் கவர்ந்த பின்ன
ரிற்றிடா திருக்கும் வாழ்வை யெய்ந்தனர் மார்க்கண் டேயர்
மற்றவ ரெமனை வென்று வாய்ந்திலர் தீர்க்க வாழ்வை
யிற்றிடா திருப்ப ரன்னே ரெமனுறுத் தணுகுங் காறும்,

(அ - ரை) கூற்றின் - எமனுடைய; இற்றிடாதிருக்கும் வாழ்வை - சிரஞ்சீவித்துவத்தை; எய்ந்தனர் - பொருந்தினார்; மற்றவர் - மாவலி அநுமான் விபீஷணன் முதலியோர்; வாய்ந்திலர் - கிடைக்கப்பெற்றிலர்; இற்றிடாதிருப்பர் - சிரஞ்சீவியாயிருப்பர்; அன்னோர் - அம் மாவலி முதலியோர்; உருத்து - கோபித்து; அணுகுங்காறும் - உயிரை வாங்குவதற்கு அவர்களைச் சமீபிக்கும் வரை.

(௧௨௧)

சிவபிரான் யாசித்தது விளையாட்டு மாத்திரையே யென்பது.

ஈசுரன் றருயம் வெள்ளி யிரணிய முறையே யாகு
மாசகல் பெயரே யூர்தி மந்திரந் தனுசு மற்றை
நேசனல் லளகை வேந்த னித்தியற் கதனுஞ் சொல்வா
யாசகம் விளையாட் டென்றன் றேற்றதென் பலிபால்மாலே.

(அ - ரை) இரணியம் - பொன்; ஊர்தி - வாகனம்; மந்திரம் - கோயில்; தனுசு - வில்; அளகைவேந்தன் - குபேரன்; நித்தியற்கு - சிவபிரானுக்கு; அதனால் என்று கொள்வாய் என்க. வெள்ளி பொன் என்பன கைலையும் மேருவுமாம்; ஏற்றது - யாசித்தது; மால் யாசித்ததை மாத்திரம் எப்படி மதிக்கலாம் என்பது கருத்து. 'மாவலிபாற் காணிக்கிரந்தவன்' என்றது தேவாரம்.

(௧௨௨)

ஏக காலத்தில் பலபெண்டிர்பால் இன்பம் நுகரும் வன்மை கிருஷ்ணன் முதலியோர்க்குச் சிவாநுக்கிரகத்தாலேயே வந்ததென்பது.

அன்புட னேக காலத் தாய்ச்சிய ரில்லந் தோறு
மின்பம தவர்பா லார விருந்தனன் கண்ண னென்றாய்
தன்பெரு மனைவி மார்பாற் றனிநல மவ்வா றார்ந்து
பொன்புரை மகாரும் பெற்றான் புரவலன் வீர சித்தே.

(அ - ரை) ஆய்ச்சியர் - கோபிகைகள்; அவ்வாறு - அப்படி ஏககாலத்தில் எல்லாமனைவியரிடத்திலும்; ஆர்ந்து - நுகர்ந்து; மகாரும் - புத்திரரும்; புரவலன் - அரசன்; வீரசித்து அவ்வரசன் பெயர்; அவன் சிறந்த சிவபக்தன்.

'மங்கை யிங்கிவர் தன்மையை யென்னென்று புகல்வேன் மணம் புணர்ந்தவர் நூற்றுவ ரிலக்கமா மடவார் - அங்கவரெவ் வொருவர்க்கொரு தலைவரா யவர்களணைதோறும் புக்கணைந்தன ரின்பங்க ளளித்தார் - நங்கைமார் முற்று மென்னுட னென்னுட னிருந்தா ரயர்ந்திலாரென யென்றுரை நவின்றனர் மகிழ்வார் - அங்கயற் கணா ருடனிவர் புணர்ந்திடுங் கலவி யனந்த வானந்த மாமலை யறைந்திடற் கரிதே' என்ற சிவரகசியம் இச்செய்யுட்குப் பிரமாணம்.

(௧௨௩)

கிருஷ்ணன் அர்ச்சுனனுக்குக் காட்டிய விசுவரூபம் சிவபிரானுடையதேயாமென்பது.

புண்ணிய வீர வாகுப் புவியுருப் போன்று கண்ணன்
விண்ணுற வெடுத்து நின்ற வியனுருத் தானுஞ் சைவ
மொண்ணுத லிடமார் தேவே யுத்தமன் புருட னன்ய
னண்ணுதி யவன்பா லென்று நாரணன் பார்த்தன் றன்னை.

(அ-ரை) வீரபாகுப் புவியுரு - வீரபாகு தேவரெடுத்த விசுவரூபம்; விண்ணுற எடுத்து நின்ற வியனுருத்தானும் - விசுவரூபமும்; சைவம் - சிவபிரானுடையதே; ஒள்நுதல் இடம் ஆர் தேவே - சிவபிரானே; நண்ணுதி - சரணமடைவாயாக; என்றான் - என்று உபதேசித்தான்; நாரணன் - கிருஷ்ணன்; பார்த்தன்றன்னை - அருச்சுனனை.

'பச்யமே யோக மைச்வரம்', 'உத்தம: புருஷஸ்த்வந்ய: பரமாத்மேத்யுதாஹ்ருத: | யோலோகத்ரய மாவிச்யபி பர்த்யவ்யயஈச்வர:', 'தமேவ சாத்யம் புருஷம ப்ரபத்யே', 'ஈச்வரஸ் ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேசேர்ச்சு நதிஷ்டதி | ப்ராமயந் ஸர்வபூதாநி யந்த்ராரூடாநி மாயயா | தமேவ சரணம் கச்ச ஸர்வ பாவேந பாரத: தத்ப்ரஸாதாத் பராம் சாந்திம் ஸ்தாநம் ப்ராப்ஸ்ய ஸிசாச்வதம்' என்ற பகவத் கீதை 11, 15, 18 ஆவது அத்யாயங்கள் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (க௫௪)

சிவபிரான் சடையிற் றாங்கிய கங்கை யிதுவென்பது.

தங்கெழி லிமயந் தோன்றிச் சத்திய வுலகம் புக்குப்
பங்கயன் சாப மேற்றுப் பாய்புனல் வடிவாய் நின்று
சங்கரன் சடைவீழ் கங்கை தனியுமைக் கக்கை யாவள்
மங்கல மிலாரக் கங்கை மாலடி வந்தா ளென்பர்.

(அ-ரை) தங்கு எழில் - அழகு தங்கிய; இமயம் தோன்றி - இமய மலைக்கு மகளாகப்பிறந்து; புக்கு - போய்; புனல்வடிவமாய் மாறிநின்று; அக்கை - மூத்த சகோதரி; மாலடி - விஷ்ணுவின் பாதத்திலிருந்து.

'ஹிமவானுடைய கன்னிகையான கங்காதேவியானவள்' என்ற பாரதம் பீஷ்மம் 119 ஆவது அத்தியாயமும், சிவபாரம்யப் பிரதர்சினியிலுள்ள கங்காதரணப் பிரக்யானமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (க௫௫)

சிவபிரானது சடையிலிருந்து இறங்கிய கங்கையுடன் விஷ்ணு பாத நீர் சேர்ந்திருக்கலாமென்பது.

வாவொரு குடிலா யென்றும் வாங்கர வென்றும் வேந்தன்
பரவின னந்நீர் பாயப் பரனுயர் சிரமீ தேற்றான்
விரவிய தந்நீர் தன்னில் விட்டுணு பதநீர் பின்ன
ரானரி பதநீ ரேற்றா னென்றிடு மதனாற் சின்னூல்.

(அ - ரை) வர - வந்தருள்வாயாக; ஒரு - ஒப்பற்ற; குடிலாய் - கங்கா தேவியே; வாங்கு - வேகத்தைத் தடுத்தருள்வாயாக; அர - சிவபிரானே; வேந்தன் - பகீரத மகாராசன்; பரவினன் - அக்கங்கையையும் பரமசிவனையும் வணங்கித் துதித்தான்; உயர் சிரமீது - பரமபாவனமாயுள்ள சிரசில்; ஏற்றான் - வாங்கித் தரித்தான்; விரவியது - கலந்தது; அதனால் - அப்படிக் கலந்ததாலே; சின்னூல் - சிலநூல்கள். (௧௫௬)

விஷ்ணு பாதநீர் விஷ்ணு தலையிலும் மாவலி தலையிலுமே விழுமென்பது.

வாமனன் மேற்போங் காலை மலரவன் கழுவ வந்நீர்
வாமனன் காலி னூடே வாமனன் றலைமேல் வீழும்
வாமனன் காற்கீழ்த் துஞ்சு மாவலி தலைக்கும் போகும்
வாமனன் காற்கீ ழில்லா மகேசனற் றலைக்கே னேகும்.

(அ - ரை) மேற்போம் - ஆகாயத்தில் தூக்கப்பட்ட; மலரவன் - பிரமன்; காலினூடே - அந்தத் தூக்கப்பட்ட கால்வழியே பொழுகி; துஞ்சும் - வாடிக் கிடக்கிற; போகும் - ஊன்றிய கால்வழியே போய் விழும்; நல் தலைக்கு - பரம பாவனமான சிரசிற்கு; ஏகும் - போய் விழும். (௧௫௭)

உலகில் சிவோபாசனை யிருந்தப் பூர்வபக்ஷி கூறுங் காரணம் பொருந்தா தென்பது.

பூதலந் தன்னிற் சில்லோர் புராரியைப் பரமென் றேத்த
மாதவன் பிறவி தோறும் வணங்கினன் வரமீந் தன்னோற்
கீதான் பெருமைக் கேது வென்றனை யெவனோ தோராய்
வேதமவ் வரனை மூல விண்டுவே தொழுதா னென்றல்.

(அ - ரை) மாதவன் பூதலந்தன்னில் - - ஏத்த அன்னோற்கு வரம் ஈந்து (தன்) பிறவிதோறும் (அன்னோனை) வணங்கினன் என்க. பூதலந்தன்னில் - பூமியில்; புராரியை - சிவபிரானை; மாதவன் - விஷ்ணு; பிறவிதோறும் - அவதாரங்கடோறும்; அன்னோற்கு - அப்புராரிக்கு; ஈது - இப்படி வணங்கினது; ஏது - காரணம்; எவன் - என்ன காரணத்தால்; தோராய் - அறியாமலிருக்கிறாய்; மூலவிண்டுவே - அவதாரங்களுக்கு முன்னுள்ள விஷ்ணுவே; என்றல் - என்றதை.

'தஸ்மிந்ஸ்யாம் ஹிவிஷ்ணு: க்ருத்வைவ மூர்த்தாஞ்ஜலிம் மாமுபாஸ்தே' என்ற பஸ்மஜாபாலோபநிஷத்தும் 'விஷ்ணுவும் - - சிவனது ஸமீபத்தில் ஸதந்த்ரமென்னும் ஸாமத்தைச் சொல்லுகின்றனர்' (இது கிருஷ்ணர் நேரிற் கண்டது) என்ற பாரதம் அநுசாஸனம் 45ஆவது அத்தியாயமும் இச் செய்யுட்குப் பிரமாணங்கள்.
(௧௩௮)

சிவபணியே மேலான தரும மென்பது.

தருமமே சிவனை நீங்காத் தனிவிடை யாகித் தாங்குந்
தருமமே சிவற்கு நீங்காத் தனிக்கொடி யாகி யோங்குந்
தருமமா மனைத்து மெங்கள் சாம்பவி வளர்க்க வீங்குந்
தருமமா மாத லாலே சம்புவின் றொண்டே யாங்கும்.

(அ - ரை) தனி - ஒப்பற்ற: விடை - ரிஷபம்; கொடி - துவஜம்; சாம்பவி - பார்வதிதேவியார்; வீங்கும் - பெருகும்; ஆதலாலே யாங்கும் சம்புவின் தொண்டே தருமம் ஆம் என்க. தொண்டு - பணி; யாங்கும் - எவ்விடத்திலும்.

'அறத்தெய்வத மத்திற முற்று நோக்கி', 'நம்பரற் கொல்லேறுருவங் கொடுவந்தது போற்றி யென்ன', 'கண்டாமதனைக் கவலாதி யென்றூர்தி யாக்கிக் - கொண்டாம்', 'ஆனேறுயர்த்தருளி', 'சாமகண்டர்தமாணையா லகிலமுந் தழைப்பக் - காமநோக்கி யென்னுங் கறங் கரிசற வளர்க்கும்', 'வச்சிரவரிசிமானத் - தளர்வுறு நிலைபெறெய்து முயர்சிவ தருமமன்பா - லுளமுறச் சிவனை யெண்ணல் முதல் பலவுளவாமன்றே' என்ற காஞ்சிப் புராணம் இச்செய்யுட்குப் பிரமாணம்.
(௧௩௯)

சைவர் வணங்கவேண்டும் மூர்த்தி யிதுவென்பது.

திருமிகு கவிய நீறு திவ்விய கோக்க ளியு
மெருதுய ரரற்கா மூர்த்தி யென்பதைச் சைவர் சில்லோர்
கருதில ரேற்றா னேர்ந்த கருடமா கருவ பங்க
சரிதம தோரா ரப்புட் டரிசனந் தவிரா ரென்னே.

(அ - ரை) கவியம் - பஞ்ச கௌவியம்; நீறு - விபூதி; கோக்கள் - பசுக்கள்; எருது - ரிஷபம்; எருது அரற்கு ஊர்த்தி ஆம் என்க; ஊர்த்தி - வாகனம்; கருதிலர் - எண்ணுகின்றிலர்; ஏற்றால் - ரிஷபத்தால்; நேர்ந்த - நிகழ்ந்த; மா - பெரிய; அப்புள் தரிசனம் - அக்கருட தரிசனம்; என்னே - என்ன மடமை; ஏற்றால் நேர்ந்த கருடகர்வ பங்கத்தைக் காஞ்சிப்புராணத்திற் காண்க.
(௧௪௦)

சேவலாதியன கருடனைக் காட்டிலுந் தாழ்ந்த பிராணிகளல்ல வென்பது.

கூவியே மச்ச மாதி கொத்தியுண் கருடன் றன்னை
யாவலா யுமது கன்னத் தறைந்தணாந் தேத்துஞ் சைவீர்
சேவலை மூடி கத்தைச் சிகியினை யாட்டை நாயை
நீவிரே னேத்த மாட்டீர் நேரிதோ வுமது சைவம்.

(அ - ரை) அறைந்து - அடித்து; அணாந்து - ஆகாயத்தைப் பார்த்து; மூடிகத்தை - பெருச்சாளியை; சிகியினை - மயிலை; நேரிதோ - சாஸ்திரோக்தமோ; உமது சைவம் - நீர் ஆசரித்து வருவதாகச் சொல்லுஞ் சைவாசாரம்; சேவல் முருகர் கொடி; மூடிகம் விநாயகர் வாகனமுங் கொடியும்; 'மூஷிகத்வஜம்' என்றது கணபத்யுபநிஷத்து; சிறி ஆடு முருகர் வாகனம்; நாய் பைரவர் வாகனம்.

(கசுக)

சீவர்க்கு வினையின் பயனை வினையே நல்காது: சிவபிரானே நல்குவாரென்பது.

இருவினை பயனை நல்கு மீசனே னென்பா யீசன்
மருவிய போது தாரு வனத்தின ரொழுக்குங் கற்பு
மொருவிய வவரை வேள்வி யுதித்தன வவர்முன் மாய்ந்த
தருபவ னதனை யார்க்குஞ் சம்புவே யாத லாலே.

(அ - ரை) இருவினை - வேள்வி தவம் முதலிய சற்கருமங்கள்; என் - தரவேண்டுவதென்னை? மருவியபோது - பிக்ஷாடனராய் வந்தபோது; தாருவனத்தினர் - தாருகாவனத்து ரிஷிகளும் அவர்தம் பத்தினிமாரும்; ஒருவிய அவரை - அவரைவிட்டு விலகின; வேள்வி - அவர்கள் செய்த அபிசாரயாகத்தில்; உதித்தன - தோன்றிய பாம்பு மான் முயலகன் முதலிய வஸ்துக்கள்; அவர்முன் - அம்முனிவர்களின் கண்முன்னேயே; மாய்ந்த - சிவபிரானால் வலியிழந்தன; தருபவன் - கொடுக்கும் வினைமுதல்; அதனை - அவ்வினைப் பயனை.

கந்த புராணம் ததீசியுத்தரப் படலம் இச்செய்யுட்குப் பிரமாணம். (கசுஉ)

விஷ்ணு பக்தரும் விபூதிதாரணிகளாகவே யிருக்க வேண்டுமென்பது.

சம்புவை வணங்கி மாலோன் றானுமே யடியே னுன்னைக்
கும்பிடு திறனு நீற்றுக் குறிகளை யெனக்காட் பட்டார்
வெம்பவ மகலப் பூண்டு விளங்கிடு திறனு மெங்கட்
கெம்பர சிவநல் கென்றா னெனேசிவ சின்னச் சீரே.

In Public domain. Digitization with Muthulakshmi Research Academy

(அ - ரை) தாணு - சிவபிரான்; நீற்றுக்குறிகளை - விபூதியின் உத்தூளன திரிபுண்டரங்களை; எனக்கு ஆட்பட்டார் - என்னுடைய பக்தர்கள்; வெம்பவம் - கொடிய பாவங்கள்; பூண்டு - அணிந்து; ஏனோ - எத்தனை அதிசயத்தை யுடையது! சின்னம் - அடையாளம்; சீர் - தன்மை.

'நமஸ்தேஸ்து நமஸ்தேஸ்து த்வாமஹம் சரணங்கத:| த்வத்பாதயுகளே சம்போ பக்திரஸ்து ஸதாமம| பஸ்மதாரணே ஸம்பர்கே மயக்தோ பவிஷ்யதி', 'பஸ்மருத்ராக்ஷயோர் மாஹாத்ம்யம்' என்ற ப்ருஹஜ்ஜாபாலோபநிஷத்தும், 'பஸ்மருத்ராக்ஷகணாதர்சநம்' என்ற ருத்ராக்ஷஜாபாலோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (௧௪௩)

பரமஹம்ஸ ஸந்நியாஸிகளும் விபூதிதாரணிகளே யென்பது.

சடபர தர்சம் வர்த்த காருணி தத்தாத் ரேயர்
திடரிபு நிதாகர் சீர்த்திச் சுவேதகே துவேதுர் வாச
ரிடரிலி யாஞ்ஞ வற்க ரிரைவதர் புசுண்ட ரின்னோர்
படவர வணிவா னீற்றைப் பணிந்திடு பரம கஞ்சர்.

(அ - ரை) திடம் - உறுதியுள்ள; சீர்த்தி - மிகுபுகழ்; இடர் இலி - துன்பம் இல்லாதவராகிய; படஅரவு அணிவான் - சிவபிரானுடைய; இடு - அணிந்துகொண்ட; பரம கஞ்சர் - பரமஹம்ஸ ஸந்நியாஸிகளாவார்கள்; அவர்கள் ஜடபாதர், ஸம்வர்த்தகாருணி, தத்தாத்ரேயர், ரிபு நிதாகர், சுவேதகேது, துர்வாஸர், யாக்ஞவல்க்கியர், ரைவதகர், புஸுண்டர் என்பவர்.

'பரமஹம்ஸ நாம ஸம்வர்தகாருணிச்வேதகேது துர்வாஸ ரிபுநிதாக ஜடபாத தத்தாத்ரேய ரைவதக புஸுண்ட ப்ரப்ருதயோ விபூதிதாரணா தேவமுக்தாஸ்யு: ஸ ஏஷ பஸ்மஜ்யோதிரிதிவை யாஜ்ஞவல்க்ய:' என்ற ப்ருஹஜ்ஜாபாலோபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம். (௧௪௪)

விபூதி தாரணமின்றிக் காயத்திரியை ஜபித்தல் கூடாதென்பது.

அந்தம துடைய நீற்றை யன்புட னணியா ராகி
மந்திர மாகுங் காயத் திரியினை மறையோர் பல்லோர்
சிந்தனை மிகவுஞ் செய்வர் திருமறைக் குலத்தில் யாங்கள்
வந்தன மென்னு மன்னோர் வழக்கினுக் கருத்த மூண்டோ.

(அ - ரை)" அந்தம் - அழகு; மறையோர் - பிராமணருள்; சிந்தனை செய்வர் - செபிப்பர்; வழக்கினுக்கு - சொல்லுக்கு.

'த்யக்த்வா பஸ்மதாரணம் ந காயத்ரீ ஜபேத்' என்ற பஸ்மஜாபாலோபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம். (௧௪௫)

விபூதி நிந்தகன் பிராமணனேயாயினும் புலையனே யாவானென்பது.

பார்ப்பன ரினிய நீற்றைப் பழியுரைத் தலைவா ராயிற்
பார்ப்பன வொழுக்க நீத்த பரமசண் டாள ராவார்
பார்ப்பதி பாகன் றந்த பழமறை வார்த்தை யீது
பார்ப்பன ரதனு னீற்றைப் பரவியிட் டுய்த லன்றே.

(அ - ரை) பரவி - தொழுது; இட்டு - அணிந்து; உய்தல் - சீவித்தல்.

'ஏ பஸ்மதாரிணம் த்ருஷ்ட்வா நரா: குர்வந்தி தாடநம் தேஷாம் சண்டாளதோ ஜந்ம ப்ரஹ்மந் நூஹ்யம் விபச்சிதா' என்ற ப்ருஹஜ்ஜாபாலோபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம்.
(கசு)

பிராமணன் ஏனைய ஸத்கர்மங்களை யெல்லாம் விட்டாலும் விபூதி தாரணத்தைமாத்திரம் விடுதல் கூடாதென்பது.

வேதியர் கருமந் தன்னை விட்டலைந் திடினு மந்தப்
பாதகந் தன்னைப் போக்கும் பரிமள திவிய பற்ப
மாதலின் விதியி னாறே யன்னவ ரதனை யென்றுங்
காதலும் பயமுங் கொண்டு கடைப்பிடித் தணிக மாதோ.

(அ - ரை) பரிமளம் - வாசனை ; திவிய - தெய்வத்தன்மை பொருந்திய ; பற்பம் - விபூதி ; விதியினாறு - விதிப்படி ; காதல் - பக்தி ; கடைப்பிடித்து - மனவுறுதியுடன்.

'த்யக்தவர்ணாச்ரமாசாரோ லுப்த ஸர்வக்ரியோபிய: ஸக்ருத்திர்யக் த்ரிபுண்ட்ராங்கதாரணாத் ஸோபி பூஜ்யதே', 'யோ பஸ்மதாரணம் த்யக்த்வா கர்மகுர்வந்தி மாநவா: தேஷாம் நாஸ்தி விநிர்மோக்ஷ: ஸம்ஸாராஜ்ஜந்ம கோடிபி:' என்ற ப்ருஹஜ்ஜாபாலோபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம்.
(கஎ)

விபூதியை நிந்திப்பவன் வேசிமகனாவா னென்பது.

அனகனுங் கரும வத்தி யக்கனு மான விசன்
றனதருண் மார்க்கஞ் சார்நற் சைவரி னெற்றி மீது
தினமவிர் நீற்றைக் கண்டு செவிசுட நிந்தை கூறி
வினயமிங் கொழிந்த பாந்தர் வேசிகள் புதல்வ ராவார்.

(அ - ரை) அனகன் - பாவமில்லாதவன் ; கருமவத்தியக்கன் - கர்மாத்யக்ஷன் ; அவிர் - ஒளிசெய்கிற ; வினயம் - மரியாதை ; இங்கு - இவ்வுலகில்.

'ஏஷாங்கோபோ பவேத் ப்ராஹ்மம் லலாடே பஸ்ம தர்சநாத் | தேஷாமுத்பத்திஸாங்கர்யம் மநுமேயம் விபச்சிதா', 'ஏஷாம்நாஸ்திமுநேச்ரத்தா

ச்ரௌதே பஸ்மநிஸர்வதா | ஸப்பாத்ராதி ஸம்ஸ்காரஸ்தேஷாம் நாஸ்தீதி நிச்சய:' என்ற ப்ருஹஜ்ஜாபாலோபநிஷத்தும், 'கர்மாத்யக்ஷோஹம்' என்ற ப்ரஹ்மவித்யோபநிஷத்தும், 'கர்மாத்யக்ஷ:, என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும் கோபாலோத்தரதாபிநியுபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.
(கசஅ)

நெருப்பிட்டுக் கொளுத்தவேண்டுவன இவை யென்பது.

பரசிவன் றளியில் பாழூர் பசுமமில் பாழ்த்த நெற்றி
பரசிவன் பாத பூசை பண்ணிடாப் பாழ்த்த சென்மம்
பரசிவன் முதற்றே வென்னாப் பாழ்த்தநூ லிவற்றி லெல்லாம்
பரசிவன் றருநல் வேதம் பணித்தது நெருப்பி டென்றே.

(அ - ரை) தளி - கோயில்; பசுமம் - விபூதி; முதல்தே - முதற் கடவுள்; பணித்தது - கட்டளையிட்டது.

'திக் பஸ்ம ரஹிதம் பாலம் திக் க்ராம மசிவாலயம் திகசிவார்ச்சநம் ஜந்ம திக் வித்யா மசிவாச்ரயாம்' என்ற ப்ருஹஜ்ஜாபாலோபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம்.
(கசகூ)

ருத்ராக்ஷ மகிமை யிதுவென்பது.

உருத்திர நாதன் கண்ணி லுதித்துயிர்க் கிறப்புச் சன்ம
வருத்தம தகற்றி யின்பம் வழங்குகண் மணியாஞ் சின்ன
முருத்திர வக்க சாபா லுபநிட மாதி போற்ற
விருத்தலி னின்னோர் மாலை யெதற்கிவண் வேண்டுந் தானே.

(அ - ரை) வழங்கு - கொடுக்கிற; கண்மணி - உருத்திராக்ஷம்; இன்னோர் மாலை - வேறுவகையான மாலைகள்; இவண் - இங்கு.

'ருத்ரஸ்ய நயநாதுத்பந்நா ருத்ராக்ஷா' என்ற ப்ருஹஜ்ஜாபாலோபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம்.
(கரு௦)

சிவலிங்கமாவது இதுவென்பது.

கருவுரு வுயிர்க்குப் போக்கக் கண்ணுத லருளாற் கொண்ட
வுருவரு வென்னப் பட்ட வுபயமு மிணைந்து நின்ற
திருவுரு வாகி யோங்குஞ் சிவலிங்க மாங்கு நின்றே
வருமுரு வனைத்து மந்த மங்கல சொரூபற் கம்மா.

(அ-ரை) உபயமும் - இரண்டும்; இயைந்து - சேர்ந்து; ஆங்கு நின்றே - அவ்வருவுருவத் திருமேனியிலிருந்தே; உருவனைத்தும் - உருவத் திருமேனிகளெல்லாம்; மங்கல சொரூபற்கு - சிவபிரானுக்கு. (களக)

சிவலிங்கபூசையே க்ஷேமத்தைத் தருமென்பது.

நாவலர் துதிக்கும் பூத நாதனை விண்டு வாதி
தேவரன் றன்பாற் பூசை சிவலிங்கந் தன்னிற் செய்து
மேவினர் வாழ்வை யென்று விளம்பிடும் வேதம் பாவர்
தாவிலவ் விலிங்கந் தன்னைச் சழக்குரைத் தழிவ ரந்தோ.

(அ-ரை) மேவினர் - பெற்றார்; வாழ்வை - தந்தம் ஐசுவரியங்களை; தாவில் - அழிவு இல்லாத; சழக்கு - நிந்தை.

'தவச்ரியே மருதோ மர்ஜயந்த்ருத்ர யத்தே ஜநிம சாருசித்ரம்' என்ற ருக்வேதமும், 'சிவாய நம: சிவலிங்காய நம:' என்ற நாராயணோபநிஷத்தும், 'பிந்துநாத மஹாலிங்கம் சிவசக்தி நிகேதநம்' என்ற யோகசிகோபநிஷத்தும், 'மாமேவ சிவலிங்க ரூபிணம்', 'சிவலிங்கம் த்ரிஸந்த்ய மப்யர்ச்ய --', 'மாமேவஜ்யோதி: ஸ்வரூபம் லிங்கம்' என்ற பஸ்மஜாபாலோபநிஷத்தும், 'ஜ்யோதிர்லிங்கம் ப்ருவோர் மத்யே நித்யம் த்யாயேத் ஸதா யதி:' என்ற ப்ரஹ்மவித்யோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (களஉ)

சிவலிங்கத்தைச் சிவனாரின் குறியெனக் கொள்வது குற்றமாகாது; அப்படிக்கொண்டும் விஷ்ணுவாதியோர் அவ்வடிவத்தைப் பூசித்துப் பேறுபெற்றாரென்பது.

இம்பரி னுடையார் தம்மை யெவரவர் குறிமுன் வீழ்ந்து
கும்பிடு மடியார் மாதோர் கூறனைக் குறிமுன் வீழ்ந்தே
யம்புய நாபன் கும்பிட் டருளவ னிடத்துப் பெற்றான்
சம்புவி னிலிங்க மேன்மை தனக்கள வுரைப்பார் யாரே.

(அ-ரை) இம்பர் - இவ்வுலகில்; உடையார் - செல்வர்; குறி - கோசம் அடியார் எவர் என்க; ஒருவருமில்லை யென்றபடி; அம்புயநாபன் - விஷ்ணு.

'மற்றொருவனுடைய லிங்கத்தைத் தேவர்கள் அர்ச்சித்ததாக நாம் கேட்கவில்லை யன்றோ? மகேச்வரரைவிட வேறு யாருடைய லிங்கமானது எல்லாத் தேவர்களாலும் இப்போதாவது முன்னேயாவது பூஜிக்கப்பட்டிருக்கிறது? -- ப்ரம்மாவும் விஷ்ணுவும் நீயும் -- யாருடைய லிங்கத்தை எப்போதும் பூஜிக்கிறீரோ அவர் அந்தக் காரணத்தினாலேயே மிகச் சிறந்தவரல்லரோ' என்ற பாரதம் 'அனுசாசனம்' 45 ஆவது அத்தியாயம் இச்செய்யுட்குப் பிரமாணம். (களங)

சிவாலய தரிசனாதிகள் ஞானிகளுக்கும் அவசியக மென்பது.

அறிவிவ ணிலார்க்கே வேண்டு மாலயம் பூதி யாதி
யறிவின ரவற்றைப் போற்ற லவசிய மன்று மென்ன
வறிஞரா லுரைத்த சென்ப ரறிவிலாச் சைவர் சில்லோ
ரறிவின ருளரோ காழி யாண்டகை முதலோர் தம்மின்.

(அ - ரை) அறிவு - ஞானம்; இவண் - இவ்வுலகில்; அறிவினர் - ஞானிகள்; போற்றல் - ஆசிரயித்தல்; காழி ஆண்டகை ஸ்ரீஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்; அவர்களெல்லாம் கோயிலுக்குப் போனார்களே யென்பது கருத்து.

(கஎச)

ஆலய சேவையின் பயனிது வென்பது.

ஆலய நண்ணி யன்புற் றதிபர மாத்த னென்னு
மாலய மூர்த்தி தன்னை வலம்வரின் ஞான மில்லான்
சாலவு ஞானி யாவான் றரணியில் ஞான முள்ளான்
சீலம தகலா னென்ற தேர்ந்தவன் றனையங் கேத்தே.

(அ - ரை) நண்ணி - போய்; அதிபரமாத்தன் - பூரண நம்பிக்கைக் குரியவன்; மாலய மூர்த்தி - சிவபிரான்; சீலம் - ஒழுக்கம்; தேர்ந்து - தெரிந்து; அவன்றனை - அச்சிவபிரானை; அங்கு - அவ்வாலயங்களில்; ஏத்து - வணங்குவாயாக.

'நறுமலர்ப் பூவு நீரும் நாடோறும் வணங்கு வார்க்கு - அறிவினைக் கொடுக்கு மாரூரப்பனே' என்ற தேவாரமும், 'ஆலயந்தானு மரனெனத் தொழுமே' என்ற சிவஞானபோதமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (கஎரு)

வேதந் துதிக்குஞ் சில சிவஸ்தலங்களிவை யென்பது.

வாரண வாசி யாரூர் வம்பிர யாகை கோயில்
காரண வுயர்சீ சைலங் கவின்குருக் கேத்தி ரந்தான்
றாரணி புகழ்கே தாரந் தலமெனத் திகழு மீசற்
காரண மவற்றை யேத்து மகமகிழ்ந் தாத லாலே.

(அ - ரை) வாரணவாசி - காசி; ஆரூர் - கமலாலயம்; கோயில் - தம்பரம்; கார் அணவு உயர் - மேகத்தைத் தொடுகிற உயர்வையுடைய; வின் - அழகிய; தாரணி - உலகம்; ஆரணம் - வேதம்: அவற்றை - அக்காசி தலிய தலங்களை.

'ச்ரீபர்வதம் சிர: ஸ்தானே கேதாரம் து லலாடகே | வாராணஸீ மஹாப்ராஜ்ஞ ப்ருவோர்க்ராணஸ்ய மத்யமே || குருக்ஷேத்ரம் குசஸ்தானே ப்ரயாகம் ஹ்ருத் ஸரோருஹே | சிதம்பரம் து ஹ்ருன்மத்யே ஆதாரே கமலாலயம்' என்ற ஸ்ரீ ஜாபாலதர்சனோபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம். (கஎசு)

சிவார்ப்பணமாகாத அன்னாதிகளை விலக்கவேண்டு மென்பது.

அரன்றனக் கருப்பித் துண்ணு மன்னமே யன்ன மாகு
மரன்றனக் கருப்பித் துண்ணா வன்னமோ வன்ன மாகா
தரன்றனக் கடியர் தாமே யருந்துவ ரன்ன மற்றை
யரன்றனக் கடிய ரல்லா ரருந்துவ தியாதோ வம்மா.

(அ-ரை) அருப்பித்து - நிவேதித்து.

'அஹரஹரப்யர்ச்ய விச்வேச்வரம் லிங்கம் தத்ரருத்ரஸூக்தைரபிஷிச்ய ததேவஸ்நபந பயஸ்த்ரி: பீத்வாமஹா பாதகேப்யோமுச்யதே | நசோகமாப்நோதி | முச்யதே ஸம்ஸார பந்தநாத் | ததநப்யர்ச்ய நாச்நீயாத் பலமந்நமந்யத்வா யதச் நீயாத்ரேதோ பக்ஷீபவேத்' என்ற பஸ்மஜாபாலோபநிஷத்தும், 'அர்ச்சிதாந்நிதம் ஜநோருத்ராம் பிராம நிஷயா க்ரஹ்ணந்தி ஜிஹ்வயாஸஸம்' என்ற ருக்வேதமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள் (கஎஎ)

சிவபூஜைக்குச் சிவதீக்ஷை முக்கியாங்க மென்பது.

சம்புவி னருளை நல்குஞ் சைவமார் தீக்கை பெற்றே
யம்புவி யதனிற் கண்ணா னடலுறு மிராம னென்போர்
வெம்பவ மகல முக்கண் விமலனைப் பூசை செய்தா
ரும்பரு மடையுந் தீக்கை யொழுக்கினை யுவர்ப்பார் யாரே.

(அ-ரை) சைவம் ஆர் தீக்கை - சிவதீக்ஷை; அம்புவியதனில் - உலகில்; அடல் - வலிமை; வெம்பவம் அகல - கொடிய பாவங்கள் விலக; உம்பரும் - தேவரும்; அடையும் - பெறுகிற; தீக்கையொழுக்கினை - தீக்ஷாக்கிரமத்தை; உவர்ப்பார் - வெறுப்பவர்.

'எட்டாவது நாள் அந்தப் பிராம்மணரால் சாஸ்திரப்படி நான் தீக்ஷை செய்விக்கப்பட்டேன்' (கிருஷ்ணன் சொன்னது) என்ற பாரதம் அநுசாசனம் 45 ஆவது அத்தியாயமும், 'அருட்குரு தீக்கை புரிந்தெழுத்தைந்து மளித்தருந் தமிழ்முனி சொல்வான்' என்ற தணிகைப் புராணமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (கஎஅ)

ஞானிக்கு எம்மதமுஞ் சம்மதமாமென்றல் சைவசமயக் கொள்கை யாகாதென்பது.

எம்மத பரங்க ளுள்ளு மீசனே யிருந்து நன்மை
யம்மத மக்கட் கீவா னவையவன் வயத்த வாகுந்
தம்மத ஞான மார்க்க மெனமருண் டொருசார் சைவர்
சம்மத மவற்றைப் போற்ற றமக்குமா மென்ப ரந்தோ.

(அ - ரை) பரங்களுள்ளும் - தெய்வங்களிடத்திலும்; அவை - அத் தெய்வங்கள்; அவன் - அவ்வீசனுக்கு; வயத்தவாகும் - வசப்பட்டவையாகும்; தம்மத - தமது சைவசமயத்து; மருண்டு - மயங்கி; ஒரு சார்சைவர் - சிலசைவர்; தமக்கும் அவற்றைப் போற்றல் சம்மதம் ஆம் என்க; அவற்றை - அத்தெய்வங்களை; அந்தோ - ஆ இஃதென்ன மடமை!

'சென்றுநாஞ் சிறுதெய்வஞ் சேர்வோ மல்லோம்' என்ற தேவாரம் இச் செய்யுட்குப் பிரமாணம். (கஎக)

பத்திமார்க்க மிதுவென்பது.

சங்கரன் மலர்த்தாட் பத்தி தமக்குமெய் யாயின் வேறு
புங்கவர் தமையோர் போதும் போற்றிடார் சைவர் போற்றி
னங்கவர் தமையு மீச வர்சிவ சம்பு வெம்ப
ரெங்கணுஞ் சம்பு வன்றி யிலையென லுண்மை யன்றோ.

(அ - ரை) மெய்யாயின் - சத்தியமாயிருக்குமானால்; புங்கவர்தமை - தேவர்களை; போற்றின் - வணங்க நேர்ந்தால்; என்பர் - என்று சைவநாமங் களைச் சொல்லியே போற்றுவர்.

'ஸர்வதேவாத்மகோருத்ர:', 'ஸர்வேதேவா: சிவாத்மகா:' என்ற ருத்ர ஹ்ருதயோபநிஷத்தும், 'சிவோ குரு: சிவோ வேத: சிவோ தேவ: சிவ: ப்ரபு: சிவோஸ்ம்யஹம்சிவ: ஸர்வம் சிவாதந்யந்ந கிம்சந' என்ற வராகோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (கஅ0)

விதி மார்க்கமிது வென்பது.

அருமறை யபரிச் சின்ன வைச்சுவ ரியனென் றேத்து
மொருபர சிவனை யேனை யும்பரோ டொருங்கு வைத்துக்
கருதுவ தகமா மந்தக் கடவுளை யவர்க்கு மேல்வைத்
திருசர ணைத்தச் சைவர்க் கிட்டதச் சுருதி யாணை.

(அ - ரை) அபரிச்சின்ன ஐசுவரியன் - அளவிடப்படாத செல்வத்தையுடையவன்; ஏனை உம்பரொடு ஒருங்கு வைத்து - மற்றைத்தேவர்களோடு சமமாகச் சேரவைத்து; அகம் - பாவம்; அந்தக் கடவுளை - அச்சிவபிரானை; அவர்க்குமேல் வைத்து - அத்தேவ கூட்டங்களை விட்டு விலக்கி உயரவைத்து; ஆணை - கட்டளை.

'ஏக ஏவ சிவோ நித்யஸ்ததோந்யத் ஸகலம் ம்ருஷா | தஸ்மாத் ஸர்வாந் பரித்யஜ்ய ஹேயாந் விஷ்ணவாதிகாந் ஸுராந்' என்ற சரபோபநிஷத்தும், 'மாத்வாருத்ரபிக்ருதாமோ நமோ பிர்மோதுஷ்ட நிவ்ருஷப மாஸஹூதீ' என்ற ருக்வேதமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (கஅக)

சில சாத்திரங்களிலுள்ள விஷ்ணூத்கர்ஷமும் சிவாபகர்ஷமும் இன்னின்னாரைப்போய்ச் சேருமென்பது.

சிவபிரா னுயர்ச்சி யெல்லாஞ் சிவபிரான் றனக்கே யாகு
மவமெலா மவன்பே ருள்ளார்க் காஞ்சிவ பெருமான் பாலே
தவமாத னிறைமால் மேன்மை சருவமுஞ் சாரு மாலி
னவமெலா மாற்கே யாகு மவற்றினை யாய்ந்து காணே.

(அ - ரை) அவம் - நிந்தை; அவன் பேருள்ளார் - மற்ற உருத்திரர்களிற் சிலர்; தவமதால் நிறைமால் மேன்மை சருவமும் சிவபெருமான் பாலே சாரும் என்க.

'யோபகர்ஷாஹரோத்ருஷ்டச் சாம்பவேஷ்வகிலேஷுச, புராணேஷு ஹரேஸ் ஸாக்ஷாந் மூலபூதஸ்ய ஸத்தம, வைஷ்ணவேஷு புராணேஷு யோபகர்ஷஸ்து த்ருச்யதே, ருத்ராம்சஸ்ய ஹரஸ்யாஸ்ய விபூதேரேவ கேவலம், உத்கர்ஷோ ய: புராணேஷு த்ருச்யதே சாம்பவேஷுச, ருத்ரஸ்யா ஸௌஸ்வரூபேண மூலேதத்வாத்ம நாபிச, உத்கர்ஷோய : புராணேஷு த்ருச்யதே வைஷ்ணவேஷுச, அஸௌ தத்வாத்மநா விஷ்ணோர் நஸ்வரூபேண ஸத்தம' என்ற பராசரபுராணம் இச்செய்யுட்குப் பிரமாணம். (கஅஉ)

இதுவுமது.

விண்டுவே யயனே யாதி விண்ணவர் பதவி யெல்லா
மொண்டொடி யுமையின் கூறு புயர்ந்திடு மதனால் வேதம்
விண்டுவே யயனே யாதி விண்ணவர் தம்மை யேத்து
மெண்டகு புகழ்க ளெல்லா மேகுமப் பிராட்டிக் கென்றும்

(அ - ரை) விண்டு - விஷ்ணு; கூறாய் - அமிசமாய்.

'ஏஷாவிச்வ மோஹநீ பாசாங்குச தநுர் பாணதரா', 'பாசாங்குசதராம்', 'விச்வமாதா' என்ற தேவ்யுபநிஷத்தும், 'ராமாபிராமாம் - - பாசாங்குசதநுர் பாண தராம்' என்ற ராமரஹஸ்யோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (கஅங.)

இதுவுமது.

சிற்சில நூல்கள் மாலைச் சிவபிரான் றுதித்தா னென்ற
சொற்களை வழங்க லென்னே யெனினவன் றரிய னல்லன்
பொற்புறு விதியின் மாலின் புத்திர னாகித் தானு
நற்பெய ரேற்று மூன்று நாதனின் கூறாய் வந்தோன்.

(அ - ரை) பொற்பு - அழகு; விதி - பிரமன்; ஏற்று - தாங்கி; மூன்றும் நாதனின் - திரிமூர்த்திகளுட்பட்ட உருத்திரனுடைய; கூறு - அமிசம்.

'வ்ருஷபத்வஜ வந்த்யாய' என்ற கோபாலபூர்வதாபிநீயுபநிஷத்தும், 'ஓரோரிடங்களின் மாயோனுக்கும் பிரமனுக்குந் தாழ்வாக உருத்திரனைக் கூறுவன வெல்லாங் காத்தற்றொழிலும் படைத்தற்றொழிலும் இனிது நடாத்துதற் பொருட்டுச் சங்காரவுருத்திரன் கூறாய் அவர்பாற்றோன்றிய நீலலோகிதன் முதலிய அவதார மூர்த்திகளை அவர்க்குப் புதல்வரென்னும் உபசாரமே பற்றிக் கூறியனவாமெனவும் ஓர்ந்துணர்க' என்ற சிவஞான பாஷ்யமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (கஅச)

மாயா வாதம் அவைதிக மென்பது.

சத்திய வத்து வொன்றே தானுள தென்னின் வேத
முத்தியு மியோகும் வீடு மோக்கமு மாய சொற்க
ளத்தம துற்று நிற்றல் யாங்ஙன மாத லாலே
நித்திய மறைக்கு வேறாய் நின்றிடு மாயா வாதம்.

(அ- ரை) முத்தி, வீடு, மோக்கம் - விடுதலை; இச்சொற்கள் உண்மைப் பொருள்பட வேண்டுமானால் முப்பொருள்கள் சித்தமாதல் வேண்டும். பந்திக்கும் மலமும் பந்தமுறும் உயிரும் பந்தத்தை விடுவித்து உயிரை ஆட்கொள்ளுங் கடவுளுமாகிய முப்பொருள்களு மில்லாவிட்டால் முத்தியாதி அப்பதங்கள் பொருளற்றனவாம். யோகம் - கூட்டம்; அதற்கும் அவ்வாறே

பொருள் காண்க. பிரமமொன்றே நித்திய மென்பார்க்கு அப்பதங்கள் விருதா கோஷமேயாமென்க. அத்தமதுற்று - அருத்தத்தையுடையனவாகி; வேறாய் - புறமாகி. (௧௮௫)

அகம் பிரமம் என்பதற்குப் பிரமம் இல் பொருளே யென்பதுதான் கருத்தென்பது.

பொய்யினி லனைத்து மெய்யாம் பொய்ப்படு மனைத்து மெய்யி
லையுற வேண்டா வென்பா னகப்பிர மத்து வாதி
பொய்யினி லகமு மெய்யாய்ப் பொய்யென மெய்யி லாயி
னையமோ வகம்போற் பொய்யே யாயிடும் பிரமந் தானும்.

(அ - ரை) பொய்யினில் - வியாவகாரிக தசையில்; மெய் ஆம் - உள்ளனபோலத் தோன்றும்; பொய்ப்படும் - இல்லனவாகிவிடும்; மெய்யில் - பாரமார்த்திகதசையில்; அகம் - நான். (௧௮௬)

மாயாவாதமுத்தி நித்திய சுத்தமாகா தென்பது.

திவ்விய பிரமந் தன்னைச் செப்பரு மாயை வந்து
கவ்விய தன்றே யென்று கழறிநீ வீடும் வேட்டா
யெவ்வித மந்த மாயை யிருக்குமங் குனையுங் கவ்வா
தவ்வித முத்தி சுத்த மாகுமோ மாயா வாதி.

கட

(அ - ரை) திவ்விய - சுத்தமான; செப்பருமாயை - அநிர் வசனமான மாயை; கவ்வியது - பிடித்தது; அன்றே - முதன்முதல்; கழறி - சொல்லி; வீடும் - முத்தியும்; வேட்டாய் - விரும்பினாய்; அங்கு - அம்முத்தியில்; உனையும் - உன்னையும். (௧௮௭)

சைவசமயத்திற் கூறப்படுஞ் சுத்தாத்துவித முத்தியே நித்தமென்பது.

மனமிவ ணிறந்த பேர்க்கு வாழ்வுவை குண்டத் தாகும்
புனிதமி லந்த மால்வாழ் புவனமு மிறக்கப் பெற்றோர்
தொனிகழ லிரண்டுஞ் சேர்வாஞ் சுத்தவத் துவித மென்னுந்
தனிவரு முத்தி யெய்திக் கன்றலி லின்ப மார்வார்.

In Public domain, Digitized by Muthulakshmi Research Academy

(அ - ரை) இவண் - இவ்வுலகில்; இறந்த பேர்க்கு - ஒடுங்கியவர்களுக்கு; இறக்கப்பெற்ரோர் - புனிதம் - சுத்தம்; மால்வாழ்புவனம் - வைகுண்டம்; தாள் - திரு அழியப்பெற்றவர்கள்; தோனி - சப்திக்கின்ற; கழல் - காலணி; கரை - அளவு; வடி; அரன் தொனிகழல் தாள் என்க; கனிவு - இனிமை; ஆர்வார் - அனுபவிப்பார்கள்.

‘ தந்மனோவிலயம் யாதிதத்விஷ்ணோ: பரமம் பதம் | தல்லயாச் சுத்தாத் வைசவித்திர் பேதாபாவாத்’, ‘ சுத்தாத்வைத ப்ரஹ்மாஹம்’, ‘சத்தாத்வைதா ஜாட்யம்’ என்ற மண்டல ப்ராஹ்மணோபநிஷத்தும், ‘ த்வாதசாந்தம் ப்ரஹ்ம சாச்வதம் - - பாதரம் சுத்சம் வ்யாபகம் நிர்மலம் சிவம் - - அதீந்த்ரியம் குண தீதம் மனோலீநம் - - அநுபமம் சிவம் சாந்தம் - - ’ என்ற நாதபிந்தூபநிஷத் தும், ‘ ந ப்ரஹ்மலோகோ வைகுண்டோ ந கைலாஸோ நசாய்யக:’ என்ற தேஜோபிந்தூபநிஷத்தும், ‘ தந்மனோவிலயம் யாதி தத் விஷ்ணோ: பரமம் பதம்’ என்ற தியாநபிந்தூபநிஷத்தும் யோகசிகோபநிஷத்தும், ‘ பூமாவுத்தாரி தம் ஸர்வம் வைகுண்டம் ஸ்வர்கவாஸிநாம்,’ என்ற திருஷ்ணோபநிஷத்தும், ‘பகவச் சுத்தாத்வைத பரமாநந்த லக்ஷண பரப்ரஹ்மண ஸ்தவகதம் விருத்த வைகுண்ட ப்ராஸாத ப்ராகார விமாநாத்யநந்தவஸ்துபேத:’ என்ற திரிபாத் விபூதி மஹாநாராயணோபநிஷத்தும், ‘ ஓம் நமோ நாராயணாயேதி மந்த்ரோ பாஸகோ வைகுண்ட டவநம் கமிஷ்யதி’ என்ற நாராயணோபநிஷத்தும் இச் செய்யுட்குப் பிரமாணங்கள். (கஅஅ)

மாயாவாதியின் கேடுமதி யிதுவென்பது.

அரிபர ரியலே யானிங் கறிவெனென் மாயா வாதி
யரியர ரெல்லா நானே யவர்பிற ரில்லை யென்பா
னரியர ரெலார்க்கு நிந்தை யதனினு மிக்க துண்டோ
வரியர ரன்பர் தம்மை யடுத்தவன் கெடுக்கும் பாவி.

(அ - ரை) இயல் - சொரூபம்; அவர் - அந்த அரியும் அரனும்; அடுத்து - அதனினும் - அப்படிச் சொல்லும் இறுமாப்பைக் காட்டிலும்; அத்தெய்வங்களின் மெய் தாரும் அத்தெய்வங்களினடியாரெனச் சொல்லி அத்தெய்வங்களின் மெய் யடியார்களுடன் உறவாடி; அவன் - அம்மாயாவாதி. (கஅக)

சிவநாமமே முழுமுதற் கடவுளுக்கு ஏற்ற நாமமென்பது.

ஒருபொரு ளுடைய வாகு முருத்திர னயன்மா லாதி
வருபொரு ளனைத்து மென்பார் வழங்கும்பொருளே [தென்னிற்
றருகுவை மேலும் பேர்க டருகிலாய் பொருளே வேதக்
கருவுறு சிவப்பேர் தன்னிற் கண்ணிய மவைகட் குண்டோ.

(அ - ரை) வழங்கும் - அப்பெயர்களா லழைக்கப்படுகிற; வேதக்கரு - வேதாடவியில்; கண்ணியம் - பெருமை; அவைகட்கு - நீ சொல்லுகிற அந்தப் பெயர்களுக்கு. (கக0)

அவ்வுண்மை வேதபுருஷனால் அங்கீகரிக்கப்பட்ட தென்பது.

ஒன்றுள ததனைச் சொல்வ ருத்தமர் பலவா யென்று
யொன்றுள தென்பா ராரவ் வுத்தமர் தாமே யென்னி
னொன்றுள தென்ற றனு மோதுங்குமப் பலவுட் பட்டே
யொன்றுள தென்றார் தாமவ்வுள்பொருள் சிவனேயென்றார்.

(அ - ரை) ஒன்று உளது அதனை உத்தமர் பலவாய்ச் சொல்வர் என்க. 'ஏகம் ஸத் விப்ரா பஹுதா வதந்தி' என்பது அது; உத்தமர் - விப்பிரர், பலவாய்ச் சொன்னவர் விப்பிரர்; ஏகம் ஸத் என்று சொன்னவர் யார்? அவர் அவ்விப்பிரரல்லர்; வேதபுருஷனே. (ககக)

பிரமவிஷ்ணுருத்ராதி நாமங்கள் யாண்டும் பரியாயங்களாகா வென்பது.

மறைமுத லரனே யென்ன மனங்கொள மாட்டாப் பாவ
ரிறையர னயன்மா லென்ன விகலுதல் மடமை யெல்லாங்
கறையறு சுவாநு பூதி காட்டுமொன் றாக வென்றிங்
கறைகுவ ரெளியர்க் கிம்மி யனுபவந் தானு மின்றி.

(அ - ரை) மறை - வேதம்; முதல் அரனே - அரனே முதற்கடவன்; என்ன - என்று சொல்லியிருக்க (அதனை); மனங்கொளமாட்டா - அங்கீகரிக்க வலியற்ற; இறை - கடவுளை; இகலுதல் - வாதித்தல்; கறை - குற்றம்; சுவாநுபூதி - அனுபவஞானம்; எல்லாம் ஒன்று ஆகக் காட்டும் என்க. அறைகுவர் - உபதேசிப்பர்; எளியர்க்கு - அறிவில்லாதவர்களுக்கு; இம்மி - சிறிது. (ககஉ)

சத்தியஞானிக்குத் தெய்வம் சிவபிரானேயென்பது.

அனுபவ ஞான மாவ தருமறைப் பொருளைக் காண்ட
லனுபவ ஞானி யென்பா னவனவன் றன்னை யெந்த
வனுபவ மறையோ டேயு மன்னதே மெய்யா மந்த
வனுபவ ஞானிக் கென்று மாகுவன் சிவனே தெய்வம்.

(அ - ரை) அவனவன் - ஒவ்வொருவனும்; அவனவன் தன்னை அனுபவ ஞானி யென்பான் என்க; ஏடும் - பொருந்தும்; அன்னதே - அந்த அனுபவ ஞானமே; அந்த அனுபவ ஞானிக்கு - அப்படி வேதத்தோடு பொருந்திய அனுபவத்தையுடைய ஞானிக்கு. (கக௩)

வைதிக சைவசமயத்துக்குப் பிரபலபிரமாணசாத்திரங்களிவையென்பது.

ஈரிரு மறைக ளாய விருக்கெசுர் சாம தர்வஞ்
சீரிய விருபத் தெட்டுச் சிவாகம மிவற்றை யீச
ஞரிய மொழியிற் றந்தான் சுருக்கமோ டகல மாகச்
சேரிவை தாமே சைவத் திவ்விய பிரமா ணங்காண்.

(அ - ரை) ஈர் இரு - நான்கு; அகலம் - விரிவு; சேர் இவைதாமே - தம் முள் இயைந்து ஒரே பொருள் படுகின்ற இந்த வேதாகமங்களே; காண் - காண்பாயாக.

'ருக்யஜுஸ் ஸாமாதர்வாங்கிரஸோஹம்' என்ற அதர்வசிரோபநிஷத்தும், 'வேதைரநேகை ரஹமேவ வேத்யோ வேதாந்த க்ருத் வேதவிதேவசாஹம்', என்ற கைவல்யோபநிஷத்தும் (இவ்விரண்டு வாக்கியங்களும் சிவன் சொல்)' 'ஸர்வாகம மய: சிவ:', 'ஸர்வாகமார்த்தார்த்த விசேஷவேத்யம் - - சிவம்', என்ற நாரதபரிவ்ராஜகோபநிஷத்தும், 'ஸர்வாகமார்த்தார்த்த விபாவிதோவி" 'ஸகலாகமகோசர:', 'ஸர்வ வேதாந்த ஸித்தாந்தம்' என்ற தேஜோபிந்தூபநிஷத்தும், 'சிவ: சைவாகமஸ்தாநாம்' என்ற அகஜூர்ஜோபநிஷத்தும், 'ஸர்வ வேதாந்த ஸித்தாந்த ஸாரம்' என்ற ருத்ரோபநிஷத்தும், 'ஸித்தாந்தச்ரவணம்' என்ற ஸ்ரீஜாபாலதர்சநோபநிஷத்தும் வராஹோபநிஷத்தும், 'ஆரியமா யறம்பொருளோடின்பம் வீடெல்லா மறைத்துயிர்கட் கறிவு செயலளிப்பது நூல்', 'வேதநூல் சைவநூலென்றிரண்டே நூல்கள்' என்ற சித்தியாரும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (கக௪)

வேத சிவாகம சம்பந்த மிதுவென்பது.

ஆகம சுருதி நூல்கட் கான்றனிக் கருத்த ரவ்
ஆகம சுருதி நூல்க ளான்புக ழொன்றே பேசு
மாகம சுருதி நூல்க ளருத்தமே மூலம் போலா
மாகம சுருதி நூல்க ளாதலிற் சமமாங் காணே.

(அ - ரை) சுருதி - வேதம்; புகழ் - பரத்துவம்; ஆதலின் ஆகம சுருதி நூல்கள் சமம் ஆம் காணே என்க. (கக௫)

வேதங்களுக்குப் பொருள் கொள்ளு முறைகளுட் சில இவையென்பது.

பிரமமா ரென்று வேதம் பிரசினை யெடுத்துக் கொண்டு
பிரமமா சிவனை யென்னும் பிரபல சுருதி யஃதாம்
பிரமமா ரென்று வேதம் பிரசினை யெடாமல் மாலே
பிரமனே பிரம மென்று பேசுமற் றதுவே கௌணம்.

(அ - ரை) பிரசினை - வினா; மா சிவன் - பெரிய சிவன்; பிரபல - முக்கிய; அஃது பிரபல சுருதி ஆம் என்க; அஃது - அவ்வாறு வினவிக் கொண்டு விவகரிக்கும் வேதபாகம்; அது - அவ்வாறு வினவிக்கொள்ளாமல் தோத்திரம்போற் பேசும் வேதபாகம்; கௌணம் - அருத்தவாதம்.

சுவேதாசவதரம் அதர்வசிகை காலாக்நிருத்ரம் ஸர்வஸாரம் நிராலம்பம் சரபம் பாசுபதப்ரஹ்மம் ஜாபால் முதலிய வுபநிஷத்துக்கள் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (௧௧௬)

இதுவுமது.

மெய்யுறு புராணந் தன்னை விட்டுரை செய்யின் வேத
மையமிகா வென்று நையு மக்கதை பதினெட் டுள்ளு
மையிரு நூல்க ளீசற் காம்பிற பிறர்க்கா மெண்ணி
னையமி லவன்றன் மேன்மை யருத்தமம் மறையி லன்றே.

(அ - ரை) நையும் - வருந்தும்; கதை - புராணம்; ஐயிருநூல்கள் - பத்துப் புராணங்கள்; பிற - மற்றை எட்டுப் புராணங்கள்; பிறர்க்கு - பிரமா விஷ்ணு முதலிய மற்றைத் தேவர்களுக்கு; ஆம் - உரியனவாம்; ஐயம் - சந்தேகம்; அவன்றன் - அந்த ஈசனுடைய; அருத்தம் - பாதி(ச்குமேல்), பொருள்.

'இதிஹாஸத்தினாலும் புராணத்தினாலும் வேதத்தை விளக்கிக் கொள்ளவேண்டும். வேதமானது அற்பஞானியைக் கண்டு அவன் தன்னை மோசம் செய்வானென்று பயப்படுகின்றது' என்ற பாரதம் ஆதி 1 ஆவது அத்தியாயமும், 'இதிஹாஸ புராணாப்யாம் வேதம் ஸமுபப்ரஹ்மயேத்' என்பதும், 'புராணேஷ்வஷ்டாதசஸு' என்ற ராமரஹஸ்யோபநிஷத்தும், 'புராணச்ரவணபூர்வகம்' என்ற நாரதபரிவ்ராஜகோபநிஷத்தும், இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (௧௧௭)

இதுவுமது.

உயர்மறை சிவனே தேவென் றுரைப்பதைச்சகியா ரன்னோன்
பெயர்களை யோக மாக்கிப் பேசுவ ரயன்மா லாதி
மயர்வுறு மமரர்க் கேற்றி மற்றவர்க் குரிய வான
பெயர்களை யவற்கவ் வாறு பேசுவ தரிய தாமோ.

(அ - ரை) சகியார் ஆக்கி ஏற்றிப் பேசுவர் என்க; அன்னோன் - அச்சிவபிரானுடைய; மயர்வு - மயக்கம்; அவர்க்கு - அந்த அயன் மால் முதலிய மற்றைத் தேவர்களுக்கு; அவற்கு - அச்சிவபிரானுக்கு; அவ்வாறு - அப்படியே யோகமாக்கி ஏற்றி; அரியதாமோ - கஷ்டமாகுமோ; இல்லையென்றபடி; ஒருவர்பெயரை மற்றவர்க்கேற்றிப் பேசினால் வேதத்திற் கடவுள் நிச்சயம் பெறமுடியாதென்பது கருத்து. (௧௧௮)

இதுவுமது.

ஒத்திசை தெய்வப் பேர்கள் யோகமென் றுரைக்கி னந்நூ
னாத்திக மாத லின்மை யெந்தரு முறுப வென்னி
னாத்திக மாகு மிவ்வா றாய்பவர்க் கவனே யந்தச்
சாத்திர தெய்வ மென்ற சத்தியம் விளங்கு மன்றே.

(அ - ரை) ஒத்து - வேதம்; இசை - பிரஸ்தாபிக்கிற; தெய்வப் பேர்கள் - தெய்வங்களின் பெயர்கள்; ஆய்பவர்க்கு - ஆராய்ச்சி செய்பவர்களுக்கு; அந்தச் சாத்திரதெய்வம் - அந்தச் சுருதிகளின் பிரதிபாத்யனான தெய்வம். (௧௧௯)

வேதங்களோடு இயைபுடையன காமிகாதி சிவாகமங்களேயா மென்பது.

வைதிக மாகும் பாசு பதமென வகையொன் றுண்டு
வைதிக மல்லாப் பாசு பதமென மற்றொன் றுண்டு
வைதிக மிருபா னெண்ணூல் வாதுள மவற்றி னந்தம்
வைதிக மல்லா நூலாம் வாமபா சுபதந் தானே.

(அ - ரை) வைதிகம் - வேதசம்பந்தம்; வகையொன்று - மற்றொன்று - இன்னொரு வகை; இருபான் எண் நூல் -

சிவாகமங்களும்; வாதுளம் - அப்பெயர்கொண்ட சிவாகமம்; அவற்றின் - அவ்விருபத்தெட்டின்; அந்தம் - கடைசி; காமிகம் என்பது அவற்றின் முதலாகமம்.

'- - கூறியது வேதப்பொருளொடு மாறுகொளக் கூறும் பாசுபதம் பாஞ்சராத்திரம் முதலிய புறச்சமயங்களையேயாம்; வேதப்பொருளையே விரித்துக்கூறப்புகுந்த வேதசாரமாகிய சித்தாந்த சைவாகமங்களை அன்றென உணர்க' என்ற சிவஞான பாஷ்யம் இச்செய்யுட்குப் பிரமாணம். (உ00)

சைவனாவான் வடமொழியையுங் கற்றல் அவசியமென்பது.

வடமொழி யதனில் மல்கும் வான்சிவ நூற்க டாமே
யிடமிகு பரத கண்ட மெங்கணு மோம்புஞ் சைவந்
திடமுற வதனை முற்றுந் தெரிந்திட வேண்டி னென்றும்
வடசொலை மதித்துச் சைவன் வளம்பெறப் பயில வேண்டும்.

(அ-ரை) மல்கும் - நிறைந்துள்ள; வான் - உயர்ந்த; சிவநூற் கடாமே - சைவசாத்திரங்களே; மிகு - விசாலமான; எங்கணும் - எங்கும்; ஓம்பும் - வளர்த்துப் பாதுகாக்கும்; திடம் - உறுதி; அதனை - அச்சைவத்தை; வளம்பெற - செவ்வையாக; பயில - கற்க. (உ0க)

இதுவுமது.

வடமொழி பயிலார் சைவம் வளர்த்திடு மாண்மை யற்றார்
வடமொழி பயிலார் சைவம் வளர்த்ததை யெவரே கண்டார்
வடமொழி தன்னை வைது மதிப்பழிந் தலைய வேண்டா
வடமொழி பயின்று சைவ வான்பயிர் வளர்த்த னன்றே.

(அ-ரை) ஆண்மை - பௌருஷம்; அற்றார் - இல்லாதவராவார்; வைது - நிந்தித்து. (உ0உ)

இதுவுமது.

அவமுறு மசைவர் சில்லோ ராரியம் பயின்றாங் குள்ள
சிவமலி கலைக டப்பாற் செருகலுந் திரிவுஞ் செய்தாற்
றவறிவ ணார்பாற் சைவா சாத்திர நட்டம் யார்க்குக்
கவலையு மானந் தானுங் கழிந்தவோ வுனைவிட் டந்தோ.

(அ-ரை) அவம் உறல் - பிறப்பு மீளுதிற; ஆரியம் - வடமொழி; ஆங்கு - அம்மொழியில்; சிவைவிளங்கப்பால் - சைவசாத்திரங்களில்; செருகல் - தம் கருத்துக்கும் மதத்துக்கும் ஏற்பக் கற்பனைவாக்கியங்களை நுழைத்தல்; திரிவு - இருக்கும் வாக்கியங்களை அவ்வாறே புரட்டல்; இவண் - இத்தமிழ்நாட்டில்; ஆர்பால் - யாரிடம் (உண்டு); சாத்திரநட்டம் - வடமொழிச் சைவநூற்கள் நம்பிக்கையை யிழப்பிரேல் அவற்றையே பெரும்பாலும் தமக்குப் பிரமாணமாகவும் மூலமாகவும் கொண்டுள்ள பல தமிழ்ச் சைவநூற்களும் நம்பிக்கையை யிழக்கும்; அப்படி உண்டாகும் இருமொழிச் சைவசாத்திர நட்டங்களும்; வடமொழிச் சைவசாத்திரப் பயிற்சியற்ற தமிழ்ச்சைவரும் தமிழ்ச் சைவ நூற்களுஞ் சரியான பரிபாலனத்தைப் பெற வேண்டுவதுங் காண்க.

(௨௦௬)

இதுவுமது.

பாரத மெங்கு முள்ள பன்மொழிச் சைவ ரோடின்
சீரிய தமிழச் சைவர் சினேகமுற் றவைக்க வேண்டு
மாரிய ஞான மொன்றே யதற்குறு சகாய மாகும்
நேரல ரதற்கு நிந்தை நிகழ்த்தியப் பயனைக் கொல்வார்.

(அ-ரை) பாரதம் - பாரதநாடு; ஆரியஞானம் - சம்ஸ்கிருதபாஷாஞானம்; நேரலர் - சைவசமயத்துக்கு விரோதிகள்; கொல்வார் - கெடுப்பார்.

(௨௦௭)

இதுவுமது.

வண்டமிழ் வளர்க்க யாங்கள் வந்தன மெனச்சில சைவர்
வண்டமிழ் வளர்ப்பார் போன்று வைதிக சைவந் தாழ்த்தார்
வண்டமிழ் வளர்ப்பார் போன்று வைதிக சைவந் தாழ்த்தால்
வண்டமிழ் வளர்ப்ப தெங்கே வளர்த்திது மதிப்பார் யாரே.

(அ-ரை) தமிழ் - தமிழை; என - என்று சொல்லிக்கொண்டு; வளர்ப்பார்போன்று - வளர்ப்பவர்போலச் சில கதைகளை எழுதி அவற்றில்; சைவம் - சைவசமயத்தை; தாழ்த்தார் - உருக்குலைத்து இழிவு படுத்தினர்; மதிப்பார் என்பதற்கு அவ்வளர்ப்பையும் அத்தமிழையும் என்பன செயப்படு பொருள்கள்.

(௨௦௮)

இதுவுமது.

அரனரி நாம மெல்லா மாரிய மறைக்க ணின்றே
பரவிய தென்சொல் லாதிப் பன்மொழி நூற்க ளுள்ளும்
பரமனை யந்த நூலிற் பார்த்தலே கடவுட் டேர்வா
மரனிலை யரியு மில்லை யந்தநூ றனைவிட் டிட்டால்.

(அ - ரை) ஆரிய மறை - இருக்காதி வேதங்கள் ; பரவிய - விரிந்தன; பல்மொழி - பல பாஷைகளிலுமுள்ள ; பரமனை - சிவபிரானை ; அந்தநூலில் - அந்த இருக்காதி வேதங்களில் ; பார்த்தலே - ஆராய்வதே ; கடவுள் தேர்வு ஆம் - பரத்துவநிச்சயமாகும் ; அரன் இலை அரியும் இல்லை - அரன் அரிமுதலிய தெய்வ நாமங்களின் பிரஸ்தாபமே உலகிற் கிடையாது. (௨௦௬)

தமிழ் மொழியினுஞ் சைவசமயமே போற்றற் பாலதென்பது.

சைவமே யுண்மை மார்க்கஞ் சைவமே யறிவு மார்க்கஞ்
சைவமே யின்ப மார்க்கஞ் சைவமே யன்பு மார்க்கஞ்
சைவமே பழைய மார்க்கந் தமிழ்முதற் பிறவே நச்சிச்
சைவமா சமயந் தன்னை தவிர்ந்திடிற் றமிழ கெட்டாய்.

(அ - ரை) பழைய - சனாதனமான ; பிற - மற்றவைகளை ; நச்சி - அபிமானித்து ; மா - பெரிய ; தவிர்ந்திடில் - விட்டு விலகினால், தமிழ - தமிழச் சைவனே ! கெட்டாய் - நீ கெடுவது திண்ணம். (௨௦௭)

சைவ சமயாபிவிருத்தி செய்யுமுறை யிதுவென்பது.

வைதிக மல்லா மார்க்கர் மறைகளே வாய்மை யென்றும்
வைதிக மார்க்கத் துள்ளார் வான்சிவ சமய மொன்றே
வைதிக சிரேட்ட மென்று மனங்கொளப் புகட்ட றானே
வைதிக சைவந் தன்னை வளர்த்திட லாகுங் கண்டாய்.

(அ - ரை) வைதிகமல்லா மார்க்கர் - புறச்சமயிகள் ; வைதிக மார்க்கத்துள்ளார் - அகச்சமயிகள் ; சிரேட்டம் - உயர்வு ; மனங்கொளப் புகட்டல்தானே - மனதிற் பதியும்படி உபதேசித்தலே. (௨௦௮)

சைவ சமய சார மிது வென்பது.

பதியுடன் பசுவும் பாச பதார்த்தமு மூன்று நித்தம்
பதிசிவன் பசுவே சீவன் பாசமோ பசுவின் பந்தம்
பதிபசுத் தனக்குப் பாசம் பாற்றியே பசுவை யீற்றிற்
பதியென்றுந் தானே யாக்கிப் பாலனம் புரிவன் கண்டாய்.

(அ-ரை) பதார்த்தம் - பொருள்; நித்தம் - அழியாதவை; பந்தம் - கட்டு; பசுத்தனக்கு - பசுவுக்கு; பாற்றி - விலக்கி; ஈற்றில் - முத்தியில்; பாலனம்புரிவன் - ஆண்டு கொள்வான்.

'அநீசச்சாத்மா', 'த்ராஜ்ஞௌத்வாவஜாவீசா நீசாவஜாஹ்யேகா -- அசர்தச்சாத்மா -- அக்ஷரம் ஹர: க்ஷராத்மாநா வீசதே தேவ ஏக:' என்ற நாரதபரிவ்ராஜகோபநிஷத்தும் சுவேதாசவதரோபநிஷத்தும், 'நித்யோ நித்யாநாம்' என்ற சுவேதாசவதரோபநிஷத்தும், 'பாசபத்தஸ்ததாஜீவ: பாசமுக்த: ஸதாசிவ:' என்ற ஸ்கந்தோபநிஷத்தும், 'பாசம் பரம பந்தநம்', 'மலம் ஸஹஜமப்யலம்' என்ற மந்த்ரோபநிஷத்தும், 'பசுபாசவிமோசநம் புருஷம் க்ருஷ்ணபிங்கள மூர்த்வரேதம் விரூபாக்ஷம்' என்ற பஸ்மஜாபாலோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (உ0க)

சிவபூஜையொன்றே சிறந்த இன்பமென்பது.

அழுகுறு முடலை யோம்பி யவனியின் வாழ்வை நம்பிப்
பொழுதினை யொழித்து மாந்தர் புகலிட மறியா ரானார்
விழுமிய சிவனை யென்று மெய்ப்பொரு ளெனத்தேர்ந்
[தன்னான்
செழுமல ரடியிற் பூசை செய்வதே சிறந்த வின்பம்.

(அ-ரை) ஓம்பி - வளர்த்துப் பாதுகாத்து; அவனியின் வாழ்வு - இவ்வுலகவாழ்க்கையை; புகலிடம் - லக்ஷியம்; விழுமிய - தேவதேவனாகிய; என்றும் - எப்போதும்; அன்னான் - அச்சிவபிரானின்.

'தசத்வாரபுரம் தேஹம்' என்ற யோகசிகோபநிஷத்தும், 'ஸர்வமிதம் சிவ ஏவ விஜாநீஹி' என்ற திரிசிகிப்ராஹ்மணோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். (உக0)

பிறவியின் கொடுமை யிதுவென்பது.

கருவினுட் படராய் போற்றி கருவினை யுடையாய் போற்றி
கருவினைத் தருவாய் போற்றி கருவினற் றுணைவா போற்றி
கருவினைத் துடைப்பாய் போற்றி கருவினைத் தராதாய் போற்றி
கருவினேற் கபய நல்குங் கண்ணுதால் போற்றி போற்றி.

(அ - ரை) படராய் - புகாதவனே!; கருவினை யுடையாய் - அகிலாண்டங்களும் வெளிப்படுமுன் தங்கியிருப்பதற்கான ஆதாரத்தை யுடையவனே! கருவினைத்தருவாய் - கருப்ப வாசத்தை உயிர்களுக்கு வினையறிந்து கொடுப்பவனே! கருவில் - கருக்குழியில்; நற்றுணைவா - உயிர்களுக்குக் கெடாத சகாயனே! துடைப்பாய் - நீக்குபவனே! தராதாய் - முத்தர்களுக்கு அவர்கள் விரும்பினாலுங் கொடாதவனே! கருவினேற்கு - கருப்பவாசம் இன்னும் நீக்கப்பெறாத பாவியேனுக்கு; அபயம் - அஞ்சலென்ற கரதலத்தை; நல்கும் - காட்டுகிற; கண்ணுதால் - சிவபிரானே! (உகக)

சிவபிரான் அளவுக்கடங்காப் புகழுடையா ரென்பது.

ஆற்றுறு மணல்க ளெண்ணி யகல்வெளி நீட்டி யாழி
தோற்றுநீர் முகந்து சைலந் தூக்கிபா ரளக்க வல்லார்
பாற்றிரு நீற்று மேனிப் பரசிவன் சீரு மற்றே
சாற்றினன் சிலவே யீண்டுத் தாலிபு லாகம் பற்றி.

(அ - ரை) வெளி - ஆகாயம்; ஆழி - கடல்; முகந்து - மொண்டு; சைலம் - மலை; பால் - வெண்மையான; சீரும் - பரத்துவமும்; அற்றே - அவ்வாறு அளக்கவொண்ணாததே; சாற்றினன் - சொன்னேன்; ஈண்டு - இந்நூலில்; தாலிபுலாகம்பற்றி - ஒருபானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்த்தல் என்ற நியாயத்தை அனுசரித்து. (உகஉ)
